மங்கையர் மலர்



MANGAYAR MALAR பிப்ரவரி 1999 விலை ரூ. 12

ஆட்டைக் கடித்து.. மாட்டைக் கடித்து..

..சில வார்த்தைகள்

ஒரு பயர் – திரைப்படம் பற்றிய என்னுடைய அபிப்பிராயம் கேட்டிருந்தார் – விஜயபாரதம் பத்திரிகை ஆசிரியர். குறிப்பிட்ட திரைப்படத்தின் விமரிசனமாக என்னால் அதைச் சொல்ல முடியவில்லை. அதற்கும் மேலே ஒட்டுமொத்த சமுதாயக் கருத்தையே என்னால் பகிர்ந்து கொள்ள முடிந்தது. நம் வாசகர்களோடும் அதனைப் பகிர்ந்து கொள்ளவே இந்த மாத 'சில வார்த்தைகளாக' அக் கட்டுரையைத் தருகிறேன்....



முன்பெல்லாம் டி.வி.யில் திரைப் பாடல்களை வரிசையாகப் போடுவார்கள். அதைப் பார்த்தே நொந்து போவது வேறு விஷயம். தற்போது 'காம்ப்பயரிங்' என்று நடு நடுவில் பேச்சுக் கச்சேரி வேறு.

தற்செயலாக அந்த மாதிரியான ஒரு உரையாடலைக் கேட்க நேர்ந்தது. "எனக்குப் பத்தாங் கிளாஸுக்கு மேல படிப்பு வரலை. அங்கயே ஹெட்மாஸ்டருங்கற நாய் என்னை கல்யாணம் பண்ணிக்கிறேன்னா. அப்புறம் அவன் சரிப்படலை. வேறொரு நாய கட்டிக்கிட்டேன். அவனும் புடிக்கல..." இப்படியே போய் கடைசியில 'அடுத்த வாரம் தான் நடத்தப் போகும் மகளிர்ப் போராட்டத்துக்கு அழைக்க வந்திருப்பதாக' அது முடிகிறது.

கல்வி, ஒழுக்கம், சமூக சேவை என உயர்ந்த இடத்தில் உள்ள பலவற்றின் மீதும் ஒருசேர சேற்றை வாரி வீசி அழுக்கடையச் செய்யும் இதுபோன்ற உரையாடல்கள் மிக அதிகமாகி விட்டன. ஒரு இளம் பெண் சொல்கிறாள். "அம்மாவுக்கு தெரியாம சைட் அடிப்பது போல 'ஜில்'லுனு இருக்கா?" இதுவும் ஒரு தொகுப்பு நிகழ்ச்சியில்.


தாங்கள் எவ்வளவு ஒரு கொடுமையான காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை அறியாமலேயே படுபாதகமான பாவங்களை இவர்கள் செய்து கொண்டு இருக்கிறார்கள்.

சமீபத்தில் பல்வேறு வகைகளிலும் பண்பட்ட அறிவார்ந்த பெண்மணியிடம் பேசிக் கொண்டிருந்தேன். பேச்சு இராமாயணத்தில் திரும்பியது. அவர் சொன்னார்

"இராமன் உத்தமபுருஷன் என்கிறார்கள். ஆனால் ஒரு பெண் என்கிற முறையில் என்னால் அவனுடைய செயலை ஜீரணிக்க முடியவில்லை. சீதையைப் பற்றி அவனுக்குத் தெரியாதா? ராஜாவாக இருந்தால் என்ன, கணவன் என்கிற கடமை அவனுக்கு இல்லையா? ஒருமுறை

மஞ்சுளா ரமேஷ்

தீக்குளிக்க வைத்தது போதாதென்று மீண்டும் காட்டுக்கு அனுப்புகிறான். பெண்களுக்கு மிகப்பெரும் கொடுமையை இழைத்துள்ளது இராம காதை."



பார்த்தோம் சொல்கிறோம்!

சென்னை பாரீஸ் கார்னரிலிருந்து சாந்தோம் செல்லும் வழியில் (நெடுஞ்சாலையில்) எங்குமே பெட்ரோல் பங்க் இல்லை. மெரீனா பீச்சுக்கு வரு பவர்கள் ஏராளம். சென்னை யுனிவர்ஸிடி, சேப் பாக்கம் அலுவலகங்கள் என்று ஏகப்பட்ட முக்கிய மான இடங்கள் உள்ள இந்த நெடுஞ்சாலையில் பெட்ரோல் தீர்ந்து வண்டி நின்று விட்டால் அதோகதிதான். சென்னை வானொலி நிலையம், சாந்தோம் சர்ச் என்று பல முக்கிய இடங்கள் உள்ள இந்த சாலையில் அவசியம் தேவை ஒரு பெட்ரோல் பங்க்.

அதே போல் இந்த வழியில் ஒரு நல்ல உணவு விடுதியும் கிடையாது.

இந்த நெடுஞ்சாலையில் என் டி.வி.எஸ். மொபட்டில் வரும் பொழுது பெட்ரோல் தீர்ந்து போய் நான் மிகவும் கஷ்டப்பட்டேன். தள்ளிக் கொண்டு வந்ததில் ஒரே பசி, தாகம். வழியில் சாப்பிட ஒரு சிற்றுண்டி விடுதி கூட இல்லை. இதை யாராவது செயல்படுத்த முன் வருவார் களா?

– உஷா

நான் சொன்னேன், ''வாஸ்தவம் பொதுப்படையாக அல்லது வெளிப் படையாகப் பார்த்தால். ஆனால் அந்த அரச சிம்மாசனத்துக்குத் தன்னால் ஒரு சிறு களங்கமும் வரக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தான். நாளை அந்த அரச பரம்பரையைப் பற்றி ஒருவர் சொல்லி விடக்கூடாதே! 'ஹா, நம்ப ராஜாவே அப்படித்தான்!' என்றால் என்னவாகும்? தான் எந்த வகையிலும் தவறிழைக்காதவ னாக இருந்தால்தான் ராஜ்ஜியத்தைக் கட்டுப் பாட்டோடு வைத்திருக்க முடியும். அந்தத் தர்மத்திற்காக உயிரினும் இனிய மனைவி யையே துறக்கிறான்.

அதுவும் எப்பேர்ப்பட்ட காதல் கொண்ட மனைவி! அவள் காட்டினுள் காணாமல் போனபோது, 'என் சீதையைப் பார்த்தாயா?' என மரம், செடிகளிடம் எல் லாம் பைத்தியமாகக் கதறியவன். அவன் தான் தன்னால் தர்மம், அரச நீதி ஒரு பேச்சுக்கு ஆளாகிவிடக்கூடாது என மனைவியையே துறக்கிறான்.

இவை அனைத்தையும் தெரியாதவளா சீதை? அதனால்தான் ஒன்றும் பேசாமல் மௌனமாகி விடுகிறாள்'' என்றேன்.

அவர் அதை ஒப்புக் கொண்டார்.

சீதை!

நம் பாரத நாட்டின் ஒவ்வொரு பெண் ணும் தெரிந்து கொண்டிருக்கும் காவிய நாயகி. ஒவ்வொருத்திக்கும் ஒரு காலத்தில் ஆதர்சமாக இருந்தவள். 'சீதையைப் போல இருக்க வேண்டும்' என்று நினைக்கப்பட் டவள்.

ஏன் அந்தக் காவிய நாயகிக்கு அத் தனைத் துன்பங்கள்?

எந்தப் பெண்ணிற்கு வாழ்க்கையில் துன் பம் இல்லை?

அப்படிப் பார்த்தால் ஒவ்வொரு பெண் ணுமே இந்த நாட்டில் சீதைதான். வாழ்வில் இதெல்லாம் சகஜம். துன்பங்களும், துயரங் களும் வரலாம். ஆனால் வாழ்க்கையின் அடிநாதமாக இருக்கும் நம் பாரதக் கலாச்சாரமும், பண்பாடும், பெண்மையின் சிறப்பும் எங்கும் பிறழக்கூடாது என்பதில் உறுதியாக இருக்க சீதையைக் காட்டினார் கள்.

'அதோ பார், சக்கரவர்த்தியின் மகளாகப் பிறந்து, சக்கரவர்த்தித் திருமகனின் மனைவி யாக ஆனாலும் அவளும் வாழ்க்கையில் துன்பப்பட்டாள். ஆனால் தன் பண்பாட்டி லிருந்து எங்கேனும் பிறழ்ந்தாளா? இந்தியப் பெண்ணின் முழு உருவகமே சீதாதேவி!' என காட்டினார்கள.

'மரக்காலுக்கு வைத்தால் உழக்குக்கு மிஞ்சும்'

– என்று ஒரு பழமொழி உண்டு. அந்த மாதிரி இத்தனைக் கஷ்டப்பட்ட சீதையை ஆதர்சமாகக் காட்டும்போது நம்மால் முடிந்தவரை சீதையைப் போல வாழ்ந்து பார்க்கலாமே! என வாழ்ந்து பார்த்தார்கள் இந்தியப் பெண்கள்.

அதனால்தான் இந்த நாட்டில் குடும் பங்கள் காப்பாற்றப்பட்டன. உறவுகள் நெருக்கமாக நிலைத்திருந்தன. தாய் தெய்வமாகப் போற்றப்பட்டாள். எத்தனை குடும்பப் பிரச்னைகள் இருந்தாலும் தாய் அந்தக் குடும்பத்தை அரவணைத்துச் சென்றாள். அந்நிய நாட்டவரின் படை யெடுப்பு, கலாச்சாரச் சீரழிவு என எத்தனை நடந்தாலும் அவற்றையெல்லாம் தாங்கி நின்றது இந்தப் பண்பாடு காத்த பெண்களின் உறுதி. குடும்பங்கள் சீரழியவில்லை. இன்றும் இந்திய திருநாட்டின் கலாச்சாரத்தை முற்றி லும் தகர்க்க முடியவில்லை. காரணம் பெண்.

இதையே மேலை நாட்டோடு ஒப்பிட்டுப் பாருங்கள். அங்கு தாய் இல்லை. பெண், தனித்துவமாகத் தன்னைக் கருதிக் கொள் கிறாள். குழந்தை சிசுவாக இருக்கும்போதே தனியாக வளர்கிறது. சிகரெட், மதுபானமா –தனக்கும் சம உரிமை உண்டு என்கிறாள்.

வளர்ந்தபின் குழந்தைகள், வழி தெரியாமல் சீரழிகிறார்கள். குடும்பக் கட்டுக்கோப்பு இல்லாமல் சமுதாயமே திண்டாடிக் கொண்டிருக்கிறது.

இதைத்தான் இன்று பாரதத்தில் இறக்குமதி செய்து கொண்டிருக்கிறார்கள். எந்த அந்நிய சக்தியாலும் செய்ய முடியாத பேரழிவை நமக்கு நாமே செய்து கொண்டிருக்கிறோம். பெண் என்பவள் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். அதுதான் பெண் சுதந்திரம் என்கிறார்கள். தாங்கள் மிக விபரீதமான ஒரு விளையாட்டை விளையாடிக் கொண்டிருக்கிறோம் என்பது தெரியாமல் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கு திரைப்பட நடிகைகளுக்குத்தான் மரியாதை. அவர்கள் ஏதோ தேவதைகள் போல பொது இடங்களில் ஆராதிக்கப்படுகிறார்கள்.

போதாதற்கு நான் ஆரம்பத்தில் சொன்னது போல இப்போது சின்னத்திரையில் காட்டப்படும் நிகழ்ச்சிகள். இன்னும் தணிக்கை என்பது சின்னத்திரைக்கு வராததால் வரைமுறையில்லாத ஆபாசப் பேச்சுக்கள்.

இதற்கும் ஒரு படி தாண்டி மேலே போனதுதான் 'ஃபயர்' போன்ற திரைப்படங்கள். அன்பான சகோதரிகளாக இனிமேல் சகோதரர்களின் மனைவிகள் பேசினால் கூட சந்தேகக் கண்கொண்டு பார்க்கக்கூடிய அவல நிலைக்கு சமூகத்தைத் தள்ளி விட்டது அந்தப் படம். ஏற்கெனவே, அற்புதமான கூட்டுக் குடும்பங்கள் நலிந்து வருகின்றன. இருக்கிற சில குடும்பங்களில் பாசத்தோடு பழகிக் கொள்கிற சகோதரிகள் எத்தனை பேர் இல்லை?

'பாமா விஜயம்' என்ற திரைப்படத்திலே மிக அழகாக சகோதரர்களின் மனைவிகள் காட்டப்பட்டார்கள்.

'ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து... என்பது போல தனிப் பெண்களின் மனோபாவங்களைச் சீரழித்தது போதாது என்று குடும்பங்களுக்குள்ளும் இந்த ஆபாசம் புகுந்து விட்டதுதான் உச்சகட்ட நிகழ்வு.

என்ன கொடுமை இது?

சீதை என்று காவியநாயகி ஆதர்சமானது போய், இப்போது இப்படிப்பட்ட பெண்களே வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்பட்டு இருக்கிறார்கள். சலனமும், சஞ்சலமும், தன்னைப் பற்றி, தன் சுகத்தைப் பற்றி மட்டுமே யோசிக்கும் பெண்களே திரும்பத் திரும்பப் பேசப்படுகிறார்கள்.



அடிக்கடி ஒரு அவசரம் என்றால் வீடுகளில் செய்யும் ஸ்வீட் கேசரிதான். தேங்காயை, முதல் பால், இரண்டாவது (ஜலம் தெளித்து) பால் என எடுத்துக் கொண்டு இரண்டாம் பாலில் கேசரியை (ரவை, சேமியா எதுவானாலும்) வேக வைத்து சீனி சேர்த்தபின் இறக்கும் சமயத்தில் முதல் பாலை விட்டுக் கிளறி இறக்கினால் இன்னும் கேசரியா என்று குடும்பத்தினர் அலுத்துக் கொள்ளாதபடி மாறுதலான சுவையுடன் இருக்கும். முந்திரிக்கு பதில், மெலிதான தேங்காய் பல்லு, நிலக்கடலை பருப்பு, பேரீச்சை கூட நெய்யில் வறுத்துப் போட லாம். சிக்கனம்.வெரைட்டி!

– எஸ். பட்டம்மா

ஏற்கெனவே பல்வேறு நிலைகளில் மோக மும், பகட்டும், ஆடம்பரமும் இருந்தால்தான் மதிப்பார்கள் என்ற நிலையில் வளரும் பெண்கள் இவற்றைப் பார்க்கும்போது – இவர்கள் எப்படி வழிகாட்டப்படுவார்கள்? வாழ்வின் இலட்சியம் என்ன என்பதை எப்படித் தீர்மானிப்பார்கள்? எதிர்கால இந்தியா என்னவாகும்?

வேறு எந்த வெளிநாட்டுச் சக்தியும் செய்ய முடியாத தீங்கை இப்போது நமக்கு நாமே செய்து கொண்டு இருக்கிறோம். இந்தியப் பெண்ணின் மனதை மாசுபடுத்தி னால் அது இந்தியக் குடும்பங்களை மாசு படுத்துவது போலாகும். குடும்பங்கள் குழப்ப மானால் சமுதாயமே சிதைந்து போகும். அப்படிப்போன கதையைத்தான் வெளிநாடு களில் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

வெகு விரைவிலேயே இதற்கு ஒரு முடிவு கட்டப்படாவிட்டால் கண்ணுக்குத் தெரி யாமல் பரவிவரும் இந்தப் பயங்கர நச்சுப் பிரவாகம் விரைவில் நம் கலாச்சார ஆணி வேரையே தின்றுவிடும். பெண்களும், சமூக ஆர்வலர்களும் வெகுவிரைவில் விழித்துக் கொள்ள வேண்டும். இதற்கொரு தீர்வினைக் காணவேண்டும்.



அடிப்படைக் கல்வி!

"இன்னிக்கும் அடிப்பாங்க..."
கொட்டுகிற கண்ணீரைக்
கையாலே தொடச்சுகிட்டு
கையசைக்கும் கண்மணியைக்
கண்டுமனம் பதறுதம்மா!!
அடிச்சாதான் படிப்புன்னா
தோய்க்கிறகல் பெத்திருப்பேன்!
மிரட்டினாதான் அறிவுன்னா
மாடுகளைப்பெத்திருப்பேன்!
கோலெடுத்தா கல்வின்னா
குரங்காவே பெத்திருப்பேன்!

அடிபட்டு சிவந்து போன
அழகு கையைக் கண்டாலே
அடிவயிறு கலங்குதம்மா!
அடிப்படைக் கல்வியா, இல்லை
அடிபட்டால்தான் கல்வியா?
அறிவறிஞ்ச வாத்தியாரே!
மேல்படிப்பு மேடங்களே!
கடவுளையா அடிப்பாக?!
கும்பிட்டுச் சொல்லிக்கிறேன்
கோலில்லாமல் வந்து நீஎன்
கண்மணிக்குக் கல்விகொடு!!

— லக்ஷ்மிகண்ணன்

பிரபலமான இடம் பக்கத்தில் இருக்கும் பிரமாதமான இடம்!

வாசகர்கள் ஒரு 'பிடி' பிடித்து விட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். எத்தனை மாநிலங்களில் எத்தனை இடங்கள்! படிக்கப் படிக்க அங்கெல்லாம் பறக்க வேண்டும் என்று ஆசைதான் ஏற்பட்டது.

இந்த விடுமுறையில் சுற்றுலா போக நினைப்பவர்களுக்கு நிறைய புதிய இடங்கள் கிடைக்கும். அற்புதமாக பல இடங்களை வாசகர்கள் எழுதியிருப்பதால் இந்த இதழில் மட்டுமல்லாமல் தொடர்ந்து வெளியிடுகிறோம். இப்போதிலிருந்தே சேர்த்துக் கொண்டு வாருங்கள். உபயோகமாக பல தகவல்கள் கிடைக்கும்.


- ஆசிரியர்

நாம் எப்போது கிளம்பப் போகிறோம்?

"நான் பல வெளி நாடெல்லாம் பார்த்திருக்கிறேன்'' என பெருமைப்படுபவர்கள் நம்மவர்கள். ஆனால் வெளிநாட்டவரெல்லாம் வெளிநாடு என குறிப்பிடுவதில் இந்தியாவிற்கு முதலிடம் கொடுத்திருப்பார்கள். சுற்றுலாத் துறையில் தமிழகம் தலை நிமிர வைக்கும் இடங்கள் ஏராளம்.

1. சீசனுக்கு மட்டும் போகக் கூடிய இடங்கள்.
2. எல்லா நாட்களிலும் போகக் கூடிய இடங்கள்.

இவை சுற்றுலா தளத்தில் இரு வகைகள். சீசனையும் அனுபவித்து எல்லா நாட்களிலும் போகக் கூடிய இடத்தையும் அனுபவிக்க கூடிய இடங்கள் அரிது. இதை நாம் எளிதாய் அனுபவிக்க



• பாபநாசம் அணையில் பாயும் நீர்

ஏற்ற இடம் மூலிகை குளியல் தரும் குற்றாலம்.

குற்றாலத்தில் மதிய சாப்பாட்டை தவிர்த்து செங்கோட்டை வந்தால் மாறுபட்ட சாப்பாட்டை மலையாள வாடையுடன் சாப்பிட்டு அனுபவிக்கலாம்.

செங்கோட்டையிலிருந்து 'அர்ச்சன் கோவில்' போய் வரலாம். மலைப்பாதை சிலிர்ப்பைத் தரும். குறைந்த தொலைவு பயணமானாலும் அனுபவிக்க வேண்டிய பயணம். அரசு பஸ் வசதி மிக குறைவு. சொந்த வாடகை வாகன வசதி இருந்தால் மட்டும் குறிப்பிட்ட நேரத்தில் சென்று வரலாம்.

செங்கோட்டையிலிருந்து திருமலைக் கோவிலை அனுபவிக்கவே உங்களைக் குற்றாலத்திலிருந்து இழுத்து வந்தது.

மலையேற படிப்பாதை, படிப்பாதை 'உயிரை வாங்காது' 'மூச்சை வாங்கும்'

மலைமேல் ஏறி சுற்றிலும் உள்ள மலைகள் அடிக்கடி மேகத்தை இழுத்துப் போர்த்திக் கொள்வதை ரசிக்காமல், தரையிலிருந்து வானத்து நட்சத்திரங்களை எண்ணத் திணறுவதைப் போல, மலையிலிருந்து தரையில் தெரியும் தென்னை மரங்களை எண்ணத் திணறாமல், ஆளை சாய்த்து விடும் காற்றை அனு

பவிக்காமல் ஏறின வேகத்தில் இறங்கி மலையடிவாரத்தில் பேருந்துக்காக காத்துக் கிடந்தலை தவிர்க்க அடுத்து பேருந்து வரும் நேரத்தை கேட்டுக் கொண்டு மேலே ஏறுங்கள்.

திருமலைக் கோவில் இருப்பது தமிழக எல்லை முடிவு. கேரள எல்லை ஆரம்பம். வயல் வெளி, தென்னந்தோப்பு, மேகம், மலை, சுத்தக் காற்று சற்றுக் குளிருடன் என்பதையெல்லாம் அனுபவிக்க கோயில் பின்புறம் வந்து விட வேண்டும். மலைப் பாதையில் ஏறத்தாழ 300 படிகளைக் கடந்த பின் இடது புறத்தின் புற்கள் ஆடுவதைக் கண்டிப்பாக நின்று ரசிக்க வேண்டும்.



• சின்ன சின்ன ஆசை

பாபநாசம் அணை இங்குதான் இருக்கிறது. அணையில் தேங்கிக் கிடக்கும் நீரை மோட்டார் படகுச் சவாரி மூலம் கடந்து 1 கி.மீ மலையேற்றத்திற் குப் பிறகு நம் கண்ணில் படும் பாணை தீர்த்தம் என்ற அருவி. ('சின்ன சின்ன ஆசை சிறகடிக்க ஆசை' பாடலை முணுமுணுத்துக் கொள்ளுங்கள். இங்குதான் பாடல் படமானது) ஆர்வமிருந் தால் உடன் தைரியம் வர வன இலாகாவினருக்காக அருவி ஒட்டி மலை மீது உள்ள இரும்புச் சங்கிலியைப் பிடித்துக்கொண்டு மலைமீது ஏறி அருவிக்கு மேல் பகுதிக்கு வரலாம். இதற்கே இவ்வளவு பிரமிப்பு என்றால்.... அதோடு நில்லாமல் அருவி தோன்றுமிடம் தேடிப் போக லாம். எக்ஸ்ட்ரா பிரமிப்பு கிடைக்கும்.

காரையாறு போக மீண்டும் குற்றாலம் போகத் தேவையில்லை. வாகன வசதி உள்ளவர்கள் 20 கி.மீ மிச்சப்படுத்த பழைய குற்றாலம் வழியே விக்கிரம சிங்கபுரம் வந்து தங்கி விடலாம். பேருந்துப் பயணம் என்றால் தென்காசியில் காலை 7 மணியளவில் 'காரையார்' செல்லும் பேருந்து உள்ளது. அம்பாசமுத்திரம், விக்கிரமசிங்கபுரம் வழியே மீண்டும் மலைப்பாதை. அருவி, அணைக் கட்டுகள், நீர்மின் திட்டங்கள், வனவிலங்கு சரணாலயம். மோட்டார் படகு சவாரிக்குத் தயாராகுங்கள்!

முதலில் நாம் சந்திப்பது 'அகத்தியர் அருவி' குற்றாலத்து குளியல் போட்டியைத் தவிர்க்க வேண்டி அருவி இங்கு நீளவாட்டில் இருக்கும். குற்றால அருவியில் உள்ள ஆண், பெண் தடுப்பு கிடையாது. இது அருவியல்ல, பாபநாசம் அணையிலிருந்து வெளி வரும் தண்ணீர். குளித்த பிறகும் இது அருவிதான். அடுத்து சேரலாறு அணை இங்கும் நீர்மின் திட்டம் உள்ளது. இங்கிருந்து கேரளாவிற்கு 30 கி.மீ.தான். பேருந்துப் பாதையல்ல. இடையில் சின்ன, சின்ன ஊர்கள் உண்டு. பிரமிக்க வைப்பதோடு பெருமைப்பட வைக்கும் இடங்கள் நம் மாநிலத்தில் நிறையவே உள்ளன. அருகில் 'முண்டந்துறை' புலிகளின் சரணாலயம். தங்கி, சுற்றிப் பார்க்க வனத்துறை அனுமதி வேண்டும்.

கீழணை, மேலணை, மணிமுத்தாறு அணை எனக் கடந்து தரைப் பயணத்தின் கடைசி இடம் காரையாறு. இங்கு சின்ன ஹோட்டல்கள் உள்ளன. விக்கிரமசிங்கபுரத்திலோ, அம்பாசமுத்திரத்திலோ வேண்டிய உணவு வகைகளை ஏற்பாடு செய்து வருவதே சரி.

குற்றாலத்திற்கு மட்டுமே சீசன். ஏனைய இடங்களுக்கு எல்லா நாட்களிலும் போகலாம்.

திரைப்படக் குழுக்கள் ஸ்டுடியோக்களை விட்டுக் கிளம்பி அநேக வருடங்கள் ஆகி விட்டன. நாம் எப்போது கிளம்பப் போகிறோம் நான்கு சுவர்களை விட்டு...?

– மோகன், குடந்தை.

கூந்தகுளம் பறவைகளின் சரணாலயம்

கூந்தங்குளம் நெல்லை மாவட்டத்தில் நாங்குநேரி ஊராட்சி ஒன்றியத்தில் மூலக்கரைப்பட்டி, முனைஞ்சிப்பட்டி ஆகிய ஊர்களை அடுத்து அழகும், அமைதியும்



கோடெக்ஸ் அந்தரங்க உண்மைகள்!!

எனக்கு மாதவிடாயின் போது, நான்கு நாட்களுக்கு கட்டியாக கடும் உதிரப்போக்கு உண்டாகிறது. இது நார்மலா? – வத்சலா, கோயம்புத்தூர்.

கட்டியாக கடும் உதிரப்போக்கினால் ரத்த சோகை ஏற்படலாம். இப்பிரச்னை அண்மையில் ஏற்பட்டிருந்தால் அல்லது உதிரப்போக்கு நிலையில் அண்மையில் மாற்றம் ஏற்பட்டிருந்தால் டாக்டரிடம் காண்பிப்பது அவசியம். உங்கள் கர்ப்பப்பையில் சிக்கல் இருக்கக் கூடும். மாதவிடாயின் போது சில மருந்துகள் எடுத்துக் கொள்ள வேண்டும். இதனால் கட்டியுடன் உண்டாகும் உதிரப் போக்கு குறையும் வாய்ப்பு உண்டு.

என் சருமம் எண்ணெய் பசை மிகுந்து இருப்பதால் மாதவிடாயின் போது பரு உண்டாகிறது. இதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? – வித்யா, சென்னை.

ஒரு நாளைக்கு இருமுறை மெடிகேடட் சோப் உபயோகித்து முகத்தை நன்றாக கழுவ வேண்டும். மாதவிடாயின் போது ஏற்படும் ஹார்மோன் மாற்றங்களால் முகப்பரு உண்டாகலாம். ஆனால் பிரச்னை கடுமையாக இருந்தால் கைனகாலஜிகல் டாக்டரிடம் காட்ட வேண்டும். தேவைப்பட்டால் ஸ்கின் ஸ்பெஷலிஸ்டின் கருத்தை கேட்கலாம்.

மாதவிடாயின் போது முழு ஓய்வு அவசியமா? – கனிதா, ஒசூர்.

மாதவிடாயின் போது நீங்கள் எப்போதும் போல் சுறுசுறுப்பாக இருக்கலாம். உங்களால் எவ்வளவு சுறுசுறுப்பாக இருக்க முடிகிறது என்பதைப் பொறுத்தது. போதுமான அளவு சானிடரி பாதுகாப்பு உங்களை சுத்தமாகவும் உலர்வாகவும் வைப்பதால், மாதவிடாய் உங்கள் தினசரி அலுவல்களுக்கு இடையூறாக இருக்காது.

மாதவிடாயின் போது எனக்கு சருமத் தடிப்பு ஏற்படுகிறது. என்ன காரணம்? – கீதா, மைசூர்.

மாதவிடாயின் போது உலர்வாக இருப்பது மிகவும் அவசியம். ஈரம் மற்றும் உரசலால் அரிப்பு ஏற்பட்டு தடிப்பு ஏற்படலாம். நனைத்த நாப்கின்களை அடிக்கடி மாற்றி, சுகாதாரத்தில் கவனமுடன் இருந்தால் தடிப்பு தவிர்க்கப்படலாம். எரிச்சல் அல்லது புண் ஏற்பட்டால் டாக்டரிடம் காண்பிப்பது நல்லது.


மாதவிடாயின் சுற்றுக் கணக்கு என்ன? அதை எவ்வாறு கணக்கிடுவது? – சில்பா, மும்பை.

மாதவிடாய் தொடங்கிய முதல் நாளிலிருந்து அடுத்த மாதவிடாய் உண்டாகும் முதல் நாள் வரை உள்ள நாட்களின் எண்ணிக்கையே 'சுற்றுக் கணக்கு' என்பது. பொதுவாக பெண்களுக்கு இது 28லிருந்து 30 நாட்கள் வரை ஆகும். உதாரணத்திற்கு மாதவிடாய் ஜனவரி 1-ம் தேதி ஆரம்பித்து அடுத்த மாதவிடாய் ஜனவரி 31-ம் தேதி ஆரம்பித்தால் உங்கள் மாதவிடாயின் 'சுற்றுக் கணக்கு' 30 நாட்கள் என கணக்கிடப்பட வேண்டும்.

KOTEX ANTHARANGA UNMAIGAL

Kimberly Clark Lever Ltd.,

P.O. Box No. 862, Deccan Gymkhana Post Office, Pune - 411 004.



— ADVT

இனிமையும் நிறைந்த சூழ் நிலையில் உள்ள ஊர். இந்த கூந்தங்குளம் கிராமம் பிரபலமடைய இந்த இயற் கையை நாடி வரும் வித விதமான வெளிநாட்டுப் பறவைகள் தான் முக்கிய காரணமாகும்.

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, டெக்ரான் உள்ளிட்ட பல வெளி நாடுகளில் இருந்தும், ராஜஸ்தான், குஜராத் ஆகிய வெளி மாநிலங் களில் இருந்தும் வண்ணங் களை எல்லாம் ஆடை யாக உடுத்தியது போல பல வண்ணங்களில் பலவித பறவைகள் வந்த வண்ணம் உள்ளன.



• இராமேஸ்வரம்

ஜனவரி மாதம் வர ஆரம்பித்து மார்ச் ஏப்ரல் வரை குஞ்சு பொரித்து, பின் தன் பெரிதான குஞ்சுகளோடு தான் எங்கு இருந்து வந்ததோ அங்கேயே திரும்பிச் செல்லும் இந்தப் பறவைகள் கிட்டத்தட்ட எட்டு மாதம் இங்கு வருவதும், இருப்பதும் வழக்கம்தான் என்றாலும் வழக்கத்தைவிட இந்த ஆண்டு அதிக அளவில் பறவைகள் வந்துள்ளன.

செங்கல் நாரை, கூழைக்கடா, கரண்டி வாயன், நத்தை கொத்தி, ஐரீஷ் கொக்கு, உள்ளான், வக்கா என்ற பெயர்களோடு பல் ஆயிரக்கணக்கான பறவைகள் ஜோடி, ஜோடியாக கூட்டம் கூட்டமாக வீட்டு ஓடுகளில் மரங்களில், கூடுகளில், திண்ணைகளில், நடைபாதைகளில் கருவேல மரக்காடுகளில், குளத்தில் கரையில் என்று எங்கு திரும்பினாலும் நின்று காட்சி தருகின்றன.

இந்தப் பறவைகள் தன் ஜோடியோடு மகிழ்ந்து குலாவுவதும், குஞ்சுகளோடு பாசம் வைத்து விளையாடுவதும், தாயன்போடு உணவு ஊட்டுவதும் ஒரு அணியாக சென்று மீன் பிடிப்பதும் வானத்தில் வர்ண ஜாலவித்தை காட்டி விமானம் போல ஓசை எழுப்பிப் பறப்பதும், பார்க்கப் பார்க்கத் திகட்டாத ரம்மியமான காட்சிகளாகும்.



• பச்சமூரி வெள்ளியருவி

இந்தப் பறவைகள் இப்படி இடைவிடாமல் இரவும் பகலும் சத்தம் தருவது இந்த ஊர் மக்களுக்குக் கேட்கக் கிடைக்காத சங்கீதமாக எண்ணி இன்பமடைகின்றனர். உண்மையிலேயே தாங்கள் பெற்ற பிள்ளைகளைப் போல இந்த கிராம மக்கள் பறவைகளை பாராட்டி சீராட்டி வளர்க்கின்றனர். பறவைகளுக்கு அடுத்து இந்த கிராம மக்களின் பாசம் பறவைகளை பார்வையிட வரும் நம் மீது காட்டுவது பெரிதும் நம்மைக் கவர்கிறது.

எல்லா வேலைகளையும் போட்டு விட்டு பார்வையாளர்களுடன் கூடவே வந்து அவர்களுக்குப் பறவைகளை பற்றி விளக்கமும் தந்து புகைப்படம், வீடியோ எடுக்க உதவி செய்து மோர் முதலான பானங்களை இலவசமாக வழங்கி அன்பு காட்டுகின்றனர்.

எத்தனையோ பறவைகள் சரணாலயம் இருக்கலாம். ஆனால் அங்கெல்லாம் இத்தனை விதமான பறவைகள் இருக்குமா என்பது சந்தேகமே. அப்படியே இருந்தாலும் அவை கண்ணுக்கு எட்டும் தொலை தூரத்தில் தான் இருக்கும். ஆனால் இங்கே கைக்கு எட்டும் தூரத்தில் நின்றபடி பறவைகள் தங்களை காண வரும் மக்களை வரவேற்கிறது. இறக்கைகளை விரித்து வர்ண ஜாலம் காட்டுகிறது.

'உங்களைக் காண பல மைல் தூரம் கடந்து வந்து இருக்கிறோம். நீங்கள் உங்கள் குழந்தை குடும்பத்துடன் எங்களைக் காண சில மைல் தூரம் பயணம் செய்து வாருங்களேன்' என்று பறவைகளே விரும்பி அழைக்கின்றன. போய்த்தான் பார்க்கலாமே!

– ஆர். மீனாட்சி, திருநெல்வேலி டவுன்.

குருசடைத் தீவு!

என் மகன் சத்ய நாராயணன் சுற்றுலாத் துறை நடத்திய பேச்சுப் போட்டியில் முதல் பரிசு பெற்றான். அதைத் தவிர பங்கு பெற்ற அத்தனை மாணவ மாணவிகளையும் சுற்றுலாத் துறை இராமநாதபுரத்திற்கு அழைத்துச் சென்றது. இராமநாத புரம் கடலிலிருந்து சில கிலோமீட்டர் தொலைவில் உள்ள 'குரு சடைத் தீவுக்கு' அழைத்துச் சென்றது. முதலில்

ஒரு நிமிடம் ஆளில்லாத கடலில் கொண்டு விட்டார்களே! என்று நினைத்தோம்.

எனினும் Zoology படிக்கும் மாண வர்களுக்கு அந்தத் தீவு ஒரு வரப் பிரசாதம். எவ்வளவு பெரிய நத்தைகள்! சங்கிலேயே இரட்டைப் பிறவி சங்குகள்! நத்தைகள்! அதன் ஓடுகள்! கடல் தாவரத்தின் பல வகைகள். அன் னாசிப் பழத்தைப் போன்றே மேல் பார்வைக்குக் காணப்படும் தாழங் காய்கள்! பெரிய பாட்டில்களில் சோதனைக் கூடத்தில் அடைக்கப் பட்டுள்ள தாவரங்களையும், உயிர் ஜீவன்களையும் பார்த்திருந்த எங் களுக்கு நேரிலேயே அவற்றைக் காணக் கிடைத்தபோது அடைந்த சந்தோஷம். எல்லையே இல்லை!

பெரிய பாம்பைப் பிடித்து (எல்லா மாணவர்க்கும் காட்ட நினைத்து) வைத்தோம். மாணவர்க்கும் காண்பித்தோம். ஆனால் கடலில் வந்த படகோட்டி சொன்னபோது அதிர்ந்துதான் போனோம். தமிழில் வெளி வேடதாரிக்கு ஒரு பழமொழி உண்டாம். "பாம் புக்குத் தலையும், மீனுக்கு வாலும்" என்று. அது பாம்பு இல்லையம்மா கருவாளை! என்றார். பார்ப்பதற்கு பாம்பு போல இருக்குமாம்! வால் மட்டும் மீனின் துடுப்பு போல இருக்குமாம்! விளக்கம் கேட்டவுடன் இந்தப் பாம்பை எந்தக் கட்சிக்கு சின்னமாக அழைக்கலாம் என்று தோன்றியது. ஜெல்லி மீன் பலவகை பார்த் தோம். அதில் ஒருவகை என்ன வகை என புரியவில்லை. கொழுப்பெடுத்துப் போய் அதைக் கொம்பால் புரட்டிப் போட்டு அதை யும் மாணவர்களுக்குக் காண்பித்தோம். ஆனால் கொம்பால் திருப்பியவுடன் அதன் உடம்பிலிருந்து ஏதோ ஒருவகை திரவம் பீச்சியடிக்க உடனே முகமெல்லாம் அரிப்பு எடுக்க "ஓடு படகோட்டியே! இதற்கு ஒரு வழி சொல்" என்றேன்.

"உடனே கடலம்மாவை (கடல் நீரை) மூஞ்சி மேல் ஊற்றி கழுவிக் கொள்ளுங்கள்" என்றார். சிறிது நேரத்தில் அரிப்பு அடங்கியது. அது மட்டுமல்ல பவளப் பாறைகள், கடல் வாழ் பிராணிகளின் கூடுகள் என எக்கச் சக்கமாக சேகரித் தோம்.

எங்களுடன் வந்த ஒருவர் நிறைய அன்னாசிப் பழங்களைப் பார்த்து விட்டார். ஒவ்வொன்றும் மிகப் பெரியவை.



• பச்சமுரிரில் சூரிய அஸ்தமனம்

உடனே நப்பாசைப் பட்டு நிறைய பறித்தார். எனக்கு மட்டும் சந்தேகம். இவ்வளவு பெரியதாகியும் பழ வாசனை வரவில்லையே என்று!

ஆனால் அவரோ "சுற்றிச் சூழ வலை நாற் றம். மீன்கள் வகை. அதனால்தான் வாசனை தெரியவில்லை" என்று பறித்து சுமக்க மாட்டாமல் சுமந்தார். படகில் ஏறும் சமயம் மீனவர் ஒருவர் "ஏஞ் சாமி! இதையெல்லாம் தூக்கி வருகிறீர்கள். தாழங்காய் சாமி இது! தூக்கி எறியுங்கள்" என்றாரே பார்க்கலாம். நம்மவர் முகத்தில் அசடு வழிந்தது. ஆனால் விடுபவரா நம்மவர்!

"தெரியுமய்யா! ஆனால் எவ்வளவு பெரிய தாழங்காய்! ஊரில் இருக்கும் மாணவர் களுக்குக் காட்டலாம் அல்லவா?" என்று சொன்னார்.

எனக்குச் சிரிப்பு பொத்துக்கொண்டு வந்தது. பிறகு பாதி வழி கடலில் வரும்போது 'இக் காய்கள் மிதக்குமா' என்று பார்ப்பது போல சிலவற்றை வீசி விட்டு வீராப்புக்காக சில காய்களை சுமந்து சென்றார். உண்மை யான அன்னாசியை இப்போது பார்த்தாலும் சிரிப்புத்தான் வருகிறது!

– நா. விஜயா, சென்னை – 39.

சிவப்புச் சூரியன்!

நாக்பூரிலிருந்து 270 கி.மீ தொலைவில் பச்சமரி (PACHMURHI) என்ற ஒரு மலைவாசஸ் தலத்திற்கு நண் பர்கள் குடும்பத் தோடு சென் றோம். போகும் வழியிலேயே, வயலின் நடுவே அமர்ந்து கொண்டு இட்லி, சாம்பார்



• போஜ்பூர்

1..2..3....

ஒன். டு. த்ரி...

அறுசுவை விருந்து ரெடி


இந்தியாவில் முதல் முறையாக

மெகா ஃபுட்ஸ்

உடனடி உணவு வகைகள்

தயார் நிலையில். பேஸ்ட் வடிவில்.





கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள்... நீங்கள் ஒரு பாக்கெட்டை பிரித்து அதில் உள்ளதை குறித்த அளவு வெந்நீரில் கலக்குகிறீர்கள்... இன்னொரு



பாக்கெட்டில் உள்ளதை சூடான சாதத்தோடு கலக்குகிறீர்கள்... நீங்கள் செய்தது என்ன தெரியுமா? ஆம். அறுசுவை விருந்து. மெகா ஃபுட்ஸின் தயார் நிலையிலான பேஸ்ட்களை வைத்து ஒரு அறுசுவை விருந்தையே படைக்கலாம். வத்தக்குழம்பா, ருசியான பூண்டு ரசமா,



தக்காளி சாதமா.. இல்லை சுவையான வெஜிடபிள் பிரியாணியா? எல்லாமே நொடியில் ரெடி.

மெகா ஃபுட்ஸ்:
ஈஸி சமையல்,
சூப்பர் டேஸ்ட்.

மெகா ஃபுட்ஸின் உடனடி உணவு ரகங்கள்

குழம்பு வகைகள்
வத்தக் குழம்பு
காரக் குழம்பு
மிளகு குழம்பு

ரச வகைகள்
எலுமிச்சை ரசம்
தக்காளி ரசம்
பூண்டு ரசம்
மிளகு ரசம்

சாத வகைகள்
எலுமிச்சை சாதம்
தக்காளி சாதம்
புளியம்சாதம்
வெஜிடபிள் பிரியாணி
வெஜி. பிரைடு ரைஸ்

மற்றும்
சோலே மசாலா
கறி மசாலா
தம் ஆலு



10002 FPO

Mega Foods™

CONVENIENCE FOOD

எல்லாம் சாப்பிட்டு விட்டு, பாட்டும் பாடிக் கொண்டு, ஏழு மணி நேர பிரயாணத்துக்குப் பின் பச்சமரி சென்றடைந்த போது மாலை நேரம் ஐந்தாகி விட்டது. சூரியன் மலையின் நடுவே தெரியும் வானத்தில் மறையும் காட்சி காணக் கிடைக்காத ஒன்று என்று அங்கிருப்பவர்கள் சொன்னவுடன், களைப்பையும் பொருட்படுத்தாமல், தரையிலிருந்து சுமார் 4400 அடி தூரத்திலுள்ள மலை உச்சிக்குச் சென்றோம். கட்டணம் ரூ.100/செலுத்தி உள்ளே சென்றபோது நிறைய பேர் வீடியோ மற்றும் புகைப்படக் கேமிராவுடன் காத்திருப்பதை பார்க்க முடிந்தது.


• அரக்குப் பள்ளத்தாக்கு

சுமார் 5.40 மணி அளவில் எதிரிலிருந்த மலைகளில் வெளிச்சம் தெரிய ஆரம்பித்தது. பின்னர் மலைகளுக்கிடையில் தெரிந்த வானம் படிப்படியாக சிவப்பாகிக் கொண்டே வந்தது. அதேசமயம், சிவப்பு நிற சூரியக் கதிர்கள் மலைக்கு எதிரே உட்கார்ந்திருந்த எங்கள் மேலும் விழ, சிவப்பு ஒளியில் மூழ்கியது போன்ற உணர்வு ஏற்பட்டது. குழந்தைகள் மட்டுமின்றி பெரியவர்களும், சிவப்பு ஒளிபடர்ந்த ஆடிட்டோரியம் என்ற நினைப்போடு நடனம் ஆடத் தொடங்கி விட்டனர்.

மலைகளுக்கிடையே வானத்திலே ஜொலித்தவாறே தோன்றிய செங்கதிரவனைப் பார்த்ததும் எங்கள் களைப்பு பறந்து விட்டது. சில வினாடிகளுக்குப் பின், கொஞ்சம் கொஞ்சமாக கதிர்கள் மறைந்து செம்பழமாக சூரியன் மலையுச்சியில் பிரகாசித்தபோது, இயற்கையின் படைப்பில் எவ்வளவு அற்புதங்களை பார்க்காமல் விட்டு வைத்திருக்கிறோமோ? என்ற ஏக்கம் ஏற்பட்டது. பிரகாசத்தைக் கொடுத்துக் கொண்டே வந்த சூரியன், இருளைக் கொடுத்தவாறே கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்கினான்.

சூடான பஜ்ஜி சாப்பிட்டு விட்டு மலையிலேயே தங்க இடம் தேடினோம். ஒரு மாதம் முன்பே புக் செய்தால்தான் இடம் கிடைக்கும் என்பதை தெரிந்து கொண்ட பின், சுமார் 15 கி.மீ தொலைவில் ரூம் எடுத்துக்கொண்டு தங்கினோம். காட்டின் நடுவே இருந்த அந்த இடத்தில் அடுப்பு மூட்டி சப்பாத்தி செய்து கொடுத்தனர். நன்றாக தூங்கி ரெஸ்ட் எடுத்துக் கொண்டோம்.

மறுநாள் பச்சமரி மலையில், முதலில் செங்குத்தான படிகள் வழியாக மேலே ஏறி குகை ஒன்றினை சென்று அடைந்தோம். பாறையிலிருந்து வந்த அருவி குகை மேல் கொட்டிக் கொண்டிருந்ததை பார்த்தபோது எல்லாருக்கும் குதூகலமாக இருந்தது. குகைக்குள் சென்றபோது, எங்கள் உடம்பின் மேலே, சிறிது சிறிதாக தண்ணீர் பட்டுத் தெரித்தது. சிவலிங்கம் தரிசனத்தை முடித்துவிட்டு, இன்னொரு குகைக்குள் சென்றோம். ஒருவர் மட்டும் பக்கவாட்டில் மட்டுமே செல்லக்கூடியதாக இருந்த அந்த குகையில், இருட்டில் தட்டுத்தடுமாறி உள்ளே சென்று, கணபதி மற்றும் ஆஞ்சநேய சுவாமியைப் பார்த்துவிட்டு வெளியே வந்தது புது அனுபவமாக இருந்தது. ஐந்து மணி நேரம் நடந்து சென்றால் 'மஹாதேவ் மலை' என்ற மலையுச்சியில் அழகான சிவன் கோவில் உள்ளது என்று அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். பைனாகுலர் மூலம் அக்கோவிலைப் பார்த்தோம்.

அப்ஸரா அருவி, சில்வர் அருவி என்ற பெயருடைய அருவிகளைக் காண அடர்ந்த மரங்களுக்கிடையில் நடந்து சென்ற அனுபவம் மறக்க முடியாத ஒன்று. இது தவிர Bee falls என்று ஒரு அருவி. நெடுந்தூரம், அடர்ந்த கானகங்களுக்கிடையே மலைகளில் இறங்கி சென்ற பிறகு மிகவும் செங்குத்தான ஒற்றையடி வழுக்குப் பாறைகளில் இறங்கிச் சென்றோம். எந்த நேரமும் தேனீக்கள் கூட்டமாக வரும் என்று சொன்னதால், திக்திக்கென்று அடித்துக் கொள்ளும் மனத்தோடு, வழுக்குப் பாறைகளில் பயந்து கொண்டே சென்றபோது, படு திரில்லாக இருந்தது மட்டுமல்ல, ஆதிகால மனிதர்களையும் நினைத்துப் பார்க்கத் தோன்றியது. இறுதியில், அந்தப் பாதை கொட்டும் அருவிக்கு அழைத்துச் செல்ல நன்றாகக் குளித்து கும்மாளம் போட்டோம்.


திரும்பும்போது, ஈரத் துணியோடு அதேபாதையில் ஏறச் சிரமப் பட்டோம் என்பது வேறு விஷயம். ஏரியில் போட்டிங், குழந்தைகள் பார்க்கில் சிறிது விளையாடி விட்டு ஷாப்பிங் முடித்துக் கொண்டு களைப்போடு வீடு திரும்பினோம்.

ஊருக்கு வந்து சேர்ந்தபின் இரண்டு, மூன்று நாள் உடம்பு வலியால் கஷ்டப் பட்டாலும், பச்சை பசுமையான கானகம்,

கொட்டும் அருவி, அடர்ந்த மரங்களுக் கிடையில், நல்ல காற்றை சுவாசித்தவாறே சல சலப்பான தண்ணீரைப் பார்த்துக் கொண்டே நம்மாலும் கடினமான பாதையைக் கடக்க முடியும் என்ற எண்ணத்தைத் தந்த நடைப் பயணம், இப்படி பல அனுபவத்தைத் தந்தது 'பச்சமரி' பயணம்.

பச்சமரி செல்ல விரும்புவோருக்கு சில குறிப்புகள்:

பச்சமரி மத்தியப் பிரதேசத்தைச் சார்ந்த இடம். 'பச்சமரி' போபாலிருந்து சுமார் 180 கி.மீ தொலைவில் உள்ளது. எம்.பி.டூரிஸம் எல்லா மாநில தலைநகரிலும் உள்ளது. பச்ச மரியில் தங்க விரும்புபவர்கள் எம்.பி டூரிஸத் தில் ஒரு மாதம் முன்பாகவே ரூம் புக் செய்து கொள்ள வசதி உள்ளது. மேலும் மலையில் சுற்றிப் பார்க்க வாகன வசதி உள்ளது. எல்லா வித உணவுகளும் பச்சமரியில் கிடைக் கிறது.



Train Route : Nagpur - Betul - Itarsi
By Road : Bhopal - piparia - pachmarhi
Nagpur - Chindwara - pachmarhi

– பத்மாவதி முத்துக்குமார்,
நாக்பூர்.

ஏழைகளின் டார்ஜிலிங்!

கல்கத்தாவுக்குச் சுற்றுலா செல்பவர்கள் ஆந்திராவின் கிழக்குக் கடற்கரையில் விசாகப் பட்டினத்தில் இறங்கி, அருகிலுள்ள சிம்மாசல க்ஷேத்திரத்தில் மலை மீது நரசிம்மரைத் தரிசித்து விட்டு, ஒரிசா மாநிலத்தை நோக்கி விரைந்து சென்று விடுவார்கள். இயற்கை விரும்பிகள் இரண்டொரு நாள் கூடுதலாகத் தங்கினால் 'பூலோக சுவர்க்கம்' ஏழைகளின் டார்ஜிலிங்' என்று வர்ணிக்கப்படும் அரக்குப் பள்ளத்தாக்கின் அழகிய காட்சிகளை கண்டு களிக்கலாம்.

அரக்குப் பள்ளத்தாக்கு விசாகப்பட் டினத்திலிருந்து 110 கிலோமீட்டர் தூரத்தில் 1300 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. கிரண்டுல் – கொத்தவலசா ரயில் மார்க்கத்தில் ஷிமிலிகுடா என்ற ரயில் நிலையத்தில் இறங்க வேண்டும். பேருந்திலும் செல்ல லாம். பாதி தூரம் ரயிலிலும் பிறகு பேருந் திலும் பயணித்தால் இருவகை வித்தியாசமான காட்சிகளைக் கண்டு ரசிக்கலாம்.

90 கிலோமீட்டர் தூரம் சென்றதும் பொர்ரா குகைகள் என்ற இடத்தில் இறங்கிக் கொள்ள வேண்டும். இவை சரித்திர காலத் துக்கு முந்தியவை என்றும், ஆதி மனிதனும், இனமே அழிந்து விட்ட சில விலங்குகளும் நடமாடிய இடம் என்றும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். ஒரு காட் டாறு வந்து குகைகளில் புகுந்து காணாமல் போகிறது. பிறகு, 300 அடிக்குக் கீழே ஓரிடத் தில் மீண்டும் தோன்றி நீர்வீழ்ச்சியாகப் பூக் களைச் சொரிந்து, பின்னர் சர்ப்பம் போல் வளைந்து, வளைந்து வங்கக் கடலை நோக்கிப் பயணிக்கிறது. இப் பகுதியில் வசிக்கும் கிரி ஜன்கள் தாங்கள் ஸ்ரீ இராமனுக்கு எச்சிற் கனியைக் கொடுத்த சபரியின் வம்சத் தில் வந்தவர்கள் என்று கூறிக் கொள்கிறார் கள்.

அரக்கு மலையின் உச்சியை நெருங்கும் போது வானிலும் கடந்து வந்த பாதையிலும் சஞ்சரிக்கும் மேகங்கள் உங்கள் பேருந்தையும் வருடுவதைக் காணலாம். உச்சியை அடைந் ததும் வாவ்! பூமி எதிரில் ஒரு ராக்ஷச பச்சைக் கம்பளத்தை விரித்தது போல தடாலென்று பெரிய பரப்பளவில் கீழே சரிந்து போவதைக் காணலாம். இதைப் பூலோக சுவர்க்கம் என்று வர்ணிப்பது மிகையல்ல என்று தோன்றும். முகட்டையொட்டியே நடந்து வெவ்வேறு திசைகளில் பார்த்தால் வித்தியாசமான இயற் கையின் எழில் கோலங்களைக் கண்டு ரசிக்க லாம்.

சுற்றுலா பயணிகள் வசதிக்காக இங்கு விருந்தினர் விடுதி வசதிகளும் உள் ளன.

– அ. ஷண்முக சுந்தரம்,
சிட்லபாக்கம்.

அன்னமளிக்கும் அன்னபூர்ணேசுவரி!

கர்நாடக மாநிலத்தில் அமைந்துள்ள மிக வும் அற்புதமான இடம் ஹொர நாடு! பக்கத்து மாநிலமான கர்நாடகத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற க்ஷேத்திரம் அன்னபூர்ணேசுவரி குடி கொண்டுள்ள ஹொரநாடு (Horanadu)

பெங்களூரில் இருந்து 273 கி.மீ தூரத்தில் உள்ளது ஷிமோகா நகரம். அங்கிருந்து ஹொர நாடு செல்வதற்கு பஸ் மற்றும் கார் வசதிகள் உள்ளன. நாங்கள் ஷிமோகாவில் இருந்து



"வெளியூர் சுற்றுலா செல்லும் போது வீண் மன உளைச்சலைத் தவிர்த்தல் மிக அவசியம். சுற்றுலா புறப்படும் முன் வீட்டை சரியாக பூட்டித் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து விட்டுச் செல்ல வேண்டும்."

தகவல் : ஜி. ஆண்டாள்

காரில் நரசிம்மராஜபுரா, பாலேஹன்னூர், கலசா வழியாக ஹொர நாடு சென்றடைந் தோம். பெங்களூரில் இருந்து அரைமணி நேரத் திற்கு ஒருமுறை ஷிமோகாவிற்கு பஸ் வசதி உள்ளது.

தென்கனரா மாவட்டத்தில் அமைந்துள்ள இந்த இடம் மிகவும் அற்புதமாக இயற்கைச் சூழலில் காணப்படுகிறது. வழியெல்லாம் காபி, டீ எஸ்டேட்டுகள், பச்சை பசேலென ரம்மியான சூழல். அன்னபூர்ணேசுவரி குடி கொண்டுள்ள ஹொரநாடு சிறிய இடமாக இருந்தாலும் கோயில் ஊரின் நடுநாயகமாக அமைந்துள்ளது.

அனைவருக்கும் அருள் பாலிக்கும் அன்ன பூர்ணேசுவரி அன்னை நின்ற நிலையில் ஜகத் ஜோதியாக காட்சியளிக்கிறாள். மத்தியான நேரத்தில் நடத்தப்படும் மகா பூஜையின் போது கர்ப்ப கிரகத்திலும் பிரகாரத்திலும் நூற்றுக்கணக்கான விளக்குகள் ஏற்றப்பட்டு மகா ஆரத்தி பூஜை நடக்கும்போது மெய் சிலிர்க்கிறது. அன்னையின் க்ஷேத்திரத்திற்குச் சென்று வழிபட்டு வேண்டியவர்கள் அன்னத் திற்கே பஞ்சம் வராமல் நலமுடன் உள்ளனர். பூஜை முடிந்ததும் இலவசமாக சித்ரான்னம், சாதம், சாம்பார், ரசம் பாயசம் உட்பட அனைத்தும் சம பந்தியாக பரிமாறப்படுகிறது. அற்புதமான சுவை.

தங்குவதற்குக் குறைந்த விலையில் காட்டேஜ்கள் கிடைக்கின்றன. பசுமையான இயற்கைச் சூழல் நம் மனதை கொள்ளை கொள்கிறது. மலபாரில் கிடைக்கும் அனைத்து வகையான பொருட்களும் குறைந்த விலை யில் தேவஸ்தானத்திலேயே கிடைக்கின்றன.

வழியில் அமைந்துள்ள கலசாவில் புகழ் பெற்ற சிவன் கோயில் அமைந்துள் ளது. தென்கனராவில் சக்தி வாய்ந்த கோயில். இங்கிருந்து மங்களூருக்கும், ஷிமோகா விற்கும் பாதைகள் பிரிகின்றன.

– சித்ரா சந்திரசேகர்,
வேலூர்–1.

விக்கிரமாதித்தன் கதையில் வரும் போஜராஜா!

மத்தியப் பிரதேசம் முழுவதிலுமே வர லாற்றுச் சிறப்பு மிக்க பல பார்க்க வேண்டிய இடங்கள் உள்ளன. உஜ்ஜயின் இந்தோர் மாண்டு சாஞ்சி, போபால், ஜபல்பூர் உதய் கிரி என்று சொல்லிக் கொண்டே போக லாம்.

மத்திய பிரதேசம் செல்லும் வாய்ப்பு ஏற்பட்டால் போபாலிலிருந்து ஏறக்குறைய 35 கி.மீ தொலைவில் உள்ள "போஜ்பூர்" சென்று அங்குள்ள பழமை வாய்ந்த கோவில், அதிலுள்ள பெரிய சிவலிங்கத்தைக் காணத் தவற வேண்டாம். விக்கிரமாதித்தன் கதையில் வரும் ராஜா போஜ் மன்னரின் பெயர் கொண்ட இந்த போஜ்பூர் பார்க்க வேண்டிய ஒரு அருமையான ஊர். இங்கே கோவிலின் உள்ளே பெரிய சிவலிங்கம் உள்ளது. லிங்கத்தின் இடதுபுறமுள்ள படிகளில் ஏறி மேலே உள்ள லிங்கத்தை சுற்றிச் தரிசனம் செய்யலாம்.

பக்கத்தில் சலசலவென்று ஓடிக் கொண் டிருக்கும் ஆறு. சாப்பாடு எடுத்துச் சென்று சாப்பிட்டு வர அருமையான பிக்னிக் ஸ்பாட் – பக்கத்தில் உள்ள பாறைகளில் இந்தக் கோவில் கட்டுவதற்கான வரை படங்கள் (இந்தக் கால ப்ளூ ப்ரிண்ட் ப்ளான் மாதிரி) சதுரம் சதுரமாகக் கல்லில் செதுக்கி வரைந்திருப்பது எல்லோரும் பார்க்க வேண்டிய அதிசயமான காட்சி. முகமதிய மன்னர்களின் படையெடுப்புகளினால் கோவில் சிதிலமடைந்து இருப்பதால் மத்திய பிரதேச அரசு கோவிலை பழமை மாறாமல் புதுப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். போபா லிருந்து சென்று வர பஸ் வசதி உண்டு.

– இராஜி வாசகன்,
சென்னை – 114

வருமானம்

கர்மயோகி

நாட்டில் விலைவாசி ஏறியபடியிருக்கிறது. ஐந்து ஆண்டுகட்கு முன் நடத்திய அதே குடும்பத்தை இன்று அதே வருமானத்தில் நடத்த முடியவில்லை. இந்த ஐந்து ஆண்டுகளில் புதுப்புது தேவைகளாக பத்து உற்பத்தியாகி விட்டது. வருமானம் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருந்தாலொழிய குடும்பம் செய்வது இயலாது. அன்னை வழிபாடு அதற்குதவுமா என்று கேட்கும்பொழுதே, பணத்தை மனம் நாடுவது சரியில்லை. அதுவும் ஆன்மீக வழிபாட்டை மேற்கொண்ட பின் அந்நோக்கம் சரியேயில்லை என மனம் கூடவே பேசும்.



• மதுரை வாசகி [illegible] அனுப்பிய அன்னையின் படம்

''எல்லா சக்திகளைப் போல் பணமும் இறைவனுக்குரிய சக்தி. பெரிய ஆத்மாக்கள் பணத்தை விட்டு விலகினால், அது அசுரன் கையில் போய்ச் சேரும். அசுரனிடமிருந்து பணத்தை வென்று அன்னையின் பாதங்களில் வைப்பது கடமை. பொருளை ஆசையுடன் நாடுவது தவறு. அருளுக்காக பொருளை நாடுவது சரி. அருள் மூலமாக வரும் பொருளை அருள் என அறிய வேண்டும். பொருளை நேர்மையாக பெருக்கு வது சாமானியமில்லை. அப்படி வரும் நம் அருளுக்கு ஓர் அளவுகோல்'' என்ற கருத்துக்கள் அன்னை, ஸ்ரீ அரவிந்தருடையது.

வளமான குடும்ப வாழ்வுக்கு வளரும் வருமானம் தேவை. நேர்மையான உழைப்பாளிக்கு அன்னை அதை அபரிமிதமாக வழங்குகிறார். அதை பெறும் முறைகளை விளக்குவதும், அபரிமிதமாக நேர்மையான பொருளை சேகரம் செய்வதும் அருளை நாடுவதாகும் என்பதும் என் கருத்து.

செலவுகள் அதிகரிப்பதை விளக்க வேண்டியதில்லை. ஆனால் நாம் ஆரம்பப் பள்ளிக்கு சென்றதையும், இன்று நம் குழந்தைகள், பேரக்குழந்தைகள் ஆரம்பப் பள்ளிக்கு போவதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் மலைப்பாக இருக்கிறது. கூட்டுக் குடும்பத்தில் வயதானால் குடும்பம் அவரைப் பாதுகாக்கும். "எனக்கென்ன, வயசாச்சி, என்னால் செலவு வராது" என்பது பழைய நினைவு. இன்று வயோதிகம் வாழ்க்கையைப் பாரமாக்கி விட்டது. கூட்டுக் குடும்பமல்லாத இடத்தில் வயோதிகம் செலவை ஏற்படுத்துகிறது. மருத்துவம் வயோதிகத்தில் அதிகத் தேவைப்படுகிறது.

டிரஸ், வாட்ச், செருப்பு, குடை போன்றவையும் டி.வி., வீடியோ, வாஷிங் மெஷின் போன்றவையும் அனைவரும் பயன்படுத்தும் பொழுது அவை ஆடம்பரமானவை என்பது மாறி அத்தியாவசியமானவை என்றாகி, செலவை பல மடங்கு உயர்த்துகிறது.



அன்று இந்த வீட்டின் விலையை இன்று ஒரு மாத வாடகையாய்

கொடுப்பவனுக்கு எதிர்காலம் சொல்வ தென்ன? எதிர்காலத்தில் இந்த வீட்டு வாடகை இன்றைய விலையாகுமா என்று நினைக்கத் தோன்றுகிறது.

அமெரிக்கா போன பெண் ஒரு பல் எடுப்பதற்கு $ 2000 (80,000 ரூ) செலவு செய்து விட்டு அதிர்ச்சி அடைந்தாள். எதிர் காலம் நம் நாட்டிலும் அப்படியிருந்தால் என்ன செய்வது? வளமான வாழ்வு வேண்டும் என்றால், வருமானம் அதிகரித்துக் கொண்டே யிருக்க வேண்டும்.

அன்னை முறைப்படி நல்ல முறையில் வருமானம் அதிகரிக்க ஆயிரம் வழிகளுண்டு என்பதை விளக்குவதே என் நோக்கம்.

ஒரு முயற்சி செய்தால் மனித யத்தனம் முடியும் பொழுது அன்னை செயல்பட ஆரம்பிக்கின்றார். அப்பொழுது அற்புதமாக காரியங்கள் நடக்கும் என்பது தத்துவம். அதுவே அன்பர் காணும் நடைமுறை.

நாம் வீட்டில செய்யக்கூடியவை என்ன?

பணத்தின் அஸ்திவாரம் உடல் உழைப்பு, உழைப்பாளி அதிகம் சம்பாதிப்பான்.

பணத்தை சம்பாதிப்பது திறன். திறனுக்குரி யது தெம்பு, தெம்பு குறைவானவனுக்கு வருமானம் குறைவு. அறிவு அதிகமானால் உழைப்பாளியும், தெம்பானவனும் அதிகம் சம்பாதிப்பான். அறிவு குறைந்தவனை விட அறிவு அதிகமானவனுக்கு வருமானம் அதிகம்.

நிதானமானவன் அதிக வெற்றி பெற்று, அதிக வருமானமடைவான். நிதானம் குறைந்தவனுக்கு அதில்லை.

உழைப்பு உடலுக்குரியது, தெம்பு உணர்வுக்குரியது, அறிவு மனத்திற்குரியது, நிதானம் ஆன்மாவுக்குரியது. இவற்றைக் கடந்து மனித வாழ்வில்லை. நாம் இன்று நம் உழைப்பில் நம்மால் முடிந்ததில் அரை பங்கு தான் செலவிடுகிறோம் என்பது பலரால் நம்ப முடியாதது. நமக்குள்ள அறிவிலும், தெம்பி லும், உழைப்பிலும் கால் பாகமே செலவு செய்வதால் அவற்றை முழுமைப்படுத்தினால் நம் வருமானம் 4 மடங்கு உயரும் என்பது என் அனுபவம்.

நாம் ஆர்வமாகச் செயல்படும் நேரங்களில் வீட்டில் வேலை 8 மடங்கு 10 மடங்கு நடப் பதைக் காண்கிறோம். அதனால் நமக்குக் களைப்பேற்படுவதில்லை. அன்றாடம் நடக்கும் காரியங்கள் சுமார் 100 அல்லது 200 ஆகும். அத்தனை காரியங்களையும் இக் கண் ணோட்டத்துடன் புரிந்து கொண்டு செயல்பட ஆரம்பித்தால் –

நம் உழைப்பின் திறம் 8 மடங்காகும்

நம் தெம்பு 20 மடங்கு உபரியாகும்

நம் செயலுக்குரிய அறிவை 30 மடங்கு உயர்த்தலாம்

நிதானத்தை ஏராளமாகப் பெருக்கலாம்.

எனவே வருமானம் நம் முயற்சியால் 5 மடங்கு 10 மடங்கு பெருக முடியும். நிச்சய மாக இரு மடங்காகும்.

"என் குடும்பம் சாதாரணமானது. மாதம் ரூ 5000/- வருகிறது. எப்படி இதை 10,000 மாக மாற்ற முடியும்? 25,000 அல்லது 50,000 மாக மாற்ற முடியும் என்பதை நம்ப முடிய வில்லை," என்பவர் நான் இழே கூறும் முறை களைப் பின்பற்றிய பின் அதையே சொல்ல மாட்டார். அப்படிப் பின்பற்றியவர்கள் சொல்லியது, "நீங்கள் எத்தனையோ முறை கூறினாலும் என் மனம் அதை ஏற்கவில்லை. செய்த பின் நடந்தது ஆச்சரியமாகவே யுள்ளது. இன்னும் நம்புவது கடினமாக இருக்கிறது."

வேறு வகையாகவும் இதைப் புரிந்து கொள்ளலாம். உங்களுக்கு தெரிந்தவர்களில் யாருடைய வருமானமாவது 10 மடங்கு அதிகரித்திருந்தால் அவர்கள் வாழ்வில் நான் கூறும் முறைகள் பாதிக்கு மேலாயிருக்கும்.


இலை வடாத்திற்கு அரிசியைத்தான் உபயோகப்படுத்த வேண்டுமென்பதில்லை. மைதா மாவைக் கொண்டு சுலபமாகச் செய்யலாமே? மைதா 2 கப் எடுத்து, தண்ணீர் விட்டு தோசை மாவு பக்குவத்தில் கரைத்து இரவு வைத்து விடுங்கள். மறுநாள் காலை ஓமம், கசகசா, திட்டமாக உப்புப் போட்டு கலக்கி வாழை இலையில் எண்ணெய் தடவி கொஞ்சம் மாவை எடுத்து தோசை மாதிரி பரத்தி வேட்டில் வைத்து நீராவியில் வேக விடுங்கள். வெந்தவுடன் எடுத்து இலையில் இருந்து பிரித்து துணியில் போட்டு காயவைக்கவும். எண் ணெயில் பொரித்தால் பெரிதாக பொரியும். சுட்டும் சாப்பிடலாம். சுவையாக இருக்கும்.

– பாமா ரங்கராஜன்.



திடீரென வந்து விட்ட விருந்தாளிகளுக்கு டிபன் செய்ய அன்றைக்கென்று வீட்டில் ஒன்றுமில்லாத நிலையில், கண்ணில் பட்டது கஞ்சி மாவு, (ராகி, பொட்டுக்கடலை, கோதுமை, பு. அரிசி, ஜவ்வரிசி எல்லாவற்றையும் வறுத்து அரைத்தது) அதில் சிறிது அரிசி மாவு கலந்து வெங்காயம், பச்சை மிளகாய் நறுக்கிப் போட்டு கடுகு, சீரகம் தாளித்து தோசையாய் வார்த்தேன். 'பட்'டாய் தோசை 'பட்'டெனத் தயாரானது. கஞ்சி மாவின் மறு பெயர் சமயசஞ்சீவிதான்.

– ஜானகி தர்மராஜன்.



முழுவதும் பின்பற்றினால் பலன் அதிகம்.

அன்னையை ஏற்றுக் கொண்டால் முறைகள் அதிகப் பலன் தரும்,

முறைகள் மட்டுமே பலன் தரக்கூடியவை

அன்னை மட்டுமே பலன் தருவார்

அன்னையையும், முறைகளையும் சேர்ந்து ஏற்பது உகந்தது.

அப்படி ஒருமுறை உலகிலிருக்கிறதா எனத் தோன்றும். அவற்றை விளக்குவது சுலபம். செய்வதற்கு பெருமுயற்சி தேவை. நம்மரபில் அவற்றை நமக்கு போதித்ததை நாம் மறந்து விட்டோம். நாம் ஃபேஷன் என்று பல நல்லவற்றை கைவிட்டு விட்டோம். நாகரீகத்திலும் உயர்ந்தவற்றை பின்பற்ற மறுக்கிறோம்.

சுமார் 7,500 ரூ மாத வருமானமுள்ள வீடு ஒன்றை எடுத்துக் கொள்வோம். அந்த வீட்டில் படிப்பும், பண்பும் குறைவாக இருந்தால்,

● 9 மணிக்குப் பள்ளிக்கூடம் போக வேண்டிய பையன் 8 அடித்த பிறகும் தூங்குவான்.

● நாலு பேர் சேர்ந்து பேசும் பொழுது ஏதோ கலாட்டா நடப்பது போல் குரல் எழும்.

● யாருமில்லாத இடத்தில் ஃபேன் ஓடும்.

● "பக்கத்தில்தானே இருக்கிறேன். ஏன் காட்டுக் கத்தலாய்க் கத்துகிறாய். மெதுவாய்ப பேசேன். காதை அடைக்கிறதே" என்ற குரல் கேட்கும்.

● படித்த நியூஸ் பேப்பர் தனித்தாளாய் பறந்து போய் அலங்கோலமாக இருக்கும்.

● மேஜை மீது சொம்பு, பிளாஸ்க் முதல் புத்தகம், பேனா வரை நிரப்பியிருக்கும்.

● அவிழ்த்த சட்டையை முன் அறையில் சோபா மீது போட்டிருப்பார்கள்.

● எக்ஸ்சேஞ்லிருந்து கூப்பிட்டு ரிஸீவரை சரியாக வைக்கச் சொல்லித் திட்டுவார்கள்.

● மேஜை டிராயரைத் திறந்தால் சாக்ஸ், நியூஸ் பேப்பர், நோட்டு, பழைய டைரி அடைப்பாச்சாரமாக இருக்கும்.

இதே நிலையில் உள்ள இதற்கெதிரான பண்பும், படிப்பும், பழக்கமும் உள்ள குடும்பத்தில் வருமானம் உயர்ந்திருக்கும். இரு மடங்காக இருக்காது. பல மடங்காக இருக்கும்.

முதற் குடும்பத்தில் அனைவரும் ஏகமனதாக தங்கள் பழக்கங்களை நேர் எதிராக மாற்றிக் கொண்டால், அவர்கள் வருமானம் இரு மடங்காகும்.

அதுவே குறைந்தபட்ச முன்னேற்றம்.

அதிகபட்ச முன்னேற்றத்தை விளக்குவது சுலபம். காண்பது அரிது.

● யாரும் அதிர்ந்து பேச மாட்டார்கள்.

● மேஜை, அலமாரி, படம் முதலியவற்றில் விரலால் கோடு போட்டால் கோடு விழாது. தூசியிருக்காது.

● மேஜை டிராயர் மேஜை போல் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.

● போன், எத்தனை பேர் பேசினாலும், நேராக ஒழுங்காக வைக்கப்பட்டிருக்கும். ரிஸீவரிலிருந்து வரும் ஒயர் முறுக்கில்லாமலிருக்கும்.

● காலையில் பள்ளிக்கும், ஆபீசுக்கும் போகும் பொழுது வீடு அமைதியாக இருக்கும்.

● எந்த பத்திரம், ரசீது, புத்தகம், டார்ச் லைட் தேவைப்பட்டாலும் தேட வேண்டியிருக்காது. அவற்றிற்குரிய இடத்திலிருக்கும்.

அன்றாடம் நடக்கும் 100; 200 காரியங்களை தெளிவாகச் செய்ய முடிவு செய்தால், அந்த வீட்டின் வருமானம் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டேயிருக்கும். இதன் தத்துவம் என்ன? எப்படி இவையிரண்டிற்கும் தொடர்புள்ளது? என நினைக்கலாம். அன்னையின் பங்கு என்ன என்றும் கேட்கலாம்.

ஹாலில் ஆணி அடிக்க அறையிலிருந்து ஸ்டூலை எடுத்துப் போட்டு ஆணி அடித்த பின், ஸ்டூலை மீண்டும் அறைக்கு எடுத்துப் போக சிலருக்குத்தான் தோன்றும். பலருக்குத் தோன்றாது. தோன்றினாலும் செய்வது குறைவு. பொதுவாக மறுநாள் காலையில் பெருக்கும் பொழுது ஸ்டூல் அறைக்குப் போகும். போகாமல் அங்கேயே பல நாட்கள் இருப்பதும் உண்டு. எந்த வீட்டில் ஸ்டூல் அறைக்கு மீண்டும் தவறாமல் போகிறதோ, அந்த வீட்டில் பணத் தட்டுப்பாடு இருக்காது. அங்கும் பெரியவர்கட்கு ஒழுங்கு முறையிருக்

கும். மற்றவர்கள் பயந்து அதைக் கடைப் பிடிப்பார்கள்.

எப்படிச் செய்தாலும் ஒழுங்கிற்குப் பலன் உண்டு.

ஒழுங்கு என்பது உடல் உணர்ச்சிக்குக் கட்டுப்படுவது. உடலுக்குரிய சக்தி பெரியது. உணர்வுக்குரிய சக்தி பெரியது. பெரிய சக்திக்கு பெரிய பலன் உண்டு. பணம் என்ற கண்ணோட்டத்தில் பார்த்தால், பணம் பலனாக வரும்.

அதற்கு மாறாக பெரியவர்கட்டு நல்ல பழக்கங்களிலிருந்து சிறியவர்கட்கு அன்பாக, கடுமையின்றி, புரியும்படி சொல்லி ஒழுங்கைக் கற்பித்திருந்தால், அதன்படி சிறியவர்கள் நடந்தால், அங்கு செயல்படுவது மனம். மனம் உணர்வைவிட உயர்ந்தது. அதனால் அதிக பலனுண்டு. கடுமை சிறியது. அன்பு பெரியது. கடுமைக்குப் பயந்து நடப்பதைவிட அன்புக்குக் கட்டுப்பட்டு நடப்பது அதிகப் பலன் தரும். அதாவது அதிகப் பண வரவு இருக்கும்.

வீட்டில் நடக்கும் 100 அல்லது 200 காரியங்களையும் இப்படி ஆலோசனை செய்து ஒரு குடும்பம் பின்பற்ற முடிவு செய்தால் அவர்கள் வருமானம் இருமடங்காகப் பெருகாது; பல மடங்காகப் பெருகும். எந்த வருமானத்தை அவர்கள் நாடி, அதற்கான முயற்சியை எடுத்தாலும் அது பலிக்கும். இது பலிக்க அனைவரும் ஒற்றுமையின் உயர்வை உணர வேண்டும். அதிகாரம் செய்யாமல் அன்பாய் பழக வேண்டும். புரிந்து கொண்டதை செயல்படுத்த முனைய வேண்டும். பிறரை மிரட்ட பிரியப்படக் கூடாது. அப்படி ஒரு வீடிருக்குமானால் அங்கு நாம் காணக்கூடிய ஆச்சரியமான நல்ல காரியங்களில் சிலவற்றைக் கூறுகிறேன்.

- எண்ணெய் பாட்டில் மீது எண்ணெய் பிசுபிசு என இருக்காது.
- கதவு படீரென சாத்தப்படாது
- எவர் பேசும் குரலும் அடுத்தவர்க்கு மட்டும் கேட்கும்.
- ஒருவர் படித்த புத்தகம் படித்த பிறகு எடுத்த இடத்தில் ஷெல்பில் வைக்கப்படும்
- பேனாவுக்கு இங்க் போடும் பொழுது சிந்தாது, கையில் மையாகாது.
- படித்த நியூஸ் பேப்பர் மடித்து அடுக்கி வைப்பது வழக்கமாக இருக்கும்
- ஜன்னல், கதவு திரைச்சீலைகள் அடிக்கடி துவைக்கப்பட்டு சுத்தமாக இருக்கும்
- அலமாரி உள்ளே புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.
- குழந்தைகள் வீட்டுப்பாடத்தை தாங்களே செய்வார்கள்
- மறதி, அவசரம், டென்ஷன் அந்த வீட்டிலிருக்காது
- காரசாரமான விவாதங்களுக்குப் பதில் இனிமையான உறவிருக்கும்.

அன்னையை ஏற்றுக் கொள்வதால் மட்டும் நல்ல பழக்கங்களில்லாத குடும்பங்கள் ஓரளவு நல்ல பழக்கங்களை மேற்கொள்வார்கள். அன்னையை ஏற்றுக் கொண்டதற்காக முனைந்து எல்லா, நல்ல பழக்கங்களையும் மேற் கொண்டால் அன்னை அபரிமிதமாக செயல்படுவார். முதல் நிலையில் பாங்க் கிளார்க் வேலை மூன்று முறை இல்லை என்ற பின் அடுத்த நிலைக்கு வந்து ஏஜண்டானவரும் உண்டு.

நல்ல பழக்கங்கள் மட்டும் நாமுள்ள நிலையில் உயர்வைத் தரும்.

அன்னையையும் ஏற்றுக் கொண்டால் அடுத்த நிலைக்கு அவை உயர்த்தும்.

வருமானம் என்றால் பெருகுவது என்பது குடும்ப அனுபவமாகும்.

சமீபத்தில் என் (மலையாள) தோழி வீட்டில் சாப்பிட்ட குழி பணியாரம் மாறுதலான சுவையுடன் இருந்தது. விளக்கம் கேட்டு அதன்படி நானும் செய்து பார்த்து சுவைத்தேன். இதோ செய்முறை விளக்கம் : அதாவது ஒரு கப் கோதுமை ரவை, ஒரு கப் சாதா ரவை என இரண்டையும் வெறும் வாணலியில் வறுத்து அரை மணி நேரம் ஊறவைக்கவும். பின் அத்துடன் 2 கப் தே. துருவல், கால் கப் மைதா மாவு, 2 ஸ்பூன் அரிசி மாவு, தேவையான அளவு வெல்லத் தூள், ஏலப் பொடி, சிட்டிகை உப்புத் தூள் என சேர்த்துக் கெட்டியாக கரைத்து, குழி பணியார சட்டியில் எண்ணெய் விட்டு மாவை ஊற்றி வேகவைத்து எடுக்கவும். மிருதுவாகவும், சுவையாகவும் பணியாரம் நன்றாக இருக்கும்.

– ஆர். பாலா இராஜேந்திரன்




ஸ்ரீவத்ஸா அளிக்கும் இரண்டு வழிகள்

KOVAIPUDUR

Booking Open

Sreevatsa Hill View
COIMBATORE

வீடுகளை உங்களின் வசதிக்கேற்ப படைப்புகளில். ஆடம்பரத்தை விரும்புவோர்க்கு ஸ்ரீவத்ஸா கார்டன்ஸ். குறைந்த விலையில் நிறைந்த வசதிகளை நாடுவோர்க்கு ஸ்ரீவத்ஸா ஹில் வியூ.



Independent Villas



Row Houses

ஸ்ரீவத்ஸா ஹில் வியூ

- பாலக்காடு செல்லும் வழியில் கோவை ரயில் நிலையத்திலிருந்து 7 கி.மீ. தொலைவில்.
- தனிப்பட்ட வீடுகள், வரிசை வீடுகள் மற்றும் அப்பார்ட்மென்ட்ஸ், 750 சதுர அடி முதல் 2000 சதுர அடி வரை.
- கோவை ரயில் நிலையத்திலிருந்து 7 கி.மீ.ரும் *NH*47 னில் இருந்து 0.75 கி.மீ. தூரம் மட்டுமே.

Architects: **SANKAR & ASSOCIATES**, Coimbatore

Our Bankers are **GLOBAL TRUST BANK LIMITED**

சென்னை: 7, காமராஜ் பார்க் தெரு, சென்னை 600 013, போன்: 91-44-5953149, 5960270, 5957953.
ஃபேக்ஸ்: 91-44-5950055, 5220192, **மும்பை:** திரு. ஜி.ஜி. பரதன், போன்: 5285716 (அலுவலகம்), ஃபேக்ஸ்: 022-5425356
முக்கிய அரபு முகவர்: திரு. ஹம்சா பி.வி., பிரிட்வே ரியல் எஸ்டேட், போன்: 04-220555, 04-258000, ஃபேக்ஸ்: 04-270074


Anugrah 2541 / 98A

1

அடிபட்ட மூக்கு இன்னமும் 'விண்விண்' என்று தெறிக்கிறது. உதடு வேறு அசிங்கமாய் வீங்கி....

போகிற போக்கில் - கூடத்தில் மாட்டியிருந்த கண்ணாடியில் தனது முகத்தைப் பார்த்த பவானிக்கு அத்தனை வேதனையிலும் சிரிப்புத்தான் வந்தது.

பெண்ணும் மாப்பிள்ளையும் அமெரிக்காவில் இருந்து மூன்று வார லீவில் வந்திருக்



குறுநாவல்

சிறை

கிறார்கள்.

"உங்க வீட்டுல ஒரு வாரம், எங்க வீட்டுல ஒரு வாரம். நடுவுல திருப்பதி, பழனி பிரார்த்தனையெல்லாம் வேற இருக்கு. முடிக்கணும்னு உன் மாப்பிள்ளை சொன்னார்மா. நான் சொல்லிட்டேன், எங்க வீட்டுல ரெண்டு நாள் தங்கறதே பெரிய விஷயம். வேணுமானா எங்க அம்மாவை

அனுராதா ரமணன்

திருப்பதிக்கும், பழனிக்கும் நம்ம கூட அழைச்சுக்கலாம்னு..."

நித்யா சொன்ன போது, பவானி அவசர அவசரமாய் மறுத்தாள்.

"உங்க அப்பா பர்மிஷன் கொடுக்க மாட்டார் நித்யா. எதுக்கு அனாவசிய ரகளை... உங்க பாட்டி வேற இதையே ஒரு சாக்கா வச்சு, என்னைப் போட்டுக் குத்தி எடுத்துடுவா..."


அப்போதுதான் நித்யா சொன்னாள் :

"ஏம்மா, உனக்குக் கல்யாணமாகி இருபத்தியேழு வருஷமாறது. இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இப்படி மாமியாருக்கும், வீட்டுக்காரருக்கும் பயந்து பயந்து தினமும் செத்துண்டிருப்பே..."

"அது என் ஜாதகம்... விட்டுடு. நீயும் மாப்பிள்ளையும் எங்கே வேணுமானாலும் போயிட்டு வாங்க. இந்த ரெண்டு நாள் நீ என்னோட இருந்ததை நினைச்சிட்டே. இன்னும் ரெண்டு வருஷத்தை ஓட்டிடுவேன்..."

அம்மாவின் வார்த்தைகள் நித்யாவை சமாதானப்படுத்தவேயில்லை. எப்படியும் மாப்பிள்ளை கேட்டால் அப்பா மாட்டேன் என்று சொல்ல மாட்டார் என்கிற நம்பிக்கை.

சும்மா சொல்லக் கூடாது. பவானிக்கு மாமியாரும், புருஷனும்தான் ராட்சஸகணங்களாக வந்து வாய்த்திருக்கிறார்களே தவிர, இரண்டு



பெண்களையும் கல்யாணம் செய்து கொடுத்த இடங்கள் இரண்டும் பரம சாதுக்கள்...

அதுவும் நித்யாவின் கணவன் ராஜுவுக்குக் கோபம் என்றால் என்னவென்றே தெரியாதாம்...

பெண் சொல்லும்போதெல்லாம் பவானி வியந்து நிற்பாள்.

"அப்படிக் கூட மனுஷாள் இருப்பாளோ..."

நித்யாவை அமெரிக்காவுக்கு அனுப்பிய போதே சம்பந்தியம்மாள் குழந்தை மாதிரி சொன்னாள்.

"எப்பவும்தான் குடும்பம், வீடுன்னு இருக்கவே இருக்கு. நான் எல்லா எடமும் பார்த்திருக்கேன். நீங்க வேணுமானா அவ கூடப் போயிட்டு வாங்களேன்..."

"இல்லே... வயசான மாமியார் இருக்கார்... நித்யா அப்பாவுக்கு ஒரு குக்கர் வைக்கக் கூடத் தெரியாது...."

"பாட்டி நடமாடிண்டு நல்லாத்தானே இருக்கா... பிள்ளைக்கும், தனக்குமா ஒரு ஆழாக்கு சாதம் வச்சுக்க மாட்டாளா...."

சம்பந்தியம்மாள் யதார்த்தமாகத்தான் கேட்டாள். ஆனால், அவர்கள் போன பிறகு, பவானி மாட்டிக் கொண்டாள்.

"நான் ஏதோ பிறத்தியாருக்கு சிரமம் வைக்காம என் காரியங்களை நானே செஞ்சிட்டிருக்கறது பிடிக்கலைடா உன் சம்பந்தியம்மாவுக்கு. உன் பெண்டாட்டிகிட்ட கேட்கறா... பாட்டி சமைச்சு, உங்க வீட்டுக்காரருக்குப் போட மாட்டாளான்னு. அதுக்கு இவ குரலைத் தழைச்சு என்னமோ சொல்ல... ஒரே சிரிப்பும், கிண்டலும்தான் போ. என்னை இப்படி கேலிக்கு இடமாக்கிட்டுப் போய் சேர்ந்துட்டாரே உங்கப்பா. அவரைத்தாண்டா நான் தினமும்..."

"பளார்!"

சமையலறையில் மாமியாருக்காக சப்பாத்தி செய்து கொண்டிருந்த பவானியின் கன்னம் பழுத்தது.

அன்றிரவு நடுச்சாமம் வரையில் கணேசன் நினைத்து நினைத்து உறுமிக் கொண்டிருந்தான்.

இது விஷயம் நித்யாவுக்கும், சின்னவள் ஜெயாவுக்கும் கூடத் தெரியும். மனசிலுள்ள துக்கத்தை எல்லாம் காகிதத்தில் வடித்து அமெரிக்காவுக்கும், பம்பாய்க்கும் தபாலில் சேர்த்ததோடு சரி.

"உனக்கென்ன தலையெழுத்து... இத்தனை வயசுக்கும் இப்படிப்பட்ட புருஷனோடும், மாமியாரோடும் சேர்ந்து இருக்க வேண்டுமென்று. பேசாமல் புறப்பட்டு வந்து சேர்."

இருபத்தியைந்து வயசுக் குழந்தைகள் - அப்பாவின் செய்கையினால் மனம் சுருங்கி - பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதே - மாமா வீட்டுக்குப் படிக்க ஓடி, அங்கிருந்தபடியே கல்லூரி, கல்யாணம் எல்லாவற்றையும் முடித்து...

ஏற்கெனவே குழந்தைகளுக்கு ஒரு நாள் கிழமை என்றால் சீட்டிப் பாவாடை கூட வாங்க மாட்டான் கணேசன். பவானிக்கு பிறந்த வீடு கொஞ்சம் அனுசரணையாக இருந்தது. கூடப் பிறந்தவர்கள் சகோதரியின் நிலை கண்டு ரத்தக் கண்ணீர் வடித்தனர்.

"அங்கே இருந்தா குழந்தைகளுக்குப் பைத்தியம் பிடிச்சிடும். அவங்களாவது நிம்மதியா வளரட்டும்..."

- இது அவளின் அண்ணன்களின் ஆறுதல் மிகுந்த வார்த்தைகள்.

"எப்ப பெத்த தகப்பன் வேண்டாம்னு ஓடினாளுங்களோ எவளுக்கும் ஒரு நயா பைசா செலவழிக்க மாட்டேன். கல்யாணமோ, கருமாதியோ எல்லாம் உன் மனுஷாளே பார்த்துக்கட்டும்..."


இப்பொழுது நினைத்தாலும் பவானிக்கு அலுப்பாக இருக்கும்.

பெரியவள் நித்யாவின் திருமணத்தின் போது தகப்பனாராய் லட்சணமாய் மணையில் உட்கார்ந்து, தான் தாரைவார்த்துத் தர

வாழைத்தண்டை பொடியாக நறுக்கி ஆவியில் வேகவைத்து எடுக்கவும். அத்துடன் சம அளவு பொட்டுக் கடலை மாவு சேர்த்து வெங்காயம், பச்சை மிளகாய், இஞ்சி, கருவேப்பிலை நறுக்கி சேர்த்துப் பிசைந்து, வடைகளாக தட்டி, தோசைக் கல்லில் போட்டு சுற்றிலும் எண்ணெய் விட்டு எடுக்க, வாழைத்தண்டு அடை மிருதுவாகவும், மணமாகவும் இருக்கும்.

– ஆர். பாலா





இட்லிக்கு உளுந்து அரைக்கும் போது இரண்டே இரண்டு சொட்டு விளக்கெண்ணெய் விட்டு அரையுங்கள். வெள்ளை வெளேர் மல்லிகைப் பூ இட்லி தயார்.

– ஆ. லதா

மாட்டேன் என்று கணேசன் பிடிவாதம் பிடிக்க – அவனை அறைக்குள் வைத்து வெளியே கதவைத் தாழிட்டுக் கொண்டு ஈஸிசேரில் படுத்தபடி கணேசனின் தாயார் சொர்ணம் எப்பொழுதோ தன் மகனின் திருமணத்தின் போது பவானியின் தாயார் தன்னை மரியாதையாக நடத்தவேயில்லை என்கிற கதைகளை எல்லாம் பேச...

கடைசியில் நித்யாவின் புகுந்த வீட்டு மனிதர்கள் வந்து கிழவியையும், இந்த அசட்டுப் பிடிவாதக்காரனையும் சமாதானப்படுத்தி அழைத்துப் போக வேண்டியதாயிற்று.

சின்னவள் ஜெயா – இந்தப் பிரச்னையே வேண்டாம் என்று பதிவுத் திருமணம் செய்து கொண்டு விட்டாள்.

குழந்தைகளுக்கு அம்மாவின் கஷ்டமும், அப்பா, பாட்டியின் சுபாவமும் தெரிந்திருக்கிறதுதான். ஆனாலும் – அம்மாவுக்கு ஆயுள் முழுக்க அடியும் உதையும்தானா என்கிற ஆதங்கம் அவ்வப்போது ஆத்திரமாய் கிளம்பும்...

"இப்படி நீங்க அடிச்சே கொல்றதா இருந்தா எங்க அம்மாவை நாங்களே அழைச்சிண்டு போறோம்..."

"தாராளமா செய்யேன். அவளோட தாலி, குங்குமம் எல்லாத்தையும் கொடுத்துட்டுப் போகச் சொல்லு. முடிஞ்சா, நாப்பத்தஞ்சு வயசுக்கு மேல இவளைக் கல்யாணம் செஞ்சுக்க எவனாவது கிடைச்சா அந்த நல்ல காரியத்தையும் நீயே செஞ்சு வையி..."

"..............."

"இதப் பாரு. எங்கம்மா வயசானவ. கல்யாணமாகி அஞ்சு வருஷத்துலப் புருஷனை இழந்தவ. அவளோட உலகமே நான்தான். இந்த வீட்டுல அவ பேச்சுக்கு மறு

பேச்க பேசறது யாராயிருந்தாலும் இப்படித் தான் முகறையப் பேர்த்துக்க வேண்டி வரும்...''

இதற்குள் கிழவி குரல் கொடுப்பாள்.

''கணேசா... அடேய்... வேண்டாம்டா... வயித்துலப் பொறந்ததுகளோட மல்லுக்கு நிக்காதேடா. என் காலமெல்லாம் இன்னும் எத்தனை நாளைக்கு? எனக்காக அதுகளைப் பகைச்சுக்காதே. அதுகளுக்கு என்ன தெரியும்? சொல்லித் தர்றவ எப்படி போதனை செஞ் சாளோ அப்படித்தானே இருக்கும்...''

இது போதும் கணேசனுக்கு.

''எங்கே இருக்கா அவ.. எங்கே...''

முறம் மாதிரி கைகளை வீசிக் கொண்டு, மனைவியைத் தேடி ஓடுவான்.

சொர்ணம், கையில் சின்ன எண்ணெய் கிண்ணத்துடன் கோவிலுக்கு நடையைக் கட்டுவாள்.

''நானும்தான் தினமும் ஈஸ்வரன்கிட்ட, என்னை சீக்கிரம் அழைச்சுக்கோ, அழைச்சுக் கோன்னு கெஞ்சறேன். சுவாமி கல்லான்னா உட்கார்ந்திருக்கு...''

இந்த முறை நித்யா, எப்படியும் தன் அம்மாவை தங்களுடன் அழைத்துக் கொண்டு போகிற தீர்மானத்தில்தான் வந்தாள். அவள் கணவன் ராஜு - எங்கேயோ வெளிநாட்டில் லட்சக்கணக்கில் சம்பாதிப்பவன். அவனது ஆலோசனைக்காக அவனிடம் வேலை செய்யும் ஊழியர்கள் எல்லாம் கை கட்டி காத்துக் கொண்டிருப்பார்கள். அப்பேர்பட்ட கண்ணியம் மிகுந்த இளைஞன் - கணேசனின் அம்மைத் தழும்பேறிய, சிகரெட்டின் நிகோடின் கறை படர்ந்த உதடுகளையும் முள் அடர்ந்த முகத்தையும் ஒரு பொருட்டாக மதித்து எத்தனை வினயத்தோடு கேட்டான்.

''நித்யா அம்மா கொஞ்ச நாளைக்கு எங்களோட வந்து இருக்கட்டுமே. நித்யா ரொம்ப ஆசைப்படறா. இப்ப அவளுக்கு மூணு மாசம். மசக்கை வேற. சார்.. உங்க கிட்டத்தான் சொல்றேன்.''

''ஆங்? காதுல விழறது. யூ ஸீ.. உங்களுக்கு உங்க மனைவியோட மசக்கைப் பெரிசாப் படறது. நான் இங்கே வயசான தாயாரை வச்சுண்டு சோத்துக்கு எங்கே அலைவேன்? எங்கம்மா பார்க்கறதுக்கு தெம்பும் திடமுமா இருக்கலாம். ஆனா, ஒரு மணி நேரம் சேர்ந்தா மாதிரி நிற்க முடியாது. பிளட் பிரஷர் இருக்கு. மேலும், மசக்கைக்கு சமைச்சு போடணும்னா உங்க அம்மாவை அழைச்சிட்டுப் போக லாமே... என் ஒய்ஃப் சமையலை நானா இருக்கத்தொட்டு சகிச்சுக்கறேன். இன்ஃபாக்ட் எங்கம்மாவுக்கு பிளட் பிரஷர் வந்ததே இவ

குழந்தை இல்லையா?

மாதவிடாய் கோளாறா?

வரவும் - நிறுத்தவும் தொடர்ந்து மாத்திரைகளா?

திருமணம் ஆகி குழந்தை இல்லாத பல பெண்களும், 13-14 வயதில் பருவம் அடைந்ததிலிருந்தே பல இளம்பெண்களும் மாதவிடாய் வரவும், நிறுத்தவும் கூட தொடர்ந்து 5 நாள்/21 நாள் ஹார்மோன் மாத்திரைகளை சாப்பிட்டுக் கொண்டே வருகிறார்கள். இன்னும் கருக்கோளக் கட்டிகள் (Ovarian Cysts- PCOD), கருக்குழாயில் நீரடைப்பு சதையடைப்பு (F. Tube Block), முட்டையே (Follicle) தானாக உருவாகாத பெரும் சிக்கல், கருப்பை பலவீனம், வீக்கம், தொடர்ந்து கருச்சிதைவு (Missed Abortion), கருப்பை புண்கள்/ வெள்ளைப்படுதல் கடுமையான வயிற்று வலி (Endometriosis, Cervicitis, Hyperplacia) மற்றும் கட்டிகளான, கறுப்பான தாறுமாறான ரத்தப் போக்கு போன்ற பல காரணங்கள் குழந்தை பேறுக்கு தடையாக உள்ளன.

ஆண் உயிரணு குறைபாடுகள்

ஆண்களின் குறைபாடுகளில் மிகவும் சிக்கலானதும் பிறரிடம் உயிரணு பெறுதல் அல்லது தத்து எடுத்தல் இரண்டு மட்டுமே தீர்வு என்று கருதப்படும் இந்த கோளாறுக்கு (35 வயது வரை) சிகிச்சை எம்மிடம் உண்டு. 5-6 மில்லியன் உள்ளவர்கள் பலர் பல மாத்திரை, ஊசி மருந்து எடுத்தும் தற்காலிகமாக அதிகமாகி 3 மாதம் கழித்து சோதித்தால் முன் உள்ளதும் இல்லாமல் போனவர்களும் பலர் உண்டு. இக்குறைகளை எமது 180 ஆண்டு பரம்பரை அனுபவம் பெற்ற குரு மருந்துகளால் சிகிச்சை செய்து குழந்தை பேறு அடைய உதவுகிறோம்.

40 வயதில் 15-20 நாள் நிற்காத இரத்தப் போக்கா? கருப்பை ஆபரேசன் வேண்டாம்!

40 வயது நெருங்கும் ஆயிரக்கணக்கான பெண்கள் 15-20 நாள் நிற்காத அதிகமான இரத்தப்போக்கு, இடுப்பு முறிவு போன்ற வலி, கால்கள் உளைச்சல், இரத்த சோகையினால் அவதிப்படுகிறார்கள். இவர்களுக்கு கருப்பை வீங்கி (Cysto Glandular Hyperplacia) இருப்பதும் உண்டு. ஆபரேசன் ஒன்றுதான் தீர்வு என்று கூறுவதுண்டு. ஆனால் எமது சிகிச்சையின் மூலம் இது பூரணமாக குணம் பெறலாம்.

மார்பக கட்டி!

பெண்கள் மார்பகத்தில் குத்தல், வலியுடனோ வலி இல்லாமலோ ஒருவித கட்டி (Fibro Adenoma) வருவதுண்டு. இதற்கு நவீன மருத்துவத்தில் இதுவரை மருந்து இல்லை. பலமுறை ஆப்ரேஷன் செய்த பின்பும் கட்டி வளர்ந்ததால் பலர் எம்மிடம் சிகிச்சை பெறுகிறார்கள். பலர் ஆண்டுக் கணக்கில் வேறு மருந்து சாப்பிட்டும் குணமில்லை என்று வருகிறார்கள். எமது 4 மாத குரு மருந்து சிகிச்சையில் இது குணம் தெரிவதை காணலாம். பயத்துடன் நாட்களை கடத்த வேண்டாம்.


எமது சிகிச்சையில் தும்மல், ஆஸ்துமா, சைனஸ் தலைவலி, மூலமுளை, பவுத்திரம், நீரடைப்பு, (Prostrate), கல்லடைப்பு Hepatitis தீராத நோய் அல்ல. பிடிவாதமான தோல் நோய்களுக்கும் சிலவகை புற்று நோய்களுக்கும் சிறப்பு மருத்துவம்.

பெண் மருத்துவர் உண்டு.

மதுரை	10-ந்தேதி நியூ காலேஜ் ஹவுஸ்.	742971
திருச்சி	11-ந் தேதி ஓட்டல் அஜந்தா	415504
கோவை	18-ந் தேதி ப்ருந்தாவன் லாட்ஜ் (R.S.புரம்)	454185
ஈரோடு	20-ந் தேதி ஓட்டல் ஆக்ஸ்போர்டு	226611
சேலம்	21-ந் தேதி ஓட்டல் துவாரகா	447272
பெங்களூர்	27-ந் தேதி ஓட்டல் ஹைலேண்ட்ஸ்	2269232/3/4/5

தீராத இடுப்பு - கழுத்து - தோள் - மூட்டு வலி?

"சிகிச்சைக்காக அமெரிக்கா போக இருந்தேன். ஆனால் இங்கேயே சுகம் கிடைத்து விட்டது!"



- திரு. மோகன், (வயது 45)
எண் 3, ரத்தினதாஸ் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை-33.

இவருக்கு சில ஆண்டுகளாக கழுத்து, தோள், மூட்டுகளில் கடும் வலி (Cervical Spondylitis), கைகளை உயர்த்த முடியாதபடி, தோள்களில் வலி, கழுத்து வலியினால் இரவு தூங்கவே முடிவதில்லை! பிரபலமான பல நவீன மருத்துவர்களிடமும், Traction மற்றும் பல வகை மருத்துவ சிகிச்சை செய்தும், கொஞ்சமும் குணமில்லை. "கழுத்து எலும்பு ஆபரேஷன்தான் செய்ய வேண்டும் என்று ஒரு பிரபல மருத்துவர் கூறிவிட்டார். அமெரிக்காவில் இருக்கும் என் சகோதரன் மூலம் அங்கு சிகிச்சைக்கும் ஏற்பாடு செய்து விட்டேன். ஆனால் டாக்டர் எஸ். ஜெயராம் அவர்களின் சிகிச்சையில் இங்கேயே முழு குணம் கிடைத்துவிட்டது" என்கிறார் இவர்.

இதுபோல் கைவிடப்பட்ட பலர் குணம் பெற்று வருகிறார்கள். கழுத்து எலும்பில் C4 to C7 மற்றும் Lumbar Vertebrae-வின் குறிப்பாக இணைப்பு எலும்புகள் தேய்வு (Degenerative Changes), கழுத்து வலி (Cervical Spondylitis), இடுப்பு முறிவது போல் வலி (Lumbago), இடுப்பு முதல் தொடை, கால் நரம்புகள் இழுப்பது, குடைவது போன்ற வலி (Sciatica) மூட்டுகளில் வீக்கம், வலி, (Synovitis, Arthritis) கால்களில் மதமதப்பு, Toilet-ல் உட்கார்ந்து எழுவதில் மிகுந்த கஷ்டம், கைகளை உயர்த்த, கால்களை நீட்டி மடக்க முடியாமை, பாதங்களில் வீக்கம், இளம் வயதிலேயே கால்கள் செயலற்றுப் போவது போன்ற எலும்பு - நரம்பியல் வாத நோய்களுக்கு அபூர்வமான குருமருந்து சிகிச்சை அளிக்கிறோம். இவைகளுக்கெல்லாம் வெறும் வலி நிவாரண மாத்திரைகளை மட்டும் சாப்பிட்டுக் கொண்டு காலத்தை கடத்துவது தவறு. Physio-therapy / Plastry / Oil Massage சிகிச்சைகளில் ஓரளவே குணம் பெற்றவர்களும் எமது குரு மருந்து சிகிச்சையில் குணம் பெறமுடியும்.



'சித்தர் சிரோமணி'

Dr. S. JEYARAM,

M.D. (A.M.), M.A., M.A., (Regd.)

நவோதயா சித்தர் மருத்துவமனை

20, ஆற்காடு ரோடு, கோடம்பாக்கம், சென்னை - 24.
(லிபர்டி பஸ் ஸ்டாப் / சேகர் எம்போரியம் அருகில்)
போன் : 044-4810752 / 044-4982258 (வீடு)

ராஜ் T.V.-ல்

முதுகு தண்டு வலி, இடுப்பு எலும்பு தேய்மானம் (உட்கார்ந்து எழும்ப முடியாமை) மற்றும் அறுவை சிகிச்சையை (HIP REPLACEMENT) தவிர்க்கவும், மூட்டுவலி, வீக்கம், நரம்பு குடைச்சல், கால், பாதம் வீக்கம் நோய்களுக்கு எமது சிகிச்சை பற்றிய விளக்கமான பேட்டி 7-2-99 & 14-2-99 ஞாயிறு இரவு 9.30 மணிக்கு ஒளிபரப்பாகிறது.

சமையலைச் சாப்பிட்டுத்தான்னு நான் சொல்லுவேன்..."

இதைச் சொல்லி விட்டு 'கடகட'வெனச் சிரித்தவனுக்கு பெற்றவள் அன்று சாயந்திரமே காப்பியோடு சேர்த்து என்ன மந்திரத்தைக் கலந்து கொடுத்தாளோ...

கணேசன் பவானியை பெண்ணும் பிள்ளையும் இருக்கும்போதே ஒரு கை பார்த்தான்.

"அவ புருஷனுக்கு காப்பி, டிபன் அவ கொண்டு தர்றா. நீ எதுக்கு அவன் முன்னாடி போய் போய் நிக்கறே. மாப்பிள்ளையையே..."

"ச்சீ.. வாயை அலம்புங்க."

"என்னடி சொன்னே..."

"இப்படியெல்லாம் உங்ககிட்ட சொல்லித் தராளே உங்கம்மா... நல்லாயிருப்பாளா...?"

"ஆ... எங்கம்மாவையே இட்டற அளவுக்கு துளிர்த்துப் போச்சா..."

மறுபடியும் கூடத்தையும், தாழ்வாரத்தையும் சுற்றிச் சுற்றி... அடி தாள முடியாமல் பவானி, வீட்டு வாசலைத் தாண்டி வெளியே ஓட, பின்னாலேயே துரத்திக் கொண்டு ஓடிய கணேசன் –

தெருவே இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தது. அடி வாங்கியதை விடவும் அவமானத்தில் குன்றிப் போனாள் பவானி.

நித்யா, கணவருடன் அடுத்த அரை மணி நேரத்தில் கிளம்பி விட்டாள்.

போவதற்கு முன் கூடத்தில் நின்று, அதே கூடத்தில் இன்னொரு மூலையில் ஈஸிசேரில் சாய்ந்திருக்கும் சொர்ணத்தைப் பார்த்துக் கத்தி விட்டுத்தான் போனாள் :

"ஏய் கிழவி.. நீ செத்தாத்தான் எங்க அம்மாவுக்கு நிம்மதி..."

"உங்க அப்பனுக்குக் கோபம் வரும்படியா உங்கம்மா நடந்துண்டா அதுக்கு நானாடி பிணை?"

"நீதான் எங்கம்மாவை வாழ விடாம அடிக்கறே. உன்னாலதான் அந்த மனுஷன் இறுக்குப் பிடிச்சு அடிக்கறான். என்னவொரு திமிர் இருந்தா எங்கம்மாவையும் என் வீட்டுக்காரரையும் அப்படியொரு வார்த்தை சொல்லுவான் அந்த மனுஷன்? இதோ, இப்ப நான் சொல்றேன்டி. கேட்டுக்க. உனக்கு சின்ன வயசுலேயே புருஷன் போயிட்டான். உன் பையனையே நீ..."

"என்னடி சொன்னே?"

கணேசன் மகளை அடிக்க, கையை வீசிக் கொண்டு பாய்ந்து வந்தான்.

"ஷிட்.. உன் பாய்ச்சலை எல்லாம் அந்த அப்பாவிகிட்டேயே காட்டு. நான் இன்னொருத்தன் பெண்டாட்டி. தொட்டே போலீசுக்கு போன் பண்ணிடுவேன்..."

கணேசன் விக்கித்து நிற்க, கிழவி இறந்த வாய் மூடாமல் உட்கார்ந்திருக்க, பவானி எழுந்திருக்க முடியாமல் படுத்திருக்க, நித்யா, கணவருடன் திரும்பிப் பார்க்காமல் நடந்தாள்.

2

இரவு முழுக்கத் தூக்கமில்லை பவானிக்கு. ஆத்திரம் தாளாமல் நித்யா எதையோ சொல்லி விட்டுப் போனாலும், தன் ஒரே மகனை மாமியார் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தது புரியாமல் இல்லை.

கணேசனைக் கைபிடித்த போது அவனுக்கு வயது இருபத்தியைந்து. பவானிக்குப் பதினெட்டுதான். சொர்ணத்துக்கு நாற்பதே வயசுதான்.

சாந்தி முகூர்த்தத்தன்றே சொர்ணத்துக்கு நெஞ்சு வலி வந்து, அறைக்குள் மனைவியுடன் உல்லாசமாய் இருக்க வேண்டிய கணேசன் வண்டியை எடுத்துக் கொண்டு டாக்டரைத் தேடி ஓட வேண்டியதாயிற்று.

அன்றிரவு முழுக்க காரணமே இல்லாமல் அழுது கொண்டேயிருந்தாள் சொர்ணம். பவானி விக்கித்துப் போய் நின்றிருந்தாள்.

குடும்பத்துடன் வெளியூர் செல்கிறீர்களா? கிளம்பும் முன்னால அலமாரி, கப்போர்ட் மற்றும் பீரோக்களில் வேப்ப இலைகளை போட்டு விடுங்கள். அறையின் ஓரங்களில் கற்பூரத்தையும் போட்டு விடுங்கள். திரும்பி வந்து வீட்டைத் திறக்கும் போது விரும்பத் தகாத வாசனை வராமல் இருப்பதோடு பூச்சிகளும் இருக்காது.

— ஆ. லதா





பால் அல்லது தயிர் பாத்திரங்களைத் தேய்க்க ஒழித்துப் போடும் முன் அதிலேயே கோதுமை மாவு போட்டு சப்பாத்திக்குப் பிசைந்து எடுத்து வைக்கவும். பால் அடியும் வீணாகாது. சப்பாத்தியும் மிருதுவாக வரும்.

– சுமதி

"நீ போய் படுடா. அவ காத்துட்டிருக்கா பாரு.."

"இருக்கட்டும்மா. இந்த நிலைமையில உன்னை விட்டுட்டு எப்படி அங்க போகத் தோணும்: நாங்க ரெண்டு பேருமே இங்கேயே இருக்கோம்."

அன்றிரவு மட்டுமல்ல. கிட்டத்தட்ட பத்து நாட்கள் போல கணேசன், அம்மாவின் உயிருக்குக் காவல் இருப்பது போல அவனது கட்டிலுக்குப் பக்கத்தில் தரையில் பாய் விரித்துப் படுத்துக் கொண்டான். பவானியும் அங்கேயே ஒரு ஓரமாய் படுக்கையை விரிப்பாள். சொர்ணம் ஒரு அதட்டல் போட்டு, அவளை அங்கிருந்து கிளப்புவாள்.

"இந்தா, உனக்கு உங்க அப்பா அம்மா வாங்கித் தந்த ரெட்டைக் கட்டில், மெத்தை எல்லாம் இருக்கோல்லியோ... அதுலே போய்ப் படு. என் குழந்தைக்குத்தான் தீராது. தாயார் இப்படி படுத்துண்டிருக்கறப்ப அவனால உள்ளே வந்து உன்னோட படுத்துக்க முடியாது. என் பிள்ளைய அப்படி நான் வளர்க்கலே..."

"இல்லேம்மா நானும்... நீங்க கூப்பிட்ட குரலுக்கு எழுந்து வரலாமேயின்னு...."

ஆரம்பத்தில் பவானிக்கு இந்த வார்த்தைகள் எல்லாமே புதுசானபடியால் மாமியார் குரலை உயர்த்தியவுடனேயே கண்களில் 'மளுக்'கென நீர் வந்து விடும்.

"இப்ப நான் என்ன சொல்லிட்டேன்னு இவ இப்படி அழறாடா கணேசா... என்னை மோப்பா எனக்குப் பயமா இருக்கே. இவளை வச்சுண்டு நீ எப்படிக் குடித்தனம் செய்யப் போறே. நினைச்சாலே தலைய சுத்தறதே..."

கணேசன் பதறியே போனான்.

"அம்மா, நீ பேசாமப் படு. அவகிட்ட கொஞ்சம் பேசிட்டு வர்றேன்."

"எதுவாயிருந்தாலும் நயமாச் சொல்லு. இல்லையின்னா அது வேற அமர்க்களமாயிடும்..."

"ஆகட்டுமே. இஷ்டமிருந்தா இருக்கட்டும். இல்லையின்னா அப்பன் வீட்டுக்கே போகட்டும். இதுக்கெல்லாம் கவலைப்பட்டா முடியுமா..."

பவானிக்கு இன்னமும் தனது முதல் பயம் நன்றாக நினைவிருக்கிறது. கையில் சுருட்டிய ஜமக்காளமும், பழைய தலையணையும் இருக்க, சோபனத்துக்காக அலங்கரிக்கப்பட்டிருந்த அறையில் பூக்களும், பழங்களும் வாடியிருக்க, சுவரோரமாய் இவள் சாய்ந்து நிற்க,

சுவரில் ஒரு கையும், அவளது தோளில் ஒரு கையுமாய் அழுந்த ஊன்றியபடி கணேசன் உறுமியது....

"என்ன பார்க்கறே... உம்?"

"ஒ... ஒண்ணுமில்லே..."

"இதெல்லாம் வேஸ்ட்டாப் போறதேயின்னு வருத்தமா இருக்கா..."

"ஐயோ... என்ன நீங்க..."

"ஒரு விஷயம் சொல்றேன். புரிஞ்சுக்கோ. எங்க அம்மாவுக்கு நான் பொறக்கறச்சே பதினைஞ்சே வயசுதான். உன் வயசுலே தாலி அறுத்தாச்சு. இன்னி வரைக்கும் அவ எனக்காகத்தான் உசிரைக் கையிலப் பிடிச்சு வச்சுண்டு இருக்கா. அவ செஞ்சிருக்கற தியாகமெல்லாம் மகத்தானது. சொன்னா, உன் களிமண் மண்டையில ஏறாது. அவ மறுபடியும் நல்லபடியா எழுந்து உட்கார்ற வரைக்கும் நான் – அங்கேதான் படுப்பேன். உனக்கு அப்படி அவசரம்னா வேற எவனையாவது பார்த்துக்கோ..."

"ஐயோ!!"

பவானி இரு செவிகளையும் பொத்திக்கொண்டு, அதிர்ச்சியுடன் கணவனைப் பார்த்தாள்.

அவன், இவளை முறைத்துப் பார்த்துவிட்டு அறையை விட்டு வெளியேறினான்.

இதுதான் முதல். அப்புறம் எத்தனையோ...

மகளை மறு வீட்டுக்கு அழைத்துப் போவதற்காக பவானியின் தந்தையும், தாயும் வந்திருந்த போது – கணேசன் சுவரைப்பார்த்தபடி சொன்னான் :

"அம்மாவுக்கு உடம்பு சரியில்லே. இப்ப அவளைத் தனியா விட்டுட்டு... என்ன சம்பிரதாயம் இது.. முதல்லே அம்மாவுக்குத் தேவலையாகட்டும். அப்புறம் நானே அனுப்பி

ஒரு வீடு. ஒரு குடும்பம்.



ஒரே காப்பீடு.

யுனைடெட் இந்தியாவின் வீட்டுடமையாளர் காப்பீட்டுத் திட்டம், அனைத்துப் பாதுகாப்பும் வழங்குவது - இது ஒன்றே.

ஒன்றென்றால், வீட்டுடமையாளர் காப்பீடு பாலிசி (Householder's Insurance Policy), உங்கள் வீட்டையும் மற்றும் அதில் உள்ள பலவற்றையும் பல்வேறு வகைகளில் பாதுகாத்திடும் ஒருங்கிணைந்த காப்பீட்டுத் திட்டம்.

ஒன்றென்றால், இந்த பாலிசியின் கீழ் உங்கள் வீடு (கட்டிடம்), மற்றும் அதிலுள்ள பொருட்களுக்கு தீ, இயற்கையின் சீற்றங்கள், விபத்துக்கள், கலவரம் போன்றவற்றின் பாதிப்புகளிலிருந்து காப்பீடு கிடைக்கிறது.

ஒன்றென்றால், வீடுபுகுந்து திருடுதல் / வீட்டை உடைத்து களவு காரணமாக இழப்பு அல்லது சேதத்திற்கும் நீங்கள் பாதுகாப்பு பெறுகிறீர்கள்.

ஒன்றென்றால், ஆபரணங்கள் / விலையுயர்ந்த பொருட்களின் இழப்பு அல்லது சேதமடைவது போன்றவற்றையும் ஈடுசெய்ய இந்த பாலிசி வழிசெய்கிறது.

ஒன்றென்றால், கண்ணாடித் தகடுகள் எதிர்பாராது உடைந்து போனால் கூட இந்த திட்டத்தின் கீழ் ஈடு செய்திடும் வசதி உண்டு.

ஒன்றென்றால், மிக்ஸர், வாஷிங் மெஷின் போன்ற வீட்டுஉபயோக சாதனங்களின் மின்சார/இயந்திர வகைச் செயலிழப்புகளுக்கும் காப்பு பெறமுடியும்.

ஒன்றென்றால், உங்கள் டிவி, விசிஆர் ஆகியவற்றுக்கு செயலிழப்பு, தீ விபத்து, களவு போதல், சட்டரீதியாக நஷ்டம் (Legal Liabilities) முதலியவற்றுக்கும் நீங்கள் பாதுகாப்பு பெற்றிடலாம்.

ஒன்றென்றால், உங்கள் சைக்கிள்களுக்கும் (மிதிவண்டி), தீ விபத்து, திருட்டுபோகுதல், சட்டரீதியாக நஷ்டம் போன்றவற்றுக்கும் காப்பீடு வசதி கிடைக்கிறது.

ஒன்றென்றால், நீங்கள் இந்தியாவிற்குள் பயணம் செய்திடும்போது உங்கள் பெட்டி (Baggage) தொலைந்துபோதல் அல்லது சேதப்படுதலுக்கு பாதுகாப்பு பெறுகிறீர்கள்.

ஒன்றென்றால், உங்களுக்கும் உங்கள் வாழ்க்கைத் துணைக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் தனிநபர் விபத்துக் காப்பீடும் இந்த பாலிசியில் உள்ளடங்குகிறது.

ஒன்றென்றால், ரூ. 25,000/- வரை பொதுப் பொறுப்பு (Public Liability), ஏனைய அசம்பாவிதங்களை ஈடுசெய்யவும் வழி செய்கிறது.

யுனைடெட் இந்தியாவின் வீட்டுடமையாளர் காப்பீடு பாலிசி.
உங்கள் குடும்பத்தினருக்கும் உங்களுக்கும் ஒரு பத்திரமான காப்பீடு.

யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் கம்பெனி லிட்.

(ஜெனரல் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியாவின் சார்பு நிறுவனம்)
24 வைட்ஸ் ரோடு, சென்னை - 600 014.

மண்டல அலுவலகங்கள் : அகமதாபாத், போன் 5504294, ஃபேக்ஸ் 5503630. பெங்களூர், போன் 5584868, ஃபேக்ஸ் 5584968. பரோடா, போன் 363013, ஃபேக்ஸ் 362039. போபால், போன் 553775, ஃபேக்ஸ் 553775. கல்கத்தா, போன் 2264803, ஃபேக்ஸ் 2457306. சண்டிகர், போன் 780006, ஃபேக்ஸ் [illegible]6353. சென்னை, போன் 8273993, ஃபேக்ஸ் 8254148. கோயம்புத்தூர், போன் 234235, ஃபேக்ஸ் 231892. குவாஹாத்தி, போன் 561577, ஃபேக்ஸ் 560606. ஹைதராபாத், போன் 232996, ஃபேக்ஸ் [illegible]1847. ஜெய்ப்பூர், போன் 515840, ஃபேக்ஸ் 514511. கொச்சி, போன் 366853, ஃபேக்ஸ் 351353. லக்னோ, போன் 75107, ஃபேக்ஸ் 372318. லூதியானா, போன் 402148, ஃபேக்ஸ் 405084. மதுரை, போன் 742152, ஃபேக்ஸ் 741717. மும்பை I, போன் 2820434, ஃபேக்ஸ் 2820469. மும்பை II, போன் 2624546, ஃபேக்ஸ் 2624546. புது தில்லி, போன் 3313055, ஃபேக்ஸ் 3316128. பாட்னா, போன் 235125, ஃபேக்ஸ் 230734. புனே, போன் 534112, ஃபேக்ஸ் 536929. விசாகப்பட்டினம், போன் 551659, ஃபேக்ஸ் 552989.

வைக்கிறேன்..."

"வாஸ்தவம். பெரியவாளுக்கு செய்யவும் கொடுத்து வச்சிருக்கணுமே. குழந்தை இங் கேயே இருக்கட்டும். அதெல்லாம் அவ ரொம் பவும் அட்ஜஸ்டபிள் டைப்..."

முறுக்கும், திரட்டுப் பாலுமாய் மகளுக் காகக் கொண்டு வந்து வைத்து விட்டு, ஏமாற் றத்தை மறைத்துக் கொண்டு அவர்கள் கிளம்பிப் போன போது... சமையலறையில் நின்றபடி கண்ணீர் ததும்பப் பார்த்துக் கொண்டிருந்தாள் பவானி.

வந்திருந்த ஐந்து நிமிடத்தில் என்னத்தைப் பெரிசாய் மகளிடம் ஒரு தாய் பேசி விட முடியும். பார்வையால் ஒரு வருடல்தான். பசுவும் கன்றும் பார்த்துக் கொள்வது போல...

அதற்குப் பிறகு சாந்தி கல்யாணம் இல்லா மலேயே கணேசன், மனைவியை நள்ளிரவில் தட்டி எழுப்புவதும்... அவளுடன் ஏதோ ஒருவித மூர்க்கத்தனத்துடன் உறவு கொள் வதும்... இந்த விஷயத்தை எப்படியோ மறுநாளோ - அதற்கடுத்த நாளோ உணர்ந்து கொண்ட சொர்ணம் இன்னும் ஆவேசமாய் மருமகளை தனது செய்கைகளினால் தண்டிப்பதும்....

தனக்கும், தன் பிள்ளைக்கும் மட்டுமாய் சமைத்து சாப்பிட்டு விட்டு, பாத்திரங்களைத் தேய்க்கப் போட்டு விட்டு ஒன்றுமே அறியா தவள் போல கூடத்து பெஞ்சில் வந்து படுத்து விடுவாள் சொர்ணம்.

பவானிக்கு அடுப்பைப் பற்றவைக்கக் கூட யோசனையாக இருக்கும்.

சின்னவள் ஜெயாவே சொல்லியிருக் கிறாள்.

"என் மாமனார் கொஞ்சம் ஆசாரம் பார்ப்பார் அம்மா. குளிக்காம, சமைக்கக் கூடாதும்பார். ஆனா, மாமியார் தங்க மானவர். தன்னால முடிஞ்சா சுருக்க குளிச்சுட்டு வந்து தானே சமைப்பார். முடி யாத போது, அவசரத்துக்கு நீ எதையாவது சமைச்சு சாப்பிட்டுட்டு ஆபீசுக்குக் கிளம்புடி குழந்தை. அப்புறம் நான் குளிச்சிட்டு வந்து மாமாவுக்குத் தனியா எதையாவது செஞ்சு வைக்கறேன். ராத்திரி சப்பாத்தியும், சப்ஜியும் கூடச்சுட நீ ஆபீசுலேருந்து வந்ததுக்கு அப்புறம் செஞ்சுத் தர்றேன்னு..."

குழந்தை சொல்லும்போதே, எப் பொழுதுமே பட்டினி கிடந்து உட்குழிந்த வயிறு கூட நிறைந்து விட்டாற்போல... பூரித் துப் போவாள் பவானி.

ஆனால் - அவள் இத்தனை வயசுக்கும் மாமியாரைக் கேட்காமல் ஒரு மணி அரிசி கூட... அதிகமாய் போட்டு வடித்ததில்லை...

தயங்கித் தயங்கி நிற்பாள்.

"என்ன..."

"ஒண்ணுமில்லே... சாதமே இல்லை..."

"சரி... அதுக்கென்ன இப்ப? தினமும் வடிச்சு வடிச்சு வயித்துல வச்சுப் புதைக் கணுமா... பழையது கற்சட்டியில சாதமும், மோரும் போட்டு வச்சிருக்கேன்... சாப்பிடு."


பிரசவத்துக்காகப் பிறந்த வீட்டுக்குப் போன போது, எலும்பும் தோலுமாய், வயிறு மட்டும் துருத்தி பை மாதிரி முன்னுக்குத் தள்ளியிருக்க, நிற்க சிவனற்று நின்ற மகளைப் பார்த்துப் பதறிப் போனார் பெற்றவர்.


"ஒரு தலை தீபாவளி, நாள், கிழமை - எதுக்கும் தானும் வராம, பெண்டாட்டியை யும் அனுப்பாம, அம்மா அம்மான்னு புலம்பி னானே அவன்... 'இப்படி என் பொண்ணை எலும்புக்கூடா நிறுத்தி வச்சிருக்கியேடா பாவி'ன்னு அவனைக் கேட்காம விடப் போறதில்லை நான்."

பவானியின் அப்பாவாகட்டும் சகோதரர் களாகட்டும், பரம சாதுக்கள். வீட்டிலேயே அதிர்ந்து பேசாதவர்கள். அந்த வீட்டில் பெண் குழந்தை அபூர்வம். தங்கச் சிலை மாதிரி புகுந்த வீட்டுக்குப் போனவள் இப் படித் தேய்ந்து போன மரப்பாச்சியாய் வந்து நின்றதில் கொதித்துத்தான் போனார்கள்.

'ஐ புரோ' பென்சில் சீவப் பயன்படுத்தும் ஷார்ப்பனரைக் கொண்டு, குழந்தைகள் வரையப் பயன்படுத்தும் கிரேயானை சீவினேன். இதனால், கிரேயான் நீண்ட நாட்கள் புதியது போன்று வரைந்தது. 'சூப்பர் ஐடியாமா' என்றான் என் சின்ன மகன்.

- போரூர். ஆர். சீதா





'இருக்கட்டும் சீமந்தம் வரும் இல்லையா... அப்ப பேசிக்கறேன்' என்றார் அப்பா.

"எங்க குடும்பத்துல சீமந்தம் செய்யற பழக்கமே கிடையாது. வளைகாப்பு கூட ஏதோ உங்க இஷ்டம். எங்களுக்கும் அதுக்கும் சம்பந்தமே இல்லே. உங்க வீட்டுல நடத்தற துன்னா நடத்திக்கோங்கோ..."

"மாப்பிள்ளை எங்கே... பேசணுமே..."

"பேசறதுக்கு என்ன இருக்கு. அதான் நான் சொல்லிட்டேனே... அவன் 'கேம்ப்' போயிருக்கான்..."

"அப்ப வளைகாப்புக்கு எங்க பொண்ணை உங்ககிட்டயே சொல்லிட்டு அழைச்சிட்டுப் போகலாமா..."

"அதெப்படி... அவன் வந்தா யார் பதில் சொல்றது. ஒரு வாரத்துல வந்துடுவான். அப்புறம் வந்து அழைச்சிட்டுப் போங்க..."

அவன் இதைச் சொன்ன போது - கணேசன் குளியலறைக்குள், வெந்நீர் அண்டாவுக்குப் பக்கத்தில் தானும் ஒரு அண்டாவாக உட்கார்ந்திருந்தான்.

அந்த முறை பவானியைப் பெற்றவர் விடாமல் நாலைந்து தரம் வந்து, பிடிவாதமாய் மகளை வளைகாப்புக்காக எட்டாம் மாசம் அழைத்துப் போனார்.

ஒன்பதாம் மாச ஆரம்பத்திலேயே நித்யா பிறந்து விட்டாள். பத்து மாதம் பிள்ளையைச் சுமக்க, அவளுக்கு ஏது தெம்பு?

குழந்தையின் புண்யாகவசனத்துக்கும் அம்மாவும், பிள்ளையும் வரவேயில்லை. குழந்தை பெண்ணாகப் பிறந்து விட்டதில் கோபம்....

"தொட்டிலும், பேர் வைக்கறதும் இல்லையின்னுதான் அழறதாக்கும்..."

"அதானே..."

தாய் சொன்னதை அப்படியே ஆமோதித்தான் தனயன்..

பிரசவம் முடிந்து மூன்றாம் மாதமே கொண்டு வந்து விடச் சொல்லி கணேசன் விரட்ட....

"அதெல்லாம் முடியாது. இவன் பெண்டாட்டிய கவனிச்சுக்கற அழகு நமக்குத் தெரியாதா..."

- இப்படி பவானியின் தந்தை குதிக்க....

"மாப்பிள்ளைக்குச் சமமா நாம பேச முடியுமா... என்ன இருந்தாலும் பெண்ணைப் பெத்தவா, தழைஞ்சுக் கொடுத்துத்தான் போகணும். நீங்க பாட்டுக்குத் தாண்டிக் குதிச்சிட்டு வந்தா அத்தனையும் நம்ம குழந்தைத் தலையிலதான் வந்து விடியும்..."

பெற்றவள் - காலம் காலமாய் பெண்களுக்காக இந்தச் சமுதாயம் கடைப்பிடித்த சம்பிர



தூள் பகோடா செய்யும் பொழுது, கடலை மாவுடன் சிறிது ரவையையும் சேர்த்துக் கலந்து, பகோடா செய்து பாருங்கள். பகோடா கரகரவென இருப்பதுடன், சுவையும் கூடுதலாக இருக்கும்.

— ஆர். பாலா

தாய மந்திரத்தை வாசித்தாள்.

பவானிக்குப் போக பயமாகத்தான் இருந்தது. புருஷனை விடவும் மாமியாரை விடவும் பட்டினியை நினைத்தே கலங்கினாள் அவள்.

அதுவும் கூட தனக்காக இல்லை. தன் குழந்தைக்கான உணவு தன்னிடமிருந்துதானே சுரந்தாக வேண்டும் என்கிற கவலை...

வீட்டுக்கு வந்த ஓரிரு தினங்களுக்குள் ஏகப்பட்ட இடிகள் அவள் தலையில்...

கல்யாணத்துக்காக – பிறந்த வீட்டில் அவளுக்கு வாங்கித் தந்திருந்த பட்டுப் புடவைகளில் ஒன்றைக் கூட காணவில்லை.

“அய்யோ... என் புடவை எல்லாம் எங்கே?”

“என்னைக் கேட்டா? அத்தனையையும் பிறந்த வீட்டுல கொண்டு போய்ப் போட்டுட்டு எனக்குத் திருடி பட்டம் கட்டறயா... கணேசா... இவ என்ன சொல்றா பாரு...”

பச்சை உடம்புக்காரி என்றும் பாராமல், மனைவியை முதன் முதலாக அடித்து நொறுக்கினான் கணேசன்.

அந்த ரணம் இதுவரை ஆறியதே இல்லை.

3

எல்லாம் பழங்கதை....

காலம் நிறைய மாறி விட்டது. ஆனால் பவானியின் வீட்டைப் பொறுத்த மட்டும் காலச் சக்கரம் சுற்றாமல் அப்படியே சேற்றில் புதைந்து நின்று விட்டாற்போல...

மகளின் நிலை கண்டு, வெளியே சொல்ல முடியாத துக்கத்திலேயே தந்தை ஒரு நாள்


கண்ணை மூடினார்.

இந்தச் செய்தியைத் தாங்கி வந்த தந்தியை தானே கையெழுத்திட்டு வாங்கி, எரவானத்தில் செருகி வைத்து விட்டு, மூன்று நாள் கழித்து, இலை நிறைய சாதத்தைப் போட்டு நெய்யை உருக்கி போட்டு, பருப்பைப் போட்டு அழுந்தப் பிசைந்து கவளம் கவளமாய் வாயில் உருட்டிப் போட்டுக் கொண்டிருந்த சொர்ணம் - என்னவோ, 'ரசத்துக்கு உப்புப் போட மறந்துட்டேன்' என்கிற ரீதியில் அந்தச் செய்தியைச் சொன்னாள் :

"இந்தா எரவானத்துல ஒரு தந்தி இருக்கு பாரு. உனக்கு வந்ததுதான்..."

"தந்தியா... எனக்கா..."

"பின்னே, என்க்கா... எனக்கு யார் இருக்கா தந்தியடிக்க...



உனக்குத்தான். உங்கப்பா போயிட்டாராம்...''

"அய்யோ... எப்ப..."

''யாருக்குத் தெரியும்... போன சனிக்கிழமை தந்தி வந்தது....''

கிழவியின் கழுத்தை அப்படியே இரு கைகளாலும் நெறிக்க வேண்டும் போல... அப்படியொரு ஆத்திரம்... ஆவேசம்....


அவன் பாட்டுக்கு சாப்பிட்டுக் கொண்டுதான் இருந்தான்.

குழந்தையை ஒரு கையிலும், நாலைந்து துணிமணிகள் அடைத்த பை ஒரு கையிலுமாய், மாமியாரிடம் சொல்லிக் கொள்ளாமல் கூட, வீட்டை விட்டு இறங்கி நடந்தாள் பவானி.

அந்தக் கணமே தீர்மானித்தும் விட்டாள்.

'இனிமே செத்தாலும் இந்த வீட்டுக்குள்ள நுழையறதே இல்லே....'

பிறந்த வீட்டின் வாசலை மிதித்த போது - உள்ளிருந்து புறப்பட்ட அம்மாவின் அழுகை...



ஜகன்மாதா ஸ்ரீ ப்ரத்யங்கிரா தேவீ கரிக்கோல ஊர்வலம்

மார்ச் 5ம் நாள் (5.3.1999) வெள்ளி அன்று காலை 6–7 மணிக்குள் **ஸ்ரீ ப்ரத்யங்கிரா ஆஸ்ரமம் டிரஸ்ட் அலுவலகம், 2/34 கண்ணபிரான் கோவில் குறுக்குத் தெரு, உத்தண்டி, சென்னை – 600 119** என்ற இடத்திலிருந்து ஸ்ரீ ப்ரத்யங்கிரா தேவீ புறப்பட்டு கிராம வலம் வந்து, உத்தண்டி கிராமம் கிழக்கு கடற்கரைச் சாலை ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரைஸ்மில் முன்பு உள்ள பந்தலில் 30.3.1999 வரை கொலு வீற்றிருப்பாள்.

இந்த காலத்தில் தினமும் நித்ய அபிஷேகம், சனி, ராகு, கேது, உன்மத்த பைரவர், மிருத்யுஞ்ஜெயர் தோஷ நிவாரண பூஜை தினமும் நிறைவேறும். **சத்ருஜெயம் பெறுவதற்காக நீலசரஸ்வதி ஸ்ரீ ப்ரத்யங்கிரா கலச பூஜை தினமும் நிறைவேறும்.** கலசபூஜை உபயம் ரூ. 500/- பரிகார பூஜை உபயம் ரூ. 500/- புஷ்ப வழிபாடு ரூ. 300/- உரிய தொகைக்கான Draftஐ ஸ்ரீ ப்ரத்யங்கிரா ஆஸ்ரமம் டிரஸ்ட் பெயருக்கு எடுத்து, டிரஸ்ட் முகவரிக்கு அனுப்பலாம்.

31.3.1999 வெள்ளிக்கிழமை பௌர்ணமி காலை 7.30க்குள் ஸ்ரீ ப்ரத்யங்கிரா தேவீ சென்னை நகருக்குள் கரிக்கோல ஊர்வலம் வர எழுந்தருளுகிறாள். விபரமான அறிக்கை தினப் பத்திரிகைகளில் வெளிவரும்.

ஸ்ரீ ப்ரத்யங்கிரா தேவீ கரிக் கோலத்தில் ஒரு நாள் பூஜையை உபயம் ஏற்று நிறைவேற்ற விரும்புகிறவர்கள் ஸ்ரீ ஆஸ்ரமம் முகவரிக்கு நேரில் தொடர்பு கொள்ள வேண்டும். தனி நபர்களையோ இதர அமைப்புகளையோ இது விஷயமாக தொடர்பு கொள்ள வேண்டாம் என்று அன்புடன் வேண்டுகிறோம்.

ஸ்ரீப்ரத்யங்கிரா திருக்கோவில் நிர்மாணிப்பதற்காக சென்னை நகர எல்லைக்குள் சொந்தமாக இடம் வாங்கப்பெற்று 18.12.98 அன்று பத்திரபதிவும் செய்யப் பெற்றது. மூலவர் மூர்த்தமும் சிவலிங்கமும் தயாராக உள்ளது. ஸ்ரீ உச்சிஷ்ட கணபதி சிலை செய்து தருவதற்கு உபயதாரர் தேவை.

ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிரா தேவீ



ஸ்ரீப்ரத்யங்கிரா பக்தர்களுக்கு அறிவிப்பு

ஸ்ரீ ப்ரத்யங்கிரா தேவீ படம் இலவசமாக அனுப்பப் பெறு கிறது. சுயவிலாசமிட்ட ரூ. 6.00 தபால்தலை ஒட்டிய கவருடன் விண்ணப்பிக்கவும்.

ஸ்ரீ ப்ரத்யங்கிரா தேவீ மூல மந்திரம் ஜெபம் 48 நாட்கள் பூர்த்தி செய்தவர்கள் மட்டும் நீல சரஸ்வதி மந்திரத்தையும் ஜெபம் செய்ய வேண்டும். காரிய சித்திக்கு இது மிகவும் உகந்தது.

நீல சரஸ்வதி

கண்டாம் சிர: சூலமாஸிம் கராக்ரை:

– ஸம்பிப்ரதீம் சந்த்ர கலாவதம் ஸாம்!!

பரமத்னதீம் பாததளே பசும் தாம் பஜே

– முதா நீல சரஸ்வதீம் தாம்

நீல சரஸ்வதி என்னும் ப்ரத்யங்கிரா தேவீ தனது தலையில் ஒலி முழங்கும் மணியை அணிந்தவள். ஒரு கரத்தில் சூலத்தை அணிந்தவள். மறு கரத்தில் ஒளிவீசும் கத்தி. நீல சரஸ்வதியாகிய தாய் ப்ரத்யங்கிரா, சந்திரனின் ஒளியை விட பிரகாசமான அறிவு ஒளி வீசுகின்றவள். அறியாமையை அழிப்பவள். ஞான ஒளி விளக்காக விளங்கும் நீல சரஸ்வதியை ஸ்ரீ ப்ரத்யங்கிரா ரூபத்தில் உள்ளன்புடன் பூஜிக்கிறேன்.

"எப்படியும் நீ வந்து சேர்ந்துடுவேன்னு ஒரு ராத்திரி முழுக்கப் போட்டு வச்சிருந் தோம்டி.. பெத்தவரோட முகதரிசனம் கூட கிடைக்கலையே உனக்கு.."

யார் என்ன அழுது என்ன பயன்... ஒவ் வொரு நாளும் கரையக் கரைய... துக்கத்துக்கு வந்தவர்கள் எல்லாரும் - துக்க விட்டுக்கு வந்து விட்டு, சொல்லிக் கொண்டுச் செல்வது கூடாது என்பதால் மௌனமாய் கரைய...

பவானிக்குக் கணேசனின் கோபமும், மாமியாரின் முகமும் கனவில் கூட வந்து பயமுறுத்தியது.

மஞ்சள் கலந்த வெளுப்பாய் - பருமனாய் - குட்டையாய் - வெடிக்கத் தயாராக இருக் கும் வெள்ளரிப் பழம் போல இருப்பாள் சொர்ணம்.

அந்த முகத்தையோ சற்றே பழுப்பேறிய விழிகளையோ பார்த்தால், 'அய்யோ பாவம்' என்பது போல...

இந்த முகத்தில் தெரியும் குழந்தைத்தனம் தான் கணவனின் முழு அன்பையும் தன் பக்கமே பிடித்து நிறுத்தி வைத்திருக்கிறதா...

அந்த முறை மகளின் வாயால் - அவளது புகுந்த வீட்டுச் செய்திகளைக் கேட்டு, பெற்ற வள் அடி வயிறு எரிய சாபமிட்டாள்.

"அடியே, இந்தக் கிழவி சாகட்டும். உனக்கு என் கையாலே பால் பாயசம் வச்சுப் பரி மாரரேன்..."

"அம்மா... என்ன இது... ஒரு ஈ எறும்புக்குக் கூட துரோகம் நினைக்காத நீயா இப்படிப் பேசறே..."

"என் குழந்தையை அந்த ஈயும், எறும்பும் பிடுங்கினா பெத்தவளான நான் எப்படிப் பாத்துண்டு சும்மா இருக்கறதாம்... நீ வேணு மானாப் பாரு. உங்கப்பாவோட உயிர் போனதே அவளாலேதான். அவரோட வருஷ திவசத்துக்குள்ள கிழவி மண்டையப் போட றாளா இல்லையான்னு..."

வாய் விட்டுச் சொல்லாவிட்டாலும் பவானியின் மனசுக்குள் கூட 'அம்மாவின் சாபம் பலித்தால் எத்தனை நிம்மதியாக இருக்கும்' என்கிற குரூரமான ஆசை - அது குரூரமா - குழந்தைத்தனமா என்று அவளால் இன்னமும் தீர்மானிக்க முடியவில்லை. அப்படியொரு ஆசை இருந்தது.

ஒருமுறை கிணற்றடியில் விழுந்து காலை ஒடித்துக் கொண்டு, மாவுக் கட்டு போட்டுப் படுத்தாள் சொர்ணம். இரண்டு மாதங்கள் போல - அவளது மலஜலங்களைக் கூட படுக் கையிலேயே இருந்தபடியே போக - பவானி, தான் பெற்ற குழந்தைக்குச் செய்வது போலச் செய்திருக்கிறாள்.

ஆனால்...

அதற்குப் பின்தான் அந்த விபரீதம் நேர்ந் தது...

ஒருசில நாட்களில் - கூடத்து மூலையில், படுக்கையறையில் இருந்து நாற்றம் வரும்... கணேசனோ வேலைக்குப் போயிருப்பான். சொர்ணம் பூனை மாதிரி கட்டிலில் சுருண்டு படுத்திருப்பாள்: அவ்வது ஈஸிசேரில் வழக்கம் போல...

"என்ன நாத்தம் அது..."

"என்னைக் கேட்டா... குழந்தை எங்கே யாவது வெளிக்குப் போயிருப்பா..."

"குழந்தையா..."

பவானி அதிர்ந்து நின்றாள்...

அப்போது பெரியவள் நித்யாவை தனது பிறந்த வீட்டிலேயே விட்டு வைத்திருந்தாள். சின்னவள் ஜெயா இரண்டு மாதக் குழந்தை... ரப்பர் விரிப்பில் பூப்போல கையையும், காலையும் உதைத்துக் கொண்டு....

ஒவ்வொரு இடமாய்த் தேடி... கடைசியில் கண்டுபிடிக்கிற போது 'உவ்வே' என்று குடல் வாய்க்கு வந்து விடும்.

செய்வதையும் செய்து விட்டு, மண்ணைப் போட்டு மூடி வைத்திருக்கும்....

ஐயோ... இது என்ன குணம்....

சாலட் தயார் செய்ய பழங்களை சிறு துண்டுகளாக வெட்டி சர்க்கரையைத் தண்ணீருடன் கலந்து காய்ச்சி ஆற வைத்து, பழத் துண்டுகளுடன் கலக்கவும். இதில் ஆப்பிள், வாழைப் பழத்தைத் தனியாக வைத்து பின் சேர்க்க வேண்டும். இந்தப் பழங்கள் வெட்டியதும் கறுத்து விடும். இதைத் தவிர்க்க, சில துளிகள் எலுமிச்சை பழச்சாறு கலந்து எடுத்து பின் புரூட் சாலடில் சேர்க்க வேண்டும்.



— விஜயா

சுய மூளையோடுதான் இதைச் செய்கிறதா... இல்லை - இது ஏதாவது மனோ வியாதியா...

கணேசனிடம் பதைக்கப் பதைக்க அவள் நடந்ததைச் சொல்ல....

"உடம்பு சரியில்லாதப்ப நானே வாரிக் கொட்டினேன். ஆனா, இது என்ன அநியாயம்... நடமாடற வீட்டுல... உங்க அம்மா மேல குத்தம் சொல்லலே... ஆனா, அவளுக்கு ஏதோ மனநிலை சரியில்லையோன்னு தோணறது. ஏதாவது நல்ல டாக்டர்கிட்ட காட்டி..."

"ஏண்டி... எங்கம்மாவைக் கொண்டு போய் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில விட்டுடலாங்கறியா..."

"ஐயோ இல்லே... இப்படியே போனா..."

அடுத்த கணம் விழுந்த அறையில் - கன்னம் வீங்கியது.

"அடேய்... அடிக்காதேடா... இன்னிக்கு எனக்கே நாத்தம் வந்தது... என்னது போய் பாருன்னேன். வேணும்னே ரூம்லே இருந்துட்டு... பழியை என் மேலப் போட்டு... கணேசா.. என்னை எங்கேயாவது கொண்டு போய் விட்டுடேன். நீயும், உன் பெண்டாட்டியும் சௌக்கியமா இருங்கோ..."

"நீ ஏம்மா போகணும். சனியனை விரட்டி விட்டாப் போச்சு. இப்படிப்பட்டவளோட உறவே எனக்கு வேண்டாம்..."

அவன் மறுபடியும் கை ஓயும் வரை அடித்து...


அந்தக் கணத்தில் பவானி, குழந்தையுடன் புறப்பட்டு பிறந்த வீட்டுக்குப் போகக் கூடத் தயாராக இருந்தாள். கணேசனும் அவளை தொலைத்துத் தலை முழுக முழு மனசுடன் காத்திருந்தான்.

சொர்ணம்தான் விழுந்து புரண்டு அழுதாள். சதைப் பற்றான முகம் சிவக்க அவள் அழுத அழுகையில் - பவானி கூட ஸ்தம்பித்து விட்டாள்.

"கணேசா, எந்தக் காரணத்துக்காகவும் அவளை உன் மாமனார் வீட்டுக்கு அனுப்பறதில்லையின்னு எனக்கு சத்தியம் பண்ணிக் கொடு..."

"ஐய்யோ... ஏம்மா..."

"சத்தியம் பண்ணிக் கொடுடா... ஏற்கனவே இவளாலே எனக்கு, 'மாமியார் பொல்லாதவ'ங்கற கிரீடம் கிடைச்சிருக்கு. இப்ப நீ இவளை விரட்டி விட்டா - அந்தப் பழி வேற எனக்கு... தேவையா... இவ போய் இன்னும் என்னவெல்லாம் சொல்வாளோ... வேண்டாம்டா.. என்னால தாங்க முடியலைடா... எப்பேர்ப்பட்ட ராட்சஸியா இருந்தாலும் நான் சகிச்சுக்கறேன்டா. இப்ப



கேசரி செய்யும் பொழுது தண்ணீருக்குப் பதிலாக பால் ஊற்றி கேசரி பவுடர் போடாமல் கேசரி கிளறிப் பாருங்கள். வெள்ளை நிறத்துடன் மாறுபட்ட சுவையுடன் இருக்கும். பால்கோவாவுடன் போட்டி போடும் சுவையில்!

— நளினி ஜெயபால்

இவ என்ன சொன்னா... 'மாமியார் வீட்டுக்குள்ளே அசிங்கம் பண்ணறா'ன்னுதானே சொன்னா. அப்படியே இருக்கட்டும். யார்கிட்ட சொன்னா.. என் குழந்தையான உன்கிட்டத்தானே சொன்னா. என்னைப் பத்தி உனக்குத் தெரியாதா... போதும் விடு. இவளை இப்ப இவ பொறந்த வீட்டுக்கு அனுப்பினா என் பேரு அங்கே எல்லாம் நாறும். ஓ... ஓ... நாராயணா... ஒரு பிள்ளையப் பெத்ததுக்கு எனக்கு மடி மேலக் கூலியா..."

"அம்மா... அம்மா... அழாதேம்மா. இங்கே பாரு... இவளை நான் எங்கேயும் அனுப்ப மாட்டேன். கோயில், கடைத்தெருவுக்குக் கூட அனுப்ப மாட்டேன். அம்மா, அழாதேயேன். அவ மட்டும் வாசப்படியத் தாண்டினா - நீயே அவ காலுலே சூடு போடு. உனக்கு அந்த உரிமை இருக்கு..."

ஒரு கையில் குழந்தையை அணைத்தபடி - சமையலறை கதவருகில் சாய்ந்து அமர்ந்து - அத்தனை பெரிய சரீரம் குலுங்க அழும் மாமியாரையும், அவளெதிரில் பத்து வயசு பாலகனாய் நின்று தாயாரைத் தேற்றும் கணவனையும் பார்த்தபடி உட்கார்ந்த பவானி...

இதற்குப் பிறகு அண்ணன் தம்பிகளின் திருமணம் - அவர்களது மனைவிகளின் வளைகாப்பு, சீமந்தம், பிள்ளை பெறல், தொட்டில், பெயரிடல், காது குத்தல்... எதற்குமே போக முடியவில்லை.

நித்யாவை மட்டும் காலாண்டு, அரையாண்டு விடுமுறைகளில் அண்ணனோ, தம்பியோ அழைத்துக் கொண்டு வந்து விட்டுப் போவார்கள். அதுவும் ஒரு வாய் காப்பி கூட பவானி தன் கூடப் பிறந்தவர்களுக்குக் கொடுத்ததில்லை.

அண்ணனே ஒருமுறை கேட்டான்,

"குழந்தை ஜெயா உடம்பு தேறவே இல்லையே. நல்ல டாக்டர்கிட்ட காமிக்கறது தானே..."

"எந்த டாக்டர்கிட்டே போனாலும் பிரிஸ்கிருப்ஷன்லே 'வயிறாரச் சாப்பாடு'ன்னுதான் எழுதித் தருவார் அண்ணா..."

"இந்தக் குழந்தை வயித்துக்கு சோறில்லையா இங்கே..."

"........"

அவளது மௌனம், சகோதரனைச் சூடேற்ற, குழந்தையை அள்ளிக் கொண்டு போய், கணேசனின் எதிரில் நின்றாள்.

"இதப் பாரு.. ரெண்டு குழந்தைகளையும் நானே எடுத்துண்டு போறேன். நீ உங்கம்மாவை உட்கார வச்சு பாலாலே அபிஷேகம் பண்ணு. பஞ்சாமிர்தமா ஊட்டு."

"கணேசா... எனக்குப் படபடன்னு வருதுடா. அடேய்... என்னடா சொல்றான் உன் மச்சினன்..."

அன்றைக்கு ஒரு பெரிய ரகளை நடந்திருக்க வேண்டியது.. பவானிதான் அண்ணனின் காலில் விழுந்து கும்பிட்டு கேட்டுக் கொண்டாள்.

"அண்ணா போயிடு... குழந்தையையும் எடுத்துண்டு போ....

பவானி பெருமூச்செறிந்தாள்.

இத்தனை வருட வாழ்க்கையில் பிறந்த வீட்டு மனிதர்களும், பெற்ற பெண்களும் என்னவோ சிறைக் கைதியைப் பார்ப்பது போல இவளைப் பார்த்து விட்டுத்தான் போயிருக்கிறார்களே தவிர, இவள் அவர்களைத் தேடிப் போனது அபூர்வம்.

பெரியவன் நித்யாவின் திருமணத்துக்கு - என்னவோ ஆயிரம் பிகுவுடன், சம்பந்திகளின் வற்புறுத்தலின் பெயரில் அந்த இடத்தை விட்டு மகன், மருமகளுடன் அசைந்து கொடுத்தாளே தவிர, சொர்ணமும் எங்கேயும் நகர்ந்ததில்லை.

ஒருமுறை ஏதோ யாத்ரா சர்வீஸில் காசி, ராமேஸ்வரம் செல்ல வேண்டும் என்று டிக்கெட்டை முதற்கொண்டு வாங்கச் சொல்லி விட்டு, கடைசி நேரத்தில் 'வேண்டாம்' என்று சொல்லி விட்டாள்...

வயது ஏற ஏற - யாருடனும் பேச்சு வார்த்தை இல்லை... எல்லாப் பேச்சும் மகனுடன்தான். இத்தனை வயசுக்கும் மகனுக்கு சாப்பாடு பரிமாறுவது சொர்ணம் தான். அப்படிப் பரிமாறும்போதே காதில் ஓத வேண்டியதை ஓதி விட்டு நகர்ந்து விடுவது தான் பொழுதுபோக்கு. சங்கீதம், உபன்யாசம், நல்ல புத்தகம் எதுவும் பிடிக்காது.

அமெரிக்காவிலிருந்து பேத்தி - தன் தாய்க்காக வாங்கித் தந்திருந்த 'வாக்மேன்'னை சத்தம் போடாமல் உடைத்து விட்டு, பூனை பார்வை பார்த்துக் கொண்டு...

'சீ... இழவு சாகாதா...'

இப்படி அத்தனை பேர் வாயிலும் விழுந்து புறப்பட்டுக் கொண்டு, குத்துக் கல்லாக அவள் உட்கார்ந்திருக்க...

யாருமே எதிர்பாராதபடி அந்தச் சம்பவம் நிகழ்ந்து விட்டது...

அலுவலகத்திலிருந்து வீடு திரும்பும் வழியில் லாரி மோதி - அந்த இடத்திலேயே கணேசன் இறந்தான்!

4

இருபத்திநாலு மணி நேரத்தில் பவானியின் உறவினர்கள் அத்தனை பேரும் கூடி விட்டனர்...

பவானிக்கு இன்னமும் பிரமை நீங்கவில்லை.. விபத்து நடந்ததும், யாரோ கணேசனைத் தூக்கி வண்டியில் போட்டுக் கொண்டு மருத்துவ மனைக்குப் பறந்ததும், அங்கே 'உயிர் போய் அரை மணி நேரம் ஆகி விட்டது' என்று டாக்டர்கள் சொல்ல கணே

ஹெல்மெட்டிற்குள் தண்ணீர் இறங்கி விட, அதை எத்தனை முயன்றும் சூரிய ஒளி படுவதைப் போல் வைக்க முடியாமல் போயிற்று! உடனே ஒரு ஐடியா! ஒரு நூறு வாட்ஸ் பல்பை ஹோல்டருடன் பொருத்தி ஒயர் இழுத்து ஹெல்மெட்டிற்குள் வைத்து எரிய விட்டோம். வாவ்... பத்தே நிமிஷங்களில் ஈரம் உலர்ந்து விட்டது!

- சுந்தரவள்ளி





Eye drops வரும் பாட்டில்கள் காலியானதும் தூக்கி எறிந்து விடாதீர்கள். அதை நன்றாகச் சுத்தம் செய்து அதில் எஸென்ஸ் மற்றும் ஃபுட் கலர் போன்றவற்றை ஊற்றி வைத்துக் கொள்ளலாம். உபயோகிக்க எளிதாக இருப்பதோடு, தேவையான அளவு மட்டும் ஊற்ற வசதியாக இருக்கும்.

— ஆ. லதா

சனின் சட்டைப் பையிலிருந்த பர்சிலிருந்த விசிட்டிங் கார்டை வைத்து, வீடு தேடி வந்து தகவலைச் சொல்லி...

நல்ல வேளையாக அக்கம் பக்கத்தினர் உதவினர். கணேசனின் சடலத்தை வீட்டுக்குக் கொண்டு வரவும், பவானியின் சகோதரர்களுக்கு எஸ்.டி.டி. போட்டு விஷயத்தைச் சொல்லவும்...

இரண்டு பெண்களும் 'எங்களுக்காகச் சடலத்தை வைத்திருக்க வேண்டாம்... நாங்கள் அம்மாவைப் பார்த்து ஆறுதலளித்து எங்களுடன் அழைத்துப் போகவே வருகிறோம்' என்று பவானியின் சகோதரர்களிடம் தொலைபேசியிலேயே பேசிவிட்டார்கள்.

"அம்மாவைப் பார்த்துக்குங்க மாமா... அவளுக்கு எதுவும் ஆகி விடக் கூடாது..."

அண்ணனும், தம்பியும் ஆளுக்கொரு வேலையை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தனர்.

சொர்ணம் விக்கித்துப் போய் உட்கார்ந்திருந்தாள். கணேசன், கடைசிப் பயணத்துக்குத் தயாராகையில், தளர்ந்த நடையும், பீதி படர்ந்த முகமுமாய் மகனின் அருகிலேயே சுற்றிச் சுற்றி வந்தாள்... தொட்டுப் பார்த்தாள்...

"நகருங்க பாட்டி.... என்ன செய்யறது.. போறவன் போயிட்டான்... அதுக்காக எது நிற்கப் போறது... சார், குடத்துல ஜலம் எடுத்துண்டு வரச் சொல்லுங்க.. யார் யார் இருக்கா பாத்யதைப் பட்டவா..."

வைதீகத்துக்காக வந்திருந்தவர்கள் குரலை உயர்த்த கணேசனின் அலுவலகத்தில் வேலை செய்கிறவர்கள்... வேடிக்கை பார்க்க வந்தவர்கள்.. ஒப்புக்கு 'எடுக்கறதுக்குள்ளே குட்டோட குட்டா விசாரிச்சுட்டு வந்துடலாம். அப்புறம் யார் அந்த வீட்டு வாசப்படியை மிதிக்கிறது..'- இப்படி ஏதோ துக்கம் விசாரிக்க வந்தவர்கள்... இவர்களினால் ஏற்பட்ட நெரிசலில் கிழவி பின்னுக்குத் தள்ளப் பட்டாள்...

கீழே விழ இருந்தவளை யாரோ தாங்கிப் பிடித்து, ஈஸிசேரில் உட்கார வைத்தார்கள்.

'கணேசன் போயிட்டானா...'

சொர்ணத்துக்கு ஏற்கனவே பழுப்பான- சற்றே பெரிதான பாதாம் கொட்டை போன்ற விழிகள்... இப்போது மிரட்சியில் ஏதோ ஆந்தையின் விழிகள் போலத் தோற்றமளித்தது.

பவானிக்கு மூளை மரத்துக் கிடந்தது.

இந்தப் பிடுங்கலிலிருந்து விடுதலை கிடைக்க வேண்டும் என்று அவள் விரும்பினாளே தவிர, இத்தனை அடிஉதையிலும் கணவனுக்கு ஒரு ஊறு விளைய வேண்டும் என்று அவள் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை...

ஏதோ துர்தேவதையின் கட்டளைக்குக் கட்டுப்பட்டு நடக்கும் பூதம் போலத்தான் அவன் இது நாள் வரையில் செயல்பட்டான். பவானி, அவள் தாயார், ஏன் சகோதரர்களுக்குக் கூட- கிழவி மண்டையைப் போட்டாலாவது பிள்ளை மனம் திருந்த மாட்டானா' என்கிற ஏக்கம்தான் இருந்ததே தவிர- இப்படி உள்ளதுக்கே மோசம் வரும் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை.

துக்கம் விசாரிக்க வந்த உறவினரிடமெல்லாம் பவானியின் அம்மா இரைந்து விமர்சித்தாள். ஆத்திரம் தீர- கிழவியின் காதில் விழ வேண்டும் என்றே கத்தினாள்:

"இருந்த வரைக்கும் ஒருநாள் என் குழந்தையைக் கண் கலங்காம வச்சிருந்தானடி அவன். அம்மா சொல்றதைக் கேட்டு, தலையாட்டி ஆட்டி... தாலிகட்டின பெண்டாட்டியை தினமும் அடிக்கறதும் புடைக்கறதுமா.. ஒரு நல்ல வார்த்தை பெத்தவ வாயில இருந்து வந்திருக்குமா..."

"பெண் பாவம் சும்மா விடாது மாமி... அவதி படப் போறா பாருங்க.. படுத்தி வச்சப் பாட்டுக்குப் புழுத்துதான் சாகப் போறா... என்ன செஞ்சு என்ன... கடைசியில என் பொண்ணு மாட்டிண்டுட்டாளே..."

எத்தனைதான் கட்டுப்படுத்தினாலும், அணையை உடைத்துக் கொண்டும் பீறிட்டுக் கிளம்பும் வெள்ளம் போல- பவானியின் தாய்... தன் வயதையும் மறந்து 'ஓ' வென அலற...

கல்யாணமோ-மரணமோ- சம்பவிக்கிற

வரையில்தான் பிரமிப்பே தவிர... சம்பவித்த பின், யாரைக் கேட்டும் எத்தக் காரியமும் நிற்பதில்லை!

அது பாட்டுக்கு அது நடந்து கொண்டிருந்தது...

நித்யாவும் ஜெயாவும் கணேசன் போன மூன்றாம் நாள் வந்திறங்கினார்கள்...

அவர்களைக் கண்டதும் தாய் மாமன்களும், மாமிகளும், இன்னும் பவானியின் தாயாரும் சத்தமாய் அழ...

அறையின் மூலையில் கிழிந்த துணியாய் சுருண்டிருந்த அம்மாவை எடுத்து நெஞ்சோடு அணைத்துக் கொண்ட பெண்கள், கண்ணீர் சிந்தாமல்-வெகு யதார்த்தமாய் பேசினார்கள்.

"யாரும் அழாதீங்க. அம்மா, நீ அழறியா இந்த மனுஷன் போனதுக்காக..."

"........"

"விட்டுத் தள்ளு... ஏதோ- எப்படியோ உனக்கு இந்த ஜெயில்லே இருந்து விடுதலை கிடைச்சுதேன்னு நாங்க எல்லாரும் சந்தோஷப்படறோம்..."

"........"

"சின்ன வயசுல தீபாவளின்னா ஒரே சந்தோஷமா இருக்கும்... எங்கேயாவது ஒரு ராட்சஸனை செத்த நாளை இப்படி புதுசு கட்டிண்டு, ஸ்வீட் சாப்பிட்டுக் கொண்டாடுவானேன்னும் தோணும்.... ஆனா, இப்படி வலுவிலேயாவது சந்தோஷத்தை வரவழைச்சிண்டு ஒருத்தனோட திவசத்தைக் கொண்டாடறோம்னா- அவன் எப்பேர்பட்டவனா இருப்பான்னும் நினைக்கத் தோணும்.... இப்ப, அந்த தீபாவளிய விடவும், இந்த மனுஷனோட இறப்பைத்தான் நம்ம குடும்பத்துல பெரிய சந்தோஷமாக் கொண்டாடணும்னு தோணறது..."

தென்னை மரத்திலிருந்து தவறி விழுந்த அணில் குஞ்சைத் தூக்கி, சர்வ ஜாக்கிரதையாய் உள்ளங்கையில் வைத்துக் கொண்டு, அதன் முதுகை விரலால் வருடிக் கொடுப்பதைப் போன்ற வார்த்தைகள்...

நடுநடுவே சொர்ணத்தைப் பற்றிய விசாரிப்புகளும், வசவுகளும் இல்லாமல் இல்லை...

துக்கம் விசாரிக்க வந்த-பவானியின் அண்ணாவின் மாமியார் கூடக் கேட்டாள்.

"ஜடாயு என்ன பண்றது... மலையாட்டம் பிள்ளையையும் முழுங்கிட்டு உட்கார்ந்திருக்காக்கும்..."

"ஆமா... இன்னும் என் குழந்தையை வறுத்து வாயிலப் போட்டுண்டாத்தானே அது எடுத்த பொறவி கடைத்தேறும்..."

"போறுமே இன்னும் என்ன பந்தம் வச்சு வாழறது... கொண்டு போய் ஏதாவது முதியோர் இல்லத்துலேயோ- அநாதை ஆசிரமத்துலயோ சேர்த்துட்டு. பவானிய உங்க கூட அழைச்சிட்டுப் போயிடுங்க..."

"அப்படித்தான் செய்யலாம்னு இருக்கோம்..."

"நித்யா, அம்மாவை அமெரிக்காவுக்கு அழைச்சிட்டுப் போற ஏற்பாட்டோடதான் வந்திருக்கா..."

கூடமெங்கும் பேச்சுக்கள். கிழவி அங்கேயே ஒரு பக்கத்தில், கட்டிலோடு முடங்கிக் கிடப்பதை பொருட்படுத்தாமல், அவரவர்கள் மனசுக்குத் தோன்றியதை எல்லாம் பேசியபடி...

காய்களை வாங்கிக் கொண்டு வந்து போடுவதும், மளிகை சாமான்களை சமையலறையில் கொண்டு போய் குவிப்பதும், இது வரையில் சொர்ணம், பவானியைத் தவிர வேறு யாருமே சமைத்தறியாத அந்த அடுப்பில் சமையலுக்காக வந்திருக்கும் மாமிகள் 'தடதட'வெனச் சமைப்பதும்... சத்தமாய் பேசுவதும்...

"கிழம் என்ன சாப்பிட்டது?"

"யார் கண்டா...நேத்து ராத்திரி தட்டுல

பூரி லாடு : பச்சை ரவையை சிட்டிகை உப்பு, தண்ணீர் சேர்த்து நன்கு பிசையவும். ஒரு பெரிய மணைப்பலகை முழுவதும் சப்பாத்தி போல் மெல்லியதாக இடவும். ஏதாவது ஒரு மூடியினால் அழுத்தி நிறைய பூரிகள் சேகரிக்கவும். எண்ணெயில் சிவக்க பொரித்து, சிறிது ஆறியதும் மிக்ஸியில் பொடிக்கவும். பொடித்து சர்க்கரை, வறுத்த முந்திரி, ஏலத்தூள் சேர்த்து உருண்டைகள் செய்யவும். வாயில் போட்டால் கரையும்.

— ஜெயா



வச்ச தோசை அப்படியே இருக்கு... விரலாலே தொடலை..."

"ஒழியறது... பசிச்சா தானே எழுந்து வந்து சாப்பிடும். அடுத்தவளுக்கு ஒரு பருக்கை இல்லாம, மொத்தமாச் சாப்பிட்டுடும்.."

ஜெயா எங்கிருந்தோ ஒரு முதியோர் இல்ல அனுமதி தாளை வாங்கி வந்தாள்.

''அம்மா, இதை ஃபில் அப் செஞ்சு, இருபத்தஞ்சாயிரம் பணம் கட்டிட்டா- அந்தப் பணத்தை ஃபிக்ஸட் டெபாஸிட்டா வச்சிட்டு கிழவிய வச்சுப்பாங்களாம். மேலே இருபத்தஞ்சாயிரம் செலவானாலும் பரவா யில்லைன்னு நான் சொல்லிட்டேன். சீக்கிரம் அவளை 'பேக்' பண்ணு...

கணேசனின் காரியங்கள் நடந்து முடிந்த பத்தாம் நாள்... இரவு எல்லோரும் ஆங்காங்கே படுத்துத் தூங்க- பவானி மட்டும் எழுந்து, சொர்ணம் இருக்கும் கட்டிலை நோக்கி நடந்தாள்...

கிழவி, ஒரு சால்வையினால் கழுத்தோடு கால் வரையில் போர்த்தியபடி, நிஜமாகவே ஒரு ஆந்தை போலத்தான் உட்கார்ந்திருந் தாள்...

மங்கலான வெளிச்சத்தில், தன் எதிரில் நிற்பது யார் என்பது தெரியாமல் உற்று உற்றுப் பார்த்தபடி...

இப்பொழுதுதான் பவானிக்கு ஒன்று ஞாபகம் வருகிறது...

ஒரே வீட்டில் இருந்து கொண்டு, இந்த பத்து நாட்களாய் கிழவியை அவள் சந்திக் கவே இல்லை...

''யாரு...'

"..............."

''யாரு..........''

தளர்ச்சியும், பயமும் சேர்ந்து வாய் குழறி யது அவளுக்கு. இருட்டில் மெள்ளத் தடவி னாள்...

பவானி, 'சட்'டென அவளது கரத்தைப் பிடித்துக் கொண்டாள்...

பஞ்சு போன்ற மிருதுவான கை சொர் ணத்துக்கு. எலும்பே தெரியாத செழுமை..... தினமும் பருப்பும், நெய்யுமாய் சாப்பிட்டதி னாலே என்னவோ... உடம்பே மெத்து மெத்தென்று.....

"நான்தான் பவானி..."

"பவானி....என்னை எங்கே விடப் போறே... பயமா இருக்குதி........ கணேசன் வழமாழ்டான.. பவானி..... எனக்கு பயமா..."

விளக்கைத் தட்டி விட்டாள் பவானி. பரவிய வெளிச்சத்தில் கிழவி, மழையில் நனைந்த தவிட்டுக் குருவி மாதிரி உடம்பைச் சிலிர்த்துக் கொண்டு, உட்கார்ந்த வாகிலேயே பவானியின் இடுப்பைச் சேர்த்துக் கட்டிக் கொண்டாள்.

'சட்'டென மனசுக்குள் பெருகிய பரிவில் பவானி உடைந்து போய் அழுதாள். அப் படியே மாமியாரை இறுக அணைத்துக் கொண்டாள்.

''அழாதீங்கம்மா... நானிருக்கேன்... உங் களை எங்கேயும் விட மாட்டேன்..." .

நித்யா, ஜெயா-மற்றும் பவானியின் சுற்ற மும் எழுந்து இந்தக் காட்சியை நம்ப முடி யாமல் பார்த்துக் கொண்டிருக்க....

"என்னை விடமாட்டியே....."

குழந்தையின் குழறலாய் கிழவியின் குரல்....

''அம்மா, இது கொஞ்சம் கூட நியாய மில்லே...கிழவி நடிக்கறா... இத்தனை நாள் அந்த மனுசனை கைக்குள்ளப் போட்டுண்டு உன்னைப் படுத்தினது போறாதுன்னு.....நீ விடும்மா சொல்றேன்..."

ஜெயா கத்தினாள்.. நித்யா- சொர்ணத்தின் எதிரில் போய் நின்று ஆத்திரத்துடன் இரைந் தாள்.

"செத்துப் போயேன்... எதுக்கு இருக்கே...'

கிழவி மலர மலர விழித்தபடி உட்கார்ந் திருந்தாள்... பழுப்பு விழிகள் நீரில் பளபளக்க...

பவானி தீர்மானமாய் சொன்னாள்:

"ஏதோ... எனக்குக் காலம் கடந்து பொறந்த மூணாவது குழந்தையா நினைச்சுக்கறேன்... பாவம்... ஏற்கெனவே பிள்ளையப் பறி கொடுத்த துக்கத்துல கலங்கிப் போய்...."

பவானி மறுபடியும் கிழவியின் நீர் தளும் பும் விழிகளைப் பார்த்தாள்.

அதில் தெரிவது நன்றியா... நடிப்பா. புரியவில்லை. எதுவாக இருந்தால் என்ன...

கிழவியின் கதை முடியும் வரை யில் பவானி ஸ்திரமாக இந்த வீட்டில் தான்.... ❑

ருசி பரிமளிக்க...

தயிர் சேர்த்துச் செய்யும் உணவில் தேங்காய் எண்ணெய் உபயோகிக்க வேண் டும்.

— புவனேஸ்வரி சந்திரசேகர்.



வியந்து கொண்டே,
பிரமித்துக் கொண்டே...

இயற்கையா, செயற்கையா, தானமா?

திருமணத்திற்குப் பிறகு எல்லா குடும்பத்திலும் ஒரு குழந்தையாவது உருவாக வேண்டும் என்பது நமது நாட்டில் மிக மிக ஆழமாக வேரூன்றியுள்ள ஒரு கருத்து. குழந்தையில்லையென்றால் அந்தத் தம்பதி – குறிப்பாக பெண் படும்பாடு சொல்லி மாளாது. கூட்டுக் குடும்பமாக இருந்தால் கேட்கவே வேண்டாம். குடும்பத்தில் ஏற்படும் எல்லா நல்ல நிகழ்ச்சிகளிலுமே அவள் அறவே ஒதுக்கப்படுகிறாள். சொத்து பிரிக்கும் போது கூட.

"அவர்களுக்குப் பிள்ளையா குட்டியா? எதற்கு சமபாகம் கொடுக்க வேண்டும்?" என்ற காரசாரமான விவாதம் எழும். உண்மையில் பார்க்கப் போனால் குழந்தையில்லா தம்பதிக்குத் கடைசி காலத்தில் சாய்ந்து கொள்ள ஒரு குழந்தை துணை இல்லாததால் அவர்களுக்குத்தான் பணம் தேவை. கூலிக்காவது ஒரு தோள் கிடைக்கும்.



ஒரு பெண்ணின் தகப்பனார் தனது ஒரே வாரிசான பெண்ணிற்குத் திருமணமாகி ஐந்து வருடங்களாகி குழந்தை இல்லையென்றதும் அவர் தனக்கே மறுமணம் செய்து கொண்டு இன்னொரு வாரிசை பெற்று அதன் மூலம் பேரக் குழந்தை கிடைக்குமா? என்று என்னைக் கேட்டபோது நான் மூச்சடைத்துப் போனேன். அந்த மனிதரின் சிந்தனை எவ்வளவு தூரத்திற்குப் போய் விட்டது.

மேலைநாடுகளில் குழந்தை வேண்டி எல்லாவிதமான முயற்சிகளையும் எடுக்கத் தயாராக உள்ளனர். ஆனால் குடும்ப நிர்ப்பந்தம் கிடையாது. சமூகத்தின் ஏச்சு பேச்சுகள் அதிகம் கிடையாது.

குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் என்பது எவ்வளவுக்கெவ்வளவு உண்மையோ, அதே அளவு உண்மை, மனித இன ஆராய்ச்சிகளின் தொடக்கம், விலங்கின ஆராய்ச்சிகளின் வெற்றியின் முடிவு.

எந்தவொரு மருந்தையும் மனிதனுக்குக் கொடுக்குமுன், எலி, முயல் போன்றவைகளுக்குக் கொடுத்து ஆராய்ச்சி செய்யப்படுகிறது. 1969-ம் ஆண்டு சோதனைக் குழாய் முறையில் வெற்றிகரமாக எலி, பூனை, முயல் உருவாக்கப்பட்டன.

இதன் பிறகு பல எதிர்ப்புகளுக்குப் பின், சோதனைகளுக்கு இடையில் 1978-ல் முதல் பெண் குழந்தை லூயிஸ் பிரவுன் சோதனைக் குழாய் மூலம் தோன்றினாள். 15- ஆண்டு உழைப்பு 300 தோல்விகளுக்குப் பிறகு கிடைத்த பெரிய வெற்றிதான் இந்தக் குழந்தை. இந்த வெற்றிக்குப் பிறகே செயற்கையில் எதையும் சாதிக்கலாம், குழந்தையில்லா தம்பதிக்கு மருத்துவ உதவியுடன் குழந்தை கிடைக்கும் என்ற நம்பிக்கை தோன்றியது.

இந்த நம்பிக்கை நட்சத்திரம் உருவான உடனேயே மற்றுமொரு சலசலப்பும் கிளம்பியது. சோதனைக் குழாயில் உருவாகும் குழந்தை என்னுடையதுதானா, மாற்றப்பட்டு இருக்குமா? என்று பலப்பல சந்தேகங்கள் உருவாயின. மருத்துவர்கள் விளக்கங்கள் கொடுத்தனர். மரபணு பரிசோதனை (Genes) வெகு வேகமாக முன்னேறியது. சோதனைக் குழாயின் குழந்தைகள் எண்ணிக்கையும் அதிகரித்தது.

டாக்டர். ஜெயம் கண்ணன்

நமது நாட்டிலோ இப்படியொரு சந்தேகமேபடாமல், சோதனைக் குழாய் என்றாலே நிச்சயமாக எப்படி எப்படியோ உருவாக்கப்பட்ட குழந்தைதான் என்று மக்கள் அடித்துக் கூறினார்கள். இன்றும் சொல்லு கிறார்கள். ஒருசிலரைத் தவிர மற்றபடி யாரும் சோதனைக் குழாயில் அடைந்த வெற்றியை சாதனைக் குழந்தையாக தனக்குள்ளே ஏற்றுக் கொண்டாலும் மற்றவரிடம் சொல்ல விரும்புவதில்லை. இந்த முறையில் குழந்தை பெற்றதை வெளியில் சொன்னால் கேவலம் என்று கூட சிலர் நினைக்கிறார்கள்.

மருத்துவமனைக்கு வரும் தம்பதியரிடம் சோதனைக் குழாய் முறை என்று சொன்ன வுடன் 95% "அப்படியெல்லாம் வேண்டாம் வீட்டில் தவறாகச் சொல்லுகிறார்கள்" என்று மறுத்து விடுகின்றனர். விளக்கமாகக் கூறிய பிறகுதான் இயற்கைக்கு உதவுவதுதான் செயற்கை முறை. (Assisted Reproduction) தானம் வேறு என்று புரிந்து கொள்ளு கிறார்கள் நிறைய பெண்கள்.

"இதைப் பற்றி விளக்கமாக புத்தகத்தில் எழுதுங்கள் டாக்டர். அப்போதாவது எனது மாமியார் மாமனார் புரிந்து கொள்வார்கள், எப்படிச் சொன்னாலும் டெஸ்ட் டியூப் முறை வேண்டாம் என்று சொல்கிறார்கள்" என்று வருத்தப்படுகிறார்கள்.

இயற்கையோடு ஒன்றிய கணவன் மனைவி உறவு வழியில் வரும் செயற்கை முறை மருத்துவ உதவிகளை நமது மக்கள் ஏற்றுக் கொள்ளத் தயார்தான். உறவல்லாத வேறு ஒருவருடையதை, தானத்தைதான் விரும்ப வில்லை என்பது தெளிவாகிறது.

ஒற்றுமைக்கு உதாரணமாக காக்கை கூட்டத்தை சுட்டிக்காட்டுகிறோம். இதே காக்கையை உதாரணமாக்கியுள்ள திருமூலரது அழகான பாடல் என் நினைவில் எப்போதும் நிற்கிறது.

"குயிற்குஞ்சு முட்டையை காக்கைக் கூட்டிட்டால்

அயிர்ப்பின்றி காக்கை வளர்க்கின்றது போல"

காகம் தனது இனமில்லாத வேறு இனத்து முட்டையையே, ஐயப்பாடு எதுவும் இன்றி ஏற்று குஞ்சு பொரிய உதவுகிறது. ஆனால் மனிதனோ தனது இனத்தையே ஏற்றுக் கொள்ள மறுக்கிறான்.

இந்தப் பாடலின் தொடர்ச்சியாக, குயிற் குஞ்சு முட்டையை காக்கை வளர்ப்பது போல, குழந்தை வேண்டும் என்றால், ஏன் எப்படி என்று கேட்காமல், வேறு வழியில் லையே, முறைகளில்லையே என்று எண்ணா மல் எனக்குக் குழந்தை வேண்டும் என்ற எண்ணத்தில் (மயக்கத்தில்) விடாப்பிடியாக நின்றால் குழந்தை கிடைக்கும் என்று கூறுகிறார்.

"இயக்கில்லை போக்கில்லையே ஏன்

ஹைதராபாத்தில் நம் காஞ்சி மடத்தைச் சார்ந்த கோயில் ஒன்று உள்ளது. "ஸ்கந்தகிரி" என்று பெயர். அங்கு அர்ச்சனைத் தட்டிலோ, தீபாராதனைத் தட்டிலோ நாணயங்கள் மற்றும் ரூபாய் நோட்டுகள் போட்டோமானால், அர்ச்சகர்கள் நம் எதிரிலேயே உண்டியலில் தட்டினைக் கவிழ்த்து ரூபாய்களை போட்டு விடுகிறார்கள். ஹைதராபாத்தில் எல்லோரும் பெருமையாக பேசும் விஷயம் இது.

நாக்பூரில் நம் காஞ்சி மடத்தைச் சார்ந்த "சர்வேஸ்வரா தேவாலயம்" என்றொரு கோவில் உள்ளது. ஒவ்வொரு மாதமும் காஞ்சிப் பெரியவரின் நட்சத்திரத் தன்று, அனாதை ஆசிரமம் ஒன்றிற்கு கோவிலிலிருந்து காலை உணவு எடுத்துச் செல்லப்பட்டு பரிமாறப்படுகிறது. ஆசிரமத்திலுள்ள, தாய்ப்பால் குடிக்கும் வயதிலுள்ள சிறு குழந்தைகளுக்கு பால் பௌடரும் தரப்படுகிறது. இந்தச் செயலை பாராட்டாதவர்களே இல்லை எனலாம்.


வெளி மாநிலத்தில் வசிக்கும் போது அம்மாநில மக்கள் நம்மைப் பற்றி உயர்வாக பேசும்போது ஏற்படும் மகிழ்ச்சியே தனிதான்.

- பத்மாவதி முத்துக்குமார், நாக்பூர்.



விருந்தினர்க்கு அப்பளம் பொரிக்கும் பொழுது டைமன், சிறு வட்டம், முக்கோணம் வடிவில், அறுகோணம் வடிவில், ரிப்பன் பக்கோடா போன்ற விதவிதமான வடிவங்களில் வெட்டிப் பொரித்து ஒரு கூடையில் வைத்து டைனிங் டேபிளில் வைக்கலாம்.

- பாலா



என்பதில்லை

மயக்கத்தால் காக்கை வளர்க்கின்ற வாறே"

தீர்க்கதரிசியாக செயற்கை முறை, தான முறைகள் பிற்காலத்தில் வரப் போவதை நன்கு உணர்ந்து அவற்றை ஏற்பதில் தவறில்லை என்றும் உணர்த்தியுள்ளார். தற்காலத்தில் நமக்கு ஆராய்ச்சிபூர்வமாகக் கிடைத்துள்ள மருத்துவ உதவியுடன் கூடிய முறைகள் என்ன? தான முறைகள் என்ன என்பதனை சற்றே விளக்கமாக பார்ப்போமா?

மருத்துவ உதவியுடன் கூடிய முறைகள் :

1. ஹார்மோன் முறையில் ஊக்குவித்தல் சினைக்குழாய் அடைப்பு நீக்குதல்

2. விந்தணு செலுத்துதல் (I.U.I.) (S.I.F.T.)

3. மருத்துவ உதவியுடன் உண்டாக்கிய சினைக்கரு ஏற்றல்

(Assisted Reproduction)

a. கிப்ட் (GIFT)

b. ஐ.வி.எப். (IVFET)

c. இக்ஸி (ICSI)

ஹார்மோன் முறையில் ஊக்குவித்தல்

இந்த முறையில் (a) கருவணு (பெண் முட்டை) உருவாகாத (b) கருவணு சரியான திறன் படைத்ததாக இல்லாத பெண்களுக்கு அவர்கட்குத் தேவையான ஹார்மோன் மருந்துகளைக் கொடுத்து அளவான, வலுவான கருவணுவை உருவாக்குவதன் மூலம் கருத்தரிக்க முடியும்.

இதற்கு உபயோகிக்கப்படும் மருந்துகள்

1. CLOMIPHENE - க்ளோமிபின் மாத்திரை
2. F.S.H. - எப்.எஸ்.எச். - ஊசி
3. H.M.G. - எச்.எம்.ஜி. - ஊசி
4. H.C.G. - எச்.சி.ஜி. - ஊசி
5. G.N.R.H ஜீ.என்.ஆர்.எச். - ஊசி

இந்த மாத்திரை மருந்துகளை மாத விடாய் தொடங்கும் முன் ஆரம்பித்து மாத விடாய்க்குப் பிறகு 9-15 நாட்கள் வரை கொடுக்கப்படும். சரியான கருமுட்டை உருவாகிறதை ஸ்கேன் மற்றும் இரத்தப் பரிசோதனை மூலம் தெளிவாக தெரிந்த பிறகு கருதரிக்கும் நேரத்தை கணக்கிட்டு தம்பதி யருக்கு ஆலோசனை கூறப்படுகிறது. சரியான நேரத்தில், உடலுறவு கொள்வதால் கர்ப்பம் தரிக்க முடிகிறது. இந்த முறையில் கருவணுவே உருவாகாத பெண்களுக்கு ஆறு மாத சிகிச்சையில் 80% கருவணு உருவாக வாய்ப்பு ஏற்படுகிறது. 40% பெண்கள் கருதரிக்கிறார்கள். பொறுமையுடன் சிகிச்சை செய்தால் இந்த முறை நிச்சயம் வெற்றி தருகிறது. ஒரு மாதம் அல்லது இரண்டு மாதமே சிகிச்சை செய்தால் 10% மட்டுமே வெற்றி கிடைக்கும்.

சில சமயம் மருத்துவரைக் கேட்காமல், தொடர்ந்து தானே இந்த மருந்துகளை எடுக்கலாமே. முதல் முறை மட்டுமே ஆலோசனை பெற்றால் போதும் என்று சிலர் எண்ணலாம். இந்த ஹார்மோன் மருந்துகள் எல்லா மாதமும் ஒரே மாதிரியான பலனைக் கொடுக்காது. சில மாதங்களில் அதிக கருவணுக்கள் வளரலாம். இதனால் ஒன்றுக்கு மேற்பட்ட கர்ப்பம், ஏன் எட்டு குழந்தை வரை கூட உருவாகலாம்.

வேறு சிலருக்கு மிக அதிக கருமுட்டைகள் உருவாகி வயிறு வலி, வயிறு வீக்கம் ஏற்படலாம். இதனால் தகுந்த சிறப்பு மருத்துவரின் உதவியில்லாது இந்த ஹார்மோன்களை உபயோகிக்கக் கூடாது.

(தொடரும்)


சுற்றுலாவுக்கு இன்ஷூரன்ஸ்!

சுற்றுலாக்களை மகிழ்ச்சியுடன் கழிக்கும் அதே நேரத்தில், சில எதிர்பாராத சங்கடங்கள், விபத்துக்கள் மற்றும் இழப்புகள் வரக்கூடும். அத்தகைய நேரங்களில் நம்முடைய வருத்தங்களுக்குக் கைக்கொடுப்பவை காப்பீடுகள் (இன்ஷூரன்ஸ்). இவ்வகையில், 'யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ்' நிறுவனத்தார் பல பயணக் காப்பீடுகளை வழங்கி வருகிறார்கள். ஏராளமானோர் சுற்றுலா செல்லும் இந்த நேரத்தில் நம் மக்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பதால் இந்தத் தகவல்கள்.









வெளிநாடு செல்பவர்க்கு -

இது வெளிநாடுகளுக்குப் பயணிப்போருக்கு மட்டுமேயான பிரத்யேகக் காப்பீடு. விதேஷ் யாத்ரா மித்ரா என்பது - விபத்துக்கள், மருத்துவச் செலவு, இழப்புகள் என்பவற்றோடு உடைமைகள் தொலைந்து போதல், பாஸ்போர்ட் தொலைந்து போதல் என்ற பல சங்கடங்களின்போதும் இக் காப்பீடு உதவுகிறது.

உடல்நலமின்மை, நோய், விபத்துகள் ஆகியவற்றிலிருந்து உயிரைக் காப்பாற்றவோ, உடனடியாக வலியிலிருந்து விடுபடவோ ஆகும் மருத்துவச் செலவு,

உயிரிழப்பு, பார்வை இரும்பப் பெற முடியாத அளவிலான கண் இழப்பு, கை, கால் ஆகிய உறுப்புக்களின் இழப்பு போன்ற விபத்துச் செலவுகள்,

கைக்கடிகாரம், மூக்குக் கண்ணாடி என்று தொடங்கி வீடியோ, கம்ப்யூட்டர், நகைகள், பைகள் என்று இவை தொலைந்து போகும். ஏற்கெனவே சரிபார்த்து எடுக்கப்பட்ட பொருள்களின் இழப்புச் செலவு, (Checked in baggage)

பாஸ்போர்ட்கள் தொலைந்து போகும் சந்தர்ப்பங்களில், மாற்று பாஸ்போர்ட் அல்லது புதிய பாஸ்போர்ட் கிடைப்பதற்கு ஆகும் செலவு -

என்று இப்படி இந்தக் காப்பீட்டின் மூலம் ஏராளமான உதவிகள் கிடைக்கின்றன.



உள்நாட்டு சுற்றுலாதாரர்க்கு -

இது உள்நாட்டுப் பயணங்களுக்கான மார்கபந்து பாலிசி உள்ளது. ரயில், பேருந்து, படகுகளில் சுற்றுலாக்கள் செல்லும் போது பலவித இடையூறுகளும் தொல்லைகளும் ஏற்படும். விபத்துக்களால் காயம், மரணம், பொருளிழப்பு இவற்றால் அதிகப்படியான செலவு - என்றிவற்றை ஈடுசெய்யும் வழிவகையே மார்கபந்து.

பயணங்களின் போது ஏற்படும் விபத்துகளால் உயிரிழப்பு, காயங்கள் - காயங்களால் ஏற்படும் மருத்துவச் செலவு, உடன் எடுத்துச் செல்லும் கைப் பொருள்களின் இழப்பு அல்லது நல்ல தன்மை இழந்து போதல் (டேமேஜ்), பயணிக்கும் வண்டியின் விபத்தால் ஆகும் அதிகப்படியான செலவு ஆகியவற்றையும் இந்த விசேஷ காப்பீடுகள் தரும். தவிரவும், அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் இழப்புக்களுக்கும் நிறைய இன்ஷூரன்ஸ் பாலிசி வைத்து இருக்கிறார்கள். விவரங்களுக்கு யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸில் கேட்டுப் பாருங்கள்.

தொகுப்பு :

மு. சுப்புலட்சுமி



சில புதுவிதமான சுவை வகை



பனீர் புலாவ்

மெல்லிய வகையான பச்சரிசி அல்லது பாஸ்மதி அரிசி - 200 கிராம்
பனீர் - 150 கிராம்
பெரிய வெங்காயம் - 1
உப்பு - தேவைக்கேற்ப
மசாலா - சீரகம் ஒரு ஸ்பூன், கிராம்பு 5, பட்டை 1 துண்டு
நெய் - 2 டேபிள் ஸ்பூன்
பச்சை மிளகாய் - 5
பச்சைக் கொத்தமல்லி - 1 பிடி
பிரிஞ்சி இலை - 1

தயாரிக்கும் முறை :

அரிசியைக் கழுவி தண்ணீரில் 15 நிமிடம் ஊறவைக்கவும். நெய்யில் வெங்காயத்தை மெல்லியதாக அரிந்து போட்டு சிவக்க வறுக்கவும். பிரிஞ்சி இலை, சீரகம், பட்டை, கிராம்பு, பனீர் எல்லாம் போட்டு மணம் வரும் வரை வறுத்து அரிசியை வடித்துப் போட்டு அதையும் வறுத்து விட்டு சூடான நீரை (சூடான நீர் அரிசியின் அளவைவிட இரு மடங்கு) ஊற்றவும். எல்லாம் சேர்ந்து வெந்து நீர் வற்றியவுடன் 5 நிமிடம் மூடிவைத்து விட்டுப் பிறகு பரிமாறவும்.

முளை தானிய கஸ்டர்ட்

முளை வந்த கோதுமை - 1 கிண்ணம்
முந்திரிப் பருப்பு - 10
திராட்சை - 10
பாதாம் பருப்பு - 5
தேங்காய்த் துருவல் - 1 கிண்ணம்
பசும்பால் - 1 கிண்ணம்
வாழைப் பழம் - 1
திராட்சை - 10
மாதுளம் பழ முத்துகள் - 1 கிண்ணம்
ஏலக்காய் தூள் - ½ ஸ்பூன்
ருசிக்கேற்ற சர்க்கரை

தயாரிக்கும் முறை :


முளை வந்த கோதுமையை குக்கரில் வேக வைத்து எடுக்கவும். குக்கரில் வெய்ட் வைத்து 6 விசில் வரும் வரை வேக வைக்கவும். வாணலியில் தண்ணீருடன் சேர்ந்த கோதுமையைப் போட்டுச் சூடாக்கவும். இத்துடன் பசும்பால், திராட்சை, முந்திரிப் பருப்பு, துருவிய பேரிச்சம்பழம், சேர்த்துக் கிளறவும். தேங்காய்ப் பாலை ஊற்றி சர்க்கரை, ஏலக்காய் தூளைத் தூவி கிளறி இறக்கவும். வாழைப்பழத்தை வட்டமான வில்லைகளாக நறுக்கி அதன் மீது அலங்காரமாக வைத்துக் குளிர வைத்துப் பரிமாறவும். இதை கர்ப்பிணிகள், பிரசவித்த பெண்கள், வளரும் குழந்தைகள் இவர்களுக்கு அடிக்கடி தயாரித்துக் கொடுத்தால், ஊட்டமும், சத்தும், வயிறு நிறைந்துமிருக்கும்.

புளிப்புத் திராட்சை பூரி

கார்ன் ஃப்ளேக்ஸ் - ½ கிலோ
பெரிய ரவை - ¼ கிலோ
புளிப்புத் திராட்சை - 50 கிராம்
சிறிது பெருங்காயம்
மிளகு - 10 (தூள் செய்தது)
உப்பு - தேவைக்கேற்ப
பொறிக்கத் தேவையான எண்ணெய்

தயாரிக்கும் முறை :

திராட்சையின் விதைகளை நீக்கி விட்டு



அரைத்து, கார்ன் ஃப்ளேக்ஸை கலந்து வைக்கவும். ½ மணி நேரம் கழித்து இத்துடன் ரவை, எண்ணெய் போட்டு மற்ற சாமான்களைப் போட்டு உப்பு சேர்த்து அழுத்திப் பிசையவும். இந்த மாவில் சிறு பூரிகள் தயாரித்து எண்ணெயில்விட்டு பொரித்துப் பரிமாறவும். ஏதாவதொரு சட்னி, சாஸ் சேர்த்துப் பரிமாறலாம்.

பப்பாளி லட்டு

பழுக்காத பப்பாளி - ½ கிலோ (துறுவலாக)
சர்க்கரை - 400 கிராம்
பால் - ½ லிட்டர்.
பால் கோவா - 200 கிராம் (துறுவல்)
ஏலக்காய் - ½ ஸ்பூன்
தேங்காய்த் துறுவல் - 2½ ஸ்பூன்
பொறித்த முந்திரி, திராட்சை - சிறிது

தயாரிக்கும் முறை :

வாணலியில் பாலூற்றி கொதிக்க வைக்கவும். பப்பாளித் துறுவலை கொதிக்கும் பாலில் போட்டு பால் சிவந்து வற்றிப் பாதியாக குறுகியதும் பால் கோவாவைத் துறுவிப் போடவும். சர்க்கரை, ஏலக்காய் தூள் சேர்த்துக் கிளறவும். எல்லாம் சேர்ந்து கெட்டியாகும் தருணத்தில் முந்திரி, திராட்சை, சேர்த்துக் கிளறி இறக்கவும். கைகளில் நெய் தடவிக் கொண்டு உருண்டையாக உருட்டி வைக்கவும். ஒரு அகன்ற தட்டில் தேங்காய்த் துறுவலை உதிர்க்கவும். அதில் பப்பாளி லட்டுகளை போட்டு மெதுவாக உருட்டவும். தேங்காய்த் துறுவலை நன்றாக லட்டுகள் பிடித்துக் கொள்ளும். இப்பொழுது சாப்பிடத் தயார்.

மக்காச் சோளப் பால் பாயசம்

பால் - 1 லிட்டர்
இளசான உதிர்த்த மக்காச் சோளம - 200 கிராம்
சர்க்கரை - 250 கிராம்
நெய் - 1 டேபிள் ஸ்பூன்
பால் பௌடர் - 3 ஸ்பூன்
ஏலக்காய் - ½ ஸ்பூன்

தயாரிக்கும் முறை :

மக்காச் சோள முத்துக்களை 10 மணி நேரம் நீரில் ஊறவைக்கவும். கனமான பாத்திரத்தில் நெய் போட்டு ஊறின சோள முத்துகளைப் போட்டு வறுக்கவும். இத்துடன் பால் சேர்க்கவும். மிருதுவாகும் வரை வேக வைக்கவும். மிருதுவான பின் சர்க்கரை, ஏலப்பொடி சேர்த்து மீண்டும் வேக வைக்கவும். பால் சிவந்து கண்டி கெட்டியாகியிருக்கும். இப்போது இறக்கி பால் பௌடரை கெட்டியாகக் குழைத்து சேர்த்து மூடி வைக்கவும். 5 நிமிடம் கழித்துப் பரிமாறவும்.

அரிசி மாவு உருண்டை

பச்சரிசி - ½ கிலோ
சர்க்கரை - ¼ கிலோ
வெல்லம் - ¼ கிலோ
முந்திரிப் பருப்பு - 10
திராட்சை - 10
நெய் - 1 கரண்டி
கொப்பரைத் துறுவல் - 1 கரண்டி
தண்ணீர் - 2 கரண்டி


தயாரிக்கும் முறை :

அரிசியைக் கழுவி சிவக்க வறுக்கவும். மெல்லிய மாவாக தூளாக்கவும். முந்திரிப் பருப்பு, கொப்பரை, திராட்சையை நெய்யில் பொறித்துத் தண்ணீர் ஊற்றவும். வெல்லம், சர்க்கரையைப் போட்டு பாகு வைக்கவும். கெட்டிப்பாகு ஆகும் போது அரிசி மாவைத் தூவி கிளறி இறக்கவும். கையில் நெய் தடவிக் கொண்டு உருண்டைகளாக்கவும். தேங்காய் அரிசி இரண்டின் மணமும் கூடியுள்ளதால் வாசனைச் சாமான் எதுவும் தேவையில்லை.

— பிரேமா ராவ்

வெளியே கிளம்பும் முன் காஸ், கரண்ட், மற்றவற்றை கவனிப்பவர்கள் ஏனோ, ஃபோனை கவனிப்பதில்லை! வெளியே கிளம்பும் முன் ஃபோன் வால்யூமை குறைத்து விட்டுச் சென்றால், பலமுறை தொடர்ந்து அலறி, நாம் வீட்டில் இல்லாததை திருடர்களுக்கோ (அ) மற்றவர்களுக்கோ காட்டிக் கொடுக்காமல் இருக்கும்!

— ஜெயா





ஸ்ரீ சத்யநாராயண வழிபடும் முறைகளும் ஸ்லோகங்களும்

ஸ்ரீ சத்யநாராயண பூஜை செய்வது பற்றி விளக்குகிறார் ஸ்வாமி அபயானந்தஜிதாஸ். (கையடக்கப் பதிப்பு)

பக்.128 விலை ரூ. 10.00

உங்கள் இஷ்ட தெய்வங்களுக்குரிய தினசரி தியான மந்திரங்கள்

தொகுப்பு : அபயானந்தஜி தாஸ். (கையடக்கப் பதிப்பு)

பக். 80 விலை ரூ. 8.00

(இரண்டும் – இலக்குமி நிலையம், 53, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை – 600 014.)

AIDS AND MEN

எய்ட்ஸ் நோயைப் பற்றித் தெரிந்து கொள்ளவும் பல்வேறு நாடுகளில் அதன் கொடுமையைப் பற்றியும் எழுதியுள்ளவர் மார்டின் போர்மென். இது ஒரு லண்டன் வெளியீட்டாளரான 'பானோஸ்' நிறுவன வெளியீடு.

ஏக்கம்

இன்றைய பெண்ணின் பல்வேறு வாழ்க்கை நிலைகளில் ஏற்படும் போராட்டங்களை மையமாக்கிய சிறுகதைத் தொகுப்பு. வரதட்சணை, ஜாதி, பிராந்திய வேறுபாடுகள் இவற்றால் பெண்கள் படும் அவதிகளைத் தந்துள்ளவர் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்.

பக். 172 விலை ரூ. 32.00

உஷ்... கவனம் தேவை!

வீடு வாங்கப் போகும் போது, லோன், வங்கி போன்ற இடங்களில் நாம் எப்படியெல்லாம் கவனமாக இருக்க வேண்டும் என்று விளக்குபவர் எஸ். ஜெகன்னாதன்.

பக். 128 விலை ரூ. 24.00

(இரண்டும் – மணிமேகலைப் பிரசுரம், த. பெ. எண் 1447, தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை – 600 017.)

பயன் தரும் பதிகங்கள்

நாயன்மார்கள் இயற்றிய பதிகங்களில் இருந்து நினைத்ததை நடத்தும் சில பதிகங்களைத் தொகுத்துள்ளார் அ. முத்துக் குமாரசாமி.

பக். 80 விலை ரூ. 15.00

கிரஹதோஷ நிவர்த்திப் பாமாலை

பாராயணம் செய்ய, நவகிரகதோஷம் நீங்க பாமாலையைத் தொகுத்துத் தந்துள்ளவர் சோ. பாலசுப்பிரமணியன்.

பக். 52 விலை ரூ. 20.00

(இரண்டும் – குமரிப் பதிப்பகம், 8, நீலா தெற்கு வீதி, நாகப்பட்டினம் – 611 001.)

சாஸ்த்திரப்படி வீடு கட்டுங்கள்

மனையடி சாஸ்திரம் பற்றி விளக்குபவர் இரத்தின சண்முகனார்.

பக். 144 விலை ரூ. 35.00

ஆழ்நிலைத் தியானம்


தியானம் செய்வதால் எவ்வளவு நன்மைகள் இருக்கின்றன என விளக்குபவர் இரத்தின சண்முகனார்.

பக். 144 விலை ரூ. 30.00

(இரண்டும் – அன்பு இல்லம், கே.கே.பி. காம்ப்ளக்ஸ், 107/2 கௌடியாமடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை – 600 014.)

புனித தவம்

பள்ளியாசிரியர்கள் எத்தனை உயர்ந்தவர்கள், அவர்களுடைய பணி எத்தனை தெய்வீகமானது என்பதை நாவலாகத் தருபவர் ரா. பொன்ராசன்.



இனிய இல்லறம்

தம்பதியரிடையே இணக்கமான உறவு இருக்க வாழ்வில் வகுத்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலைகளைக் கூறுகிறார் டாக்டர். மாத்ருபூதம்.

பக். 160 விலை ரூ. 35.00

(இரண்டும் – கற்பகம் புத்தகாலயம், 18, ராஜாபாதர் தெரு, பாண்டி பஜார், தி. நகர்,

சென்னை - 600 017.)

குடும்ப நலம் காக்கும் அனுபவ ஆயுர்வேத வைத்தியம்

நிறைய மருத்துவக் குறிப்புகளைத் தருபவர் கே. எஸ். பதஞ்சலி ஐயர்.

பக். 112 விலை ரூ. 23.00

(நர்மதா பதிப்பகம், 16/7, ராஜாபாதர் தெரு, பாண்டிபஜார். தி. நகர், சென்னை - 600 017.)

12 ராசிகளுக்கு அதிர்ஷ்ட யோக யந்திரங்கள்

யந்திரங்களுடன் துதிக்க வேண்டிய மந்திரங்களையும் ஸ்வாமி முருகானந்தா தந்திருக்கிறார்.

பக். 192 விலை ரூ. 35.00

மாந்திரீக வசிய சக்கரம்

நினைத்த காரியம் நடக்க, கணவன் மனைவி அன்புடன் இருக்க என நிறைய மந்திரங்களையும் பூஜிக்கும் முறைகளையும் கூறுபவர் ரிஷிகேஷன்.

பக். 144 விலை ரூ. 27.00

(இரண்டும் - மயிலவன் பதிப்பகம், 18, தெற்கு பெருமாள் கோவில் முதல் தெரு, வடபழனி, சென்னை - 600 026.)

சிவகீதை

சிவபெருமானால் இராமனுக்கு உபதேசிக்கப்பட்டது. ஆன்மீக அன்பர்கள் அறிந்து கொள்ள நிறைய செய்திகள் உள்ளன. தொகுப்பு - சிவஸ்ரீ. அ. சொர்ண சுந்தரேசன், சிவஸ்ரீ சொ. சந்திரசேகர குருக்கள்.

பக். 124 விலை ரூ. 20.00

டயானா

உலக மக்கள் அனைவரையும் கவர்ந்த டயானாவின் வாழ்க்கைச் சித்திரம். ஆசிரியர் ரா. கி. ரங்கராஜன்.

பக். 90 விலை ரூ. 18.00

(இரண்டும் - திருவரசு புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 600 017.)

கண்கொள்ளாக் காட்சிகள்

அமரர் பேராசிரியர் கல்கி அவர்களின் கட்டுரைகளின் தொகுப்பு. அவர் காலத்திய பல அரசியல், சமூக நிகழ்வுகளைச் சுவையாக பதிவுசெய்துள்ளார் ஆசிரியர்.

பக். 193 விலை ரூ. 50.00

எழுத்துலகில் அமரதாரா

பேராசிரியர் கல்கி அவர்களைப் பற்றியும் அவருடைய இலக்கியப் படைப்புகள் பற்றியும் அவருடைய நண்பர்கள் அறிஞர்களின் மதிப்பீடுகளின் தொகுப்பு. தொகுத்தவர் சுப்ர.பாலன்.

பக்.356 விலை ரூ. 75.00

(இரண்டும் - வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 600 017.)

இரவுப் பறவை

எழுத்தாளர்கள் சுபா எழுதியுள்ள துப்பறியும் நாவல், அதற்கான அத்தனை லட்சணங்களுடனும். மற்றும் ஒரு குறுநாவல்.

பக். 196 விலை ரூ. 35.00

டிசம்பர் பௌர்ணமி

காதலர்கள் பல போராட்டங்களுக்குப் பின் கைப்பிடிக்கும் கதை. ஆசிரியர் - ராஜேஷ்குமார்.

பக். 200 விலை ரூ. 40.00

(இரண்டும் - தமிழ்மன் நிலையம், 20, முத்து முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை - 600 014.)

தேவார, திருவாசகத் திரட்டு

தெய்வீகப் பாடல்களான தேவாரம், திருவாசகத்திலிருந்து சில பாடல்களை மட்டும் பொழிப்புரையுடன் தந்திருப்பவர் சுவாமி அவினாசானந்தர்.

பக். 236 விலை ரூ. 40.00

சுவாமி விஞ்ஞானானந்தர்

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நேரடிச் சீடரான ஸ்வாமி விஞ்ஞானானந்தரின் அன்புமயமான ஆன்மீக வாழ்வியல் விவரிக்கப்பட்டுள்ளது.

பக். 172 விலை ரூ. 30.00

(இரண்டும் - ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை - 600 004.)



பூஜை அறையில் விளக்குகளுக்கு விடும் எண்ணெயுடன் சிறிது ஆமணக்கெண்ணெய் கலந்து வைத்துக் கொண்டு விட்டால், அதிக நேரம் நின்று நிதானமாக எரியும்.

— எஸ். பட்டம்மா



இறைவனின் படைப்பில் மனித இனம் மட்டுமே தன் மூளையின் திறனை உபயோகித்து கற்பனை, சிந்தனை, அறிவு, தெளிவு, அமைதி, நிதானம், செயல்திறன் என மேன்மை பெற்றுள்ளது.

அந்த மனித பிறவியிலும் ஒரு சிலர் அறிவால் சிறந்தும் மற்றவர்கள் சாதாரண நிலையிலும் இருப்பது ஏன்?

உடற்சக்தி என்பது அனைவருக்கும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. தினசரி உடற்பயிற்சி செய்பவர் நல்ல திடகாத்திரமான உடலையும், நீண்ட ஆயுளையும், உற்சாகத்தையும் பெறுகிறார். உடற்பயிற்சி செய்யாதவர்கள் உடல் சராசரி நிலை சக்தியை மட்டுமே பெற்றிருக்கும்.

சர்க்கஸ் நடைபெறும் இடங்களில் பார்த்திருப்பீர்கள். சின்னஞ்சிறு பிஞ்சு குழந்தைகள்கூட கயிற்று மீது நடக்கவும், உடலை வளைத்து வித்தைகள் காட்டவும் செய்வார்கள். அவ்வாறு பழக்கப் படாதவர்களால் செய்ய முடியாது.

இடுப்பில் ஒரு குடமும் தலையில் ஒன்றும் என்று அனைவராலும் தூக்க முடியாது.

குதிரை சவாரி செய்து பழகியவர்களுக்கு குதிரையை இறுக்கிப் பிடித்துக் கொள்ள தொடையில் எலும்புகளே புதிதாக முளைக்கின்றனவாம்.



5 வயதில் ஷேக்ஸ்பியர் படிக்கும் குழந்தை!

உடலுக்கு இது சாத்தியம் என்றால் மூளைக்கும் இது சாத்தியமே.

குழந்தை பிறந்த மூன்றாம் மாதம் முதல் மூளைக்கு அளிக்கப்படும் பயிற்சியால் குழந்தை மேதைத் தன்மையை பெற முடியும்.

இறைவனின் படைப்பில் அனைவருமே சமம் என்பது எவ்வளவு உண்மையோ அப்படியே பயிற்சி அளிக்கப் பட்டால் எந்தக் குழந்தையும் மேதையாகலாம்.

குழந்தைகள் பிறந்த மூன்றாம் மாதம் முதலே கற்றுக் கொள்ள விரும்புகின்றனர். 5 வயது வரையில்தான் இந்த ஆர்வம் இருக்கிறது. நாம் சொல்லிக் கொடுத்தாலும், இல்லாவிட்டாலும் எதையாவது குழந்தைகள் கற்றுக் கொண்டேயிருக்கின்றனர். எதை வேண்டுமானாலும் கற்றுக் கொண்டு அறிவுத் திறனை சிதற விடுவதைவிட ஒரு நிலைப்பட்ட பயிற்சி குழந்தையை ஐந்து வயதிற்குள் மேதையாக்க வழி வகுக்கும்.



விஞ்ஞான பூர்வமாக மூளையின் வளர்ச்சியைப் பற்றி தெரிந்து கொண்டாலும் இப் பயிற்சி எவ்வளவு அவசியம் என புரிந்து

கொள்ளலாம். 60 சென்டிமீட்டர் நீளம் வளரக் கூடிய மனித மூளை குழந்தை பிறந்தது முதல் 5 வயதிற்குள் 50 சென்டிமீட்டரும் 6 வயதி லிருந்து 20 வயதுவரை 10 சென்டிமீட்டரும் வளருகிறது. அதன் பிறகு செல்கள் ஒவ்வொரு நாளும் அழிய ஆரம்பிக்கிறது. அதனால்தான் வயது ஆக, ஆக மறதி கூடுகிறது. 20 வயதிற்கு மேல் ஒரு செல்லுக்கும் மறு செல்லுக்கும் தொடர்பை ஏற்படுத்தி நினைவு படுத்திக் கூற முடிகிறது. (Recalling effect).

ஆனால் குழந்தைக்கு அளிக்கப்படும் பயிற்சியால் 3 மாதம் முதல் இந்த நினைவு படுத்திக் கொள்ளும் பயிற்சியை அளிக்கி றோம். அதாவது flash cards மூலமாக ஒன்றைப் பார்த்தவுடன் மின்னல் வேகத்தில் மூளையின் செல்லில் பதித்துக் கொண்டு (observation) பேசத் தெரிந்து கொண்டவுடன் (recalling) நினைவுபடுத்திக் கொண்டு அது என்ன என்று கூற முடிகிறது.

பிறந்த குழந்தையின் மூளை பதிவுகள் செய்யப்படாத புதிய கம்ப்யூட்டர் போன்று இருக்கிறது.

எனவே மூன்று மாதத்திலிருந்து, குழந்தை யின் தாயால் முறையான கல்விப் பயிற்சியை பிறந்த குழந்தைக்கு அளிக்கப்பட்டால் அக்குழந்தையின் மூளை கம்ப்யூட்டர் போன்ற திறன் படைத்ததாக மாறும். ஒரு ஒப்பீடுக்காகச் சொல்லப்படுகிறதே தவிர உண்மையில் மூளையின் திறனுக்கு முன் கம்ப்யூட்டர் ஒன்றுமேயில்லை. கம்ப்யூட்டரைப் படைத் ததே மனித மூளைதானே!

இத் துறையில் பெரும் சாதனை படைத்து வரும் க்ளென் டோமன் என்கிற 70 வயது அமெரிக்கர் கூறுகின்றார். "அன்னைதான் குழந்தையின் முதல் ஆசிரியர்' என்று

The Institue for the achievement of human potential, (philadellphia, USA) என்கின்ற நிறுவனத்தை ஆரம்பித்து 40 வருடமாக நடத்தி பல மேதைகளை உருவாக்கி வரும் இவருடைய ஆராய்ச்சியின் முடிவான கருத்து என்ன தெரியுமா?

1) குழந்தைகள் உண்பதைவிட விளையாடு வதைவிட கற்றுக் கொள்வதில்தான் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

2) 5 வயதில் குழந்தைகள் பள்ளி இறுதிக் கல்வியை முடித்து விடக் கூடிய திறன் படைத்தவர்கள்.

3) 1½வயதில் வயலின் வாசிக்கும் திறன் பெற்றுள்ளனர்.

4) 4 வயதில் 26 மைல் மாரத்தான் ஓட்டம் ஓடுகிறார்கள்.

5) 6 மொழிகளில் புலமை பெற்றுள்ளனர்.

6) மூளை வளர்ச்சி குன்றியவர்கள் சாதாரண குழந்தையின் அறிவை பெற முடியும்.

7) மருத்துவர்கள் கைவிட்ட நிலையிலும் இப் பயிற்சியால் மூளை வளர்ச்சி குன்றிய குழந்தையின் அறிவை உயர்த்த முடியும்.

8) இப் பயிற்சியால் குழந்தைகள் பின்னாளில் மிகுந்த தன்னம்பிக்கையும், தைரி யமும் திறமையும், ஆர்வமும், முன்னேற்றமும் சுறுசுறுப்பும், நல்ல பழக்கங்களும் நிறைந்து காணப்படுகின்றனர்.

9) பலர் நோபல் பரிசு பெறும் மேதை களாக உருவாகியுள்ளனர்.

10) 10 வயது குழந்தைகள் இப்பள்ளியில் பெற்றோர்களுக்கான பயிற்சியை நடத்தி வருகின்றனர்.



சௌசௌவை காரட் துருவலில் துருவி தயிர் பச்சடி செய்தால், வெள்ளரிக்காய் பச்சடி போலவே இருக்கும். நாம் சொன்னால் தான் சௌசௌ பச்சடி என்று தெரியும்.

– ரா. திரிபுர சுந்தரி.

பயிற்சி யாருக்கு?

எப்போது பார்த்தாலும் அது என்ன? இது ஏன்? என்று எதையாவது நச்சரித்துக் கொண்டேயிருக்கிறான். திரும்பத் திரும்ப எதை சொல்லித் தருவது. இவன் கேள்வி களுக்கு பதில் சொல்லவே நேரம் சரியாக இருக்கிறது என்று சலித்துக் கொள்ளும் 2-2½ வயது வாண்டுகளின் தாய்மார்களுக்கும்,

கேட்டதைத் தரவில்லையென்றால், ஒரே முரட்டுத்தனம், எதையாவது போட்டு உடைத்து, வீசி எறிந்து அமர்க்களம். இந்தக் குழந்தையை எப்படிச் சமாளிப்பது என்றே புரியவில்லை என்பவர்களுக்கும்,

கல்வி என்பது வேதனை மிக்க திணிப்பாக

இருக்காமல் விளையாட்டு போல் இனிப்பதாக இருக்க வேண்டும் என்கிற புதுமை விரும்பிகளுக்கும் இப்பயிற்சி அவசியம்.

குழந்தைகளைப் பொருத்த அளவில் அவர்கள் அசையும் பொருட்களை மிகுந்த ஆர்வத்துடன் கவனிக்கின்றனர். அவர்களுடைய ஐம் புலனறிவும் அதாவது பார்வை, கேட்டல், முகர்தல் தொடு உணர்ச்சி, சுவை ஆகியவை மிகவும் விழிப்போடு ஆர்வம் காட்டும் நேரமிது. ஒரு பொம்மையைக் கொடுத்தால் 5 நிமிடத்தில் ஐம்புலனுக்கும் வேலை கொடுத்து முடித்து பொம்மையைப் பற்றிய முழு அறிவையும் தெரிந்து கொண்டு தூக்கி எறிந்து விடுவார்கள். நாம் மீண்டும் மீண்டும் அதே பொம்மையை கொடுப்போம், அவர்கள் புதிது புதிதாக கேட்பதை அறியாமல். குழந்தைகளின் ஆர்வத்திற்கு இந்தக் கல்வி நல்ல வடிகாலாக அமையும். மேலும் தியானம் செய்வதால் வரும் ஞானத்தைப் போன்று ஒரே ஏதுக்குப் பழக்கப்பட்டு ஒரு நிலைப்பட்ட னதுடன் விஷயங்களை தினமும் குறிப்பிட்ட நேரத்தில் பயில்வதால் மூளை திறன் பெறுகிறது.

இந்தப் பயிற்சியால் ஏற்படும் நன்மைகளை தெரிந்து கொண்ட உங்களுக்கு இனி பயிற்சி முறை பற்றி ஆர்வம் எழுகிறதல்லவா?

எதை, எப்போது, எப்படி சொல்லித் தருவது

என்னது? 3 மாத குழந்தைக்கு அதன் அம்மா பாடம் சொல்லித் தரும் பயிற்சியா? ஏன்? பிறந்த உடனே ஆரம்பிக்க சொன்னாலும் சொல்வார்கள் என்று கேலி பேசுபவர்களும் உண்டு.

ஏன் குழந்தை பிறந்த உடனே நாம் அதை ராஜா, கண்ணே, பசிக்கறதா கொஞ்சம் பொறு இதோ அம்மா வந்து விட்டேன் என்றெல்லாம் பேசுகிறோமே அதற்குப் புரியாது என்று தெரிந்துதானே பேசுகிறோம். குழந்தை வளர்ந்து திடீரென ஒருநாள் தாய்மொழியில் ஒரு வார்த்தை கூறி விட்டால் நாம் உச்சி குளிர்ந்து விடுகிறோமே எப்படி? விளையாட்டைப் போல் பேச கற்றுக் கொள்ளும் குழந்தை விளையாட்டைப் போல் படிக்க கற்றுக் கொள்வதில் தவறு ஏதேனும் உண்டா?! குழந்தை பிறந்தது முதல் அதனிடம் யாருமே பேசவில்லை. என்றால் பேச்சுக் குரலே ஒலிக்கவில்லை என்றால் என்ன ஆகும் சற்றே சிந்தித்துப் பாருங்கள். காட்டில் ஒரு குழந்தை தனித்து வளர்ந்தால் அந்தச் சூழலுக்கு ஏற்பவே அக் குழந்தை வளர்ந்து பெரியவனாகும்.



ஆறிய சாதம் சூடாக இருக்க...

ஆறிய சாதமே சுடச்சுட மீண்டும் பளபளவென்று வேண்டுமா?! இட்லி பாத்திரத்தில் இட்லி அவிப்பது போல, துணி போட்டு சாதத்தை பரப்பி 10 நிமிடம் வைத்தால் போதும். மல்லிகைப் பூ சாதம் ரெடி! மணமும் குணமும் சிறிதும் மாறாத அதே 'ருசி' ரெடி!

— சேலம் ப. சரஸ்வதி

எனவே மூன்று மாதத்தில் இப்பயிற்சி துவங்க ஏற்றது. ஏன் எனில் அப்போது பயிற்சி அட்டைகளை பார்க்க கண்கள் நிலைத்து நிற்கும் நிலை ஏற்பட்டு விடும்.

அந் நேரத்தில் படிப்பறிவு (Reading capacity) சொல்லித் தர முடியும்.

அட்டைகளில் ஆங்கில வார்த்தைகள் அல்லது தாய்மொழி வார்த்தைகள் அச்சிடப் பட்டு பெரிய எழுத்துகளில் வேகமாக ஒவ்வொன்றாகக் காட்டப்பட வேண்டும். இம் முறையில் எழுத்துக்களை முதலில் சொல்லித் தராமல் வார்த்தைகளாகவே காட்டப்படுகிறது. குழந்தையைப் பொறுத்தவரை அட்டைகளில் உள்ளது 'படம்' எழுத்தல்ல. அட்டையில் உள்ள வார்த்தையை தாய் உரக்க உச்சரித்த வண்ணம் வேகமாக ஒவ்வொன்றாகக் காட்ட வேண்டும். தாமதம் கூடாது. இவ்வாறு 200 வார்த்தைகளாவது தயார் செய்து கொண்டு 3 வேளைகள் 10 அட்டை முதல் 25 வரை காட்ட வேண்டும்.

ஆறு மாதத்தில் குழந்தைகள் மொழி புரிந்து கொள்ள ஆரம்பிக்கின்றனர். விளக்கு எங்கிருக்கிறது, மின் விசிறி, நாய், பூனை, அப்பா, தாத்தா, பாட்டி போன்று அடையாளம் காட்ட ஆரம்பித்தவுடன் பொது அறிவு அட்டைகளை வகைக்கு 50 ஆக தயாரித்து வைத்துக் கொண்டு தினசரி 50 அட்டைகளை காட்ட வேண்டும்.

8 மாதத்தில் கணிதம் சொல்லித் தர வேண்டும் அல்லது 1½ வயதில் ஆரம்பிக்கலாம். ஆனால் 2 வயதிற்குள் கற்க ஆரம்பிக்க



ஒரு ஸ்பூன் காப்பிப் பொடியை கொதிக்கும் நீரில் போட்டு உடனே ஆவி பிடித்தால் தலைவலி பத்தே நிமிடத்தில் பறந்து போய் விடும். (முக்கியமாகத் தலையில் தண்ணீர் ஏறிக் கொண்டு தலையை வலிக்கும் போது இதைச் செய்தால் கட்டாயம் நிவாரணம் கிடைக்கிறது!)

– மரகதம்

வேண்டும். 2 வயதிற்குப் பிறகு குழந்தையின் அறிவு மங்கத் துவங்குவதாக க்ளென் கூறுகின்றார்.

வார்த்தைகளை காட்டி முடித்த பிறகு அவற்றைக்கொண்டே இரண்டு வார்த்தைகள், சொற்றொடர்கள், வாக்கியங்கள் அமைக்க தேவையான முறையில் அட்டைகள் தயாரிக்கப்பட வேண்டும். இவை முடிந்த பிறகு சிறு சிறு புத்தகங்கள் மொழி இயல், விஞ்ஞானம், தாவர இயல், வான சாஸ்திரம், விளையாட்டு என்று எல்லா வகையிலும் பாடங்கள் தயாரித்து குழந்தையின் படிப்புத் திறனை பெருக்க படிப்படியான பாட அமைப்புகள் வகுக்கப்பட்டுள்ளது.

அவ்விதமாகவே பொது அறிவிலும் தனித்தனி படங்களின் மூலமாக பலவித துறைகளில் உதாரணமாக பறவைகள், மரங்கள், பழங்கள், காய்கள், தேசத் தலைவர்கள், தேசிய கொடிகள், வாகனங்கள், விளையாட்டுகள், மனித உடற்கூறுகள், கண்டுபிடிப்புகள், அரசர்கள், அறிஞர்கள், அளவைகள் போன்ற பலவற்றையும் அறிந்து கொண்டு அவற்றைப் பற்றிய விரிவான அறிவையும் பின்னாளில் தாயும் குழந்தையும் பெற்று விட முடியும்.

கணிதத்தை எடுத்துக் கொண்டால் புள்ளிகள் மூலமாக குழந்தை உண்மையான கணித அறிவைப் பெற்று சுயமாக சூத்திரங்களை கண்டறிய முடியும்.

பள்ளிகளில் குழந்தைகள் அறிவை சோதித்து மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து மதிப்பீடு செய்து குழந்தைகளின் உணர்வுகளை நோகச் செய்வதற்கு முன்பாக தாயின் மென்மையான பாதுகாப்பில், அன்பான அரவணைப்பில், ஆதரவான பாட திட்டத்தில் முறையான காலத்தில் அறிவை ஊட்டச் செய்தால் மேதைகள் ஏன் உருவாக மாட்டார்கள்?

உண்மையில் இப்பயிற்சியால் நிகழும் அற்புதங்கள்

“வினைவைப் பற்றி சிந்திக்காமல் கர்மத்தை செய்” என்கிற கீதாசார்யனின் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்து வாழ்க்கையை நடத்துவதைப் போல் பிறந்த குழந்தைக்குப் புரியுமா இல்லையா, இது என்ன பைத்தியக்காரத்தனம் என்றெல்லாம் உங்கள் மூளையை கசக்கிக் கொள்ளாமல் சொன்னவாறு, பயிற்றுவித்தவாறு குழந்தைக்கு ஒருதாய் உயர் நம்பிக்கையில் இதை நடத்திக் காட்ட முடிந்தால், இதில் அந்தாய் வெற்றி பெறுவது உறுதி.

எனினும் என்ன நிகழ்கிறது என்று சற்று சிந்தித்துப் பார்த்து தெளிவடைய வழி உள்ளது.

மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட கணிணியில் (computer) ஒரு விஷயம் வேண்டாமென்றால் பூரணமாக அழித்து விட முடியும். ஆனால் இறைவனால் படைக்கப்பட்ட மனித மூளையில் அடையாளமேயில்லாமல் அவ்வாறு அழிக்க முடியாது.

இவ்வளவு திறன் படைத்த மூளையை சிறப்பான பயிற்சியால் அதன் செல்களின் செயல்பாட்டை விரைந்து செயலாக்க முடியும்.

இந்தக் கல்வியின் அடிப்படை **observation and recalling** என்கிற விதிக்கு உட்பட்டது.

ஒரு விஷயத்தைப் பற்றி சந்தேகத்திற்கு இடமின்றி தெரிந்து கொண்டால், யோசித்து பதில் சொல்ல வேண்டிய அவசியம் இருக்காது.

நம்பிக்கைக்கு உரிய தாயாரால் ஒரு விஷயத்தை அழுத்தம் திருத்தமாக பலமுறை உரத்த குரலில் குழந்தைக்குச் சொல்லித் தரப்படும்போது குரலும், படமும், விஷயமும் நாடா பதிவு போல் மூளையில் பதிக்கப்படுகிறது.

‘குரல் மீண்டும் மீண்டும் ஒலிக்கும்போது குழந்தையின் வேகம் ஆர்வம் தூண்டப்படுகிறது.

குழந்தைக்குப் புரிந்ததா இல்லையா என்றெல்லாம் சந்தேகப்படாமல் சொல்லித் தரும்போது திடீரென ஒருநாள் குழந்தை சொல்ல ஆரம்பிக்கிறது. மின் விசிறி எங்கே, காகம் எங்கே என்று கேட்டால் பேச வராத

நிலையிலும் குழந்தை கண்களால் அந்தப் பொருளையோ விஷயத்தையோ பார்க்கிறது. குழந்தைக்குப் புரிந்து கொள்ளும் ஞானம் எப்போது உருவானது என்று வெளிப்படையாக தெரிந்து கொள்வதற்கு முன்பாகவே குழந்தை அனைத்தையும் புரிந்து கொள்ள ஆரம்பிக்கிறது.

அப்படியென்றால் எல்லா குழந்தைகளின் மூளையும் ஒரேவிதமான அறிவை பெற்று இருக்குமா என்றால் - புரிந்து கொள்ளும் திறன் மட்டுமே குழந்தைக்குக் குழந்தை மாறுபட்டிருக்கும்.

படித்த பெற்றோரின் குழந்தை இந்த பாட முறையின் நுணுக்கத்தைப் புரிந்து கொள்ள ஒரு வாரம் எடுத்துக் கொண்டால்,

படிப்பறிவு அற்ற பெற்றோரின் குழந்தை ஒரு மாதம் எடுத்துக் கொள்ளும்.

அதன் பிறகு அறிவுத் திறனின் முன்னிலையில் பயிற்சியின் விளைவுகள் இருவருக்கும் சமமானதாகவே இருக்கும்.

குழந்தைகள் இயல்பாக தங்களுக்கு ஏற்படும் அறிவுத் தாகத்தை தீர்த்துக் கொள்ள இயலாத சூழ்நிலையால்தான் முரட்டுத்தனமாக மாறுகிறார்கள்.

பாடம் புகட்டுவதுடன் வீட்டிலேயே செய்யக்கூடிய வகையில் உடற்பயிற்சி போன்ற விளையாட்டுகள், பயிற்சிகள் தாயாரால் சொல்லித் தரப்பட வேண்டும்.

உதாரணமாக அறையின் ஒரு மூலையில் தண்ணீர் நிறைந்த டம்ளரை வைத்துவிட்டு அதை மெதுவாகக் கீழே சிதறாமல் அறையின் மற்றொரு மூலைக்குக் கொண்டு வரச் செய்து பின் நீரைக் குடித்துவிட்டு டம்ளரை மேஜை மீது ஓசையின்றி வைக்க வேண்டும். இதை ஒரு விளையாட்டு போல் தாயும் குழந்தையும் சேர்ந்து செய்யும்போது பொறுமையும், ஒரு நிலைப்பட்ட மனமும், நரம்புகளுக்குப் பயிற்சியும் கிடைக்கும்.

மேலும் நூல் கண்டில் நூலை சுற்றுவது கயிற்றைத் தரையின் மீது நேராக வைத்து விட்டு தலையைக் குனியாமல் கால்களால் உணர்ந்து கயிற்றின் மீது நடந்து வருவது இது போன்ற செயல்களால் கை கால் நரம்புகள் தூண்டப்பட்டு மூளையில் உற்சாகத்தை ஏற்படுத்தும்.

மொத்தத்தில் தாய்க்கும் மழலைக்கும் இடையில் பிரிக்க முடியாத பாசத்தையும் நம்பிக்கைக்குரிய உற்சாகமான உலக பிரஜையாக குழந்தை பல துறைகளில் தனக்குப் பிடித்த துறையைத் தேர்ந்து அதில் மேதையாகவும் வழி வகுக்கும்.

பின் விளைவுகள்

30 வயதில் ஒரு மொழியைக் கற்றுக் கொள்வதைவிட 7 வயதில் கற்பது எளிது. அதைவிட 6 வயதிலும் அதைவிட 5 வயதிலும், அதைவிட 3 மாதத்திலும் கற்பது எளிது.

பிஞ்சு வயதில் மனதில் பதிந்த விஷயங்கள் பசுமரத்தாணி போல் பதிந்து விடுவது இதனால்தான்.

இந்தப் பயிற்சியால் குழந்தைகள் ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒரு குறிப்பு வைத்துக் கொள்ள மின்னல் வேகத்தில் பழகி விடுகின்றனர்.

க்ளென் அவர்களின் பள்ளிக் குழந்தைகள் 5 வயதில் ஷேக்ஸ்பியரின் நாடகம் படிக்கின்றது. 7 வயதில் செய்தித் தாள் படிக்கின்றது. அந்தக் குழந்தைகள் கூறுகிறார்கள், ''எந்தப் புத்தகத்தைக் கொடுத்தாலும் எங்களால் படித்துப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் கற்பனையாக பெரியவர்களால் புரிந்து கொள்ளக் கூடியவைகளை மட்டும் எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை' என்கின்றனர்!

— ரேவதி சங்கரன்

வீட்டில் பழசாகி, வண்டு வந்து வீணாகிப் போன அரிசி ரவை, சாதா ரவையைத் தூரப் போடாமல் கலர்ப் பொடி கலந்து ரங்கோலி போடலாம். ஜோராக இருப்பதுடன், இந்த ரங்கோலி எதை வைத்துப் போட்டீர்கள் என கேட்கவும் வைக்கும்.

— பாலா



சொல்ல விரும்புகிறோம்...



❖ அஷ்டாவதானியாக, சகல கலாவல்லியாக திரை உலகில் மின்னிய பானுமதி ராமகிருஷ்ணா, ஒரு அருமையான குடும்பத் தலைவியாகவும் மிளிர்ந்தார் என்பதை அவரைப் பற்றிய 'ஆணோ பெண்ணைச் சார்ந்து வாழ்கிறான்' என்ற கட்டுரையிலிருந்து தெரிந்து கொள்ள முடிந்தது.
திருப்பரங்குன்றம், டி.எஸ். பார்வதி.

❖ ஹையா! மங்கையர் மலரில் ஆண்களுக்கென நான்கு பக்கங்கள்! பார்க்கவும், படிக்கவும் சந்தோஷமாயிருக்கிறது! தொடரட்டும்!
திருநீலக்குடி, மா. உலகநாதன்.

❖ தியானமே சிறந்த மருந்து என்பது நூற்றுக்கு இருநூறு சதவிகிதம் உண்மை. பிரஷர், சர்க்கரை, ஆஸ்துமா மட்டுமின்றி ஏனைய பிற நோய்களும் கூட கிட்ட நெருங்கவே நெருங்கிடாது என்பது எங்களின் அனுபவமாகும். டாக்டர்களே கூட தியானம், யோகாவை வலியுறுத்தி வருகின்றனரே. மாதாந்திர செலவுப் பட்டியலில் மருத்துவ செலவினை அறவே நீக்கிடலாம். அல்லது வெகுவாகக் குறைத்திடலாம்.
பாண்டிச்சேரி, இந்திரா பிரகாஷ்.



❖ கணவனை இழந்த பெண்களை இந்தச் சமூகம் பார்க்கும் பார்வைக்கு, 'பிரார்த்தனை'யில் கலந்து கொள்ள நல்ல மனம் என்ற ஒரு தகுதியே போதும் என்று சுமதி கூறியது மிகவும் சரியானதாகும்.
சென்னை, க. அனந்தா.

❖ 'அடையா நெடுங்கதவும் அஞ்சலென்ற சொல்லும் இலாத சடையப்பன்' என கேள்விப்பட்டுள்ளேன். கதவுகள் இல்லாத ஊர் இருபதாம் நூற்றாண்டில் இப்படியா என அதிசயிக்கச் செய்தது. இப் பண்பு பயத்தாலும் மட்டுமல்ல நல்ல குணத்தாலும் எல்லா இடமும் பரவ வேண்டும்.
சித்தோடு, டி. சந்திரன்.

❖ மங்கையர் மலரில் கடிதம் எழுதும் போது கார்டூன் படங்களை வெட்டி, ஒட்டி அனுப்பினால் வித்தியாசமாக, புதுமையாக இருக்கும் என வாசகி போரூர். ஆர். சீதா கூறியுள்ளார். இதைக் கவரில் (ரூபாய் மூன்று) அனுப்பும் கடிதங்களுக்கு மட்டுமே செயல்படுத்தலாம். கவர் தவிர மற்ற கார்டு, இன்லேண்ட் லெட்டர் அனுப்பும் போது இம்முறையைக் கையாண்டால் குறைந்தபட்சம் ரூ. 3/- கட்ட வேண்டி வரும். எனவே கவனமாகச் செயல்படுத்தவும்.
சிதம்பரம், ஸ்ரீவித்யா காளிதாஸ்.

❖ அட்டைப் படத்தில் ஆண்களை கௌரவிக்கும் வகையில் ரபிபெர்னாட் அவர்களைப் போட்டு அசத்தி விட்டீர்கள். பேட்டி இல்லையே?
சென்னை - 88, ராஜிகுருஸ்வாமி.

19 ஆம் ஆண்டு நிறைந்த மமலருக்காக 19 புள்ளி 19 வரிசையில் ஒரு வாழ்த்துக் கோலம்



— பிரேமா சம்பந்தன்

இந்த இதழ் அட்டையில் இம்மாத இல்லத்தரசி போட்டியில் முதல் பரிசு பெற்ற **சாந்தி மெல்கியோர்**
வண்ணப்படம் : **ஜி. சுரேஷ்**

சுற்றுலாவில் சந்தித்த மனித தெய்வங்கள்


நாம் சுற்றுலா என்று சென்று திரும்பினால் ஆர்வம் உள்ளவர்கள் "அங்க என்னென்ன பார்த்தீர்கள்'' என்பார்கள். இன்னும் சிலர் ''அங்க என்னென்ன வாங்கின. நான் பணம் குடுக்க மாட்டேனா, எனக்கு ஒன்னு வாங்கிண்டு வந்திருக்கக் கூடாதா'' இப்படியும் சிலர்.

இப்பரந்த உலகில் மனித நேயம் என்பது எவ்வளவு இருக்கின்றது. மனிதன் என்பவன் தெய்வமாகலாம் என்ற வார்த்தைகள் எவ்வளவு பொருந்தும் எனபதையெல்லாம் நான் சுற்றுலாவில்தான் உணர்ந்தேன்.

பல இடங்களில் நான் சந்தித்த மனிதர்கள் அடிக்கடி என் கண் முன்னால் வந்து புன்னகைக்கிறார்கள். மனம் வெறுமை அடையும் பொழுதும், யாராவது தீமை செய்யும் பொழுதும் சுற்றுலாவில் நான் கண்ட மனிதர்களைத்தான் நினைத்துக் கொள்கின்றேன்.

அயோத்யா: காசியில் இருந்து காலை ஆறு மணிக்கு நானும் என் தாயும் ஏழு வயது என் மகளும் அயோத்யாவிற்கு பஸ்ஸில் சென்றோம். அயோத்யா சேர மதியம் இரண்டரை மணி ஆகும் என்பதை இரண்டரை மணி நேரம்தான் ஆகும் என்று புரிந்து கொண்டோம். நல்ல பசிவேறு. குழந்தை துவண்டுவிட்டாள். பத்தாதற்கு நாங்கள் சென்ற பஸ்ஸை நிறுத்திவிட்டு 'இந்த பஸ் அயோத்யா போகாது. இந்த டிக்கெட்டை வைத்துக் கொண்டு வேற பஸ் பிடித்து இன்னும் ஒரு மணி நேரம் பிரயாணம்' என்றார் கண்டக்டர்.

வரும் அயோத்யா பஸ்ஸெல்லாம் கால் வைக்க இடமில்லை. அப்படி ஒரு கூட்டம். லக்கேஜுடன் எப்படி ஏறுவேன். மூவரும் முக்கட்டாக பசியுடன் உட்கார்ந்து இருந்தோம். ஒரு கூட்டமான பஸ் டைல் அடித்து வரும் பொழுது "மாதாஜி, மாதாஜி" என்று அலறல். என் பெண் அதை கவனித்து விட்டாள். பஸ் ஜன்னல் வழியாக ஒரு தலை. அதை நோக்கி ஓடினோம். எங்கள் லக்கேஜையும் உள்ளே வாங்கி வைத்து என் தாயையும் உள்ளே ஏற்றி என்னையும் உள்ளே திணித்தவர் யார் என்கிறீர்கள்.



காசியில் இருந்து கிளம்பிய பஸ் கண்டக்டர். முதல் பஸ் ஸ்டாப் சென்று எங்களுக்காக சீட் போட்டுக் கொண்டு வந்து எங்களை ஏற்றி விட்டார்!

கேதார்நாத்: ''கேதார் நாத்ஜியை'' தரிசித்துவிட்டு குதிரையில் கீழே இறங்குகின்றேன். கூட வந்தவர்களின் குதிரை சென்று விட்டது. குதிரைவாலாவை டீக்கடை பக்கம் நிறுத்தச் சொல்லி டீ கேட்கின்றேன். எப்பவுமே நம்முடன் வரும் கோடாவாலா நம் உணவு, டீயைச் சாப்பிட மாட்டார்கள். யாத்ரீகர்களின் உணவுப் பொருள்களை வாங்க மாட்டார்கள். கொடுத்த டீ டம்ளரை என்னுடைய உதடுக்கு எடுத்துச் செல்ல முடியாமல் என் இரண்டு கைகளும் டீ டம்ளருடன் ஆடுகின்றன. (நடுங்குகின்றது) என் கோடாவாலா அருகில் வந்து, கழுத்தைச் சுற்றி இருந்த என் மப்ளரை கையில் கட்டி டம்ளரைப் பிடித்துக் கொள்ள வைத்துத் தானும் உதவி என்னைக் குடிக்க வைத்தார். கொஞ்சம் கொஞ்சமாக சூடு சென்றவுடன் தெம்பு வந்தது. அடுத்த ஜன்மத்தில் அவருக்கு நான் நர்ஸாக பணிவிடை செய்ய வேண்டும்.

காசி: நாங்கள் ஒரு வாரம் காசியில் தங்கினோம். அதற்கும் முன்னால் பத்து நாட்

களுக்கு நார்த் டூர் சுற்றியதில் நம் சாப்பாடு இல்லாததால் என் பெண்ணிற்கு வயிற்றுப் போக்கு. மறுநாள் திருப்பதி வருகின்றோம். காசியில் இருந்து இரண்டு நாள் பயணம்.

ஹனுமந்த் காட்டில் உள்ள காமாட்சியம்மன் கோயிலில் யாராவது தமிழ்க்காரர்களை பார்த்தால் ஒரு டம்ளர் சாதம் மட்டும் வடித்துக் கொடுத்தால் தயிர் கலந்து குழந்தைக்கு மாத்திரம் தூக்கில் எடுத்துச் செல்லலாம் டிரெயினுக்கு என்று அலைந்தேன். அங்கு கிடைக்கும் சாதம் மிகவும் கொட்டை கொட்டையாக இருந்தது. அங்கிருந்த பெரியவரிடம் என் நிலைமை கூறினேன்.

"அதுக்கென்னம்மா, காலையில்தானே டிரெயின். இன்று இரவு 7 மணிக்கு இங்கு வா. நான் பண்ணித்தரேன் கவலைப்படாதே" என்றார்.


அந்த நேரத்துக்கு சென்ற என்னை தன் வீட்டுக்கு அனுப்பி வைத்தார். அந்த அம்மையார் "வாம்மா, குக்கரை இறந்து அந்த சாதத்தை தூக்கில் எடுத்துக்கோ. ஒங்க 3 பேருக்கும் நாளை காலைக்கு இட்டிலி பொட்டலம் கட்டி வைச்சிருக்கேன் எடுத்துக்கோ" என்றார்! எத்தனையோ மறுத்தும் அவர் கேட்கவில்லை. "மாமி நீங்க எடுத்து



தாங்கோ" என்றேன். அவருக்கு இரண்டு கால்களும் ஸ்வாதீனத்தில் இல்லை.நான் என்னால் முடிந்த பணத்தைக் கொடுத்து, "காசிக்கு வந்து இனாமாக சாதத்தை எடுத்துக்கறது கஷ்டமாக இருக்கு"ன்னேன்.

"அப்படியா நீ திருப்பதி போகும் பொழுது அதை உண்டியலில் போட்டுட்டு, இந்த கால் இல்லாதவளுக்கு, மனிதருக்கு உதவும் படியான சந்தர்ப்பத்தை தர வேண்டினேன் என்று சொல்லி போட்டுடு" என்றார். என் கண்ணில் நீர். அவர் எனக்குக் காசி அன்னபூர்ணா தேவியாக காட்சி அளித்தார்.

ஒரிஸ்ஸா: இரண்டரை மணி நேரம் சிலிகா லேக்கில் பயணம் செய்ததால் ஏற்பட்ட சிக்கில் (கடல் சிக்னஸ்) வாந்தி மயக்கம் எனக்கு. போட்டில் படுத்து விட்டேன். உறவினர் போட்மேன் பாதுகாப்பில் என்னை விட்டுச் சென்றனர். அவர் போட்டைக் கட்டிவிட்டு, அருகே கடைக்குச் சென்று ஒரு குளிர்பானம் வாங்கி வந்து, என்னை மெதுவாக எழுப்பி அதை குடிக்க வைத்துத் தெம்பூட்டினார். அவர் அதிகம்



படித்தவரில்லை. நாகரீகம் கொண்ட உடை அணிந்தவரில்லை. ரிக்ஷாகாரர் (பகவான் இஸ்தான் பர் ஜகடா நஹி) "பகவான் ஜகன்னாதன் இருக்கும் இந்த இடத்தில் நான் ஏன் சண்டை போடுவேன்?" என்கிறார். அப்படி ஒரு கடவுள் பக்தி, நம்பிக்கை.

இப்படியே இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். கொஞ்சம் யோசனை செய்து பாருங்கள். நாம் வாழ்நாளில் இது போன்று உதவி செய்தவர்கள் எவ்வளவு பேர் இருப்போம்? நுனிநாக்கு ஆங்கிலமும், நாகரீக உடைகளை அணியவும் நம்பிள்ளைகளுக்குக் கற்று கொடுக்கும் நாம், இது போன்ற மனப்பான்மையைச் சொல்லிக் கொடுத்து வளர்க்கிறோமா என்று யோசனை செய்து பாருங்கள்.

நம் பாரத நாடு விரிந்து காணப்படுவது போன்று மக்கள் மனமும் விரிந்து இருக்கின்றது. அவற்றை உணர சுற்றுலா நமக்கு மிகவும் உதவியாக இருக்கின்றது. அவர்களை பார்க்கும் பொழுது நாமும் அப்படி மற்றவர்களுக்கு உபயோகமாக இருக்கணும் என்ற வைராக்யம் தோன்றுகிறது.

சுற்றுலா, கண்ணுக்கு மட்டும் விருந்தல்ல. மனதை விரிவடையச் செய்யும். மகிழ்ச்சி கொள்ளச் செய்யும் மனித நேயத்தைப் பதிய வைக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

— பர்வதம்


என் சிரிப்பின் ரகசியம்
எங்கம்மா தினமும் தரும்
பால்-பாசம்-பிங்கு
"வயிற்றுத் தொல்லை இனி எனக்கு இல்லை"
குழந்தை அடிக்கடி ஏன் அழுகிறது? வயிற்றுத் தொல்லை அதற்கு ஒரு காரணமா?
குழந்தைக்கு தினமும் தந்திடுங்கள் பிங்கு கிரைப் வாட்டர். வயிற்றுத் தொல்லையிலிருந்து நிவாரணம் அளிக்க பாதுகாப்பான வழி பிங்கு.
சர்வதேச தரம் வாய்ந்த பிங்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட மூலிகைகளைக் கொண்டு, ஆயுர்வேத முறையில் தயாரிக்கப்படுகிறது. வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.
குழந்தை ஆரோக்கியமாக சிரித்து விளையாட தினமும் கொடுங்கள் பிங்கு.
100% ஆயுர்வேத
மூலிகை மிக்சர்
பிங்கு
கிரைப் வாட்டர்
சர்வதேச தரம் கொண்டது
அஜந்தா ஃபார்மா லிமிடெட், மும்பை – 400 067.
சென்னை கிளை: No. 1, சுப்ரமண்ய குருக்கள் தெரு, R.A. புரம், சென்னை – 600 028, போன்: 4940946
Anugrah 2682 / 98

கவலைப்படாதீர்கள், ஜெய்ப்பூர் போகலாம்!



• ரிஷிகேஷ் ராம் ஜுலா!

“எட்டரை மணிக்கு டெல்லியில் இறங்க வேண்டிய நமது விமானம் ஒருவேளை அங்கு இறங்க முடியாமல் போகலாம். இப்போது டெல்லியில் பனியின் கடுமை பற்றி உங்களுக்குத் தெரியும். முடிந்த வரை முயற்சிக்கிறோம்...”

ஏழரை மணிக்கு அழகான கொஞ்சும் குரலில் விமான உதவியாளப் பெண் அறிவித்தபோது திடுக்கிட்டுத்தான் போனேன். டெல்லியில் இரவு இறங்கவில்லையென்றால் மறுநாள் காலை என் திட்டங்கள் எல்லாம் என்னாகும்? அந்தப் பக்கம் வந்த விமானியை கேட்ட போது அழகாகச் சிரித்தார்.

“கவலைப்படாதீர்கள் முதலில் ஜெய்ப்பூர். அப்படி இல்லையென்றால் அகமதாபாத்தில் இறக்குவோம். பம்பாய்க்குப் போகுமளவு நம்மிடம் எரிபொருள் இருக்கிறது!”

“அனால் நாங்கள் டெல்லியல்லவா போக வேண்டும்!” இனிமையான சிரிப்புதான் பதில்.

ஒரே கணத்தில் மனம் அமைதியடைந்து விட்டது. பதட்டம், கவலைப்படுவதால் எந்தப் பயனும் இல்லை. தரையிலிருந்து முப்பத்தி மூன்றாயிரம் அடி உயரத்தில் இருக்கும் நம்மை எது காக்கிறது? திடீரென்று இப்படி ஒரு பயணம் போவோம் என நினைத்தோமா? பல விஷயங்கள் ஆண்டவனால் நிர்ணயிக்கப் படுகின்றன. அந்த அன்னை பார்த்துக் கொள்ளட்டும் நமக்கு எது தேவையென்பதை. அமைதியாக மேற்கொண்டு புத்தகம் படிக்க ஆரம்பித்தேன்.

பதட்டமில்லாத இந்த அமைதியும், நிதானமும் வாழ்க்கைக்கு மிகவும் தேவை. அதுவும் அன்றாட வாழ்வில் இன்றைய உலக பிரச்னைகளுக்கு மிக மிகத் தேவை. இன்னும் நாம் சுற்றுலா போகும் போது மிகவும் அத்யாவசியமான ஒன்றாகவே மாறி விடுகிறது. குறிப்பாக வடநாட்டு சுற்றுலா செல்லும் போது திட்டங்களை நாம் வகுக்கலாம், ஆனால் ஆண்டவன் தான் நிறைவேற்ற வேண்டும் என்பதை மிக நிதர்சனமாக உணர முடியும். புண்ய ஸ்தல யாத்திரைகளுக்கு இமயத்தின் மடியில் சென்ற அனுபவஸ்தர்கள் மிகவும் இதை உணர்ந்திருப்பார்கள்.



• குளிர்காலத்திலும் டூர் போவோம்!

ஸ்ரீ டிராவல்ஸ் இளந்திரையன் குளிர்காலச் சுற்றுலா என புதுமையாக ஒரு டிரிப்பை அறிமுகப் படுத்தியிருந்தார். எல்லோரும் வெயிலுக்கு இதமாக குல்லூமணாலி போக முற்படும் போது இவர் குளிர்காலத்தில் பனி மூடிய அந்த இடங்களை பார்க்க விரும்புபவர்களுக்காக இப்படி ஒரு சுற்றுலாவை அமைத்திருந்தார். புதுமை விரும்பிகள் போட்டி போட்டுக் கொண்டு வர பதிவுசெய்திருந்தனர். அவர்களெல்லாம் திரும்பி வரும் போது ஒரு பார்ட்டி வைத்து அதற்கு முக்கிய விருந்தினராக என்னை அழைத்திருந்தார். அதுதான் இந்தத் திடீர்ப் பிரயாணம்.

டெல்லி இறங்கிய மறுநாள் ஹரித்வார், ரிஷிகேஷ் வேகமாக ஒரு டிரிப் அடித்து விடலாமே என ஆசை. மறுநாள் காலை ஏழு மணிக்கு சதாப்தி. டெல்லி விமானம் ஜெய்ப்பூரில் இறங்கினால் ஏது சதாப்தி. சரி, நமக்கு



• சிறந்த தம்பதிகள் தேர்ந்தெடுக்க

கங்கையன்னையைத் தரிசிக்கும் பிராப்தம் இருந்தால் நடக்கட்டும் என விட்டு விட்டேன்.

மிகச் சரியாக எட்டரைக்கு டெல்லியில் இறங்கியது விமானம். "இன்றைக்கு ரொம்ப அதிசயமாக சரியான நேரத்திற்கு வந்து விட்டது ஃப்ளைட்!" என்றார் எங்களை வரவேற்க வந்தவர்!

மறுநாளும் அதே ஃபாக்(பனி) புராணம் தான். "ஃபாக் இல்லாட்டா சதாப்தி சரியான நேரத்திற்குப் புறப்படும். இல்லேன்னா லேட்டாகும்!" காலை ஆறே முக்காலுக்கு ஒவ்வொருவரும் புகை வண்டி போல, மூச்சு விடும்போது புகை வர ஸ்டேஷனில் நடந்தது வேடிக்கையாகத்தான் இருந்தது. இருளும் பனியும் பின்னியிருந்த அந்தக் காலையில் ஏகப்பட்ட முன்னேற்பாடுகளோடு ஸ்வெட்டர், ஷால் சகிதம் சதாப்தி ஏறிப் போனதும் ஹரித்வார் ரிஷிகேஸ் பார்த்ததும் அற்புதமான அனுபவங்கள்.

ரிஷிகேஷில் கங்கையின் சில்லிட விறைக்க வைக்கும் நீரில் உள்ளே கூழாங்கற்கள் தெளிவாகத் தெரிந்தன. சுற்றிலும் இயற்கை அன்னையின் செழுமையான கொடை. சிவனின் கம்பீரத்தை இமயமலையைப் பார்த்துத்தான் தெரிந்து கொண்டார்களோ! மிகச் சாதாரணமாக எதையும் பொருட்படுத்தாத மேம்போக்கான மனம் கொண்டவர்களைக் கூட ஆழப்படுத்தும் திறன் கொண்ட இடங்கள். அதனால்தான் முனிவர்களும் யோகிகளும் இங்கே வந்து தஞ்சமடைந்தார்களோ என்று தோன்றியது.



தயானந்த சரஸ்வதி ஸ்வாமிகள் ஆஸ்ரமத்தின் பின்புறம் ஓடும் கங்கையின் நீரின் 'சலசல' சப்தம் தவிர வேறு ஓசையே இல்லை. ஒருவர் அங்கு கண் மூடி அமர்ந்து இருந்தார். அப்படியே அங்கேயே மணிக்கணக்கில் அமர்ந்திருக்கலாம் போன்ற பரவசம். எந்தச் சலனமும் இல்லாமல் மனம் அப்படியே குவிந்திருந்தது.

ஹரித்வாரில் கும்பமேளா சமயத்தில் கோடிக்கணக்கான மக்கள் நீராடும் இடமும், ஒலிப்பெருக்கியில் மிதந்து வரும் பக்தியில் தோய்ந்த இனிமையான பாடல்களும், கங்கா மாதாவின் கோவிலும், லட்சுமி நாராயணா, லட்சுமியின் கோயில்களும்... அங்கு ஒவ்வொரு அங்குலத்திலும் இறைத்தன்மை பின்னிப் பிணைந்து கிடந்ததை உணர முடிந்தது. இந்தியாவிற்கு ஆன்ம சக்தியை கங்கைதான் கொண்டு போகிறாளோ என்று தோன்றியது. இவள் எத்தனை மக்களை உருகவைக்கிறாள்!



• ஹரித்துவாரில்

மஞ்சுளா ரமேஷ்

மாலையில் நடக்கும் தீபஹாரத்தி மிகவும் விசேஷமாம். பெண்களெல்லாம் சேர்ந்து ஆரத்தி எடுத்து அந்திமயங்கும் வேளையில் பூவோடு சேர்த்து கங்கையில் விடுவார்களாம். கேட்கவே ஆசையாக இருந்தது. கற்பனையே அற்புதமாக இருந்தது. ஆனாலும் என்ன செய்ய? ஆறு மணிக்கு சதாப்தி இருக்கே, திரும்பிப் போக?

மறுநாள் மாலை தான் குல்லூமணாலி

போன்ற பல இடங்களுக்கும் போயிருந்த குழு திரும்பினார்கள் என்று கேள்விப்பட்டேன். ஆறு மணிக்குப் பாவம் அசதியாக இருப்பார்கள், இந்த நேரம் பார்ட்டி என்றால் என்ன 'என்ஜாய்' பண்ணப் போகிறார்கள் என்று போனேன். என்னைப் பார்த்ததும் அவர்களிடம் தோன்றிய மகிழ்ச்சி இருக்கிறதே, அதை என்னவென்று சொல்ல? ஏற்கெனவே வெகு உற்சாகமாக இருந்தவர்கள் என்னைப் பார்த்தவுடன் ஒரே கைதட்டல்.



• வீரவாஞ்சியாக...

தமிழ்நாட்டை விட்டு ஆயிரக்கணக்கான மைல்கள் தாண்டி மங்கையர் மலர் வாசக சகோதரிகளின் சங்கமம். பம்பாயிலிருந்து வந்திருந்த பெண், கிளம்பும் முன் கீழே விழுந்து எலும்பு முறிந்த நிலையிலும் 'கை கட்டு போட்டுக் கொண்டே வந்திருந்தார்! வயதான அந்தத் தம்பதிகளின் உற்சாகம் என்னைப் பிரமிக்க வைத்தது. தமிழ்நாட்டிலிருந்தும், நைஜீரியாவிலிருந்தும் வந்திருந்த மங்கையர் மலர் சகோதர, சகோதரிகள் ஒவ்வொருவரும் என்னோடு ஆத்மார்த்தமாகப் பேசியபோது அடைந்த பரவசத்தை என்ன சொல்ல?

இறைவணக்கத்திற்கப்புறம் வீரவாஞ்சியை ஒருவர் நடித்துக் காண்பித்தார் பாருங்கள், அத்தனை அற்புதம்! நடுத்தர வயதினரான அவருடைய ஆற்றல் பிரமிக்க வைத்தது. சிறந்த தம்பதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களை மூன்று நாள் இலவச டூர் அழைத்துப் போவதாக அறிவித்திருந்தார் இளந்திரையன். அதனால் தம்பதிகளை வரிசையாகக் கேள்வி கேட்டாலும் யாரைத் தேர்ந்தெடுப்பது எனத் தெரியவில்லை. அத்தனை கச்சிதமான பதில்கள். கடைசியில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்து அறிவித்தேன். பிறகு குதூகலமாக டின்னர்.

பல்வேறு வயதினராக இருந்த தம்பதிகள் கிட்டத்தட்ட பத்து நாட்கள் வெகு குதூகலமாக இருந்திருக்கிறார்கள் என்பதை அவர்களுடைய உற்சாக வெளிப்பாடே காட்டியது. இந்த நாட்களை அவர்கள் வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டார்கள். இதுதான் சுற்றுலாவின் மகிமை, பயன்.


நடுவில் எத்தனையோ இயற்கையினால் விளைந்த இடர்பாடுகள், மனிதர்களால், வண்டிகளால் பிரச்னைகள் என இருந்தாலும் அவற்றையும் மீறிய பரவசம். புது இடங்கள், புது மனிதர்கள், குடும்பச் சுமைகள் இல்லாது இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கை இவை புதிய பரிமாணத்தைக் கொடுக்கின்றது. உற்சாகம் கொண்ட மனம் ஆற்றல் பெறுகிறது. எத்தனையோ வருத்தங்களால் சூழப்படும் மனங்கள் இப்படிப்பட்ட சுற்றுலாக்களால் ஆறுதலும் தெம்பும், தைரியமும் பெறுகின்றன. 'ஐயையோ, இந்தப் பிரச்னையை எப்படிச் சமாளிக்கப் போகிறேன்' என்று தலையில் கை வைத்துக் கொள்பவர்கள் கூட இப்படி எங்கேயாவது போய்விட்டு வந்தால் பிரச்னைக்கு ஒரு தீர்வைக் காண முடியும்.

குளிர்காலத்தில் இவர்களை அழைத்துச் சென்று வந்திருந்த இளந்திரையனைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. வெயில் காலத்திலேயே இப்படிப்பட்ட இடங்களுக்கு அழைத்துச் செல்வது கஷ்டம். டிசம்பர் குளிரில் வயதான தம்பதிகள் முதல் திருமணமாகி இரண்டு மாதமே ஆனவர்கள் வரை அழைத்துச் சென்று வந்திருக்கிறார் என்றால் பெரிய விஷயம்தான். இரவு பதினோரு மணிக்கு ''எல்லோரும் போய் ரெஸ்ட் எடுத்துக் கொள்ளுங்கள். நாளைக்கு ஆக்ரா போக வேண்டாமா?'' என்று கூறிக் கொண்டிருந்தார். அவர்களோ கொட்ட கொட்ட விழித்துக் கொண்டு சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

மறுநாள் வழக்கம் போல டெல்லி ஃபாக் பயமுறுத்தலோடு இனிதே சென்னையைத் தொட்டு முதல் வேலையாக ஸ்வெட்டரைத் தூக்கிப் போட்டேன்.

பஸ், ரயில், விமானம் போன்றவற்றில் பிரயாணம் செய்பவர்கள் சிறிது இஞ்சித் துண்டுடன் உப்புத் தூள், லெமன் சாறு விட்டுக் கலந்து ஒரு கவரில் போட்டு, உங்கள் கைப்பையில் எடுத்துச் செல்லுங்கள். அவ்வப் போது இதில் 2 துண்டுகள் என சாப்பிட்டு வந்தால், வாந்தி, பிரட்டல், மயக்கம் என எதுவும் வரும் என்ற பயமே இல்லை. அதோடு நன்கு ஜீரணமும் ஆகும்.

– ஆர். பாவா இராஜேந்திரன்



வீட்டுக்குள் தோட்டம்

போன்சாய்

சி. சுரேஷ், தஞ்சாவூர்.

போன்சாய் முறையில் ஆலமரம் வளர்ப்பது எப்படி? எந்த வகையான மண் இட வேண்டும்?


மலர் கண்காட்சிகளுக்குச் சென்றால் பார்த்திருப்பீர்கள். சின்னத் தொட்டியிலோ மண் தட்டிலோ ஆரஞ்சுமரம், ஆலமரம் போன்ற மரங்களை வளர்த்திருப்பார்கள். உயரம் என்னவோ ஒரு அடிக்கும் குறைவாகத்தான் இருக்கும். ஆனால் மரத்தைப் பார்த்தால் கிளைகள் விட்டு, விழுதுகள், முதிர்ந்த வேர்களுடன் ஒரு 30, 40 வருடங்களைத் தாண்டிய மாதிரியான தோற்றத்தில் இருக்கும். வயது 5, 6 வருடங்கள் என்று எழுதியிருப்பார்கள். உங்களுக்கோ ஆச்சரியமாக இருக்கும். உங்கள் குழந்தைகளுக்கோ குதூகலிப்பாயிருக்கும். "அம்மா, பாரும்மா, சின்னதா பழம் கூட பழுத்திருக்கு" என்று குதிப்பார்கள். நிஜ மரமா என்று தொட்டுப் பார்க்கப் பறப்பார்கள். இதுதான் போன்சாய்.

போன்சாய் என்பது ஜப்பானில் தோன்றிய ஒரு கலை. ஜப்பானியர்கள் உயர உயரமான மரங்களைத் தங்களைப் போன்ற சிறிய ஸைஸில் உருவாக்கிப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டிருப்பார்கள் போல. மரங்களை சிறிய ஸைஸில் வளர்க்கப் பழகி, அதில் உள்ள நெளிவு சுளிவுகளை கற்றுத் தேர்ந்து இன்று போன்சாய் என்ற அருமையான கலையை உலகிற்குக் கொடுத்திருக்கிறார்கள்.

போன்சாய் முறையில் எப்படி மரம் வளர்ப்பது என்று பலரும் எனக்குக் கடிதம் எழுதுகிறார்கள். நேரில் பார்த்தால் கேட்கிறார்கள். உண்மையில் போன்சாய் என்பது அவ்வளவு எளிதில் பழகக் கூடிய வித்தை அல்ல. அதிக கவனம் தேவைப்படும் வித்தை. அதிக செலவு பிடிக்கும் கலை. (இப்போதெல்லாம் வீட்டுக்குள் தோட்டம் என்பதே அதிக செலவு ஏற்படுத்தும் கலையாக இருக்கிறது என்கிறீர்களா... சரிதான்!) ஒரு விதத்தில் பார்த்தால் போன்சாயின் அடிப்படை விதி செடி வளர்ப்பில் ஆர்வமாக இருக்கும் நமக்கு அதிர்ச்சியைக் கொடுக்கும். ஆம்! நன்றாக வளரக் கூடிய செடியைப் பிடித்து, அதன் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தி (ஒரே அடிக்குள் தடுத்து நிறுத்தி!) சாகவும் விடாமல், வாழவும் விடாமல் வளர்ப்பதுதான் போன்சாய் கலை. கஷ்டமாக இருக்கிறதல்லவா!

செடிகள் நன்கு வளர முக்கியமாக என்னென்ன தேவை என்று யாராவது உங்களைக் கேட்டால் பட்டென்று நல்ல மண், வெயில், நீர், உரம் என்று சொல்வீர்கள். சரி ஒரு ஆலமரக் கன்றுக்கு இவை நான்கும் கிடைத்தால் என்ன ஆகும்? செடி கிடுகிடுவென்று வளர்ந்து, மரமாகி, விழுதுவிட்டு, நூறு அடி உயரத்தைத் தொட முயற்சிக்கும். செடியின் உயரம் ஒரு அடியைத் தாண்டக் கூடாது என்றால் என்ன செய்ய வேண்டும்? இந்த நான்கு மூலாதாரங்களையும் 'கட்' பண்ணி விட வேண்டும். அப்படிச் செய்தால் செடிகள் எப்படி வளரும். இறந்து விடாதா என்கிறீர்களா? அதுதான் போன்சாயின் பொன்விதி.

செடிகள் வளரக் கூடாது. ஆனால் சாகவும் கூடாது. குறைந்த மண், வெயில், நீர், உரம் இவற்றைக் கொண்டு செடி வளர வேண்டும். உண்மையில் கண்காட்சியில் நாம் பார்க்கும் போன்சாய்கள் யாவும் கிடைத்த 'இத்தனூண்டு' மண்ணில் உயிரைத் தக்க வைத்துக் கொண்டு இருக்கும் பாவப்பட்ட ஜீவன்கள். அதனால் மிகச் சிறிய வயதிலேயே அவற்றிற்கு முதிர்ந்த 'லுக்' வந்து விடுகிறது. அந்த முதிர்ந்த தோற்றத்திற்குத்தான் காசு! போன்சாய்கள் 200 ரூபாயில் இருந்து பல ஆயிரம்



பதில்கள் :
தோட்டக்கலை நிபுணர்
தண்மதி திருவேங்கடம்

ரூபாய்கள் வரை விலை போகின்றன. மிகச் சின்ன சைஸில் இருக்கும் போன்சாய்களுக்கு விலை அதிகம். அதேபோல் அதிக வயசான போன்சாய்களுக்கும் விலை அதிகம். நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட போன்சாய்கள் என்றால் அவை தொழுவதற்கு ஏற்றவை என்று ஜப்பானியர்கள் மதிக்கிறார்கள். அத்தனை வருடமாக அது இயற்கையை மீறி நிற்கிறதல்லவா?

போன்சாய் முறையில் மரங்களை வளர்ப்பது எப்படி? எல்லாச் செடிகளையும் போன்சாய் முறையில் வளர்க்க முடியாது. அந்த 'வறுமையில் வாடும்' கண்டிஷன் பல செடிகளுக்கு ஒத்து வருவதில்லை. கொஞ்ச நாளைக்கு தாக்குப் பிடித்து பிறகு முடியாமல் இறந்து விடுகின்றன. போன்சாய்க்கு ஏற்றவை என்று பார்த்தால் நம் நாட்டில் ஆலமரம், புளிய மரம், சப்போட்டா, ஆரஞ்சு, West Indian Cherry போன்றவை ஒத்து வருகின்றன.

போன்சாய் முறையில் செடி வளர்க்க பிரத்யேகமான பூந்தொட்டிகள் தேவை. நிஜத்தில் அவை பூந்தொட்டிகளே இல்லை. மண் அல்லது மரத்தாலான தட்டுக்கள். குழிவு அதிகம் இல்லாத 5-7.5 செ.மீ ஆழம் மட்டும் மண் கொள்ளக் கூடிய தட்டையான தட்டுக்கள். 25-30 செ.மீ விட்டத்தில் இருக்க வேண்டும். தட்டுக்கள் பலவிதமான ஷேப்களில் இருந்தால் கூடுதல் 'அட்ராக்ஷன்'.

இந்தத் தட்டுக்களில் கொஞ்சமாக மண் நிரப்ப வேண்டும். மண் என்றால் மண் அல்ல. கொஞ்சமாக மண், அதிகமாக மணல், செங்கல் துண்டுகள், கரிப்பொடி, சிறு கற்கள் ஆகியவை கலந்த கலவை. செங்கல் பொடி, கரிப்பொடி ஆகியவை சாதாரணமாகவே செடிகளின் வளர்ச்சியை பெரிதாகக் கட்டுப்படுத்தும். மணல், சிறு கற்களில் சத்து எதுவும் இருக்காது. ஆக, இப்படிப்பட்ட மண்ணில் மரக் கன்றை நட்டால், அது சரியான உணவு கிடைக்காமல் வளர்ச்சிக் குன்றி இருக்கும்.


மேலும் வளர்ச்சி குன்றுவதற்கு (உயரம் ஒரு அடியைத் தாண்டக் கூடாதல்லவா?) செடி வளர வளர அதன் முனையையும் பக்க கிளைகளையும் கிள்ளிவிட்டவாறே இருக்க வேண்டும். தண்ணீர் மிகக் கொஞ்சமாக சொட்டுக்கள் கணக்கில் அவ்வப்போது விட வேண்டும். செடியை அதிக நேரம் வெயிலில் வைத்திருக்கக் கூடாது. வைத்திருந்தால் அது சூரிய வெளிச்சத்தில் உணவு தயாரித்து வளர ஆரம்பித்து விடும். அடிக்கடி வீட்டுக்குள் நிழலில் வைத்திருக்க வேண்டும். அவ்வப்போது தொட்டி விட்டு தொட்டி மாற்ற வேண்டும். அப்போது அதிகமாக வளர்ந்துள்ள வேர்களை வெட்டிவிட வேண்டும். கொஞ்சமாக எரு போட்டு செடியை பிழைத்திருக்கச் செய்ய வேண்டும்.

ஆக மொத்தத்தில் பார்த்தால் செடி வளர்ப்பில் எப்படியெல்லாம் தொந்தரவு பண்ண முடியுமோ அப்படியெல்லாம் பண்ணி, அதிகம் வளர விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். போதாதற்கு போன்சாய் செடிகளை கம்பிகளைக் கட்டி, பலவித ஷேப்களில் வளருமாறு செய்யலாம்– நேராக, வளைந்ததாக, காற்றில் சாய்ந்த வாகாக என்று.

ஆக, போன்சாய் என்பது கடினமான கலை, கொஞ்சம் அதிகமாக நீர் விட்டோமானால், எரு போட்டோமானால், செடி கிடுகிடுவென்று வளர்ந்துவிடும். அப்புறம் இத்தனை நாள் கஷ்டப்பட்டதெல்லாம் போயே போச்! செடி வளர்க்கத்தான் கஷ்டப்பட வேண்டியிருக்கிறதென்றால், செடி வளராமலிருக்கவும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறதே என்கிறீர்களா?

வெண்ணெய் காய்ச்சும் போது சில சமயங்களில் மறதியால் முறுகி விடக்கூடும். அப்போது கடைந்த மோரை சிறிதளவு (ஓசை நன்கு அடங்கும் வரை) அதில் ஊற்றினால் நெய் முறுகிய வாசனை வராமல் நன்றாக இருக்கும்.

– லெக்ஷ்மி வெங்கட்ரமணி.



சுற்றுலா, நாங்க அழைத்துப் போகிறோம்!

கே.ஈ. நாம்பிள்ளை (ஸ்ரீ நாமகிரி டிராவல் சர்வீஸ்)



நம் பாரத தேசம் சுதந்தரம் அடைந்ததும் தேசியத்தில் ஈடுபாடு கொண்ட நான் 'நேஷனல் டிராவல் சர்வீஸ்' என்ற பெயரில் 1954-ஆம் வருடத்தில் ஒரு யாத்திரை நடத்தும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து ரயில் மூலமாக நம் தென்னாட்டு யாத்ரீகர்களை வட இந்தியாவில் உள்ள முக்கிய ஷேத்திரங்களுக்கு சுமார் 50, 65, 75 நாட்கள் கொண்ட யாத்திரையாக சுமார் ஏழு வருடங்களாக போய் வந்து கொண்டிருந்த போது நாட்டில் தேசியம் குறைந்து வரும் சமயம் நேஷனல் என்ற வார்த்தையை எடுத்து விட்டு அதற்கு பதிலாக வேறு பெயர் வைக்க எண்ணியிருந்தேன். நான் முன்பு அடிக்கடி சேலம் போய் திரும்பி வரும்போது நாமக்கல் ஆஞ்சநேயரை வணங்கி பிரார்த்தனை செய்து



வருவது வழக்கம். பிரார்த்தனை செய்த போது ஏதோ ஓர் அசரீரி போன்ற ஓசை ஏற்பட்டு 'உன் யாத்திரை கம்பெனிக்கு நாமகிரி என்ற பெயரை வைக்கவும்' என்று உத்தரவு வந்ததால் நாமசங்கீர்த்தனம் பாடி கிரிவலம் வருவது போன்ற உணர்வு ஏற்பட்டதன் காரணமாக 'நாமகிரி டிராவெல் சர்வீஸ்' என்ற பெயரை அமைத்தேன்.

ஒரு காலத்தில் திருப்பதி திருமலைக்குப்' போய் வந்தவர்கள் தங்கள் நெடு நாளைய யாத்திரை கனவு பூர்த்தியாகி விட்டதாகக் கருதினார்கள். மேலும் சிலர் வட இந்தியாவில் உள்ள காசி, கயா, அலகா பாத், கேதார் நாத், பத்ரிநாத், நேபாள் ராஜ்யத்தில் உள்ள பசுபதிநாத் மானச ரோவர் போன்ற புண்ணிய ஷேத்திரங்களுக்குப் போய் வர வேண்டும் என்றால் முக்கியமாக உணவு, மொழி, தங்கும் இடவசதியின் பிரச்னையினால் வட இந்திய யாத்திரை மேற்கொள்ள தயங்கிய காலம் உண்டு. இத்தகைய பிரச்னைகளை தீர்க்க வேண்டி சென்னை மாநகரிலேயே முதன் முதலாக தனி ரயில் பெட்டி மூலம் சகல வசதிகளுடன் கூடிய வட இந்திய யாத் திரைக்கு ஏற்பாடு செய்தோம்.

எங்களால் நடத்தப்படும் வட இந்திய யாத்திரை ஸ்பெஷல் ரயில் கேரேஜில் 72 நபர்களுக்குத்தான் இடவசதி உண்டு. அதில் எங்கள் கம்பெனி சிப்பந்திகள் 10 அல்லது 12 பேர் போக 60 நபர்களைத்தான் பதிவு செய்து அழைத்துப் போய் வருகிறோம். பொதுவாக தற்காலத்தில் எங்கள் சர்வீஸில் வருபவர்கள் பெரும்பாலும் வயதானவர்கள். ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்டவர்களே வருகிறார்கள்.

ஒரு சிலர் கோயில் தரிசனத்தை இரண்டாவதாக வைத்து பஜாருக்குப் போய் வருவதும் அபூர்வ பொருள்களை வாங்குவதும் உண்டு. மற்றும் சிலர் வீட்டில் உள்ள வசதியைப் போல் ஓடும் ரயில் வண்டியிலும் ஷேத்திரங்களில் தங்கும் இடங்களிலும் நல்ல வசதியை கேட்பதுண்டு. அதற் கெல்லாம் சரி செய்து அவர்கள் மனம் கோணாமல் நடத்தி வருகிறோம்.

மேலும் ஆச்சார அனுஷ்டான விதிகளுடன் வருபவர்கள் விருப்பப்படி கயா, காசி, அலகாபாத், பத்ரிநாத்தில் உள்ள பிரம்ம கபா

லம் போன்ற புனித ஸ்தலங்களில் ஸ்நான சங்கல்பம் மற்றும் வைதீக விசேஷங்களுக்கு சாஸ்திரிகளை ஏற்பாடு செய்து அவர்கள் மன நிறைவு பெறும்படி செய்கிறோம்.

ஒரு நாளைக்குக் காலை டிபன், காப்பி, மதியம் சுவையான சாம்பார் கூடா காய பருப்பு ரசம், இஞ்சி தொக்கு, ஆவக்காய் ஊறுகாயுடன் தயாரித்து யாத்திரை வாசிகளுக்கு அளிப்பதுடன் இரவில் பூரி, சப்பாத்தி, இட்லி, ஊத்தப்பம் போன்ற பலகாரங்களும் உண்டு. இதில் ஒரு விசேஷம் என்னவென்றால் இட்லி மாவு அரைப்பதற்கு ஒரு அரவைக் கல்லும் எங்களுடன் பலமுறை யாத்திரைக்கு வந்துள்ளது. சாப்பாட்டு வசதிக்காக ஒரு மளிகைக் கடையே உடன் வருகிறது. காய்கறிகள், தயிர் இவைகளைத் தவிர மற்ற அனைத்துப் பொருள்களையும் நாங்கள் இங்கேயே தயார் செய்து கொள்கிறோம்.

தென்னக ரயில்வே எங்களுக்கு வேண்டிய தனி கேரேஜ் அலாட்மெண்ட் ஆர்டர் கொடுத்து உதவி செய்கிறது என்றாலும் எங்களது கேரேஜில் ஒரு 5 வயது குழந்தை பிரயாணம் செய்ய வேண்டுமானாலும் அதற்கு முழு டிக்கெட் வாங்க வேண்டும் என்கிறார்கள். ஆனால் அதே குழந்தைக்கு சாதாரணமாக ரயிலில் பிரயாணம் செய்யும் போது அரை டிக்கெட் வாங்கப்படுகிறது. இதனால் குழந்தைகளுடன் வர எண்ணும் குடும்பத்தினர்கள் பெரும் ஏமாற்றம் அடைகிறார்கள். ரயில்வே இலாகா இந்தச் சலுகையை மீண்டும் தனி கேரேஜில் வரும் குழந்தைகளுக்கு (5 வயது முதல் 12 வயது வரை உள்ளவர்களுக்கு) அரை டிக்கெட்டாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். மற்ற ஊர்களில் உள்ளது போல் ரயில் கேரேஜை நிறுத்தி வைக்க தனியாக டூரிஸ்ட் சைடிங் ரயில்வே பிளாட்பாரம் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இல்லை. இதை நமது தென்னக ரயில்வே மானேஜர் செய்து கொடுத்தால் யாத்ரீகர்களின் வாழ்த்துகளுக்கு உகந்தவர்கள் ஆவார்கள்.

எங்களது பிரார்த்தனை: சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திலிருந்து எமது யாத்திரை ஸ்பெஷல் புறப்படும்போது வழி அனுப்ப வரும் உறவினர்கள் எல்லாம் ஆனந்தக் கண்ணீருடன் கைகளை அசைத்து, 'உடம்பை பார்த்துக் கொள்ளவும்', 'அடிக்கடி கடிதம் போடவும்', 'மருந்து மாத்திரைகளை தவறாது சாப்பிடவும்' என்று சொல்லி வழி அனுப்பும் போது 'ஈஸ்வரா இவர்களையெல்லாம் நல்லபடியாக திரும்ப அழைத்து வர உன் பாதகமலங்களை வேண்டிக் கொள்கிறோம்' என்று மனதில் எண்ணிக் கொண்டு எங்களது யாத்திரை பணியினை தொடர்ந்து நடத்தி வருகிறோம்.



ஆண்களுக்கு

இருபத்தியோராம் நூற்றாண்டை நோக்கி சென்று கொண்டிருக்கும் இந்த நாகரீக உலகில், அழகு என்ற உணர்வு பெண்களுக்கும் மேலாக ஆண்களுக்கு அதிகம் ஏற்படுகிறது. விமானப் பணியாளர்கள், நடிகர்கள் போன்றவர்கள் மட்டுமே முடி திருத்தத்தைத் தவிர முகம், உடல் போன்றவற்றை அழகு செய்து கொள்வார்கள். ஆனால் இன்று இந்த ஆசை இளைஞர்கள், நடுவயது ஆண்கள் என அனைவருக்கும் ஏற்படத் தொடங்கியுள்ளது. இது ஒரு நல்ல அழகான ஆரோக்கியமான சமுதாயம் உருவாகிறது என்பதன் அறிகுறியே.

சென்ற இதழில், பருவ வயதைக் கடந்து பொறுப்பை அறிந்து முன்னேறத் துடிக்கும் வயது வரை உள்ள ஆண்கள், எவ்வாறு அழகாய் விளங்கலாம் என்று பார்த்தோம். இனி எந்த வயதிலும் அழகாய் தோன்ற முடியும் என்று, அதற்காக எடுத்து கொள்ள வேண்டிய முயற்சிகள் என்ன என்பதை நிபுணர்கள் கூறுவதைப் பார்ப்போம்.



பெண்களைக் கவரும் வண்ணம் தோற்றம் பெற விரும்பும் இளைஞர்களிடம் அவர்களுடைய நறுவிசான தோற்றம், நிமிர்ந்த நடை, உயர்ந்த தோள்கள், அடக்கமான வயிறு, அமைப்பான உடற்கட்டு என இவற்றைத்தான் பெரிதும் பெண்கள் விரும்புகின்றனர். இத்தகைய உடற்கட்டைப் பெற கருவிகளைக் கொண்டு பயிற்சி செய்வது மிக அவசியம் என்கிறார் 'இமேஜ் ஹெல்த் ஸ்பா' என்ற உடற்பயிற்சி அழகு நிலையத்தின் உரிமையாளர் மற்றும் பயிற்சியாளரான திரு. ராஜசேகர்.

"உடற்கட்டு அழகாக விளங்க அந்நாள் முதல் இன்று வரை பலர் பஸ்கி எடுப்பது, தண்டால் எடுப்பது, பளு தூக்குவது போன்ற பயிற்சிகளை செய்து வருகின்றனர். இன்று நாகரீக உலகில் சில நவீன கருவிகள் இதே போன்ற பயிற்சிகளை செய்ய உதவுகின்றன. உதாரணமாக மார்பு விரிந்து, தசைகள் வலுவுடைய 'பெஞ்ச் ப்ரெஸ்', 'பெக்டாக்', தோள்கள் வலுவுடைய 'ஷோல்டர் ப்ரெஸ்', இடைப் பகுதி வலுப்பெற 'லாட்ஸ் மெஷின்', கால்களும் தொடைகளும் உறுதியடைய 'லெக் கர்ல்ஸ் ஸ்குவாட்ஸ் மெஷின், லெக் ப்ரெஸ்', மற்றும் சைக்கிள் ஸ்டெப்பர், ட்விஸ்ட்டர் என பல கருவிகள் பயன்படுத்தப் படுகின்றன. இந்த கருவிகளில் பயிற்சி செய்வதற்கு முன் 'புல் அப்', 'புஷ் அப்' பயிற்சிகளை செய்ய வேண்டியது மிக அவசியம்.



பொதுவாக நல்ல உடல் நிலையில் இருப்பவர்கள் ஐந்து நிமிட 'வார்ம் அப்' என்ற சூடேறும் பயிற்சிக்குப் பிறகு, சுமார் முப்பது நிமிட உடற்பயிற்சி செய்வது நல்லது. இதில் முதல் பதினைந்து நிமிடங்கள் தொடர்ந்து 'ஏரோபிக்' உடற்பயிற்சிகள் செய்ய வேண்டும். ஆனால் உடல் பருமனாக உள்ளவர்கள் 'ஏரோபிக்' பயிற்சி செய்யக் கூடாது. இதனால் கால்களில் முட்டிப் பகுதி பாதிக்கப்படும். எல்லா உடற்பயிற்சிகளைச் செய்யும் போதும், முப்பது நொடிகளில் இருந்து ஒரு நிமிடம் வரை ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும். நாளாக நாளாக, ஓய்வெடுக்கும் நேரத்தைக் குறைத்துக் கொண்டே வரலாம். இவ்வாறு



பயிற்சிகளை செய்ய உணவுக் கட்டுப்பாடு, நல்ல பழக்க வழக்கங்கள் ஆகியவை மிக முக்கியம். புலால் உண்பதைத் தவிர்ப்பது நல்லது. புகை பிடிப்பது போதை மருந்துகள் உட்கொள்வது, மது அருந்துவது முதலியவற்றை கட்டாயமாக செய்யக் கூடாது. கராத்தே, குங்ஃபூ போன்ற மார்ஷியல் ஆர்ட்ஸ் உடற் பயிற்சிகளை செய்வதும், உடற்கட்டை உறுதிப்படுத்தும். மணமாவதற்கு முன் அழகான உடற்கட்டுடன் இருப்பது ஆண்களுக்கு ஒரு வரப் பிரசாதம். இனிமையான வாழ்க்கைக்கு ஓர் இன்ஷூரன்ஸ்!

திருமணமான பிறகு உடற் பயிற்சியில் நாட்டம் செலுத்துவதைப் பெரும்பாலோர் விட்டு விடுகின்றனர். உல்லாச வாழ்க்கை, கேளிக்கைகள், கட்டுப்பாடு இல்லாத உணவு போன்றவை உடலில் எடையும், கொழுப்பு சத்தும் ஏறுவதற்குக் காரணமாகின்றன. மேலும் இருபத்து ஐந்து வயதிற்கு மேல், தசைகள் தளர்ந்து விடுகின்றன. இவ்வாறு முற்றிலும் பயிற்சிகள் செய்வதை விட்டு விடாமல் வாரத்தில் மூன்று நாட்களாவது தொடர்ந்து உடற்பயிற்சி செய்தால் உடற்கட்டு தளர்ந்து போகாமல் காத்துக் கொள்ளலாம்.

உணவில் கொழுப்புச் சத்து, எண்ணெய், அரிசி முதலியவற்றைக் குறைத்து காய்கறிகள், சாலட் வகைகள், பழ ரசங்கள், தானிய வகைகள் ஆகியவற்றை சாப்பிடலாம். அரிசி சாதம் வயிற்றுப் பகுதி விரிவடைய உதவுகிறது. கோதுமை உணவு இதைத் தடுக்கிறது. அதனால் குறிப்பாக இரவு உணவில் சாதத்தை விட்டுவிட்டு சப்பாத்தி போன்றவற்றை சாப்பிடுவது நல்லது.



உடல் அழகிற்கு இணையாக முக அழகும் முக்கிய இடம் பெறுகிறது. வேலையில் புதிதாக சேரும் போது முகப் பொலிவு பெரும்பங்கு வகிக்கிறது. மேலும் இன்றைய அலுவலகங்களில் பல நிலைகளில் பணி புரிபவர்கள் அன்றாடம் வாடிக்கையாளர்களை அல்லது

அழகு!





முக்கிய பிரமுகர்களை நேரிடையாக சந்தித்துப் பழக வேண்டிய நிலை உருவாகி உள்ளது. அதனால் இளைஞர்கள் ஒவ்வொருவரும் முக அழகு முதல், உடலின் பல பகுதிகள் பொதுத் தோற்றம் வரை முக்கிய கவனம் செலுத்த வேண்டிய நிலையிலிருக்கின்றனர். இதனால் இன்று ஆண்களுக்கென அழகு நிலையங்கள் பல இருக்கின்றன. ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் இருப்பதோடு மட்டுமல்லாமல், சாதாரண மக்களும் பயன் பெறும் வகையில் பல இடங்களில் அழகு



குழந்தைகளுக்குப் பவுடர் பூச பெரும்பாலும் பஞ்சுகளையே பயன்படுத்துகிறார்கள். இது தவறு. குழந்தையின் வாயிலும் காதிலும் மூக்கிலும் பவுடர் போவதற்கு வாய்ப்புண்டு. சிறிது பவுடரை உள்ளங்கையில் எடுத்து தேய்த்துக் கொண்டு குழந்தைகளுக்குப் பூசுவதே மிகச் சிறந்த வழியாகும்.

– ஆர். சுஜாதா

நிலையங்கள் இயங்குகின்றன. இங்கு ஆண்களை எவ்வாறு அழகுபடுத்துகிறார்கள் தெரியுமா?

தலைமுடிக்கு ஊட்டமளிக்கும் ஹேர் ஆயில்களைக் கொண்டு மஸாஜ் செய்கின்றனர். இதனால் தலைமுடி பளபளப்பாக வளர வழி செய்கிறது. விரும்புவோருக்கு 'ப்ளீச்' செய்யப்பட்டு தலைமுடி பொன்னிறமாக்கப்படுகிறது. இதே போல் 'ஸ்டிரீக்கிங்' என்ற முறையில் தலைமுடிக்குத் தேவையான நிறச் சாயம் தடவி, நிறம் மாற்றப்படுகிறது. இவையெல்லாம் சில நாட்களுக்குத்தான் நிலைக்கும். பிறகு திரும்பக் கறுப்பு நிறத்திற்கு மாறி விடும். இம்முறை இன்றைய இளைஞர்களிடம் மிகவும் பிரபலமாகி வருகிறது.

முகத்திற்கு ஆழ்ந்து சென்று சுத்தப்படுத்தும் 'கிளீன்ஸிங் மில்க்' தடவப்பட்டு முகத்தில் உள்ள கறுப்பு நிற, வெள்ளை நிற அழுக்குகள் (BLACK HEADS, WHITE HEADS) நீக்கப்படுகின்றன. பிறகு தளர்ந்து உள்ள முகம் இறுக்கமடைய 'ஃபேஸ் பாக்' போடப்படும். இதனால் முகத்திற்கு நல்ல இரத்த ஓட்டம் ஏற்பட்டு மனதிற்கு அமைதியை அளிக்கின்றது. முகத்தில் அதிக அளவு நீர் கோத்துக் கொண்டிருந்தால் அவற்றை நீக்க 'தெர்மோ ஹெர்ப் பேக்' என்ற மூலிகையில் ஆன பேக் போடப்படுகிறது.

புருவங்கள் அதிக அளவு முடி வளர்ச்சியுடன் இருந்தால் அவை நூல் கொண்டு 'த்ரெட்டிங்' என்ற முறையில் திருத்தப்படுகின்றன. மார்பு பகுதியில், கைகளில், கால்களில் வளரும் அதிக அளவு முடியும் இதே முறை

யில் நீக்கப்படுகின்றன. கைகளில் உள்ள நகங்களில் அழுக்குகள் நீக்கப்பட்டு நகம் வெட்டப்படுகிறது. அதன் மேல் 'ப்ரெஞ்ச் பாலிஷ்' போடப்பட்டு நகங்கள் பளபளப்பாக் கப்படுகின்றன. இதே முறையில் கால் நகங் களும் சிராக்கப்படுகின்றன.

வாழ்க்கையிலும் சரி, பணி புரியும் இடத்தி லும் சரி ஒரு பிடிப்பு ஏற்படக் கூடிய வயது ஆண்களுக்கு சுமார் முப்பத்தி ஐந்து. இதனை நடு வயது என்றும் கூறலாம். இந்நிலையில் வீட்டிலும், அலுவலகத்திலும் நிறைய 'டென் ஷன்' ஏற்பட வாய்ப்புண்டு. இதனால் மன அழுத்தம் ஏற்பட்டு உடலின் மற்ற அங்கங்கள் பாதிக்கப்படுகின்றன. மூளையில் உருவாகி வந்த செல்கள் மெதுவாக அழியத் தொடங்கு கின்றன.

முப்பத்தி ஐந்து வயதிற்கு மேற்பட் டோருக்கு அன்றாடம் ஒரு லட்சம் 'செல்கள்' அழிகின்றன. இதனை தடுக்க முடியாது. ஆனால் உடற் பயிற்சி செய்வதன் மூலமாக குறிப்பாக யோகாசனப் பயிற்சி செய்வதன் மூலம் அழியும் செல்களின் எண்ணிக்கையைக் குறைக்கலாம். அதோடு டென்ஷனினால் ஏற் படும் மன அழுத்தமும் குறையும். இந்நாளில் இந்த வயதிலிருந்தே நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம் நோய் போன்றவை பல ஆண்களுக்கு ஏற்பட்டு விடுகின்றன. இத்தகை யோர் கருவிகளின் துணை கொண்டு உடற் பயிற்சிகளைச் செய்யக் கூடாது. யோகாசனப் பயிற்சிகளைத் தகுந்த பயிற்சியாளர்களின் கண்காணிப்பில் செய்வது நல்லது. இவர் களுக்கு நீச்சல் மற்றும் நடைப் பயிற்சியே சிறந் தது.

நாற்பது வயதாகும் போது ஆண்களில் பலர் தோற்றத்தில் பல மாறுதல்களை அடைந்து விடுகின்றனர். பதவியில் ஏற்றம் பெற்ற காரணத்தினால் அடிக்கடி வெளியில் உணவு உண்ண வேண்டிய நிலை ஏற்படுகிறது. மதுபானம், கொழுப்பு சத்து நிறைந்த உணவு போன்றவற்றை உண்பதால் வயிற்றில் தொந்தி விழுந்து விடுகிறது. உடற்கட்டை இழந்ததும் மனதிலும் ஒரு தளர்ச்சி ஏற்பட்டு வாழ்க்கை யில் பிடிப்பு குறையத் தொடங்குகிறது. இந்த நிலை மிகவும் அபாயமானது. தகுந்த முயற்சி களை உடனே எடுக்காவிட்டால் இடைரெ..ா வயதான தோற்றம் ஏற்பட்டு விடக் கூடும்'

"முதலில் உடற்கட்டை சீராக்க வயிற்றைக் கட்டுப்படுத்தி குறைக்க முயல வேண்டும். தொந்தி குறைய கால்களுக்குப் பயிற்சி தரக் கூடிய உடற் பயிற்சிகளை செய்ய வேண்டும். ஜாகிங், நீச்சல், கராத்தே, ஏரோபிக்ஸ் பயிற்சி போன்றவற்றை உடல் நிலை சீராக உள்ளவர் களும் உடல் சுகமில்லாதவர்கள் நடைப்

உங்கள் கவனத்திற்காக!

- உடற்பயிற்சிகளை துவங்கும் முன் உங்கள் உடல் ஆரோக்கியத்தை பரிசோதனை செய்து கொண்ட பின்பே பயிற்சி செய்யுங்கள்.
- உடற்பயிற்சி செய்யும் முன் 'வார்ம் அப்' செய்வது போல் பயிற்சி முடித்த பின் படுத்து உட்காருதல் (Sit ups) அல்லது மெதுவாக ஐந்து நிமிடத்திற்கு ஓடுவது போன்ற 'கூல் டவுன்' பயிற்சியும் செய்ய வேண்டும்.
- அதிக 'ஸ்ட்ரெஸ்' கொண்ட வேலைகளை செய்வோர் உடலை தளர்த்திக் கொள்ளக் கூடிய 'மஸாஜ்' போன்ற முறைகளை செய்து கொள்ளலாம்.
- தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெயை லேசாக சூடாக்கி சில சொட்டுகள் வாசனை திரவியம் சேர்த்து உடலை முழுதும் தடவி தேய்த்துக் குளித்தால் சோர்வு நீங்கி உடலில் புத்துணர்ச்சி தோன்றும்.
- உணவில் சமைக்காத காய்கறிகளை அதாவது சாலட் வகைகளை கட்டாயம் சேர்த்துக் கொள்ளுங்கள். இவை உடலை சுத்தம் செய்வதோடு முகப் பொலிவை அதிகரித்து முகம் பளபளப்பாக இருக்க உதவும்.
- வேலையின் காரணமாக உணவை உட்கொள்ள மறக்காதீர்கள். இதனால் உடல் இளைக்காது. அடுத்த வேளை அதிகம் சாப்பிடுவதால் உடல் பெருத்துப் போகும்.
- உடலில் நீர் அதிகமிருக்கிறதென தானே நீரை வடிக்கும் மருந்துகளை சாப்பிடாதீர்கள். இதனால் தண்ணீர் குடித்தால் பருமனாகுமென தண்ணீர் குடிக்காமலிருக்காதீர்கள். உணவிற்கு நடுவே தண்ணீர் குடித்தால் கூட தவறில்லை. ஜீரணம் கெடாது.
- மதுபானத்தை சிறிதளவு உட்கொண்டால் உடலுக்குக் கெடுதல் இல்லை என்று நினைக்காதீர்கள். மதுபானம் வயிற்றில் பசியை அதிகரிக்கும்.
- நாற்பது வயதாகி விட்டால் மூளையின்

பயிற்சியும் விடாமல் செய்ய வேண்டும். யோகாசனப் பயிற்சியில் பஷிமோத்தாசனம், வக்ராசனம், தனுராசனம் போன்ற சில குறிப்பிட்ட பயிற்சிகளை செய்வதால் அடி வயிற்றைக் குறைத்து உடற்கட்டை சீராக்கலாம். உணவு கட்டுப்பாடு, சீரிய பழக்க வழக்கம் மிகவும் முக்கியம்" என்கிறார் ராஜசேகர்.

குடி, புகை பிடிக்கும் பழக்கமுடையவர்கள் அதைத் தவிர்க்கப் பழகிக் கொள்ள வேண்டும். புகை பிடிப்பது நுரையீரலை பாதிப்பதோடு, சீரான இரத்த ஓட்டத்தையும் பாதிப்பதால் சுருக்கங்கள் விழுந்து, சருமம் உலர்ந்த



வேகம் குறைந்து விடும் என்றோ உடலில் தெம்பு இருக்காது என்றோ தவறாக எண்ணாதீர்கள். ஹென்றி போர்டு தனது நாற்பதாவது வயதில்தான் போர்டு கம்பெனியை தொடங்கினார். மைக்கேல் ஃபாரடே நாற்பதாவது வயதில்தான் மின்சார ஜெனரேட்டரை கண்டுபிடித்தார்.

- மனைவியுடன் அதிகம் சண்டை போடாத ஆண்களுக்கு அதிக இரத்த அழுத்த நோய் வரும் வாய்ப்பு குறைவு. இருதய நோய் வரும் வாய்ப்பும் இருபது மடங்கு குறைவு.
- ஆண்கள் அனைவரும் ஹெபடைடிஸ்-பி நோயை தடுக்கும் ஊசியைப் போட்டுக் கொள்வது நல்லது.
- தூக்கத்தைக் குறைக்காதீர்கள். சரியான அளவு தூங்குவது உங்கள் ஆயுளை நீடிக்கும்.
- உங்கள் வேலையை விரும்பிச் செய்யுங்கள். வேலையில் திருப்தி இல்லாத ஆண்கள் மன அழுத்தத்தினால் பாதிக்கப்படுவர். இது உங்கள் தோற்றத்தைப் பாதிக்கும்.
- உங்கள் தோற்றம் வயதானதாக மாறுவதை கண்களைச் சுற்றி தோன்றும் வரிகள் காட்டிக் கொடுக்கும். அதனால் கண்களைச் சுற்றியுள்ள பகுதிக்கு அதிக கவனமளியுங்கள்.
- அடுத்ததாக சிரித்தால் கன்னத்திலும், வாயைச் சுற்றியும் வரிகள் தோன்றும். இதற்காக சிரிக்காமலிருக்க வேண்டாம். அழகு நிலையங்களில் தருந்தபடி மஸாஜ் செய்து கொள்ளுங்கள்.
- அனைத்திற்கும் மேலாக ஆண்டவன் உங்களுக்கு அழகிய தோற்றத்தை தராததற்காக மனம் ஒடிந்து போகாதீர்கள். கரடுமுரடான தோற்றம் இருந்தாலும் கவிதை நயத்துடன் இருந்த பல ஆண்கள் எத்தனையோ சாதித்துள்ளனர். பெர்னார்ட்ஷா போன்ற, வயது முதிர்ந்த தோற்றமுடைய பலர் சாதித்துள்ளதை மனதில் கொண்டு முயற்சி செய்யுங்கள்! வெற்றி நிச்சயம்!

தோலைப் போல் காட்சியளிக்கிறது. குடிபானங்கள் இரத்த நாளங்களை விரிவடையச் செய்கின்றன. அதனால் முகம் சிறிது வீங்கியது போல் காட்சியளிக்கும். அதனால் இந்த பழக்கங்களை ஆண்கள் தவிர்ப்பது அவர்கள் தோற்றப் பொலிவிற்கு வழி வகுக்கும்.

அழகான தோற்றமுடையவர்களாக விளங்க ஆசையிருப்பினும், உடலமைப்பை கட்டுக்குள் கொண்டு வர உணவுக் கட்டுப்பாட்டிலும், உடற்பயிற்சியிலும் முடியாது போன சிலருக்கு, மருத்துவ உலகம் கை கொடுக்கிறது. இவர்களின் ஏக்கத்தினைத் தீர்க்கும் வழி வகைகளைப் பற்றி விளக்குகிறார் (அப்போலோ மருத்துவமனை) அழகு



அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் முருகேசன்.

"லிப்போசக்ஷன் என்றால் உடலில் உள்ள அதிகமான கொழுப்பை உறிஞ்சி வெளியே எடுப்பது என்று பொருள். உட்கொள்ளும் உணவில் கொழுப்பு சத்து அதிகமாக இருந்தால், அதை உட்கொள்பவர்கள் உடற்பயிற்சி செய்யாதவர்களாயிருந்தால் உடற்கட்டை இழந்து தொப்பை விழுந்த தோற்றத்திற்கு ஆளாகிறார்கள். இந்த நிலையை மாற்ற முன்பு 'லிபோக்டமி' என்ற முறையில் அறுவை சிகிச்சை செய்து வந்தோம். அதில் பத்து முதல் பன்னிரெண்டு இஞ்ச் அளவு தையல் போடப் படும்.

இப்போது 'லிப்போசக்ஷன்' முறையில் எந்தப் பகுதியிலிருந்து கொழுப்பை நீக்க வேண்டுமோ அதற்கு சற்று தள்ளி அரை முதல் ஒரு சென்டிமீட்டர் அளவிற்கு சிறு துளைகள் இரண்டு போடப்பட்டு அதன் மூலம் நீண்ட மெல்லிய இரும்புக் குழாய்களை செலுத்தி, ஒரு இயந்திரம் மூலம் எதிர் மறை அழுத்தம் உண்டாக்கி, கொழுப்பை வெளியே உறிஞ்சி எடுத்து விடுகிறோம். இவ்வாறு செய்வதினால் 600 சி.சி. முதல் 3000 சி.சி. வரை அதாவது மூன்று கிலோ எடையளவிற்குக் கொழுப்புச் சத்து நீக்கப்பட்டு விடுகிறது.

சிகிச்சை முடிந்ததும் இரண்டு தையல்கள் போடப்படும். இரண்டு நாட்கள் மருத்துவ மனையிலிருந்தால் போதும். ஒரு வாரம் வரை வயிற்றில் கட்டு போடப்படும். கொழுப்பு நீக்கப்பட்ட இடத்தில் சுருக்கம் ஏற்படும். நாளடைவில் உள்ளே தசைகளுடன் இது நெருங்கிச் சேர்ந்து விடும்.

சர்க்கரை வியாதி, அதிக இரத்த அழுத்தம் உள்ளவர்கள் கூட, தகுந்த சிகிச்சையுடன் இந்த வகை சிகிச்சையை மேற்கொண்டு மிகவும் பயனடையலாம். ஒருமுறை கொழுப்பு செல்களை நீக்கி விட்டால் அவை மீண்டும் வளர்வது கடினம். அதனால் உடல் பருமன் மீண்டும் அதிகம் கூடாது. ஆனாலும் உணவில் கட்டுப்பாடும் மிக எளிய உடற் பயிற்சியும் அவசியம்."

உடற்கட்டை இவ்வழிகளில் சீராக்கிக் கொள்வதோடு முகத் தோற்றத்தையும் சரி செய்து கொள்ளலாம். பருமனின் காரணமாக கன்னம் கொழுத்துப் போயிருந்தால் அதனையும் ஊசி மூலம் நீக்கலாம்" என்கிறார் டாக்டர் முருகேசன்.

மனித உடலில் தோல் என்பது ஒரு முக்கியமான பகுதி. அதோடு மட்டுமல்ல. மிகவும் கவனிக்கப்பட வேண்டிய பகுதியும் கூட. ஒருவரது வயது ஏற ஏற தோலில் உள்ள NMF (Natural Moisturizing Factors) குறைந்து கொண்டே வருகிறது. அதாவது ஈரத்தன்மை குறைந்து தோல் வறண்டு போகிறது. அதனால் முகத்தின் மென்மையை தக்க வைத்துக் கொள்ள மாய்ஸ்டுரைஸர்ஸ் (Moisturisers) உதவி கொண்டு தோலைப் பாதுகாக்க வேண்டும். வயதாகும் போது முகத்தில் உள்ள தோலில் சுருக்கங்கள் விழுகின்றன. இதனை நீக்குவதென்பது சருமத்தில் உள்ள உயிர் அணுக்களை புத்துணர்ச்சிப் பெற செய்வதே. இதற்கு மெல்லிய கதிர்களின் மூலம் சீரம் (SERUM) ஒன்றைச் சருமத்தில் செலுத்தி உயிர் அணுக்களை புத்துணர்ச்சிப் பெறச் செய்து சருமத்தை மிருதுவாக்கி விடுகின்றனர் கருவிகளின் உதவியோடு அதாவது 'பேஸ்-லிப்ட் மெஷின்' கொண்டு தொய்ந்து போன முகத்தை சீர்செய்கின்றனர். இதில் மெல்லிய கதிர்கள் மூலம் முகத்தில் உள்ள சதைப் பகுதியை மெல்லியதாக இழுத்து உறுதியாக்கி, தொங்கு சதையைச் சீராக்குகின்றனர். லேசர் சிகிச்சை மூலம் முகத்தில் தோன்றும் தழும்புகளையும் நீக்கி விடுகின்றனர்.

நாற்பது வயதிற்கு மேற்பட்டோர் பலருக்கு ஏற்படும் மற்றொரு பிரச்னை வழுக்கை விழுவது. இது அநேகமாக பரம்பரையாக ஏற்படுவதே. சில சமயம் உடலில் உள்ள ஹார்



ஒரு சமயம் என் அப்பாவின் இந்திக்கார நண்பர் வீட்டிற்கு விருந்திற்குச் சென்றிருந் தோம். அப்போ தயிர் சாதத்திற்கு தொட்டுக் கொள்ள ஊறுகாய் (ஆச்சார்) கேட்டதால், அது இல்லாத பட்சத்தில் அந்த இந்தி ஆண்ட்டி, பத்து பச்சை மிளகாய்களை எண்ணெயில் அப்படியே வதக்கி எடுத்து, பின் அவற்றின் மேலாக தேவையான அளவு உப்பைத் தூவி, சிறிது எலுமிச்சை சாறு பிழிந்து கொண்டு வந்து வைத்தார்கள். அதன் காம்பினேஷன் தயிர் சாதத்திற்கு சூப்பரோ சூப்பராக இருந்தது. எங்கள் வீட்டில் இப்போதும் அது போல் தயிர் சாதத்திற்குச் செய்து கொள்வோம்.

– பூர்ணிமாபாலன்

'ஆண்களுக்கு அழகு' படித்த வாசகர்களே!

நீங்கள் உங்கள் மனைவியரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள். பொதுவாகவே பெண்கள் தங்கள் அபிப்ராயங்களை இந்த மாதிரி விஷயங்களில் கொட்டி விடுவார்கள். ஆனால் நீங்கள் வாயைத் திறப்பதில்லை!

'இந்தப் பகுதி'யில் உங்கள் மனம் திறந்து பேசலாமே! பொதுவாகவே பெண்களிடம் நீங்கள் காணும் குறை, நிறைகள், இப்படி இருந்தால் நன்றாக இருக்குமே என்ற எண்ணம்...

'எழுதுகிறோம், மனம் திறந்து!' என ஒரு புதிய பகுதியையே உங்களுக்காகத் தருகிறோம்..!

(ஆர்)

மோன்களின் மாறுதலினாலும்; ஃபங்கஸ் வியாதியாலும் வழுக்கை விழக்கூடும். இதையும் சீர்படுத்த முடியுமென்கிறார் காஸ்மெடிக் சர்ஜன் டாக்டர். முருகேசன்.

"வழுக்கை விழுந்த ஆண்களுக்கு ஆரம்ப நிலையிலேயே முடி மாற்றம் (Hair Transplantation) முறையில் வழுக்கையை சரிசெய்யலாம். இந்த முறையில் முன் பக்க வழுக்கை விழும் போது பின் பக்கத்தில் உள்ள முடியை சிறு வட்டங்களாக சுமார் மூன்று முதல் ஐந்து மில்லி மீட்டர் அகலத்திலும் நான்கு முதல் ஆறு மில்லி மீட்டர் உயரத்திலும் வேரோடு நீக்கப்பட்டு, பத்து முதல் இருபது மயிர் கால்களாக பிரித்து சுத்தப்படுத்தப்பட்டு சீராக கத்தரித்து வழுக்கை உள்ள இடத்தில் வைத்து நாற்று நடுவது போல வைத்துத் தைக்கப்படுகின்றன. முதல் மூன்று நாட்களுக்கு நெற்றியில் லேசான வீக்கம் இருக்கும். பத்து நாட்களுக்குள் காயம் ஆறிவிடும். முதலில் பதிக்கப்பட்ட இடங்களில் முடி கற்றை கற்றையாக விழுந்து விடும். பிறகு நன்கு வளர்ந்து விடும். இன்னொரு முறையில் முடிகள் தோலோடு எடுக்கப்பட்டு முன்புறம் வைத்துத் தைக்கப்படும் இம்முறையில் தலைமுடி உதிராமல் மேலும் வளரும். ஆனால் இந்த முறையில் தழும்பு வெளியே தெரியும்.

இதே போல் சிலருக்குப் பின் தலையில் பின் சொட்டை விழுந்திருக்கும். இதற்கு சொட்டையை குறைக்கும் முறையில் (Scalp Reduction) சிகிச்சை அளிக்கப்படுகிறது. சொட்டையாக இருக்கும் தோல் பகுதி ஒரு அங்குல அகலத்திற்கு நீக்கப்பட்டு இருபுறமும் சேர்த்துத் தைக்கப்படும். ஆறு மாதத்திற்கொரு முறை இச் சிகிச்சை தொடர்ந்து அளிக்கப்பட்டு சொட்டையே தெரியாத அளவிற்கு செய்யப்படுகிறது. சொட்டையை Scalp Expansion என்ற முறையிலும் சரிசெய்யலாம்.

'ஆள் பாதி ஆடை பாதி' என்பது உலகின் நடைமுறையில் தெளிவாக நமக்குத் தெரிகிறது. தலை முதல் கால் வரை உடலழகு சீராக இருந்தாலும் அதை எடுத்துக் காட்டும் வகையில், உடையணிய வேண்டியது அவசியம். ஆண்களில் பலர் நல்ல துணியில் சட்டையும் பேண்டும் அணிந்து கொண்டால் மட்டும் போதும் என நினைக்கின்றனர். ஆனால் உடை என்பது எடுப்பாகத் தெரிய மேலும் சில அணிகலன்களை சரியாக அணிய வேண்டியது அவசியம். சராசரியான ஒரு ஆண் மகன் தன் வாழ்நாளில் 1,87,000 கிலோ மீட்டர் தூரம் நடக்கின்றான். அதனால் காலணி என்பது அழகாகவும், பாதங்களுக்கு அனுசரணையானதாகவும் இருக்க வேண்டும். அலுவலகத்திற்கு பாட்டா, உட்லண்ட்ஸ், . பார்க் அவின்யு போன்ற ஷூக்களையும், உல்லாசமாகப் பொழுதைக் கழிக்கும் போது நார்த் ஸ்டார், ரீபோக், நைக் போன்ற ஷூக்களையும் அணிவது உங்கள் தோற்றத்தை வித்தியாசப்படுத்திக் காட்டும். ஷூக்கள் எடுபட சரியான உடையின் நிறத்திற்கேற்ப சாக்ஸ் அணிய வேண்டும். உடை மேலும் எடுப்பாகத் தெரிய கழுத்தில் டை அணிவதும், இடுப்பில் பொருத்தமான, இறுக்கம் இல்லாத பெல்ட் அணிவதும் நல்லது.

அழகான உடற்கட்டு, நிமிர்ந்த நேர்ப் பார்வை உள்ள தோற்றம், கம்பீரம், மிடுக்கான நடை போன்றவற்றை ஒரு ஆண் மகனிடம் பெண்கள் எதிர்பார்க்கின்றனர். ஆனாலும் இவை அனைத்திற்கும் மேலாக ஒருவன் மதிக்கப்படுவதும் விரும்பப்படுவதும் அவனது புத்திசாலித்தனத்திற்காகத்தான். பேச்சு, நல்ல செயல், நல்ல பழக்கம், சிறிது நகைச்சுவை உணர்ச்சி போன்றவற்றினால் ஒரு ஆண் மகன் எதையும் சாதிக்கலாம். எந்தச் சாதனையும் படைக்கலாம். இதையும் மனத்தில் கொண்டு ஆண்களே புத்தியைத் தீட்டுங்கள்! உடற்கட்டைப் பாதுகாத்து கொள்ளுங்கள்! வெற்றி நடைபோடுங்கள்!

— எஸ். ராஜ்யஸ்ரீ சந்திரசேகர்



நம்ரதா அமர்நாத் (அடையாறு வித்யா மந்திரில் மூன்றாம் வகுப்பு மாணவி)

"டிசம்பர் மாதம் 5ம் தேதி எங்க டீச்சர் எங்களை கேளம்பாக்கத்திலிருக்கு ஜே ஃபார்முக்கு கூட்டிண்டு போனாங்க." கன்னங்களை உப்ப வைத்து கண்களை உருட்டி தாங்கள் சென்ற 'பிக்னிக்கை'ப் பற்றி விலாவாரியாக ஆரம்பிக்கிறாள் சிறுமி நம்ரதா.

"முதல்ல ஸ்கூலுக்கு யூனிஃபார்ம்ல போனோம். அன்னிக்கு எனக்கு ஜுரம், ஜல தோஷம். ஆனால் அம்மாகிட்டே சண்டை போட்டு மருந்தெல்லாம் எடுத்துக்கிட்டு நான் 8.30க்கு ஸ்கூலுக்கு போயிட்டேன். கையிலே வாட்டர் பாட்டில், டிபன் எல்லாம் எடுத்துண்டு இரண்டு ஜே ஃபார்ம் பஸ்ஸில நாங்க இரண்டு செக்ஷன் ஸ்டுடண்ட்ஸூம் போனோம்.

பஸ்ஸூல ரொம்ப நேரம் போய்விட்டு கடைசியிலே ஜே ஃபார்ம் வந்தது. பஸ்ஸை விட்டு இறங்கின உடனே உள்ளே போட்டிருந்த பெஞ்சிலே உட்கார்ந்து கையில் கொண்டு வந்த டிபனை சாப்பிட்டோம். எங்க டீச்சர்ஸ் எங்களை இரண்டு இரண்டு பேராக் கையைக் கோத்துண்டு போகச் சொன்னாங்க. என்னுடைய பார்ட்னர் என் ஃப்ரண்ட் பவித்ராதான்.



* தாஜ்மஹால் முன் மாணவிகள்

டிபன் சாப்பிட்டு விட்டு நிறைய விளையாடினோம். டீச்சர்ஸ் எங்களை ஃப்ரீயா விட்டுட்டாங்க. ஓடி புடிச்சி விளையாடினோம். நான் நடக்கறச்சே ஒரு பொண்ணு வழியிலே காலை நீட்டி என்னை கீழே தள்ளிட்டா. என் முட்டியிலேயும் கையிலேயும் காயம் பட்டுடுத்து. ஆயா வந்து காயத்தை அலம்பி மருந்து போட்டாங்க.

ஜே ஃபார்ம்ல நிறைய மாங்காய் மரம் எல்லாம் இருந்தது. குட்டிக் குட்டியா பச்சை கலர்ல நிறைய மாங்காய் பார்த்தோம். நான் ஒரு எறும்பு கூட்டுக்குப் பக்கத்துல ஒரு பாம்பை பார்த்தேன். சில பசங்க ஒரு செத்துப்போன நண்டைப் பார்த்து எங்க எல்லோரையும் கூப்பிட்டாங்க.



மத்தியானம் அங்கேயே ஒரு ரெஸ்ட்டாரண்ட்ல எங்களுக்கு சாம்பார் சாதம், தயிர் சாதம், பொறியல், அப்பளம் எல்லாம் கொடுத்தாங்க. நான் ஒரு சின்ன நாய்க்குட்டியைப் பார்த்து அதைத் துரத்தினேன். அதுக்கு ப்ரட் கொடுத்தேன். நிறைய பூவெல்லாம் பார்த்தோம். மண்ல மலை, அரண்மனை கட்டி விளையாடினோம். ப்ரண்ட்ஸ்கூட ஜாலியா இப்படி வெளியே போறது நல்லா இருக்கு."

மூச்சு விடாமல் முழு விபரத்தையும் சிறிய சம்பவம்கூட ஒன்று



* நம்ரதா

விடாமல் சொன்ன சிறுமியின் மனதில் பள்ளியில் இப்படி சுற்றுலாவிற்கு ஏற்பாடு செய்வது எத்தனை ஆனந்தம் கொடுக்கிறது என்று புரிந்தது.



• ஆஃப்ரோஸ்

பானுமதி குணசேகரன் (தலைமை ஆசிரியை, கேம்ப்ரிஜ் மெட்ரிகுலேசன் ஹையர் செகண்டரி ஸ்கூல், ராயப்பேட்டை)

எங்கள் பள்ளியில் குழந்தை களின் வயசுக்கு தகுந்தாற்போல் சுற்றுலாவிற்கோ சுற்றுப் பயணத்திற்கோ அழைத்துச் செல்வோம். அநேகமாக வகுப்பு ஆசிரியையும் செல்லுவார். குழந்தைகளைப் பற்றி அவருக்குத்தான் அதிகம் தெரிந்திருக்கும் என்பதால் இந்த ஏற்பாடு.

எட்டாம் வகுப்பு வரை ஒருநாள் சுற்றுலா ஏற்பாடு செய் கிறோம். சென்னையில் அருகே உள்ள இடங்களுக்குக் கூட்டிச் செல்வோம். ம்யூசியம், எம்.ஜி.எம் போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்வோம். நம் காலத்தில் இந்த மாதிரி இடங்களுக்கு சென்றால் டீச்சர் சொல்வதையே வேதவாக்காக எடுத்துக் கொண்டு உன்னிப்பாகக் கவனிப்போம் அல்லவா?



• திருமதி பாரதி, திருமதி சசிகலா

ஆனால் இந்தக் காலத்துக் குழந்தைகளுக்கு ஐக்யூ ரொம்ப ஜாஸ்தி. பி.பி.ஸி ஸ்டார் ப்ளஸ், டிஸ்கவரி சேனல் போன்றவற்றைப் பார்த்து விட்டு கேள்வி மேல் கேள்வி கேட்டு துளைத் தெடுத்து விடுகிறார்கள். ஆசிரியைகள் தங்களை நன்றாகத் தயார் படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. குழந்தைகள் நம் நாட்டு இடங்களை வெளி நாட்டு இடங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள்.

சற்று பெரிய வகுப்பு குழந்தைகளை பிர்லா ப்ளோனட்டோரியம், ஐ.ஐ.டி. அதிகாரிகளின் பயிற்சி நிலையம், தொழிற்சாலைகள் என்று அழைத்துச் செல்வோம். வரலாற்றில் முக்கிய இடம் பெற்ற ஸ்தலங்களுக்கோ கோவில்களுக்கோ முக்கியத்துவம் கொடுக்கறோம். பெரிய குழந்தைகள் பார்க்கில் விளையாடுவதை விட அறிவு பூர்வமான விஷயங்களில் அதிகம் அக்கறை காட்டுகிறார்கள்

சின்னக் குழந்தைகளுக்கு ஒரு நாள் சுற்றுலா பெரிய குழந்தைகளுக்கு அதிக நாட்கள் பயணம் என்று ஏற்பாடு செய்கிறோம். ஆனால் போர்ட் எக்ஸாமுக்கு படித்துக் கொண்டிருக்கும் குழந்தைகள் மூன்று நான்கு நாட்களுக்கு மேல் சுற்றுப்பயணம் வருவதற்குத் தயங்குகிறார்கள்.

பயணத்திற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்து விடுவோம். விலையுயர்ந்த பொருட்களைக் கொண்டு வரக்கூடாது. நகை போடக்கூடாது. கேமரா மாத்திரம் தான் எடுத்துச் செல்லலாம். ஃபர்ஸ்ட்எயிட் கிட் எடுத்துச் செல்லுவோம். குழந்தைகளின் பெற்றோர்களுக்கு எங்களது பயணத் திட்டத்தை அச்சடித்துக் கொடுத்து விடுவதால் பெற்றோர்களுக்கு எந்த சமயத்தில் நாங்கள் எங்கு தங்கியிருப்போம், ஹோட்டலின் போன் நம்பர் போன்ற விவரங்களைப் பற்றி முன்கூட்டியே தெரிந்திருக்கும்.

இதைத் தவிர குழந்தைகளும் ரொம்ப சாமர்த்தியம். ஒவ்வொரு இடத்திலேயிருந்தும் பெற்றோர்களுக்குத் தாங்களே போனில் பேசி தங்கள் நலத்தைத் தெரியப்படுத்தி விடுவார்கள்.

எத்தனைதான் சுற்றி விட்டு வந்தாலும் குழந்தைகள் மட்டும் சோர்வடையாமல் சந்தோஷமாகவே இருப்பார்கள். இராத்திரியில் நாம் சோர்ந்து விழுந்து படுக்கையைத் தேடும் நேரத்தில் அவர்கள் முகங்களை பெயின்ட் செய்து வேஷம் போட்டு 'கேம்ப் ஃபயரில்' தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருப்



• ஜசிந்தர் ப்ரீதி



• மலையின் உச்சியில்

பார்கள். குழந்தைகள் பள்ளியில் மற்றவர்களுடன் சுற்றுப்பயணம் செல்லுவதை மிகவும் விரும்புகிறார்கள்.

தலைமை ஆசிரியை திருமதி அஃப்ரோஸ் ஜஹான் (சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, தாமோதரபுரம், அடையாறு)

வருடா வருடம் கல்வித்துறை எங்களுக்கு ஒருநாள் குறித்து கொடுத்து விடுவார்கள். வருடத்திற்கு ஒருமுறை அறுபது குழந்தைகளை சுற்றுலா அழைத்துச் செல்லலாம். சுற்றுலா வர விரும்பும் குழந்தைகளின் பெற்றோர்களிடமிருந்து கடிதங்கள் பெற்றுக் கொண்டு அவர்களை அழைத்துச் செல்கிறோம். அரசாங்கமே அவர்களது செலவை ஏற்றுக் கொள்கிறது.

ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு வகுப்பிற்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது. 6ம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு மாணவ மாணவிகளை மட்டும் ஒருநாள் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்வோம். இருபது குழந்தைகளுக்கு ஒரு டீச்சர் என்ற ரீதியில் 3 -4 டீச்சர்களும் கூட செல்லுவார்கள்.

கிஷ்கிந்தா, எம்.ஜி.எம், வேடந்தாங்கல், வண்டலூர், மகாபலிபுரம் போன்ற இடங்களுக்குப் போய் வந்திருக்கிறோம். சிறிய வகுப்பு குழந்தைகளுக்கு அவர்களது பாடத்திட்டத்திற்குத் தகுந்தாற்போல் போஸ்ட் ஆஃபீஸ், பேங்க், மார்க்கெட், பீச் என்றும் அழைத்தும் செல்வோம்.

இந்த மாதிரி ஏழைக் குழந்தைகளுக்கு சுற்றுலா மிகவும் அவசியம். எப்போதும் வேலை, பள்ளிப் பாடம் என்று தத்தளித்துக் கொண்டிருப்பவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம் மாதிரி. அடுத்த நாள் புதிய உற்சாகத்துடன் பாடங்களில் கவனம் செலுத்துகிறார்கள்.

நிர்மல் தேவி (எட்டாம் வகுப்பு ஆசிரியை)

சமீபத்தில் 120 குழந்தைகளை எம்.ஜி.எம்.மிற்கு அழைத்துச் சென்றோம். எம்.ஜி.எம்.மில் எங்களுக்கு விசேஷத் தள்ளுபடியில் டிக்கெட்டுகள் கொடுத்து இரண்டு பஸ்களையும் அனுப்பி வைத்தார்கள். ஏழைக் குழந்தைகளாக இருப்பதால் அவர்கள் சாப்பாடு கொண்டு வருவார்கள் என்பதையும் முன்பே அவர்களிடம் கூறி விட்டோம். சாதாரணமாக வெளியிலிருந்து சாப்பாடு கொண்டு செல்ல அனுமதிக்க மாட்டார்கள். ஆறாம், ஏழாம் வகுப்பு மாணவ, மாணவிகளை அழைத்துச் சென்றிருந்தோம். குழந்தைகளுக்கு இது ஒரு புதிய அனுபவம். நன்றாக என்ஜாய் செய்தார்கள்.


எட்டாம் வகுப்பு மாணவி சீதாலக்ஷ்மியும் மாணவன் குரு பிரசன்னாவும்

"எம்.ஜி.எம். ரொம்ப நல்லா இருந்தது. இங்கே இருந்த பல விளையாட்டு சாதனங்களில் வலம் வந்தோம். அசுரத் தாலாட்டு ரொம்ப நன்றாக இருந்தது" என்று சீதாலக்ஷ்மி கண்களை விரித்துக் கொண்டு கூற, குரு பிரசன்னா கம்ப்யூட்டர் விளையாட்டு ரொம்ப பிடித்ததாக கூறினான். இதை தவிர "கார் ஓட்டும் சந்தர்ப்பமும் கிடைத்தது. தண்ணீரில் பாய்ந்து புறப்படும் கார்களும் ரயில் வண்டியும் 'ராக்கிங் போட்' என்ற ஊசலாடும் கப்பலும் குழந்தைகளை மிகவும் கவர்ந்தன.

என் அப்பா தியேட்டரில் சைக்கிள்களுக்கு டோக்கன் போடும் வேலையில் இருக்கிறார். எப்போதாவது வி.ஜி.பி அழைத்துச் சென்றது உண்டு. பள்ளி மூலமாக எம்.ஜி.எம்மிற்கு போனது நல்ல சந்தர்ப்பம்" என்றான் குரு.

இதைத் தவிர இன்னும் விவரிக்க முடியாத எத்தனையோ விளையாட்டுகளை உற்சாகத்துடன் நினைவு கூர்கிறார்கள். "எகிறி எகிறி குதித்து போகும் பொம்மையிலே போனோம்" என்றும் "தலைகீழா போகும் ராட்டினத்தில் சுத்தினோம்" என்றும் "பெல்ட் போட்டு சேரில் போனோம்" என்றும் விவரிக்கிறார்கள்.

"அன்று மழை நாளாக இருந்ததால் கூட்டம் அதிகம் இல்லை.



குரு பிரசன்னா

நாங்கள் மாத்திரம் ஆசை தீர ஒரே ரைடில் பலதடவைகள் சென்றோம். மதியம் மழை அடித்தது. சிறிது நேரம் ஒதுங்கிவிட்டு மீண்டும் விளையாடக் கிளம்பிவிட்டோம்'' என்று பள்ளி மாணவ மாணவிகள் கூடி ஒரே குரலில் கூறினார்கள். "மொத்தத்தில் சூப்பரா இருந்தது" என்றார்கள் சிறுவர் சிறுமிகள்.

அவர்கள் கண்களில் மின்னிய நட்சத்திரங்கள் நம் மனதைக் கலங்க செய்தன. நன்றாகப் படித்து, பட்டம் பெற்று நிஜமான கார்களிலும் ஏரோப்ளேன்களிலும் அவர்கள் வலம் வர வேண்டும் என்று மனம் பிரார்த்தனை செய்தது.



* மலைப் பிரதேசங்களில் ட்ரெக்கிங்

திருமதி சசிகலா ஸ்ரீராம் (வித்யா மந்திர் பள்ளியின் உதவி பள்ளித் தலைவர்)

எங்கள் பள்ளியில் 'நேச்சர் க்ளப்' என்னும் இயற்கை சங்கம் ஒன்று நடத்துகிறோம். இந்த கிளப்பில் உறுப்பினராக இருக்கும் மாணவ மாணவிகளுக்கு இயற்கையன்னையுடன் உறவாட பல சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. குழந்தைகளுக்கு இயற்கையின் மதிப்பை வலியுறுத்தவும் நம் இயற்கையை பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும் இந்த கிளப்பின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துகிறோம்.

நேச்சர் கிளப்பில் உறுப்பினராக இருக்கும் குழந்தைகளுக்கு மூன்று கட்டமாக சிறு பிரயாணங்களை ஏற்பாடு செய்கிறோம். முதல் கட்டமாக அருகேயுள்ள இடங்களுக்கு 'ட்ரெக்கிங்' அழைத்துச் செல்வோம். ஒரே நாளில் சென்று திரும்பக் கூடிய இடங்களாகத் தேர்ந்தெடுத்து அவர்களை அழைத்துச் செல்வோம். உதாரணமாக நாங்கள் தடா, பூண்டி, புராதன சித்திரங்கள் செதுக்கிய ஒரு குகை போன்ற இடங்களுக்குச் சென்று வந்திருக்கிறோம். இந்த மாதிரி 'ட்ரெக்கிங்கில்' நீண்ட தூரம் நடந்து பழக குழந்தைகள் கற்றுக் கொள்கிறார்கள்.

இந்த முதல் கட்டத்திலிருந்து சில குழந்தைகளை தேர்ந்தெடுத்து முதல் 'டேர்ம்' முடிந்த பிறகு வரும் விடுமுறை நாட்களில் ஊட்டி, கோடை, முண்டந்துறைகாடு போன்ற இடங்களுக்கு நான்கு நாள் ட்ரெக்கிங் அழைத்துச் செல்வோம். தரைமட்டத்தை விட சிறிது உயர்வாக இருக்கும் மலைப் பிரதேசத்தில் சஞ்சரிப்பதில் அவர்களுக்கு பயிற்சி கிடைக்கிறது.

மூன்றாவது கட்டமாக இமாலய மலையின் வெவ்வேறு பாகங்களுக்குக் கிட்டத்தட்ட பன்னிரண்டு நாட்கள் போல ட்ரெக்கிங் போவோம். கிட்டத்தட்ட 14400 அடி உயரம் வரையுள்ள மலைப்பிரதேசத்தில் நடை பயிற்சி. ஒவ்வொரு வருடமும் இமாலய மலையின் ஒவ்வொரு இடமாகத் தேர்ந்தெடுப்போம்.

கடந்த வருடம் தௌலாதார் ரேஞ்சிற்கு சென்றிருந்தோம். இது 'மண்டி' என்னும் ஊரில் ஹிமாசல பிரதேசத்தில் இருக்கிறது. டிரெக்கிங்கின் முதல் நாள் 'பேஸ் கேம்ப்'பிலிருந்து நடைப்பயிற்சி. முதல்நாள் அந்த ஊரின் சீதோஷ்ண நிலைக்கு நம் உடலைத் தயார் படுத்த இந்தப் பயிற்சி.

இரண்டாவது நாள் ஆறுகளைக் கடப்பது, பாறைகளின் மீது ஏறுவது போன்ற பயிற்சி இருக்கும். மூன்றாவது நாள் அதிகாலையில் எங்கள் ட்ரெக்கிங் ஆரம்பமாகும். அதற்கு முன் சில ஏற்பாடுகளை நாங்கள் செய்தாக வேண்டும். அதாவது எங்களுக்குக் கொடுக்கப்படும் 'ரக் சேக்'கை சரி பார்த்துக் கொள்ள வேண்டும். 'கிட் இன்ஸ்பெக்ஷன்' செய்ய வேண்டும். 'கிட்டில்' வேண்டிய சாதனங்களை எடுத்துக் கொண்டோமா என்று சரி பார்க்க வேண்டும். பிறகு 'டெண்ட் இன்ஸ்பெக்ஷன்' அதாவது டெண்ட் கட்டுவதற்கு எல்லாம் இருக்கிறதா என்று பார்க்க வேண்டியது. லஞ்ச் மற்றும் ஒரு மக் எடுத்துக் கொண்டு உற்சாகத்துடன் புறப்பாடு.



* சீதாலட்சுமி (இடதுபுறம்)

இந்தப் பிரயாணத்திற்கு இரண்டு டீச்சர்களும் முப்பது மாணவ மாணவிகளும் போவோம். எங்களுடன் எவரும் வரமாட்டார்கள். மலைப்பிரதேசத்தில் நீண்ட தூரம் பிரயாணம். அடுத்த

கேம்ப்பில் எங்களை சூடான பானத்துடன் வரவேற்பார்கள். இந்த பிரயாணத்திற்கு ஏற்பாடு செய்த ஸ்தாபனம். சூடாக கச்சோரி சமூஸா போன்ற டிபனும் உண்டு. அந்த குளிருக்கு சூடான சாப்பாடு மிகவும் அவசியம்.

பிறகு நான்கு குழுவாக பிரிந்து டெண்ட்டுகள் நிர்மாணிக்கும் ஏற்பாடுகள் விறுவிறுப்பாக நடக்கும். பிளாஸ்ட்டிக் ஷீட்டுகள் விரித்து (குளிரிலிருந்து பாதுகாத்துக் கொள்ள) டெண்ட்டுகள் கட்டிய பிறகு சரியாக இராத்திரி ஏழரை மணிக்கு சூடான சப்பாத்தி, பரோட்டா, காய் வகைகளுடன் இராத்திரி சாப்பாடு போடுவார்கள்.

அதற்குப் பிறகு 'கேம்ஃப் பயர்'. இரவு 8.30 - 9.30 வரை இது நடக்கும். எல்லோரும் ஒரு 'மக்'கை (சொம்பை) எடுத்துக்கொண்டு 'ஜில் லென்ற கோகோ' பானத்துடன் கேம்ப் ஃபயரில் பங்கு கொள்வோம். குழந்தைகள் வித விதமான நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவார்கள்.

சரியாக இரவு 9.30 மணிக்கு படுக்கை காலையில் 5.00 மணிக்கு சூடான டீயுடன் நம்மை எழுப்பி விடுவார்கள். நாங்கள் செல்லும் இடத்தில் டாயலட்டோ, கரண்ட்டோ கிடையாது. கையில் டார்ச்சை எடுத்துக் கொண்டு, காலைக் கடன்களை முடித்துக் கொள்வோம். அந்தக் குளிருக்கு குளியல் எல்லாம் கிடையாது. ப்ரேக் ஃபாஸ்ட், லஞ்ச் எடுத்துக் கொண்டு மீண்டும் பயணம். பிறகு சாயந்திரம் மற்றொரு கேம்ப்.

இப்படியாக 'ஸ்னோ பாயிண்ட்' (Snow point' அல்லது பிளாஸ்சிக் என்னும் மலையின் உச்சிக்குச் செல்வோம். இங்கு நம்மால் தனியாக இயங்க முடியாது. இங்கு பனியில் விளையாடவும் நடமாடவும் நமக்கு உதவியாக இந்த ஸ்தாபனத்தினர் இருப்பார்கள். பனியில் இயற்கையன்னையின் அழகில் ஒன்றி நம்மை நாமே மறந்து இந்த பிரபஞ்சத்தின் மஹோன்னதத்தைப் பற்றி சிந்திக்கத் தூண்டுகிறது இந்த அனுபவம். மிகவும் அற்புதமான உணர்வு இது.

அரை நாள் மலையின் உச்சியில் கழித்து விட்டு மீண்டும் 'பேஸ் கேம்ப்பிற்கு' புறப்பாடு. நாங்கள் தொடங்கிய இடத்திற்கு வெற்றியுடன் பிரவேசிக்கையில் மற்றொரு குழு அன்று ட்ரெக்கிங்கிற்கு புறப்படுவார்கள். இப்படி இரண்டு குழுவும் ஒன்றாக ஒரே பேஸ் கேம்ப்பில் சந்தித்துக் கொள்ளும் நாள் ஒரே கொண்டாட்டம்தான். 'கிரவுண்ட் கேம்ப் ஃபயர்' பாயசம் வகையறாவுடன் நல்ல சாப்பாடு.

இந்தப் பிரயாணத்தின்போது தினமும் பழங்கள் கலந்த கஸ்டர்ட் போன்ற கொழுப்புச் சத்து அதிகமுள்ள சாப்பாடு கொடுப்பார்கள். சூடாகவும் இருக்கும். அப்போதுதான் இந்தப் பிரயாணத்தை மேற்கொள்ளும் சக்தி நமக்கு இருக்கும். அரிசியைவிட சப்பாத்தி போன்றவையே கொடுப்பார்கள்.

நாங்கள் ஒருமுறை அடர்ந்த காட்டிற்கு சென்று நடுஇரவில் மிருகங்களைப் பார்க்கச் சென்றது மயிர்க்கூச்செறியும் சம்பவம். இந்த மாதிரியான சுற்றுப் பயணங்களில் குழந்தைகள் சிக்கலான சூழல்களைச் சமாளிக்க கற்றுக் கொள்கிறார்கள். தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளவும் சுதந்திரமாய் செயல்பட பயிற்சியும் கிடைக்கிறது. வாழ்க்கையில் ஒழுக்கமும் ஒழுங்குமுறையும் எத்தனை முக்கியமான விஷயங்கள் என்பது புரிகிறது. இந்த ட்ரெக்கிங் ஒன்பதாம், பத்தாம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு மட்டும்தான். இயற்கையின் விலை மதிப்பில்லாத தன்மையை மாணவ உலகம் புரிந்து கொள்ள இந்த மாதிரி ட்ரெக்கிங் அவசியம்.



தேங்காய் அரைத்து எடுத்த பின் ஒரு சில பெண்கள் அம்மியைக் கழுவி விட்டு விடுவார்கள். தேங்காய் அரைத்த அந்த நீரை ரசத்தில் ஊற்றினால் மணம் கூடும் சுவை அதிகமாகும்.

— ஆர். அஜிதா

அழிவற்ற அற்புதம்: தாஜ்மஹால்

ஜசிந்த ப்ரீதி (ரோஸரி மெட்ரிக் பன்னிரண்டாம் வகுப்பு)

"கடந்த ஆகஸ்டு மாதம் 14ம் தேதி எங்கள் பள்ளியில் டில்லி மற்றும் ஆக்ராவிற்கு உல்லாசப் பிரயாணம் ஏற்பாடு செய்திருந்தார்கள். பள்ளி வாழ்க்கையின் இறுதி ஆண்டில் சென்ற பயணம் இது. அதனால் என் வாழ்க்கையிலேயே மறக்க முடியாத அனுபவம்" என்று படு உற்சாகமாக ஆரம்பிக்கிறார் ஜசிந்த் ப்ரீதி.

"என் பெற்றோர்களுடன் அருகேயுள்ள இடங்களுக்குச் சென்று வந்திருந்தாலும்



பாகற்காய் பொரியல் செய்யும்பொழுது ஒரு மாங்காயையும் பொடியாக நறுக்கிச் சேர்த்துச் செய்ய பொரியல் கசப்பே இருக்காது. சுவையும் மணமும் கூடுதலாக இருக்கும்.

— பாலா

வடக்குப் பக்கம் நான் செல்வது இதுதான் முதல் தடவை. ஆகஸ்டு 14ம் தேதி இராத்திரி வண்டி ஏறிய நாங்கள் இரவில் தூங்கவே இல்லை. தேசியக் கொடியைப் பற்றிக் கொண்டு உற்சாகமாக தேசியப் பாடல்களைப் பாடிக்கொண்டு நம் நாட்டு சுதந்திர பொன்விழாவைக் கொண்டாடினோம்.

ரயில் பிரயாணத்தின்போது சரியான சாப்பாடு கிடைப்பதில்லை. ஒரு நாளைக்கு மேல் பிரயாணமானால் நல்ல சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்தால் பிரயாணிகளுக்கு சௌகரியமாக இருக்கும்.

என் முதல் வடநாட்டுப் பிரயாணம் ஒரு பயங்கரமான அனுபவத்துடன் தான் ஆரம்பித்தது. வடக்குப் பக்கம் அலிகள் நடமாட்டம் சாதாரணம் போல இருக்கிறது. நாங்கள் ஜாலியாக பாடிக் கொண்டு போகையில் சில அலிகள் எங்கள் கம்பார்ட்டுமெண்டில் ஏறி "பைசா கொடு" என்று தொட்டுத் தொட்டுப் பேசினார்கள். எங்கள் டீச்சர் அவர்களை அனுப்பி விட்டார்கள். ஆனால் மறுநாள் காலை அவர்கள் உடை மாற்றிக் கொண்டு மீண்டும் வந்தார்கள். என்னுடைய தோழி ஒருத்தி அவர்களைப் பார்த்து அழவே ஆரம்பித்து விட்டாள். சிலரை மிரட்டி இருபது ரூபாய்க்குக் குறையாமல் வாங்கிக் கொண்டு போனார்கள். ஒருத்தி "என் அப்பா கஷ்டப்பட்டு சம்பாதிச்ச பணம் இப்படி போறதே" என்று கோவென அழ ஆரம்பித்தாள்.

ஒருவாறாக ரயில்வே போலீஸை அணுகி அவர்களை மிரட்டி எங்கள் பணம் திருப்பப் பெறப்பட்டது. டிரெயின் முதலில் ஆக்ராவுக்குச் சென்றது.

ஆக்ராவில் சலவைக்கல்லிலான அதிசயத்தைப் பார்த்துப் பார்த்து வாய் பிளந்தோம். என் வாழ்நாளில் இத்தனை அற்புதமான இடத்தை பார்த்ததே கிடையாது. தாஜ்மஹாலின் அழகை தூரத்தே நின்று பார்த்துக் கொண்டே இருக்கணும் போலிருந்தது. அங்காங்கே கட்டிடம் கறுத்துப் போயிருக்கிறது. அரசாங்கம் தாஜ்மஹாலுக்குக் கேடு வராமல் பாதுகாக்க வேண்டும். விலைமதிப்பில்லாத பொக்கிஷம் இது.

தாஜ்ஜிற்கு வெளியே தாஜ்மஹால் மாடல் விற்கிறார்கள். உண்மையான சலவைக்கல்லினால் செய்யப்பட்டிருந்தால் உள்ளே பல்ப் வைத்தால் வெளிச்சம் வெளியே தெரியும். சலவைக் கல்லினால் செய்யப்பட்டிருக்காவிட்டால் தெரியாது. இதை பார்த்து தான் தாஜ்மஹாலை வாங்க வேண்டும்.

ஆக்ராவில் ஆக்ரா கோட்டை, பதேபூர் சிக்ரி போன்ற இடங்களுக்குச் சென்றோம். ஆக்ரா கோட்டையில் எங்கள் குழு மற்ற மாணவிகளைத் தொலைத்து விட்டது. நாங்களோ டிக்கெட்டுகளைத் திருப்பிக் கொடுத்து விட்டிருந்தோம். பிறகு வாட்ச்மேன்களிடம் நைஸாக பேசி மீண்டும் கோட்டையிலுள் பிரவேசித்தபோது எங்கள் தோழிகள் யமுனையில் தாஜ்மஹாலின் பிரதிபிம்பத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். நாங்களும் இந்த இயற்கையின் அற்புதத்தை ரசித்தோம்.

ஃபத்தேபூர் சிக்ரியில் என்னை கவர்ந்தது. கட்டட நிர்மாணக்கலைதான். அக்பர் மன்னர் எல்லா மதத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்தார் என்பது நாம் எல்லோருக்கும் தெரியும். ஆனால் அதை நிதரிசனமாக என் கண்களால் கண்டேன். கட்டிடத்தின் சுவர்களிலும், தரையிலும், கூரையிலும் மூன்று மதத்தின் சின்னங்களான நட்சத்திரம், ஸ்வஸ்திக் மற்றும் குவிந்த மண்டபம் பதிக்கப்பட்டிருந்தன.

பஞ்சமெஹல் என்னும் கட்டிடம் பஞ்ச பூதங்களை குறிப்பதாகவும் அக்பரின் அரண்மனையில் இருந்த ஒன்பது ரத்தினங்கள் ஒன்பது கிரகங்களைக் குறிப்பதாகவும் 'கைட்' சொன்னார்.

டில்லியில் 'சப்பல்' என்னும் செருப்புகளும் பேக்குகளும் துணிகளும் மலிவாகக் கிடைக்கின்றன. என்னதான் பெற்றோர்களுடன் சுற்றுலாவிற்குச் சென்று வந்தாலும் தோழிகளுடன் சென்று வருவது அலாதியான சுகம் தான். மேலும் பொறுப்பு உணர்ச்சி அதிகமாகிறது. அப்பா, அம்மாவிடம் 'அதை வாங்கு, இதை வாங்கு' என்று நச்சரிக்கும் நாங்கள் நம்ம கையில் பணம் வந்தவுடன் செலவழிப்பதற்கு ஆயிரம் தடவை யோசிக்கிறோம். மொத்தத்தில் ஜாலியான, மறக்க முடியாத அனுபவம்."

தொகுப்பு – **ஸ்வாதி**



எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரி மாணவிகள்

சமீபத்தில்தான் மும்பாய்க்கு வெற்றிகரமாக சுற்றுப்பயணம் சென்று வந்திருக்கிறார்கள் எஸ்.ஐ.ஈ.டி. காலேஜ் 'கார்ப்பரேட் செக்ரட்டரி ஷிப்' வகுப்பு மாணவிகள். (எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரியின் பேர் மாற்றப்பட்டு ஜே.பி.அ.ச. கல்லூரி என்று அழைக் கப்படுகிறது. நாம் பழக்கதோஷம் காரணமாக எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரி என்றே அழைக்கிறோம்.)


ஜயஸ்ரீ

காலேஜ் (சுற்றுலா) கலாட்டா

சுடச்சுட சுவையான சம்பவங்களின் தொகுப்புடன் நம்மை உற்சாகமாக வரவேற்கின்றனர் ஆர்.ஜயஸ்ரீயும் ஷிரீனும். டிசம்பர் மாதம் 24-ம் தேதி கும்மாளம் அடித்துக் கொண்டு மாணவிகள் மும்பாயிக்கு இரண்டு பேராசிரியைகளுடன் புறப்பட்டார்கள்.

முதலில் பார்த்த இடம் ஹாஜி அலி மசூதிதான். ரமாதான் வரும் நேரமாதலால் மசூதியில் கூட்டம். மேலும் சாயந்திரம் மசூதியை சுற்றியிருந்த தண்ணீரின் அளவு கூடுவதால் ஒரு குறிப்பிட்ட நேரம் வரைதான் மசூதிக்குச் செல்ல முடியும்.

"அதன் பிறகு 'ஹீரா பன்னா' என்னும் மார்க்கெட்டிற்கு சென்றோம். அடுத்த நாள் கேட் வே ஆஃப் இந்தியாவிற்கு விஜயம் 'ஃபேஷன் ஸ்ட்ரீட்' என்னும் ஷாப்பிங் சென்டரில் நவீன உடைகள் கிடைக்கின்றன. லிங்கிங் ஸ்ட்ரீட்டில் சல்வார் கமீஸ், தோலினாலான பேக்ஸ் போன்ற பொருட்கள் கிடைக்கும். மும்பாயில் மட்டும் எத்தனை முடியுமோ அத்தனை பேரம் பேசிதான் பொருட்கள் வாங்க வேண்டும் என்று புரிந்து கொண்டோம்.


ஷிரீன்

பிறகு ஜுஹு பீச்சில் ரொம்பவும் ஜாலியாக நேரம் கழிந்தது. நாங்களும் பேராசிரியைகளும் இரண்டு 'டோங்கர்' ஏற்பாடு செய்து கொண்டு ஆடிக் கொண்டும், பாடிக் கொண்டும் பீச்சில் வலம்வந்தோம். மும்பாயில் 'சாட்' ரொம்ப விசேஷம். பேல்பூரி பானி பூரி என்று வகை வகையான 'சாட் ஐட்டங்களை' வெட்டு வெட்டுன்னு வெட்டினோம்.

அடுத்த நாள் மஹாபலேஷ்வருக்கு புறப்பட்டோம். வழியில் மூன்று சுரங்கப் பாதையினூடே போனது வினோதமான அனுபவம். பஞ்சகனி என்னும் அழகான பிரதேசத்தில் ஹோட்டலில் தங்கினோம். மஹாப்லேஷ்வரில் ஒரு சிவன் கோவில் இருக்



கிறது. அங்குள்ள ஒரு புண்ணிய தீர்த்தத்தில் ஐந்து நதிகள் வந்து சேரும் இடம் இருக்கிறது. அதன் தண்ணீர் விசேஷமானதாம்.

பிறகு கண் டாலா, லோனாவ்லா போன்ற இடங்களுக்கும் சென்றோம். பார்சி பாயிண்ட் என்னும் இடத்திலிருந்து ஊரின் காட்சி முழுவதும் அழகாக தெரிந்தது. போட்டிங் சென்றோம். அதன் பிறகு டாடா தர்மல் பவர் ஸ்டேஷனிற்குச் சென்றோம்.

'டேபிள் டாப்' என்னும் இடம் இருக்கிறது. அது ஒரு பீடபூமி.



• கேட் வே ஆஃப் இந்தியா

உயர்வான இடமாக இருப்பதால் சிறிது அச்சமாகத்தான் இருக்கிறது. இங்கு படங்களின் ஷூட்டிங்கு அடிக்கடி நடக்குமாம். துரதிர்ஷ்டவசமாக நாங்கள் போன சமயம் எந்த ஷூட் டிங்கும் நடக்கவில்லை. லோனாவ்லா வில் 'சிக்கி' நன்றாக இருக்கும். ஒரு வெட்டு வெட்டினோம். பஞ்சகனியில் கை வேலை செய்த அழகான பொருட்கள் கிடைக்கின்றன. சலவைக் கல்லினால் ஆன பொருட் களும் கோலாப்புரி சப்பல்களும் கிடைக்கின்றன.

அன்றிரவு நாங்கள் எல்லோரும் கூடி சாப்பாடு செய்தோம். (நாம் இடைமறித்து உங் களுக்கு டீ கூட போட வருமா என்று கேட்க யத்தனிக்கையில் அவர்கள் நம் மீது பாய்கிறார்கள். 'வாட்? எங்கள் சமையல் அமர்க்களமாக இருக்குமாக்கும்' என்று!) சமைத்து, சாப்பிட்டு கேம்ப் ஃபயர் மூட்டி அதைச் சுற்றி ஆட்டம், பாட்டம்தான்.

அடுத்த நாள் புனேக்கு வந்து சிறிது சுற்றிய பிறகு சென்னைக்கு மீண்டும் புறப்பாடு.

"மும்பாயில் பிளாட்ஃபாரத்தில் கடை விரித்திருப்பார்கள். திடீர் திடீரென்று போலீஸ் வந்தால் அப்படியே வாரிச் சுருட்டிக் கொண்டு ஓடி விடுவார்கள். எங்கள் தோழி ஒருத்தி ஒரு கடையில் ரூ. 500க்கு ஹேண்ட் பேக் வாங்கினாள். அதைப் பையில் போட்டுக் கொடுப்பதற்காக கடைக்காரரிடம் கொடுத்தாள். அப்போது போலீஸ் வந்து விடவே கடைக்காரர்கள் துண்டை காணோம். துணியை காணோம்னு ஓடி விட்டார்கள். அவளது ஐந் நூறு ரூபாய் அம்பேல்.

ஆனால் என் கையில் பொருள் தங்கி விட்டது. நானோ காசே கொடுக்கவில்லை. பாவம் கடைக்காரர் என்று சிறிது நேரம் காத்து நின்று விட்டு பணம்

• தெர்மல் பவர் ப்ளாண்டில்...



கொடுத்து விட்டு வந்தேன்" என்றார் ஷிரீன்.

"எங்கள் தோழி சாஜிதா ஒரு ஃப்ராக் வாங்கினால் 375 ரூபாய் என்றார் கடைக்காரர். அவளுக்கே நம்பிக்கையில்லாமல் 75 ரூபாய்க்குத் தருவீங்களா என்று அவள் கேட்க, கடைக்காரர் உடனே கொடுத்து விட்டார். நானும் ஒரு ஷூவை இரண்டு கடைகளில் விசாரித்து 75 ரூபாயில் பேசி முடித்தேன். மும்பாயில் நிறைய பேரம் பண்ணித்தான் எதையும் வாங்க வேண்டும்" என்றார் ஜயஷ்ரீ.

மஹாப்ளேஷ்வரில் இவர்கள் தோழி வெவ்வேறு கடைகளுக்குச் சென்று சாம்பிளாக ஒரு ஸ்ட்ராபெர்ரி பழம் வாங்கி அப்படியே நிறைய சேர்த்து விட்டதை

• ஸ்டடி டூர்



நினைத்து நினைத்து சிரிக்கிறார்கள். ஜீவத்வில் ஐஸ் குச்சி சாப்பிட்டதையும் மறக்க முடியாது என்கிறார்கள்.

மொத்தத்தில் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு தோழமையை இன்னும் ஆழமாக்க உதவுகின்றன இதைப் போன்ற பயணங்கள். பேராசிரியைகளும் மாணவிகளுடன் அதிகம் நெருங்கி விடுகிறார்கள். சீனியர், ஜூனியர் இடைவெளி குறைகிறது. ஷிரீன் சற்று உடல் நலம் சரியில்லாமல் போன போது எல்லோரும் கூடி உதவியதை நினைவுகூர்கிறார். பஸ்ஸின் க்ளீனர் பையன் ஒருவன் பங்களா தேஷிலிருந்து வந்தவன். 'தீதீ...தீதி....' என்று பாசத்துடன் இவர்களுடன் பழகினானாம். பிரியும்போது அச்சிறுவன் அழுதே விட்டானாம்.

"எங்கள் நட்பு வலிமை பெற்றது இந்தப் பயணத்தின் போதுதான். இன்னும் இந்த நட்பு குறையாமல் தொடர்கிறது" என்று ஒரே குரலில் கூறி நமக்கு விடை கொடுக்கிறார்கள் இந்தக் கல்லூரி மாணவிகள்.

மலைப்பிரதேசத்தில் வினோதமான அனுபவம்.

(ஃபிர்தோஸ் ஜஹான். காமர்ஸ் பேராசிரியை எஸ். ஐ.ஈ.டி. கல்லூரி)

"ஒருமுறை கேரளாவில் மூன்னாருக்குப் போகும் வழியில் ராஜமலைக் காடு என்று நினைக்கிறேன். மறக்க முடியாத வினோத சம்பவம் ஒன்று நடந்தது. மலையில் ஏறி சென்று கொண்டிருக்கையில் பெரிய பாறை ஒன்று மேலேயிருந்து உருண்டு விழுந்து சாலையை அடைத்து விட்டிருந்தது. பஸ்ஸிலிருந்து ஜீப்பிற்கு மாறியிருந்த எங்களால் முன்னால் போக முடியவில்லை. பின்னால் ஊர்வலமாக மற்ற ஜீப்புகளும் பஸ்ஸுகளும்.

• ஃபிர்தோஸ் ஜஹான்



சாலையோ மிகவும் குறுகலாக இருந்தது. நேரமாக நேரமாக எங்கள் வயிற்றில் புளியைக் கரைத்தது. ஊர் மக்கள் வந்து பாறையை அகற்ற முற்பட்டார்கள். ஆனால் பாறையோ இம்மியும் நகரவில்லை. பெண் பிள்ளைகளுடன் காட்டுப்பிரதேசத்தில் இப்படி மாட்டிக் கொண்டு விட்டோமே என்று பேராசிரியைகளான எங்களுக்கு ஒரே கவலை.

கடைசியில் வெடி வைத்துத் தான் பாறையை உடைக்க வேண்டியிருந்தது. பாம்ப் ப்ளாஸ்ட்டை நாங்கள் நேரடியாகப் பார்த்தோம்! ஒரு வழியாக பாறை அகற்றப்பட்டு நாங்கள் மிருகங்களைப் பார்க்க புறப்பட்ட போது ஒரே ஏமாற்றம்தான். வெடிச்சத்தத்தில் காட்டு மிருகங்கள் மாயமாய் மறைந்து விட்டிருந்தன. மலையில் உயர்ந்த இடத்தில் மாட்டிக் கொண்டு பாம்ப் பிளாஸ்ட்டைப் பார்த்தது ஒரு மயிர்க்கூச்செரியும் சம்பவம்தான். இப்போது நினைத்தாலும் வியப்பாக இருக்கிறது. பெண்களை அழைத்துக் கொண்டு பாதுகாப்பாக வந்துவிட்டோமே என்று நிம்மதியாகவும் இருக்கிறது.

"கல்லூரி சுற்றுப் பயணங்கள்.. சமூக உணர்வும் பொறுப்புணர்ச்சியும் வளர பயிற்சியளிக்கும் பயணங்கள்..."

திருமதி ஃபாத்திமா, எஸ்.ஐ.ஈ.டி. கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் மற்றும் என்.எஸ்.எஸ். அதிகாரி)

"எங்கள் கல்லூரியில் டிராவல் ஏஜெண்டுகளின் மூலம் சுற்றுப் பயணத்திற்கான எல்லாவித ஏற்பாடுகளையும் செய்து விடுவார்கள். குலு மணாலி போன்ற சில இடங்களுக்கு சமையல்காரர்கள் முதற்கொண்டு அழைத்துச் சென்ற அனுபவமும் உண்டு. கல்லூரியில் பதின்மூன்று பிரிவுகள் உள்ளபடியால் வருடத்திற்கு பத்து ஒரு நாள் சுற்றுலா, 5-7 இரண்டு நாள் பயணங்கள்



மற்றும் இரண்டு அதிக நாள் பயணங்கள் ஏற்பாடு செய்கிறோம்.

அருகேயுள்ள இடங்களான எம்.ஜி.எம்., மஹாபலிபுரம், முட்டுக்காடு, பிச்சாவரம் போன்ற இடங்களுக்கு ஒரு நாள் சுற்றுலா சென்று வருவோம். ஒரே நாளில் திரும்பி விடுவதால் பல மாணவிகளும் விரும்பி வருவார்கள்.

இரண்டு நாட்கள் பயணத்திற்கு ஊட்டி, கூர்க், கொடைக்கானல், ஏற்காடு, பெங்களூர் போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்வோம்.

பெரிய பயணங்களுக்காக கல்கத்தா, டில்லி, குலு மணாலி, டார்ஜிலிங், ஜெய்பூர், மும்பாய் போன்ற இடங்களுக்குப் போய் வருவோம்.

ஒரு காலத்தில் மாணவிகளை ஸ்ரீலங்கா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளுக்கு அழைத்துச் சென்றது உண்டு.

இதைத் தவிர 'ஸ்டடி டூர்' என்று தாவர இயல் படிக்கும் மாணவிகளை ஊட்டி, கொடைக்கானல் போன்ற இடங்களுக்கும், ஜுவாலஜி மாணவிகளை தேக்கடி போன்ற இடங்களுக்கும், ஹோம் சயன்ஸ் மாணவிகளை சிற்பக்கலை படிப்பதற்காக மஹாபலிபுரம் போன்ற இடங்களுக்கும் அழைத்துச் செல்வோம்.

எங்கள் என்.எஸ்.எஸ். மாணவிகளை நேஷனல் இண்டக்ரேஷன் கேம்ப்பிற்காக (தேசிய ஒருமைப்பாட்டு கேம்ப்) பல இடங்களுக்கு அழைத்துச் செல்கிறோம். இதற்குண்டான செலவினை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது. ''யூத் ஃபெஸ்ட்டிவலு''க்கு ராஜஸ்தானுக்கும் தசரா ஃபெஸ்ட்டிவலுக்கு குலு மணாலிக்கும் அழைத்துச் சென்றிருந்தோம். 'யூத் எக்சேஞ் ப்ரோக்ராம்' மில் எங்கள் மாணவிகள் ஜப்பானுக்கும் சென்றிருக்கிறார்கள்.

'ஹோம் ஸ்டே ப்ரோக்ராம்' என்னும் திட்டத்தில் எங்கள் மாணவிகள் மத்தியப் பிரதேசத்திற்குச் சென்று அவர்கள் மாநில மாணவிகளின் வீடுகளில் தங்கிவிட்டு வந்தார்கள். அன்னிய மாநில மாணவ மாணவிகள் நம் மாநில மாணவ மாணவிகளின் வீடுகளில் தங்குவார்கள். இப்படியாக அன்னிய கலாச்சாரத்தைப் பற்றி அறிவு வளர்கிறது.


— ஸ்வாதி

பவழ மல்லி சீசனில் மழையின் காரணமாக மரவட்டை வரும். இதைத் தவிர்க்க நல்ல பசும் சாணத்தை மரத்தினடியில் தெளித்து கூட்டி சுத்தப்படுத்தி விட்டால் மறுநாள் காலையில் மரத்தை உலுக்கி புஷ்பம் எடுக்க வசதியாக இருக்கும். அதோடு மாலை வேளையில் நன்கு தண்ணீர் ஊற்றினாலும் மறுநாள் வெகு நேரம் பூ வாடாமல் இருப்பதோடு பெரியதாகவும் பூக்கும். தவிர பவழமல்லி மரத்தடியில் இரவில் மஹாவிஷ்ணு படுத்து உறங்குவதாகவும் ஐதீகம்.




- லெக்ஷ்மி வெங்கட்ரமணி.

தெய்வீகத் தம்பதிகள்!



மெரீனா எழுதி இயக்கியுள்ள 'கஸ்தூரி திலகம்' நாடகம் ஆரம்பித்தபோது கொஞ்சம் அசுவாரஸ்யமாகத் தான் பார்க்கத் தோன்றியது. தென்னாப்பிரிக்காவில் மகாத்மா காந்தியும், கஸ்தூரிபாவும் வாழ்ந்த வாழ்க்கையில் ஓரிரு நிகழ்ச்சிகளோடு நாடகம் துவங்குகிறது. ஆனால் போகப்போக கதையின் (உண்மை வாழ்க்கையின்!) ஓட்டம் நம்மை இழுக்கிறது.

மகாத்மா எனத் தள்ளி நின்று சொன்ன நம்மை அவரின் மனித வாழ்க்கைக்குள் எட்டிப் பார்க்கச் சொல்கிறார் மெரீனா. தன் மூத்த மகன் சரியில்லாமல் இருக்கிறானே என கஸ்தூரிபாவின் தவிப்பு, கடுமையான நெறிமிக்க வாழ்க்கையை வகுத்துக் கொண்ட கணவனுக்கும், அது பிடிக்காது ஓடும் மகனுக்கும் இடையில் அவர் படும் பாடு, மருமகளுடன் அவருடைய அன்பான இணைப்பு என நம்மை மெய்மறக்கச் செய்கிறார் மெரீனா.





கடைசியில், சிறையில் உண்ணாவிரதம் இருக்கும் கணவருக்காக துளசிமாதாவை வேண்டிக் கொள்கிறார் பா, 'என் உயிரை எடுத்துக் கொள், அவர் உயிரை இந்த நாட்டுக்குத் தந்து விடு' என்று. எந்த பிப்ரவரி மாதம் சிவராத்திரியில் அவர் அப்படி சங்கல்பம் செய்து கொண்டாரோ, அதன்படியே அடுத்த பிப்ரவரியில் சிவராத்திரியன்று உயிர் நீக்கினார் அந்த மாபெரும் உத்தமி. காந்தி உயிர் பிழைத்துத் தன் அறப்போராட்டத்தைத் தொடர்ந்தார். வரும் பிப்ரவரிக்குப் பொருத்தமாக இந்த நாடகத்தைப் பார்க்க நேர்ந்ததை என்னவென்று சொல்வது?

இளைய வயதில் காந்தியின் கண்டிப்பான முகத்தையும், பின்னர் வயதான கனிவான முகத்தையும் அப்பு ஸ்ரீநிவாஸன் அழகாகப் பிரதிபலித்தார். அதேபோல இளைய வயதில் அப்பாவியாகவும், முதிய வயதில் தாயின் கனிந்த கனிவோடும் கஸ்தூரிபாவாக அழகாக உலாவினார் வத்சலா ராஜகோபால்.

கணவனின் கொடுமையால் கஸ்தூரிபா தவிப்பதாக வருத்தப்பட்டு கடிதம் எழுதிய ஒரு பெண்மணிக்கு பா பதில் எழுதச் சொல்வது ஒவ்வொரு பெண்ணும் தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்று. சாதாரண காம மோகங்களுடன் ஆரம்பிக்கப்படும் கணவன் மனைவி வாழ்க்கை எப்படி உயர்ந்து தெய்வீக நிலைக்குச் செல்ல முடியும் என்பதற்கு மகாத்மா–பா வாழ்க்கை மிகச் சிறந்த உதாரணம். அற்புதமான இந்தத் தம்பதிகளின் வாழ்வினை அனைவரும் அறியவேண்டும்.

இந்த நாடகத்தை பள்ளி, கல்லூரியிலுள்ள அடுத்த தலைமுறையினர் அவசியம் பார்க்க வேண்டும்.

— மஞ்சுளாரமேஷ்

"புஜி... புஜி..."

குரல் கேட்டு எட்டிப் பார்த்தாள் ராஜி.

அவளை 'புஜி' என பிறந்த வீட்டார்தான் அழைப்பார்கள். இப்போது அவளது அக்காதான் குரல் கொடுத்தபடியே படியேறிக் கொண்டிருந்தாள்.

சே... முகத்தைச் சுழித்துக் கொண்டாள் ராஜி. காலையிலிருந்து அவளுள் பொங்கிப் பிரவகித்துக் கொண்டிருந்த உற்சாகக் குமிழிகள் பொட்டென உடைந்து போனது.

"ஈவினிங் சீக்கிரம் வந்துடறேன். இந்த வருஷம் நியூ இயர்க்கு நம்ம எல்லாருக்கும் டிரஸ் என் செலக்ஷன்தான். நடுவுல நீ தலைநீட்டக் கூடாது. ஒக்கேவா... இப்படியே ஜாலியா கடைவீதில ஒரு ரவுண்ட் விட்டுட்டு, நைட் டிபனை ஹோட்டல்ல முடிச்சுட்டு திரும்பறோம். போற வழில சோலை ஹால்ல ஹோம் எக்ஸ்பிஷன் நடக்கிறதாம். நீ ரொம்ப நாளா கேட்டுக்கிட்டு இருந்தியே வாஷிங்மெஷின். அதையும் பார்த்து வாங்கிடலாம். அப்புறம் வேறென்ன தேவைன்னு லிஸ்ட் போட்டு வை. என்ன... என்னையே பாக்கறே. ஒரு லம்ப் அமவுண்ட் அரியஸ்லா வரப் போற குஷிதான்" காலையில் அவளது கன்னத்தைத் தட்டி, படு உற்சாகமாய்ச் சொல்லி விட்டுப் போயிருந்தான் ரவி.

அப்போதிருந்து ராஜிக்குத் தலைகால் புரியவில்லை. என்ன இது. கொடுக்கிற சாமி இப்படி. கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டுகிறது. ரவியே தானா இது. கருவறைக் கடவுளைப் போல இருக்குமிடம் விட்டு சாமான்யமாய் அசைய மாட்டான். புஜம் உரச ஜோடியாய் அவனோடு கோவில், சினிமா என வெளியே கிளம்ப வேண்டும் என்ற ஆசை அவளுள் பீறிடும்போதெல்லாம், "வெளில



பா. உஷாராணி



போறதுக்கெல்லாம் டைம்மில்லைம்மா'' என்றபடியே அலுவலகம் ஓடி விடுவான்.

இப்போது வர்ஷினியும் பிறந்து பல வருடங்கள் ஆனபின் ஒன்றாகப் போய் வரும் சந்தர்ப்பம் வாய்க்கிறது. பரவாயில்லை. தாமதமானாலும் வரம் தந்திருக்கிறதே சாமி... அதுதான் முக்கியம்... சந்தோஷக் குதியல் போட்டது மனசு.

ஸ்கூல் விட்டு வர்ஷினியும் விரைவாக வந்தால் தேவலை. டியூசனுக்குப் போக வேண்டாமென்று விட்டு அவளையும் கிளப்பலாம். என்ன புடவை அணிந்து கொள்வது. ரவிக்குப் பிடித்த ஆலிவ் க்ரீனா அல்லது தனக்குப் பிடித்த அந்த யெல்லோ மைசூர் சில்க்கா... என ராஜி தடுமாறிக் கொண்டிருந்த வேளையில்தான் அக்காவின் குரல் சிவபூஜையில் கரடியாய்.

இவளை வைத்துக் கொண்டு எப்படிக் கிளம்புவது? தங்க வந்திருக்கிறாளா? உடனே கிளம்பி விடுவாளா?

எப்போதும் பூடக நிகழ்வாய்தான் இருக்கிறது அக்காவின் வருகை. வாசலில் இரு கதவுகளையும் விரியத் திறந்து விட்டாள் ராஜி. சாரீரத்தைவிட சரீரம் கனம் அக்காவுக்கு.

சுவாதீனமாய் உள்ளே வந்தாள் அக்கா.

''தலகில சீவிக்கிட்டு வர மாட்டியா நீ. உம் முகத்தைக் கண்ணாடில பாரு. பஞ்சத்துல அடிபட்ட மாதிரி...'' ராஜி சீறினாள். அக்காவின்

கொண்டு வந்தால் சகோதரி!

எங்கு யாரிடம் நீ எந்தத் தவறைக் கண்டாலும் அதை உன்னிடம் நீ திருத்திக் கொள்!

— 'யாரோ'

தகவல்: வி. பரமசிவம்

வருகை தந்த எரிச்சல்.

"ம்... போடி... முடி பூரா பூச்சி வெட்டு. சீவினாலும் எடுத்துக்கிடறது. பல் காத்து வேற, முடியக் கலைச்சு விட்டுடுச்சு. எதுவும் ஒனக்கு திருத்தமா இருக்கணும். சரி சீப்பைக் கொண்டா இப்ப சீவிக்கிறேன்..."

ராஜி நிறைய சுத்தம் பார்ப்பவள். வீட்டில் வர்ஷினி, ரவி அவளுக்கென தனித்தனி சீப்புகள். விருந்தாட்களுக்கென தனி சீப்பு. அதை எடுத்து வந்தாள்.

"அட! டேபிள் டாப் வெட் கிரைண்டர் வாங்கிட்டியா புஜி. போனதாரம் நா வந்தப்போ இல்லையே. சாதா கிரைண்டருக்கு இது தேவலாம். எப்ப வாங்கினது மொத்தமா? தவணையா?" அக்கா சமையலறையில் போய் கிரைண்டரை ஆராய்ந்து கொண்டிருந்தாள்.

சுறுசுறுவென வந்தது ராஜிக்கு. அது எப்ப வாங்கினது, இது எப்ப வாங்கினது என கணக் கெடுக்கத்தான் இவள் வந்து சேருகிறாள்.

ராஜி மதுரையில் இருந்தவரை அக்கா எட்டிப் பார்த்ததேயில்லை. இப்போது இந்த ஊரில் சொந்த வீடு வாங்கி குடியேறியதும், இந்தத் தொல்லை அதிகமாகி விட்டது. பக்கத்தூரிலிருந்து விசுக்விசுக்கென கிளம்பி வந்து விடுகிறாள். எப்போது வருகிறாள்... எந்த விஷயமாக வருகிறாள் என்று ஒரு அறிவிப்பும் இருக்காது. இதோ இதுபோல் திடீரென வந்து நிற்பாள். தன் குடும்ப விஷயம்.... நாத்தனார்கள், மாமியார் தொல்லை என இரு காதுகளும் நிரம்ப வழியும் அளவுக்கு தொணதொணப்பது அவள் வழக்கமாகி விட, இவள் எப்போதடா கிளம்பிப் போவாள் என நினைக்குமளவுதான் நேர்கிறது ஒவ்வோர் முறையும்.

கொலகொலயாய் முந்திரிக்கா... என ராஜி விளையாடும் வயதில், அக்கா, லக்ஷ்மி, ரமணி சந்திரன், கல்கி, சாண்டில்யன் என புத்தக கூட்டத்திற்குள் மூழ்கிக் கிடந்தவள். புத்தகம் தவிர வேறு பொழுது போக்குகள், விருப்பங்கள் அக்காவுக்கு அப்போது இல்லை. ராஜியும், அக்காவின் புத்தக விருப்ப வட்டத்தைக் கலைத்து, உள்சென்று ஒட்டிக் கொள்ள மாட்டாள். விளையாடும் பருவம் தாண்டி சற்றே நிமிர்ந்த போது அக்காவுக்குத் திருமணமாகி விட்டது. அவ்வளவுதான், அத்தோடு தனித்தனி தீவுகளாய் அமைந்து விட்டது இருவருக்கும் வாழ்க்கை.

"மதுரையிலிருந்து நீ இங்க மாத்தி வந்ததுல மூதல்ல சந்தோஷப்பட்டது நான்தான்" என்றபடியே அக்கா தலைவாரிக் கொண்டிருந்தாள்.

எதற்காக சந்தோஷப்படுகிறாய்? வெட்டியாய் வந்து இப்படி என்னை கழுத்தறுக்கவா.... மெனக்கெட்டு ஊரிலிருந்து கிளம்பி எதன் நிமித்தமாய் இங்கே வருகிறாள். நினைத்தால், ராத்தங்குவதும், இல்லையெனில் உடன் புறப்பட்டு விடுவதுமாய் அக்காவின் வருகை புதிராகத்தான் தோன்றியது ராஜிக்கு. மூத்தவள் மஞ்சுளாவுக்கு பி.எஸ்ஸி., நர்ஸிங் சீட் வாங்க பணம் கேட்கிறார்கள் என பேச்சோடு பேச்சாக போன முறை சொல்லியிருந்தாள். ஒரு வேளை பணத்திற்கு அடிபோடத்தான் அடிக்கடி வருகிறாளோ? உறவுகள் பசையிருந்தால்தானே ஒட்ட வருகிறது...

அக்காவின் கணவர் போஸ்ட்மேனாக இருக்கிறார். மூன்று குழந்தைகள், மாமியார், மாமனார், ஆறு நாத்தனார்கள் என அக்காவுக்கு பிக்கல் பிடுங்கல் அதிகம். ராஜிக்கு வாய்த்தது நேர் எதிர். ஒரே குழந்தை வர்ஷினி. ரவியும் குடும்பத்திற்கு ஒரே பிள்ளை. பேங்க் கேஷியராக கைநிறைய வருமானம். திருமணமான சொற்ப வருடங்களில் அவனின் அம்மா, அப்பா, அடுத்தடுத்து இறைவனடி சேர ராஜிக்கு சச்சரவில்லா வாழ்க்கை.

அக்கா தலைவாரி முடித்ததும் எழுந்து போய் பிரிஜ்ஜைத் திறந்து பார்த்தாள். பிரிஜ்ஜிலிருந்து தயிரில் சிறிதைக் கிண்ணத்தில் போட்டுக் கொண்டு, அதில் சீனியைக் கலக்கி சாப்பிட ஆரம்பித்தாள்.

"ஒரு மணி வெயில்ல இப்ப நடந்து வந்தேனா, உடம்புல சூடுபிடி வர்ற மாதிரி இருக்கு."

எதற்காக வெயிலில் கஷ்டப்பட்டு இங்கே வருகிறாய். அதுவும் சேர்த்து வெளியில் கிளம்பலாம் என்று ரவி சொன்ன இந்த நன்னாளிலா உனக்கு வரத் தோன்றும். எதற்காக வருகிறேன், எனச் சொல்லியும் தொலையாமல்... மனசின் முணுமுணுப்பு அதிகரித்தது

ராஜிக்கு.


"என் மூத்த நாத்தனார் ரம்யாவோட பொண் பெரியவளாயிட்டாடி. பதினொரு வயசுதான் ஆவுது. அதைச் சொல்ல ரம்யா முந்தாநா வந்திருந்தா. என் வீட்டுல வர்ற முத விசேஷம். மாமன் முறைக்கு வைக்கிற சீருல எதுலயும் குறை வச்சுடாதே. 'அங்க எனக்கு அவமானமாயிடும்னு' கண்டிஷன் போட்டுட்டு போறாடி அவ. இத்தனைக்கும் மருந்துகளாவை நர்சிங் சேர்க்க நாங்க அலையா அலையறது அவளுக்கும் தெரியும். என்ன ஏதுன்னு அதைப் பத்தியெல்லாம் கண்டுக்கிறதேயில்லை."

அக்கா பேசிக் கொண்டிருக்க, 'உம்' கொட்டியவாறே ராஜி பூத்தொடுத்துக் கொண்டிருந்தாள். சே... இந்த பஞ்சபாட்டை கேட்க இதுதான் நேரமா.' காலையில் கனவு கண்ட அற்புத பொழுதுகள் இப்படியா கழிய வேண்டும்.'


"கெடக்கிறதெல்லாம் கெடக்கட்டும் கெழவனைத் தூக்கி மணையில வைங்கிற மாதிரி இங்க என் மாமியாரும், மாமனாரும் பேத்தி சடங்குக்கு சீர் லிஸ்ட் தயார் பண்ணி நீட்டிக் கிட்டு நிக்கறாங்க. ச்சே... என்ன வாழ்க்கைடி இது. அடுத்தடுத்து செலவு வைக்க நாத்தனார் டீம் தயாரா நிக்கிறது. மேய்ச்சலுக்குப் போற மாட்டுக்கு கொம்புல புல்லைக் கட்டி அனுப்பற கதையக் கேட்டிருக்கியா நீ. அது எங்க

திடீரென்று ஒருவருக்கு அவசரமாக காப்பி வேண்டும் என்றால், டிகாஷன் போட பில்டரை எடுக்க வேண்டாம். டீ வடிகட்டியில் 1 ஸ்பூன் (அ) 2 ஸ்பூன் காப்பி பொடி போட்டு, அழுத்தி, நல்ல சூடான வெந்நீரை ஊற்றினால் டிகாஷன் உடனே ரெடி. அதிகம் மீதம் இருந்து வேஸ்ட் ஆகாது.

– வஸந்தா ராமமூர்த்தி



பால் பாயசம் செய்யும் போது



அரிசியை வேக வைக்கும் ஜலத்தில் பால் பாதியைச் சேர்த்துக் குழைய (குக்கரில்) வைக்க வேண்டும். பின்னர் தனியே ஒரு உருளியில் மாற்றி கொதிக்க விடவும். சேர்க்க வேண்டிய பாலை, சர்க்கரையைச் சேர்த்துத் தனியாக காய்ச்சவும். நன்றாகச் சுண்ட காய்ச்ச வேண்டும். பின் அதை சாதத்துடன் சேர்த்து ஏலம், முந்திரி, கிஸ்மிஸ் சேர்க்க, ''பிங்க்' கலரில் அமையும். 'பாம்பே' பாயசமா என்று கேட்க வைக்கும்.

– புவனேஸ்வரி சந்திரசேகர்.

கதைடி. டாக்டருக்குத்தான் மஞ்சுளவை படிக்க வைக்க வசதியில்ல. நர்சிங்லயாவது சேர்க்கலாம்னு நினைச்சோம். நேத்து பாரு... அவருக்கே ஆத்திரம் வந்து, இவளை நர்சிங் சேர்த்து கிழிச்சேன்னு கத்த ஆரம்பிச்சுட்டார். பின்ன... காசுக்கடை செட்டியார் நூத்துக்கு பத்து வட்டி கேட்ட ஆத்திரம் அவருக்கு. பத்து வட்டியெல்லாம் கொடுத்து மீள முடியுமா என்ன..."

ராஜி தன்னுள் தீர்மானித்துக் கொண்டாள். இவள் அடிக்கடி வருவதான நோக்கம் நிச்சயம் பணத்தின் மீதான எதிர்பார்ப்பாகத்தான் இருக்கும். மூத்தவளுக்கு நர்சிங் சீட் வாங்க பணத்துக்கு அலைவதாக அடிகோடு போட்டே பேச்சைத் தொடங்குகிறாள். அல்லது முடிக்கிறாள். எதையும் வெளிப்படையாய்க் கூறாமல் தானாக வலிய கேட்டு, பணத்தைத் தூக்கிக் கொடுக்க வேண்டும் என எதிர்பார்க்கிறாளோ. இப்படிப்பட்டவளை வீட்டில் இருத்தி விட்டு வாஷிங்மெஷினும், டிரஸூம் எடுக்கப் போன மாதிரிதான். குழப்ப எண்ணங்களில் ராஜியின் மனசு கால்பந்தாய் உதைபட்டுக் கொண்டிருக்க, வாசலில் வரிசையாய் இருந்த பூச்செடிகளுக்கு தண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள் அக்கா....

“வாடா தங்கக் குட்டி... நாலு மணிக்கே ஸ்கூல் விட்டாச்சா ஒனக்கு'' அக்காவின் உற்சாகக் குரல் கேட்டது. வர்ஷினி ஸ்கூல் விட்டு வந்து விட்டாள் போலும்.

“ம்... இன்னிக்கு ஸ்டெடி இல்ல பெரிம்மா. சீக்கிரம் வந்துட்டேன்'' புன்னகைத்தவாறே சமையலறைக்குள் போனாள் வர்ஷினி.

வர்ஷினி காப்பி போடுவதில் எக்ஸ்பர்ட். வீட்டில் காப்பி டிபார்ட்மெண்ட் அவளது. யாரையும் போட விட மாட்டாள். விருந்தாட்கள், வீட்டார் என எத்தனை பேரானாலும் கச்சிதமாய் காப்பி போட்டுக் கொண்டு வருவாள்.

“ஆறாவதுதானே படிக்கிறா வர்ஷி. பரவால்லடி. இந்த வயசுக்கு இத்தனை வேலை பாக்கறாளே. என் வீட்டுல மஞ்சுளா பிளஸ் டூ முடிச்சுட்டான்னுதான் பேரு. இங்கன இருக்கிற டம்ளரை அங்கன எடுத்து வக்க மாட்டா. இன்னமும் தல கூட நாதான் சீவி விடணும். எங்க... நாத்தனார், மாமியார், மாமனார்னு இரை கொடுக்கவே நேரம் சரியா இருக்கு. நடுவுல புள்ளைங்க எப்படி வளருதுன்னு கண்காணிக்கவே சக்தியில்லாம போச்சுடி எனக்கு. பரவாயில்லை. நீ உன் கை வேலை மாத்த வர்ஷியைத் தயாராக்கிட்டியே''.

ராஜிக்கு சலிப்பாய் வந்தது. எதை எடுத்தாலும் ஒப்புமை. உன் வீடு போல என் வீடு இல்லை. உன் மகள் போல என் மகள் இல்லை. என்னை விட நீ வசதியாய் இருக்கிறாய் என பொறாமையால் வெந்து சாம்பலாகத்தான் இவள் இங்கே வருகை தருகிறாள்.

“ஓ! ராஜியோட அக்கா வந்திருக்கீங்களா?'' மாடி போர்ஷன் மாமி இறங்கி வந்தாள்.

அக்கா சிரித்தபடி தலையசைக்க, மாமி ராஜியருகே உட்கார்ந்து கொண்டாள். “என்னது ராஜி... உங்கக்கா வந்துருக்காங்க போல மறுபடி. என்ன விஷயமாம். வீட்டுல ஏதும் தகராறா. அடிக்கடி இங்க வந்துர்றாங்க'' மாமி எட்டி ராஜியின் காதருகே கிசுகிசுக்க கள்ளென வந்தது.

அக்காவை எதிரே வைத்துக் கொண்டு இதென்ன அநாகரிகமாய் விசாரணை. என் நட்பு வட்டத்திற்குள் இவளை நான் அனுமதிக்கவேயில்லை. தானாகவே உரிமை எடுத்துக் கொண்டு, எல்லா விஷயங்களுக்குள்ளும் உள்ளே நுழைந்து... சே... ஏன் என் மேல் எல்லோரும் சுலபமாய் குதிரையேறிக் கொள்கிறார்கள். இதோ அக்காவிலிருந்து இந்த மாமி வரை. யாரையும் பளிச்சென்று முகத்திலடித்தாற்போல் சொல்ல வாய்க்கிறதா எனக்கு. கோபத்தின் குரல் உள்ளே தளபுளவென கொதித்தது.

“அடேடே... வதினையா.. வாங்க, வாங்க, ஊர்ல எல்லோரும் சௌக்கியமா'' அலுவலகத்திலிருந்து விரைவாக திரும்பிய ரவி, அக்காவை விசாரித்தபடியே வந்தான்.

மாமி அவனைக் கண்டதும் விருட்டென வெளியேற, அக்கா சோபாவிலிருந்து எழுந்து,

“எல்லோரும் சௌக்கியந்தான் தம்பி''

என்றான்.

"நீங்க உட்காருங்க. எதுக்கு எழுந்துக்கிறீங்க..." என்றபடியே ரவி ரூமுக்கு வந்தான்.

வர்ஷினி டியூசன் போயிருந்தாள். அவள் போட்டு வைத்து விட்டுப் போன காப்பி பிளாஸ்கில் இருந்தது. அதை வடித்து அவனுக்குக் கொண்டு போனாள் ராஜி.

"என்ன விஷயமாம்... வதினை வந்துருக்காங்க. எப்போ வந்தாங்க?"

"ஆமா... என்னைக்கும் இல்லாத திருநாளா. சேர்ந்து வெளில போவானிங்கன்ல. அதைக் கெடுக்க வந்துட்டா."

"ப்ச்... வெளில எப்ப வேணா போய்க்கிடலாம். முதல்ல வதினை இங்க என்ன விஷயமா அடிக்கடி. வர்றாங்கன்னு கேட்டியா?"

"இத்தினி வருஷமா எட்டியே பார்க்காம இருந்தவ இப்ப வர்றான்னா வேறெதுக்கு வருவா? நம்மகிட்ட பணத்தை எதிர்பார்த்து தான். மூத்தவளை நர்சிங்ல சேக்க பணம் கேக்கறாங்கன்னு புலம்பிக்கிட்டு இருக்கா. எதையும் விட்டுச் சொன்னாத்தானே தெரியும். சுயகெளரவம் சுண்டிப் போயிரும்ல. தாமனா வலிய கேட்கணும்னு வெயிட் பண்றா போல. மனுசங்க... நரி புத்தியோட தந்திரக்காரங்களா மாறிட்டு வர்றாங்கன்னு தோணுது" ராஜிக்கு வெளியே கிளம்புவது தடைபட்ட கோபம் முட்டிக் கொண்டு நின்றது.

"தானா கேட்க சங்கடப்படுறாங்களோ என்னவோ. அவங்க உன்னோட அக்கா. அதனால நீ கேட்டுப் பார். முடிஞ்சா கொடுப்போம்" ரவி கிளம்பி லைப்ரரி போய் விட்டான்.

ஓரிரு வரிதான் அவன் பேசுவது. அதை மீற முடியாது. ஆனால் வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடும் குணம் கொண்டவன்.


இனி அவ்வளவுதான் காலைத் திட்டம் காலாவதி.

காலையில் பூத்த தன் கனவுப் பூ பொசுங்கிப் போன ஆத்திரத்தோடு ராஜி வெளியே வர, அக்கா இவள் பாதியில் தொடுத்து விட்டு வந்த பூக்களை தொடர்ந்து தொடுத்துக் கொண்டிருந்தாள்.

"புஜி... ஒனக்கு கலர் பூந்தி வாங்கியாந்தேன். கொடுக்க மறந்துட்டேன் பாரு. இந்தா... கலர் பூந்தி கலர் பூந்தின்னு சின்னதுல ஆலாப் பறப்பே."

இது ஒண்ணுதான் இப்ப கொறச்சல். கலர் பூந்தி, காராப்பூந்தி என இவள் வாங்கி வருவதெல்லாம் சீந்துவாரற்று மூலையில் கிடக்கிறது. இதையெல்லாம் இவளுக்கு எவ்வாறு உணர்த்துவது?

"இந்தப் பிச்சிப் பூக்கொரு வாசம் புஜி.



8 வரிசை 10 புள்ளி
மேல் 6-4-2-1. கீழ் 6-2 வரிசை 1-1

– டி. அனுசுயா தேவி, வில்லிவாக்கம்.

மஞ்சுளாவுக்கு வாசப்பூவே ஆகாது. டிசம்பர் பூ. கனகாம்பரம்னுதான் வச்சுக்குவா."

"சரி... மஞ்சுக்கு நர்சிங் சீட் வாங்க பணத்துக்கு அலையறதா சொன்னியே. ஏற்பாடு பண்ணியாச்சா? நாங்க ஏதும் உதவி செய்யணுமா... எதுவும் சொல்லாம நீ பாட்டுல வர்றதும் போறதுமா இருக்கே?" ராஜியின் குரல் ஒருவித சலிப்பைத் தடவியிருந்தது.

"போதும் புஜி. இது போதும். நாங்க உதவி செய்யட்டுமான்னு ஆதரவா கேட்கறியே அது போதும். ஆனா நீ உதவி செய்யற அளவுக்கு இப்ப அதுக்கான அவசியம் எதுவும் இல்லடி. உங்கிட்ட உதவி கேட்டு, தொந்தரவு படுத்துற மாதிரி கஷ்டம் ஏதும் வந்துடலை."

ராஜி மௌனமாய் அக்காவை ஏறிட்டாள்.

"இத்தினி வருஷமா என்னை விட்டு தூரத் தொலைவுல இருந்தே. உன்னைப் பார்க்க ஒவ்வொரு தடவையும் வர்றதுக்கான பஸ் செலவே அம்பதுக்கு மேலாவும். வீட்டுப் பொருளாதாரமும் சரியில்லை எனக்கு. ஆனா இப்ப நீ பக்கத்துலயே மாத்தி வந்துட்டியா. போக வர்ற பஸ் செலவு ஆறே ரூபாதான் ஆவுது. அடிக்கடி வர எனக்கும் வசதிப்படுது. எம் மனசிலிருக்கிற ஆதங்கத்தைக் காது கொடுத்து கேட்க என் வீட்டுல யாருமில்லைடி. உன் அத்தானோ சன்புள்ளுன்னு விழுற மனுஷன். மாமியார், நாத்தனார்ங்க என்னைக் கொத்திப் புடுங்கத்தான் தயாரா நிப்பாங்க. புள்ளைங்க ஸ்கூல் படிப்புன்னு ஓடிடுதுக. அதுகிட்ட என்னத்தைச் சொல்ல முடியும். ஆண்டவன் இத்தனை சீக்கிரமாவா நம்மைப் பெத்தவங்களையும் கூப்பிட்டுக்கிடணும்... இப்ப நீ என் பக்கத்துல குடியேறினதுதான் எனக்குக் கிடைச்ச ஒரே நிம்மதி. அம்மா மடில தலை சாச்சுக்கிடற மாதிரி ஒரு சந்தோஷம். என் மனக் கவலையெல்லாம் கொட்டி. ஆத்திக்க, பாசாங்கு இல்லாம எல்லாத்தையும் பகிர்ந்துக்கிட்டு போறதுக்கு எனக்குன்னு இப்ப நீ ஒருத்திதானே இருக்க. எம்புட்டு கஷ்டத்தை அனுபவிச்சாலும், பரவாயில்லைடி. அதையெல்லாம் மனசு விட்டு பேசிக்க நமக்குன்னு ஒரு ஆள் வேணும். உங்கிட்ட அப்படிப் பேசிட்டு போயிட்டேன்னு வச்சுக்க... மனசு காத்துல பறக்கிற பறவை மாதிரி இருக்கும்."

அக்கா ராஜியின் கைகளை எடுத்து தன் கைகளுக்குள் இறுக பொத்திக் கொண்டாள்.

"அதுக்கும் மேல என்னை மாதிரி இல்லாம, வாழறதைப் பார்க்கறதுல ஒரு சந்தோஷம். பச்சைப் பசேல்னு இருக்கிற எடத்தைப் பார்க்க, பார்க்க பொங்கி வழியுமே சந்தோஷம். மறுபடி மறுபடி 'அதைப் பார்க்கணும்னு, ரசிக்கணும்னு மனசு உற்சாகமா அலைபாயுமே அது மாதிரி, உன்னையும், உன் வீட்டையும் பார்க்க வர்றதுல சந்தோஷம் எனக்கு... கொஞ்சம் மூச்சாறிக்கிட்டுப் போற திருப்தி..."

அக்கா நிமிர்ந்து மணி பார்த்ததும் விருட்டென எழுந்து கொண்டாள்.

"ஆத்தாடி.. பேசிட்டே இருந்ததுல நேரம் ஓடிடுச்சு. மணி ஏழே கால். ஏழரைக்கு பஸ்ஸு எனக்கு. வர்ஷியும், ரவியும் வந்தா சொல்லிரு. நா கிளம்பறேன்... ம்... அப்புறம் ஒரு விஷயம் புஜி. வீட்டுல மொத விசேஷம்னு எங்கல்யாணத்துக்கு நம்ம வீட்டுல எனக்கு வைரத்துல மூக்குத்தி செஞ்சு போட்டாங்கள்ல... மூக்குத்திலயிருந்த வைரக் கல்லை வித்துதான் நர்சிங் சீட்டுக்கு பணம் கொடுத்துருக்கு."

ராஜி அப்போதுதான் அக்காவின் மூக்கை ஏறிட்டுப் பார்த்தாள்.

"வைரக்கல்லை எடுத்துட்டு சாதாக் கல்லை பதிச்சு மூக்குத்தி போட்டிருக்கேன். இப்ப காலைலதான். ஒனக்கு வித்தியாசம் தெரியலில்ல. அம்மா கொடுத்த நகையில அது ஒண்ணைத்தான் உருப்படியா போட்டிருந்தேன். மிச்சது பூரா நாத்தனாருங்க விசேஷத்துல கரைஞ்சுப் போச்சு. போகுது போ. இந்த நிலைமையில வைரத்தை மூக்குல போட்டு என்ன சாதிக்கப் போறேன். நம்ம புள்ளைக்கி உதவாம நகை என்னத்துக்கு... சரி... வரட்டுமா. பொழுதாயிருச்சு.... கதவைப் பூட்டிக்கோ."

அக்கா போவதையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் ராஜி. அக்கா வாங்கி வந்த கலர்பூந்தி பாக்கெட் ஹாலில் அனாதையாய் கிடந்தது. அதைப் பிரித்து பிரியமாய் இரண்டு வாய் அள்ளிச் சாப்பிட்ட ராஜிக்கு கரகரவென கண்களில் நீர் வழிந்து கொண்டிருந்தது.

சுற்றுலா, நாங்க அழைத்துப் போகிறோம்!



திருமதி கீதாராஜன்
(பத்ரி யாத்ரா சர்வீஸ்)

"நான் 'பத்ரியாத்ரா' சர்வீஸ் ஆரம்பித்ததே தெய்வ சங்கல்பத்தால் தான். என் கணவர் அரசு ஊழியர். டெல்லியில் இல்லத்தரசியாகக் குழந்தைகளுடன் அமைதியான வாழ்க்கை.

பதினைந்து வருடங்களுக்கு முன்னால் திருப்பதி பெருமாளை இந்தியாவின் முக்கிய இடங்களில் எழுந்தருளப் பண்ணி விசேஷ பூஜைகள் செய்தார்கள். அந்த வகையில் டெல்லிக்கு வந்தபோது பெருமாளை பத்ரிநாத்துக்கும் எடுத்துச் செல்ல வேண்டும் என்று விருப்பப்பட்டார்கள்.

அப்போது மிகவும் மோசமான சீதோஷ்ண நிலை. நிலச் சரிவெல்லாம் இருந்தது. நீதான் இதைத் திட்டமிட்டுச் செய்ய வேண்டும் என எனக்குக் கட்டளை இடப்பட்டது. தெய்வத்தின் ஆணையை நாங்கள் ஏற்றுக் கொண்டோம். எத்தனையோ இடர்களுக்கு நடுவில் பத்ரிநாத்திற்குப் பெருமாளைக் கொண்டு சென்று விசேஷ பூஜைகள் செய்து நீராட வைத்துக் கொண்டு வந்தோம். எங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்ச்சி அது.

அதற்கப்புறம் பலபேரும் எங்களை அணுகியதால் நான் பத்ரியாத்ரா சர்வீஸ் ஆரம்பிக்க வேண்டியதாயிற்று. ஒவ்வொரு வருடமும் இப்படிப்பட்ட புனித யாத்திரைகளுக்குப் பக்தர்களை அழைத்துச் சென்று வருகிறேன். இப்படி பெண்ணாக முன்னின்று நடத்தி வருவது இங்கு நான் ஒருத்திதான் என்று நினைக்கிறேன்.

குழந்தைகள் சிறு வயதிலிருந்தே இதற்குப் பழக்கப் பட்டு விட்டார்கள். கணவர் என்னுடைய திட்டங்களுக்கு மிகுந்த உறுதுணையாக இருப்பார். எனவே பிரச்னைகள் இல்லை.

• முக்திநாத்தில்...



ஆனால் ஒவ்வொரு சுற்றுலாவிற்கும் திட்டமிட்டு அமைத்து அனைவரையும் அழைத்துச் சென்று வருவது இருக்கிறதே, மிகப்பெரிய சவால்தான். அதிலும் இமய மலைப் பயணங்கள் எதுவும் நம்முடைய திட்டமிடுதலில் இல்லை. நாம் திட்டமிடுவோம். அதை நிறைவேற்றி வைக்க வேண்டியது ஆண்டவனின் பொறுப்புதான்.

எங்களுடைய டூரின் விசேஷ அம்சம் முக்திநாத் அழைத்துச் செல்வதுதான். இது மிகவும் கஷ்டமான யாத்திரை என்றுதான் சொல்ல வேண்டும். வைணவர்களின் 107-வது சேக்ஷத்திரம். அடுத்தது வைகுண்டம். அத்தனை புனிதமான இந்த இடத்தைத் தரிசிக்கப் பலரும் விரும்பி வருகிறார்கள். நாங்கள் இந்த டூரை ஆரம்பித்த காலத்தில் வழியெல்லாம் மிகவும் கடினமாக இருந்தது. இப்போது எவ்வளவோ பரவாயில்லை. மற்றும் பத்ரிநாத் கேதார்நாத் போன்ற இடங்களுக்கும் அழைத்துச் செல்கிறோம்'' என்கிறார் கீதாராஜன்.

இந்த இதழில் வெளிவந்துள்ள 'சுற்றுலா, நாங்க அழைத்துப் போகிறோம்' பேட்டிகள், தொகுப்பு: பா. சுஜாதா

நாத்தனார்

குழந்தை தூங்கிக் கொண்டிருப்பாளோ? என்று எண்ணியவாறே மெதுவாக காலிங்பெல்லை அழுத்தினேன். கதவைத் திறந்த அம்மாவின் முகத்தில் ஆச்சர்யமும், சந்தோஷமும் தெரிந்தது.

"வா... வா, உள்ளூர்லேயே கல்யாணம் பண்ணிக் கொடுத்தேன்னு பேருதான், வர்றதே இல்லை" என்றாள்.

"நேரமே இல்லைம்மா. தவிர மடிப்பாக்கமும் மாம்பலமும் வெளியூர் போலத்தானே இருக்கு" என்ற நான், "ஏய், குட்டிப் பொண்ணே, எங்கடா செல்லம். அத்தை வந்திருக்கேன் பாரு." எனக் குரல் கொடுத்தேன்.

"இவ்வளவு நேரம் ஆட்டம் போட்டு, படுத்தி விட்டு இப்பத்தான் தூங்கறது. எழுப்பிடாதே. சித்த பேசக் கூட முடியாது. எனக்கு முடியவே இல்லை" - சலிப்பாகச் சொன்னாள் அம்மா. "குடிக்க எதுவும் தரட்டுமா?" என்ற அம்மாவிடம்,

"இப்போ எதுவும் வேண்டாம். உன்னைப் பார்த்து நாளாச்சு. உன்னோட இருந்துட்டு போலாம்னுதான் வந்தேன்" என்றேன்.



அப்போதுதான் என் லெதர் பேக்கைப் பார்த்த அம்மா, "அதிசயமாத்தான் இருக்கு. ஒருநாள் கூட தங்க மாட்டே. ஆபீஸுக்கு லீவு போட்டுட்டு என்னோட தங்கணும்னு உனக்குத் தோணித்தே. மாப்பிள்ளை எப்ப வருவார்?" என்றாள்.

"போன் பண்றேன்னு சொல்லியிருக்கார். ஆமாம், மணி ஆறாயிடுத்தே. இன்னும் மன்னியைக் காணுமே!" என்றேன்.

"அவ வர ஏழு ஏழரை ஆகும். பஸ் கிடைக்கிலேம்பா, இல்லாட்டா ஸ்டாப் லீவு, வேலை அதிகம்பா. தினம் லேட்தான்" - விட்டேத்தியாய் வந்தது பதில்.

அம்மாவிடம் பேசிக் கொண்டே இருந்ததில் நேரம் ஓடியது. குழந்தையும் எழுந்து விளையாடிக் கொண்டிருந்தது. அண்ணா, மன்னி ஒவ்வொருவராக வந்தனர். தங்கப் போவதாகச் சொன்னதும் இருவருக்கும் மிகவும் ஆச்சர்யம்.

மன்னி, மிக்ஸட் ரைஸும், பச்சடியும் செய்தாள். எல்லாரும் சாப்பிட்டு விட்டு டி.வி. பார்த்தோம். மன்னி சமையலறை சுத்தம் செய்த பின்னர், மறுநாள் காலை நேரத்துக்கு வேண்டியவற்றை எடுத்து வைத்துக் கொண்டே,

"என்ன ரமா, மாமியார் சௌகர்யமா? தனியாக வந்திருக்கியே? அவரையும் அழைத்து வந்திருக்கலாமே?'' என்று பத்து நிமிடம் பேசிக் கொண்டிருந்தாள். பின் அண்ணாவிடம், ''ப்ரிஜுக்கு பக்கத்திலே கறிகாய் எடுத்து வச்சிருக்கேன். கொஞ்சம் நறுக்கி வைச்சிடுங்க," எனச் சொல்லி விட்டு, ''படுக்கப் போகட்டுமா ரமா? டயர்டா இருக்கு. நாளைக்குச் சீக்கிரமா எழுந்துக்கணும். 'குட் நைட்' " என்றவாறே குழந்தையை தூக்கிச் சென்றாள்.

அண்ணா எப்போதும் போல் ஜோக் அடித்தவாறு பேசிக் கொண்டிருந்து விட்டு பத்தரை மணிக்குப் படுக்கப் போய் விட்டான். நானும், அம்மாவும் லைட்டை அணைத்து விட்டு படுக்கச் சென்றோம்.

"ரமா, தூங்கிட்டியா?" என்றாள் அம்மா.

''இல்லைம்மா, என்ன வேணும்?'' என்றேன்.

"வராதவ வந்திருக்க, என்ன வேணும், ஏது வேணும்னு ஒரு வார்த்தை கேட்டாளா, பார்த்தியா? காலம்பற எழுந்ததும் இப்படித் தான். குளிச்சேன்னு பேர் பண்ணிட்டு, ஒரு கவுனை மாட்டிண்டு வெந்ததும், வேகாததுமா ஒரு சமையலை பண்ணி விட்டு ஆபீஸுக்குக் கிளம்பிடுவா. இவ குழந்தை வேலையெல்லாம் நான் தான் பண்ண வேண்டியிருக்கு. இந்த வயசில குழந்தையைக் குளிப்பாட்டி, சாப்பாடு ஊட்டி, தூங்கப் பண்றதுன்னா முடியறதா சொல்லு. வயசான காலத்துல, கோவில் குளம்னு போக எனக்குக் கொடுத்து வைக்கலை" - ஆற்றாமையுடன் பேசினாள் அம்மா.



"ஏம்மா, போன வாரம் பாமா ஊருக்குப் போனாளே, ஸ்டேஷனுக்கு வரேன்னு சொல்லியிருந்தேன். ஆடிட்டிங் டைமா இருந்ததாலே போக முடியலே. ட்ரெய்ன் ரைட் டைம்தானே'' பேச்சை மாற்றினேன்.

ஆனால் அம்மா விடுவதாக இல்லை.

"பாமா வந்து மூன்று வாரம் தான் இருந்தாள். ஊருலேருந்து வந்திருக்காளே, அவளை இங்க, அங்க அழைச்கண்டு போவோம்னு இல்ல. அவா ரெண்டு பேரும் மட்டும் எங்கியாவது போறதும், வருவதுமா இருந்தா. ஏதோ ஞாயிற்றுக் கிழமைலதான் வெளியில போனோம். அதுலயும் பாரு, கிஷ்கிந்தாவுக்குக் கிளம்பும் போது, பாமா, ''மன்னி உங்களோட மஞ்சள் கலர் புடவை நல்லாருக்கு, நான் கட்டிக்கணும்"னு சொல்லிண்டே இருந்தா. ஆனா, இவ வாயைத் திறந்து இந்தா கட்டிக்கோன்னு சொல்லவே மாட்டேன்கிறாளே, ஒரு ஒட்டுதல் வேண்டாம் குடும்பத்தில? பாமாக்கு ஒரே கோபம். என்னைப் பார்த்து ரொம்ப வேதனையோடு தான் ஊருக்குப் போனா" - என்று குறைந்த

பத்மாவதி முத்துக்குமார்

குரலில் ஆரம்பித்து உணர்ச்சி வேகத்தால் சின்னதும், பெரிசுமான குரலில் பேசினாள்.

"சரி விடும்மா. மணி பதினொன்றரை ஆகிறது. நாளைக்குப் பேசலாம்," என்றதும் பெருமூச்சோடு புரண்டு படுத்தாள்.

காலையில் ஐந்தரைக்கெல்லாம் சமையற் கட்டில் சப்தம் கேட்டது. உள்ளே சென்றதும், "பல் தேய்ச்சிட்டியா ரமா, காப்பி கலக்க லாமா?" என்ற மன்னியிடம், "நான் ஏதாவது ஹெல்ப் செய்யறேனே" என்றபோது, "அதெல் லாம் வேண்டாம். இங்கேயாவது ரெஸ்ட் எடுத்துக்கோ" என்று சொல்லி விட்டாள். பின்னர் அண்ணா எழுந்து கொள்ள, வேலைக்காரி வர, கொஞ்சம் கொஞ்சமாக பரபரப்பான வீடு ஒன்பது மணிக்கு நிசப்த மாகி விட்டது.

குழந்தைக்கு வேற்று முகமே இல்லை. என் னோடு ஒட்டிக் கொண்டு விட்டது.

பத்து மணிக்கு என் கணவரிடமிருந்து போன் வந்தது. பேசி முடித்ததும், "மாப் பிள்ளையா, எப்போ வர்றாராம்?" என்றாள் அம்மா.

"நாள் தள்ளிப் போயிடுத்து. யூரின் டெஸ்டுக்குக் கொடுத்திருந்தோம். பாசிடிவ் வாம். அதான் போன் செஞ்சார். ராத்திரி வருவார்" என்றேன்.

அம்மாவுக்கு ஒரே சந்தோஷம். "என்னடி இது, உண்டாயிருக்கிற விஷயத்தை இவ்வளவு சாதாரணமா சொல்றே? எனக்கு உடம்பில தெம்பு இருக்கறபோதே பிரசவத்தையும் முடிச்சுடுவேன்" என்றவள், "இப்போ ஒரு மாசம்னாலும் புரட்டாசிக்கு மூணு ஆகி, பங்குனிகிட்ட பிரசவம் இருக்கும். கொஞ்சம் வெயில். சித்திரைக்குள்ள ஆயிட்டா நல்லது. நம்ப அனு டாக்டர்கிட்டேயே வச்சுக்கலாம். சாயங்காலம் கோவில்ல ஒரு அர்ச்சனை பண்ணணும்" - படபடப்பும் சந்தோஷமாக வும் பேசிக் கொண்டே போனாள் அம்மா.

"கொஞ்சம் இரும்மா. என் மாமியார் கிட்டே போன் பேசிட்டு வர்றேன்" என்று நான் சொன்னதும், "என் வளர்ப்பே தனிதான். உடனே மாமியார்கிட்டே சொல்ல ணும்னு மனசுல படறதே" என்றபடி உள்ளே சென்றாள்.

போன் பேசி முடித்ததும், கையில் எலு மிச்சை ஜூஸோடு வந்த அம்மா, "வாய்க்கு புளிப்பா நல்லாயிருக்கும், சாப்பிடு" என்றாள்.

சோபாவில் உட்கார்ந்ததும் கையில் இருந்த கிளாஸை பிடித்துக் கொண்டு குழந்தை குடிக்கப் பார்த்தது. அம்மா உடனே, "ஏய், ஏய்... எல்லாத்தையும் கொட்டிடாதே, தள்ளிக்கோ" என்று சப்தம் போட குழந்தை சடாரென உட்கார்ந்து அழ ஆரம்பித்து விட் டது. பொம்மையைக் கொடுத்து சமாதானம்

செய்த நான், "என்னம்மா இது, சிரிச்சு விளையாடற குழந்தையை அழ விடறே?" என்றேன்.

"என்ன செய்யச் சொல்றே. இதோட ஓடியாடற வயசும் இல்லை. தெம்பும் இல்லை" என்றாள்.

"இப்பத்தான், தெம்பாயிருக்கிறப்போவே பிரசவத்தை முடிச்சிடுவேன்னு சொன்னே. இப்போ முடியலங்கறே" என்ற நான், "முன்னக்கிப்ப உங்கிட்ட மாறுதல் தெரியுதும்மா" என்று ஆரம்பித்தேன்.

"என்ன மாறுதல் கண்டுட்டே?"

"இல்லம்மா, முன்னெல்லாம் மன்னி பத்தி ஒண்ணுமே சொல்ல மாட்டே. நேத்து ராத்திரி ஏதோ சொல்லிண்டேயிருந்த, அதைச் சொல்றேன்" என்றாள்.

"நான் சொன்னதுல என்ன தப்பு. நீயும் பாத்துண்டுதானே இருக்கே?"

"என்னம்மா, படுக்கையிலே இருந்து எழுந்து தலையிலே துண்டை கட்டிண்டு, கோலம் போட்டு துளசி மாடத்தை சுத்தறாப் பல டி.வி.யிலே காமிக்கிறானே, அப்படி இருந்தாத்தான் நல்ல மாட்டுப் பொண்ணுன்னு நினைக்கிறயா? இரண்டு பேரும் வேலைக்குப் போற இந்நாள்ல இதெல்லாம் சாத்தியப்படாது. மன்னிக்கும் நேரம் சரியாத்தானே இருக்கு?" – நிதானமாகச் சொன்னேன்.

"ரெண்டு பேருமா சேர்ந்து வெளில போறதுக்கு நேரமிருக்கு. நான் குழந்தையைப் பாத்துக்க மட்டும்தானா சொல்லு?"

"வீட்டுச் சாமான் வாங்கவும், கறிகாய் வாங்கவும் போறா. இருக்கிற பைக்ல எத்தனை பேர் போக முடியும் சொல்லு. ஞாயிற்றுக் கிழமை ஆனா, ரிக்‌ஷாவுல மூணு பேருமாத் தானே கோவிலுக்குப் போறீங்க?" என்றதும் அம்மா பேசாதிருந்தாள்.

"என்னம்மா பேச மாட்டேங்கிறே?"

"என்னவோ போ. பாமா என்னைப் பாத்துட்டு, என்னம்மா ஆயாவாட்டம் வேலை செஞ்சுண்டிருக்கே, என் மாமியாரைப் பார்க்கும் போது உன்னை மாமியாரா அடைய மன்னி கொடுத்து வச்சிருக்கணும்னு சொல்லிட்டுப் போறா. நீ இப்படிச் சொல்றே? நான் என்ன பொல்லாத மாமியாராவா இருக்கேன்?"

"பாமாக்கு மத்தவா பொருள் மேல ஆசை. மன்னி தன் பொருளையும் தர மாட்டா. மத்தவா பொருளுக்கும் ஆசைப்பட மாட்டா. பாமா ஊருக்குக் கிளம்பறச்சே ட்ரெயினுக்கு தேவைப்படும், அதைக் கொடு, இதைக் கொடும்பா, வர்றச்சே ட்ரெயின்லதானே வந்தே, எப்படி வந்தேன்னு யாரும் கேட்கக் கூடாது, கோபம் வரும். அவனோட மாமியார் தப்பு செய்யறான்னா நீயும் செய்யணுமா சொல்லு?" என்றேன்.

"நான் அது மாதிரி சொல்லலை. ஒவ்வொருத்தர் எப்படியெல்லாமோ படுத்தறா, அப்படியெல்லாம் நான் இல்லை. ஆனாலும் சிரமப்படறேன்னு சொல்ல வந்தேன்."

"உனக்கு என்ன சிரமம் சொல்லு. உனக்குத் தேவையானதிலேருந்து நேரத்துக்கு டாக்டர்கிட்ட அழைச்சிண்டு போற வரைக்கும் பார்த்துப் பார்த்துச் செய்யறா. நீ பார்த்துக்கறது உன் பேரக் குழந்தையைம்மா. உன் மகனோட வாரிசு. மன்னியோட குழந்தைன்னு பிரிச்சுப் பார்க்கிறதுனாலதான், ஆயாங்கிற நினைப்பும், சிரமப்படறோமோன்னும் உனக்குத் தோணறது" – வேகமாக பேசி விட்டேனோ என்று சற்று நிறுத்தினேன்.

அம்மா யோசிக்கட்டும் என்று எண்ணிய படி எழுந்தேன். குழந்தை தூங்கி விட்டது. கொண்டு போய் தூளியில் போட்டு விட்டு, என் பேக்கிலிருந்த புடவை ஒன்றை எடுத்து வந்தேன். "நான் டிபார்ட்மெண்ட் எக்ஸாம் பாஸ் பண்ணினதுக்காக என் மாமியார் வாங்கித் தந்தாம்மா," என்றேன்.

"நல்லாயிருக்கு" என்று மட்டும் பதில் வந்தது.

"கல்யாணத்துக்கு முன்னாடியே முடிக்காம இருக்கோமேன்னு ரொம்பக் கவலைப் பட்டேன். ஆனா என் மாமியார், கவலைப் படாதேன்னு சொன்னது மட்டுமில்லை. என் படிப்புக்கு எவ்வளவு ஒத்தாசை செய்ய முடியுமோ அவ்வளவும் செஞ்சாங்க. என் ஆபீஸ்ல எல்லாரும், "கல்யாணம் முடிஞ்சு சீக்கிரமாவே எக்ஸாம் முடிச்சிட்டியேன்னு" ஆச்சர்யப் படறா. இப்பவும் என் மாமியார் என்ன



கடலை உருண்டை
பிடிக்கும் பொழுது
துளி நல்லெண்ணெயைத் தொட்டுக்
கொண்டு உருட்டினேன். உருண்டை
கையில் ஒட்டாமல் பிடிபட்டது.
உருண்டையில் நல்லெண்ணெய் வாசனை
வரவில்லை. உருண்டையில் கண்ணாடி
போன்று ஒரு பளபளப்பு இருந்தது.
அது நல்லெண்ணெயின்
மகிமைதான்.
– சித்ரா ஸ்ரீதர்.

சொல்றாங்க தெரியுமா, வேலைக்குப் போறோமேன்னு கவலைப்படாதே. பேரக் குழந்தையைப் பெத்து எங்கிட்ட கொடுத்திடு. நான் பாத்துக்கிறேன்கிறாங்க. காலம்பறயும், சாயங்காலமும் என்னால முடிஞ்சதை செஞ்சுட்டுப் போறேன். மத்ததெல்லாம் மாமியார் தான் பாத்துக்கறாங்க. சாயங்காலம் அவர் கோவில்லேர்ந்து வந்ததும் நாங்க ரெண்டு பேரும் வெளில போறோம். மாமியாரால எனக்குப் பிரச்னையே கிடையாதும்மா" என்றேன்.

"தெரியுமே. உன் கல்யாணத்திலேயே எவ்வளவு இங்கிதமா நடந்துண்டா. சமையல் சுமாராயிடுத்துன்னு உன் அண்ணா சொன்ன போது கூட, நாமளா பெரிசு பண்ணினாத் தான் எதுவுமே பெரிசு. அதனால இதைப் பத்தி பேசிண்டிருக்காமே அடுத்த காரியத்தை பாருங்கன்னு எவ்வளவு பெருந்தன்மையா சொன்னா" என்றாள் அம்மா.

கூர்ந்து அம்மாவைப் பார்த்த நான், "அதாம்மா நானும் சொல்றேன். என் அம்மாவையும் எல்லாரும் உசத்தியா சொல்லணும்னு எனக்கு ஆசையாயிருக்காதா சொல்லு" என்றேன்.

நிமிர்ந்து பார்த்த அம்மாவிடம், "மன்னி ஆபீஸிலிருந்து வர நேரமாயிட்டா டென்ஷனோட கேட் வாசல்லயே நிப்பியே, அது மட்டுமா, மன்னிக்கு அபார்ஷன் ஆனதும், நிறை பிரசவத்தை விட குறையா நேர்ந்தாதான் கஷ்டம்னு சொல்லி எப்படிப் பாத்துண்டே. எனக்கு பிரசவம் கூட என் மாமியாரே பார்த்துப்பான்னு மன்னியே எவ்வளவு தடவை பெருமையா சொல்லியிருக்கா" என்றதும் அவள் முகம் பிரகாசமானது.

"பாமாக்கு என்னம்மா தெரியும்? அவ மாமியார் படுத்தறதுனால உன்னையும் அப்படியே பார்க்கிறா. ஆனா, எனக்குத் தெரியும், என்னோட அம்மா, என் மாமியார் போல உசத்த மாமியார்தான்னு" நான் சொல்லச் சொல்ல, "ரொம்பத்தான் ஐஸ் வைக்காதே" என்று நிறைவாகச் சிரித்த அம்மா முகம் தெளிவாக இருந்தது.

அன்று இரவு வந்த என் கணவரோடு, "கிளம்புகிறேன்" என்றதும் அண்ணா, மன்னி இருவரும் "என்ன உடனே கிளம்பி விட்டாய்?" என்றனர். அவனுக்கு, "மாமியார் நினைப்பு வந்து விட்டது. அதான் கிளம்பி விட்டாள்" என்றாள் அம்மா.

நான்கு நாள் கழித்து, ஆபீஸில் லஞ்ச் நேரத்தில் யாரோ வந்திருப்பதாகக் கூற, ரிசப்ஷனில் மன்னி உட்கார்ந்திருந்தாள். என்னைப் பார்த்ததும், "ரொம்ப தேங்க்ஸ் ரமா" என்றாள்.

"என்ன மன்னி இது. பெரிய வார்த்தையெல்லாம் சொல்லிண்டு இருக்கீங்க," என்றேன்.

"இல்லை ரமா: என் மாமியார் பழையபடி என் அம்மாவானது உன்னாலதான்" என்றாள்.

"என்னாலன்னு சொல்லாதீங்க. சின்ன விஷயத்தை பெரிதுபடுத்தி அண்ணாட்டயோ, உங்க பிறந்த வீட்டுக்கோ கொண்டு போகாமே, என்னிடம் சொல்லி ஹேண்டில் பண்ணச் சொன்னது உங்க புத்திசாலித்தனம்தான்" என்றேன்.


மன்னி, "ஏதோ பாமா சொன்னதாலத் தான் அம்மாட்ட மாற்றமே ஒழிய, வேறொண்ணுமில்லே. நல்லதோ, கெட்டதோ பொண்கள் சொன்னா அம்மாக்கெல்லாம் அதுதான் கரெக்டாப் படறது. பல பேர் பிரச்னை எங்க ஆரம்பிக்கிறது எப்படி தீர்ப்பதுன்னு தெரியாமே பெரிசா ஆக்கிடறாங்க. ஆனா, நாமெல்லாம் தினமும் ஆபீஸ்லே எவ்வளவோ பிரச்னையைத் தீர்க்க புதுசு புதுசா ஏதேனும் செய்ய வேண்டியிருக்கு. வேஷஸ் பிரச்னை, வேஷஸ் தீர்த்துக்கலாம்னு தோணித்து. உன் கோ-ஆபரேஷன் இருக்கும்கிறதுனாலே தைரியமா உன்கிட்ட சொல்லி முயற்சி பண்ணினேன். ஆமாம், வந்ததுதான் வந்தே, நியூ இயருக்கு இருந்துட்டு போயிருக்கக் கூடாது?" என்றாள்.

மன்னியின் தோளில் அன்போடு கை வைத்த நான், "பிரசவத்துக்கு வந்து இருக்கத் தானே போறேன் மன்னி" என்றேன்.

"உன்னைப் போல நாத்தனார்கள் கிடைத்தால் யாருக்குமே, எப்போது வருவார்கள் என்றுதான் ஏக்கமாக இருக்கும்" என்ற மன்னி, மனது நிறைவோடு, "ஹாப்பி நியூ இயர் ரமா" என்றாள்.


பழைய பிளாஸ்டிக் மிக்ஸி கவர், கிரைண்டர் கவர்களை வீட்டில் உள்ள ஸ்டூல்களிலும், டெஸ்க்குகளிலும் சமமாக இருக்கச் செய்து நான்கு முனைகளிலும் வெளிப்புறமாக மடித்து பக்கத்திற்கு 3 சிறு சிறு ஆணிகள் கொண்டு அடிப்பாகத்தில் தட்டினேன். அமர்க்களமாக இருந்தது.

— வி. ராஜம் ராமன்



இந்த மாதம் எப்படி?

பிப்ரவரி '99




மேஷ ராசி :

அசுவினி, பரணி, கிருத்திகை 1-ஆம் பாதம்.

உங்கள் இராசிநாதன் அங்காரக பகவான் ஸப்தஸ்தானத்தில் நின்று இராசியை பார்வை இடுகின்றார். இந்த செவ்வாய் நெருப்பு சம்பந்த தொழில் செய்பவர்களுக்கும், சுங்கத் துறையினர்களுக்கும் அனுகூலமான தகவல்கள் கொண்டு வருவார். உஷ்ண சம்பந்தமான வியாதியையும் குறைப்பார். இந்த மாதம் முருகப் பெருமானை செவ்வாய் தோறும் வாசனை மலர் கொண்டு அர்ச்சிப்பது மேன்மை தரும். கடன் ரோகம் வேகம் குறைவதைக் காணலாம்.

11-ம் இடமான லாபஸ்தானத்தில் உள்ள சுக்கிர பகவான் பதவி உயர்வினை தருவதோடு மனைவி வழி உறவினர்களால் நல்ல செய்தியைத் தருவார். சனீஸ்வர பகவான் வக்கிரம் பெற்றாலும் குரு ஆட்சி பெற்றதும், மாதத்தின் பிற்பகுதியில் சுக்கிர பகவான் உச்சம் விரையத்தில் பெற்று சஞ்சாரம் செய்வதும் சுப விரயங்களை உண்டு செய்யும். இதனால் பாபகிரகங்களால் ஏற்படும் கெடுபலன்கள் குறையக்கூடும்.

உங்கள் வாக்கை காப்பாற்றும் முயற்சியில் சிறிது தேக்கம் ஏற்பட்டாலும் வழக்கமான உங்கள் முயற்சி நல்ல பெயரை தேடித் தரும். திருமணம் போன்ற சுப விஷயங்களில் தற்போது மனமகிழ்ச்சியை உண்டு செய்யும். பெண்களுக்கு சுக்கிர பகவான் உச்சமடைவதால் குடும்பத்தில் பலர் மெச்சக்கூடிய வாய்ப்பு தேடி வரும்.




ரிஷப ராசி:

கிருத்திகை 2, 3, 4-ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2-ஆம் பாதங்கள்.

யோககாரகனாகிய சனி தற்போது வக்கிர கதி பெற்றுத் திகழ்வதால் இம்மாதம் எடுத்த காரியங்கள் தள்ளிப் போகக்கூடும். நடிப்பு கலைத் துறையினர்களுக்கும், கலைஞர்களுக்கும், வரவேண்டிய வாய்ப்புக்கள் சற்று நாட்கள் கடந்து கைகூடும். பொருளாதாரம் என்பதும் சரளமாக புழங்க இம்மாதம் 15-ம் தேதி வரை பொறுத்திருக்க வேண்டும். நிதி சம்பந்த விஷயங்களில் வார்த்தையைத் தாராளமாக விட வேண்டாம். குரு 5-ஆம் இடத்தை பார்ப்பது வேகத்தைக் குறைக்கும்.

ஆனால் இம்மாத பிற்பகுதியில் இராசிநாதன் சுக்கிர பகவான் ஆட்சி பெறுவது மாத ஆரம்பத்தில் இருந்த பொருளாதார நெருக்கடி குறைய வழி வகுக்கும். பெண்களுக்கு எதிர்பாராத பரிசுகள் மற்றும் பதவி உயர்வுகள் தேடி வர வழிவகுக்கும். நீண்ட காலமாக எதிர்பார்த்த நற்செய்தியும் உங்களை வந்தடையும்.

இம்மாத ஆரம்ப சூழ்நிலை மாறவும் மனநிம்மதிக்கும் ஜன்ம நட்சத்திரம் அன்று ஆஞ்சநேயருக்கு வடைமாலை அணிவித்து வழிபடுவதும் சனிக்கிழமைதோறும் நல்லெண்ணெய் விளக்கு போட்டு நவக்கிரக வழிபாடு செய்வதும் நன்மை தரும்.



மிதுன ராசி:

மிருகசீரிஷம் 3, 4,-ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3-ஆம் பாதங் கள்.


உங்கள் இராசிக்கு பஞ்சமாதி

> எல்லாம் இழந்து விட்டோம் என்று தோன்றும் போது ஒன்றை மறவாதீர்கள்: அது எதிர்காலம் என்று ஒன்று இன்னமும் இருப்பதுதான்.
> – கிளப் டைன்
> தகவல் : எஸ். விஜயா சீனிவாசன்.

பதியாகிய சுக்கிர பகவான் பாக்கிய ஸ்தானத்திலும் அடுத்து ஜீவனஸ்தானத்திலும் சஞ்சரிக்கப் போகின்றார்.

கலைத்துறையினர்க்கும், அழகு சாதன பொருள்கள் விற்பவர்களுக்கும் இது அதிக நன்மை செய்யும். பட்டுத் துணி விற்பவர்கள் தடைகள் நீங்கி அதிக லாபம் வரக் காண்பார்கள். குரு பகவான் கர்மஸ்தானத்தில் இருந்து வேலை பளுவை கூட்டினாலும் மாதத்தின் பிற்பகுதியில் பணிபுரிபவர்களுடன், அல்லது உறவினர்களுடன் தெய்வீக பயணம் மேற்கொள்வீர்கள். குரு பகவான் நான்காம் இடத்தை பார்வை யிடுவதால் வீடு கட்டுவதில் தடை ஏற்பட்ட வர்களுக்கு தடை நீங்கக் காணலாம்.

மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் இது சாதகமான நேரம். இந்த நேரத்தை பயன் படுத்தி உங்கள் லட்சியத்தை அடைய முயற்சிக்கலாம். பத்திரிகைத் துறையில் பணிபுரியும் பெண்கள் புதிய சாதனை படைக்க வழி உண்டாகும். பெரிய நிறுவன தலைமை பதவியில் இருப்பவர்களும், கணக்கு சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளும் புதிய திட்டங்கள் தீட்டினால் லாபம் அடையலாம். இம்மாதம் செவ்வாய்க் கிழமை தோறும் மாலையில் நெய் விளக்கு ஏற்றி கந்தசஷ்டி கவசம் படித்து வரவும். நேரம் கிடைத்தால் மலை மீது உள்ள முருகப் பெருமானை தரிசிக்கவும். சகலமும் நன்மையாகும்.



கடக ராசி:


புனர்பூசம் 4–ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.

பாக்கிய ஸ்தானாதிபதி குரு பகவான் தனது சொந்த இல்லத்தில் இருப்பது சாதகமான விஷயம் தான். பிப்ரவரி 15-க்கு மேல் தடைப்பட்ட விஷயங்கள் கூடி வரும். சுக்கிர பகவான் உங்கள் குடும்பத்தில் பெண்களுக்குள் தேவையற்ற மனக்கவலையை உண்டு செய் வார். இளைய சகோதர, சகோதரிகளால் மனக்குழப்பம் உண்டாகக் கூடும். குரு பகவான் உங்களுக்கு தெளிவு உண்டாக்கு வார். மருத்துவச் செலவுகள் தற்போது கட்டுக்குள் வரும்.

பதவியின் அதிகாரத்தை சரியாகப் பயன் படுத்தவும். உங்கள் பதவிகளை அல்லது பெயர்களை சிலர் துஷ்பிரயோகம் செய்யக் கூடும். தற்போது யாருக்கும் ஜாமீன் நிற்க வேண்டாம். சுபகார்யங்களுக்கு முன்நிற்கலாம். உங்களது திறமை வெளிப்பட வாய்ப்பு உண்டாகும். பொதுவாக உங்களை பதட்டப் பட வைக்கக்கூடிய நிகழ்ச்சிகள் நடைபெறலாம். ஆனால் அமைதி காப்பது நலம். விருந்து மற்றும் ஆலயங்களுக்குச் செல்லும் போது நகைகளை அதிகம் அணியாமல் தவிர்ப்பது நல்லது. வாகனங்களை மாற்றவோ, புதுப்பிக்கவோ வேண்டாம்.

குரு அருள் பூரணமாக சித்திக்க வியாழக் கிழமை அன்று தட்சணாமூர்த்தி ஸ்வாமியை வில்வத்தால அர்ச்சித்து உப்பு போடாத மெதுவடை நெய்வேத்தியம் செய்யவும். தட்சணாமூர்த்தி ஸ்வாமி அருளால் அனைத்தும் ஜயமாகும்.

சிம்ம ராசி:



மகம், பூரம், உத்திரம் 1–ஆம் பாதம்.

மாத ஆரம்பத்தில் உங்கள் இராசிநாதன் சூரிய பகவான் 6-ஆம் இடத்திலும் பிற்பகுதியில் 7-ஆம் இடமாகிய களத்திர ஸ்தானத்திலும் சஞ்சரிக்கப் போகின்றார். பணம் கொடுக்கல் வாங்கல் தொழில் புரிவோர்கள் சற்று நிதானமாகவும், குடும்பத்தினர் அல்லது நண்பர்களை கலந்தும் முடிவு எடுக்கவும். 7–ல் பிரவேசிக்கும் சூரிய பகவான் மனைவிக்கு உடல்நலக் குறைவு ஏற்படுத்துவார்.

அஷ்ட ஸ்தானத்தில் ஆட்சி பெறும் குரு பகவான் கெடுபலன்களை குறைத்தும் யோக, தசை நடைபெறுபவர்களுக்கு தன் கெடு பலன்களை மாற்றியும் தருவார். நீங்கள் தற்போது எந்த முடிவையும் இரண்டுவிதமாக சிந்திக்கவும் வேண்டாம். தெளிவான முடிவாக எடுங்கள். இயல்பான உங்கள் நிலையை சுக்கிர பகவான் சஞ்சாரம் மாற்றத் தான் செய்யும். எனினும் வழக்கமான புன்

னகையை குறைக்காதீர்கள். திருமண விஷயங்களில் முடிவுகள் தள்ளிப் போவது போல் தோன்றும். தம்பதிகளுக்கு இடையில் கருத்து வேறுபாடு உண்டாகலாம்.

இம்மாதம் சூரிய பகவான் காயத்ரியை ஜபம் செய்வதும் ஞாயிறு தோறும் சூரிய பகவானுக்குக் காலையில் கோதுமையில் செய்த பண்டத்தை நைவேத்தியம் செய்வதும் நலம்.



கன்னி ராசி:

உத்திரம் 2,3,4-ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1,2,-ஆம் பாதங்கள்.


புதன் ஆறாம் இடத்தில் சஞ்சாரம் செய்வது எதிர்பாராத சிறு தொல்லை மற்றும் உடல் ஆரோக்கியக் குறைவை உண்டு செய்யும். இராசிநாதன் புதன் ஜீவனஸ்தானாதிபதியாகவும் திகழ்வதால் இடமாற்றம் உண்டாவதைத் தவிர்க்க முடியாது. இராசியை குரு பார்வை இடுவது வேகத்தைக் குறைக்கும் என்றாலும் சங்கடம் உண்டாவதைத் தவிர்க்க முயலுங்கள். புதன் கிழமைகளில் பிரயாணம் செய்வதும், புதிய முயற்சியில் இறங்குவதையும் தள்ளிப் போடலாம்.

வங்கியில் பழைய கடன் பாக்கி இருந்தால் அது தற்போது குடும்பத்தில் அமைதிக்குக் குறைவு உண்டுசெய்யும். எதையும் ஆராய்ந்து செய்யும் உங்கள் திறமை இப்போது கை கொடுத்து அதைச் சரிசெய்யும். லாபஸ்தானத்தில் உள்ள இராகுபகவான் நண்பர்கள் வழியில் பண வரவை உண்டு செய்வார். ஆனாலும் கடன் வாங்குவதை கூடுமானவரை தவிர்க்கவும்.

பெண்களுக்கு ஆடம்பரப் பொருள்கள் தவணை முறையில் வந்து புதிய செலவினங்களை உண்டுசெய்யும். வேலைக்குச் செல்லும் பெண்கள் பண விஷயத்தில் சற்று சிக்கனமாக இருக்க வேண்டிய நேரம்.

இம்மாதம் முழுவதும் காலை நேரத்தில் அல்லது சூரியன் மறைந்த பின் லட்சுமி தேவியின் திவ்ய மங்கள ஸ்லோகங்களை சொல்லி வரவும்.

துலா ராசி:



சித்திரை 3,4,-ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் - 1, 2, 3,-ஆம் பாதங்கள்.

மாதம் முழுவதும் உங்களுக்குப் பண வரவு சரளமாக இருக்கும். ஆறாம் இடத்தில் உள்ள குரு பகவான் எதிர்பார்த்த இடத்தில் பண வரவை உண்டுசெய்வார். ஆயினும் கடன் என்று வரும் போது நன்கு சிந்திக்க வேண்டும். குருவுடன் சுக்கிர பகவான் மாத பிற்பகுதியில் சேர்ந்து சஞ்சரிப்பது தேவையற்ற கடனை உண்டுசெய்யும். அரசுத் துறையினருக்கு அரசாங்க சலுகை தேடி வரும். அது பழைய பாக்கியை அரசாங்கம் தருவதாகவோ, அல்லது அறிவித்த பதவி உயர்வை தருவதாகவோ இருக்கலாம்.

கலைத்துறையினர்க்கும், கலைஞர்களுக்கும் சாதகமான சூழ்நிலை. எதிர்பாராத பெரிய இடத்து அழைப்புகள் தேடி வரும். பத்தாம் இடத்தில் உள்ள இராகு பகவான் எதிர்பாராத அதிர்ஷ்டத்தை பெண்களுக்கு உண்டுசெய்வார். பண வரவு கூடுதலானாலும் செலவைக் குறைப்பது நன்மை செய்யும். வயிறு சம்பந்தப்பட்ட தொல்லையை அலட்சியம் செய்ய வேண்டாம். சகோதரர்கள் உங்கள் உதவியை எதிர்பார்ப்பார்கள்.


இம் மாதம் முழுவதும் வினாயகப் பெருமானை தியானித்து அருகம்புல் வெற்றிலை பாக்குப் பழத்துடன் அவரை பூஜிப்பது சகல சங்கடங்களையும் விலக்கும். புதிய காரியங்

சென்னையிலிருந்து ரயிலில் பெங்களூர் செல்லும் பொழுது ஜோலார்பேட்டை என்ற ரயில்வே ஸ்டேஷன் வரும். இது தமிழகத்தைச் சேர்ந்தது.

அடுத்து குப்பம் என்ற ரயில்வே ஸ்டேஷன். இது ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தது.


அடுத்தது பங்காரு பேட்டை என்ற ரயில்வே ஸ்டேஷன். இது கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த இடம்!

- கதீஜாஹனீஃபா




கண்ணாடி வைத்து தைத்த புடைவை, ஜாக்கெட் மற்றும் குழந்தைகள் உடைகள் பழசாகி விட்டால் தூரப் போடும் பொழுது, கண்ணாடிகளை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். ஒரு வட்டமான (அ) சதுரமான அட்டையில் கறுப்பு கலர் அல்லது விருப்பமான கலர் துணி அல்லது வெல்வெட் பேப்பரை வெட்டி ஒட்டவும். அதில் அகல் விளக்கு, குத்து விளக்கு போன்ற டிஸைன் வரையவும். பறவைகள், பூக்கள் என நம் விருப்பமான டிஸைனை வரைந்து, அதில் பெவிகால் தடவி ஒரு கண்ணாடித் துண்டும், ஒரு தங்க கலர் மணியுமாக மாற்றி மாற்றி நெருக்கமாக ஒட்டவும். இதை உங்கள் வீட்டு வரவேற்பு அறையில் மாட்டுங்கள். பார்க்க அழகாக இருக்கும்.

– ஆர். பாலசரஸ்வதி.



களில் பிரவேசிக்கும் முன் விநாயகப் பெருமானுக்குத் தேங்காய் உடைத்து விட்டு தொடங்கவும்.



விருச்சிக ராசி:


விசாகம் 4–ஆம் பாதம், அனுஷம், கேட்டை.

இராசிநாதன் செவ்வாய் 12-ஆம் இல்லத்தில் இருந்தாலும் இராகு பகவானும் பூர்வ புண்ணிய ஸ்தானமாகிய ஐந்தில் குரு பகவானும் சாதகமான நிலையில் சஞ்சாரம் செய்கின்றாள். பாக்கியஸ்தானத்தில் உள்ள இராகு பகவான் அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு முன்னேற்றமும், உடல்நலக் குறைவு உள்ளவர்களுக்கு நவீன சிகிச்சையால் ஆரோக்கிய லாபமும் உண்டு செய்வார். மனைவி உறவினர்களால் சாதகமான தகவல் வந்து சேரும். கடந்த கால பிரச்னைகளுக்குத் தீர்வு மனைவி வழி சகோதரர்களால் உண்டாகும். நீண்ட காலமாக பேசி தடைப்பட்ட திருமணம் கூடி வரும்.

4-ல் உள்ள கேது விநாயகப் பெருமான் பூஜையில் நாட்டம் உண்டுசெய்வார். சிலர் மந்திர உபதேசம் பெற்று ஆன்மீக விஷயங்களில் நாட்டம் கொள்வார்கள். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் குறைந்தும், விளையாட்டில் கவனம் செலுத்த ஆரம்பிப்பார்கள். ஆனால் அவர்களை கடிந்து கொள்வதை விட அவர்களது கவனக்குறைவுக்கான காரணத்தை கண்டுபிடிப்பது நல்லது.

குலதெய்வ பூஜை செய்ய வாய்ப்பு வரும். வில்வாஷ்டகம் சொல்வதும், சிவபெருமானை வழிபடுவதும் எதிர்பாராத தொல்லைகளை தடுத்து ஒளிமயமான எதிர்காலத்தை உண்டுசெய்யும். உங்கள் முயற்சியைத் தொடருங்கள்.

தனுசு ராசி:



மூலம், பூராடம், உத்திராடம் 1–ஆம் பாதம்.

குடும்பஸ்தானத்தில் பாக்கியஸ்தானாதிபதி சூர்யன் மாதத்தின் முற் பகுதியில் இருப்பது நீண்ட கால பகையைக் குறைத்து உறவு முறைகளை சீர்செய்யும். ஆனால் கல்வியில் நாட்டம் குறைவதும் சொந்தத் தொழில் புரிபவர்கள் இடமாற்றம் அல்லது தொழிலை மாற்ற எண்ணவும் கூடும். கூடுமானவரை புதிய மாற்றங்களை சில நாட்கள் தள்ளி வைக்கவும். அஷ்டமஸ் தானத்தில் இராகு பகவான் நிற்பது பழைய கடன் தொல்லைகள் மீண்டும் தொந்தரவு தர வாய்ப்பு உண்டு செய்யும். கம்ப்யூட்டர் சம்பந்த கல்வி பயிலும் மாணவர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். குடும்ப சுகம் மற்றும் பிரயாண தடங்கலும் தோன்றும்.


கல்வித் துறை மற்றும் நீதித் துறையில் பணிபுரியும் பெண்கள் அதிக முயற்சியில் பதவி உயர்வை அடைவார்கள். சொந்தத் தொழில் செய்ய எண்ணுபவர்கள் தற்போது நிதானித்து செயல்பட வெற்றி உறுதி. அரசாங்க சம்பந்த உதவி எதிர்பார்ப்பவர்களுக்கும், கோர்ட் பிரச்னை உள்ளவர்களுக்கும் சாதகமான சூழ்நிலை உண்டு.

தற்போது உங்கள் முயற்சி கைகூடி வரவும், அடுத்த காரிய வெற்றிகளுக்கும் செவ்வாய் வெள்ளி போன்ற தினங்களில் துளசி

நாம் எத்தனைதான் வாரந்தோறும் படங்களை துடைத்து வைத்தாலும் தூசு தும்பு சில்வர் ஃபிஷ் வந்து விடுகிறது. படத்தின் பின்புறம் சிறிது ரசகுண்டு, பச்சை கற்பூரத்தைப் பொடித்துப் பூசி விடுங்கள்.

படமும் பழுதாகாது. பூஜை அறையும் வாசனையாக இருக்கும். பூச்சிகளின் தொல்லையும் இராது.

— லக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்.





தேவியின் ஸ்லோகங்கள் கூறி வருவதும் துளசியால் கிருஷ்ணனை பூஜிப்பதும் நன்மை தரும். இராசிநாதன் குரு ஆட்சி பெற்று நான்கில் இருப்பது ஆன்மீக, மற்றும் தெய்வீக தொண்டுக்கு பலம் சேர்க்கும்.

மகர ராசி:



உத்திராடம் 2,3,4-ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2-ஆம் பாதங்கள்.

ஜன்ம இராசியில் கேது சஞ்சரிப்பதும், மாதத்தின் முற்பகுதியில் அஷ்டமாதிபதியான சூரிய பகவான் சஞ்சாரம் செய்வதும் பித்த சம்பந்த தொல்லை உண்டுசெய்யும். நகப்ப னார் வழி உறவினர்களுடன் மனஸ்தாபமும், நினைத்த காரியம் எதிர்பாராதவிதத்தில் தடைப்படவும் கூடும். பிற்பகுதியில் சிறிது முன்னேற்றம் உண்டாகும். மேலதிகாரிகள் உங்கள் வேலைத் திறனை பாராட்டாமல் இருப்பதுடன், இடைஞ்சல்களையும் உண்டு செய்வார்.

மற்றவர்கள் தவறுகளுக்கு நீங்கள் விளக்கம் சொல்ல வேண்டியிருக்கும். பணம் புழங்கும் தொழிலில் உள்ளவர்கள் அதிகக் கவனத்துடன் இருக்கவும். கலைத் துறையினர்க்கு மட்டும் தற்போது புகழ் மற்றும் புதிய முயற்சி கைகொடுப்பதும் நிகழும். பிற்பகுதியில் 3-ல் சஞ்சாரம் செய்யும் சூரிய பகவான் இளைய சகோதரர்களின் உத்தியோக விஷயத்தில் நீங்கள் உதவக்கூடிய சூழ்நிலை உண்டு செய்வார்.

3-ஆம் இடத்தில் உள்ள குருபகவான் உங்கள் தெய்வீக வாழ்க்கைக்குத் தடங்கல் உண்டுசெய்தாலும் தொடர்ந்து பூஜை செய்வதை நிறுத்த வேண்டாம்.

ஆஞ்சநேயர் கோயிலுக்குச் சென்று வருவதுடன் மலை மீது உள்ள விஷ்ணு ஆலயத்தில் ஸ்வாமியை துளசியால் பூஜிப்பது நன்மை செய்யும்.

கும்ப ராசி:




அவிட்டம் 3,4-ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி முதல் மூன்று பாதங்கள்.

சுக்கிரன் மாதத்தின் முற்பகுதியில் ஜன்ம இராசியில் சஞ்சாரம் செய்வது குடும்பத்தில் பெண்களுக்கு மனமகிழ்ச்சியை உண்டு செய்யும். மேலும் அழகு சாதன சம்பந்த தொழிலில் பணிபுரியும் பெண்களுக்கும், சினிமாத் துறையில் நடனம் சம்பந்தப்பட்ட மகளிருக்கும் மகிழ்ச்சி தரக்கூடிய மாதம். தொழில் வியாபாரம் தொடங்க இது சாதகமான நேரம். ஆயினும் குரு பகவானை வழிபட்டு விட்டு பின் தொடங்கவும். கூட்டு வியாபாரம் செய்ப வர்களுக்கும் புதிய முயற்சியில் இறங்கு பவர்களுக்கும் மாதத்தின் பிற்பகுதி சாதகமானது. புண்ணிய ஸ்தலங்களுக்கு செல்லும் வாய்ப்பு தேடி வரும். தயங்காமல் செல்லவும்.

உடன் பிறந்த சகோதரிகளின் திருமண விஷயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

எழுத்தாளர்கள் தங்கள் எழுத்தில் புதிய வழியை புகுத்தி வெற்றி அடைவார்கள். சிலர் ஜனங்களால் பாராட்டப்படக்கூடிய வாய்ப்பும் உண்டு.

மாலை வேளையில் மஹாலட்சுமியை குங்குமத்தால் அர்ச்சிக்கவும். முடிந்தால் தாமரையைத் திருவடியில் வைத்து வழிபட நன்மை பெருகும்.



குளிர்சாதனப் பெட்டியில் பொருட்களை வைத்துத் திணிக்கக் கூடாது. ஏனென்றால் குளிர்ந்த காற்று உள்ளே சுழல்வதற்கு இடம் இருக்க வேண்டும்.

- ஆர். அஜிதா



மீன ராசி:

பூரட்டாதி 4-ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி.

சுக்கிர பகவான் உங்கள் இராசிக்கு 12-ஆம் இல்லமாகிய விரையத்திலும் மாத பிற்பகுதியில் ஜன்மத்திலும் சஞ்சாரம் செய்கின்றார். இவர் 3-ஆம் இடத்துக்கும் அஷ்டமஸ்தானத்திற்கும் உடையவர். பெண்களாலும் குடும்பத்தில் சஞ்சலமும் பெண் குழந்தைகள் உடல்நலனில் சற்று கவலையும் தருவார். எடுத்த காரியங்கள் விலகுவது போல் தோன்றும். பலர் யோசனைகளை கேட்பதை விட உங்கள் நெருங்கிய நண்பர்களிடம் மட்டும் ஆலோசனை கேளுங்கள்.

அரசியலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தேவையற்ற வழக்குகள் வரலாம். பேச்சாளர்கள் பேச்சில் கவனம் தேவை. ஆயினும் பலருக்கு ஆலோசனை தரும் திறமை தற்போது கைகொடுக்கும். முயற்சிகள் தள்ளிப் போவதைக் கண்டு சிந்திக்க வேண்டாம். கைகூட நாள் ஆகலாம். ஆனாலும் புகழுக்கும், வெற்றிக்கும் தடை வராது.

கல்வி நிறுவனங்கள் நடத்துபவர்கள் அரசாங்கத்தால் வழக்குகளை சந்திக்க நேரிடும். வக்கீல் மற்றும் நீதித் துறையில் இருப்பவர்களுக்குப் பொறுமையைச் சோதிக்கக் கூடிய நிகழ்ச்சிகள் நடைபெறும்.

இம்மாதம் முழுவதும் அரச மரத்தை காலை வேளையில் சுற்றி வருவதும், சிவ, மற்றும் விஷ்ணு ஸ்துதிகளை கூறி வருவதும் அதிக நன்மை தரும். குலதெய்வத்தையும், பெரியோர்களையும் வணங்கி வரவும். சிவமானஸ ஸ்லோகம் கூறுவதும் சங்கடங்கள் விலக்கி நன்மைகளை உண்டுசெய்யும்.

— என். கண்ணன் பட்டாச்சார்யா

சில உரையாடல்களை தவிர்க்கலாம், தப்பில்லை!

பெ. நாயகி

Mistakes do not kill; but misery can என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். நாட்டின் தற்கொலை நிகழ்வுகளில் பெரும்பாலானவற்றின் பின்னணி, செய்த தவறுகளாய் இருக்காது. அவை சம்பந்தமான அர்த்தமற்ற அதீத கற்பனைகளும் அவை விளைவிக்கும் துன்பங்களுமாகத்தான் இருக்கும்.

இதென்ன வாதம்? செத்துப் போனவன் என்ன நினைத்துச் செத்தான் என்று யாருக்குத் தெரியும்? என்று எண்ண வேண்டாம். 'போதும் இந்த பொல்லாத வாழ்க்கை. தற்கொலை செய்து கொள்ளலாம்' என்கிற எண்ணம் வாழ்வில் ஒருமுறையேனும் முகிழ்க்காத மனிதர்களே கிட்டத்தட்ட இல்லை. அந்த எண்ணம் முகிழ்த்த கணங்களை சற்றே அலசிப் பாருங்கள். அந்த எண்ணத்திற்கான காரணம் அந்த ஒரு தவறு மட்டுமே இருக்காது. அந்தத் தவறின் விளைவு என்ன ஆகுமோ என்கிற யோசனை விரித்த அந்த கணம்தான் மனதை அமுத்தியிருக்கும்.

நாம் தனித்து இருக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் உள்ளுக்குள் ஓர் உரையாடல் தொடங்கி விடுவதை உணர்ந்து இருக்கலாம். நமக்குள்ளே யாரோ இருவர் பேசிக் கொண்டிருப்பார்கள்.

'சேச்சே! அப்படி நான் பேசியிருக்கக் கூடாது. அவர் என்ன சொல்லி விட்டார்? இப்பல்லாம் பெண்களுக்குத்தான் உரிமைகளும் சலுகைகளும் ஜாஸ்தியா போச்சு! லேடீஸ் பஸ், லேடீஸ் ட்ரெயின் இன்னும் நிறைய. நாம் அடங்கி ஒடுங்கி வீட்ல இருந்துட வேண்டியதுதான் என்று தமாஷாகத்தானே சொன்னார். நான் ஏன் அதற்கு அப்படி ஒரு பதில் சொன்னேன்? "ரெண்டு பேரும் ஒன்னாய்த்தானே வேலைக்குப் போறோம், சம்பாதிக்கிறோம். என்னிக்காவது ஒரு நாள் காலையில காப்பி போட்டு எனக்குக் கொடுத்திருக்கீங்களா, இல்ல பெரிசா ஒத்தாசையா ஏதாவது செஞ்சுட்டீங்களா? நீங்கள்ளாம் பெண்ணுரிமையை பத்தி கிண்டலடிக்க முதல்ல தகுதியிருக்கான்னு பாத்துக்கங்க..." என்று அவ்வளவு சூடாக ஏன் பேசினேன்?' பாவம் முகம் கன்டிப் போய் ஒன்றுமே பேசாமல் சட்டைய மாட்டிக் கொண்டு கடைக்குப் புறப்பட்டுப் போய் விட்டார்.

'என்ன இருந்தாலும் உனக்கு வாய் கொஞ்சம் நீளம்தான்.'

'அதெல்லாம் இல்லை. நான் சொன்னதில் என்ன தப்பு? தப்பு என்றால், அவர் பதில் தந்திருப்பாரே'

'அவர் பதில் சொல்லலை. ஆனால் நீ அத்தனை கடுமையா பேசணுமா? தகுதி, யோக்யதைன்னு அவரைக் குத்தினா மாதிரி பேசறது தப்புதானே? இவனிடம் பேசி என்ன பிரயோஜனம் என்று கூட நினைத்திருக்கலாம்.'

'அப்படி எல்லாம் இருக்காது அவர் நல்லவர்.'

'முட்டாள்! அம்மா எத்தனை முறை சொல்லியிருக்கா. நாம் சண்டை போடும் போது ஆம்பளை பதில் பேசிட்டிருக்கற வரைக்கும்தான் நமக்கு சேஃப்டி. அவங்க அமைதியா இருக்க ஆரம்பிச்சாங்கன்னா ஏதோ பெரும் பிரச்னைக்கு அடிக்கல் நாட்டு விழான்னு தெரிஞ்சுக்கோ என்று சொல்லுவாளே அந்த மாதிரி எதுவும் ஆகி விடுமோ.'

'இவர் அப்படிப்பட்ட ஆள் கிடையாதே.'

'நம்ப முடியாதுடி. ஆம்

பளைங்க எல்லாரும் ஒரே இனம்தான்.'

என்றெல்லாம் மேலும் மேலும் தொடரும் உரையாடல்கள் நம் கட்டுப்பாடு மீறி வளர்பவை. ஒருமுறை தொடங்கி விட்டால் போய்க் கொண்டே இருக்கும். ஐயோ! போதும் நிறுத்து என்று அலறத் தோன்றும். ஆனால் நிற்காது.

இந்த வகை உள் உரையாடல்களின் தீவிரத் தன்மை ஒவ்வொருவரின் மனோ திடத்தைப் பொறுத்து வேறுபடும். ஆனால் உள் உரை யாடல்களின் தீர்ப்பு அநேகமாக 'நீ செய்தது சரியில்லை' என்றுதான் வரும். அந்த 'சரி யில்லை' என்பதன் தீவிரத் தன்மை 'இந்த முறை பரவாயில்லை. இனிமேல் இப்படிச் செய்யாமல் பார்த்துக் கொள்' என்பதில் இருந்து, 'எத்தனை முறை சொன்னாலும் நீ திருந்தப் போவதில்லை. மேலும் மேலும் தவறு கள் செய்து கொண்டே போகிறாய். நீ இருந்து தான் என்ன பயன்?' என்கிற எல்லை வரை வேறுபடும். இவற்றின் விளைவும் குழப்பம், தலைவலி, தன்னம்பிக்கை குறைவு. அதற்கு மேல் ஹிஸ்டீரியா என்கிற வகை மனநோய், முற்றிய நிலையில் தற்கொலை என்று பலதரப் பட்டவையாக முடிகின்றன.

இந்த உள் உரையாடல்கள் மனதைப் பாதிக் கும் அளவு மிகத் தீவிரமாக இருப்பது பதி னைந்து வயது முதல் முப்பத்தைந்து வயதுக் குள்ளான முக்கிய இளமைப் பருவத்தில்தான் என்பது வேதனையான உண்மை.

உள் உரையாடல்கள் தூண்டப்படுவதற்கு முக்கிய காரணி ஒன்று உண்டு. நம் மீது நமக்கு மதிப்பே ஏற்பட்டு விடாதபடி சுற்றி உள்ளோ ரால் எப்போது பார்த்தாலும் மட்டம் தட்டப் படுவதுதான் அது.

புகுந்த வீட்டில் சிலர், சகமாணவர்களில் சிலர், அலுவலக மேலதிகாரி, பக்கத்து வீட்டுப் பெண், சிலசமயங்களில் அப்பா, கணவர் போன்ற சிலரைப் பார்க்கும் போதும் அவர் களுடன் பேசும் போதும் ஒருவகையான சகஜ மற்ற உணர்வை நம்மில் பலர் அனுபவித் திருக்கக் கூடும். அவர்கள் கெட்டவர்களாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. நல்லவர் களாக, கஷ்ட நேரத்தில், உதவுபவர்களாகவே கூட இருப்பார்கள். இருந்தும் அவர்கள் பேசும் விதம் ஒரு வித சஞ்சலமான, சலனம் மிகுந்த, அமைதி குறைந்த நிலையை நம்முள் தோற்று விக்கும். ஏதோ நம்மை விவரமே அறியாத பள்ளிக் குழந்தை போல பாவித்து அவர்கள் பேசுவதாகத் தோன்றும். இப்படிப்பட்டோ ரிடம் பேச்சு கேட்ட நாட்களில் தனிமைப்பட நேர்ந்தால் உள் உரையாடல் அன்று உச்சத்தில் இருக்கும்.

உறவுகள், நண்பர்கள், பழகியவர்களில் சிலர் ஆப்பிள் மாதிரி இருப்பார்கள் (அப் படியே சாப்பிடலாம்); சிலர் வாழைப்பழம் மாதிரி (தோலை உரித்து விட்டு சாப்பிட வேண்டும்); வேறு சிலரோ மாதுளை மாதிரி (தோலை பிறிது கடினத்துடன் உரிப்பதோடு முத்துக்களைத் தேடி சுவைக்க வேண்டும்); மற்றும் சிலர் பலாப்பழம் மாதிரி இருப்பார்கள் (தோல் உரிப்பது கடினம். சுளை எடுப்பதற்கும் அதிக முயற்சி தேவை. இதற்குத் தயார் என் றால் அரிய சுவை பரிசாகக் கிடைக்கும்).

எப்போதுமே நம்மை ஓர் உயர்ந்த ஸ்தானத் தில் இருத்திக் கொண்டு நம்மை இளக்காரமாக நடத்துவது மாதிரி பேசுபவர்களின் உறவுகளை எல்லாம் நாம் அறுத்துக் கொண்டே போனால் நமக்கென்று யாருமே மிஞ்ச மாட்டார்கள். உண்மையில் பார்க்கப் போனால் இப்படிப் பட்டவர்களின் இந்த ஒரு சிறு குறையை தவிர்த்துப் பார்த்தால் இவர்கள் அளவு நம் மிடம் பிரியமும் ஒட்டுதலும் காட்டுபவர்கள் இருக்க மாட்டார்கள்.

அதற்காக நாம் தருகின்ற விலை சற்று அதிகமாய் இருக்கிறதே என்று எண்ணி திகைக்க வேண்டாம். இவர்களுடைய உறுத்தல் உண்டாக்கும் அதிகார தோரணையான குத்தல் பேச்சுகளை எதிர் கொள்ள சில எளிய உபா யங்கள் உண்டு. நமது பதில் அவர்களுக்கு எதிர் குத்தலையோ, நாம் கேலி செய்கிறோம் என்கிற உணர்வையோ உண்டாக்கி விடக் கூடாது என்பது முக்கியம். ஏனென்றால் நமது நோக்கம் அவர்களின் உறவு வேண்டும் என்பதோடு அவர்களுடைய பேச்சின் உறுத்தல் நம்மை அண்டாமல் பார்த்துக் கொள்வது அல்லவா?

1. அவர்கள் பேசி முடிக்கும் வரை காத் திருந்து கடைசியில் அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு, "மன்னிக்கவும். நீங்கள் சொன்னது என் மரமண்டைக்குப் புரிய வில்லை. எனக்குப் புரியும் வண்ணம் சொன்


பெற்ற தாயை வணங்கும் போது வயிற்றுக்கு நேராகக் கை கூப்பி வணங்க வேண்டும். தந்தையை மார் புக்கு நேராய் கை கூப்பி வணங்க வேண்டும். குரு நாதரை முகத்துக்கு நேராய் கை குவித்து வணங்க வேண் டும். இறைவனை மட்டும்தான் நம் இரு கைகளையும் தலைக்கு மேல் தூக்கி குவித்து வணங்க வேண்டும்.

(ஸ்ரீ கிருஷ்ண ப்ரேமையின் உரையில் கேட்டது.)

— கடலூர். ரா. மஞ்சுளா

பழைய காட்டன் புடைவைகளை நீளவாக்கில் சுமார் 5 அடி 10 அங்குல அகலத்தில் பலவற்றை வெட்டி எடுத்துக் கொண்டு ஒவ்வொன்றையும் ஜடைகளாகப் பின்னி வட்டமாக இணைத்து மிதியடி செய்து ஒவ்வொரு ரூம் வாசலிலும் போட் டேன். காசு செலவில்லாத மிதியடி. ஒவ்வொரு வட்டம் இணைக்கும் போதும் நூல் கொண்டு இணைக்க வேண்டும். ஒவ்வொரு சுற்றுக்கும் ஒவ் வொரு கலரை பயன்படுத்தினால் பார்க்க அழகாக காட்சியளிக்கும்.

– ராஜம் ராமன்



னால் நல்லது" என்று சொல்லிப் பாருங்கள்.

2. அவர்கள் எதைச் சொன்னாலும் "அதானே! நீங்க சொல்றதுதான் சரி. எனக்குத் தான் இது தெரியாமல் போயிருச்சு" என்று ஸேம் சைடு கோல் அடித்துப் பாருங்கள். உதாரணமாக பரீட்சையில் ஃபெயிலாகி விட்டீர்கள் என்று வைத்துக் கொள்வோம். 'படிக்கிற காலத்தில் ஒழுங்கா படிச்சிருக்கணும். ரிஸல்ட் இப்படித்தான் வரும்னு நான் எதிர் பார்த்தேன்' என்று சுற்றி நின்று சொல்வார்கள். அந்த கட்டத்திற்கு எந்த வகையிலும் உதவக் கூடிய உபதேசம் அல்ல இது என்றும் கேட்ப வர்கள் மனம் புண்படுவது மட்டுமே மிச்ச மாகும் என்றும் சொல்பவர்களுக்குத் தெரிவ தில்லை. அவர்களுக்கு விளக்கம் கொடுக்க முயல்வது ஃபெயிலானவரின் தன்னம்பிக் கையை இன்னும்தான் குறைக்கும். "நீங்க சொல் றது ரொம்பச் சரி. நான் ஒழுங்காய்ப் படித் திருக்கணும்" என்று பதில் சொல்லிப் பாருங் கள். அந்த இடத்தின் சூழ்நிலையே மாறிவிடும்.

3. அவர்கள் பேச்சில் உள்ள எதாவது வார்த்தையைப் பிடித்துக் கொண்டு சம்பந்த மில்லாமல் பேசிப் பாருங்கள். 'உனக்கு பிரேமா அளவு சாமர்த்தியம் போதாது. அவளாக இருந் தால் இவ்வளவு நேரம் பிரபஞ்சத்தையே தலை கீழாக்கியிருப்பாள்' என்று சொல்லிக் கொண் டிருப்பவரிடம் 'பிரேமாவுக்கு அடுத்த மாசம் தானே வளைகாப்பு?' என்று ஆரம்பித்து பேச் சைத் திருப்பிப் பாருங்கள். 'முட்டாள்! நான் என்ன சொல்லிட்டிருக்கேன் நீ என்ன பதில் சொல்ற?' என்று பேச்சு திசை திரும்பும். நமது நோக்கம் பேசுபவரின் பேச்சுக் கூர்மை நம்மை அண்டாமல் தடுப்பதுதானே ஒழிய அவர் களிடமிருந்து புத்திசாலி என்று சர்டிபிகேட் வாங்குவது அல்ல என்று ஞாபகம் வையுங்கள்.

4. நீங்கள் எங்கோ பேசிய பேச்சு சபையில் கிண்டலாக்கப்படுகிறது என்றால், 'நான் அப் படிப் பேசியிருக்கக் கூடாது என்பது இப்போது புரிகிறது. எப்படிப் பேசியிருக்க வேண்டும்?' என்று கேளுங்கள். கிண்டலடிப்பவர்களிடம் இந்தக் கேள்விக்கு பெரும்பாலும் பதில் இருக் காது.

5. இளக்காரமாய்ப் பேசபவர்களை முகத் துக்கு நேரேயே 'நீங்க சொல்ற ஒவ்வொரு பாயிண்ட்டும் மார்வலஸ். நான் கடைப் பிடிக்கிறேனோ இல்லையோ நீங்க ஏன் இதை எல்லாம் புத்தகமாக எழுதி வெளியிடக்கூடாது. நிச்சயமாக சமுதாயத்துக்கு நலம் தரும்' என்று புகழ்ந்து பாருங்கள்.

மேற் சொன்ன உபாயங்கள் அதிகார தோர ணைப் பேச்சாளர்களின் வாயை நிச்சயமாக அடைக்கும். காரணம், இப்படிப் பேசுபவர்க ளால் எதிராளி சீண்டப்படாமல் இருப்பதை சகிக்க இயலாது. எதிராளி பொங்கி எழ வேண் டும். அதற்குத் தக்க பதிலடி தர வேண்டும் என்கிற அவர்களுடைய முஸ்தீபுகள் பாழாவ தோடு உங்களுடைய அப்பாவித்தனமான கேள்விகள் அவர்களுடைய சிந்தனையைத் தொடுவதாக அமைவதால் மேற் கொண்டு ஒன்றும் செய்ய முடியாமல் ஸ்தம்பித்து விடு வார்கள்.

இப்படிப்பட்ட முயற்சிகளால் நம் மனம் புண்படும் கணங்களை நாம் தவிர்க்க இயலும். மனம் புண்பட்டால் ஒழிய உள் உரை யாடல்கள் தீவிர விஸ்வரூபம் எடுப்பதில்லை.

இவற்றையும், மீறி, நாம் செய்து விடுகிற சில தவறுகள் பற்றிய சுய ஆலோசனை களாலும் உள் உரையாடல்கள் ஓடத் தொடங் கும் வாய்ப்புகள் உண்டு. தற்கொலை போன்ற தவறான க்ஷண நேர முயற்சிகள் வரை இட்டுச் செல்கின்ற இந்த உரையாடல்களை நாம் நினைத்த மாத்திரத்தில் நிறுத்திக் கொள்ள முடியாவிட்டாலும் திசை திருப்பிக் கொள்ள முடியாதா?

நிச்சயம் முடியும்.

மிகமிக எளிதான கீழ்க்கண்ட வழிகளைப் பரீட்சித்துப் பார்க்கலாம். அனுபவபூர்வமாக வும் உளவியல் ஆராய்ச்சி பூர்வமாகவும் வெற்றி உறுதி செய்யப்பட்ட வழிகள் இவை.

1. உள் உரையாடல் மிகையாகி, கட்டுக்கடங் காது தொடர்ந்து உங்களை உறுத்தத் தொடங்கி உங்கள் மீதே வெறுப்பு உண்டாக்க ஆரம்பித்து



சுவர் அலங்காரத்திற்காக நாம் உப யோகப்படுத்தும் தீக்குச்சி மற்றும் ஐஸ்கிரீம் குச்சிகளை அப்படியே உபயோகிக்காமல் இரண்டு, மூன்று வண்ணங்கள் சேர்த்து (water colour/fabric paint/enamel paint) செய்ய ரொம்பவும் கவர்ச்சியாக இருக்கும். இந்த வண்ணம் தீட்டுவதினால் குச்சியும் காத்திரமாக இருக்கும்.

– லக்ஷ்மி ஸ்ரீனிவாஸன்

விடும் கணத்தில் நீங்கள் உட்கார்ந்து கொண் டிருந்தாலோ நின்று கொண்டிருந்தாலோ படுத் துக் கொண்டிருந்தாலோ சட்டென்று அந்த நிலையில் இருந்து மாறி விடுங்கள். எழுந்து கை கால்களை உதறி விட்டு சிறிய தோட்ட வேலை கள் போன்ற உடலுக்கும் மனதுக்கும் சேர்ந்து இதம் தரும் வேலைகளைச் செய்யுங்கள். உள் உரையாடலின் சங்கிலி தொடர்விட்டுப் போகும்.

2. அடுத்த கணமே நிகழ்காலத்துக்குள் வந்து விட முயற்சி செய்யுங்கள். எதிரே கண்ணில் தெரியும் பொருட்களின் பெயர்களை வாய் விட்டுச் சொல்லுங்கள். இது ஜன்னல், இது மேஜை, இது டி.வி. என்று சொல்வதற்குக் கூச்ச மாக இருக்குமா? எப்படியும் உள் உரை யாடலின் உறுத்தலின் போது நீங்கள் தனிமை யில்தான் இருக்கப் போகிறீர்கள். எனவே கூச்சப்பட வேண்டிய அவசியம் இன்றி சொல்லிப் பாருங்களேன் நிகழ்காலத்துக்குள் வருகிறீர்களா இல்லையா என்று. நிகழ்காலத் தில் அழுந்தக் காலூன்றி நிற்கும் யாருக்கும் நிலை தடுமாற்றம் கிடையாது. கவலைகளும் உள் உரையாடல்களும் முதல் வேலையாக நம்மை நிகழ்காலத்திலிருந்து துண்டித்து கடந்த காலத்தின் கசப்பான அனுபவங்களுக்கும் கோரக் கற்பனையில் உருவான எதிர்காலத்துக் கும் இட்டுச் செல்கின்றன. ஏனென்றால் அப் போதுதான் குழப்ப நிலைக்கு நம்மை ஆளாக்க இயலும். 'கடந்த காலம் என்பது இறந்து போன ஒன்று. எதிர் காலம் என்பது இப்போதைக்கு இல்லாத ஒன்று. நிகழ்வு ஒன்றுதான் நிஜம். அனுபவி' என்று கலீல் ஜிப்ரான் சொன்னதை நாம் மறக்கும் போதுதான் புத்தி தடுமாற்றம்.

3. சிறு குழந்தையாய் இருந்தபோது எங்கே எந்தப் பிரச்னை என்றாலும் ஓடிப் போய் தாய் மடியில் விழுந்து அந்த கணத்தில் முழுக்க பாது காப்பாய் உணர்ந்து பிரச்னைகள் மறந்த ஞாப கம் உள்ளதா? அந்த மாதிரி நீங்களே உங்களுக் காக சில இடங்களை இயற்கைத் தாயின் மடி யாக வரித்துக் கொள்ளுங்கள். வீட்டின் ஏதா வது ஒரு மூலை, பால்கனியின் இடது ஓரம், தோட்டத்தில் ஒரு குறிப்பிட்ட மேடு, மாடிப் படியின் சதுரக்கல் என்று ஏதாவது ஒரு இடம். அங்கே போய் உட்கார்ந்து கொண்டால் போதும் என் எல்லாக் குழப்பமும் நிவர்த்தி யாகி விடும் என்று நீங்களாகவே நினைத்துக் கொள்வது போக அவ்வப்போது நண்பர்களிட மும் அதையே சொல்லுங்கள். கொஞ்ச நாட் களில் அந்த இடத்தின் மகிமை கூடுவதை நீங்களே உணர முடியும்.

4. வியர்க்க விறுவிறுக்க களைப்பு தரும் வித மாக வேலையோ உடற்பயிற்சியோ செய்து பாருங்கள்.


5. மனதுக்கு மிகவும் பிடித்த யாருடனாவது பேசுங்கள். அதற்குத் தகுந்த மாதிரி பக்கத்து போர்ஷனிலோ மாடியிலோ, யாரையாவது பழகி வையுங்கள். சோம்பல் இல்லாதவர்கள் உடனடியாக எழுந்து கடிதம் எழுத உட்கார லாம்.

6. எழுந்து போய் ஜன்னலுக்கு வெளியே பாருங்கள். கண்ணில் படுகிற எந்தப் பொருளும் ஏதாவது பழைய இனிய அனுபவங்களைத் தூண்டலாம். நடந்து போகும் பெரியவரின் வழுக்கைத் தலை உங்கள் பெரியப்பாவையும் அவர் உங்களைப் புகழ்ந்த சந்தர்ப்பங்களையும் நினைவுக்குக் கொண்டு வரலாம். ஓடிக் கொண்டிருக்கும் நாய் சிறு வயதில் உங்களை நாய் துரத்தி கீழே விழுந்து காயம்பட்டு பள்ளிக்கு லீவு போட்டு அரைப் பரீட்சை எழு தாமல் தப்பித்த நாட்களை ஞாபகப்படுத்தலாம்.

7. கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் கடவு ளுடன் பேச ஆரம்பியுங்கள். வேண்டுதல், பாடல்கள் என்று எத்தனை வழிகள் இல்லை!

எல்லாவற்றிற்கும் மேலாக உள் உரை யாடலின் முடிவில் நீங்கள் உங்களாலேயே குற்றம் சாட்டப்பட்டு உறுத்தல் தாங்காமல் போகும் போது ஒன்றே ஒன்று எண்ணிப் பாருங்கள். (இதனைப் படிப்பவருக்கு சராசரி யாக முப்பது வயது என்று வைத்துக் கொண் டால்) நீங்கள் பிறந்து இந்த உலகில் வாழ்ந்த பதினோராயிரத்துச் சில்லறை நாட்களை ஆஃப்டர் ஆல் ஓர் அரைமணி நேரம் அர்த்த மற்றதாக ஆக்குவதா? அதற்கு நீங்கள் பலியா வதா? கேலிக்கிடமான செயலாக இது தோன்ற வில்லை?

உலகம் உன் கையில்



காம்கேர். கே. புவனேஸ்வரி

இந்த இதழில் நாம் பார்க்கப் போவது Microsoft Certified Professionals பற்றிய தகவல்களை.

"I.S.I. முத்திரை குத்தியப் பொருட்களையே வாங்குங்கள்..."

– என்று பல விளம்பர முழக்கங்களை தினசரி நாம் வானொலி மற்றும் டி.வி. வாயிலாக அறிந்து கொண்டு வருகிறோம். ஐ.எஸ்.ஐ. முத்திரை குத்திய பொருட்கள் மிகவும் தரம்வாய்ந்தவை, நீண்ட நாட்கள் உழைக்கக்கூடியவை என்று ஐஎஸ்ஐ முத்திரை இருந்தால் நம்பிக்கையுடன் வாங்கி விடலாம்.

எப்படி ஒரு பொருளுக்கு ஐ.எஸ்.ஐ. முத்திரை 'கியாரண்டி' கொடுக்கிறதோ அதைப் போலவே கம்ப்யூட்டர் மக்களுக்கு மைக்ரோ ஸாஃப்ட்டின் சர்டிபிகேட் இருக்குமேயானால்... அது அவருடைய திறமைக்கு, தகுதிக்கு மேலும் கிரீடம் சூட்டப்படுவதற்கு ஒப்பாகும்.

சரி... இந்தச் சான்றிதழ் கிடைக்க என்ன செய்ய வேண்டும்?

சர்டிபிகேட் எப்படிப் பெறுவது? எத்தனை வகை?

எட்டு வகையான Certified Exams இருக்கின்றது. அதாவது...

1. MCP - Micro Soft Certified Product Specialists
2. MCSE : Micro Soft Certified Systems Engineers
3. MCSD : Micro Soft Certified Solution Developers
4. MCDBA : Micro Soft Certified DataBase Administrators
5. MCP + Internet : Microsoft Certified Internet Specialists
6. MCSE + Internet : Micro Soft System Engineer + Internet Specialist
7. MCP + Site Building : MicroSoft Certified Site Builders
8. MCT : Micro Soft Certified Trainers

MCP : Microsoft Certified Product Specialist :

இந்தச் சான்றுதழை வைத்திருப்பவர்கள் மைக்ரோ சாஃப்டின் எல்லா விதமான உற்பத்திகளையும் (உ.தா. Visual Basic, Visual C++) சிறந்த முறையில் கையாண்டு, சாஃப்ட்வேர் எழுதி, அதனை ஒரு கம்பெனியின் தேவைகளுக்கு ஏற்ப தயார் செய்து கொடுக்கக் கூடிய திறமை வாய்ந்தவர்கள் என்று மைக்ரோ சாஃப்டின் சர்டிபிகேட் அங்கீகரிக்கும்.

MCSE : Micro Soft Certified Systems Engineers

Micro Soft-ன் MCSE Certificate வைத்திருப்பவர்கள், Micro Soft Windows net Work Technology- யில் மிகவும் திறமை வாய்ந்தவர்கள் என அங்கிகாரம் பெற்றவர்கள். நெட்வொர்க் டெக்னாலஜியில் எந்தவிதமான வேலைக்கும் இவர்கள் தகுதியானவர்கள் என்ற அங்கிகாரம் பெற்றவர்கள் MCSE Certificate வைத்திருப்பவர்கள்.

MCSD : Micro Soft Certified Solution Developer

ஒரு பிஸினஸுக்குத் தேவையான

எல்லாவிதமான மைக்ரோ சாஃப்ட டெவலப்மெண்ட் டூல்ஸ் மற்றும் ஆபரேட்டிங் சிஸ்டம் இவைகளைத் திறம்பட இயக்கி அதற்கு தீர்வு கொடுப்பவர்கள் MCSD என்ற மைக்ரோ சாஃப்ட்டின் சர்டிபிகேட் வைத்திருப்பவர்கள். Problem Solving through Solution Developing - (அதாவது ஒரு பிளினலில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்து, ஆக்கப்பூர்வமான முன்னேற்றங்களைக் கொடுக்கக்கூடியவர்கள்.) துறையில் திறமை வாய்ந்தவர்கள் MCSD Certificate வைத்திருப்பவர்கள்.

MCDBA : Micro Soft Certified Data Base Administrators —

Data Base Management System மற்றும் Micro Soft SQL Server Data Base இவைகளில் திறமைவாய்ந்தவர்கள் இவர்கள்! மிக அதிகமான டேட்டாவை எந்தவித Corruption-ம் இன்றி சேகரித்து.... திறம்பட இயக்கித் தேவையான சமயத்தில் தேவையான நேரத்தில், நமக்கு விருப்பமான ஃபார்மேட்டில் கொடுப்பவர்கள் MCDBA என்ற மைக்ரோசாஃப்டின் MCDBA சர்டிபிகேட் வைத்திருப்பவர்கள்.

MCP + Internet : Micro Soft Certified Internet Specialist

இன்டர்நெட் மற்றும் Server Products (உ.தா. SQL Server) இவைகளை திறம்பட கையாண்டு, 'அனலைஸ்' செய்து தேவையான ஸ்கிரிப்டுகளை தயாரித்துக் கொடுப்பதில் வல்லுநர்கள் இவர்கள் என்ற அங்கீகாரம் பெற்றவர்கள்.

MCSE + Internet : Micro Soft Certified System Engineers + Internet :

இவர்கள் Information Technology (ஒட்டு மொத்தமாக கம்ப்யூட்டர் துறையில்) வல்லுநர்கள். மிகவும் நுணுக்கமான பிரச்னைகளையும் அலசி ஆராய்ந்து விடை கொடுக்கக்கூடியவர்கள் மற்றும் இன்டர்நெட்டில் எல்லாவிதமான நுணுக்கமான வேலைக்கும் தகுதி வாய்ந்தவர்கள் இவர்கள்....

(உ.தா: Internet Browser, host Server, Data Base இப்படி இன்டர்நெட்டின் பலவிதமான பிரிவுகளுக்கும் இவர்கள் தகுதியானவர்கள்...)

MCP + Site Building : Micro Soft Certified Products + Site Building.

இவர்கள் வெப் ஸைட்டிஸ் தயாரிப்பதில் வல்லுநர்கள். இன்டர்நெட்டில் மிகவும் பிரபலமான வெப்ஸைட்டை உருவாக்க, திட்டம் போட்டு உருவாக்கி, அதனை பராமரிக்கவும், மேனேஜ் செய்யவும் இவர்கள் தகுதியானவர்கள்.

MCT : Micro Soft Certified Trainers :

இவர்கள் மைக்ரோ ஸாஃப்டின் Official Curriculum அதாவது அலுவலக பாடத்திட்டங்களை வெளியிட அனுமதி பெற்றவர்கள் என்ற அங்கீகாரம் பெற்றவர்கள்.

அதாவது அங்கீகரிக்கப்பட்ட ஸைட் மூலம் மைக்ரோ ஸாஃப்டின் அலுவலக திட்டங்களை வெளியிடும் அனுமதி பெற்றவர்கள்.

சர்டிபிகேட் பெறுவது எப்படி?

மேலே சொல்லப்பட்ட சான்றிதழ்கள் பெறுவதற்கு தேர்வு எழுத வேண்டும். அப்படித் தேர்வு எழுதுவதற்கு சென்னையில் சில குறிப்பிடத்தக்க சென்டர்களே அங்கீகாரம் பெற்றுள்ளன.

அங்கு சென்று தேர்வு எழுத வேண்டும். ON LINE EXAM. அதாவது கம்ப்யூட்டரிலேயே.

பேரீச்சம் பழத்திலிருந்து கொட்டையை நீக்கி விடவும். அந்த இடத்தில் ஒரு முந்திரிப் பருப்பை வைத்து பழத்தை மூடி விடவும். மைதா மாவில் கொஞ்சம் சர்க்கரை சேர்த்து, பஜ்ஜி மாவு போல் கரைத்து முந்திரி பருப்பு அடைத்த பேரீச்சம் பழத்தை முக்கி எடுத்து, ஒரு வாணலியில் எண்ணெயைக் காயவைத்து, அதில் பேரீச்சம் பழத்தைப் பொறித்து எடுத்து ஒரு புது மாதிரியான முந்திரி பக்கோடா செய்து, மாலை சிற்றுண்டியை மகிழ்ச்சிகரமாக்கலாம்.

— விஜயா கிருஷ்ணமூர்த்தி



நேரடியாக பதிலளிக்க வேண்டும்.

தேர்வு முடிந்த அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் உங்களுடைய மதிப்பெண் எவ்வளவு? நீங்கள் பாஸ் (அ) ஃபெயில் என்ற தகவல்களும் உடனே திரையிலேயே (மானிட்டர்) வந்து விடும். பிறகு ஒரு வாரத்தில் மதிப்பெண் சான்றிதழ் வந்து விடும். ஒரு மாத காலத்திற்குள் மைக்ரோ சாஃப்டின் சர்ட்டிபிகேட் கிடைத்து விடும்.

மேலே சொல்லப்பட்ட அத்தனை சான்றிதழ்களையும் ஒருவர் வைத்திருக்க வேண்டும் என்பதில்லை. அவரவர்களுக்கு எந்தெந்தத் துறையில் விருப்பம் உள்ளதோ அந்தந்தத் துறையைத் தேர்ந்தெடுத்து நன்கு படித்து பிறகு தேர்வு எழுதி சான்றிதழ் பெற்றுக் கொள்ளலாம்.

ஆயுட் கால மதிப்பு!

சரி.. இந்த சான்றிதழ் பெற்றவுடன் எத்தனை வருட காலத்திற்கு இதன் மதிப்பு? என்று உங்களுக்குத் தோன்றலாம்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். பி.காம்., எம்.காம்., என்ற பட்டங்களைப் பெற்றவுடன் அதன் மதிப்பு ஆயுள் முழுக்க இருக்கும்.

ஆனால் கம்ப்யூட்டர் துறையில் இன்று விஷுவல் பேஸிக் 6 என்ற பதிப்பு நாளையே விஷுவல் பேஸிக் 8 என்ற பதிப்பைப் பெறலாம். அதாவது... விஷுவல் பேஸிக் 6-ல் மேலும் பல முன்னேற்றங்களை உள்ளடக்கி விஷுவல் பேஸிக் 8 என்று வெளிவரும்...

Visual Basic - 5 version இருக்கும் போது நீங்கள் மைக்ரோ ஸாஃப்டின் தேர்வு எழுதி சான்றிதழ் வாங்கி வைத்திருப்பீர்கள் என்றால், version புதியதாக வரும் போது (அதாவது விஷுவல் பேஸிக் 8) மறுபடியும் தேர்வு எழுதி உங்கள் சான்றிதழை புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

இது என்னடா இது? தொந்திரவாக இருக்கும் போலிருக்கே! என்று நீங்கள் எண்ணுவீர்களேயானால் ஸாரி ஸார்/பெண்ணே! இதுதான் கம்ப்யூட்டர் உலகம்.

ஏற்கெனவே பலமுறை நான் சென்ற இதழ்களில் விளக்கியவாறு.... கம்ப்யூட்டர் துறையில் சாதிக்க விருப்பம் இருப்பவர்கள்... "VB படித்து விட்டோம். வேலையில் சேர்ந்தாயிற்று. வாழ்க்கையில் 'செட்டில்' ஆகி விட்டோம்" என்ற எண்ணம் இருப்பின் அதனை தூக்கி எறிந்து விட்டு "நித்தம் நித்தம் புதிது புதிதாக கற்றுக் கொள்ள வேண்டும் என்று இன்று புதிதாய் பிறந்தோம்!" என்ற எண்ணத்துடன் உற்சாகத்துடன் கற்றுக் கொள்ளும் ஆர்வத்தை, படிக்கும் ஆர்வத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.



'காபி மேக்கர்' வைத்திருக்கும் சகோதரிகளுக்கு ஒரு டிப்ஸ். உபயோகித்து சிறிது நாட்கள் ஆனவுடன் அதன் பில்டர் துவாரங்கள் அடைத்துக் கொண்டு டிகாக்ஷன் சரியாக இறங்காது. இதற்கு பில்டரை மட்டும் நல்ல சூடுள்ள தண்ணீரில் அரை மணி நேரம் போட்டு வைத்தால் அடைப்புகள் நீங்கி விடும். அடைப்பு இல்லையென்றாலும் மாதம் ஒருமுறை இப்படிச் செய்வது நலம்.

– விஜயா சுவாமிநாதன்.

எபபடி தேர்வுக்குத் தயார் செய்வது?

Authorised Centre - அதாவது மைக்ரோ ஸாஃப்ட் தேர்வு நடத்துகின்ற உரிமையைப் பெற்ற எல்லா சென்டர்களிலும் தேர்வு நடத்துவதோடு அல்லாமல்... அவர்களே பயிற்சியும் கொடுக்கின்றார்கள்... அங்கு சேர்ந்து படித்து பரீட்சை எழுதலாம். அல்லது ஏற்கெனவே நீங்கள் கம்ப்யூட்டர் துறையில் வல்லுநர்கள் என்றால் கவலையை விட்டு.... நீங்களே தயார் செய்து பரீட்சை எழுதவும்...

இந்தச் சான்றிதழ் வைத்திருப்பவர்களுடன் இணைப்பு :

மைக்ரோ ஸாஃப்ட் சான்றிதழ் வைத்திருப்பவர்கள் ஒருவருக்கொருவர் நேரடியாகவும் அதே சமயம் மைக்ரோ ஸாஃப்ட்டுடனும் தொடர்பு கொள்ள முடியும். லேட்டஸ்ட் கம்ப்யூட்டர் விஷயங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.

நமது தகுதி மற்றும் நமது வேலையை மேம்படுத்தக்கூடிய வகையில் (Micro Soft Certified Professional) Micro Soft Certificate வைத்திருப்பவர்களுக்காகவே பத்திரிகைகளை உருவாக்கி தொடர்ந்து அனுப்பிக் கொண்டே இருப்பார்கள்.

எண்ணமும் சொல்லும்

வண்ண மலர்கள்

அழகுக்காகவும், வாசனைக்காகவும் மலர்களை வீட்டில் வளர்க்கிறோம். வீட்டிற்கு முன்பு, இடமிருந்தால் சிறிய பூந்தோட்டம் அமைக்கலாம். அடுக்கு மாடி குடியிருப்பில் உள்ளவர்கள் சின்னச் சின்ன மண் தொட்டிகளில் பூக்களை வளர்க்கிறார்கள். சில பூக்களை மட்டும் தலையில் சூடிக் கொள்கிறோம். மற்ற பூக்களைக் கொண்டு வீட்டை அழகுபடுத்தலாம். அழகான பூக்களை வளர்ப்பது ஒரு கலை. அதே போன்று 'பிளவர் வாஸில்' பூக்களை அழகாக வைப்பதும் மற்றொரு கலையாகும்.



பூக்களின் வகைகள் :

பூவால் வீட்டை அழகு செய்ய விரும்புபவர்கள், முதன் முதலில் தெரிந்து கொள்ள வேண்டியது பூச்செடிகளை பற்றியதாகும். கூர்ந்து நோக்கினால், சில பூக்கள் சில சீசனில் தான் மலர்ந்து நம்மைக் கவரும். சில பூக்கள் வருஷத்திற்கு இருமுறை பூக்கும். சில பூக்கள் ஆண்டு முழுவதும் பூத்துத் தொங்கும். சூழல் மற்றும் மண்ணின் தரத்திற்கு ஏற்றாற் போலத்தான் பூச்செடிகள் வளரும். முதலில் நம் ஏரியாவில் பூக்கும் பூக்களைப் பற்றித் தெரிந்து கொள்வது நல்லது. இடத்திற்கு ஏற்றாற் போல, செடி, கொடி, புதர் மற்றும் பெரிய மரங்களை வைக்கலாம். பூச்செடிகளை வளர்ப்பதற்கு முன்பு, அதன் சீசனை மனதில் கொள்ள வேண்டியது அவசியம். இதனால் ஆண்டு முழுவதும் வீட்டில் மலர்களின் வாசம் நம்மை மகிழ்விக்கும்.

வெயில் காலத்தில் மல்லி, ஜாதி, சாமந்தி, ரோஜா, சம்பந்தி போன்ற மலர்களும் மழைக் காலத்தில் அல்லி, குளிர்க்காலத்தில் டிசம்பர், நந்தியாவட்டை, போகன்விலா, செம்பருத்தி இப்படி வருடம் முழுவதும் பூக்கள் பூத்துக் கொண்டே இருக்கும்.



பூந்தொட்டி :

பூந்தொட்டியில் வளர்க்கும் போது, பூவின் நிறத்தை மனத்தில் கொள்ள வேண்டும். சிலருக்கு டார்க் கலர் பிடிக்கும், சிலருக்கு லைட் கலர் பிடிக்கும். ஒரே கலரில் வளரும் பூக்கள் பலவித 'ஷேடு'களில் வளர்வதுண்டு. செம்பருத்தி, ரோஜா

போன்றவை பல வண்ணங்களில், பல ஷேடுகளில் வருவதுண்டு. ரோஜாவில் ஒரே பூவில், பலவித வண்ணம் கலந்திருப்பதை காணலாம். பூந்தொட்டியில் பூச்செடி வளர்ப்பவர்கள் குறைந்தது ஆறு மணி நேரமாவது தொட்டியின் மீது சூரிய ஒளி படும்படி வைக்க வேண்டும். பிளாஸ்டிக் பூந் தொட்டி, ஆயில் டப்பா, பெரிய பாட்டில் சிலர் பயன்படுத்துவார்கள். சின்னச் சின்ன டப்பாவில் வளர்ப்பவர்களுக்கு பூக்களை வைத்து அழகுபடுத்த உபயோகிக்கும் ஜாடி தேவைப்படாது.

பிளவர் வாஸ் :

பிளவர் வாஸ் என்று அழைக்கப்படும் பூ ஜாடிகள் பித்தளை, பீங்கான், ஸ்டீல், கண்ணாடி, மண் போன்றவை பல வண்ணத்தில், பல வடிவத்தில் கிடைக் கின்றன. இவை மட்டுமின்றி, பெரிய கூடை களிலும், கூல்டிரிங்க்ஸ் பாட்டிலிலும், பவுடர் டப்பா போன்றவற்றிலும், கலர் செய்து, அதை பிளவர் வாஸாக பயன் படுத்துவதும் உண்டு. பிளவர் வாஸின் சைஸ், பூக்களின் அளவை 'டாமினேட்' செய்யாத விதத்தில் இருப்பதாக பார்த்து வாங்க வேண்டும். பூக்களின் வண்ணத்தை விட பிளவர் வாஸ் 'டார்க்'காக இருக்கக் கூடாது. வாஸின் கலர் பூக்களின் கலரை கம்மி செய்வது போல் இருக்கக் கூடாது. பூக்களின் அழகுக்கு ஏற்றாற்போல, வாஸும் அழகாக இருக்க வேண்டும். வாஸில் வைக்கப் போகும் மலர்களை, காலை சூரிய அஸ்தமனத்திற்கு முன்போ, மாலையில் சூரியன் மறைந்த பிறகோதான் பார்க்க வேண்டும். காலையில் தண்ணீர் ஆவியா காமல் இருப்பதாலும், மாலையில் பூக்களில் உள்ள இனிப்புத் தன்மையாலும் 'பிரஷ்' ஷாக இருக்கிறது.

பூக்களைப் பறிக்கும் போது, காம்புப் பகுதி ஒரே அளவில் இருப்பதாக பார்த்துக் கொள்ள வேண்டும். பூக்களில் உள்ள தண் ணீரின் சதவிதப்படி, அது நீண்ட நேரம் புதுசு போன்று வாடாமல் இருக்கும். மலர் நீண்ட நேரம் வாடாமல் இருக்க, அதன் காம்புப் பகுதி தண்ணீர் நனையும்படி வைக்க வேண்டும். பிளவர் வாஸில் டார்க் கலர் பூக்கள் கீழேயும், லைட் கலர் பூக்கள் மேலேயும் இருக்க வேண்டும். பெரிய சைஸ் பூக்கள் கீழ்ப்பகுதியிலும், சின்னப் பூக்கள் மேல்பகுதியிலும் வைக்க வேண்டும்.

பூக்களின் உயரம், வாஸை விட ஒன்றரை மடங்கு அதிகமாக இருத்தல் வேண்டும். சிவப்பு, மஞ்சள் நிறப் பூக்கள் உற்சாகத்தைத் தரும். நீலம், பச்சை – ஸ்திரத்தன்மையைத்

ஒரு சமயம் என் சிநேகிதி வீட்டிற்கு சென்றிருந்தேன். அவள் ஓர் திடீர் முந்திரி பர்ஃபி செய்து எனக்கு அளித்தாள். என்னுடன் பேசிக் கொண்டே இந்த திடீர் முந்திரி பர்பி செய்தாள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

இதைச் செய்ய ½ கப் முந்திரி பொடி, ½ கப் பால் பவுடர், ஐஸிங் சர்க்கரை ½ - ¾ கப், குங்குமப் பூ – 1 சிட்டிகை, ஏலக்காய்ப் பொடி, பிஸ்தா பருப்பு 3, மில்க் மெய்ட் – கலக்குவதற்கு மட்டும்.



செய்முறை :


பிஸ்தாவினை சுடுநீரில் ஊறவைத்து, தோல் உரித்து, சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். முந்திரி பவுடர், பால் பவுடர், ஐஸிங் சர்க்கரை கலந்து கொள்ளவும். குங்குமப்பூவை ஒரு ஸ்பூன் சூடான பாலில் கலந்து, நன்றாகக் கசக்கி எடுத்துக் கலவையில் சேர்க்கவும். பூரிக்கு மாவு பிசைவது போல், மில்க் மெய்ட் ஊற்றி இந்தக் கலவையை பிசைந்து எடுக்கவும். சப்பாத்தியாக உருட்டிக் கொள்ளவும். சப்பாத்தி இடும் போது ஐஸிங் சர்க்கரையை தூவிக் கொள்ளலாம். வெட்டி வைத்துள்ள பிஸ்தா பருப்பை மேலே தூவி லேசாக உருட்டும் கட்டையால் அழுத்தி, சதுரமாக துண்டுகள் போடவும்.

வீட்டிற்கு வந்ததும் செய்து பார்த்தேன். மிகவும் நன்றாக வந்தது. நீங்களும் தயாரித்துப் பாருங்களேன்.

– கே. விஜயா

"HAPPY BIRTH DAY" வாசகம் கேக்கில் மட்டும்தான் எழுத முடியுமா? இதோ பர்பியில் கூட எழுதலாம். பர்பியை தாம்பாளத்தில் ஊற்றியதும் கட் செய்வதற்கு பதிலாக இந்த வார்த்தையை எழுதலாம். அல்லது மிட்டாய் வைத்து அலங்கரிக்கலாம். பிறகு 'கட்' செய்து அனைவருக்கும் தரலாம்.

— பி. ஜானகி



தரும். மலர்களின் வண்ணத் தேர்வு, ஒருவருக்கு ஒருவர் மாறுபடும். பிளவர் வாஸ் இருக்கும் டேபிள், ஜன்னல் மற்றும் சுவரின் வண்ணம், பக்கத்திலிருக்கும் கண்ணாடி, பெயிண்டிங் போன்றவற்றால் அறைக்கு மேலும் அழகு கூடும். பெரிய டேபிளில் சின்ன பிளவர் வாஸ் அழகாக இருக்காது. அதே போன்று சிறிய அலமாரியில் பெரிய பிளவர் வாஸ் வைத்தால், அழகாக இருக்குமா? வண்ண வால் பேப்பரினால், பல வண்ண வாஸின் அழகு குறையும். பூக்களை அழகுபடுத்தும் போது, பக்கத்தில் பழங்கள், பொம்மைகள் போன்றவற்றையும் வைத்தால், அழகுக்குச் சொல்ல வேண்டுமா? பூக்களால் வீட்டை அழகுபடுத்தும் போது, மலர்களின் மணத்தையும் மனத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

பொக்கே :

பல வகை மலர் கொத்தைதான் "பொக்கே" என்று சொல்கிறோம். விசேஷ நாட்களில் தற்போது 'பொக்கே' கொடுப்பதுதான் இன்றைய பேஷன்! ஒவ்வொரு விதமான பொக்கே, ஒவ்வொரு விஷயத்தை வெளிப்படுத்தும் என்பது தெரியுமா? காதலுக்குச் சின்னமாக ரோஜா, மருத்துவமனையில் உள்ளவர்களைப் பார்க்கச் செல்லும் போது மஞ்சள் ரோஜா, திருமண நேரத்தில் சிவப்பு ரோஜா, 25-வது திருமண நாளுக்கு வெள்ளை ரோஜா, அல்லது வெள்ளை ரிப்பனால் கட்டிய சிவப்பு ரோஜா; 50-வது திருமண நாளுக்கு மஞ்சள் ரோஜாப் பூக்கள், அல்லது தங்க கலர் ரிப்பன் கட்டிய பொக்கே கொடுக்கலாம். பெண் குழந்தை பிறந்த சமயத்தில் இளஞ்சிவப்பு வண்ணத்தில் பூக்கள் அல்லது இளஞ்சிவப்பு வண்ணத்தில் ரிப்பன் கட்டிய பொக்கே; ஆண் குழந்தை பிறந்த சமயத்தில் வாழ்த்துத் தெரிவிக்க நீலவண்ண மலர்கள் அல்லது பல வண்ண மலர்களை, நீல வண்ண ரிப்பனில் கட்டிய 'பொக்கே'! திருமணம், திருமண வரவேற்பிற்குப் பல வண்ண மலர் கொண்ட பொக்கே கொடுக்கலாம். ஆனால் அதில் சிவப்புப் பூக்கள் நிறைய இருக்க வேண்டியது அவசியம். பல வண்ண பூக்களை வைத்து அமைத்த 'பொக்கே'வை கிரஹப்பிரவேசம், புதிய தொழில் தொடங்குபவர்களுக்கு கொடுத்து வாழ்த்து தெரிவிக்கலாம். மதர்ஸ் டே வாழ்த்துத் தெரிவிப்பவர்களும் பல வண்ண மலர் பொக்கே கொடுக்கலாம். வெளிநாட்டுத் தோழிக்குக் கூட, நம் ஊரில் உள்ள 'பிளவரிஸ்ட்' மூலம் பொக்கே அனுப்பலாம்.

'இன்டர் பிளோரா' எனப்படும் இன்டர் நேஷனல் பிளவரிஸ்ட் சங்கத்தின் மூலம் வெளிநாட்டுக்குத் தகவல் அனுப்பி, சொன்ன தேதியில் நமது மலர்க் கொத்து சென்று மகிழ்விக்கும். நல்ல சந்தோஷ நேரத்தில் எப்படி 'பொக்கே' அனுப்புகிறோமோ, அதே போன்று ஒருவரது துக்க நேரத்தில் மலர் வளையத்தை இறந்தவரின் பாதங்களில் சமர்ப்பிக்கின்றனர். விருந்துக்கும், டீ பார்ட்டிக்கும் சென்று வந்தவர்கள், விருந்து கொடுத்த மறுநாள், விருந்து கொடுத்தவருக்கு 'தேங்க்யூ கார்டு'டன் பொக்கே அனுப்புவது பெரியவர்களின் வழக்கமாம். நமது மேலான எண்ணங்களை அர்த்தமுள்ளதாக, பூக்களின் நறுமணத்தோடு, மற்றவர்களுக்குத் தெரியப்படுத்த பூக்களை மிஞ்சியது எதுவும் இல்லை!

— போரூர். ஆர். சீதா

கி.பி. 2000-த்துக்கும் வழிகாட்டும் வாழும் பெண்மணிகள் – 2

நோயுடன் ஒரு யுத்தம்

'இன்றைய தினத்
தையே நோக்குங்கள்
ஏனென்றால் அதுதான்
வாழ்க்கையின் ஜீவன்
நேற்று என்பது வெறும்
கனவாக இருந்தது.
நாளை என்பதோ ஒரு
மனத்தோற்றம்தான்
இன்றைய தினத்தை
நன்றாக வாழ்ந்தால்
நேற்றைய தினம் ஒரு அற்புதமான
கனவாகவும்
நாளைய தினம் நம்பிக்கை நிறைந்த
மனத்தோற்றமாகவும் மாறும்
ஆதலால் இன்றைய தினத்தை நன்றாக
நோக்குங்கள்
அதுவே நம் விடியற்காலை
வணக்கமாகட்டும்...''

– காளிதாசர்

"கேன்சர் இன்ஸ்டிட்யூட் நோயாளிகளே இல்லாமல் மூடப்படும் தினம்தான் என் வாழ்க்கையிலேயே பொன்னாளாக இருக்கும்" என்கிறார் டாக்டர். வி. சாந்தா, உலகப் புகழ் பெற்ற அடையாறு கேன்சர் இன்ஸ்டிட்யூட்டில் மருத்துவ இயக்குனராக இருந்து விட்டு தற்சமயம் அதன் கௌரவத் தலைவராக இருக்கிறார் அவர்.

"என்னைப் பற்றிக் கூறுவதற்கு என்ன இருக்கிறது? என்னைப் பற்றிக் கூறவேண்டும் என்றால் கேன்சர் இன்ஸ்டிட்யூட்டைப் பற்றித்தான் கூற வேண்டும்" என்று புன்சிரிப்புடன் கூறும் இந்த மிகவும் எளிமையான மாது தன் வாழ்க்கையைப் புற்று நோயின் சிகிச்சை மற்றும் ஆராய்ச்சிக்காக அர்ப்பணித்துக் கொண்டவர். இன்று 'கேன்சர் இன்ஸ்டிட்யூட்' என்றால் டாக்டர் சாந்தாதான் நினைவிற்கு வருமளவிற்கு அதன் வளர்ச்சியுடன் தன் வாழ்க்கையைப் பிணைத்துக் கொண்டவர் இவர்.



கனவுகள் நிறைந்த 22 வயது இளம்பெண்ணிற்கு வரக்கூடாத இக்கட்டான சூழ்நிலை. ரயில்வேயில் சாதாரண வேலையில் இருந்த தந்தை. ஆணாதிக்கம் நிறைந்த சமுதாயத்தில் மருத்துவத்தில் மேற்படிப்பு படித்து விட்டு ஒரு சௌகரியமான வாழ்க்கை அமைத்துக் கொள்ள ஏற்ற சூழல். அன்று டாக்டர் சாந்தா நின்றிருந்த நுழைவாயிலில் ஒரு அருமையான எதிர்காலத்தின் அழைப்பு. பெண்கள் பள்ளிக்குக் கூட செல்லத் தயங்கும் காலத்தில் மருத்துவத்தில் மேற்படிப்பும் அரசாங்கத்தில் உத்தியோகமும் கைவசம் இருந்தன. இவை இரண்டுமே இருந்ததால் ஒரு சௌகரியமான வாழ்க்கை அமைத்துக் கொள்ள முடியும்.

ஆனால் சாந்தாவின் மனத்தில் சஞ்சலமே மேலோங்கியிருந்தது! அவரது மனத்திரையில் ஊசலாடியது அறுபது வயதிற்கு மேற்பட்ட, ஏகாந்தமான ஒரு மாது... உலகத்திலேயே மிகவும் கொடிய நோயான புற்றுநோயுடன் போராடிக் கொண்டு...

சாந்தா ஹவுஸ் சர்ஜனாக பணியாற்றிக் கொண்டிருந்தபோது ஒரு மருத்துவக் கூட்டத்தில் கேட்ட பிரசங்கம் அவரது செவிகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது. டாக்டர் கிருஷ்ணமூர்த்தி என்பவர் புற்றுநோயைப் பற்றி உரையாற்றிக் கொண்டிருந்தார். இந்நோய் வயோதிகர்களை மட்டும் தாக்கும் நோயாகக் கருதப்பட்ட காலம் அது. புற்றுநோய் வந்தால் மரணம் நிச்சயம் என்ற எண்ணம் நிலவிய காலம்.

"நம் நாட்டில் உடல் ஆரோக்கியமுள்ள, ஆனால் பிடிவாதத்துடன் விடாப்பிடியாக பிச்சை எடுப்பதில் ஈடுபடும் பிச்சைக்காரர்களுக்குப் பணம் கொடுக்க வசதி இருக்கிறது. ஒரு பிரபல வாழ்க்கையை வாழ்ந்து விட்டு மடிந்தவர்களுக்கு



யாறு கேன்சர் இன்ஸ்டிட்யூட்டில் சேர்ந்தார். அதன் பிறகு இந்த ஸ்தாபனத்தின் முதல் செங்கல் எடுக்கப்பட்டதிலிருந்து அதன் கூடவே அவரும் வளர்ந்தார். இந்த ஸ்தாபனத்தின் முன்னேற்றத்தின் ஒவ்வொரு உணர்ச்சியும்... வேதனை, சாதனை, நம்பிக்கை, பயம், மன உளைச்சல், வெற்றி... என்றிப்படி ஒவ்வொன்றும் அவருடைய வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்டிருக்கின்றன.

நம் நாட்டிற்கு இரண்டு நோபல் பரிசு பெற்றவர்களை வழங்கிய குடும்பம் டாக்டர் சாந்தாவின் குடும்பம். சர் சி.வி. ராமன் மற்றும் டாக்டர் சந்திரசேகர்தான் அவர்கள்.

நினைவுச் சின்னங்கள் அமைக்கும் அளவிற்குப் பணம் இருக்கிறது. ஆனால் புற்றுநோயினால் அவதியுற்ற நோயாளிகள் தங்குவதற்கு ஒரு இடம் அமைக்கவோ, அவர்களது பயங்கரமான வலியைப் போக்குவதற்கு ஒரு சிறு மாத்திரை வாங்குவதற்கோ நோயின் கடுமையினால் சோர்ந்து விட்ட உடலை கிடத்துவதற்கு ஒரு எளிமையான பாய் வாங்குவதற்கோ பணமோ, தாராள மனமோ, மனிதாபிமானமோ இல்லை! நமது புத்தகங்களிலிருந்து அஹிம்சையை நடைமுறை வாழ்க்கைக்குக் கொண்டு வரும் தருணம் வந்து விட்டது..."

இருபத்தி மூன்று வயது சாந்தாவின் வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்தது இந்தப் பேச்சுதான். அவரது எதிர்காலம் அவரால் அன்றுதான் தீர்மானிக்கப்பட்டது.

அவரது மனத்திரையில் தோன்றிய மாது டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி அவர்கள். பெண்களின் முன்னேற்றத்திற்காக பாடுபட்டுக் கொண்டிருந்த ஒரு பிரபலமான தலைவி. அவரது தங்கை புற்றுநோய் வந்து சரியான சிகிச்சை இல்லாததால் மடிந்து விட புற்றுநோய் துறையில் டாக்டர் முத்துலக்ஷ்மிக்கு ஈடுபாடு உண்டானது. 1954-ல் ஒரு சிறிய குடிலில் 12 படுக்கை கொண்ட ஒரு மருத்துவமனையைத் தொடங்கிய டாக்டர் முத்துலக்ஷ்மியின் மகன்தான் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி.

1955-ம் ஆண்டு ஏப்ரல் 13-ம் தேதி. அன்றைக்கு டாக்டர் சாந்தா "அடை




"அந்தக் காலத்தில் பெண்களுக்கு இரண்டு தொழில்தான் என்று ஏற்பட்டிருந்தது. ஒரு டீச்சராகவோ அல்லது டாக்டராகவோ பெண்கள் தொழில் புரியலாம் என்று சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. என் குடும்பம் என் சுதந்திர சிந்தனையைக் கட்டுப்படுத்தவில்லை" என்கிறார் இவர்.

ஆனால் சாந்தாவின் தந்தை அவரது படிப்பிற்காக ஏற்கெனவே நிறைய பணம் செலவழித்து விட்டிருந்தார். இனி அவரது குடும்பத்தை அவர் சார்ந்திருக்க முடியாது என்னும் நிலை. சம்பாதிக்க வேண்டுமென்ற கட்டாயம். அவரைச் சுற்றியுள்ளவர்கள் அவரை அரசாங்க உத்தியோகத்தை ஒரு வரப்பிரசாதமாக ஏற்றுக் கொள்ளும்படி வற்புறுத்தினார்கள்.

மேலும், டாக்டர் கிருஷ்ணமூர்த்தி அவரிடம் கூறியிருந்தார். "எங்களிடம் பண வசதியில்லை. உங்களுக்கு மாதச் சம்பளம் கொடுக்க முடியுமோ முடியாதோ? மேலும் இந்த ஸ்தாபனம் வளர்ச்சி அடையுமா என்று கூடத் தெரியாது" என்று.

ஆனால் சாந்தா திடமான மனதுடன் கேன்சர் இன்ஸ்டிட்யூட்டில் சேர்ந்தார். முதலில் சில ஆண்டுகள் சம்பளத்திற்காக பகுதி நேரம் ஒரு ஆஸ்பத்திரியில் பணிபுரிந்து விட்டு மாலை நேரங்களில் இன்ஸ்டிட்யூட் வந்து விடுவார். இப்படியாக ஓய்ச்சலில்லாமல் பாடுபட வேண்டியிருந்தது. பிறகு, "இந்த ஸ்தாபனத்தில் எனக்கு தங்குவதற்கு ஒரு இடமும் சுயமாக என் கால்களில்

நிற்குமளவிற்கு போதிய சம்பளமும் கிடைத்தால் போதும்'' என்று தீர்மானித்து கேன்சர் இன்ஸ்டிட்யூட்டில் மாதச் சம்பளம் ரூ. 200 பெற்றுக் கொண்டு மருத்துவ அதிகாரியாக முழு நேர பணியில் சேர்ந்தார்:



''இனி என்னுடைய இடம் இந்த ஸ்தாபனம்தான் என்ற எண்ணம் என் மனத்தில் வேரூன்றி விட்டது. ஆரம்பக் கட்டத்திலிருந்த இந்த ஸ்தாபனத்தைத் தத்தளிக்க விட்டு விட்டு என்னுடைய முன்னேற்றத்தைப் பற்றி மட்டும் நினைத்துச் செயல்பட என் மனம் இடம் கொடுக்க வில்லை.''

இன்று பேரும் புகழும் நவீன மருத்துவ வசதிகளுடன் உலகெங்கும் பேசப்படும் அளவிற்கு வளர்ந்து விட்டது அடையாறு கேன்சர் இன்ஸ்டிட்யூட். சமீபத்தில்தான் மருத்துவ இயக்குனர் பதவியை விட்டு விலகி கௌரவத் தலைவராக இயங்கி வருகிறார் இவர். ஆரம்பம் முதல் இந்த ஸ்தாபனத்திலேயே ஒரு அறையில் தங்கி எளிமையான சாப்பாட்டை சாப்பிட்டு ராப்பகலாக இந்த ஸ்தாபனத்திற்காக உழைத்து வருகிறார்.

முதல் பத்தாண்டுகள் முட்கள் நிறைந்த பாதையில்தான் நடக்க வேண்டியிருந்தது. ஆனால் அதையே ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு உழைத்தனர் சாந்தாவும், டாக்டர் கிருஷ்ணமூர்த்தியும். இரண்டே மருத்துவர்கள், இரண்டு நர்ஸ்கள் மற்றும் ஒரு சிறியவனுடன் பன்னிரெண்டு கட்டில்கள் கொண்ட ஒரு எளிய குடிசையில் புற்றுநோய் என்ற அதிபயங்கர நோயுடன் போராட்டம்.

விரைவில் அதிக நோயாளிகள் வர ஆரம்பித்தார்கள். அரசாங்கத்திடம் நிதி உதவிக்காகச் சென்றபோது இவர்களுடைய ஆஸ்பத்திரி ''பொருளாதார ரீதியாக ஸ்திரமில்லை என்ற காரணத்தினால் உதவி வழங்க முடியாது. அதனால் மருத்துவமனையை மூடி விடுங்கள்'' என்ற தகவலே வந்தது.



ஆனால், 1956-ன் முடிவில் தெய்வாதீனமாக ஒரு உதவி இவர்களைத் தேடி வந்தது. ''ஆசியாவிலேயே முதல் சூப்பர் வோல்டேஜ் தெராப்பி பிரிவு'' என்ற பேரை ஏற்படுத்தக்கூடிய ஒரு நவீன மருத்துவ இயந்திரம் இவர்களுக்குப் பரிசாக அளிக்கப்பட்டது.

''ஒரு நாள் திடீரென்று கண் விழித்த போது நாங்கள் பிரபலமாகி இருந்தோம். மேலும் மத்திய அரசும் மாநில அரசும் விழித்துக் கொண்டனர். எங்கோ ஒரு மூலையில் 50 கட்டில்கள் கொண்ட ஒரு எளிமையான மருத்துவமனைக்கு எப்படி இத்தனை விலையுயர்ந்த இயந்திரம் பரிசாகக் கிடைத்தது?'' என்ற கேள்வி அவர்களுக்குத் தோன்றியது அப்போதுதான்.

''1960-ல் இந்த ஸ்தாபனம் 120 படுக்கை கொண்ட ஸ்தாபனமாக வளர்ந்தது. ஒரே சமயத்தில் கிட்டத்தட்ட 150 நோயாளிகள் இருந்து கொண்டேயிருப்பார்கள். காலை ஆறு மணியிலிருந்து இராத்திரி 12 மணி வரை கடுமையான உழைப்பு. எங்களிடமிருந்த இந்த ஒரு இயந்திரம் ஏதாவது காரணத்தினால் இயங்காமல் போனால் பல நோயாளிகளின் சிகிச்சையில் தடங்கல் ஏற்பட்டு பயங்கரமான விளைவுகள் உண்டாகி விடும். அரசாங்கத்திடம் வெளிநாட்டிலிருந்து இன்னொரு இயந்திரம் வாங்க உதவி கேட்டு சென்றோம். கிட்டவில்லை. இந்த நிலையில் இந்தியாவிலேயே இந்தியர்களால் படைத்த ''டெலிசீஷியம் ப்ரோட்டோ டைப்'' பேராசிரியர் பாபாவினால் நன்கொடையாக எங்களுக்கு அளிக்கப்பட்டது.''

இப்படியாக ஒவ்வொரு கட்டத்திலேயும் தடங்கல் ஏற்பட்டு பல இன்னல்களைக் கடந்து இன்று 412 பெட்டுகள் கொண்ட, ஆசியாவிலேயே நவீன வசதிகளைக் கொண்ட, ஏழை எளியவர்களுக்கு இலவசமாகவோ, மிகவும் குறைந்த செலவிலோ, புற்றுநோய்க்கான சிகிச்சை அளிக்கும் அளவிற்கு வளர்ந்துள்ளது அடையாறு கேன்சர் இன்ஸ்டிட்யூட்.

''இன்று புற்றுநோயைப் பற்றிய பல தவறான எண்ணங்கள் மாறியிருக்கின்றன. புற்றுநோய் என்பது மரணத்தின் நுழைவாயில் என்ற நினைப்பும் மெதுவாக மாறி வருகிறது. எங்களுடைய குறிக்கோள் புற்றுநோயை ஆரம்பக் கட்டத்திலேயே கண்டறிந்து

குணப்படுத்த மக்களிடையே விழிப்புணர்வு உண்டாக்குவதுதான். இதை மக்கள் புரிந்து கொண்டால் நோயை எளிதில் கண்டுபிடித்து சிகிச்சை அளிக்க உதவியாக இருக்கும்" என்று கூறும் இவர் மேலும் தொடருகிறார்.

"ஏழை மக்களுக்கு நவீன மருத்துவ வசதி கிடைத்து அவர்களது நோய் குணமாக வேண்டும். எங்களுக்கு ஏழை, பணக்காரன் போன்ற பாகுபாடு கிடையாது. அதே போல, மதம், ஜாதி போன்ற பேதங்களும் கிடையாது" என்கிறார் டாக்டர் சாந்தா.

இந்த ஸ்தாபனத்தை நடத்த நிதி உதவி தேவைப்படுகிறது. ஆனால் உதவி இலகுவாகக் கிடைப்பதில்லை. "ஒவ்வொரு கட்டத்திலும் நம் நாட்டில் போராட்டம்தான். நன்கொடை கிடைப்பதில் பல இடைஞ்சல்கள். நன்கொடை கிடைத்தால் வேறுவிதமான நடங்கல்கள். நாங்களும் அரசாங்கம் செய்யும் அதே வேலையைத்தான் செய்கிறோம். எங்களை அரசாங்கத்துடன் போட்டியிடும் ஸ்தாபனங்களாக எடுத்துக் கொள்ளாமல் ஒரே நோக்கத்திற்காக பாடுபடும் இரு ஸ்தாபனங்களாக நினைத்து எங்களுக்குத் தோள் கொடுக்க வேண்டும்" என்று வருத்தப்படுகிறார் இவர்.

"நம் நாட்டில் இன்று புற்றுநோய் ஒரு மிகப் பெரிய பிரச்னை. இங்கு பெண்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் ஆண்களை விட பெண்களுக்குத்தான் புற்றுநோய் அதிகமாக உண்டாகுகிறது. அதுவும் பொருளாதார ரீதியாகக் கீழ் மட்டத்திலிருக்கும் பெண்களுக்கு அதிகம் உண்டாகிறது" என்றவர் நோயைப் பற்றிக் கொஞ்சம் விளக்குகிறார்.



வெந்தயக் கீரையில்
நிறைய தாதுப்பொருட்கள்
இருப்பதால் இதைத் தினம் அல்லது
வாரம் மூன்று நாட்கள் சமையலில்
பருப்புடன் சேர்த்துச் சாப்பிடலாம்.
மாதவிலக்கு சமயத்தில் ஏற்படும்
வயிற்றுவலி நீங்கி
சிரமமில்லாமல் இருக்கும்.
– எஸ். விஜயா
சீனிவாசன்.

"புற்றுநோய் உடலில் எந்த உறுப்பிலும் உண்டாகலாம். ஆனால் அதிகபட்சம் (70%) உண்டாவது மூன்று விதமான புற்றுநோய் தான். அதாவது சர்விக்கல் கேன்சர் (கருப்பையின் கழுத்துப் பகுதியில் உண்டாகும் புற்று நோய்), மார்பகப் புற்றுநோய் மற்றும் வாயில் உண்டாகும் 'ஓரல் கேவிடி' கேன்சர்.

நம்முடைய முயற்சி புற்றுநோயைப் பற்றிய அறிவை மக்களிடையே வளர்ப்பதுதான். இந்த மூன்று விதமான புற்றுநோயில் இரண்டு வகை நோய்கள் வராமல் தடுப்பது எளிது. இந்த வகை புற்றுநோய் முற்றி விடுவதற்கு பல நாட்களுக்கு முன்பே மிகவும் எளிதாக அவைகளுக்கான அறிகுறிகள் தென்படும்.

'வெஜைனல் ஸ்மியர்' அல்லது PAP ஸ்மியர் என்னும் ஒரு சிறிய மருத்துவப் பரிசோதனை உள்ளது. இதன் மூலம் உடலில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டறியலாம். ஆரம்பக் கட்டத்தில் நோயைக் கண்டறிந்தால் அறுவை சிகிச்சை இல்லாமலே குணப்படுத்த முடியும். சிறிது காலம் கடந்தால் ஆபரேஷன் தேவைப்படலாம். அதுவும் கடந்து விட்டாலும் கூட அறுவை சிகிச்சையின் மூலம் உயிரைக் காப்பாற்றலாம். (நோய் உடல் பூராகவும் பரவாமல் இருந்தால்).

"இந்த இரண்டு விதமான புற்றுநோய் உண்டாவது இரண்டு முக்கியமானக் காரணங்களினால். கருப்பையின் கழுத்தில் உண்டாகும் புற்றுநோய் பிறப்புறுப்பை சுத்தமாக வைத்துக் கொள்ளாததால்தான் வருகிறது. பெண்கள் தங்களது உடலை சுத்தமாக வைத்துக் கொண்டால் இந்தப் புற்றுநோய் வர வாய்ப்பில்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். முக்கியமாக, படிக்காத, ஏழைப் பெண்களுக்கு இந்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.


ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது என்னவென்றால் வருமானம் குறையக் குறைய இந்த வகை புற்றுநோய் அதிகமாகவும் வருமானம் ஏறினால் இந்த நோய் குறைவாகவும் காணப்படுகிறது.

அதே போல் வாய்ப்பகுதியில் உண்டாகும் 'ஓரல் கேன்சர்' ஏதாவது ஒருவிதத்தில் புகையிலையை உட்கொள்ளுவதால் ஏற்படுகிறது. புகையிலை குதப்புவது அதிகம் ஏழைப் பெண்களிடையே காணப்படுகிறது. எந்தவிதமாகவும் புகையிலை உபயோகப் படுத்தாவிட்டால் இந்தப் புற்றுநோய் வர வாய்ப்பில்லை."

"இனி மார்பகப் புற்றுநோய்க்கு வருவோம். இது சற்று வித்தியாசமான வகை புற்றுநோய். இதற்கும் பொருளாதார அந்தஸ்திற்கும் சம்பந்தமில்லை. இதற்கு "Genetic Prediopposition" ஒரு காரணம். அதாவது வழிவழியாக

அண்மையில் மும்பையிலிருந்து மாற்றலாகி வந்த எனக்கு நம்மூர் பால் பாக்கெட்டுகளிலும் ஒரு சின்ன திருத்தம் செய்யலாம் எனத் தோன்றியது.

மும்பையிலுள்ள அரசு, மற்றும் தனியார் பால் பாக்கெட்டுகளில் அந்த பாக்கெட் என்று வருகிறதோ அந்தத் தேதி மற்றும் அதனுடைய (கோட்) நெம்பர் சீல் செய்யப்பட்டிருக்கும். இதனால் நமக்கும் பிரிட்ஜில் இருக்கும் பால் பாக்கெட்டுகளில் எது நேற்றைய பால், இன்றைய பால் என்று சுலபமாகத் தெரியும். நாம் கடையில் வாங்கும் பொழுதும் பழைய பால் பாக்கெட்டாக இருந்தால் வாங்காமல் தவிர்த்து விடலாம்.



மேலும் இன்னொரு முக்கியமான விஷயம். அந்தத் தேதியும் கோட் நெம்பரும் கைகளினால் அழுத்தித் தேய்த்தால் அழியாது. அப்படி அது அழிந்து விட்டால் அது போலியான பாக்கெட் என்று தெரியும். இதைப் போல் நம்மூர் பாக்கெட்களிலும் நடைமுறைப்படுத்தலாம் அல்லவா? ஆவின் நிறுவனத்தினரும், தனியார் பால் நிறுவனத்தினரும் கவனிப் பார்களா?



– வி. லதா

வரக்கூடிய வாய்ப்பு ஜாஸ்தி இருக்கிறது.

அதனால் தாய் வழியில் எவருக்காவது இந்த நோய் இருந்திருந்தால் அக் குடும்பத்துப் பெண்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். கைகளினால் தொட்டறிந்து கொள்வது மற்றும் மம்மோக்ராஃபி மூலம் கண்டறிவதற்கு முன்பே பல ஆரம்பக் கட்ட அறிகுறிகள் உண்டாகும். இந்தக் கட்டத்தில் கண்டுபிடித்தால் நூறு சதவிகிதம் குணப்படுத்தலாம்.

புற்றுநோய் என்பது பயங்கரமான நோய் அல்ல. புற்றுநோய் குணப்படுத்தக்கூடிய ஒரு நோய்தான். இதை மக்கள் புரிந்து கொண்டு மருத்துவர்களுடன் ஒத்துழைத்தால் அவர்கள் நோயை வெற்றி கண்டு நிம்மதியாக வாழலாம்."

புற்றுநோய் சிகிச்சையில் மற்றுமொரு முக்கியமான தேவை தொண்டர்கள்தான். டாக்டர் சாந்தாவின் கூற்றுப்படி தொண்டர்கள் கிடைப்பது மிகவும் கஷ்டமாக உள்ளது. இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் அவரால் 6–7 பேர்கள் மட்டுமே கொண்ட நிரந்தரக் குழுவைத்தான் உருவாக்க முடிந்தது.

புற்றுநோய் உள்ளவர்களுக்கு உணர்ச்சிப் பூர்வமாக ஆதரவளிப்பவர்கள் மிகவும் அவசியம். அதுவும் மார்பகப் புற்றுநோயுள்ளவர்கள் நிலைகுலைந்து போகாமலிருக்க பல தொண்டர்களின் உதவி மிகவும் தேவை. மேலும் ரயில்வே நிலையம் போல் ஹாஸ்பிட்டலில் கூடியிருக்கும் நோயாளிகளுக்கு சரியானபடி வழிகாட்டவும் பல அலுவலக வேலைகளைச் செய்யவும் கிராமங்களில் வசிக்கும் நோயாளிகளுக்கு அடுத்த சிகிச்சை தேதியை நினைவுறுத்தி கடிதம் எழுதவும் தொண்டர்களின் பணி மிகவும் அவசியமாகிறது இவர்களுக்கு.

"நாம் சம்பளம் வாங்காமல்தானே வேலை செய்கிறோம். அதனால் எப்போது வேண்டுமானாலும் போய் வரலாம்" என்றில்லாமல், "நாங்களும் புற்றுநோயுடன் போராடுவதில் முக்கியமான பங்குவகிக்கிறோம் என்பதை உணர்ந்து எங்களுக்கு தொடர்ந்த, நிரந்தரமான உதவி செய்ய வேண்டும். தற்சமயம் ஒரு தொண்டர் குழுவிற்கு பயிற்சியளித்து பற்றுள்ள ஒரு குழுவை உருவாக்கும் முயற்சியில் இருக்கிறோம்" என்கிறார் இவர்.

புற்றுநோயிற்கு விசேஷமான அணுகுமுறை தேவை. அதற்காக நிறைய நேரமும் முயற்சியும் அவசியம். இந்த ஸ்தாபனத்தைப் போல புற்றுநோய்க்கான பிரத்தியேக மருத்துவமனைகளில் சிகிச்சை அளித்தால் பிழைக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகம் என்றெல்லாம் எடுத்துக் கூறி மருத்துவக் குழுவான மெடிக்கல் கவுன்சிலுடன் போராடி புற்றுநோய்க்கான மேற்படிப்பைக் கொண்டு வர பாடுபட்ட இந்த ஸ்தாபனத்தினர் வெற்றியும் கண்டனர். இன்று நம் நாட்டில் புற்றுநோய்க்கான விசேஷ மேற்படிப்பு பல இடங்களில் உள்ளது.

"இன்றைய காலத்தில் மக்களிடையே மனிதநேயமும் ஒழுக்கமும் மிகவும் குறைந்து விட்டது. மக்கள் எந்தக் காரியத்தையும் ஈடுபாட்டுடன் செய்வதில்லை. 'நான் என்னால் முடிந்த மட்டிற்கும் நன்றாகச் செய்ய வேண்டும்' என்று எவரும் நினைப்பதில்லை. நாம் செய்யும் கடமைகளை பொறுப்புடன் செய்தால் மக்கள் நம்மிடம் நம்பிக்கையுடன் வருவார்கள். கடைசியில் நோயாளிகளும், மருத்துவர்களும், மருத்துவத் துறையில் உள்ளவர்கள் அனைவரும் சந்தோஷமாக இருக்க வேண்டும். அதுதான் முக்கியம்."

புற்றுநோயுடன் பல ஆண்டுகளாகப் போராடிக் கொண்டிருக்கும் டாக்டர் சாந்தாவிற்கு பத்மஸ்ரீ விருதைத் தவிர பல பரிசுகளும் பட்டங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த எளிமையான பெண்மணி வாஸ்தவத்தில் தன்னம்பிக்கையும், சுதந்திர சிந்தனையும் தைரியமும் உள்ளவர். ஒரு ஒழுக்கமுள்ள மனிதநேயமுள்ள அனுபவம் நிறைந்த பெண்மணி என்ற அந்தஸ்தில் அவர் கூறுவது,

"பெண்கள் சுதந்திரமாக இயங்க வேண்டும். அதற்குக் கல்வியறிவு வேண்டும். அவர்களுக்கு சுதந்திரமாக, தங்கள் கால்களில் நிற்கக் கூடிய வலிமை வேண்டும். குடும்ப வாழ்க்கை என்பது மிகவும் முக்கியம். ஆனால் அதற்கு விலை அவர்களுடைய சுதந்திரம் அல்ல.

மேலும் குழந்தைகள், தாய், தந்தை, இந்த இருவருமே முக்கியமானவர்கள் என்பதை உணர வேண்டும். தாய் என்பவர் எப்போதும் தந்தைக்கு சேவை செய்பவள் என்ற சிந்தனை மாற வேண்டும். பெற்றோர்கள் இருவரும் ஒரு மனதுடனும் கண்ணியத்துடனும் இயங்கி குடும்பம் என்பது ஒரு அற்புதமான கோவில் என்பதை நிருபிக்க வேண்டும்.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகியும் நமது அடிமை மனப்பான்மை மறையவில்லை. அதே போல் பெண்களின் அடிமை மனப்பான்மையும் குறையவே இல்லை. மருத்துவத் துறையில் இன்னும் பல பெண்களை அடிமை மனப்பான்மையுடன் காணலாம்.' இத்தனை உயர்ந்த படிப்பிற்கு அப்புறமும் கூட தாம் விரும்பும் சுதந்திரம் அவர்களிடம் இல்லை.

பெண்களுக்கு ஆண்களை சார்ந்திருக்காமல் வாழ முடியும் என்ற நம்பிக்கை வர வேண்டும். இதற்கு மிகவும் முக்கியமானது அவர்களுடைய கல்வியறிவை வளர்ப்பது தான்.

சாதாரணமாகப் பெண்கள் நீண்ட நேரம் ஒழுக்கத்துடனும் நேர்மையுடனும் கடமையுணர்வுடனும் உழைக்கக்கூடியவர்கள். நம் நாடு இன்று பல இன்னல்களில் மாட்டிக் கொண்டு தத்தளித்துக் கொண்டிருக்கும் நிலையிலிருந்து வெளிவர வேண்டும் என்றால் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். பெண்கள் முன்னேறினால் நாடு முன்னேறும். புற்றுநோயைப் போன்ற பல நோய்களை வெற்றி கண்டு ஒரு ஆரோக்கியமான நாட்டை நாம் உருவாக்கலாம். அடுத்த நூற்றாண்டிலாவது என்னைப் போன்ற படித்த சிலர் என்று இல்லாமல் பல பெண்கள் கல்வியறிவை வளர்த்துக் கொண்டு வெற்றிப் பாதையில் தன்னம்பிக்கையுடன் நடைபோட வேண்டும்" கண்களில் ஒரு அற்புதமான கனவு விரிய நம்மை நம்பிக்கையுடன் பார்த்துச் சிரிக்கிறார் டாக்டர் சாந்தா.

மருத்துவ உலக வரலாற்றில் டாக்டர் சாந்தாவிற்கு என்று ஒரு இடம் உண்டு. ஆனால் தான் ஒரு சிறு துளிதான் என்று அடக்கத்துடன் கூறும் இவரது எளிமையைக் கண்டு வியந்து இவரைப் போன்ற பெண்மணிகள் அடுத்த நூற்றாண்டில் பலர் உருவாக வேண்டும் என்ற ஆசையுடன் நாம் கிளம்புகிறோம்.

— ஸ்வாதி

கோதுமை அல்வா பலருக்கும் சரியாக அமைவதில்லை. அதனால்தான் அதை தீபாவளிக்கு என்று ஒதுக்கி விடுகிறார்களோ? கோதுமையை அரைத்து பால் எடுத்து 2 மணி நேரம் கிளறி அவஸ்தைப்படுவதை விட மைதா மாவில் அல்வா செய்தால் நன்றாக வரும். மைதாவை 1 தம்ளர் மாவுக்கு 3 தம்ளர் தண்ணீர் விட்டு தோசைக்குக் கரைப்பது போல் கரைத்து 3 அல்லது 4 மணி நேரம் வைக்கலாம். முதலில் வாணலியில் 1-க்கு 3 பங்கு சர்க்கரைப் போட்டு தண்ணீர் விட்டு பாகு வைக்க வேண்டும். பாகு என்றால் முற்றிய பாகு தேவையில்லை. கையில் பிசுக்கு என்று ஒட்டும்படி இருந்தால் போதும். கேசரி பவுடர் சிறிது போடவும். பின்பு மைதா கரைத்த நீரை அதில் விட்டு கைவிடாமல் கிளறவும். அரை மணி கிளறியபின் சிறிது, சிறிதாக நெய் விட்டு தொடர்ந்து கிளறவும். சுமார் 3/4 மணி நேரத்தில் அல்வா நன்றாக பதமாக வரும். நெய் தடவிய தட்டில் கொட்டவும். அல்வாவில் விட்டு கிளற சமபங்கு நல்ல நெய்யும் டால்டாவும் கலந்து செய்யலாம். மிகவும் நன்றாக இருக்கும்.

— எஸ். ரேவதி




விடுமுறையில் விருந்தினராய்ச் செல்பவர்களுக்கு..

பயணம் என்பது நம் அனைவருக்குமே ஒரு சுகானுபவம். ஆனால், ஒரு பயணத்தைத் திட்டமிடுவதில் இருந்து, அதனை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வது வரை எத்தனையோ படிகள் உண்டு. பயணம் என்ற சொல் சுற்றுலாப் பயணங்களை மட்டும் குறிப்பதில்லை. நம் உறவினர் வீடுகளுக்கு அடிக்கிறோமே 'விசிட்' அவற்றையும் குறிப்பதுதான்.

"விருந்தும் மருந்தும் மூன்று நாள்'' என்பார்கள் பெரியவர்கள். ஆனால், தனிக்குடித்தனங்கள் மலிந்து விட்ட,




தற்போதைய அவசர யுகத்தில் – மனிதநேயத்தை விடவும் மற்ற உணர்வுகள் மேலோங்கி விட்ட இத் தருணத்தில், இந்த மூன்று நாள் விருந்து கூட பலரைக் கசப்படைய வைக்கிறது. இதற்குக் காரணம் அவசர கதி வாழ்க்கை மட்டுமல்ல; வரும் விருந்தினர்கள் நடந்து கொள்ளும் முறையும்தான். நாம், நம் வால் குழந்தைகளையும் இழுத்துக் கொண்டு ஒருவர் வீட்டிற்கு விருந்தினராய் விடுமுறைக்குச் செல்லும் போது, பின்கூறிய சில குறிப்புகளைப் பின்பற்றினால், கண்டிப்பாக, வேண்டாத விருந்தாளியாய் நோக்கப்பட மாட்டோம்.



நம் அனைவருக்கும் தனித் தனியான விருப்பு வெறுப்புகள், பழக்க வழக்கங்கள் உண்டு. அதை நம் வீட்டில் பின்பற்றலாம். ஒருவர் வீட்டில் பத்து நாள் சென்று தங்கும் போது அவற்றை முதன்மைப் படுத்தி நடந்து கொள்ளுவது முதல் தவறு. ஒவ்வொரு குடும்பத்தின் வாழ்க்கை முறையும் வெவ்வேறானது. நாம் ஒரு இடத்தில் சென்று தங்க வேண்டுமெனில், அவர்கள் வாழ்க்கை முறைக்குச் சற்றேனும் மதிப்பளிக்க வேண்டுமல்லவா? 'உப்புப் பெறாத' ஒரு விஷயத்தை முதலில் எடுத்துக் கொண்டு இதை விளக்குவோம்.

உங்கள் நாத்தனார் வீட்டிற்கு ஒரு வாரம் செல்கிறீர்கள். அவர்கள் சாப்பாட்டில் எப்போதும் உப்பு, காரம் குறைவு என்று வைத்துக் கொள்வோம். நீங்களோ நல்ல உப்புறைப்பாகச் சாப்பிட்டுப் பழக்கம். டைனிங் டேபிள் முன் உட்காரும்போதெல்லாம், கையில் ஒரு வாட்டர் பாட்டிலை வைத்துக் கொண்டு, ஒரு கவளம் சாப்பிட்டவுடன் ஒரு மிடறு தண்ணீர் குடித்து விட்டு, "அக்கா, உங்க சமையல் 4 வருடம் முன்னாடி, சூப்பரா இருக்கும். இப்போ உப்பே இல்லை. எனக்கு தொண்டைக் குழிக்குக் கீழே இறங்கவே மாட்டேங்கறது'' என்று கூறிக் கொண்டே சாப்பிட்டு முடித்தால், காலையில் இருந்து மாய்ந்து மாய்ந்து ஆறு வகை செய்து, பரிமாறிய நாத்தனார் முகம் சுண்டிப் போகும். இது தேவையா? ஒரு பேச்சுக்கு, சமையல் நன்றாக இல்லை என்றே வைத்துக் கொண்டாலும், இதுபோன்ற பேச்சுக்கள் நாகரிகம் அற்றதே. ஹோட்டலுக்குப் போய் வறண்ட தோசையைச் சாப்பிட்டு விட்டு, ஆறு பேருக்கு நூறு ரூபாய் அழுது விட்டு



வருகிறோம். ஏதேனும் பேச முடியுமா? பின் ஏன் இங்கே பேச வேண்டும்? ஒரு வாரம் நாக்கு நாம் சொன்னபடி கேட்காதா?

இரண்டாவது - நாம் விருந்தினராய் போகும் போது, செல்லும் இடங்களில் எல்லா வற்றையும் பாஸிடிவ்வாக நோக்க, மனதைப் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். அது மிகவும் கஷ்டமாக இருப்பின், உங்கள் மனத்தில் நல்ல தாய்த் தோன்றும் எண்ணங்களை மட்டுமே வெளிப்படுத்துங்கள். நெகடிவ்வான விமரிசனங் கள் வெறுப்பையே வளர்க்கும்.

"அண்ணி, உங்க மாதிரி கலகலப்பான குணம் யாருக்கு வரும்? பெங்களூர் வந்து ஒரு மாதம் ஆகலை. அதுக்குள் இவ்வளவு அழகா கன்னடம் பேசுகிறீர்களே!" என்றால், அவர் கள் மனது எப்படி இருக்கும்? அதை விட்டு,

"பாவம் அண்ணி, ரொம்ப வேலை ஜாஸ்தி போல. கிச்சன் சிங்க் கழுவவே இல்லை. இப்பத்தான் பிளீச்சிங் பவுடர் போட்டு கிளீன் செஞ்சுட்டு வந்தேன்" என்றால் அவர்கள் மனம் என்ன நினைக்கும்? ஒருவர் மேல் இரக் கப்படுவது போல் குத்திக் காட்டுதல், நாம் ஏதோ சுத்தத்தின் பிறப்பிடம் போல, அனுமதி யின்றி அடுத்தவர் வீட்டைப் போய்ச் சுத்தம் செய்தல் இவையனைத்தும் மனதை நோகச் செய்யும்.

அடுத்ததாக, மிகவும் உல்லாசமாக ஏதே னும் ஊர் சுற்றிப் பார்க்க வேண்டுமென்றால், உறவினர் இல்லாத இடத்திற்குச் சென்று, விடுதி யில் தங்கிக் கொண்டு சுற்றுங்கள். பணம் தண் ணீராய்த்தான் செலவழியும். கூழுக்கும் மீசைக் கும் சேர்த்து ஆசைப்பட முடியாது. ஆனால், பணம் அதிகம் செலவாகக் கூடாது. தங்க ஒரு நல்ல இடம் வேண்டும் என்ற எண் ணத்தில் உறவுகளின் வீடுகளில் சென்று தங்கு பவர்கள் அதை வீடாய் நினைக்காமல், லாட்ஜாக நினைக்க ஆரம்பித்தால் பிரச்னையே.

நமக்கு சாப்பாடு போட்டு, தங்க வைக்க அவர்கள் கடமைப்பட்டவர்கள் போல் நினைத் துக் கொண்டு, இஷ்டத்திற்கு வெளியே போவ தும் வருவதுமாக இருக்காதீர்கள். அவர்கள் வேலைகளில் ஓரளவு பங்குகொள்ளலாம். காய் கறி வெட்டித் தரலாம். பால் வாங்கி வரலாம். அவர்களையும் கூட்டிக் கொண்டு வெளியே போய் விட்டு வரலாம். வெளியே போய் வரும் போது அவர்கள் குழந்தைகளுக்கு சிறு பரிசுப் பொருளோ, தின்பண்டமோ வாங்கி வரலாம். ஏன், அவர்கள் அனுமதியுடன் ஒருநாள் முழு தும் அவர்களுக்கு ஓய்வு கொடுத்து விட்டு, நீங் களே ஏதேனும் வித்தியாசமாய்ச் சமைக்கவும் செய்யலாம்! விடுமுறை என்பது குழந்தை களுக்கு வேண்டு மானால், வெறும் கொண் டாட்டம். ஆனால், நமக்கு ஒரு மாறுதல்தானே?

கடைசியாக, முதலில் சொல்ல வேண்டிய ஒரு கருத்தைப் பகிர்ந்து கொள்கிறேன். நம் குழந் தைகள் வெளியிடங்களில் நடந்து கொள்ள வேண்டிய முறை. குழந்தைகளின் நடத்தை, கண்டிப்பாக, நம் வாழ்க்கை முறை யின் பிரதி பலிப்பே. சிறு வயதில் இருந்தே நல்ல பழக்க வழக்கங்கள் கற்றுக் கொடுக்கப் பட வேண்டும். மற்றவர் வீட்டில் போய், ஃப்ரிட்ஜ், டீவி போன்ற விலையுயர்ந்த பொருட்களை குடை தல், அந்த வீட்டுக் குழந்தைகள் பொக்கிஷம் போல் போற்றிப் பாதுகாத்து வரும் விளை யாட்டு சாமான்களை சண்டையிட்டு வாங்கு தல், உடைத்தல், 'எனக்கு இந்த உணவுப் பொருள்தான் இப்போது வேண்டும்' என்று அடம்பிடித்தல், பெரியவர்களை எதிர்த்துப் பேசுதல், கேள்வி கேட்டால் பதில் பேசாதிருத் தல், கோள் சொல்லுதல் போன்ற பழக்கங்கள் மிகவும் கண்டனத்துக்குரியவை. உடன் கண்டிக் கப்பட வேண்டியவை.

"பாவம், அதற்கு இரண்டரை வயதுதானே ஆகிறது? டீவி. விலை பற்றி அதுக்கென்ன தெரியும்?" என்ற ரீதியில் குழந்தைகள் பக்கம் பேசும் மாபெரும் தவறைப் பல பெற்றோர் செய்கிறார்கள். அந்தக் காலக் குழந்தையான அபிமன்யு தாயின் கர்ப்பத்தில் இருந்து கொண்டே சக்ர வியூகம் பற்றி அறிந்தான். இரண்டரை வயதில், "50 கிலோ தாஜ்மஹால் எனக்கே எனக்கா" என்று பாடும் குழந்தைக்கு, ஏன் பொருட்களின் அருமை மட்டும் விளங் காது? விளங்க வேண்டும்.


இதற்கு, ஒருநாள் கூத்துக்கு மீசை வைத்தது போல் நடந்து கொள்ளக் குழந்தைகளால் முடி யாது. அதனால்தான் எப்போதும் அவர் களைச் சரியான பாதையில் இட்டுச் செல்ல வேண்டும். பயணம் கிளம்பும் முன் இவ் விஷயங்களைச் சுருங்கக் கூறுவது இன்னும் பலன்தரும்.

நாம் நல்ல விருந்தாளியாக நடந்து கொண் டால், "இந்த லீவ் மட்டுமில்லை; இனி எல்லா விடுமுறைக்கும் நீங்கள் இங்கு வந்து எங்களு டன்தான் தங்க வேண்டும்" என்ற வர வேற்பு உங்கள் முன் தயாராக இருக்கும் - எப்போதும்.

— ரஞ்ஜனி த்யாகு

எலுமிச்சை மூடிகளை வெய்யிலில் உலர்த்தித் தூள் செய்து உப்பு, வற்றல் மிளகாய் (வறுக்காதது) பெருங்காயத் தூள் சேர்த்துப் பொடி செய்து வைத்துக் கொண்டால் தோசை இட்லி சாதத்துடன் எண்ணெய் ஊற்றிக் கலந்து சாப்பிடலாம்.

— ராஜி குருஸ்வாமி.



இம்மாத இல்லத்தரசி

பொருள் : பொங்கல்



ஸ்பெஷல் ஃப்ரூட் பொங்கல்

முதல் பரிசு



• வீ. சரஸ்வதி

தேவையான பொருட்கள் :

பச்சரிசி – 1 கப்,
ப. பருப்பு – ½ கப்,
ஜவ்வரிசி - ¼ கப்,
வெல்லம் – 1½ கப் (பொடித்தது),
அன்னாசி பழத்தின் ஜூஸ் – 1 டம்ளர்,
முந்திரி, ஏலம், திராட்சை – தேவைக்கேற்ப,
நெய் - 1 கப்,
கேசரி பவுடர் – 1 சிட்டிகை,
கருப்பு திராட்சை – 25,
சிட்லெஸ் திராட்சை – 25

செய்முறை :

பச்சரிசி, ப. பருப்பு இரண்டையும் கழுவி அத்துடன் ஜவ்வரிசியையும் சேர்த்து 4 கப் நீர் விட்டு அரை மணி நேரம் ஊறவிட்டு பிறகு குக்கரில் குழைய வேகவைத்துக் கொள்ளவும்.

நெய்யை வாணலியில் சூடாக்கி முந்திரி, திராட்சை, ஏலம் இவற்றை வறுத்துக் கொள்ளவும். ஏலக்காயை மட்டும் தனியே எடுத்து பவுடர் செய்து வைத்துக் கொள்ளவும்.

குக்கரின் உள்ளே உள்ள பொங்கலை பாத்திரத்தோடு

வெளியில் எடுத்து கரண்டியால் மசித்து விட்டு அதில் பொடித்த வெல்லத்தைப் போட்டு நேரடியாக அடுப்பில் வைத்து கிளறி விட்டுக் கொண்டே இருக்கவும். வெல்லம் கரைந்தவுடன் முந்திரி, திராட்சை, நெய், ஏலப் பொடி, கேசரி பவுடர், அன்னாசி பழ ஜூஸ் எல்லாவற்றையும் சேர்த்து நன்கு கிளறவும்.



கேஸை அணைத்து விட்டு பரிமாறும் போது கருப்பு, மற்றும் சீட்லெஸ் திராட்சை சேர்த்துச் சாப்பிடவும். இது சாப்பிட மிகவும் சுவையாக இருக்கும். பார்ப்பதற்கு மினுமினுவென்று வாயில் வைத்தவுடன் கரைந்து போகும். இந்த வருட ஆரம்பத்தில் இந்த "ஸ்பெஷல் ஸ்வீட் ஃப்ருட் பொங்கலை" செய்து உங்கள் வீட்டினரின் பாராட்டைப் பெற்ற 'ஸ்பெஷல் பொங்கலாக'க் கொண்டாடுங்கள்.

பின் குறிப்பு : விருப்பப்பட்டால் பசும் பால் அல்லது தேங்காய்ப் பால் சிறிது சேர்த்துக் கொள்ளலாம்.

2. அன்னாசிப் பழ ஜூஸுடன் சிறிது அன்னாசிப் பழ எஸென்ஸும் சேர்த்துக் கொள்ளலாம்.



3. ஜவ்வரிசி கொஞ்சம் சேர்த்துள்ளதால் பொங்கல் மினுமினுவென்று கண்ணாடி போல் மின்னுவதோடு சாப்பிடச் சுவையும் அபாரமாக இருக்கும்.

– சாந்தி மெல்கியோர்,
சென்னை – 36.

இரண்டாம் பரிசு

கோதுமை ரவை ஸ்வீட் பொங்கல்

தேவையான பொருட்கள்

கோதுமை ரவை – 1 கப்,
பால் – 4 கப்,
பாசிப் பருப்பு – ஒரு கைப்பிடி,
கடலைப் பருப்பு – ஒரு கைப்பிடி,
வெல்லம் (தூளாக்கியது) 2 கப்,
நெய் – ¾ கப்,
முந்திரி – 15,
ஏலக்காய் – 10,
கிஸ்மிஸ் – 25
ஜாதிக்காய் (நெய்யில் வறுத்துப் பொடி செய்தது) - ½ டீஸ்பூன்,
கேசரிப் பவுடர் – சிறிது.

செய்முறை

முதலில் பாசிப் பருப்பையும், கடலைப் பருப்பையும் வெறும் வாணலியில் போட்டுத் தனித்தனியாக சிவக்க வறுத்து எடுத்துக் கொள்ளவும். பின் கோதுமை ரவையை 2 டீஸ்பூன் நெய் விட்டு லேசாக வாசனை வரும் வரை வறுத்து எடுத்துக் கொள்ளவும். பாலைக் காய்ச்சி சூடான பாலில் வறுத்த கோதுமை ரவையைப் போட்டுக் கலந்து அப்படியே ஒரு காஸரோலில் கொட்டி 20 நிமிடங்களுக்கு மூடி வைக்கவும். அதற்குள் வறுத்த பருப்புகளை மிக்ஸியில் போட்டு நைஸாக அரைத்து சலித்து எடுத்துக் கொள்ளவும். முந்திரி, கிஸ்மிஸ் இவைகளையும் நெய்யில் வறுத்து ரெடியாக வைத்துக் கொள்ளவும். ஜாதிக்காயையும் சிறிது நெய்யில் வறுத்துப் பொடி பண்ணிக் கொள்ளவும். ஏலக்காயையும் பொடி பண்ணி வைத்துக் கொள்ளவும். இப்போது காஸரோலிலுள்ள ரவை முக்கால் பாகம் வெந்திருக்கும். இதை அப்படியே ஒரு பாத்திரத்தில் மாற்றிக் குக்கரில் மூன்று விசில் வரும் வரை வைக்கவும். நன்கு குழைந்து விடும். பின் அடி கனமான ஒரு பாத்திரத்தில் வெல்லத் தூளைப் போட்டு சிறிது ஜலம் விட்டுக் கரைய விடவும். பின்னர் கல் மண் போக வடிகட்டிக் கொண்டு பாகு நன்கு முற்றும் வரை காய்ச்சவும். பாகு முற்றியதும் வெந்த கோதுமை ரவையைக் கொட்டிச் சிறிது கேசரிப் பவுடர் சேர்த்துக் கிளறவும். பாசிப் பருப்பு, கடலைப் பருப்பு வறுத்து அரைத்த பொடியைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தூவி, நெய்யையும் சிறிது சிறிதாக ஊற்றிக் கிளறி, ஏலப்பொடி, ஜாதிக்காய்ப் பொடி, முந்திரி, கிஸ்மிஸ் இவற்றைப் போட்டு நன்கு கிளறி இறக்கவும். விருப்பப்பட்டால் இதை ஒரு தட்டில் கொட்டிப் பரத்தித் துண்டுகளாகவும் வெட்டிக் கொள்ளலாம். இது செய்வதற்கு சுலபமான, சுவையான, சத்தான பொங்கல்.



– வி. சரஸ்வதி, திருச்சி - 12.

மூன்றாம் பரிசு

பொங்கல்

தேவையான பொருட்கள் :
அரிசி - 250 கிராம்,
உ. பருப்பு - 150 கிராம்,
நெய் - 100 கிராம்,
மிளகு - 20,
சீரகம் - 2 டீஸ்பூன்,
பெருங்காயம் - தேவையானது,
உப்பு - தேவையானது,
கொப்பரை துருவினது - ½ கப்,
பால் - 200 கிராம்,
கருவேப்பிலை

செய்முறை :
கனமான பாத்திரத்தில் பாலுடன் கொஞ்சம் நீர் கலந்து அடுப்பில் வைத்து கொதி வரும் போது அரிசியைக் களைந்து போடவும். நெய்யில் உளுத்தம் பருப்பை பொன்னிறமாக வறுத்துக் கொண்டு அரிசி பாதி வெந்ததும் உ. பருப்பை போடவும். சாதம் குழைந்த பிறகு இறக்கி விடவும். பிறகு கொஞ்சம் நெய்யில் மிளகு, சீரகம், கொப்பரை இவைகளை பொங்கலில் சேர்த்து உப்பு, கருவேப்பிலை, பெருங்காயப் பொடி போட்டு நன்றாகக் கலக்கவும். முந்திரி பருப்பு வறுத்துப் போட அவசியமில்லை. இந்தப் பொங்கல் மேலக்கோட்டை பெருமாளுக்கு விசேஷ நிவேத்யம்.

- லக்ஷ்மி விஜயராகவன், மும்பை.

நான்காம் பரிசு

மசாலா மராட்டி பொங்கல்

தேவையான பொருட்கள் :
துவரம் பருப்பு - ஒரு கோப்பை,
அரிசி - 2 கோப்பை,
பூண்டு - 12 பற்கள்,
மிளகாய் வற்றல் - 12,
வெங்காயம் - 1 (பெரியது)
சீரகம் - 1 டீஸ்பூன்,
கடுகு - 1 டீஸ்பூன்,
கரம் மசாலா - 1 டீஸ்பூன்,
மஞ்சள் பொடி - அரை டீஸ்பூன்,
எண்ணெய் - 1 கோப்பை

செய்முறை :
பூண்டை உரித்துக் கொள்ளவும். உரித்ததை நறுக்கி, மிளகாய் வத்தலுடன்

இம்மாதம் சிறந்த சமையல் குறிப்புகளுக்காகப் பரிசு பெறும் இம்மாத இல்லத்தரசிகளுக்குப் பரிசு வழங்குபவர்கள்

டாட்டாவின்

சக்ரா கோல்ட் டீ

நிறுவனத்தினர்.

தங்கமயமான புத்தாண்டு வாழ்த்துக்களுடன் அவர்கள் வழங்குவது -

முதல் பரிசு	-	ரூ. 2000/-
இரண்டாம் பரிசு	-	ரூ. 1500/-
மூன்றாம் பரிசு	-	ரூ. 750/-
நான்காம் பரிசு	-	ரூ. 500/-
ஐந்தாம் பரிசு	-	ரூ. 250/-

சேர்த்து சின்ன மிக்ஸர் ஜாரில் அரைத்து எடுத்து வைத்துக் கொள்ளவும். வெங்காயத்தை நறுக்கி வைத்துக் கொள்ளவும். குக்கரில் ஒரு கோப்பை எண்ணெய் விடவும். கடுகு, சீரகம் போட்டு வெடித்ததும் பூண்டு, மிளகாய் வற்றல் விழுதைப் போட்டு வதக்கவும். வெங்காயம், மஞ்சள் பொடி, கரம் மசாலாவும் அதனுடனே சேர்த்து வதக்கவும். நன்றாக வாசனை வரும். 6 கோப்பை நீர் ஊற்றவும். அது கொதிப்பதற்குள் துவரம் பருப்பை களைந்து வைத்துக் கொள்ளவும். கொதிக்க ஆரம்பித்ததும் துவரம் பருப்பு போட்டு 3 டீஸ்பூன் உப்பு போடவும். அரிசியையும் களைந்து இப்பொழுது போடவும். நன்றாக கலந்து விட்டு குக்கரை மூடி விடவும். ஒரு விசில் வந்ததும், சிம்மில் அடுப்பை செய்யவும். ஐந்து நிமிடம் கழித்து அடுப்பை அணைக்கவும். ஒரு பத்து, பதினைந்து நிமிடம் கழித்து குக்கர் ஆறியவுடன் திறந்து பார்த்தால் கமகம மசாலாப் பொங்கல் ரெடி. இதைக் குழந்தைகள் மிகவும் விரும்பிச் சாப்பிடுவார்கள். செய்வதும் சுலபம். துவரம் பருப்பில் புரோட்டீன், அரிசியில் கார்போஹைட்ரேட் மற்றும் பூண்டு ஜீரணத்திற்கும், வாயுத் தொல்லைக்கும் உகந்ததாக இருப்பதால் இது ஒரு பரிபூரண ஆகாரம்.

– ஜெயஸ்ரீ சாய்நாத், புனே.

ஐந்தாம் பரிசு

ஜவ்வரிசி முத்துப் பொங்கல்

தேவையான பொருட்கள் :

ஜவ்வரிசி – 1 கப்,
பாம்பே ரவா – 1 கப்,
கோதுமை ரவா – 1 கப்,
பாசிப் பருப்பு – 1 கப்,
இஞ்சி – சிறு துண்டு,
கசகசா – ஒரு டீஸ்பூன்,
தேங்காய்த் துருவல் – அரை கப்,
மிளகு, சீரகம் – 2 டீஸ்பூன்,
பச்சை மிளகாய் – 2,
டால்டா – அரை கப்,
நெய் – 3 டீஸ்பூன்,
உப்பு – தேவைக்கேற்ப,
கருவேப்பிலை, கொத்தமல்லித் தழை – ஒரு கைப்பிடியளவு.

செய்முறை :

முதலில் ஜவ்வரிசியை சிறிது நேரம் வெதுவெதுப்பான நீரில் ஊறவைக்கவும். பின், வெறும் வாணலியை அடுப்பில் ஏற்றி பாம்பே ரவா, கோதுமை ரவா, பாசிப்பருப்பு இவற்றைத் தனித்தனியே பொன்னிறமாக வறுத்து எடுக்கவும்.

தேங்காய்த் துருவல், கசகசா, பச்சை மிளகாய், இஞ்சி இவற்றை அம்மியிலோ, மிக்ஸியிலோ போட்டு மை போல் அரைத்துக் கொள்ளவும்.

வாணலியில் அரை கப் டால்டா விட்டு காய்ந்ததும், மிளகு, சீரகம் போட்டு வெடித்ததும், முந்திரி பருப்பையும் ஒடித்துப் போட்டு பொன்னிறமாக வறுத்ததும், தேங்காய் விழுதைப் போட்டு இஞ்சி வாசம் வரும் வரை லேசாக வதக்கவும்.


பிறகு, ஊறவைத்த ஜவ்வரிசியை தண்ணீர் ஒட்ட பிழிந்து அதில் போடவும். பின், வறுத்து வைத்திருக்கும் ரவா, கோதுமை ரவா, பாசிப் பருப்பு இவற்றை ஒன்றன் பின் ஒன்றாகப் போட்டு வதக்கி தேவையான அளவு உப்பு சேர்த்து, நீரும் தேவையான அளவு இட்டு குக்கரில் நேரடியாகவோ, அல்லது பாத்திரத்தில் (வேறு) இட்டு, குக்கரில் இருபது நிமிடம் வேக விட்டு, இறக்கி ஆறியதும் எடுத்து, கொத்துமல்லித் தழை, கருவேப்பிலை சேர்த்து, அத்துடன் மூன்று டீஸ்பூன் நெய் சேர்த்து நன்கு கிளறி, பரிமாறவும்.

இதற்குத் தொட்டுக் கொள்ள தேங்காய்ச் சட்னியே போதுமானது. ருசி வெகு அருமை. சம்பா கோதுமை ரவைதான் உபயோகிக்கணும். அரிசி பொங்கலை விட இது ருசியாக, எல்லோரும் விரும்பிச் சாப்பிடுவதற்கு ஏற்றதாக இருக்கும். இடையிடையே ஜவ்வரிசி முத்து மாதிரி ஜொலித்துக் கொண்டு பார்க்க அழகாக இருப்பதைப் பார்த்தாலே எல்லோருக்கும் சாப்பிட ஆவலைத் தூண்டும்.

– எஸ். சுகந்தி சுந்தர்,
நாகப்பட்டினம் - 1.

எறும்புகள் ஊறும் இடங்களில் கற்பூரச் சூடம் போட்டால் அவை அறவே வராது.

– எல். எம். மங்கை



நூற்றாண்டுக் காலண்டர்

PERPETUAL CALENDAR

These charts enable you to find the day of the week in any year from 1753 through 2030.

FIRST : Under ***Years***, find the year you're interested in and note the letter that follows it.

SECOND : Under ***Months***, find the same letter, and note which number falls under the month you're looking for.

THIRD : Under ***The Seven Calendars*** use the calendar which bears the number you have just found.

Years

	1786G	1821A	1856I	1891D	1926E	1961G	1996H
	1787A	1822B	1857D	1892L	1927F	1962A	1997C
1753A	1788I	1823C	1858E	1893G	1928N	1963B	1998D
1754B	1789D	1824K	1859F	1894A	1929B	1964J	1999E
1755C	1790E	1825F	1860N	1895B	1930C	1965E	2000M
1756K	1791F	1826G	1861B	1896J	1931D	1966F	2001A
1757F	1792N	1827A	1862C	1897E	1932L	1967G	2002B
1758G	1793B	1828I	1863D	1898F	1933G	1968H	2003C
1759A	1794C	1829D	1864L	1899G	1934A	1969C	2004K
1760I	1795D	1830E	1865G	1900A	1935B	1970D	2005F
1761D	1796L	1831F	1866A	1901B	1936J	1971E	2006G
1762E	1797G	1832N	1867B	1902C	1937E	1972M	2007A
1763F	1798A	1833B	1868J	1903D	1938F	1973A	2008I
1764N	1799B	1834C	1869E	1904L	1939G	1974B	2009D
1765B	1800C	1835D	1870F	1905G	1940H	1975C	2010E
1766C	1801D	1836L	1871G	1906A	1941C	1976K	2011F
1767D	1802E	1837G	1872H	1907B	1942D	1977F	2012N
1768L	1803F	1838A	1873C	1908J	1943E	1978G	2013B
1769G	1804N	1839B	1874D	1909E	1944M	1979A	2014C
1770A	1805B	1840J	1875E	1910F	1945A	1980I	2015D
1771B	1806C	1841E	1876M	1911G	1946B	1981D	2016L
1772J	1807D	1842F	1877A	1912N	1947C	1982E	2017G
1773E	1808L	1843G	1878B	1913C	1948K	1983F	2018A
1774F	1809G	1844N	1879C	1914D	1949F	1984N	2019B
1775G	1810A	1845C	1880K	1915E	1950G	1985B	2020J
1776H	1811B	1846D	1881F	1916M	1951A	1986C	2021E
1777C	1812J	1847E	1882G	1917A	1952I	1987D	2022F
1778D	1813E	1848M	1883A	1918B	1953D	1988L	2023G
1779E	1814F	1849A	1884I	1919C	1954E	1989G	2024H
1780M	1815G	1850B	1885D	1920K	1955F	1990A	2025C
1781A	1816H	1851C	1886E	1921F	1956N	1991B	2026D
1782B	1817C	1852K	1887F	1922G	1957B	1992J	2027E
1783C	1818D	1853F	1888N	1923A	1958C	1993E	2028M
1784K	1819E	1854G	1889B	1924I	1959D	1994F	2029A
1785F	1820M	1855A	1890C	1925D	1960L	1995G	2030B

Months

	Jan.	Feb	Mar.	April	May	June	July	Aug	Sept.	Oct.	Nov.	Dec.
A	1	4	4	7	2	5	7	3	6	1	4	6
B	2	5	5	1	3	6	1	4	7	2	5	7
C	3	6	6	2	4	7	2	5	1	3	6	1
D	4	7	7	3	5	1	3	6	2	4	7	2
E	5	1	1	4	6	2	4	7	3	5	1	3
F	6	2	2	5	7	3	5	1	4	6	2	4
G	7	3	3	6	1	4	6	2	5	7	3	5
H	1	4	5	1	3	6	1	4	7	2	5	7
I	2	5	6	2	4	7	2	5	1	3	6	1
J	3	6	7	3	5	1	3	6	2	4	7	2
K	4	7	1	4	6	2	4	7	3	5	1	3
L	5	1	2	5	7	3	5	1	4	6	2	4
M	6	2	3	6	1	4	6	2	5	7	3	5
N	7	3	4	7	2	5	7	3	6	1	4	6


The Seven Calendars

	1	2	3	4	5	6	7
Monday	1						
Tuesday	2	1					
Wednesday	3	2	1				
Thursday	4	3	2	1			
Friday	5	4	3	2	1		
Saturday	6	5	4	3	2	1	
SUNDAY	7	6	5	4	3	2	1
Monday	8	7	6	5	4	3	2
Tuesday	9	8	7	6	5	4	3
Wednesday	10	9	8	7	6	5	4
Thursday	11	10	9	8	7	6	5
Friday	12	11	10	9	8	7	6
Saturday	13	12	11	10	9	8	7
SUNDAY	14	13	12	11	10	9	8
Monday	15	14	13	12	11	10	9
Tuesday	16	15	14	13	12	11	10
Wednesday	17	16	15	14	13	12	11
Thursday	18	17	16	15	14	13	12
Friday	19	18	17	16	15	14	13
Saturday	20	19	18	17	16	15	14
SUNDAY	21	20	19	18	17	16	15
Monday	22	21	20	19	18	17	16
Tuesday	23	22	21	20	19	18	17
Wednesday	24	23	22	21	20	19	18
Thursday	25	24	23	22	21	20	19
Friday	26	25	24	23	22	21	20
Saturday	27	26	25	24	23	22	21
SUNDAY	28	27	26	25	24	23	22
Monday	29	28	27	26	25	24	23
Tuesday	30	29	28	27	26	25	24
Wednesday	31	30	29	28	27	26	25
Thursday		31	30	29	28	27	26
Friday			31	30	29	28	27
Saturday				31	30	29	28
SUNDAY					31	30	29
Monday						31	30
Tuesday							31

கடந்த, வரப் போகும், பல ஆண்டுகளில் ஒரு குறிப்பிட்ட ஆண்டு, மாதத்தின் காலண்டர் தான் நமக்குத் தேவைப்பட்டால் கிடைப்பது அரிது. இதற்கென ஒரு சில நிரந்தர காலண்டர்கள் (perpetual calendars) உள்ளன.

இத்துடன் இணைத்துள்ள நிரந்தர காலண்டரில் கி.பி. 1753 முதல் 2030 வரை எந்த ஒரு மாதமும் எந்தக் கிழமையில் துவங்கியது/துவங்கும் என்பதை சில வினாடிகளிலேயே மிக எளிதாகக் கண்டு பிடித்து விடலாம். வணிகத் துறையில் பயில்பவர்கள், ஈடுபட்டிருப்பவர்கள் மற்றும் குடும்பத் தலைவிகளுக்குக்கூட ஏதோ ஒரு பழைய நாளை நினைத்துப் பார்க்க அல்லது புதிய காலண்டர் வரும்முன் அடுத்த ஆண்டில் ஒரு நாளைக் கணக்கிட இது நிரந்தரமாக உதவும்.

பயன்படுத்தும் முறை அதிலேயே உள்ளது. ஒரு உதாரணம் மூலம் விளக்கினால் புரிந்து கொள்ள எளிதாக இருக்கும். நாம் சமீபத்தில் சுழற்றிய 1998 காலண்டரில் மார்ச் மாதத்தை உதாரணமாக எடுத்துக்



சென்ற இதழில் "வீட்டுக்குள் தோட்டம்" பகுதியில், தென்னை ஸ்பெஷலில் "காண்டா மிருக வண்டுகள்" அழிப்பதைப் பற்றி கூறிய அறிவுரைகள் சரியே! ஆனால் நூற்றுக்கணக்கான தென்னை மரங்கள் வைத்திருப்பவருக்குச் சுலபமான வழியுண்டு.

எனக்கு தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் 125 தென்னை மரங்கள் உள்ளன. இதில் 5,6 வருஷ இள மரங்கள் பல வண்டுகளால் பாதிக்கப்பட்டன. அப்பொழுது ஒரு நண்பர் கூறிய யோசனையின்படி பின்வருமாறு செய்தேன்.

20 லிட்டர் கொள்ளக்கூடிய இரண்டு மண்பானைகள் வாங்கினேன். தோட்டத்தில் 30 மீட்டர் தொலைவில் இரண்டு பானைகளையும் தரையில் பாதியளவு புதைத்துவிட்டு, ஒவ்வொரு பானையிலும் முக்கால் பகுதி (அதாவது 12 முதல் 15 லிட்டர்) வரையில் தண்ணீர் ஊற்றினேன். பிறகு ஒவ்வொரு பானையிலும் ஒரு கிலோ ஆமணக்கு புண்ணாக்கு வாங்கித் தூளாக்கி அந்தப் பானைகளில் போட்டு கலக்கி விட்டேன். 2, 3 நாட்களில் அந்தப் பானைகளில் இருந்து ஒருவித வாசனை வந்தது. அந்த வாசனையால் ஈர்க்கப்பட்டு தோட்டத்திலுள்ள அத்தனை வண்டுகளும், பானைக்குள் வந்து விழுந்து மாண்டன. ஒரு வாரம் கழித்துப் பார்த்தால் நூற்றுக்கணக்கான வண்டுகள் மிதந்தன. பானையில் தண்ணீர் அளவு மாத்திரம் வண்டுகள் வெளியே வராதபடி 15 சென்டி மீட்டராவது உள்ளே இருக்க வேண்டும். அனைத்து வண்டுகளும் அழிந்து விடும். மறுபடியும் புது வண்டுகள் வருமாயின் 3 மாதத்துக்கு ஒருமுறை இவ்வாறு செய்யலாம். இதைப் போன்ற சுலபமான சிக்கனமான முறை எதுவுமில்லை.

— வே. நடராஜன்

கொண்டால் சரி பார்ப்பது எளிதாக இருக்கும்.

முதல் படி: ஆண்டுகள் என்ற தலைப்பில் உங்களுக்குத் தேவையான ஆண்டையும் அதையடுத்து எந்த ஆங்கில எழுத்து உள்ளது என்பதையும் கவனியுங்கள். 1998ன் எழுத்து D ஆகும்.

இரண்டாம் படி: மாதங்கள் என்ற தலைப்பில் D என்ற எழுத்துக்கு எதிராக 4.7.7 போன்ற எண்கள் உள்ளன அல்லவா? இவற்றில் மார்ச் என்ற தலைப்பின் நேர் கீழே (Dக்கு எதிராக) உள்ள எண் 7.

மூன்றாம்படி: ஏழுவித காலண்டர்கள் என்ற தலைப்பின் கீழ் மேற்கூறிய 7 என்ற எண்ணின் கீழ் பார்க்கவும். ஞாயிற்றுக் கிழமையில் முதல் தேதி (மாதம்) பிறக்கிறது.

(மேலிருந்து கீழ்) அவ்வரிசையே 1998 மார்ச் மாதத்தின் காலண்டர் ஆகும். விளக்க இவ்வளவு நேரம் ஆகிறதே தவிர புரிந்து கொண்டால் பார்க்க சில வினாடிகளே ஆகும். (எல்லா எண்களின் கீழும் 31 தேதிகளும் தரப்பட்டிருக்கும். பிப்ரவரி, மார்ச், ஏப்ரலுக்கு எத்தனை நாட்கள் என்று நமக்குத் தெரியுமே!)

— அ. ஷண்முகசுந்தரம்

நியூஸ் சாலட்

● இரண்டாவது சுற்றுத் தாக்குதலை அமெரிக்கா ஈராக் மீது நடத்தியுள்ளது. ஐ.நா. சபையின் ஒழுங்குமுறைப்படி ஈராக்கின் சில இடங்களின் மீது விமானங்கள் பறப்பதற்குத் தடை உண்டு. இந்தப் பகுதிகளின் மீது அமெரிக்க விமானங்கள் பறக்க, ஈராக் அவற்றின் மீது ஏவுகணைகளை வீசின. "தற்காப்பு நடவடிக்கை" என்று காரணம் காட்டி அமெரிக்காவின் விமானப் படை ஈராக் நாட்டின் மீது குண்டு மழை பொழிந்தது. அம்மான் நகரில் நடைபெற்ற அரபு நாடுகள் கூட்டமைப்பு அமெரிக்காவின் தாக்குதலைக் கடுமையாக கண்டனம் செய்துள்ளது.



• கிளிண்டன்

● தனுஷ்கோடிக்கும், இலங்கை தலைமன்னாருக்கும் இடையில் உள்ள கடல் பகுதியில் நிறைய பாறைகள் உண்டு. இவற்றை அகற்றி கடலை ஆழப்படுத்தினால் மேற்கு மற்றும் கிழக்கு கடற்படைப் பகுதிகளைக் கப்பல்கள் குறைந்த நேரத்திலேயே அடைய முடியும் (இப்போது இலங்கையைச் சுற்றித்தான் செல்ல வேண்டும் என்கிற அவசியம்). இதற்காக உருவாக்கப்பட்ட சேது சமுத்திர திட்டப் பணிகள் சீக்கிரமே தொடங்கும் என்று மத்திய அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் அறிவித்திருக்கிறார்.

● ஷேர்ன் வார்ன், மார்க் வாக் ஆகிய ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள் பெட்டிங் ஏஜெண்டுகளிடமிருந்து பணம் பெற்றதாக ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் சர்வதேசப் பந்தயங்களில் ஆடுவதற்கு தடைவிதிக்கப்பட வேண்டும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் போர்ட் தலைவர் காலித் மெஹ்மூத் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறார்.

● 'சக்திமான்' தொலைக்காட்சித் தொடர் சிறுவர்களிடையே மிகவும் பிரபலமடைந்திருக்கிறது. ஆனால் தீ வைத்துக் கொண்டும், மாடியிலிருந்து குதித்தும் சில சிறுவர்கள் இறந்ததைத் தொடர்ந்து (தொலைக்காட்சித் தொடரில் இதுபோன்ற சம்பவங்கள் நடக்கும் போது சக்திமான் எப்படியாவது காப்பாற்றி விடுவார்!) இந்தத் தொடரை தடைசெய்ய வேண்டும் என்ற கோஷம் பாராளு மன்றத்திலேயே எழத்



• ஷேர்ன் வார்ன்

• மார்க்வாக்


தொடங்கியிருக்கிறது.

● 'ஐ லவ் யூ டீச்சர்' என்ற திரைப்படத்தைத் தடைசெய்ய வேண்டும் என்று தமிழக பிஜேபி மகளிர் அணி அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. தலைப்பும் படமும் ஆசிரியர்களை அவமானப்படுத்துவது போல் இருக்கிறதாம். திரைப்படத் தணிக்கைக் குழு இந்தத் தலைப்பை அனுமதித்து எப்படி என்ற கேள்வியும் எழுப்பப்பட்டிருக்கிறது.

● இந்திய கடற்படை தளபதி அட்மிரல் விஷ்ணுபகவத் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டார். அந்த இடத்தில் சுஷில் குமார் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். சுதந்திர இந்தியாவில் படைத் தளபதி நீக்கப்பட்டது இதுவே முதல் முறை. "இதுவரை கடைப்பிடிக்கப்பட்டு வந்ர வழிமுறைகளை மீறினார்" என்று மத்திய அரசு கூற, "நான் அரசியல் சட்டப்படிதான் நடந்து கொண்டேன்" என்று பத்திரிகையாளர்களிடம் கூறியுள்ளார் விஷ்ணு பகவத்.

● தமிழக அரசின் கூட்டுறவுத் துறை சார்பில் "மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம்" நடைமுறைக்கு வந்திருக்கிறது. இதன் தொடக்க நிகழ்ச்சியில் "ஆண்களில் பலர் கடனைத் திருப்பித் தருவதில்லை. காரணம், மது, சீட்டு போன்ற பழக்கங்களில் அவர்கள் வருவாயைச் செலவு செய்து விடுவதுதான். பெண்களைப் பொறுத்தவரை நூற்றுக்கு 99 சதவிகிதம் பேர் கடனைத் திருப்பிச் செலுத்தி விடுவார்கள்" என்றார் முதல்வர் கருணாநிதி.

● எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகள் டெஸ்ட் தொடர் ஒன்றில் மோதுகின்றன. எதிரி நாட்டுக்காரர்கள் இங்கு வந்து ஆடத் தேவையில்லை என்று சிவசேனா தலைவர் பால்தாக்கரே அறிவிக்க, அவரது தொண்டர்களில் சிலர் டெல்லி கிரிக்கெட் மைதானத்தில் உள்ள 'பிட்சை' சேதப்படுத்தினார்கள். என்றாலும் விளையாட்டையும் அரசியலையும் இணைப்பது சரியல்ல என்று பெரும்பாலான அரசியல் கட்சிகள் குரல்கொடுக்க, பந்தயங்கள் திட்டமிட்டபடி நடைபெறும் சூழல் உருவாகியுள்ளது.






● ஐம்பத்தாறு வயது பிர்ஜுசிங்குக்கு மிகப் பழங்கால மோட்டர் பைக்குகளை சேகரிப்பதுதான் பொழுதுபோக்கு. படத்தில் அவர் தூக்கிக் கொண்டிருக்கும் மோட்டர் பைக்கிற்கு பிரேக் மட்டும்தான் உண்டு. 1944 மாடலான இதை இரண்டாம் உலகப் போரின் போது பிரிட்டிஷ் ராணுவத்தினர் பயன்படுத்தினராம்!

● கிளின்டன் - மோனிகா விவகாரத்தை எப்படியெல்லாம் வித்தியாசமாகவும், கிளுகிளுப்பாகவும் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதில் பயங்கர போட்டி. அமெரிக்காவில் சமீபத்தில் வெளியாகியுள்ள 'கண்ணாடி வீடுகள்' என்ற புத்தகம் கிளின்டனைக் குற்றம்சாட்டும் எதிர்கட்சியினர் என்னென்ன காம விளையாட்டுகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை விளக்குகிறது.

தொகுப்பு : **ஜி.எஸ்.எஸ்.**



நானும் கணு பொங்கல் கொண்டாடினேன்!

என்னைப் போன்று ஒரு சோம்பேறியும், எதற்கெடுத்தாலும் விதண்டாவாதம் பண்ணு பவளுமாக (1986-ம் வருடம் வரை) யாரும் இருந்திருக்க மாட்டார்கள். ஒவ்வொரு வருட மும் கணுப் பொங்கல் அன்று காக்கா பிடி வைக்கச் சொல்லி என் அம்மா ஒரே பெண்ணான என்னை வற்புறுத்தும் பொழு தும், "போம்மா எனக்கு அண்ணன் தம்பி களும் இல்லை, யாரும் என்னிடம் அக்கா, தங்கையாக நடந்து கொள்வதும் இல்லை" என்று சொல்லி காலை ஒன்பது மணி வரை இழுத்துப் போர்த்திக் கொண்டு கணுப் பொங் கல் அன்று தூங்குவேன். ஆனால்,

1987-ம் ஆண்டு நான் தனியாக சுற்றுலா செல்லப் பயணப்பட்டேன். என்னுடைய திட்டம் டெல்லி வரை தனியாக டிரெயினில் செல்வது. அங்கிருந்து டிராவல்ஸ் மூலம் செல்வதாக முடிவு பண்ணிக் கொண்டேன். டெல்லியில் இருந்து கிளம்பும் ஒரு டிராவல்ஸ் மூலமாக, பத்ரிநாத், கேதார்நாத் செல்ல பணம் அனுப்பி டிக்கெட் புக் பண்ணிக் கொண்டு திருச்சியில் இருந்து சென்னை சென்று டிராவல்ஸில் கலந்து கொண்டு அவர்களுடைய துணையால் என்னு டைய டிரிப்பையும் நல்லபடியாக முடித்தேன். என்(துர்)அதிர்ஷ்டம் நான் சென்னை திரும்ப டிக்கெட் புக் பண்ணி இருக்கும் நாளுக்கு ஒரு நாள் முன்னர் டெல்லி கொண்டு வந்து சேர்த்து விட்டனர்.

எனக்கு டெல்லியில் உறவினர், நண்பர்கள் வீடு இல்லாததால் அந்த ஒரு நாளை ஏன் வேஸ்ட் பண்ணு வானேன் என்று காலை ஆறு மணிக்குக் கிளம்பும் பிருந்தாவன், ஆக்ரா டூர் செல்லும் பஸ்ஸுக்கு புக் பண்ணிக் கொண்டேன். அன்று என்ன பஸ் லேட்டாகக் கொண்டு சேர்த்தாலும் மறுநாள் காலை சென்னை செல்லும் டிரெயினை பிடித்து விடலாம் என்ற தைரியம்.

காலை செல்லும் டூருக்குக் கொஞ்சம் பிஸ்கட், பிரெட், ஜாம் என வாங்கி பேக் பண்ணிக் கொண்டு பஸ் ஏறி விட்டேன். எனக்கோ ஹிந்தி பேசத் தெரியாது. புரிந்து கொள்ள மட்டும்தான் தெரியும். தமிழ் குடும் பங்கள் வந்ததால் கேதார் டூர் இனிது முடிந் தது. ஆனால் இந்த ஒருநாள் டூரில் எல்லாரும் வேறு பாஷை பேசுபவர்கள். நிறைய ஹனி மூன் தம்பதிகள்தான். ஆனாலும் மதுரா, யமுனா நதி இவைகளைக் கண்டு மகிழ்ந்து, கண்ணன் லீலைகள் செய்த இடங்களை ரசித்துக் கொண்டு மனம் இன்பத்தில் மூழ்கி யதில் மற்ற கஷ்டங்கள் எனக்குப் பெரிதாக தெரியவில்லை. மதியம் மூன்று மணிக்கு, எங்கள் பஸ் ஆக்ராவில் வந்து நின்றது. அன்று வெள்ளிக் கிழமை. தாஜ்மஹால் செல்ல டிக்கெட் கிடையாது. பஸ் இங்கேயே நிற்கும், எல்லோரும் பார்த்து விட்டு வாருங்கள் என்று கூறினார்.

நானும் உள்ளே நடந்து சென்றேன். அன்று நமாஸ் முடிந்து மக்கள் கூட்டமாக திரும்பிக் கொண் டிருந்தனர். அவர்களை எதிர்த் துக் கொண்டு என்னால் வேகமாக செல்ல முடிய வில்லை. நிறைய டூரிஸ்ட் பஸ் வேறு வந்து உள்ளே கூட்டமாக நுழைகின்றனர். (என் னோடு டூர் வந்த சிகப்புக் கட்டம் போட்ட சட்டையும், மஞ்சள் குடிதார் அணிந்த தம்பதி கள்தான் எனக்கு

லைட் ஹவுஸ்ஸாகப்படுவார்கள்.) அவர்கள் ரிக்ஷாவில் சென்று விட்டனர்.

ஒருவழியாக கூட்டத்தினூடே புகுந்து உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹாலை நெருங்கினேன். ஆகா என்ன அழகு. என்ன அற்புதம். என் கண்கள் இமைக்க மறந்தன. எப்பொழுதும் சில வீடுகளில் நெட்டியில் ஷோகேஸில் இருக்கும் தாஜ்மஹாலையும், போட்டோவில் பார்க்கும் தாஜ்மஹாலில் இருக்கும் பிம்பத்தையும் பார்த்து மகிழ்ந்த எனக்கு அதை நேரில் பார்த்து அதன் பிரம்மாண்டம் அழகு. வெண்மை ஆஹா. அங்கு நின்று கொண்டு அந்த யமுனை நதி அடடா... ஒரு ஆண் மகனிடம் அவன் அன்பைப் பெறுவது என்பது, நாமெல்லாம் கூட பெறுகின்றோம். அன்பினை ஏன் சில நாட்கள் துன்பங்களையும் கூட பெறுகின்றோம். இப்படி ஒரு மஹால் அவளுக்காக அவன் கட்ட வேண்டுமென்றால் அவள் என்ன பாக்கியம் செய்திருக்க வேண்டும். எப்படி அப்படி ஒரு அன்பை அவள் பெற சாத்யமாயிற்று என்று வியந்து என்னை மறந்தேன்.

என் சுயநினைவு வந்து, பஸ் இருக்கும் இடம் வந்து பஸ்ஸைப் பார்த்தால், பஸ்ஸும் இல்லை. என்னுடன் பிரயாணம் செய்த யாரும் இல்லை. (என்னுடைய லைட் ஹவுஸான சிகப்பு சட்டை மஞ்சள் சுடிதார் தம்பதிகளும் இல்லை.) அப்பொழுதுதான், என் நிலைமையை உணர்ந்தேன். பஸ்ஸை மிஸ் பண்ணி விட்டேன். அவர்கள் சுற்றிப் பார்க்க கொடுத்த நேரத்தை விட அதிக நேரம் நான் எடுத்துக் கொண்டு விட்டதால் என்னை விட்டுவிட்டு பஸ் சென்று விட்டது. நினைக்கவே குலை நடுங்கியது.

சென்னைக்கு ரிட்டர்ன் டிக்கெட் புக் பண்ணி விட்டதால் டிரெயின் செலவுக்கு இன்னும் ரூ. 110தான் இருக்கிறது. நாளை காலை 5:30 மணிக்கு டிரெயின். ஹிந்தி பேசவோ நன்றாகத் தெரியாது. இந்த நான்கு காட்சியும் ஆக்ஷன் ரீப்ளே மாதிரி திரும்பத் திரும்ப என் நினைவில் ஸ்லோமோஷனில் வந்து என் கால்கள் நடுங்குகின்றன. மனதினில் "பராசக்தி வல்லமை தா. தைர்யலக்ஷ்மி எனக்கு உதவி செய்" என மனதில் தியானித்துக் கொண்டு அருகில் இருந்த டாக்ஸி ஸ்டாண்டுக்கு சென்று டாக்ஸியில் உறங்கிக் கொண்டு இருந்த சர்தார்ஜியைத் தொட்டு எழுப்பி என்னுடைய டிக்கெட்டை (பஸ்ஸுடையது) காட்டி பாதி ஆங்கிலம் பாதி ஹிந்தியில் என் நிலைமையை எடுத்துக் கூறினேன்.

அவருக்கு நான் கூறியது என்ன புரிந்ததோ, டாக்ஸி பின் கதவை திறந்து, "பைட்டியே"

இம்மாத இல்லத்தரசி

சமையல் கூப்பன்

பொருள் : சுற்றுலா உணவு *கடைசி தேதி : 15.2.99*

என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இதனுடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

என்றார். ஏதோ தைரியத்தில் தனியாக உட்கார்ந்து விட்டேன். சிட்டியைத் தாண்டி டாக்ஸி தனி ரோடில் செல்கிறது. அங்கொன்று இங்கொன்றாக வாகனம் வருகின்றன. மனம் என்னும் குரங்கு இருக்கின்றதே 'ஐய்ய்யோ அது என்னன்ன யோசனை செய்கிறது. மூளை கெட்டதனமா இவனைப் புடிச்சியே, அவன் எங்க டாக்ஸியை விட்டுண்டு போறான் தெரியுமா? அவன் என்னமோ கேட்டுட்டு சிரிக்கிறானே? நாளை டிரெயினை புடிக்க முடியுமா? இவனுடைய உருவம் என்ன, சப்பாத்தி பலமும் என்ன நம்மைப் பூன்னு ஊதிட மாட்டானா?' பண்ணிய குருட்டு யோசனைக்கும் மனப் பதட்டத்துக்கும் அளவே இல்லை. ஏதோ தப்பு பண்ணிட்டேன்...

என் எதிரில் நிறைய பஸ்கள் வருகின்றன. என்ன ஊர் என்று கடைகளில் உள்ள போர்டை பார்க்க, ஜன்னல் வழியாக தலையை நீட்ட, டாக்ஸி ஒரு டைவ் அடித்துத் திரும்பியது. பாவி என்ன வேகமா திருப்பறான். சீட்டில் விழுந்து நான் எழுந்ததும், டாக்ஸியை நிறுத்தி என் டிரைவர் இறங்கி, என் சீட்டின் கதவைத் திறந்து விட்டான். இறங்கினால் பல டூரிஸ்ட் பஸ்ஸுகளுடன் என் பஸ்ஸும் நின்றது. ஈவினிங் டீக்காக பஸ் வழக்கமாக நிற்கும் ரெஸ்டாரண்ட் போல இருக்கிறது. அப்பா என்னுடைய பஸ்! அப்படியே மீட்டர் சார்ஜ்ஜை பார்க்கின்றேன் ரூ. 550/- என் கைப் பையைத் திறந்து அப்படியே கொட்டி என்னிடம் இருந்த ரூ.110.80 பைசாவை சர்தார்ஜியிடம் நீட்டினேன். கண்களில் நன்றியுடன் அவர் அப் பணத்தைப் பெற்றுக் கொண்டு என்னுடைய கைப் பையிலே போட்டு ஜிப்பை மூடி "பஹன்ஜி டரோ மத் (சகோதரி பயப்படாதே)" என்று கூறி என்னை அணைத்து பஸ்ஸில் ஏற்றி விட்டு பர்ஸையும் கொடுத்து அந்த பஸ் டிரைவரிடமும் ஹிந்தியில் புதிதாக வருபவர்களிடம் இப்படிதான் நடந்து கொள்வதா என்பது போல் கடிந்து கொண்டார்.

பஸ் புறப்பட்டது. கண்களில் நீருடன் கை கூப்பி நான் "ஆப்கா நாம்?" என்றேன். தன்னுடைய பெரிய மீசையை நீண்ட புன் சிரிப்புடன் தடவிக் கொண்டே "அர்ஜுன் சிங்" என்று கூறி விட்டு பஸ் கிளம்பும் வரை நின்று கை ஆட்டினார்.

திருச்சி திரும்பியவுடன் மீட்டர் சார்ஜ் ரூ. 550/-க்கு டிராப்டும், என்னுடைய தோழியிடம் சொல்லி ஹிந்தியில் ஒரு சின்ன கடிதமும் பாயி அர்ஜுன் சிங், டாக்ஸி டிரைவர் opposite to Tajmahal Taxi stand, Agra என்ற முகவரிக்கு அனுப்பினேன்.

பத்து நாட்களில் ஆக்ராவில் இருந்து "என்னுடைய சகோதரிக்கு என்னால் முடிந்த (கடமை) உதவி நன்றி'' என்று எழுதி டிராப்டை திரும்ப அனுப்பியிருந்தார் என்னுடைய உடன்பிறவா சகோதரர்.


அந்த ஆண்டு கனுவன்று சீக்கிரம் எழுந்து கனுக்கு ரெடி பண்ணிய என்னை பார்த்து என் அம்மா ஆச்சரியமடைந்து "இப்பவாவது நீ புரிந்து கொண்டாயே!" என்றார். கடந்த பத்து ஆண்டுகளாக என் உடன் பிறவா சகோதரன் அர்ஜுன் சிங்கிற்கு நானும் கனு வைக்கின்றேன் கண்களில் ஆனந்தக் கண்ணீருடன். காக்காபிடி வைத்துத் தலை நிமிரும் போது தன் நீண்ட மீசையை தடவிக் கொண்டு சிரித்துக் கொண்டே "டரோமத் பஹன்ஜி" என்று கூறும் அவர் தோற்றம் என் கண்முன்னே வருகின்றது.

— ரம்யாமகேஷ்

ஆப்பிள் அல்வா:

இதற்கு விலை குறைந்த ஆப்பிளை உபயோகிக்கலாம். தோலெடுத்த ஆப்பிள் கூழில் சமனாக சர்க்கரையைச் சேர்த்துக் கிளறிக் கொண்டிருக்க வேண்டும். பிறகு பாதாம் மில்க் பவுடர் மிக்ஸ் (நிறைய பிராண்ட் பெயரில் கிடைக்கிறது.) ஒரு கரண்டி முழுவதும் சேர்த்துக் கிளறவும். ஏலக்காய்த் தூள் சேர்க்கவும். வேண்டுமானால் பிஸ்தா, சாரைப் பருப்பைச் சேர்க்கலாம். நன்றாகத் திரண்டு வாணலியை விட்டு வரும்பொழுது தட்டில் கொட்டவும். இதுவே ஆப்பிள் அல்வா.

– ஸ்ரீமதி த்வாரகாநாத்



திருமணமலர்

மணமகள் தேவை

■ Vadamal, Bharadwajam, Ayilyam, 43/170 cms/ 10,000/- employed in SBI, seeks employed/unemployed graduate girl. Reply with horoscope. Box No. 15400

■ இந்து, வயது 35, 165 செ.மீ. சொந்த வேலை துர் அதிர்ஷ்டவசமாக ஆண்மையிழந்த, மணமாகாத வாலிபனுக்கு சிற்றின்பத்தில் விருப்பமில்லாத வாழ்க்கைத் துணைவி தேவை. விவாகரத்தானவர்களும், விதவைகளும், குழந்தை உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். ஜாதி மத பேதமில்லை. பெட்டி எண் : 15401

■ Vadamal, Bharadwajam, Maham, 34/163 cms, Rs. 8000/- M.Com employed in private company, seeks employed/unemployed graduate girl. Reply with horoscope. Box No. 15402

■ IyerVadama, Gargi Gothram, Bharani, 33/167/6000/ - B.Sc., PGDMM, boy, employed in limited company in Chennai, seeks suitable bride. Subsect acceptable. Box No. 15405

■ Tamil Iyer, Vadamal, Vadhoolam, Makam, 30/ 31.3.1969/B.Com/180 cms wheatish, well built, own established branded food products business Bangalore own flat, only son, needs suitable bride industrious and interested in business activities. Telephone Bangalore 6675201. Box No. 15406

■ தென்கலை ஐயங்கார் வயது 34, எஸ்.எஸ்.எல்.சி, ஸ்ரீவத்ஸ கோத்திரம், சென்னையில் சொந்த வீடு, சுய தொழில் மாத வருமானம் ரூ. 2500/- உள்ள வரனுக்கு குடும்பப்பாங்கான பெண் தேவை. அணுகவும். பெட்டி எண் : 15407

■ Vanniyakula Kshatriya, 26/5.11" handsome BEAnna University with Microsoft certifications MCP, MCPS, MCSE + internet database analyst USA $90,000 seeks well placed very fair, homely, smart BE/PG girl below 23. Chennai residents only. Horoscope, bio-data to Box No. 15408

■ Kousika, Vadama, Poosam, 27/172/8000/- fair, handsome, +2 computer diploma boy working in Thane reputed company, own flat, seeks employed Mumbai based bride. Box No. 15409

■ Vadamal, Iyer, Bharadwaja, Bharani, MBA, 34, having own business and employed, seeks good looking bride from decent family. Subsect no bar. Reply with horoscope. Box No. 15410

■ Iyer, Vadamal, Kousikam, 32, B.Sc., PGDMM, (MBA) Gazatted A class officer (SPO) in Border Security Force, Delhi, non-transferable requires professionally qualified, fair looking girls, good family background. Contact Box No. 15411

■ Alliance for Vadama, Athreya, Tamil Iyer, Anusham, 36/165 MBA, salary 14,000/- from Vadama, Brahacharanam Iyer graduate girls, good looking from respectable family. Send horoscopes with family details. Box No. 15412

■ தேவாங்கு செட்டியார், வயது 28, எம்.ஏ. (பார்வை குறைவுள்ள) அரசு வங்கியில் பணிபுரியும் டாக்டர் மகனுக்கு 26 வயதுக்குட்பட்ட குறைந்தபட்சம் +2 படித்த நல்ல குடும்பப்பாங்கான மணமகள் தேவை. பெட்டி எண் : 15413

■ Ashtasahasram, Iyer, Haritha, Punarpusam, 28/165/ 8000/- graduate, Birla Company, Hosur (not transferable) seeks slim, fair girl (without spex) 20-23/152-160 cms both parents alive. Subsects acceptable. Apply with horoscope, details. Box No. 15414

■ Brahmin, Gurukkal, Athreyam, Uthiradam, 33/165 Ph.D. doing research work at Tokyo, Japan seeks alliance from suitable good looking, educated bride. Brahmin subsect no bar. Contact with horoscope. Box No. 15415

■ Brahmin, Gurukkal, Athreyam, Sathayam, 30/165, B.Sc., Junior Telecom Officer in Department of Telecom, seeks alliance from suitable good looking educated bride, Brahmin subsect no bar. Contact with horoscope. Box No. 15416

■ Iyer, Vadoola, Astasahasram, Uthiram, 36, 5.10"/ 20,000/- Diploma holder, own business (computer) seeks suitable alliance. Box No. 15417

■ Alliance from smart, cultured, pretty girl for Bombay based Tamil Iyer Athreya, Brahacharanam, Uthirattathi, 35/167 B.Sc., DCM owning software consultancy firm, earning above four lakhs per year. All subsects welcome. No dowry. Horoscope agreement optional. Box No. 15418

■ Iyer, Vadamal, Bharadwajam, Poorattathi, 32/5.5"/ 8000/- graduate, Tamil Nadu Govt. service with clean habits, seeks alliance of girl, graduate, good health, clean habits below 27 from pious family. Apply Box No. 15419

■ வடமாள், கௌண்டின்யம், உத்திரட்டாதி 3ம் பாதம், வடாற்காடு, எஸ்.எஸ்.எல்.சி., 32/173/10,000/- சுய தொழில், சொந்த வீடு, ஸ்ரீஸ்ரீ மஹா பெரியவாளிடம் பல வருடங்கள் கைங்கர்யம் செய்து, அவரது சித்திக்கு பிறகு சொந்தமாக வியாபாரம் செய்யும், மடத்துடன் தொடர்புடைய, நல்ல பழக்க வழக்கங்கள் உடைய ஆரோக்கியமான பையனுக்கு, குடும்பப்பாங்கான, கடவுள் பக்தி, நம்பிக்கையுள்ள, குடும்ப நிர்வாக திறமையுள்ள அனுசரணையான பெண் தேவை. ஜாதக, குடும்ப விவரத்தோடு எழுதவும். பெட்டி எண் : 15420

■ Tirunelveli Saiva Vellala Pillai, 40/163/18,000/- B.Tech. with clean habits. Dy. Manager, Heavy Water Plant, Andrapradesh, seeks alliance from same caste,

professionally qualified, good looking girl. Box No. 15422

■ Tamil Iyer, Bharadwaja, Pooradam, suddha jadagam, 1968/170/17,000/- B.Sc., PGDST, software engineer MNC, Bombay, seeks alliance from girl any subsect on transferable job or with software qualification. Box No. 15423

■ விவாகரத்து பெற்ற மத்திய அரசு இன்ஜினியரிங் ஆபீசர், வடமாள், அய்யர், 38 வயது, நன்கு படித்த வரனுக்கு, எளிமையான குடும்பப்பாங்கான அய்யர்/அய்யங்கார் பெண் தேவை. Simple marriage. பெட்டி எண் : 15424

■ Tamil Viswakarma parents invite alliance from edcuated fair complexion girl age below 23 for boy age 24/165/BE/Hastham doing business, running industries. Earning Rs. 10,000/- p.m. Box No. 15425

■ Graduate employed bride for Thengalai Iyengar, 38/BA/155 Nythrupa Kasyapam, Hastham, Rs. 7650/- Sr. Asst. Systems, Chennai. Subsect no bar. Box No. 15426

■ Alliance invited for Vadama, Kousikam, 29/DME/8500/- fair, Asst. Engineer, (Birla Concern) Karnataka. Bride shall be fair, beautiful, home loving and coming from good family. Contact Box No. 15427

■ Madhwa Kannada, Koundinya, Poosam, 30 yrs. 178 cms, Ph.D., USA California employed handsome last boy in the family, seeks MS (USA) equivalent qualification, beautiful, 160-165, slim, fair 25-26 yrs. from respectable family. Early marriage and settling in USA. Box No. 15428

■ சௌராஷ்டிரா, கடக ராசி, பூசம், தத்ருசி கோத்திரம், 29/156 செ.மீ. 4000/-க்கு மேல் மாத வருமானம், தனியார் கம்பெனி வேலை. ஒரே பையன். நற்பழக்கமுடையவர். சென்னையில் வசிக்கும் நல்ல குணமுடைய படித்த பெண் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 15429

■ ஐயர், பிரஹசரணம், வாதூலம், விசாகம் 3ம் பாதம், வயது 27, கோவில் குருக்களாக பணிபுரியும் பையனுக்கு நல்ல குடும்பப்பாங்கான மணமகள் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். முக்கியமாக சமைக்க தெரிந்திருக்க வேண்டும். பெட்டி எண் : 15430

■ ஐயர் வடமாள், ஆத்ரேயம், உத்திரம், 32, உயரம் 5.7" பி.எஸ்ஸி கம்ப்யூட்டர் கோர்ஸ் 4500/- தனியார் கம்பெனியில் வேலை பார்க்கும் பையனுக்கு தகுந்த வேலையில் உள்ள, இல்லாத பட்டதாரி பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 15431

■ வடமாள், நைத்ருப காசியப கோத்திரம், பூரட்டாதி, 29/178/DECE, AMIE/10,000/- அரசாங்க உத்யோகத்தில் பணிபுரியும் சொந்த வீடுள்ள வசதிமிக்க வரனுக்கு (தாயாருக்கு சிறுநீரகம் தானம் செய்தவர்) அழகிய குடும்பப்பாங்கான பெண் தேவை. ஜாதகப் பொருத்தம் அவசியமில்லை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 15432

■ Iyer, Ashtasahasram, Kanva Gothram, Uthiradam, Makaram, 30/172 cms./B.A. (M.A.) Central Government, Chennai, Rs. 7000/- seeks employed graduate girls. Subsect acceptable. Box No. 15433

■ Ashtasahasram, Kashyapa, Moolam, BE/MS, 31/175/18,000/- own house, Chennai, seeks MCA/M.Sc./BE, software professional Iyer girl. Contact between 8 p.m. to 8 a.m. Phone : 6461812. Horoscope matching optional. Box No. 15434

■ 50 வயது, படித்த, வசதியான, விவாகரத்தான, யாருமற்ற தனியாக வாழ்பவருக்கு 40 வயதளவில் டைவர்டான, விதவை, ஆதரவற்ற தனிப் பெண் தேவை. குழந்தை உள்ளவர்களும், கன்னிப் பெண்களும் தவிர்க்கவும். ஜாதி, பணம் தேவையில்லை. முழு விவரம் தெரிவிக்கவும். பெட்டி எண் : 15435

■ Alliance invited from graduate employed/unemployed girl for Coimbatore based Vadama, Bharadwaja Iyer, Revathi, 45/156, M.Com, PGDBM officer. Divorcee without encumbrance. No issue. Box No. 15436

■ Iyer, Vadamal, Kousikam, Uthram, 28/164/M.Com, Technician Indian Air Force, Gwalior, Rs. 6500/- (+ other perks & allowances) seeks fair, slim, graduate, unemployed, decent family girl not below 23. Box No. 15437

■ Hindi speaking Srivasthava, Kayasth (Hindu) Bharadwaja, Bank employee, graduate, fair, 36/173/9000/- seeks housewife below 31 years, knowing Hindi. From decent family of Hindu religion. Send horoscope, bio-data. Box No. 15438

■ ஐயங்கார், வடகலை, கார்க்யம், ஹஸ்தம், 36/டி.ஈ.ஈ. எலக்ட்ரிகல் கன்ட்ராக்டர். ரூ. 5000/- மாத வருமானம். விவாகரத்தான பையனுக்கு தகுந்த ஐயங்கார் பெண் தேவை. திருமணமாகாதவர் மட்டும் விண்ணப்பிக்கவும். ஜாதகத்துடன் தொடர்பு கொள்க. எளிய திருமணம். பெட்டி எண் : 15439

■ Madhwa Kannada, Mouna Bargava, Poosam, 36/165/7000/- B.Sc., (MCA) software engineer Bangalore. Native of Tamil Nadu, seeks Kannada speaking girls from decent family. Contact with horoscope and other details. Box No. 15440

■ Karkatha Vellala, Chartered/Cost Accountant, 34/175 fair, smart boy seeks fair, good looking girl. Software professionals preferred. Height 160 expected. Contact 044-4412137. E-mail b840@yahoo.com. Box No. 15441

■ Tamil Iyer 43 years PUC, own house, Coimbatore, privately employed monthly income 3500/- divorcee need 30 to 37 years aged girl. Disabled, divorcee, widow. Subsect no bar. Phone : 4414469, 4414854 (Chennai) Box No. 15442

■ Iyer, Vadamal, Kanwa Gothram, Pooram, 29/171/7000/- B.Sc, Railways, Chennai, seeks fair, good looking, employed (preferably Govt/public sector) girl. Bio-data with horoscope to (Tel. No. 2329480) Box No. 15443

■ Hindu, Karkartha Saiva Vellala (50), Senior Officer, Nationalised Bank, Chennai, widower with son (21) seeks alliance from brides/widows, divorcees without encumbrance and aged above 35. Sub caste no bar. Apply with bio-data. Ph. 4461509. Box No. 15444

■ ஐயர், வடமாள், நைத்ருப காஸ்யப கோத்திரம், உத்திராடம், வயது 33/3000/- புதுவையில் வேலையில் உள்ள வரனுக்கு வேலையில் உள்ள அல்லது வேலை பார்க்கும் தகுதியுள்ள பெண் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 15445

■ Vani Chettiar, Gundumani Magarishi Gothram, Sadhayam, B.Com, 29/6' Junior Officer in a Ltd., Company, seeks qualified graduate girl (height 5.5" and

திருமணமலர் - விளம்பரக் கட்டணம் முதல் 30 வார்த்தைகளுக்கு ரூ. 250/- அதிகப்படியான ஒவ்வொரு வார்த்தைக்கும் ரூ. 10/-

இந்த இதழில் பிரசுரமாகும் பெட்டி எண் விளம்பரதாரருக்கு பதில்கள் அனுப்ப கடைசி தேதி 10/03/1999. பதில்கள் அனுப்ப வேண்டிய முகவரி: பெட்டி எண்: .... C/o. மங்கையர் மலர், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

above) good looking, home loving. Send horoscope. Box No. 15446

■ Iyengar, Kousikam, Vadagalai, Anusham, B.Com, 33/5.7" Junior officer in a Ltd., Company, seeks qualified, employed girl, fair, good looking, home loving. Subsect no bar. Send horoscope. Box No. 15447

■ Hindu Maruthuvar, 32, 168, 12,000/- own business, finance, real estate. Convent educated, good looking, own house, Chennai, car, decent family seeks, alliance from decent educated family, fair girl. Same caste. Box No. 15448

■ Brahacharanam, Koundinya, Aswini, 27/174/B.Sc./GNIIT 10,000/- systems engineer Bangalore, seeks good looking employed girl. Box No. 15449

■ Thenkalai, Kousikam, Mrigasirsham, 39/168/30,000/- graduate running own textile unit in Madurai, seeks graduate bride. Box No. 15450

■ Vadagalai, Iyengar, Kousikam, Revathi, 28/165/7000/- p.m. business, seeks graduate, employed girl. Subsect no bar. Box No. 15451

■ பிராமணர் மாத்வா, ஸ்ரீவத்ஸம், 33 வயது ரயில்வே அலுவலக வேலை, 4000/- பெற்றோருடன் சொந்த வீட்டில் வசிக்கும் காது கேளாமல், பேச முடியாத அழகான நற்குணமுள்ள படித்த இளைஞனுக்கு தியாக உள்ளமும் ஓரளவு படிப்பும் உள்ள ஊனமில்லாத அழகான பிராமணர் மணமகள் தேவை. வரதட்சணை இல்லை. முழு விவரங்களுடன் எழுதவும். பெட்டி எண் : 15452

■ Bharadwajam, Uthram II, suddha jathagam, Palakkad Iyer, Chozhyal, 29, B.Sc., PGDPM, 162 cms, medium complexion, 6000/- p.m. Steno-secretary, Pvt. Chennai. Only son, own flat, Nanganallur, seeks graduate bride below 26, employed/unemployed. Subsect acceptable. Box No. 15453

■ தமிழ் ஐயர், பிரஹசரணம், கௌண்டின்யம், அனுஷம், 34 (எம்.எஸ்ஸி) 11,400 + Perks, business executive. Reputed Pharmaceutical company, own flat. நல்ல குணமுடைய பையனுக்கு வேலை பார்க்கும் பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். ஜாதகத்துடன் அணுகவும். பெட்டி எண் : 15454

■ தமிழ் ஐயர், பிரஹசரணம், கௌண்டின்யம், உத்திரட்டாதி, B.A., PGDMM, 37/4600/- + perks, 5.4" பிரபல தனியார் கம்பெனியில் நிரந்தர வேலை, நல்ல குணமுடைய பையனுக்கு சென்னையில் வேலை பார்க்கும் பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். ஜாதகத்துடன் அணுகவும். பெட்டி எண் : 15455

■ North Arcot Vadamal, Athreyam, 30/172/7000/- Visakam, very fair, DAE partnership business. Contact 289, T.H. Road, Triplicane, Chennai - 600 005. Educated girl required to assist business.

■ Alliance invited from non-Srivatsa, Iyengar graduate, preferably employed girls for fair, handsome boy aged 39, 5.5" employed pvt. Concern with good background. Murali, No. 22, 10th Avenue, Ashok Nagar, Chennai - 83. Phone : 4891707.

■ Alliance sought for handsome boy Vathimal, Haritha, 28/165/8000/- Civil Diploma permanent employee reputed company. Graduate employed/unemployed preferred. Subsect accepted. Contact Krishnaswami, Plot 24, Krishnamachari Nagar, Chennai - 600 116.

■ ஐயர், பிரஹசரணம், ஹரிதம், உத்திரம், 31/175/ பி.எஸ்ஸி அரசுப் பணி, ரூ. 6000/- அரசு/ஆசிரியை/ தனியார் சென்னையில்/சென்னைக்கு மாற்றும்படி பணியில் ரூ. 4000/-க்கு குறையாத பட்டதாரி மணமகள் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். வி.எஸ். சுப்ரமணியன், ப்ளாட் நெ. 32, விவேகானந்த நகர், எக்ஸ்டன்ஷன் 2, கும்பகோணம் - 612 001.

■ Wanted good looking slim, employed bride for Thenkalai, Srivatsa, Punarpoosam, DME, 32/5.8" Rs. 7000/- private co. Apply with horoscope to Sri.TNC Rajagopalan, No. 30/1, Parthasarathy Street, Purasawalkkam, Chennai - 600 007.

■ ஐயர், பிரஹசரணம், அவிட்டம், ஹரித, 29/5.11"/ ACA Central Excise Inspector, Tamilnadu வரனுக்கு தகுந்த மணமகள் தேவை. V. Subramanian, B-1, 308, Akal Society, Tarunbharat Road, J.B. Nagar, Andheri (E), Mumbai - 400 059.

■ US citizen, Tamil Iyer, vegetarian, Kousika, 26/176, Brilliant MD, surgery, resident in a world famous institution, seeks educated, fair, beautiful, smart, Tamil Brahmin girl, 23 below. Parents request horoscope, bio-data, family background. Jambunathan, A-010, Yamuna Apartments, Alaknanda, New Delhi - 110 019.

■ Iyer, Vadama, Sankrithi, Poorattathi, fair boy, 27/5.8"/8000/- (DME) well settled, Chennai, seeks girl employed/unemployed preferred. Phone : 4714255. G. Rajam, D/31, State Bank Colony, 21, Station Road, West Mambalam, Chennai - 600 033.

■ Hindu, Tamilian, Singaporean, 42/180, divorcee with encumbrance. Professional, seeks bride, divorced and

வாசகர்கள் எழுதும் கடிதங்கள், அவர்கள் குறிப்பிடும் பெட்டி எண் விளம்பரதாரர்களுக்கு அனுப்பப்படும். கடிதங்களுக்கு பதில் எழுதுவது/எழுதாமல் இருப்பது அந்தந்த விளம்பரதாரரின் விருப்பமே. நாங்கள் எவ்வித உதவியும் செய்ய இயலாது.

widow accepted. Send horoscope to Balakrishnan, Block 336, #05-185, Tah Ching Road, Singapore - 610 336.

■ ஐயர், பிரஹசரணம், பராசர, மூலம், 34, M.Sc., B.Ed., DTE, அரசு ஆசிரியர், ரூ. 7700/- அரசுப் பணியில் உள்ள மணமகள் தேவை. DTE, B.Ed படித்துவரும் பரவாயில்லை. முகவரி : K.R. ஸ்ரீநிவாஸன், 5/6, துராபலி தெரு, திருவண்ணாமலை - 606 601.

■ Iyer, Vadama, Koundinya, Sadayam, 38/10,000/-/5.8, nationalised bank, seeks employed brides aged 29 - 35 years mutual agreement (Mana Porutham) enough horoscope matching optional. Rajamani, 28, New Madura Illam, North Andar Street, Tiruchirapalli - 620 002.

■ பாரத்வாஜம், வடமாள், சித்திரை, 34, 166 செ.மீ. சொந்த வியாபாரம், வசதியுள்ள, பி.ஏ. படித்த மணமகனுக்கு, குடும்பப்பாங்கான, வேலைக்குப் போகாத மணமகள் தேவை. K. Ramesh, 12, Old Munisif Court St., Namakkal - 637 001.

■ Vathima, Haritha, Revathi, 30/175 employed in State Bank of India, Chennai as assistant, seeks girl from decent family. Contact S. Bhagavathi, C-4, Shanthi Sadhan, Kochadai, Madurai - 625 010.

■ Vadamal, Bharadwajam, Maham, fair, 33/167 cms, M.Com., PGD, Co-op. M., Rs. 6000/- Accountant in Pvt. Ltd. Co., at Tindivanam and own business, seeks fair, employed/unemployed girl. K. Rajalakshmi, 27-A, Easwaran Koil Street, Tindivanam - 604 001.

■ Vadama, Haritha, Moolam, B.Com boy multi national, Pune, Senior Assistant, 35/175/8000/- graduate required. Srinivasan, 427, First Floor, Third Cross, I Stage, Indra Nagar, Bangalore - 560 038. Ph : 5293881.

■ தென்கலை ஐயங்கார், சாண்டில்யம், ஆயில்யம், 35/8200/- அரசுப் பணியில் உள்ள வரனுக்கு படித்த வேலையிலுள்ள பெண் தேவை. முகவரி : எஸ். லெக்ஷ்மி நாராயணன், 8, ஸ்ரீசக்ரா பிளாட்ஸ், கோபிநாதன் தெரு, நர்மதா நகர், உள்ளகரம், சென்னை - 600 091.

■ Vadamal, Koundinya, Ayilyam, 34/160/12,000/- document writer plus Real Estate business. Girl should be graduate, home loving. Contact S. Gomathi, 22, PVS Koil St., Woriur, Trichy - 620 003.

■ Thondai Mandala Saiva Vellalar, (Saiva Mudaliar) groom, BE/31/170 fair, working with good job in Qatar, seeks alliance from fair, beautiful graduate, cultured bride, decent family and same caste (All Saiva Vellalar sects are acceptable). Horoscope is must, no dowry, simple/decent marriage. Send horoscope and bio-data to D. Geetha, W/o. R. Dorairaj, No. 6, Sastha Bhavan, 37th Street Extn. Nanganallur, Chennai - 600 061.

■ Alliance for Iyer, Brahacharanam, Agasthiya, Moolam 4 padam, 26/156 cms, fair, good looking, working in private company, seeks North settled Iyer bride preferably. Contact Manian, 21, Sundarvan Layout, Narendra Nagar, Nagpur - 15. Ph : 750178.

■ Alliance invited for Tamil Viswakarma boy Pooradam, 27, 165, B.Arch. Hons. IIT, employed British Architectural Firm in Kenya U.S. Dollar 15,000 annum, visiting Chennai February. From slim, fair, good looking girl 25/160 preferably graduate. Contact with horoscope. S. Baskaran, Plot No. 3 & 4, Selvaraj Nagar, Villupuram - 605 602. Phone : 04146 - 23293.

■ நைதர்வ காஷ்ய கோத்திரம், வடமாள், பூசம் நட்சத்திரம், 35/5.5", எஸ்.எஸ்.எல்.சி. சுய தொழில் மாத வருமானம் ரூ. 5000/- சொந்த வீடுள்ள மணமகனுக்கு குடும்பப்பாங்கான பெண் தேவை. R.K. விஸ்வநாதன், 2/3, ரெட்ஹில்ஸ் ரோடு, அம்பத்தூர், சென்னை - 53.

■ Astasahasram, Kousikam, Hastham, MF. Tech., 29 yrs., 162 cms, Rs. 15,000/- p.m. Multinational Company, own house, senior Q.A. Executive, seeks good looking girls, any subsect. Send details with photograph through courier to S. Krishnamoorthy, 56-A/14, Brindavan Society, Thane (W), Mumbai - 400 601. Ph: 022-5375122.

■ வடமாள், பாரத்வாஜம், மூலம், பி.ஏ., 33/7500/- சென்னை பல்கலைக் கழகத்தில் பணி, சுத்த ஜாதகம் வரனுக்கு வேலையிலுள்ள மணமகள் தேவை. K. Ranganathan, 35/2, T.P. Koil Street 1st lane, Triplicane, Chennai - 600 005.

■ கார்காத்தார் பிள்ளை, உத்திரம், வயது 24, 175, எம்.ஏ, படித்த தனியார் நிறுவனத்தில் நல்ல பணியில் உள்ள பையனுக்கு இதே இனத்தில் நல்ல படிப்பும் அழகும் நிறைந்த பெண் தேவை. ஜாதகத்துடன் அணுகவும். இளங்கோவன், 38, புச்சி பாபு தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5. போன் : 8528173.

■ Tamil Iyer, Vadamal, Haritha, Aswini, 32/165/B.Sc., PGDFM, working in pvt. co. 5000/- Raahu in seventh place, seeks employed girl. Contact R.Vaidhyanathan, 12-C, Ramasamy St., Radha Nagar, Chrompet, Chennai - 44.

■ Vadama, Bharadwajam, Thiruvonam, whitish boy, BE/30/6'/40,000/- Saudi Arabia, seeks girl graduate, 5.6" above. M. Srinivasan, F3, Eswari Flats, Plot 4, 16th Street, Thillai Ganga Nagar, Chennai - 61. Ph : 2332292.

■ Srivatsam, Vadamal, Avittam, 33/173/12,000/- DME, TVS, Senior Manager, brother Ayilyam, 30/162/9000/ - AMIE, MBA engineer, seek employed girls, Govt/Bank/Insurance etc. Sreenivasan, 16, Kambar Street, Ramana Nagar, Chennai - 600 011. Ph: 5581087.

■ வடமாள், கௌண்டின்யம், 35/5.5"/8000/- பி.எஸ்ஸி படித்து சுய தொழில் செய்யும் விவாகரத்தானவருக்கு குடும்பப்பாங்கான, படித்த, கணவனை இழந்த/விவாகரத்தான/குழந்தை இல்லாத மணமகள் தேவை. எளிய

திருமண மலர் விளம்பர கட்டணத்தை "மங்கையர் மலர்" என்ற பெயரில் டிமாண்ட் டிராஃப்டாகவோ, உள்ளூர் செக்காகவோ அல்லது நேரில் வந்து பணமாகவோ செலுத்தலாம். போஸ்டல் ஆர்டர், மணி ஆர்டர், வெளியூர் செக் முதலியவை ஏற்றுக் கொள்ள இயலாமைக்கு வருந்துகிறோம்.

திருமணம். ஜாதகம், விவரங்களுடன் தொடர்பு கொள்க. வெங்கட்ராமன், 46, சைவமுத்தையா தெரு, சென்னை - 1.

■ Alliance invited for Bharadwaja, fair boy, non-graduate, Krithikai, 34 yrs. employed in Private sector, salary Rs. 5000/- plus. Contact with horoscope. Smt. Nagalakshmi, 34, North Car Street, Perur, Coimbatore - 641 010.

■ செங்குந்த முதலியார், வயது 30, டி.எ.எ. ஆயில்ய நட்சத்திரம், துபாயில் நல்ல நிலையில் உள்ளவருக்கு படித்த பண்புள்ள பெண் தேவை. போட்டோ, ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். P. Venkatraman, Electrical Lighting Co., P.O. Box 11178, Dubai, U.A.E.

■ Vathima, Gouthamam, Kettai, working in Chennai High Court, good looking, 27/180 seeks employed. Correspond N. Nagarajan, 130, R.V. Nagar, Chennai - 600 118.

■ வடமாள், வாதூலம், ரேவதி, 35/175/6000/- தனியார் + சொந்தத் தொழில், சென்னை வாழுக்கு தகுந்த, வேலைக்குச் செல்லும்/செல்லாத உயரமான மணமகள் தேவை. ஆர். லலிதா, 3, நெடுஞ்செழியன் தெரு, சோழவரம் நகர், குரோம்பேட்டை, சென்னை - 44.

■ Tamil Iyer, Vadamal, Kousikam, Anusham, 27/175 cms, DME, AMIE, DQA, Rs. 8000/- employed in reputed concern as Senior engineer, seeks good looking, graduate, professional, employed girl below 25 years. K. Ramamurthy, B9, Sathya Apartment Alladi Krishnaswamy Street, East Tambaram, Chennai - 59.

■ Vadagalai, Iyengar, Shadamarshanam, Pooram, 34, Bank, 177/6700/- tall boy, seeks employed/unemployed, graduate girl. Contact SKS Rajan, 129A, North Uthra Street, Srirangam, Trichy - 620 006. Ph: 434506.

■ Iyer, Vadama, Koundinya boy, Poosam, 30, 180 cms, M.S., handsome, teetotaler, employed USA, second son, affluent and cultured family, invites alliance from smart, good looking, well educated girls below 25 years. Contact S. Venkatram, Block 228, Pending Road, # 12-237, Singapore - 670 228.

■ ஐயர், வடமாள், பாரத்வாஜம், ரேவதி, 32/5.4" ஐ.டி.ஐ. தனியார் நிறுவனம் ரூ. 3000/- பையனுக்கு நல்ல குடும்பப்பாங்கான பெண் தேவை. ஜெ. விஜயலக்ஷ்மி, 3/242, நக்கீரர் சாலை, முகப்பேர் கிழக்கு, சென்னை - 600 050.

■ Iyer, Brahacharanam, Koundinya, Bharani, 31/5.10"/10,900/- very fair, DCE Engineer, Larsen & Toubro, Chennai, seeks graduate girl born after 1971. S. Ramakrishnan, C4/15A, Akbarabath Second Street, Kodambakkam, Chennai - 24. Phone : 4880025.

■ Alliance invited for Mumbai based Sozhia Vellalar, Poorattathi, 28/165/7000/- B.Com, employed in a reputed co., seeks (graduate or HSC) good looking cultured girl from respectable family. Reply with family details, photograph, horoscope to Srinivasan, B/9, Shakuntala Bldg., Chedda Cross Road, Dombivli (E) - 421 201.

■ Vanniyar, Anusham, 37/156/8000/- B.A., AIBM, D.Mech, DDE, Assistant Engineer, Supervisor Government, clean habits, seeks beautiful graduate employed bride upto 32 years. Caste no bar. Namasivayam, 19, 3rd Street, Elango Nagar, Virukambakkam, Chennai - 600 092. Ph: 4726225.

■ வெள்ளாளர் பிள்ளை, சித்திரை, 12-ல் செவ்வாய், 28/6.1"/பி.எ/6000/- தனியார் துறையில் விற்பனை அதிகாரியாக பணிபுரியும் பையனுக்கு குறைந்தபட்சம் 5.6" உயரம் உள்ள வேலையில் உள்ள/இல்லாத பட்டதாரிப் பெண் தேவை. சாதி தடையில்லை. தினதயாளன், 10, குருமூர்த்தி கார்டன் தெரு, பெரம்பூர், சென்னை - 11.

■ ஐயர், வடமாள், ஸ்ரீவத்ஸ பூசம், 29/6"/பி.எ./5000/- மத்திய அரசு பணி பையனுக்கு அரசு பணியிலுள்ள, இன்குரன்ஸ், வங்கி மணமகள் தேவை. ராஜாமணி, 441, ஆறாவது தெரு, கார்த்திகேயபுரம், மடிப்பாக்கம், சென்னை - 91. போன்: 2342082. சென்னையில் பணிபுரியும் பெண்ணுக்கு முன்னுரிமை உண்டு.

■ Iyer, Vadama, Kousikam, Punarpoosam, B.Com, 31/172 cms, Automobile business Chennai, seeks suitable girl, same sect from decent families. H. Kulathumani, C-5, Ground Floor, Panna Oasis, 35 & 36, M.K.Amman Koil Street, Mylapore, Chennai - 600 004. Phone : 4980256.

■ Alliance for Kousikam, Ayilyam, 32/5.10" B.Com (Hons.), PGDCA from NIIT, accounts executive boy salary Rs. 14,000/- + from Brahacharanam, Vadama, Iyer graduate girls good looking + respectable family. Reply with horoscope, family details to S. Visweswaran, 799 Pocket 5, Mayur Vihar Phase I, Delhi - 110 091. Ph. 2254941.

■ Vadamal, Bharadwajam, Avittam, B.Sc., B.L., 28/172/9000/- Central Govt., seeks employed girl preferably in State/Central/Public sector. Subsect no bar. Send horoscope to K. Vanchesan, 50, Viswanathapuram Main Road, Madurai - 625 014. Phone : 642500.

■ Iyer, Vadamal, Bharadwajam, 31/163 cms, employed reputed organisation, Rs. 11,000/- p.m. Employed, transferable Delhi girls contact N. Sankaranarayanan, C-64, Dasarathpuri Dabri, New Delhi - 110 045.

■ Brahacharanam, Sankruthi, Visakam, Thulam, Computer graduate, 24/180/6000/- employed Visakha Steel Plant, Mumbai. Contact with details. Dr. Raghuram, Pent House, Mandhakini Apartments, Rly. New Colony Second Lane, Visakhapatnam - 530 016.

■ தமிழ் வடமாள், பாரத்வாஜம், பூராடம், பி.காம், 29/177 சொந்த இன்ஜினீரிங் யூனிட், சிகப்பான பையனுக்கு குடும்பப்பாங்கான பெண் தேவை. Sarada

Venkataraman, A-3, Dayalu B.P. Singh Cross Road 2, Mulund West, Mumbai - 400 080.

■ நாயுடு, வயது 35, 10வது வரை படித்து திருச்சியில் ரெடிமேட் கடை வைத்து மாதம் ரூ. 7000/- வருமானம் வரும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த வரனுக்கு பெண் தேவை. ஜாதகத்துடன் எழுதவும். Chandra, 1/204, Brahmand, Azad Nagar, Thane - 400 607. Phone : 5415178.

■ ஐயர், 36, பி.ஏ., இன்சார்ஜ் செக்யூரிட்டி தனியார், 2500/- ஆதரவற்றவருக்கு ஏற்றுமதி நிறுவனத்தில் வேலைச் செய்யும் பரந்த மனப்பான்மையுள்ள விதவை மணமகள் தேவை. ஆதரவற்றவருக்கு முன்னுரிமை. கணேசன், (இன்சார்ஜ்-செக்யூரிட்டி) TCS, 188 அவ்வை சண்முகம் சாலை, சென்னை - 86.

■ Alliance from graduate girls, for Vadhoolam, Ashtasahasram, Moolam, 35/180/9500/- B.Com, LLB, Central Govt. own flat, no dowry. Reply with horoscopes. Father Iswaran, 1792/6/186, CGS Quarters, Antophill, P.O., Bombay - 400 037.

■ திருநெல்வேலி வடமாள், கௌசிகம், அசுவினி, வயது 32, தனியார் கம்பெனியில் வேலை பார்க்கும் பையனுக்கு, வேலை பார்க்கும் பெண் தேவை. முகவரி: விருத்தாசலம், C/17, தாராபூர் அபார்ட்மெண்ட்ஸ், 22, ஸ்டேஷன் ரோடு, மாம்பலம், சென்னை - 33.

■ North Arcot, Vadamal, Vathula, Poosam, 31/5.6"/ Rs. 6500/-, Operator Lucas TVS, seeks employed girl. Reply with horoscope. M. Chandrasekaran, 3,1 Cross, VII Street, Vaishanavi Nagar, Chennai - 600 109.

■ Iyer, Vadamal, Nithrubakashyaba, Maham, 32/5.5"/ 6000/- p.m. +2 executive reputed company, Namakkal, seeks good looking girl. J. Natarajan, B-11, Santhi Flats II Floor, 4, Appu Street, Mylapore, Chennai - 600 004. Phone : 4957003.

மணமகன் தேவை

■ சைவப்பிள்ளை (காரைக்குடி), திருவாதிரை, 34/ எம்.ஏ., எம்.எட், படித்த பெண்ணிற்கு சைவப் பிள்ளையை சேர்ந்த பட்டதாரி மணமகன் தேவை. பெட்டி எண் : 25002

■ Vadamal, Srivatsa, Uthirattathi, B.Sc, PGDCA, 26/ 155 cms, employed Central Govt. at Chennai, seeks professionally qualified below 32 years. Reply with horoscope. Box No. 25003

■ Vadakalai Iyengar girl, Vadoolam, 29/158, M.A., M.S, employed USA H1B, divorcee unconsummated marriage, seeks groom well qualified and employed USA with clean habits. Subsect/Iyer no bar. Box No. 25004

■ வாணியச் செட்டியார், பூரட்டாதி 3ம் பாதம், கும்ப ராசி, 24, BBM குடும்பப்பாங்கான பெண்ணிற்கு பட்டப்படிப்பு/டிப்ளமோ படித்து நிரந்தர பணியில் உள்ள 30 வயதிற்குட்பட்ட இதே இன வரன் தேவை. ஜாதகம் மற்றும் குடும்ப விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 25005

■ Telugu Velanadu Brahmin, Haridasa, 27/154 Arudhra, Ph.D., girl seeks well qualified, employed India/abroad groom. Subsect no bar. Box No. 25006

■ Vathima, Koundinya, Punarpoosam, 28/5'/B.A, steno, fair, good looking, seeks alliance from well qualified graduate or professional, well settled boys below 34. Subsect acceptable. Simple marriage. Box No. 25007

■ நெல்லை சைவப்பிள்ளை, 29 வயது, 5.2" எம்.ஏ., எம்.எட், தனியார் ஆசிரியை. விவாகரத்தான பெண்ணுக்கு, 37 வயதுக்கு உட்பட்ட பட்டதாரி, நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. தாரமிழந்த, விவாகரத்தானவரும் விண்ணப்பிக்கலாம். சைவப் பிள்ளை வரன் மட்டும் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 25008

■ For Naidu/Brahmin parentage divorcee girl, 28 yrs./ 155 cms, without encumbrance, working in Central Govt. at Chennai. Good looking, well trained in domestic works. Box No. 25009

■ இந்து, சௌராஷ்டிரா, சவுநவ, 26/150 செ.மீ. MCA USA ல் தனியார் பணி. கம்ப்யூட்டர் இன்ஜினியர். போலியோ வயது கால் காலிபர் அணிந்து நடப்பார். இதே இன தகுந்த கம்ப்யூட்டர் படித்த மணமகன் தேவை. வெளிநாட்டு பணியிலுள்ளவர் சம்மதம். பெட்டி எண் : 25010

■ Brahacharanam, Athreya, Pooradam, 27/150/B.Sc, PGDCA, MNC Rs. 11,000/- fair, slim girl seeks professional groom of same subsect below 32 years. Send horoscope to Box No. 25011

■ ஐயர், வடமாள், பாரத்வாஜம், பூரட்டாதி 4ம் பாதம், 24/153, B.Sc., B.Ed, PGDCA, குடும்பப்பாங்கான பெண்ணிற்கு P.G. படித்து தகுந்த அரசு/தனியார் நல்ல வேலையிலுள்ள 30 வயதிற்குட்பட்ட மணமகன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 25012

■ Smartha Desistha girl, Kousika, Kettai - 2, 26/165/ MCA, employed. Parents seek Marathi speaking alliance of Smartha/Madhwa groom. Send bio-data with horoscope. Box No. 25013

■ Fair, good looking, 27/165 cms/B.A. Lit., Hindi Praveen diploma ticketing travelling, typewriting higher. Father Brahmin, mother Pallar, seeks suitable Brahmin/inter caste (anyone Brahmin) boy. Send horoscope, family details. Box No. 25014

■ Alliance for Iyer, Ashtasahasram, Kasyaba, Revathi, 28/5.5" B.A., B.Ed., 5000/-. Domestically trained girl. Subsect acceptable. Boys with decent income and bright future and clean habits. Write to Box No. 25015

■ பிராமணர், ஐயர், வடமாள், கௌசிக கோத்திரம், வயது 29/5.6½' M.Com, with computer knowledge, employd in Bangalore பெண்ணிற்கு Master degree/professionally qualified/employed in reputed firm, upto 34 years மணமகன் தேவை. போன்: 5541059. பெட்டி எண் : 25016

■ For Thenkalai, Bharadwaja, Visakam, B.Sc, HDSE Aptech faculty, 23/146 cms fair girl, seeks professionally qualified, well placed grooms. Reply with horoscope to Box No. 25017

■ Tirunelveli Saiva Vellala, Moolam, 30/155/DEE, PGDCA, employed in reputed software company, 6000/- p.m. seeks suitable alliance from qualified, employed/self employed/private/Govt. groom from same caste. Subsects no bar. Box No. 25018

■ Tamil Yadava, M.Sc., M.Phil, 36/165/7000/- bank employed girl, seeks Govt/private employed bridegroom. Box No. 25019

■ Govt employed permanent job. Grooms from Saiva

Pillai, Saiva Chettiar, Saiva Mudaliar for Saiva Pillai bride, B.Com, M.LiSc., fair, 31, 153 cms. Phone : (0452) 680297. Box No. 25021

■ Divorcee 27 years with daughter 3½ years, doctor abroad hailing from well to do Tamil Chennai family. Computer specialists, Engineers, Chartered Accountants, etc. preferable. Groom has to settle down abroad, age 28 to 35 years. Should be from respectable family having all requisites and disposition to ensure happy married life. Caste no bar. Contact Box No. 25022

■ Iyer, Brahacharanam, Athreya, Punarpoosam III padam, 23/5'/B.Com, (DISM) fair girl, seeks alliance from professionally qualified (preferably) age 25 - 29 and earning above Rs. 8000/-. Subsects no bar. Box No. 25023

■ Iyer, Vadoola, Astasahasram, Punarvasu, 42, 5.5" Manager, Nationalised Bank, seeks settled Iyer/Iyengar groom. Box No. 25024

■ Vakkaliga Gowder 32, 150, 5000/- fair teacher divorcee with 6½ years girl (separated 3 months after marriage), seeks broadminded groom. Caste no bar. Apply with horoscope. Box No. 25025

■ சைவ வெள்ளாளர், கார்காத்தார், திருவாதிரை, 35/160/எம்.எஸ்ஸி, வங்கி பணியிலுள்ள பெண்ணிற்கு அரசு/வங்கி/எல்.ஐ.சி. (அ) நல்ல கம்பெனியில் வேலையில் உள்ள கார்காத்தார்/சைவ வெள்ளாளர்/சைவ பிள்ளை பட்டதாரி மணமகன் தேவை. ஜாதகம் குடும்ப விவரத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 25026

■ Vathima, Athreya, Avittam, 28/165 Post graduate unemployed, seeks grooms from well employed MBA, MCA, CA, BE below 35. Subsect acceptable. Reply with horoscope. Box No. 25027

■ சென்னையில் நிரந்தரமாக உள்ள பாலக்காடு அய்யர், வடமாள், பாரத்வாஜ கோத்திரம், மிருகசீரிஷ நட்சத்திரம், 22 வயது, B.A. Eng. (Lit.) (Aptech) படித்த மாநிறமான 5.3" உள்ள பெண்ணுக்கு படித்த, நல்ல வேலையிலுள்ள (அதே இனத்திலோ (அ) உட்பிரிவுகள் சம்மதம்). மணமகன் 28 - 29 வயதுள்ள வரன் தேவை. பெட்டி எண் : 25028

■ இந்து வன்னியர் பூசம், கன்னியா லக்னம், சிம்மத்தில் குருவால் பார்க்கப்படும் புதனுடன் கூடிய செவ்வாய், 24/155, அழகிய, சிவந்த, குடும்பப்பாங்கான பாரம்பரிய குடும்ப பின்னணி உள்ள எம்.பி.பி.எஸ் மணமகளுக்கு நல்ல அந்தஸ்தும் குடும்ப பின்னணியும் உள்ள, புதுவை, சென்னை, தென்னார்க்காடு மாவட்ட டாக்டர் மணமகன் ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 25029

■ Handsome Karkatha Vellala girl, 32/B.Com./158 cms, fair and slim, seeks alliance from well employed boys of same caste. Phone : (044) 2327217. Box No. 25030

■ Iyer, 29/150, B.Sc, fair, divorcee with male child (financially independent) seeks broad-minded Iyer bridegroom below 38, income above 5000/-. Legal divorcee, widower accepted. Horoscope, family details must. Box No. 25031

■ அகமுடைய முதலியார், உத்திராடம், 24/5.3" மாநிறம் ஒல்லியான பி.எஸ்ஸி கணிதம் SWIFT படித்த மகளுக்கு நன்கு படித்து பண்புள்ள நிரந்தர வேலையிலுள்ள நற்குணங்களுடைய மணமகன் தேவை. போன் : 0416-229939. பெட்டி எண் : 25032

■ Balija Naidu, 33/150, Poosam, wheat complexion, +2, Diploma in Computer Software & Secretariat Course, typewriting & shorthand, employed in Private company, Rs. 4000/- seeks permanently emloyed, cultured and clean habits groom. Box No. 25033

■ Iyer, Vadama, 41/165 well educated intelligent, very fair, slim, good looking accomplished young looking spinster with good family background, seeks well placed suitable Iyer bachelors. Details to Box No. 25034

■ BDS/MDS/MD bridegroom for Vadamal, 23 BDS girl, fair, good looking. Subsects acceptable. Other professionals settled at a place considered. Horoscope details to Box No. 25035

■ Tamil Iyer girl, Brahacharanam, Bharadwajam, Sadayam 2nd padam, 24/5.3" good looking, graduate, working in reputed company, Chennai. Seeks qualified decently employed bridegroom from respectable family getting 6,500/- above. Box No. 25036

■ தென்கலை அய்யங்கார், விசுவாமித்ரம், பூரட்டாதி -1, 21/5.3" எம்.எஸ்ஸி படித்துக் கொண்டு சொந்த வீடு உள்ள ஒரே மகளுக்கு நல்ல உத்தியோகம் உள்ள ஐயங்கார் மணமகன் தேவை. தகப்பனார் தென்கலை ஐயங்கார். தாயார் நாயுடு. விருப்பமுள்ளவர்கள் ஜாதகம் அனுப்பவும். போன்: 4322537 பெட்டி எண் : 25037

■ Iyer, Brahacharanam, Athreya, Ayilyam, graduate girl, 45/165 cms, from suitable boys (48 - 52 years), well settled, decent family. Horoscope optional. Widows/divorcee excuse. Box No. 25038

■ For Athreya, Brahacharanam Iyer, Pooram, 36 years/168 cms, M.A., beautiful girl, from boys below 42 years, well qualified, decent family. Reply with horoscope. Widows/divorcee excuse. Box No. 25039

■ Barkava Kula Malayaman, 30, widow, B.Sc., B.Ed., 3 yrs. old son, require match from Hindu, 40 - 45 years, caring, honest person. Caste no bar. One/two encumbrance okay. Box No. 25040

■ தஞ்சாவூர் சைவ வெள்ளாளப் பிள்ளை, அவிட்டம், 28/மீடியம் உயரம்/பி.ஏ., மாநிறமான பெண்ணிற்கு பட்டப்படிப்பு/டிப்ளமோ சென்னையில் அரசு/கம்பெனி/சொந்த தொழில் உள்ள மணமகன் தேவை. ஜாதகம், குடும்ப விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண் : 25041

■ Pune based Smartha Kannada Brahmin parents (root in Tamilnadu) invites alliances from qualified engineers (B.E./B.Tech) India/abroad, for their daughter, B.E. software prof., 24/160 (H1 visa, working in USA) Thiruvadhirai, Jamadagni, suddha jadhagam. All South Indian Brahmin may reply with horoscope and bio-data to Box No. 25042

■ ஐயர், அஷ்டசஹஸ்ரம், ஸ்ரீவத்ஸ, பூராடம் 1-ம் பாதம், 24/172 செ.மீ. மிக அழகான சிவந்த ஆரோக்கியமான பட்டதாரி P.G. Dip. in Fashion Design, Computer graphics, மற்றும் இசையில் தேர்ச்சி பெற்ற குடும்பப்பாங்கான பெண்ணிற்கு தகுந்த வரன் தேவை. பெட்டி எண் : 25043

■ Hindu Nadar, 35/168 cms/M.Sc., B.Ed/3000/- pvt. slim, fair girl, seeks alliance from suitable graduate boy age upto 42. Box No. 25044

■ அஷ்டசஹஸ்ரம், ஆயில்யம், காஸ்யப, 24/150, B.Sc Maths, HDSE, Dip in RDBMS and GUI, Faculty நல்ல நிறம் உள்ள பெண்ணிற்குத் தகுந்த வரன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 25045

■ சைவ வெள்ளாளர், 30/3000/- ஆவண தட்டச்சர்/எழுத்தர் பணி செய்யும் பெண்ணிற்கு அரசு/ஆசிரியர்/தனியார் பணியிலுள்ள சைவ முதலியார்/பிள்ளை/கார்காத்தார் பிரிவு மணமகன் தேவை. சைவ உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண் : 25046

■ Iyer, Vadamal, Kousikam, Bharani, 26/5.1" B.A., fair, (hearing impaired). Alliance from suitable, decent family employed in Government sector. Slight handicapped preferable. Box No. 25047

■ திருநெல்வேலி சைவப்பிள்ளை, ஸ்வாதி, 25/162 செ.மீ. B.Lit, Hindi Praveen, Computer Diploma படித்த பெண்ணிற்கு இதே இன அரசு அல்லது பிரபல தனியார் துறை வரன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண் : 25048

■ Balija Naidu, 25/154, Poosam, fair, smart, good looking girl, B.Sc., PGDBA. Pvt. 7000/- seeks professionals B.E., MBA, clean habits. Horoscope personal & family details must. Box No. 25049

■ Iyer Brahacharanam, Bharadwajam, Makam, 32/5.4"/7000/- good looking, M.Com., AICWA Senior Executive, reputed company, Chennai, seeks well employed groom preferably Chennai based. Box No. 25050

■ Wanted well settled groom, alliance invited for fair, slim girl, 27/5.1" RC Christian decent family, SSLC, knowldge in computer correspond with bio-data, family background. Contact Stephenraj 589098/582041. Box No. 25051

■ Well educated and professionally well placed good looking Tamil Brahmin divorcee lady 33 with daughter 5 invites alliance from cultured gentlemen preferably Bangalore based. Reply Box No. 25052

■ சோழிய வெள்ளாள பிள்ளை, ஆயில்யம், எம்.ஏ. படித்து பொதுத்துறை நிறுவனத்தில் பணிபுரியும், 28/175 சைவப் பெண்ணிற்கு இன்ஜினியர்/ஆபீசர் பதவி வகிக்கும் வரன் தேவை. வெளிநாடு செல்லவும், மற்றைய உட்பிரிவுகளும் சம்மதம். பெட்டி எண் : 25053

■ Saiva Pillai, very fair, M.Sc., Computer Science, Tamilnadu Govt. College Lecturer, 29/152 Sadhayam, Saivite, pure vegetarian groom. Clean habits, qualified officer/professionals required. Details to Box No. 25054

■ ஆற்காடு முதலியார், கேட்டை 4ம் பாதம், வயது 32, உயரம் 5.3", பி.எஸ்ஸி., எம்.ஏ., பி.எட்., படித்த பெண்ணிற்கு அரசு/தனியார் நிறுவனம்/சுய தொழில் செய்யும் பட்டதாரி மணமகன் தேவை. துளுவ வேளாளர், சைவ வேளாளர் சம்மதம். போன் : 4811574. பெட்டி எண் : 25055

■ Srivatsam, Uthiradam, Dhanur Vadamal, 1974, normal complexion, 165 cms, M.Com computer, Hindi employed girl. Horoscope Vadamal only. PG or degree with additional qualification well employed. Seventh eighth house from lagna without Raghu, Kethu, Suriyan, Sukran, Sani. Rohini, Ayilyam, Moolam avoid. Box No. 25056

■ Suitable alliance invited from decently employed respectable Brahmin boys of non-Gouthama Gothram, in age group of 35- 39 for fair, graduate girl of 34 yrs. Boys should have no objection since twice betrothal cancelled. Widowers with no issue may also apply with bio-data. Horoscope to Box No. 25057

■ குழந்தைகள் பெற இயலாத கொண்டர் குலத்தை சேர்ந்த 26 வயது, 10வது படித்த இளம் பெண்ணுக்கு ஓர் அளவுக்கு படித்த, மனைவியை இழந்த குழந்தை உள்ள நல்ல வேலையில் அல்லது தொழில் செய்யும் மணமகன் தேவை. வயது (30 - 38)குள் இருந்தால் நல்லது. சாதி தடை இல்லை. பெட்டி எண் : 25058

■ Wanted professionally qualified Mumbai settled groom for 30/154/12000/- Bharadwaj, Poorattathi, Vadama Iyer, professionally qualified (own business) Mumbai girl. Tel : 022 - 7656884/0117. Apply Box No. 25059

■ Thenkalai, Kousikam, Pooram, 29/162 M.A., seeks professionally qualified, decently employed groom. Box No. 25060

■ Iyer, Brahacharanam, Kapi, Kettai, 24/172, graduate girl working in private concern, seeks alliance from well employed Iyer boy below 31 years. Saradha Thyagarajan, 59, 1st 'N' Block, Rajaji Nagar, Bangalore - 560 010.

■ Orthodox Kannada Madhwa Brahmin parents of the bride, Bharadwaja Gothram, Revathi, 163/22 yrs., B.Sc & computer qualified, well versed in domestic activities, seeks alliance from Madhwa families/groom between 26 - 29 yrs., qualified either engineer/CA/ICWA/MBA, decently employed. Contact Sripada Rao, Flat 20A/22, Brindavan Society, Thane - 400 601 or through Tel : (022) 5432716/5342468.

■ Wanted alliance for Iyer Brahacharanam, Thiruvadhirai, 26 years, M.Sc., B.Ed., PGDCA, studying MBA, fair girl employed as lecturer in Secunderabad, seeks well qualified, settled groom India/abroad with good family background. Interested may send horoscope to N.S. Shankar, 37-115/5, Sree Colony, Ramakrishnapuram, Secunderabad - 500 056. Phone : 040 - 7111156.

■ Smartha Desistha Marathi girl, Anusham, Kasyapa, 20/5' mother pensioner, seeks decently employed bachelors, same caste preferable. Contact Ganga Bai, 1230, South Main Street, Near Vijaya Bank, Thanjavur. Phone : 30987.

■ Seeks decently employed bridegroom for the girl of Madhwa Desistha Marathi, Kasyabam, Magam, 26/165, B.Sc., type both higher, DCA, MS office in Computer. Phone : 04367 - 60351. G. Srinivasan, 15, South Mada Vilagam, Nidamangalam - 614 404.

■ ஆரிய வைஸ்யா தெலுங்கு ஆயில்யம் postgraduate (plastics) 25/165 செ.மீ. பெண்ணிற்கு நல்ல பண்புள்ள வேலை/தொழில் உள்ள மணமகன் தேவை. வட இந்தியா எனில் நல்லது. C. Gopal, T/1, Anila Flats, Bhaikaka Nagar, Ahmedabad - 380 051. Phone : 079 - 7453698.

■ தமிழ் ஐயர், அஷ்டசஹஸ்ரம், கௌசிகம், சதயம், 27/5 அடி, தட்டச்சு தமிழ்/ஆங்கிலம் சுருக்கெழுத்து ஜூனியர், மாநிறமான அழகான பெண்ணிற்கு பயோடேட்டாவுடன் ஜாதகம் அனுப்பவும். ராமரத்தினம், C/o. கோபி மெடிகல்ஸ், வெங்கட்டராமன் வீதி,

கோபிசெட்டிபாளையம் - 638 452.

■ வன்னியர், உத்திரட்டாதி, 27/156/B.Tech (C.Sc.) 18,000/- சென்னையில் சாஃப்டுவேர் என்ஜினியராக பணிபுரியும் நல்ல சிவப்பான குடும்பப்பாங்கான பெண்ணிற்கு சம படிப்பு, நல்ல வேலை (உள்நாடு/வெளிநாடு) உள்ள வரன் தேவை. ஜாதி தடையில்லை. கிருஷ்ணமூர்த்தி, 23, புருஷோத்தம நாயக்கர் வீதி, தேங்காய்திட்டு, பாண்டிச்சேரி - 605 004. போன் : (0413) 357032.

■ ஆற்காடு முதலியார், உத்திரட்டாதி, 34 வயது, 8ம் வகுப்பு வரை படித்த குடும்ப நிர்வாகத்தை ஏற்று நடத்த கூடிய சிவந்த, அழகான ஒரே பெண்ணிற்கு நல்ல வேலையில் உள்ள தகுந்த மணமகன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். R. Varadharajan, No. 12, 4th Main Road, Ramnagar, Nanganallur, Chennai - 61.

■ Vathima, Tarakayana, Maham, 23/156, fair, B.Sc, computer (Raghu (or) Kethu in 7th house), well qualified, well employed boys below 30. Subsect no bar. R. Indrani, B-25, Foreshore Estate, Chennai - 28.

■ Decently employed, broad minded groom from Pillai/Nair family for 30, Swathi, B.Sc., B.Ed., PGDCA, girl employed as teacher in Bhutan. Parents Pillai/Nair. Send horoscope. K. Seemanthini, 61-C, Umashankar Nilayam, L.S. Puram, Mettupalayam - 641 301.

■ Iyer, Vadama, Koundinyam, Moolam, 26/5.5" fair, metric, seeks educated employed boy. C.G. Viswanathan, No. 6, P.E. Koil West Mada Street, Ayanavaram, Chennai - 23.

■ தகப்பனார் கிறிஸ்துவ்ட்டணவர் + தாயார் இந்து செட்டியார். 28/150 செ.மீ. தமிழக அரசில் தட்டச்சராக நிரந்தரப் பணி. ரூ. 4800/- பெண்ணுக்கு அரசுப் பணிபுரியும் மணமகன் தேவை. எம்மதமும் சம்மதம். டி. ஜோசப், 7, இளங்கோ நகர் 3வது தெரு, விருகம்பாக்கம், சென்னை - 92.

■ Iyer, Vadamal, non-Koundinya, Aswini, 22/5.11" B.Com, PGDBA employed girl, seeks boy MBA/MCA well employed in States age upto 28. Subsect no bar. Subramaniam, 283, Radhakrishnan Road, Tatabad, Coimbatore - 641 012.

■ Vadamal, Bharadwajam, Revathi, fair, 21/169 M.Com final year, seeks professionally qualified boy, same sect with good position India/abroad 27 and below. A Vembu, 54, Nirmal Street, Ramnagar, Ambattur, Chennai - 600 053.

■ வாத்திமாள், ஹரிதம், பரணி, 23/150/B.Com., PGDCA அழகான குடும்பப்பாங்கான பெண்ணிற்கு, பாங்க்/எல்.ஐ.சி./அரசு வேலையில் உள்ள நல்ல குடும்பத்தைச் சேர்ந்த மணமகன் தேவை. ஜாதகம் அனுப்பவும். எஸ். வைத்யனாதன், 8/2பி, வடிவேலு 2வது குறுக்கு தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. போன் : 5513452.

■ வடமாள், பாரத்வாஜம், பூசம், 27/160 செ.மீ. (எம்.ஏ) மற்றும், தட்டச்சு பணியில் 7 ஆண்டு காலம் அனுபவம். வேலைக்குச் செல்ல தகுதியுள்ள, நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்த, குடும்பப்பாங்கான பெண்ணிற்கு, அரசு பணியிலிருக்கும் வரன் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். உட்பிரிவுகள் சம்மதம். M.V. Krishnamoorthy, Retd. Karnam, Koviloor (P.O.) Poondi (via), Pin : 613502. Thanjavur Dt., Tamil Nadu.

■ வடமாள், கௌசிகம், சுவாதி, 29/பி.எஸ்ஸி, அன்பு, பக்தி ஆரோக்கியம், விட்டுக் கொடுக்கும் சுபாவம், ஆசாரம், தெரிந்த, வீணை, டைப்பிங், டெய்லரிங், இந்தி கம்ப்யூட்டர் தேர்ச்சி பெற்ற அழகான, குடும்பப்பாங்கான பெண்ணிற்கு வரன் தேவை. சி. சந்திரசேகரன், DRO (Retd) 55, திரு.வி.க. ரோடு, விழுப்புரம் - 605 602.

■ Vadamal, Bharadwajam, 23, 5.1" Pooram, B.Sc., (Genetics) DCA fair and good looking seeks alliance from good family well qualified and well settled boys with horoscope. V.B. Subramaniam, 24-115, Vishnupuri, Malkajgiri, Hyderabad - 500 047. Phone : 7053574.

■ ஐயர், வடமாள், நைத்ருப காஸ்யபம், விசாகம், வயது 26/5' B.A., DCA, Pvt. 2000/- மாநிறமான பெண்ணுக்கு தகுந்த நல்ல வேலையில் உள்ள பட்டதாரி மணமகன் தேவை. உட்பிரிவு சம்மதம். எஸ். மாலதி, A-45, ஹிந்து காலனி, சூர்யா அப்பார்ட்மெண்ட்ஸ், நங்கநல்லூர், சென்னை - 600 061.

■ தமிழ் ஐயர், பிரஹசரணம், ஹரிதம், அசுவதி, வசதியான குடும்பம், வயது 27, 5.1" எம்.எல்., சேலத்தில் வக்கீல் தொழில், குடும்பப்பாங்கான அழகான ஒரே பெண். சேலம் மற்றும் சுற்று வட்டாரத்தில் (அ) மாற்றிக் கொள்ளக் கூடிய C.A/BE/BL/Bank staff/LIC/Prof. தனியார் (அ) அரசுப் பணியிலிருக்கும் மணமகன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். G.S. கணபதி, 23A, TVS காலனி, சேலம் - 7.

■ Vadamal, Sadamarshnam, Kettai, 26/165/M.Sc., M.Phil, good looking girl, seeks well qualified, employed grooms from good family. Balasubramanian, Flat SS-I, II Floor, Vasanth Apartments, No. 140/21, Venkatachala Muthali Street, Royapettah, Chennai - 14.

மணமகன் மணமகள் தேவை

■ Madhwa Kannada girl Srivatsa, Poosam, 31/5.4"/3200/- steno private, seeks graduate well settled groom and brother Rohini, graduate, 27/5.6/5000/- sales officer company, seeks graduate employed girl. Mutual/separate. Box No. 30483

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. MANJULA RAMESH
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097
Telephones — Editorial : 2345624; Circulation Manager; Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax 2345621
Annual Subscription : India Rs. 150/-; Overseas : Rs. 750/- (Air Mail)
Half Yearly Subscription : India Rs. 75/-; Overseas : Rs. 375/- (Air Mail)


மங்கையர் மலர்
சுற்றுலாவுக்குத் திட்டமிடலாம்!
– பிப்ரவரி '99 இதழுடன் இணைப்பு


அழகும் பாதுகாப்பும் அளிப்பதுவே
ஒரு உண்மையான பியூட்டி சோப்.
மெடிமிக்ஸ் இரண்டும் தருது.
இதை மட்டும் மறந்திடாதே!
இப்போது புதிய நறுமணத்துடன்
MEDIMIX
AYURVEDIC BATH SOAP
NEW
பரிபூரண
ஆயுர்வேத
குளியலுக்கு
குடும்ப
பராமரிப்பு சோப்
மெடிமிக்ஸ்
75 கிராம் மற்றும் 125 கிராம் பாக்கிலும் கிடைக்கிறது.
Visit us at http://www.medimixindia.com



• ஆக்ஸிஜன் சிலிண்டருடன் 90 வயதுக் கிழவர்!

எங்கள் அனுபவத்தைச் சொல்கிறோம்!

சுற்றுலா போவது சுகமான அனுபவம்தான்! இருந்தாலும் எந்த சீசனில் போனால் நல்லது, நாம் கொண்டு செல்ல வேண்டிய பொருட்கள், உடல் நலக் குறைவானால் என்ன செய்ய வேண்டும், திட்டமிடுதல், வழிகாட்டுதல் இருந்தால் மேலும் சிறப்பாக அமையும்தானே! அப்படிச் சென்றவர்களின் அனுபவங்கள் உங்கள் சுற்றுலா பயணத்தை இனிய, இன்பச் சுற்றுலாவாக்க உதவும்.



• அகிலா


அகிலா ரங்கநாதன்

திருமணமாகி, மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே என் கணவரும், நானும் இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் செய்து விட்டோம். அதனால் அயல்நாடுகளுக்குச் செல்ல வேண்டுமென்ற துடிப்பும், ஆசையும் இருவருக்குமே இருந்ததால் '93ம் ஆண்டே விசாவுக்கு முயற்சித்தோம். அமெரிக்கா, கனடா, லண்டன் போன்ற ஊர்களுக்கு முதலில் போகாமல் சிங்கப்பூர், ஹாங்காங் நாடுகளுக்கே கிடைத்தது. சந்தோஷமாய் போய் வந்தோம். அமெரிக்காவிற்கு விசா கிடைப்பது சிரமம்தான். நம் தொழில், உறவினர்கள், சொத்துக்கள் அனைத்தும் இந்தியாவில் இருப்பதால் கண்டிப்பாக திரும்பி விடுவோம் என்ற உத்தரவாதத்தின் நம்பிக்கையின் பேரில்தான் கிடைக்கிறது. '96ல் விசா கிடைத்தது. இரண்டாம் வகுப்பு படிக்கும் என் மகளை இங்கு விட்டுச் செல்வதும் அவர்கள் நம்பிக்கையைப் பெற ஒரு காரணமானது.

என் கணவர் ஒரு சார்டர்ட் அக்கௌண்டண்ட் ஆக இருந்தாலும் வேதங்கள் கற்றவர். விமர்ஷா நந்தேந்திர சுவாமிகள் இவரது தாத்தா. இவர் தாத்தாவின் தந்தையும் சன்யாசம் பெற்றவர் தான். காசியில் வசித்தவர்கள். இந்திய கலாச்சாரத்தை, வேதங்களை, இதிகாசங்களை பூரணமாக அறிந்த வைதீக பெரியவர்கள் எடுத்துச் சொல்லி வருகிறார்கள். இளைய தலைமுறையினருக்கு என் கணவர் போன்ற உயர்கல்வியுடன் கூட வைதீகமும் படித்துத் தேர்ந்தவர்கள் எடுத்துச் சொல்வதால் நம் இந்திய கலாச்சாரத்தின் வளர்ச்சிக்கு அணில் போல் உதவ முடியுமே என்ற எண்ணமும், என் தாத்தாவின் சிஷ்யர்களின் அழைப்பும் எங்களை அயல்நாடு செல்லத் தூண்டியது என்பதே நிஜம்!

இன்றைய இளைஞர்கள் வகுத்த பாதையில் செல்ல ஒவ்வொன்றிற்கும் காரணம் கேட்கின்றனர். அங்கு இருந்த அத்தனை நாட்களும் அவர்களது சந்தேகங்களுக்கு விளக்கங்கள் முறைப்படி, அவர்கள் மனதிற்கு திருப்தி அளிக்கும்படி எடுத்துச் சொல்லப்பட்டு, பூஜைகளும், ஹோமங்களும் சிறப்புற நடந்தன.

முதலில் இங்கிலாந்து சென்று அங்கிருந்து அமெரிக்கா சென்றோம். அமெரிக்கா முழுவதையும் யாராலும் சுற்றிப் பார்க்கவே முடியாது. நாம் எந்த இடத்துக்குச் செல்கிறோமோ அதனைச் சுற்றியுள்ள ஊர்களைப் பார்த்து மகிழலாம். மேலும் மிக முக்கியமானது, இந்தியாவிலிருந்து கிளம்புமுன்



• நீரில்லா நாட்டில் பச்சைவளம்

visit . USA எனும் முறையில் அங்கு செல்ல வேண்டிய பல ஊர்களுக்கு மொத்தமாக ஆறு, எட்டு, பத்து இடங்களுக்கு திட்டமிட்டு கூப்பன்கள் வாங்கிச் செல்வது அவசியம். அங்கு போனதும் ஒரு இடத்திற்கு பதில் வேறு இடம் போக விரும்பினால் 75 டாலர் அபராதம் கட்ட வேண்டி வரும். அமெரிக்காவிலிருந்து தனித் தனியாகக் கட்டணம் செலுத்தி பல ஊர்களுக்கு செல்வதால் கட்டணம் பலமடங்கு அதிகமாகும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

விமான நிலையத்துக்கு என் தாத்தாவின் சிஷ்யர் வருவதாக இருந்தது. முன்பின் பார்த்ததில்லை. காத்திருந்த சமயம் அருகிலிருந்த பெண் டாக்டரிடம் எங்கள் அமெரிக்கப் பயணத்தைச் சொன்னதும் "கவலைப் படாதீர்கள். யாரும் வராவிட்டாலும் நீங்கள் என் வீட்டில் தங்கலாம்" என்றார். எங்களுக்கு ஆழ்ந்த இறைநம்பிக்கை இருந்தததால் இறைவன் நம்முடனேயே வருகிறார் என்று நிலை கலங்காமல் இருந்தோம்.



• லலிதா

பெட்ரோல் விலை கொக்கோகோலா, தண்ணீர் இரண்டின் விலையைவிட மிகமிகக் குறைவு. மூன்றரை லிட்டர் பெட்ரோல் விலை முப்பத்தி ஐந்து ரூபாய்தான் என்பது எங்களை வாய் பிளக்கச் செய்தது! சர்வீஸ் சார்ஜ் அங்கு அதிகம் என்பதால் டாக்ஸியில் போவது 'காஸ்ட்லி'. இந்தியாவிலிருந்து வந்து ஆன்மீக உரையாற்றி பூஜை, ஹோமங்கள் செய்வது பலருக்கும் தெரிந்து தங்கள் வீடுகளுக்கு அழைத்ததுச் சென்றதையும் அவர்களது உபசரித்தல், அன்பு காட்டுதலையும் அனுபவித்து மிகுந்த மகிழ்ச்சி அடைந்தோம்.

யூ.எஸ்ஸிற்கு அட்லாண்டிக் வழியாகப் போனால் கட்டணம் குறைவாகவும் சிங்கப்பூர் வழியாகப் போனால் அதிகமாகவும் இருக்கின்றது. தினமும் இன்டர்நெட் மூலம் காலை முதல் இரவு வரை உள்ள விமானங்கள், இருக்கைகள் விவரங்கள் தெரிந்து கொள்ள முடிகிறது. பிறகு போன் செய்து நாமே விசாரித்தால் எந்த விமானத்தில் கட்டணம் குறைவாக உள்ள தௌ தெரிந்து பயணிக்கலாம்.

எங்களை ஆச்சரியப்பட வைத்த சிஸ்டம் ஒன்றை உங்களுக்குச் சொல்லவா? விமானத்தில் 'சீட்' நிரம்பியதும் கிளம்புமுன் யாரேனும் ஒரு பிரயாணி அதி அவசரமாகச் செல்ல சீட் கேட்டால் அவரிடம் 50 டாலருக்கு பதில் 1500 டாலர் பெற்றுக்கொண்டு, அந்த விமானப் பிரயாணி ஒருவர் தன் சீட்டை விட்டுக் கொடுத்தால் மூன்று வருடங்கள் அவர்களது ஏர்லைன்ஸில் எந்த ஊருக்கு வேண்டுமானாலும் கட்டணமின்றி செல்லலாம். பணமும் கொடுக்கின்றார்கள்.

ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு தொடர்பாக விமான சர்வீஸ் உண்டு. முதலில் கிளம்பிய விமானம் தாமதமாகி விட்டது. பல கேட்டுகளைத் தாண்டி நாங்கள் பிடிக்க வேண்டிய தொடர்பு விமானத்தைப் பிடிக்கும் இடத்துக்கு வந்து சேர சிறிது தாமதமாகி விமானமும் கிளம்பி விட்டது. முதல் விமானம் லேட்டானால் மற்றதும்



• அபுதாபி நீர்வீழ்ச்சி

புகழ் பெற்ற ஜோதிஷர், மந்திர சாஸ்திர நிபுணர் பண்டித காழியூர் ம. பத்மநாபன்



எனது தந்தையார் அடியேனுக்கு மந்திரோபதேசம் செய்யும் காட்சி

பிரபல ஜோதிஷர் (பண்டித காழியூர் பத்மநாபன்) காழியூர் ஸ்ரீனிவாச்சாரியாரின் மூத்த புதல்வரும், ஜோதிஷ மந்திர சாஸ்த்திரங்களில் 45 வருட காலம் நன்கு தேர்ச்சியும், ஆசீர்வாதமும் பெற்றவரால் மகத்தான சக்தி வாய்ந்த, யந்திரங்கள் சக்ரங்கள் (வெள்ளியில் தயாரிக்கப்படுகின்றன) மகாலக்ஷ்மி கவசம் ரூ. 250/- மகா சுதர்சன யந்திரம் ரூ. 250/- லக்ஷ்மி நரசிம்ம கவசம் ரூ. 350/- தனாகர்ஷண யந்திரம் ரூ. 350/- மகா சுதர்சன சக்கரம் ரூ. 600/- மஹாலக்ஷ்மி சக்கரம் ரூ. 600/- இவை தவிர அநேக விதமான யந்திரங்களும், கவசங்களும், (விசேஷ பூஜாக்ரமப்படிக்கு) தயாரித்து அனுப்பப்படும். வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகை டி.டி. மூலம் அனுப்ப வேண்டும். தபால் செலவு ரூ. 50/- B.P.O. மூலம் அனுப்பி பெறலாம்.

கம்ப்யூட்டர் ஜாதகம் தமிழ்/ஆங்கிலம் ரூ. 50/- ஜாதகத்தின் பொதுப் பலன்கள் நேரில் சொல்வதற்கு ரூ. 100/- ஆயுள் பலன் (வருஷம், மாதம், தேதி, நேரம், ஊர்) ரூ. 200/- சாதாரண தபால் மூலம் அனுப்ப ரூ. 10/- பதிவுத் தபால் மூலம் அனுப்ப ரூ. 25/-

பிரபல ஜோதிஷர்

பண்டித காழியூர் பத்மநாபன்

'தபோநிதி'

நெ. 5. வித்யோதயா முதல் மெயின் தெரு
த.பெ. எண்: 1411, தி. நகர்
சென்னை - 600 017. போன் : 8263814
தென் இந்தியா (கிளைகள் ஏதும் கிடையாது)
நேரில் சந்திக்க: காலை 8 மணி முதல் 11 மணி வரை

முக்கிய கவனிப்பு: தபால் மூலம் வரும் எல்லா கடிதங்களும் வெகு கண்டிப்பாக பரம இரகசியமாக வைக்கப்படுகின்றன. வீட்டில் கிரகதோஷம் மற்றும் எந்த தோஷங்களும் பாதிக்காமலிருப்பதற்கு, சுதர்சன ஹோமம், மகா சுதர்சன சக்கரம் பிரதிஷ்டை செய்து தரப்படும். உள்ளூர் வாசிகளுக்கு மட்டுமே செய்யப்படும். நேரிலோ தபால் மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

SRIMATHE, RANGA RAMANUJA MAHADESIKAYA NAMAHA
JAI BADRI VISHAL

BADRI TOURIST

Smt. KALARAJAN

249-D, Pocket C, Mayur Vihar Ph - II, New Delhi - 110091.
Phone : 2471779. Fax : 011-6163736.

1. **சாளக்கிராமம்–முக்திநாத் – 12 days (28வது தடவை)**
   நியுடெல்லி–நைமிசாரண்யம்–அயோத்தியா–கோரக்பூர்–போக்ரா–கண்டகி நதி–முக்திநாத்–காட்மாண்டு–பசுபதிநாத்–நியுடெல்லி. **Starting Date : 8-04-99 Fare Rs. 5,500/- (Helicopter charges extra)**
1. **Kasi Programme - 13 days**
   நியுடெல்லி–நைமிசாரண்யம்–அயோத்தியா–காசி–கயா–அலகாபாத்–ஆக்ரா–மதுரா–பிருந்தாவனம்–ஜெய்பூர்–புஷ்கர்–குருக்ஷேத்ரா–நியுடெல்லி. **Starting Date : 1-5-99 Fare Rs. 5,500- (பத்ரிநாத் சேர்த்து Rs. 7,000/- 20 days)**
3. **பத்ரிநாத் மட்டும் ஹரித்துவார் ரிஷிகேஷ் உட்பட 7 நாட்கள்**
   புறப்படும் தினங்கள் **(1) 3-5-99, (2) 13-5-99, (3) 20-5-99, (4) 4-6-99 Fare Rs. 1,950/-.**
4. **பத்ரிநாத்–கேதார்நாத்–ஹரித்துவார்–ரிஷிகேஷ் உட்பட 9 நாட்கள் புறப்படும் தினங்கள்**
   (1) 13-5-99 (2) 20-5-99 (3) 4-6-99 Fare Rs. 2,700/-.
5. **பத்ரி–கேதார்–யமுனோத்ரி–கங்கோத்ரி – 14 நாட்கள் புறப்படும் தினம்**
   20-5-99 Fare Rs. 5,200/-.
6. **பஞ்சபத்ரி, நியுடெல்லி–ஆதிபத்ரி–அர்தபத்ரி–யோகபத்ரி–பத்ரிவிஷால்–பவிஷ்யபத்ரி–9 day 4-6-99 Rs. 3000/-.** சிம்லா, குலு மணாலி யாத்திரைகளும் நடத்துகிறோம். மேற்படி யாத்திரைகள் டில்லியிலிருந்து வசதியான பஸ், தென்னிந்திய பிராமணர்களால் தயாரிக்கப்படும் உணவு, தங்கும் வசதி (Dormitory) உட்பட யாத்திரைகள் டெல்லியிலிருந்து **கலாராஜன்** நடத்துகிறார்கள்.

யாத்திரைபற்றி கீழ்கண்ட முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம்.

1. Sh. D. Soundararajan, F-5, Chandra Flats, 43 and 44, Brindavan Street, West Mambalam, Chennai - 33. Phone : 4843986.
2. Sh. R. Srinivasan, 301/D, Pilkington Road, Ayananavaram, Chennai-23. Ph. 6460437.
3. 3. Sh. M.T.V. Raghavan, B-15, Neelakanth Chayya Apts., M.J. Phule Road, (Near Maratha Mandir Hall) Dombivli (W), Bombay-421202. Ph. 481371 (0251)

சுற்றுலா! நாங்க அழைத்துப் போகிறோம்...

இளந்திரையன் (ஸ்ரீ டிராவல்ஸ்)

"இருபத்தைந்து வருடங்களாக டிராவல் ஏஜென்ஸியை நடத்திக்கிட்டு இருக்கேன்.

உண்மையில் டூர் செல்வது என்பது மிக அற்புதமான கலை. நான் எப்படி அதை உணர்ந்தேனோ அதே போல பயணிகள் அதை முழு கவனத்தோடு உன்னதமாக உணர வேண்டும் என்பதற்காகவே மிகுந்த சந்தோஷமளிக்கக்கூடிய வகையில் நல்ல உணவு, நல்ல தங்குமிட வசதி ஒவ்வொருவருக்கும் தனி ரூம் குடும்பத்தோடு வருபவர்களுக்கு அதற்குத் தகுந்தாற்போல் என்று ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துச் செய்கிறோம்.

வித்தியாசமாக ஒவ்வொரு டூரிலும் ஏதாவது ஒன்றை செய்ய வேண்டும் என்பது எனது எண்ணம். கண்டிப்பாக ஒவ்வொரு டூரிலும் நட்சத்திர ஓட்டலில் விருந்து உண்டு. அதில் பாட்டுப் போட்டி, டான்ஸ் என்ற நல்லவிதமான பொழுதுபோக்கு அம்சமும் அதற்கு ஊக்கப்படுத்துவது போல் சின்னச் சின்ன பரிசுகளும் கொடுத்து ஒரு நல்ல சூழலை ஏற்படுத்தித் தருவோம். என்னுடைய முக்கியக் குறிக்கோளே எங்கள் டூர் நினைவுகளை ஸ்ரீ டிராவல்ஸ்ஸில் பயணித்தவர்கள் எந்த நாளிலுமே மறக்க இயலாத பசுமையாக பெற வேண்டும் என்பதே."

இதுபோன்ற கொண்டாட்டங்கள் அவசியம்தானா? அதற்கு நிறைய செலவாகுமே?

"கொண்டாட்டம் என்று சாதாரணமாக அதைச் சொல்லக் கூடாது. ஒரு குடும்பத்தில் நடக்கும் விழா போல பல குடும்பங்களில் இருந்து வந்திருக்கும் பல விதமான மனிதர்களும் நம்மோடு கலந்து பேசி நட்போடு விளங்க இந்த 'கெட் டு கதர்' வாய்ப்பு தரும். முக்கியமாக நாம் எல்லோருமே ஸ்டார் ஓட்டல்களுக்குப் போய் வருவோம் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் விலை அப்படி."

இந்தச் சந்தர்ப்பங்களில் சென்றால்தான் உண்டு. எனவேதான் கட்டாயமாக இதை எப்படியாவது செய்து விடுவேன். எனது கைவிட்டும் நிறைய இதற்காகச் செலவு செய்கிறேன். கிடைக்கும் லாபத்தில் உண்மையில் இதுபோன்ற நல்ல விஷயங்களுக்காகவே நிறைய செலவிட்டு விடுகிறேன்."

ஒருவருக்கு ஒரு ரூம் என்றால் உங்கள் கட்டணத் தொகை அதிகமாக இருக்குமே? தவிர ஹோட்டல்கள் 5 ஸ்டார்களாகவே தேர்ந்தெடுக்க முடியுமா?

"கட்டணத் தொகை மற்ற ஏஜென்ஸிக்களைப் போலவே நார்மலான கட்டணம்தான். ஹோட்டல்களில் அனைத்து வசதியும் இருக்கிறதா எனப் பார்த்துக் கொள்கிறோம். குளிர்காலத்தில் போகும் டூர்களில் ஹீட்டர் வசதியுள்ள ஹோட்டலையே தேர்ந்தெடுப்பேன். இப்

அப்படி ஆகும் எனும் இந்திய எண்ணமே எங்களுக்கு இருந்தது. உடனே ரிசப்ஷனில் இருந்த கிளார்க் எங்களிடம் 'சாரி' கேட்டு அருகில் இருந்த ஹோட்டல் காரை வரவழைத்து, எங்களை அனுப்பி ரூம் போட்டு, உணவு தந்து மறுநாள் காலை விமானத்தில் அனுப்பி வைத்தார். ஆச்சரியம் அடங்கவே பல மணி நேரமாயிற்று. ஆனால் இங்கு சரியான பதில் சொல்லாமல், மேலதிகாரிகளைக் கேட்க வேண்டுமென்று சட்ட திட்டங்கள் பேசி அலைக்கழித்து அல்லாட வைப்பதைப் பார்த்தே பழக்கப்பட்டு விட்டோமே!

கனடாவில் உள்ள டோரொன்டோவில் என்னைச் சந்தித்த ஒருவர். அங்குள்ள இருபத்தி நாலு மணி நேர தமிழ் ஒலிபரப்பில் வேலை செய்பவராக இருந்ததால், உடனே ஏற்பாடு செய்து எங்களை பேட்டி எடுத்தும், இந்திய கலாச்சாரம், பண்பாடு பற்றி உரையாற்றவும் ஏற்பாடு செய்தார். அங்கு மட்டுமே முப்பத்து ஐந்து கோயில்கள் உள்ளன என்றால் பாருங்களேன்! இலங்கைத் தமிழர்கள் அங்கு அதிகம் வாழ்வதோடு ஆன்மீகம் என்றால் அவர்களிடம் கற்றுக் கொள்ளுமளவு இறை நம்பிக்கையைப் பார்த்தால் அனைத்தும் தெரிந்தவர் போல் இருக்கும் நாம் வெட்கப்பட வேண்டும். பூஜை முறைகளும், அதற்குரிய புனிதப் பொருட்களும். பூஜா



• இமயமலையின் மீது



பாது மகிழ்ந்து வந்த [illegible] வந்த இளந்தம்பதிகளுக்கு ஸ்பெஷல் அறை போடச் சொன்னேன். சினிமாவில் காட்டுவார்களே சுற்றும் படுக்கை, அந்த மாதிரியுள்ள ரூம். அவர்கள் வாழ்க்கை பூரா இந்த 'ஹனிமூனை' மறக்க மாட்டார்கள்'' எனச் சிரிக்கிறார்.

ஒரு வருடத்திற்கு இத்தனை டூர் என்ற கணக்கு ஏதும் உள்ளதா?

''அப்படி கணக்கெதுவும் கிடையாது. என்னுடையது சீசன் ஓரியண்டட் டூர். எந்தக் காலத்தில் எங்கு செல்வது சிறப்பாக அமையும் என்பதை பார்த்துத்தான் டூரை கண்டக்ட் செய்வேன். நிறைய இடைவெளி ஒரு டூருக்கும் மற்றொரு டூருக்கும் இருக்கும். டூர் எத்தனை செய்கிறோம் என்பதை விட எல்லா டூரையும் எந்தவித சங்கடமுமின்றி வெற்றிகரமாக செய்கிறோம் என்பதே பெரிய விஷயம். எங்களுடையது 'பேமிலி டூர்' வேறு.''

ஃபேமிலி டூர் என்றால், தனியாக வருபவர்களுக்கு அனுமதி கிடையாதா?

''அப்படி இல்லை. ஃபேமிலி டூர் என்று சொன்னால் பலருக்கும் குடும்பத்தோடு ஊரைச் சுற்றிப் பார்க்க ஆசை பிறக்கும். அதன் வழி குழந்தைகள் பெரியவர்கள் அனைவருக்கும் சந்தோஷமாக இருக்குமே.

அதோடு மட்டுமல்லாமல் அவரவர் குடும்ப சகிதமாக வரும் போது தனியாக ஒதுங்கி ஒதுங்கி போகக்கூடிய குணமுள்ளவர்கள் கூட அனைவரோடும் கலந்து பேசி ஒரு உற்சாகமான சூழலைப் பெறுவார்கள். பலர் குடும்ப நண்பர்களாகி ஒருவருக்கொருவர் நட்பு பாராட்டி மகிழ்வார்கள். அதற்காகத் தனியாக வருபவர்களுக்கு அனுமதி இல்லை என்பதில்லை.''

காலேஜ் டூர்களை எடுப்பதில்லை என்று பல தனியார் ஏஜென்ஸிகள் சொல்கின்றனவே!

''அப்படி எதுவும் எங்களுக்கு இல்லை. சமீபத்தில் காலேஜ் மாணவர்கள் என்னை அணுகி நார்த் இண்டியா டூருக்காக கேட்டார்கள். ஒப்புக் கொண்டு அவர்களோடு நானும் சென்றேன். குரு துவாராவில் ஓர் இடத்தில் உணவை இரு கை நீட்டி வாங்கிக் கொள்ள வேண்டும். தவிர

சாமான்களும் இல்லாத வீடுகளே இல்லை எனலாம்.

பல அழகிய கண்ணுக்கினிய காட்சிகளையும், விளையாட்டு இடங்களையும் மிகப் பெரிய கட்டடங்களையும் கண்டு வியந்த நான் அதிகம் வியந்தது, நயாகரா நீர்வீழ்ச்சியைக் காண தொண்ணூறு வயது முதியவர் மூக்கில் டியூப் செருகியபடி ஆக்ஸிஜன் சிலிண்டரை தன் கையால் தானே தள்ளியபடி தனியாக வந்து ரசித்து நின்றதுதான். நீர்வீழ்ச்சியைவிட இதை ரசித்த நான் அவரை போட்டோ எடுத்து வைத்துக் கொண்டேன். அடுத்தவரை [illegible] பதைவிட, வயது ஆரோக்கியம் [illegible]லை எதற்[illegible]ம் ஒரு தடை[illegible]ல்ல என[illegible]தை புரிய [illegible]வைத்தார் என்றே சொல்[illegible]லலாம். அங்கு அரசும், மற்றவர்களும் மூத்தவர்களுக்கு மிகுந்த மரியாதையையும் சலுகையும் கொடுக்கின்றனர்.

அயல்நாட்டிலுள்ள இந்தியர்கள் நம்மை, நமது உணவுப் பழக்கத்துக்குத் தகுந்தபடி உபசரித்து தங்க வைப்பதுபோல் இங்குள்ள அவர்களது உறவினரால் முடிவதில்லை. காரணம் அவர்களின் அன்றாட வாழ்க்கை முறை, தண்ணீருக்குப் பதில் அடிக்கடி ஐஸ்களை உருக வைத்துக் குடிப்பது. இவற்றினால் தகுந்தாற்போல உபசரிக்கவும் முடிவதில்லை. ஹோட்டலும் சரிபட்டு வருவதில்லை.

நம்மைப் போல் எந்நேரமும் விருந்தாளிகளை வரவேற்று உபசரிக்க அவர்களால் இயலுவதில்லை என்பதுதான் நம்மைப் போன்றவர்களுக்கு உறுத்தலாக இருக்கிறது.



• சரோஜா சேதுராமன்

திருமதி. சரோஜா சேதுராமன்

என் கணவர் இரயில்வே உத்தியோ

நமது தட்டை நாமே அலம்ப வேண்டும். வித்தியாசமான இடத்துக்கு அழைத்துச் சென்றதில் அவர்களுக்கு மகிழ்ச்சி. எனக்கும் மகிழ்ச்சி. யாராக இருந்தாலும் எவ்வளவு பெரிய பணக்காரர்களாக இருந்தாலும் இரு கை நீட்டியே உணவை வாங்கியும், அதே சமயம் தானே தனது தட்டுக்களை அலம்புவதும் எத்தனை அற்புதமான விஷயங்கள். இளையதலைமுறையினரை இந்தப் பயணம் சிந்திக்கவும் வைத்தது.

தவிர நல்ல நம்பிக்கையை மாணவர்கள் மீது வைத்துள்ளோம் என்பதை உணர்த்தினோமென்றால் அவர்களே அதற்கேற்றவாறு நடந்து கொள்வார்கள் என்றே நினைக்கிறேன்.''

டூரில் ஏதாவது விசேஷமாக அதாவது திருத்தல யாத்திரைகள் தவிர உள்ளதா?

இளம் தம்பதியருக்காகவே சென்னையிலிருந்து டெல்லி, சண்டிகர், குலு மனாலி சிம்லா டூர் ஏற்பாடு செய்துள்ளோம். இதற்கு ஹனிமூன் டிரிப் என்றுதான் பெயர். ஆனால் நாங்களோ சற்று வித்தியாசமாக சஷ்டியப்த பூர்த்தி முடிந்தவர்களும் வரலாம் என்று சொல்லியிருந்தோம். உண்மையில் எதிர்பாரா அளவுக்கு சஷ்டியப்த பூர்த்தி முடிந்த தம்பதியர் கூட்டமும், இளம் தம்பதியர் கூட்டமும் சமமாக உள்ளது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். மிக மிக வித்தியாசமாகவும் அதேசமயம் நல்ல சூழலையும் கொடுக்கும் இந்த டூர்.

என்றாலும் இளம் தம்பதியர் களுக்கு சற்று கூடுதல் கவனிப்பை நாங்கள் கொடுக் கிறோம் என்பதை மறுக்க முடியாது. வாழ்க்கையில் எல்லோருக்கும் வரக்கூடிய மறக்க முடியாத இந்த நாட்களை கூடியவரை நல்ல ரம்மியமான சூழலில் அவர்களுக்கு உருவாக்கித் தருகிறோம்.

என்னைப் பொறுத்தவரை டூர் செல்பவர்கள் தங்கள் கவலை, டென்ஷன் அவசரடிகளை மறந்து ஓய்வெடுத்து மனதை உற்சாகமாக வைத்துக் கொள்ளத்தான் டூர் வருகிறார்கள். எனவே, எல்லாமே சிறப்பாக அமைந்தால்தான் பயணம் முழுமை பெறும். எப்போதாவது செய்யும் செலவுக்கு வேல்யூ இருக்க வேண்டுமே?

தவிர பலர் அவர்களாகவே வந்து இப்படி ஊர்கள் போக வேண்டும். இத்தனை பேர் வருகிறோம் என்று சொல்வார்கள். அதற்கேற்றவாறு டிக்கெட் புக் செய்து அழைத்துப் போக வேண்டிய இடங்களுக்குத் தேவையான ஏற்பாடுகள் செய்து பத்திரமாக சென்று வர தனிப்பட்ட டூரும் ஏற்பாடு செய்து தருகிறோம்.

மேலும் வேலையில் உள்ளவர்களுக்குக் கிடைக்கும் எல்.டி.சிக்கும் ஏற்றவாறு டூர்களை அரேஞ்ஜ் செய்து அவர்கள் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டிய ட்ரெயின் டிக்கெட் போன்ற பல பில்களையும் நாங்கள் பெற்றுக் கொடுத்து விடுகிறோம்.''

சந்திப்பு : பா. சுஜாதா

கத்திலிருந்து ஓய்வு பெற்றவர். அதனால் பல ஊர்களுக்குச் செல்லும் வாய்ப்பு கிடைத்தது. இருந்தாலும் சென்ற வருடம் கர்நாடகாவிற்கு சுற்றுலா சென்றதை நான் மறக்கவே முடியாது. இசையில் எனக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. திரு. எல்.ஆர். ராவ் என்பவரிடம் 'தாசர்பதம்' கற்றுக் கொண்டேன். கன்னட மொழியில் பாடல்கள் இருந்ததால் அவர் ஒவ்வொரு பதத்திற்கும் அர்த்தம் சொல்லித் தந்த விதத்தில் எனக்குக் கர்நாடக மாநிலத்திலுள்ள அழகான உடுப்பி கிருஷ்ணர், சுப்பிரமணியர், மூகாம்பிகை போன்ற தெய்வங்களை தரிசித்து வர வேண்டும், கற்றுக் கொண்ட பாடல்களை அக்கடவுளர் சன்னதி முன் பாட வேண்டும் என்ற ஆசை - என்று சொல்வதைவிட வெறியே இருந்தது என்று சொல்லலாம்.



• பிரேமா



• கர்நாடகக் கோவில்

97ம் வருடம் ஜூலை மாதம் நானும், என் கணவரும் மங்களூர் சென்றோம். அங்கிருந்து நிறைய ஆட்டோக்கள் குறைந்த கட்டணத்திற்கு பஸ் நிலையம் செல்கிறது. பஸ் நிலையத்திலிருந்து 'மினி பஸ்' பிடித்து நியாயமான கட்டணம் தந்து உடுப்பியை அடைந்

(தொடர்ச்சி 212-ம் பக்கம்)





• சுதந்திரதேவி சிலை

அமெரிக்கா!

நம் நாட்டு இளைஞர்களின் கனவு உலகம்!!

படித்தவர்களின் எதிர்கால நம்பிக்கை!!!

பாலும், தேனும் பெருக்கெடுத்து ஓடும் இன் கலைகள் தரும் இனிய நாடு அது.

சென்று தான் பார்த்து வருவோமே என செல்லும் செல்வந்தர்கள் பலர்.

முதல் சோதனை "விசா" கிடைப்பது. கிடைத்து விட்டால் "பம்பர்" குலுக்கலில் பரிசு கிடைத்த

ஹலோ,

மகிழ்ச்சிதான். இதோ புறப்பட்டாகிவிட்டது. முதல் முறையானால் மகிழ்ச்சியும், சிறிது அச்சமும் கலந்த உணர்வுதான் ஏற்படுகிறது.

என்ன எடுத்துச் செல்ல வேண்டும் என்பதைவிட, எவற்றை எடுத்துச் செல்லக் கூடாது என்பதே முக்கியமாகும். எனது பெண்ணிற்கு ஜாங்கிரி என்றால் உயிர்! மாப்பிள்ளைக்கு கும்பகோணம் வெற்றிலை என்றால் வெறி!! என் பேரனுக்கு நான் சமைத்த உணவு என்றால் அலாதி பிரியம். பேத்திக்கு மாம்பழம் என்றால் கொள்ளை ஆசை–

என்ற எண்ணங்களையெல்லாம் இங்கேயே மூட்டை கட்டி வைத்து விடுங்கள். ஏனெனில், நியூயார்க் நகர விமான நிலையத்தின் மோப்ப நாய்கள் உங்களை வெளியே விடாது.



• உலக வர்த்தக மையத்தின் 109-வது மாடியிலிருந்து

விலை உயர்ந்த ஆபரணங்களை உங்கள் தோள் பையிலேயே (SHOULDER BAG) வைத்துக் கொள்வது பாதுகாப்பாகும். புறப்படும் முன்பு "பாஸ் போர்ட்", "விமான பயணச் சீட்டு" ஆகியவற்றை மறக்காமல் எடுத்துக் கொள்ளவும்.

விமான நிலைய விதிமுறைகளை முடித்துக் கொண்டு, விமானத்திலும் ஏறியாயிற்று. விமானத்தில் தரப்படும் உணவைப் பற்றி அதிகமாக கற்பனை செய்து கொண்டு விடாதீர்கள். எதிர்பார்த்தால், ஏமாற்றத்தை சற்று அதிகமாக உணர வேண்டியிருக்கும்.

ஏ.எம். ராஜகோபாலன்

விமானம் விரைந்து கொண்டிருக்கிறது. இருக்கையில்தான் சற்று வசதியாக சாய்ந்து கொள்ளுங்களேன்! ஜன்னல் பக்கம் இருக்கையானால், சற்று வெளியில் பாருங்கள். விமானத்திற்குக் கீழே பஞ்சு பொதிகள் போன்று மென்மையான மேகக் கூட்டங்களே.

இருக்கைக்கு நேரில், சற்று உயரே உள்ள தொலைக்காட்சி பெட்டியில், நாம் எந்த நாட்டின் மேலே பறந்து கொண்டிருக்கிறோம் – எவ்வளவு உயரத்தில் என்பவை தெரிகிறது. இவ்வளவு தூரமா வந்து விட்டோம்? – மனம் பின்நோக்கி, வீட்டையும், வீட்டில் உள்ளவர்களையும் நினைக்கிறது.

திடீரென்று, விமான பணிப

பெண், இருக்கைக்குப் பக்கத்தில் உள்ள ஜன்னலை மூடுகிறார். விளக்குகள் அணைக்கப்படுகின்றன. இரவு வந்து விட்டதை அப்போது தான் உணர்கிறோம். இவற்றிற்கு இடையில் சிற்றுண்டி, தேநீர் அல்லது காப்பி, உணவு ஆகியவை தரப் படுகின்றன.

விமானம் வெகு வேகத்தில் பறந்து, தூரத்தைக் கடந்து பூமியின் கிழக்கு - மேற்கு மண்டலங்களைக் கடப்பதால், கால - நேர வித்தியாசம் (Time Differenital Zone) உடலிலும், உள்ளத்திலும் விவரிக்க முடியாத ஏதோ ஒரு மாறுதலை ஏற்படுத்துவதை உணர்கிறோம். உணவும் அதிகமாக சாப்பிட முடிவதில்லை. இதனை Jet Lag என்றும் கூறுகிறார்கள்.

நம் நாடும், அமெரிக்காவும் பூமியின் எதிர் எதிர் அரை கோளத்தில் (Hemisphere) உள்ளதால், இங்கு பகல் அங்கு இரவாகவும், அங்கு பகல் இங்கே இரவாகவும் அமைகின்றன. திடீரென்று இத்தகைய இயற்கை மாறுதல்களுக்கு ஆட்படுவதாலேயே இந்த Jet Lag ஏற்படுகிறது. அதனால் அமெரிக்கா போய் இறங்கியவுடன், அசதியும் ஏற்பட்டு விடுகிறது.

விமானப் பயணம் எடுத்துக் கொள்ளும் காலம் கீழே தரப்பட்டுள்ளது.

பம்பாய் - லண்டன் : 10 மணி நேரம்

லண்டன் - நியூயார்க் : 6 மணி நேரம்

லண்டனில், விமானத்தைச் சுத்தம் செய்வதற்கும், விமானிகள் பணி ஆற்றுவோர், அதிகாரிகள் மாறுவதற்கும் - ஒன்றரை மணி நேரம். (சுமார்)

செயின்ட்லாரன்ஸ் நதித் தீவுகளில்... ஒரு பக்கம் அமெரிக்கா; மறு பக்கம் கனடா



ஜெர்மனி வழியாகவும் சில விமான சர்வீசுகள் உள்ளன. (அமெரிக்காவில் உள்ள "லாஸ் ஏஞ்ஜெல்ஸ்" கடற்கரைப் பக்கம் செல்பவர்கள் சிங்கப்பூர் டோக்கியோ மார்க்கமாக செல்ல வேண்டும்)

லண்டனிலிருந்து நியூயார்க் விமானப் பயணம் அட்லான்டிக் மகா சமுத்திரத்தின் மீது நிகழ்கிறது. உடலுக்கு சற்று களைப்பை ஊட்டினாலும், அமெரிக்காவை நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்ற ஆவலும், ஆர்வமும் உள்ளத்திற்கு உற்சாகத்தைத் தருகிறது.



அமெரிக்கா!

விமானியின் அறிவிப்பு கனவைக் கலைக்கிறது. இன்னும் சிறிது நேரத்தில் "நியூயார்க் கென்னடி விமானத்தை அடையப் போகிறோம்." உள்ளம் குதூகலிக்கிறது. ஜன்னல் வழியே எட்டிப் பார்க்கிறோம். பிரும்மாண்டமான நியூயார்க் நகரம் அதோ! நம்மை எதிர்கொண்டு அழைக்கிறது. ஒவ்வொரு வினாடியிலும், அதன் அருகில் - மிக அருகில் - தரை இறங்கிக் கொண்டிருக்கிறோம்.

"பெண் தெரிகிறாளா? மாப்பிள்ளை அங்கு எங்கே நின்று கொண்டிருப்பார்?" - என்றெல்லாம், பேதை மனம் அலைபாய்கிறது. விமானம் தரை இறங்கியாகி

* நயாகரா

சுற்றுலா! நாங்கள் அழைத்துப் போகிறோம்...

தமிழ்நாடு சுற்றுலாத்துறை வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குனர் திரு து. இராஜேந்திரன்

கே: சுற்றுலா ஆர்வம் மக்களிடையே தற்போது எப்படி உள்ளது?

''மக்களுக்கு நிறைய இடங்களைப் பார்ப்பதில் ஆர்வம் அதிகம் உள்ளது. தென்னிந்தியாவில் மட்டுமல்ல வட இந்தியா, ஆந்திரா கர்நாடகா என மாநில வாரியாகவும் சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளிலிருந்தும் பெருமளவில் வந்து கலந்து கொள்கிறார்கள் சுற்றுலா தாகம் மக்களிடையே அதிகரித்து வருகிறது என்று சொல்லலாம்.''

கே: வட இந்தியாவிலிருக்கும் நபர் ஒருவர் இங்கிருந்து செல்ல வேண்டுமானால் அதற்கான தகவல்களை எங்கே பெற்று எவ்வாறு இங்கு வந்து கலந்து கொள்வார்?

''டெல்லியில் இருப்பவர் என்று வைத்துக் கொள்வோம். அங்கு உள்ள நமது தமிழ்நாடு சுற்றுலாத்துறை வளர்ச்சிக் கழகத்தின் தகவல் மையத்தில் அதற்கான தகவல்களை சேகரித்துக் கொண்டு விடலாம். அங்கிருந்தே அவர் வரும் தகவலை சொல்லி டி.டி. அனுப்பிவிட்டால் போதுமானது. அவருக்காக டிக்கெட் ரிசர்வ் செய்து வைத்திருக்கப்படும். அவர் டெல்லியிருந்து சென்னை வந்து விட்டால் இங்கிருந்து சுற்றுலா சென்று சென்னை திரும்பி விடலாம். டெல்லியிருந்து வருவதற்கும் திரும்பிச் செல்வதற்கும் தேவையான ஏற்பாடுகளை அவரே செய்து கொள்ள வேண்டும். அல்லது தகவல் மையத்தில் உரிய முறையில் தகவல் சொல்லி விட்டாலும் அவர்கள் மூலமாக நாங்கள் தகவலைப் பெற்று அதற்குத் தகுந்தவாறு இடத்தை ரிசர்வ் செய்து வைத்துக் கொள்வோம்.


கே: நமது நாட்டில் சுற்றுலா தலங்கள் பல சிறப்பு வாய்ந்தவையாக உள்ளன. ஆனால் சுற்றுப்புறச் சூழல் அடிப்படை வசதியான டாய்லெட் போன்றவைகளின் நிலை மிக மிக மோசமாக உள்ளது. தவிர பிச்சைக்காரர்களின் தொல்லையும் அதிகமாக உள்ளது. இது குறித்த நடவடிக்கைக்கான சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் பங்கு என்ன?

விட்டது. கதவு திறந்து, அந்தப் புதிய பூமியில் – புதிய நாட்டில் காலடி வைக்கிறோம்.

விவரிக்க முடியாத உணர்ச்சிகள். திகைப்பு, மகிழ்ச்சி, ஆச்சர்யம், கனவு நனவாகி விட்ட அதிசயம் – பல உணர்ச்சிகள் ஒன்றையொன்று போட்டி போட்டுக் கொண்டு இதயத்தைத் தாக்குகின்றன.

நீண்ட தாழ்வாரத்தை கடந்து, சுங்க அதிகாரிகள், குடிபுக அனுமதிக்கும் (Immigration) அதிகாரிகளிடம் சென்று, பாஸ்போர்ட், சாமான்கள் ஆகியவற்றை தணிக்கை செய்து கொள்கிறோம். (இதற்கு முன்பு, Conveyorல் வரும் சாமான்களை சேகரித்துக் கொள்கிறோம்.)

முன்பு நாம் கூறிய மோப்ப நாய்கள் இங்குதான் நம் சாமான்களையும், நம்மையும் மோப்பம் பார்க்கின்றன. நம் நாட்டில் சமையல் செய்த பட்சணங்கள், உணவு வகைகள், பழங்கள், அழுகக்கூடிய பொருட்கள் (Perishables) எது இருந்தாலும், அவற்றைப் பறிமுதல் செய்து, உடனுக்குடன் இயந்திர சாதனம் மூலம் அழித்து விடுகிறார்கள்.



• பிட்ஸ்பர்க் வெங்கடாசலபதி கோவில்

சோதனைகளை முடித்துக் கொண்டு, "அப்பாடா" என்று நிம்மதியாக வெளிவருகிறோம்.

பிரிவினை என்பது எத்தகைய கொடியது என்பது, விமான நிலையத்தின் வெளியே வந்தவுடன் தெரிகிறது தெளிவாக. நண்பர்கள், உறவினர்கள் என ஒவ்வொருவரும், ஆர்வத்துடன் அணைத்துக் கொள்கிறார்கள். பாசத்தையும், அன்பையும் அந்த க்ஷணத்திலேயே, அந்த இடத்திலேயே பரிமாறிக் கொள்கிறார்கள்.

மனம் ஒரு கணம் சங்கீத



மு. இராஜேந்திரன்

"தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தற்போது சுற்றுச் சூழல் சுற்றுலா என்ற கருத்தைக் கொண்டே அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மாமல்லபுரம், இராமேஸ்வரம் திருச்செந்தூர் கன்னியா குமரி போன்ற இடங்களுக்கு பாதாளச் சாக்கடை அமைக்கவும் சாலைகள் மேம்பாட்டிற்காகவும் ரூ.100 இலட்சம் வழங்க கொள்கை அளவில் மத்திய திட்டக் குழு ஒத்துக் கொண்டுள்ளது.

மேலும் குடிநீர் மின் தொடர் விநியோகம் பிரகாசமான ஒளி விளக்குகள் போன்ற வசதிகளைச் செய்யவும் சுற்றுலாத்துறை முயற்சிகள் எடுத்துக் கொண்டுதான் உள்ளது.

பிச்சைக்காரர்களின் தொல்லையைக் குறைக்கவும் இயற்கை அளவில் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டுதான் உள்ளோம்."

இந்நிலைமை வெளிநாட்டுப் பயணியர் வரும்போது மட்டுமல்ல நமக்கே கூட வருத்த மளிக்கக் கூடியதாகத்தான் உள்ளது.

கே: பல சரித்திர சிறப்பு வாய்ந்த இடங்கள் சிதிலமடைந்து கவனிப்பின்றி அழியும் நிலையில் உள்ளனவே. அதைத் தடுக்க வழி என்ன?

"இந்தியாவில் சிறப்பு வாய்ந்த இடங்கள் பல உள்ளன. அதிலும் தமிழகத்தைப் பொறுத்தவரை ஏராளமாக உள்ளன. அவை போற்றி பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷங்கள் இதை மனதில் கொண்டே,

பூம்புகார், பாஞ்சாலங்குறிச்சி, மாமல்லபுரம், சிதம்பரம், திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, தஞ்சை, இராமேஸ்வரம் போன்ற சிறப்பு நிறைந்த இடத்தைக் கொண்டுள்ள இடங்களின் தூய்மை காப்பது துவங்கி, விளக்கு, அடிப்படை வசதிகள், குறிப்பாக பழுதுபார்ப்பு பணிகள் என தேவையான நடவடிக்கை ஒவ்வொன்றையும் செய்ய மாநில அரசு இலட்சக் கணக்

பிதாமகரான புரந்தர தாஸரை நினைக்கிறது. இறைவனை அவரால் ஒரு வினாடி கூட பிரிந்திருக்க முடியவில்லையாம். "க்ஷண ஒந்துயுகவாகி" எனக் கதறுகிறார். அவர் தனது பதத்தில் ஒரு வினாடி, ஒரு யுகமாக துடிக்கிறாராம்.

கொடிது, கொடிது பிரிவினை. பிரிந்திருந்த காலத்தின் பாசம் அனைத்தையும், அங்கேயே, அப்பொழுதே கொட்டி விடுகிறார்கள்! காரில் ஏறிக் கொள்கிறோம். முதலில் நம் ஆச்சர்யத்தைத் தாண்டி, மனதையும் கவர்வது, சாலைகளின் அகலம், தூய்மை, ஒழுங்குமுறை ஆகியவையே. மேலும், "இடதுபக்கம் அனுசரி" (Keep to the Left) என்ற நம் நாட்டு சாலை ஒழுங்குமுறைக்கு மாறாக அங்கு "வலது பக்கம் அனுசரி" (Keep to the right) என்ற முறையே வழக்கத்தில் உள்ளது.

பல அன்பர்கள் பல மாதங்கள் அமெரிக்காவில் தங்கியிருந்தும், பார்க்க வேண்டிய பல இடங்களைப் பார்க்கத் தவறி விடுகிறார்கள். அதனால் வாழ்க்கையில் எளிதில் பெற முடியாத அரிய சந்தர்ப்பத்தை இழந்து விடுகிறார்கள். ஆதலால், அமெரிக்கா செல்லும் ஒவ்வொருவரும் தவறாது பார்க்க வேண்டிய, மனிதனின் ஆற்றலும், திறமையும் சாதித்துள்ள இந்த அதிசயப் படைப்புகளைக் கீழே தந்துள்ளோம்.

1. **"உலக வர்த்தக மையம்", நியூயார்க் :** 109 மாடிகள் கொண்ட ஆச்சரியமான கட்டிடம். 107-வது மாடி வரை "லிப்ட்" உள்ளது. கட்டணம் உண்டு.

2. **எம்பயர் ஸ்டேட் கட்டிடம் :** உலக



* அமெரிக்காவில் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பிரதிஷ்டை ஊர்வலம்



இல்லதரசிகளுக்கு புதிய துணை
சமையல் கலையில் திருப்புமுனை
மில்க் பாய்லர், இட்லி குக்கர்,
வாட்டர் ஃபில்டர், குழிகரண்டி
எல்லாம் தந்திடும்
Murugan
முருகன் மெட்டல் என்றாலே
முகம் மலரும் தன்னாலே
முருகன் மெட்டல் இண்டஸ்ட்ரீஸ்
21, பொன்னப்ப செட்டி தெரு, சென்னை — 3.
போன்: 5350182, 5343412

கில் பணிகளுக்காக செலவு செய்ய அனுமதித்துள்ளது.

தவிர கோயில்கள் நிறைந்த தலமான காஞ்சிபுரத்தில் காஞ்சி சங்கரமட அறக்கட்டளை மூலம், பயணிகளுக்கு தங்கும் வசதி ஏற்படுத்த ரூ. 30 லட்சம் மத்திய சுற்றுலா துறையில் ஒதுக்கப்பட்டுள்ளது.''

கே: புதியதாக எந்தப் பகுதிக்கான டூரை அறிமுகம் செய்ய உள்ளீர்கள்? தவிர நெடுநாளைய பயணம் என்று வரும்போது பஸ் பிரயாணம் என்பது வயதானவர்களுக்கு மிகுந்த சிரமம் தரக்கூடியதாக இருக்குமில்லையா?

''தற்போது புதியதாக திருப்பதியில் மிக சிறப்பாகச் சொல்லப்படும் ஊஞ்சல் சேவை நன்றாக செய்து வைக்க ஒரு நல்ல டூரை அறிமுகப்படுத்த உள்ளோம்.

தவிரவும் நெடுநாள் பயணத்தை இரயில் மூலம் மேற்கொள்ள இரயில்வே துறையினருடன் கலந்தாலோசித்து பின்னர் அவர்களுடன் இணைந்து முக்கியமான டூர்களை நடத்துகிறோம். தென் இந்தியாவில் கோடை வாசஸ்தலங்களுக்கு 2 நாள் சுற்றுலாவும், வட இந்தியாவில் காசி–அலகாபாத் சுற்றுலா (14 நாட்கள்) அஜந்தா–மும்பை சுற்றுலாவும் (12 நாட்கள்) நடக்கிறது.

இரண்டாம் வகுப்பு 'லோயர் பர்த்' டிக்கெட்டுகளாகவே வழங்கப்படுவதால் யாருக்கும் பிரச்னை ஏற்பட வாய்ப்பில்லை.

டில்லி–ஆக்ரா சுற்றுலா, 11 நாட்களில் என்ற வகையில் புது சுற்றுலாவையும் அறிமுகப்படுத்த உள்ளோம்.

எனவே நமது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தில் சுற்றுலாக்கள் ஒரு மாநிலத்தை மட்டுமல்ல பல மாநிலங்களையும் இன்னும் கொஞ்ச நாளில் இந்தியாவின் மூலை முடுக்குகளையும் சுற்றுலாப் பயணிகளுக்காக சுற்றிக் காண்பிக்கும் என்பதில் நம்பிக்கை உள்ளது.

தவிரவும் சென்னை திருவல்லிக்கேணியில் ரூ. 328 இலட்சம் மதிப்புள்ள சுமார் 20, 162 சதுர அடி நிலத்தை அரசினர் தோட்டத்தில் கலைவாணர் அரங்கிற்கு அருகில் இலவசமாக சுற்றுலாத்துறைக்கு ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார் தமிழக முதல்வர். புது டில்லியில் சுற்றுலா அமைச்சகம் ஏற்படுத்தவுள்ள சுற்றுலா வளாகத்தைப் போலவே தமிழ்நாட்டிலும் சென்னையில் அனைத்து மாநில சுற்றுலா அலுவலங்களை ஒரே குடையின் கீழ் கொண்டு செயல்பட அந்த இடத்தைப் பயன்படுத்தி உள்நாட்டு, வெளிநாட்டு பயணிகள் பயன் பெறச் செய்யலாம்.''

வர்த்தக மையம் நிர்மாணிக்கும் முன்பு, உலகத்திலேயே உயரமான கட்டிடம் என்று பிரசித்தி பெற்றிருந்தது. மேல் வரை சென்று பார்க்கலாம். கட்டணம் உண்டு.

3. **ஐக்கிய நாடு சபை** : உள்ளே சென்று பார்க்கலாம்.

4. **சுதந்திர தேவி சிலை:** மேல் வரை சென்று பார்க்கலாம். லிப்ட் உள்ளது. கட்டணம் உண்டு.

5. **டையம்ஸ் சதுக்கம் (Times Square):** இரவின் ஒளியில் இந்திர லோகம் போல் காட்சி அளிக்கிறது.

6. **அட்லான்டிக் சிட்டி** : சூதாட்ட நகரம். இயற்கை எழில் கொஞ்சும் சூழ்நிலையில், அட்லான்டிக் மகா சமுத்திரத்தின் கரையில் உள்ளது. சூதாட வேண்டிய அவசியமில்லை. ஆயினும், இப்படியும் ஓர் இன்ப உலகம் உள்ளது என்பதை அனைவரும் பார்க்க வேண்டிய சுகவாசஸ்தலம்.

பணத்தினால் எவற்றைப் பெறலாம், எவற்றையெல்லாம் இழக்கலாம் என மனிதனுக்கு எடுத்துக் காட்டும், புதிய உலகம் இந்நகரம்.

7. **நயாகரா நீர்வீழ்ச்சி:** செயற்கை அழகினால் எவ்விதம் இயற்கை அழகை ஆச்சரியத்தக்க அளவில் உயர்த்த முடியும் என்பதற்கு, ஈடு இணையற்ற எடுத்துக்காட்டு.

''பனிக்கன்னி'' என்று பிரசித்தி பெற்று, நீராவிக் கப்பல் மூலம் நீர் வீழ்ச்சிக்கு மிக அருகில் சென்று, இயற்கையின் கம்பீரமான அழகையும், பிரமிக்கத்தக்க சக்தியையும் உணரவைக்கும் சுற்றுலா அனுபவம் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒன்றாகும். கட்டணம் உண்டு.

8. **செயின்ட லாரன்ஸ் நதியில் உள்ள 1000 தீவுகளுக்கு ஆடம்பர நீராவிக் கப்பலில் சென்று பார்த்தல் அரியதோர் அனுபவமாகும். கட்டணம் உண்டு.**

9. **ராக்பெல்லர் மையம், நியூயார்க்** : பிரும்மாண்டமான கடைகள், உணவு விடுதிகள்.

10. **வெள்ளை மாளிகை, லிங்கன் ஞாபகார்த்த சின்னம்; கென்னடி கலை மையம்; வாஷிங்டன் ஞாபகார்த்த நிலையம்; ஆர்லிங்க்டன் வீரர்கள் கல்லறை; கென்னடி சமாதி; வான் இயல் கண்காட்சி நிலையம், 'ஸ்மித் சோனியன்' அருங்காட்சி அகம் முதலியவை.**

11. **டிஸ்னிலேண்ட் (Disneyland):** காலிபோர்னியா

12. **டிஸ்னி உலகம், ஆர்லன்டோ, பிளாரிடா.**

13. **பூமிக்கு அடியில் செல்லும் பாதாள**



சமீபத்தில் சென்னை தி. நகரிலுள்ள ஐஸ்வர்யா மாதர் சங்கம் தனது 16-வது ஆண்டு விழாவைக் கொண்டாடியது. பல சுவையான நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. நாடகங்கள், குழந்தைகள் நாட்டியம் என. சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. சற்குணபாண்டியன், கலைமாமணி ராஜ சுலோசனா விழா வேந்தன் என்.கே.டி. முத்து ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர். பல்வேறு சமூகப் பணிகளுக்கு அச்சமயம் உதவித் தொகைகள் வழங்கப்பட்டன.

— கல்யாணி நடராஜன்,
தலைவி, ஐஸ்வர்யா மாதர் சங்கம்.

ரயில்.

14. பிட்ஸ்பர்க் ஸ்ரீ வெங்கடாசலபதி திருக்கோயில்.

15. பிளரிஷிங் (Flourishing) : வல்லப கணபதி ஆலயம்

16. ராச்செஸ்டர் நகர் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி திருக்கோயில்.

17. பிட்ஸ்பர்க் சிவ – விஷ்ணு ஆலயம்.


எக்காரணத்தைக் கொண்டும், பார்க்காமல் இருக்கக் கூடாது என்ற இடங்களை மட்டுமே மேலே கூறியுள்ளோம்.

இது தவிர, அங்குள்ள மக்களிடம் நிலவும் ஒழுங்குமுறை, சுகாதாரம், வயதானவர்களுக்கு (Senior Citizens) ஒவ்வொரு பொது இடத்திலும், தனியார் நிறுவனங்களிலும் அளிக்கப்படும் சலுகைகள், மரியாதை, விஞ்ஞானத்தில் அந்நாடு அடைந்துள்ள முன்னேற்றம், உயர் கல்விக்கு அளிக்கப்படும் வசதிகள், திறமைக்கும், தகுதிக்கும் தரும் மரியாதை, அங்கீகாரம், ஊக்குவித்து உற்சாகப்படுத்தும் பெருந்தன்மை, மனப்பான்மை, ஆகிய அனைத்தும் பார்க்க வேண்டியவை மட்டும் அல்ல, நாம் பாடமாக தெரிந்து கொள்ள வேண்டியவையும் ஆகும்.

ஒரு நாட்டின் பெருமை அதன் மக்களாலேயே என்பதற்கு அமெரிக்க மக்களே சான்றாகும். உலகின் தலைவிதியை நிர்ணயிக்கும் சக்தியை இன்று அந்நாடு பெற்றிருப்பதற்கு அதன் மக்களும், அரசாங்கத்தைத் திறன்பட நடத்தி வரும் தலைவர்களின் தேசப் பற்றுதலுமே காரணமாகும். சென்றோம், பார்த்தோம், திரும்பினோம் என்ற உணர்வு ஏற்படுவதில்லை. நம் தாய் நாடு இவ்விதம் இல்லையே என்ற தாப உணர்வே நம் இதயத்தைப் பிழிகிறது.

எந் நாட்டினரானாலும், எவராயினும், உலகின் எந்த பாகத்தில் இருந்தாலும், திறமையையும், உண்மை உழைப்பினையும் தேடிக் கண்டுபிடித்து, தம் நாட்டின் உயர்வுக்காக கொண்டு செல்லும் அந்த நாடு இன்று இமயத்திற்கு ஒப்பாக உயர்ந்துள்ளதில் வியப்பில்லை.

ஆதலால், வசதியுள்ள ஒவ்வொருவரும் சென்று பார்த்து, பயனடைய வேண்டிய ஆச்சரியமான, மரியாதைக்குரிய உயர்ந்த நாடு அமெரிக்கா என்பதில் வேறுபட்ட கருத்து இருக்க முடியாது.



புது வருடத்தில் இவற்றைச் சொல்லிப் பாருங்கள், மனதில் பதியும், நடப்பில் கைகூடும், வாழ்க்கை வசந்தமாய் மாறும்!

● என்னால் புது விஷயங்களைக் கற்றுக் கொள்ள முடியும்.

● தெரியாத விவரங்களை என்னால் கேட்டுத் தெரிந்து கொள்ள முடியும்.

● தெரியாததைத் தெரியாது என்று சொல்ல என்னால் முடியும்.

● என்னால் தற்சமயம் இயலாத காரியங்களை, என்னால் இயலாது என்று சொல்லவும் என்னால் முடியும்.

முடியும், இயலும், கைகூடும்!

● தோல்விகளைத் தாங்கிக் கொள்ள என்னால் முடியும்.


● மீண்டும் முயலவும் என்னால் முடியும்.

● 'விதைத்த பின், பயிர் விளையும் வரை' காத்திருக்க என்னால் முடியும்.

● பிறரது பாராட்டுகள் கிடைக்காத போதும், என் கொள்கையில் நான் உறுதியாய் இருக்க முடியும்.

● களைப்பில்லாமல் என்னால் கடமைகளை உற்சாகமாகச் செய்ய முடியும்.

● அவசியமான சமயத்தில் பிறர் உதவியை நாட என்னால் முடியும்.



● பிறர் உதவிக்கு நன்றி சொல்ல என்னால் முடியும்.

● என் தவறுகளை யாரும் சுட்டிக்காட்டும் போது என்னால் நிதானமாக இருக்க முடியும்.

● நான் தவறாக ஒன்றைச் சொல்லி விட்டால், அதற்கு மன்னிப்பு கேட்க என்னால் முடியும்.

● பிறர் கோபப்படும் போது, என்னால் பொறுமையாக இருக்க முடியும்.

● சின்ன விஷயங்களைப் பெரிதுபடுத்தாமல் என்னால் இருக்க முடியும்.

● பேசாமலிருப்பதே சிறந்தது என்னும் சமயம் பேசாமலிருக்க என்னால் முடியும்.

● என்னாலும் பிறர்க்கு உதவ முடியும்.

● எந் நிலையிலும் தன்னம்பிக்கையோடு செயல்பட என்னால் முடியும்.

— **பத்மாவதி செல்வராஜ்**

சுற்றுலா தந்த

சுற்றுலா என்ன வேண்டியிருக்கு? வீண் அலைச்சல். நேர விரயம். காசு நஷ்டம் என்ற கருத்தைக் கொண்டவர்களுக்கு இந்தக் கட்டுரை சமர்ப்பணம்.

"ஒரே மாதிரி வாழ்க்கையில் ஒரு மாறுதல் வேண்டாமா? சுற்றுலாக்கள் அளிக்கும் புத்துணர்ச்சியே தனிதான். எனக்கு அடிக்கடி கோபம் வரும். கொடைக்கானல், முசோரி போன்ற மலை வாசஸ்தலங்களுக்குப் போய் வந்தால் கொஞ்ச காலத்துக்காவது உடலில் ஒரு தனி சக்தி உண்டாகி, மனதில் சாந்தம் ஏற்படுவதை நான் அனுபவபூர்வமாக உணர்ந்திருக்கிறேன்'' என்றார் திருமதி சியாமளா பாலாஜி.


• சியாமளா

"ட்ரெயினில் கூடப் பயணம் செய்த சில வட இந்தியர்கள் எதையெதையல்லாம் பயணத்தின் போது எடுத்து வருகிறார்கள் என்பதை கவனித்த போது கொஞ்சம் பிரமிப்பு ஏற்பட்டது. சின்னச் சின்ன தட்டுகள், நைட்டிகள், கத்திரிக்கோல், இப்படி... இவற்றில் ஒரு ஒழுங்குமுறையும் இருப்பது பிடிபட்டது. அதற்குப் பிறகு சுற்றுலா போகும் போது இவற்றையெல்லாம் நானும் எடுத்துச் செல்லத் தொடங்கி விட்டேன். இப்படிப் பல விஷயங்களை அறிந்து கொள்ள உதவுகிறது சுற்றுலா" என்றவர் மேலும் தொடர்ந்தார்.

"என்னுடைய தோழி ஒருத்தி. 'ரொம்ப ரிசர்வ்ட் டைப்' என்றுதான் அவளைப் பற்றிய எங்கள் பொதுவான கருத்து. ஒரு சுற்றுலாவில் அவள் பல்வேறு வேடிக்கை விளையாட்டுகளில் கலந்து கொண்டது, கடற்கரையில் ஆனந்தமாக தண்ணீரை அளைந்தும், வீசியும் விளையாடியது - இவற்றையெல்லாம் பார்த்த பிறகுதான் அவளது மறுபக்கம் தெரிந்தது. அதற்குப் பிறகு நாங்கள் நெருக்கமாகி விட்டோம். இப்படி நட்பை வளர்ப்பதில் சுற்றுலாக்களுக்கு ஈடு இணையேயில்லை" என்றார்.


சாந்தி



"உண்மை. மனித உறவுகளை வளர்ப்பதில் சுற்றுலாக்களுக்குத் தனி பங்கு உண்டு. புதியவர்கள் அறிமுகமாவது ஒரு பக்கம் இருக்கட்டும். நம்முடைய உறவினர்களிடமே



பாடம்!





கூட தொடர்து தொடர்பு வைத்துக் கொள்ள முடியாத அளவுக்கு இது வேகமான வாழ்க்கையாக மாறிப் போச்சே. குடும்பத்தோடு வேறு ஊருக்குச் சுற்றுலா போகும் போது அங்கே உள்ள உறவினர் வீட்டில் தங்குவதும், அதுவரை கடிதப் போக்குவரத்து கூட இல்லாமல் முடங்கிக் கிடந்த உறவுகள் அதற்குப் பிறகு செழிப்பதும் சகஜம்தானே" என்ற திருமதி சாந்தி சுந்தரம் சமீபத்தில் சிங்கப்பூர், துபாய் போன்ற நாடுகளுக்குச் சென்று வந்தவர். அந்த அனுபவங்கள் அளித்த ஆனந்தங்களைப் பட்டியலிட்டார்.

"சிங்கப்பூரில் தெருக்களில் குப்பையை எறிந்தால் அபராதம் என்று நமக்கெல்லாம் தெரியும். ஆனால் நேரில் அந்த வீதிகளில் சுத்தத்தையும் அங்கங்கே இந்த அபராதத்தைப் பற்றி வலியுறுத்திய விளம்பரப் பலகைகளையும் பார்த்த பிறகு, சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டியதின் அவசியம் மேலும் அழுத்தமாக என் மனதில் பதிந்து விட்டது. இப்போதெல்லாம் தெருவில் எந்தக் குப்பையையும் கொட்டுவதில்லை. தவிர அந்த நாடுகளில் கூட மெஹந்தி இட்டுக் கொள்வது, கிருத்திகையைக் கோலாகலமாகக் கொண்டாடுவது என்பதையெல்லாம் பார்த்த பிறகு நமது பண்பாட்டின் மீது உள்ள ஒட்டுதல் இன்னும் அதிகரித்து விட்டது" என்றார்.

"டெல்லிக்குச் சுற்றுலா போன போது அங்குள்ள சரித்திரச் சின்னங்களைப் பார்த்து பிரமித்துப் போனேன். கூடவே சரித்திரப் பாடங்களில் படித்த பல விஷயங்கள் கண் முன்னே காட்சி அளித்தபோது ஏற்பட்ட உணர்வு கொஞ்ச நஞ்சமல்ல. சரித்திரத்தின் மீது தனிக் காதலே பிறந்தது – கூடவே தேசப்பற்றும் வளர்ந்து விட்டது என்று சொல்லலாம்" என்ற திருமதி கலாவதி சிவநேசன் தனது சுற்றுலா ஷாப்பிங் அனுபவங்கள் பற்றியும் குறிப்பிட்டார்.

"வெளியூர்களில் – அதுவும் சாலையோரக் கடைகளில் – ஷாப்பிங் செய்வது என்பது ஒரு தனி சுகம்தான். குறிப்பாக பேரம் பேசி வாங்கி வந்த பொருள்களை இப்போது பார்த்தாலும் தனி குஷிதான். இங்கேயே உள்ள பல பொருள்களை நாம் வாங்க மாட்டோம். ஆனால் வெளியூர் போனால் தயங்காமல் செலவழிப்போம் இல்லையா?" என்றவர்,

"சுற்றுலா என்றாலே பல எதிர்பாராத



சுற்றுலா, நாங்கள் அழைத்துப் போகிறோம்...!

சுப்பாராவ்:
(விஜயா டிராவல்ஸ்)

"கிட்டத்த 42 வருஷம் ஆகிறது டிராவல்ஸ் ஆரம்பித்து. ஆந்திரம், கர்நாடகம், வட இந்தியாவின் பெரும்பாலான பகுதிகள் என ஆல் இண்டியா அளவில் டூர் நடத்தி வருகிறேன். வருடத்திற்கு குறைந்த பட்சம் 15, 16 டூர் கண்டக்ட் செய்வோம். எங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் பகவான் ஸ்ரீ ராகவேந்திரரே குரு எனவே வருடத்தின் முதல் டூர் மந்திராலயத்தை நோக்கித்தான். அங்க விசேஷமான வெள்ளி மற்றும் தங்கத் தேர் பார்ப்போம்!'


உணவு என்பது ஒரு பெரிய விஷயம். இத்தனை நாள் டூர் போகும்போது அதற்கான ஏற்பாடுகளை பயணிகளுக்கு திருப்தி ஏற்படும்படி எப்படி தருகிறீர்கள் ரயிலில் சமைப்பீர்களா?


"உண்மையில் உணவு ஒரு பெரிய விஷயம்தான். எங்கள் சமையற்காரர்கள் ஸ்நானம் செய்யாமல் காபி கூட போட மாட்டார்கள். நன்றாக சுத்தமாக இருக்க வேண்டும் என்பதை நாங்கள் சொல்வதோடு மட்டுமல்ல, அவர்களே அப்படி ஈடுபாட்டோடு நன்றாக செய்கிறார்கள்.

மேலும் ரயிலில் சமைப்பது கூடாது. முழுக்க ஒரு நாள் ரயிலில் பயணம் செய்ய வேண்டி வரும் வட இந்திய சுற்றுலாவில் அந்தச் சமயத்தில் முன் கூட்டியே உணவை தயார் செய்து கொண்டு விடுவோம்.

காபி சூடாக தயாரிக்க இயலாது எனவே. அதை அவர்களே ரயில் பிரயாணத்தின் போது

சம்பவங்களும் நடக்கும். அவற்றில் சிலவற்றை எப்போது நினைத்துப் பார்த்தாலும் சிரிப்பு வரும். மனம்விட்டு சிரிக்க முடிகிறது என்பதே ஒரு பெரிய டானிக்தானே. ஒருமுறை குருவாயூர் போயிருந்தோம். ஸ்டேஷனுக்குப் பக்கத்திலேயே லாட்ஜ். "ஏழரை மணிக்கு சென்னை செல்லும் ரயில் இந்த ப்ளாட்பாரத்தில் வரும்" என்று எங்கள் நண்பர் கூற, நாங்கள் ஏழேகால் மணிக்கு அங்கு சென்றோம். சொன்னபடி ஏழரைக்கு ரயில் வந்தது. ஏறினோம். பிறகு டிக்கெட் பரிசோதகர் எங்கள் டிக்கெட்களை சோதித்தபோது "ஆறு மணிக்குக் கிளம்பும் ரயிலில் அல்லவா நீங்கள் ஏறியிருக்க வேண்டும்? நீங்கள் டிரெயின் நம்பரை சரிபார்த்திருக்க வேண்டாமா?" என்றார். அதற்குப் பிறகு வேண்டுகோள், கெஞ்சல், தேவையில்லாத பண விரயம் என்று ஒருவழியாக அதே ரயிலில் வந்து சேர்ந்தோம். அப்போது எரிச்சல்தான். என்றாலும் இப்போது நினைத்தால் எங்கள் அசட்டுத்தனத்தை நினைத்து சிரிப்பு வரும். தவிர அதற்குப் பிறகு எந்த விஷயத்திலுமே அதிக கவனம் எடுத்து சரிபார்த்துக் கொள்ள வேண்டும் என்ற டிசிப்ளினை இந்த சுற்றுலா சம்பவம் ஏற்படுத்தியது" என்றார்.






தங்கம்

"என்ன ஒரு விருந்தோம்பல், என்ன ஒரு மரியாதை, என்ன ஒரு நாணயம். நாம் அவர்களிடம் கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கிறது!" என்று மெய்சிலிர்த்தார் திருமதி வித்யா மாதவன். 'அவர்கள்'? டென்மார்க் தேசத்தவர். சமீபத்தில் அங்கு சென்று திரும்பியிருக்கிறார். கோபன்ஹேகனுக்கு அருகிலுள்ள ஒரு பொது இடத்தில் மறதியாக அவர்கள் விட்டுச் சென்ற பை, யாராலும் எடுத்துச் செல்லப்படாமல் அன்று மாலை வந்து பார்த்தபோது அங்கேயே இருந்ததாம்!

"பிற நாடுகளைப் பற்றிய நல்லெண்ணம் பரவுவதோடு, 'யாதும்



மட்டும் வாங்கிக் கொள்ள வேண்டும்.

பிரபலமானவர்கள் பலர் எங்கள் டூர்களில் கலந்து கொண்டுள்ளனர். உணவு விஷயத்தில் நாங்கள் பலரிடம் பாராட்டைப் பெற்றவர்கள். நிச்சயம் பூண்டு, வெங்காயம் சமையலில் கிடையாது.

காசி யாத்திரையில் காசி தவிர வேறு என்ன இடங்கள் அழைத்துச் செல்கிறீர்கள்?

''காத்மாண்டு, நேபாளம் செல்வதற்கும் தகுந்த பாஸோடுதான் செல்கிறோம். அங்கிருந்து தேவையான நல்ல பொருட்களை பயணிகள் வாங்கிக் கொள்ள ஏற்பாடும் செய்து தருகிறோம்.

ஜாம்ஸாம், போக்ரா போன்ற இடங்கள் அழைத்துச் செல்கிறோம். போக்ராவுக்கு விமானம் மூலமும் ஜாம்ஸாம்மிற்கு குதிரைமேல் ஏறியும் செல்ல வேண்டும்.

இந்தப் பயணம் அழைத்துச் செல்லும்போது வயதானவர்களை மிகவும் பொறுமையோடும் பரிவோடும் அழைத்து செல்ல வேண்டியிருக்கும்.

புதிதாக தற்போது முக்திநாத் என்ற இடத்தைச் சேர்த்துள்ளோம். இது 108 வைணவதிவ்யதேசத்தில் மிகவும் சிறப்பு வாய்ந்த இடம்.


இப்படி சற்றே அட்வென்சர் நிறைந்த டூர் அழைத்துப் போகும்போது நன்கு கவனித்துக்

ஊரே யாவரும் கேளிர்' எண்ணம் வளர இது போன்ற சுற்றுலாக்கள் மிகவும் உதவுகின்றன. யாருக்குமே ஒருவித 'அவுட்லெட்' தேவை. அதுவும் பெண்களுக்கு இது மிகவும் அவசியம். நாங்கள் வசிக்கும் பெங்களூரில் கடற்கரை இல்லை. சமீபத்தில் கோவாவுக்குப் போனபோது அந்தக் கடற்கரைகள் எங்களுக்கு அளித்த சந்தோஷம் கொஞ்சநஞ்சமில்லை. தவிர சுற்றுப்புறத்தை அசிங்கப்படுத்தாமல் இருப்பது பற்றிய ஞானமும் அதிகமாகிறது. அவ்வளவு ஏன், சுற்றுலா சென்று திரும்பிய பிறகு நம் தினசரி வாழ்க்கைமுறையிலேயே கூட ஒரு உற்சாகம் தொற்றிக் கொள்ளும் என்பது உண்மை'' என்றார் அழுத்தந்திருத்தமாக.

''நாற்பது வயதுக்குமேல்தான் எனக்குத் திருமணம் நடந்தது. அதுவரை எனக்கு மன மகிழ்வையும், நிம்மதியையும் அளித்தது பல ஊர்களுக்குச் சென்று வந்த அனுபவங்கள்தான்'' என்றார் திருமதி தங்கம் சாரி.

''எனது சாத்வீகமான குணத்துக்கு வழியமைத்தவர் என் அம்மாதான். எனக்குப் பெரும் ஆதரவாக இருந்த அவரை இழந்தபோது பெரும் அதிர்ச்சி. அந்தத் துயரத்தை ஓரளவு போக்க உதவியது அதைத் தொடர்ந்து பத்து நாட்கள் பூனாவின் அருகிலுள்ள மலைப் பிரதேசமான டேஹூ ரோட் என்ற இடத்தில் நான் தங்க நேர்ந்த கால கட்டம். இயற்கைக்கு எப்போதுமே மனதை சாந்தப்படுத்தும் சக்தி உண்டு.

ஒருமுறை பெங்களூர் சென்று திரும்பி வரும் நேரத்தில் இங்கு ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டிருந்தார். பலமணி நேரங்கள் தாமதமாக, மக்களால் நிரம்பி வழிந்து கொண்டு, 'வழியில் என்ன கலாட்டா இருக்குமோ?' என்ற





கொள்ளவும், ஏதாவது பிரச்னை எழுந்தால் சமாளிக்கவும் தெரிந்த ஆட்கள் வேண்டுமே. நீங்களே சென்று வருவீர்களா?

"எங்கள் குடும்பமே இந்த டிராவல் ஏஜென்ஸி தொழிலில் ஊறிப்போய் விட்டது. எனது மாப்பிள்ளை முழுக்க முழுக்க இதில்தான் கவனம் செலுத்துகிறார். சமையற்காரர்கள் கைடாக செல்பவர்கள், மானேஜர் என 10 நபர்களுக்குக் குறையாது எங்கள் ஏஜென்ஸியிலிருந்து செல்கிறார்கள். அவர்கள் பல காலமாக பயிற்சி பெற்றவர்கள். எனவே எந்த பிரச்னையையும் சமாளிப்பவர்களாகவே அவர்கள் இருப்பார்கள். தவிர பகவான் அருளால் இன்று வரை அத்தனை டூரையும் நல்ல விதமாகவே நடத்தி நல்ல பெயரை மக்களிடம் பெற்றுள்ளோம்.

எங்கள் டூரில் 7 ஜோதிர்லிங்க யாத்திரை மிகவும் சிறப்பு வாய்ந்தது. தவிர காசியில் சிவராத்திரியின் போது கங்கா ஜலம் எடுத்து வந்து பகவானை நீராட்டி பாலாபிஷேகம் செய்வோம். அது கண் கொள்ளாக் காட்சி. அதை நாங்களே செய்கிறோம். சிவராத்திரியில் காசி விஸ்வநாதரை தரிசிப்பது 1008 லிங்கங்களை தரிசிப்பதற்கு ஒப்பாகும்."

1981, 82களில் ஸ்ரீலங்காவிற்குக் கூட டூர் செய்திருக்கிறோம் 7,8 முறைக்கும் மேலாக.

காலேஜ் டூர் அல்லது சபரிமலை யாத்திரை போன்றவைகளை செய்து தருகிறீர்களா?

"நிச்சயமாக இல்லை. காரணம் வேண்டாத சங்கடங்களை தவிர்ப்பதற்காகவே.

மக்களிடம் தற்போது சுற்றுலா செல்வது மிக பிரபலமடைந்துவிட்டது. நாங்கள் டூர் அறிவித்தவுடன் உடனுக்குடன் புரிந்து கொண்டு இரண்டு மாதத்திற்கு முன்பே ரிசர்வ் செய்திட வேண்டும் என்பதையும் தெரிந்து கொண்டு மக்கள் பயணங்களை ரிசர்வ் செய்து கொள்கிறார்கள்.

இன்று வரை நல்ல டூர்களையும், நிறைவான பாராட்டையும் பயணிகளிடமிருந்து பெற்றுள்ளோம். லாபம் என்பதை விட பயணிகளின் சந்தோஷத்தையும் அதன் மூலம் அவர்கள் எங்களை மனதார வாழ்த்துவதையும் நாங்கள் பெரிதும் மதிக்கிறோம்."

இலியோடு வந்து சேர்ந்தோம். இதுபோன்ற சந்தர்ப்பங்கள் எந்தவித சூழலையும் தைரியமாக சமாளிக்கும் பக்குவத்தை அளிக்கின்றன.

அதே போல் மதுரை சுற்றுலா முடிந்து திரும்பும் போது ரயிலில், கூட வந்த ஒரு தம்பதியின் இளம் மகன் எங்களோடு பேசினான். அப்

போது தன் வகுப்பையும், தான் படிக்கும் பள்ளியின் பெயரையும் சொன்னான். உடுமலைப் பேட்டையில் அவர்கள் இறங்கிப் போனபிறகு தான் கவனித்தோம். அவர்கள் ஒரு சின்ன பர்ஸை ரயிலிலேயே கீழே நழுவவிட்டது. அதற்குள் ஒரு சிறந்த முத்துமாலை இருந்தது. பிறகு அந்தச் சிறுவன் படித்த பள்ளிக்கூடம் மூலம் தொடர்பு கொண்டு அந்த நகையை உரியவர்களிடம் சேர்த்தோம். இது போன்ற மனதிற்கு நிறைவு தரும் சம்பவங்கள் சுற்றுலாக்களில் நிறைய உண்டு" என்றார்.

"மற்றவர்கள் இருக்கட்டும். தொலைக்காட்சி, வீடியோ கேம்ஸ் என்றெல்லாம் வந்த பிறகு குடும்பத்தினர் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வதே அரிதாகி விட்டதே. அந்த வகையில் ஒருவாரம் எங்காவது சுற்றுலா போனோமென்றால் குடும்பத்தினர் கட்டாயம் ஒன்று கலந்து சந்தோஷமாக இருக்க முடிகிறதே. இதுவே பெரிய வரம்தானே" என்றார் திருமதி சேது ராமச்சந்திரன்.

"சுற்றுலா போனபோது நிறைவாக, செலவழிக்கும் ஜனங்களைப் பார்க்கும் போதுதான் 'அட நாமும் டெட் கேபிடலாக' தங்கம் போன்றவற்றில் சேர்க்காமல் பயனுள்ள வகையில் செலவு செய்து வாழ்க்கையை அனுபவிக்கலாமே' என்ற உணர்வு தோன்றியது. அதற்குப் பிறகு வாழ்க்கைக்கு ஒரு தனி சுவை கூடியது.

ஹைதராபாதில் ஸாலார்ஜங் நினைவகத்துக்குப் போனபோது இப்போது போல் கட்டடக் கலை பொறியியல் என்றெல்லாம் படிப்பு இல்லாமலேயே எவ்வளவு துல்லியமாக அவர்கள் வடிவமைத்திருக்கிறார்கள் என்ற ஆச்சரியம் உண்டாகியது. அதே போல் தொன்மையான கோவில்களுக்குப் போனால் நமக்கும் மேலுள்ள சக்தியைப் பற்றிய நம்பிக்கை மேலும் ஆழமாகப் பரவி வாழ்க்கைக்கு அர்த்தம் சேர்ப்பது உண்மை" என்றவர் மீண்டும் குடும்ப உறவுகளுக்கு வந்தார்.

"கூடவே தினமும் இருந்தாலும் நம் குடும்பத்தினரைப் பற்றி நாம் முழுமையாகத் தெரிஞ்சிக்காமலேயே இருக்க வாய்ப்பு உண்டு. இந்த மாதிரி சுற்றுலாவில் அவர்களது விருப்பங்கள், வெறுப்புகள் பளிச்சென்று தெரிய வாய்ப்பு உண்டு. ஒருவரை ஒருவர் அறிந்து கொண்டால் வாழ்க்கை வசந்தமாகுமே!"

தொகுப்பு : **அருண் சரண்யா**

புகைப்படங்கள் : **ஜி. சுரேஷ்**

குழந்தைகளுக்கு செலவழிக்கக் கற்றுக் கொடுப்போம்!

"காணி நிலம் வேண்டும்" என்று பாரதியாரே பராசக்தியிடம் கோரியிருக்கிறார். இன்றைய நிலையில் கண்ணில் காணும் பொருள்கள் எல்லாமும் வேண்டும் என்று கேட்கும் வகையில் "எங்கெங்கு காணினும் சாமான்களடா" என்று சாமான்யரும் பெருமூச்சு விடும்படி பலவிதமான பொருட்கள் - 'வாங்கு, வாங்கு' என்று பார்ப்பவரைத் தூண்டியபடி.


என்னென்ன பொருட்கள், எப்படிப் பட்ட பொருட்கள் என்று நாம் தேடிச் சென்று பார்க்கும் வேலையைக்கூட வைக்



காமல், இந்தப் பொருட்களுக்குப் பட்டயம் கூறி எந்நேரமும் தொலைக்காட்சிச் சேனல்கள் நம் கண்களைக் கவர்ந்து கொண்டிருப்பதால், "இது வேண்டும், இது வேண்டாம்" என்று பிரித்தறியும் பக்குவமும், விழைவும் நம்மிடமிருந்து அடிக்கடி விடை பெற்றுக் கொள்கின்றன. அதிலும் இன்றைய விளம்பரங்கள் நம்மைவிட, நம் குழந்தைகளைக் குறி வைத்தே வருகின்றன என்பதையும் நாம் பார்த்துக் கொண்டுதான் வருகிறோம்.

"பாலில் கலக்க வேண்டாம், அப்படியே சாப்பிடுவேன்" முதல் "மம்மீ... சோப் இல்லைன்னா நான் குளிக்கவே மாட்டேன்" வரை பல பாதிப்புகளிலிருந்து, பல பெற்றோர்கள் தம் குழந்தைகளை சாக்ரடீஸ் தனத்துடன் காப்பாற்றியிருப்பார்கள். அது என்ன சாக்ரடீஸ்தனம்? சாக்ரடீஸ் தினமும் கடைத் தெருவுக்குப் போவாராம். அங்கே கடை, கடையாக, ஏறி என்னென்ன பொருட்கள் இருக்கின்றன என்று கூர்ந்து கவனிப்பாராம். ஆனால் ஒன்றும் வாங்க மாட்டாராம். ஒருமுறை நண்பர் ஒருவர் சாக்ரடீஸிடம் இது பற்றி வினவினாராம். "நீங்கள்தான் ஒன்றும் வாங்குவதில்லையே, எதற்காக தினமும் கடை கடையாக் ஏறி இறங்குகிறீர்கள்?" அதற்கு சாக்ரடீஸ் கூறினார்: "எனக்குத் தேவையில்லாத பொருட்கள் எவ்வளவு இருக்கின்றன என்று பார்ப்பதற்காகத்தான்." இன்றைய நிலையில் பலருக்கும் வின்டோ ஷாப்பிங்தான் செய்ய முடிகிறது. ஆனால் அதிலிருந்து தத்துவம் பிறப்பதில்லை; பெருமூச்சுதான் பிறக்கிறது.


ஆனால் குழந்தைகள் விஷயம் அப்படி இல்லை. பார்ப்பதையெல்லாம் வாங்கி விட வேண்டும் என்ற அவாவை அவர்களால் எளிதில் கட்டுப்படுத்த முடியாது. சாக்ரடீஸ் லாஜிக்கை அவர்களுக்குப் போதித்து, செலவினங்களைத் தவிர்க்கும் வழியைக் கற்றுத் தந்து விடலாம் என்று பார்த்தால் "அது" வாங்கினால் "இது" ஃப்ரீ அம்மா' என்று நம் குழந்தை பட்டியலிட்டுக் காண்பிக்கிறது. ஒரு பொருளுக்குச் செலவழித்தால், இரண்டு பொருள்கள் கிடைக்கின்றனவே. அது லாபம்தானே என்று குழந்தைகள் பெரியவர்களுக்குப் போதிக்கும் வண்ணம் (பெரியவர்



களும் இதில் மயங்குகிறார்கள் என்பதும் உண்மை) இலவசங்கள் அவதாரம் எடுத்துள்ளன. பல சமயங்களிலும் கொடுக்கப்படும் இலவசத்திற் காகவே, பொருட்களை வாங்கச் சொல்லி - அவை அவசியமற்றதாக இருந்தாலும்கூட குழந்தைகள் நச்சரிக்கும் காலம் இது.

இத்தனை செலவினத் தூண்டுதல்கள் நம்மைச் சுற்றி இருக்கும்போது, அதிலும் குறிப்பாக பெரும்பான்மையான தூண்டுதல்கள் குழந்தைகளையே குறி வைத்திருக்கும் நிலையில், சாக்ரடீஸ் வாழ்க்கை யார்தான் கேட்கப் போகிறார்கள்? இதைப் பார்க்கும்போது செலவழிக்க வேண்டாம்; சேமிப்பதுதான் நல்லது என்று சொல்வதைவிட, "எப்படித் திறமையாகச் செலவழித்து, சேமிப்பையும் குறைக்க வேண்டாம்" என்று குழந்தைகளுக்குக் கற்றுத் தருவதே நல்லது. இன்னொரு விதமாகச் சொல்லப் போனால், money management அதாவது பணத்தை எப்படி நிர்வகிப்பது என்ற அறிவை சிறுவயதிலிருந்தே போதிப்பது சிறந்தது.

"பசங்களுக்கு என்ன தெரியும்? அவங்களுக்கு வேண்டியதை நாமே வாங்கிக் கொடுத்துட்டாப் போச்சு" என்று நினைப்பவர்களும் இருக்கிறார்கள். அவ்வப்பொழுது பாக்கெட்மணி கொடுத்து "குழந்தைகள் தாங்கள் ஆசைப்பட்டதை வாங்கிக் கொள்வதில் என்ன தவறு" என்று கேட்பவர்களும் இருக்கிறார்கள். பார்ட்-டைம் வேலை செய்து வெளிநாட்டு இளம் சிறார் பணம் சம்பாதிப்பதைக் காப்பி அடிப்பதாக நினைத்துக் கொண்டு, இயல்பாக செய்யக்கூடிய, அதாவது செய்ய வேண்டிய கடைக்குப் போவது, வீட்டு வேலைகளில் பங்கெடுப்பது போன்றவற்றிற் கும்கூட ஊக்குவிப்பு போனஸ் போல பணம் கொடுக்கும் வழக்கமும் சில குடும்பங்களில் ஆரம்பித்திருக்கிறது.



இதனால் ஒரு பக்கம் கையில் பணம். மறு பக்கம் கண்ணைக் கவரும் பொருட்கள். இவற்றுக்கிடையே சரியாகவும், சிறப்பாகவும் செலவு செய்ய வேண்டிய வழிமுறைகளை நம் குழந்தைகள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. ஆனால் இந்தச் செலவிடுதலை நம் கண்காணிப்பு மற்றும் கவனிப்பின் கீழ் அவர்கள் செய்யும்போது பொருளின் மதிப்பையும் முக்கியமாகப் பணத்தின் மதிப்பையும் அவர்களுக்குப்புரிய வைக்கும்.

பணம், செலவு, சேமிப்பு, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் ஆசைப்படுகிற பொருட்கள் குறித்த பிரித்தறியும் அறிவு ஆகியவற்றை சிறு வயதிலிருந்தே நம் குழந்தைகள் கவனிக்கும் வகையில் நாம் உதவ வேண்டும். பார்க்கும் பொருள்களையெல்லாம் வாங்க வேண்டும் என்று நச்சரிக்கும் குழந்தைகளுக்கும், வீட்டின் பண நிலவரம் தெரியாமல் டிமாண்ட் செய்யும் குழந்தைகளுக்கும் இந்தப் பண நிர்வகிப்பு முறை யதார்த்த நிலையைப் பற்றி யோசிக்க ஒரு சிறந்த வழிகாட்டியாக உதவும். பண நிர்வகிப்புத் திறமையை அவர்களிடம் வளர்த்தோமானால், பின்னாளில் தங்களுடைய வரவு - செலவுகளை அவர்களால் திறம்பட நிர்வகிக்க முடியும்.

எட்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள்

பொதுவாகவே குழந்தைகளுக்குப் பணத்தின் அருமை தெரியாது. பொருளின் அருமையும் தெரியாது - அந்தப் பொருட்கள் அவர்கள் மிகவும் விரும்பும் சாக்லேட், ஐஸ்க்ரீம், பொம்மைகள் போன்றவையாக இருந்தாலொழிய. ஆகவே அவர்களுக்கு நாம் முதலாவதாகக் கற்றுக் கொடுக்க வேண்டியது ரூபாய், பைசாக்களின் வேறுபாடுகளும், மதிப்பும்தான். உழைத்துச் சம்பாதிக்கின்ற பணம் அருமையானது, பெருமையானது, மதிப்பு வாய்ந்தது என்று நாம் அறிவுறுத்த வேண்டும். அப்படி மதிப்பு வாய்ந்த பணத்தைக் கொடுத்து நாம் வாங்கப் போகும் பொருளும் மதிப்பு வாய்ந்ததாகத்தான் இருக்க வேண்டும் என்பதை அடிக்கடி வலியுறுத்த வேண்டும். இந்த அடிப்படைப் பாடம் குழந்தைகள் மனதில் நன்கு பதிந்து விட்டால், கண்ணால் கண்டதையெல்லாம் கேட்கும் வழக்கம் வராது.

ஐந்து முதல் எட்டு வயதுக்குள்ளான குழந்தைகள் இந்த வாழ்க்கைப் புரிந்து கொள்வார்கள். இந்த வயதுக் குழந்தைகள் தாங்களே பணத்தை வைத்துக் கொள்ள வேண்டும் என்றோ அல்லது பாக்கெட்மணி வேண்டுமென்றோ கேட்க மாட்டார்கள். சேமிக்கும் பழக்கத்தை ஆரம்பிக்க இதுதான் சரியான தருணம். ஒரு உண்டியலை வாங்கிக் கொடுத்து ஏதேனும் வாங்கினபின் மீதமாகும் சில்லறைகளையும், பெரியோர்களோ, மற்றவர்களோ குழந்தைகளுக்கு அன்பளிப்பாக அளிக்கும் பணத்தையும் சேமிக்கச் சொல்லலாம். குழந்தைகளுக்காக வாங்கும் பொருட்களையும் அவர்களது படிப்பிற்காக வாங்கும் பொருட்களையும் அவர்கள் கையாலேயே பணத்தைக்

சடையுடையார் துணை　　　ஜெம்பதரிவிசால்　　　ஸ்ரீராமஜெயம்

K.R. SANKARAN & SONS

(Senior Most Tour Operator with 30 years Experience)
(Founder Secretary & Ex-President, Delhi Bhajan Samaj)
H.O: 6/55, W.E.A., (First Floor), Karol Bagh, New Delhi - 110 005.
Phone : 5736743, Tele - Fax : 574 5700
B.O. C/o Meenakshi College for Women and I.I.E.T.
363, Arcot Road, Kodambakkam, Chennai - 600 024. (Ph -4835466)

ஸாலக்ராம் – முக்திநாத் – பசுபதிநாத், பத்ரிநாத், கேதார்நாத், கங்கோத்ரி, கௌமுக், யமுனோத்ரி, அமர்நாத், காசி, கயா மற்றும் யாத்ரைகள் பஸ் ஏற்பாடுகள் 1999.

1. ஸாலக்ராம் – முக்திநாத் – பசுபதிநாத் (நேபாளம்) – 15 நாட்கள்
Apr 12, Oct 26 - Cost Rs. 5500/- (Travel Partly by Bus, Flight & Poni) (Flight & Poni charges Extra)

2. வைஷ்ணவி தேவி – (அம்ரிட்சர், ஜ்வாலாமுகி, குருக்ஷேத்ரம் உள்பட)
7 நாட்கள் Date Apr 18 - Cost Rs. 2250/- By 2X2 Lux Bus

3. சிம்லா, குல்லு, மனாலி (சண்டிகர் உள்பட) 8 நாட்கள் Date Apr 26 Cost Rs. 4800/ - By 2X2 Lux Bus.

4. பத்ரி – கேதார் (ஹரித்வார், ரிஷிகேசம் உள்பட) – 11 நாட்கள் Date May 5, 16, 27 June, 7, 18, Sep 5, 16, 27 Oct 13, 24 - Cost Rs. 3600/- By 2X2 Lux Mini Bus

5. பத்ரி மட்டும் (ஹரித்வார், ரிஷிகேசம் உள்பட) - 8 நாட்கள் Date May 5, 16 & Sep 5, 16 - Cost Rs. 2200/- By 2X2 Lux Mini Bus.

6. பத்ரி – கேதார் – கங்கோத்ரி – யமுனோத்ரி (ஹரித்வார், ரிஷிகேசம், கௌமுக் உள்பட) 17 நாட்கள். Date May 27 & Sep 27 - Cost Rs. 4600/- By 2X2 Lux Mini Bus.

7. அமர்நாத் (ஸ்ரீநகர், வைஷ்ணவிதேவி, ஜம்மு, ஜ்வாலாமுகி, குருக்ஷேத்திரம், அம்ரிட்சர் உள்பட) – 15 நாட்கள் Date Aug 10, Cost Rs. 4500/- By 2X2 Lux Bus.

8. காசி, கயா, ப்ரயாக் – 8 நாட்கள். Date Nov. 1 from Chennai - Cost Rs. 2200/- By Train & Bus (Train charge extra) *காசி தங்க அன்னபூரணி தரிசனம்*

9. Delhi Sight/Seing, Agra - Mathura - Jaipur *மற்றும் பல யாத்ரைகள்*, Bus for groups - *விவரங்களுக்கு எங்களுக்கு எழுதவும்.*

Note : 1. Rates are subject to Revision 2. Charges include Bus, Food & Dormitory Accomodation & Personal Guidance - Separate charge for special.


Accomodation 3. Cash Receipts Issued for LTC Purposes with a Photostat Copy of the STA Permit and Passenger list.

டில்லியிலிருந்து சௌகர்யமான, வசதியான பஸ், தங்கும் இடங்கள், திறமைவாய்ந்த, தென்னிந்திய ப்ராமணர்களால் அங்கங்கு, தயாரிக்கப்படும் சுத்தமான ருசியான ஆகாரம், முக்கிய ஸ்நான கட்டங்கள், பார்க்கும் இடங்கள் பல வருடங்கள் டில்லியில் பெயர் பெற்ற அனுபவமுள்ள, இதுவரை கலந்து கொண்ட யாத்ரிகளுடைய அன்பையும், ஆதரவையும், புகழையும் பெற்ற, நிர்வாகஸ்தர் (கே. ஆர். சங்கரன்) மேற்படி யாத்ரைகள் நடத்துகிறார். அவ்வசதியுடன் யாத்திரை செய்ய தொடர்பு கொள்ளவும்.

1. Smt. Uma Pandurangan, K-361/2, 6th Ave, Belly Area, Anna Nagar, Chennai - 40. (Ph :628 0561)
2. Sri. Santhana Krishnan, 12/1 5th Street, Dr. Subbarayan Nagar, Kodambakkam, Chennai - 23. (Ph : 483 7879)
3. Smt. Lakshmi Ramachandran, 3/27, West Street, Bikshendar Koil, Trichy - 16, (Ph : 560 774)
4. Sri. S. Narayanan, 31, (3rd Floor) Rly Mithra Mandal Co-op Society, Bail Bazaar, Kalyan - 421301 (Ph : 317021)
5. N.R. Rao, A-7, Ekopasay, Gunsagar Nagar, Station Road, Kalva (W), Thane - 400 605 (Ph : 5410666)
6. Sri. S. R. Chandran, 208/8, Rashbehari Avenue, Calcutta - 29 (Ph : 4642154)

கொடுத்து வாங்கச் செய்யலாம். கடைக்காரரிடம் சரியாகச் சில்லறையை எண்ணி வாங்கும்போது அவர்களது கூட்டல், கழித்தல் கணக்கறிவிற்குச் சிறந்த பயிற்சியாகவும் இருக்கும். தமக்காக எந்த அளவு செலவாகிறது என்றும் புரியும்.

அந்தசமயம் அவர்கள் ஆசைப்பட்டு ஏதாவது கேட்கும் பொழுது அதற்குத் தகுந்தாற்போல் பணம் கொடுத்து, ஏதாவது ஒரு பொருளைத்தான் முடிவு செய்து வாங்க வேண்டும் என்று சொல்ல வேண்டும். அதாவது ஒரு புதுமாதிரியான பென்சில் பாக்ஸைப் பார்க்கிறார்கள். ஒரு பொம்மை காரையும் பார்க்கிறார்கள். இரண்டையுமே அவர்கள் வாங்க வேண்டும் என்று விரும்பும்போது ஏதேனும் ஒன்றைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொல்லலாம். அதாவது இரண்டில் எது சிறந்தது, எது தேவையானது என்று அவர்கள் தீர்மானிக்கச் செய்ய வேண்டும். இந்தத் தேர்ந்தெடுக்கும் அறிவுதான் பண நிர்வகிப்புக்கு முதல் ஆதாரமாகும். அநாவசிய செலவுகளைத் தவிர்க்க உதவும். நினைத்ததை வாங்கக் கூடாது; வாங்கவும் முடியாது என்ற பால பாடத்தைக் குழந்தைகளால் புரிந்து கொள்ள முடியும்.



ஒன்பது முதல் பதினைந்து வயது வரை

செலவு செய்தலில் பட்ஜெட்டின் முக்கியப் பங்கையும், அவசியத்தையும் குழந்தைகளுக்கு உணர்த்த சரியான காலக் கட்டம் இது. இதற்குப் பெற்றோர்களும் பட்ஜெட் போட்டு, ப்ளான் பண்ணி செலவழிப்பவர்களாக இருக்க வேண்டும். பெற்றவர் எவ்வழியோ, அவ்வழியே பிள்ளைகளும். பெற்றோர் செலவழிக்கும் பழக்கங்களே, பிள்ளைகளுக்கும் வரும். அப்பழக்கத்தைக் காப்பியடிக்கும் பருவத்தினர் இந்த ஒன்பது முதல் பதினைந்து வயதுக்குட்பட்டவர்களே. செலவினங்கள் அவற்றைக் கட்டுப்படுத்துதல் குறித்த ஆழமான கருத்துகள் மனதில் பதியும் காலம் இது. செலவழித்தலிலும் ஒரு கட்டுப்பாடு இருக்க வேண்டும் என்று புரிந்து கொள்ளக் கூடியவர்கள் இவர்கள்.

இவர்களுக்கு உங்கள் வரவு – செலவு பட்டியலைக் காட்டுங்கள். நமக்கு இருக்கும் பண வரவு இவ்வளவுதான். இதற்குத்தான் நாம் செலவுகளையும் செய்து, சேமிக்கவும் செய்ய வேண்டும் என்று குடும்பப் பண விவரத்தை இவர்களுக்குத் தெரிவியுங்கள். குறிப்பாக இந்தப் பருவத்தினர் தான் துணிமணிகள், காஸ்மெடிக் முதல் காலணா பெறாத சமாச்சாரங்கள் வரை எதைப் பார்த்தாலும் வாங்க ஆசைப்படுவார்கள். தம்மைச் சுற்றியிருப்பவர்கள் இது, இதையெல்லாம் வைத்திருக்கிறார்கள், தம்மிடம் மட்டும் இது இல்லையே போன்ற ஏக்கங்களும் இவர்களுக்கு அதிகம். அந்த சமயத்தில் நாம் இப்படி இருந்தால் நல்லது, நம் குடும்பப் பொருளாதாரத்திற்கு நல்லது என்று புரிய வைக்க பட்ஜெட் போடுவதின் அவசியத்தையும், அப்படி போடப்பட்ட பட்ஜெட்டின் படிதான் செலவழிக்க வேண்டும் என்ற நியதியையும் எடுத்துச் சொல்லுங்கள்.

குடும்ப பட்ஜெட்டில் அவர்களுக்காக ஒதுக்கும் பணம் என்ன, எவ்வளவு என்று பாருங்கள். அந்தப் பணம் அவர்கள் படிப்பு சம்பந்தப்பட்டதாகவும் இருக்கலாம். துணிமணி, விளையாட்டு பொருட்கள், அழகுப் பொருட்கள் வாங்கவும் இருக்கலாம் அல்லது நண்பர்கள் பிறந்த நாள் போன்றவற்றிற்கு உங்கள் குழந்தைகள் அளிக்க வேண்டிய அன்பளிப்பாகவும் பணம் ஒதுக்கலாம். அப்படி எவ்வளவு பணம் ஒதுக்குகிறீர்களோ, அதை அவர்களிடமே கொடுத்து அதற்கு ஒரு மினி பட்ஜெட் போடச் சொல்லுங்கள். மறக்காமல் அந்த பட்ஜெட்டில் 'சேமிப்பு' என்பதையும் ஒரு செலவினமாகச் சேர்க்கச் சொல்லுங்கள். ஆமாம், மற்றவற்றில் மிச்சம் பிடித்து, அதாவது கட்டாயச் செலவு என்பதாக பாவித்து கொஞ்சமாவது சேமிப்புக் கணக்கில் போட வேண்டும்.

இந்த மினி பட்ஜெட் போடுவதில் பெற்றோரது உதவி தேவை. ஆனால் அத்துடன் அவர்கள் பங்கு முடிந்து விடவில்லை. இந்தப் பருவத்தினர் செலவு செய்யும்போது, அதை 'அப்ரூவ்' செய்யும் அதிகாரத்தை பெற்றோரே எடுத்துக் கொள்ள வேண்டும். பிரமாதமான ஆக்ஷன் ஷூ வாங்க வேண்டும் என்று உங்கள் மகன் பட்ஜெட்டில் கணக்குக் காட்டியிருப்பான். கடைக்குப் போய்ப் பார்த்தால் அவன் நினைத்ததைவிட இரண்டு மடங்கு விலையில் இருக்கும் ஷூதான் அவனுக்குப் பிடித்திருக்கும். ஆசைப்பட்டதற்கும், அடைய முடிவதற்கும் இடையே உள்ள இடைவெளி யாரும் சொல்லாமலேயே உங்கள் செல்வனுக்கு விளங்கும்.



குடும்பத்துடன் வெளியூரில் உள்ள கோவில்களுக்குச் செல்லும்போது அங்குள்ள கவுண்டரில் செருப்புகளை போட்டு விட்டுத் திரும்ப எடுப்பது சிரமமாக உள்ளது. அனைவரும் கவுண்டரின் அருகில் கும்பலில் கஷ்டப்படுவதற்கு பதிலாக, எல்லோருடைய காலணிகளையும், கழட்டி ஒரு பையில் போட்டு, ஒருவர் மட்டும் ஒப்படைத்து டோக்கன் பெறலாம். மீண்டும் எடுக்கும்போதும் சுலபம். நேரமும் மிச்சம்.

— லக்ஷ்மி விஸ்வநாதன்

அந்த விலைக்கு ஷூ தேவைதானா என்று உங்கள் மகனுடன் ஆலோசனை செய்யுங்கள். அதேநேரம் பட்ஜெட்டுக்குள்தான் செலவழிக்க வேண்டும் என்ற விதியையும் அவன் மீறக் கூடாது என்பதை நீங்கள் அனைவருமே நினைவில் கொள்ளுங்கள். உங்கள் டிஸ்கஷன் முடிவில் அதிக விலையானாலும் அந்த ஷூவைத்தான் வாங்க வேண்டும் என்பது முடிவானால், வேறு எந்தச் செலவுகளைக் குறைக்க வேண்டும் அல்லது சேமிப்பு ஏதாவது இருக்கிறதா என்று ஆராய வேண்டும் – அதாவது மகனுடைய மினி பட்ஜெட்டின்படி. இப்பொழுது உங்கள் செல்வனுக்கு சேமிப்பின் அருமை புரியும். அப்படி, இப்படி பட்ஜெட்டுக்குள் புரட்ட முடியவில்லை என்றால் அடுத்த மாதம் வரை காத்திருக்கச் சொல்லுங்கள்.

அடுத்த பட்ஜெட்டில் வேறு சில செலவுகளைக் 'கட்' செய்து, இந்த ஷூ வாங்கும்படி பிளான் செய்யட்டும். இந்த வகையில் சில கடினமான முடிவுகளை (hard decisions) எடுக்கவும், ஏற்கவும் இளம் வயதிலேயே பக்குவம் ஏற்படுகிறது.

பதினாறு முதல் இருபது வயது வரை

தனக்காக மினி பட்ஜெட் போடத் தெரிந்து கொண்டவர்கள் குடும்ப பட்ஜெட்டில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள சரியான வயது இது. குடும்ப பட்ஜெட் தயாரிப்பில் இந்த வயதினரை ஈடுபடுத்த வேண்டும். இதனால் தனக்காக மட்டுமல்லாமல், குடும்பத்தின் மற்ற அங்கத்தினர்களுக்காகவும் ப்ளான் செய்யவும், முடிவெடுக்கவும் இவர்கள் தெரிந்து கொள்கிறார்கள். அது மட்டுமல்ல, குடும்பத்தின் பொருளாதார நெருக்கடிகளைப் பற்றியும், கஷ்ட நஷ்டங்களைப் பற்றியும் புரிந்து கொள்ள ஒரு வாய்ப்பும் கிடைக்கிறது. பட்ஜெட் தயாரிப்புடன் நிற்காமல், பெரும்பாலான செலவுகளையும், கூடுமானவரை அவர்கள் கையாலேயே செய்யட்டும். போன் பில்லிலிருந்து கரண்ட் பில் வரை பணம் பட்டுவாடா செய்வதெல்லாம் அவர்கள் கையாலேயே செய்யட்டும். தவிர்க்கப்பட வேண்டிய செலவுகள் எத்தனை இருக்கின்றன என்று அவர்கள் உணர்ந்து கொள்வார்கள். போன் பில்லும், கரண்ட் பில்லும் குறைய எந்த அளவு தாமும் ஒத்துழைக்கலாம் என்ற எண்ணமாவது அவர்களுக்கு ஏற்படும்.

காய்கறி, மளிகை சாமான்கள்கூட முடிந்த போதெல்லாம் அவர்களே வாங்கட்டும். அப்பொழுதுதான் "இவ்வளவு விலை கொடுத்தாவது வெங்காயம் வாங்க வேண்டுமா? வெங்காயம் இல்லாமல் உப்புமா செய்தால் சாப்பிட முடியாதா?" என்று அவர்களே பொறுப்புடன் கேட்பார்கள். பணத்தின் மதிப்பை உள்ளது உள்ளபடியே புரிந்து கொள்ள இந்த வயதினரால் முடியும்.

மிக முக்கியமாகச் செய்ய வேண்டியது, சேமிப்பு வழிமுறைகளில் இந்தப் பருவத்தினரை ஈடுபடுத்துவதுதான். வங்கிச் சேமிப்பு, போஸ்ட் ஆபீஸ் சேமிப்பு, இன்ஷூரன்ஸ் முதலான பலவித சேமிப்புத் திட்டங்களை இவர்களுடன் கலந்தாலோசியுங்கள். நாளிதழ்களில் வரும் சேமிப்புத் திட்டங்கள் குறித்த விவரங்களைத் தேடிப் பிடித்துச் சொல்லும்படி ஊக்குவியுங்கள். இப்பொழுது அவர்கள் கவனிக்க வேண்டியது மினி பட்ஜெட் அல்ல, குடும்ப பட்ஜெட்டின் சேமிப்பு அளவை.

இவற்றையெல்லாம் சுருக்கமாக இப்படிச் சொல்லலாம் - எட்டு வயதுக்குள் ஒரு குழந்தை, தனக்குத் தேவையானது எது என்று தேர்ந்தெடுக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். ஒன்பது வயது முதல் பதினைந்து வயதுக்குட்பட்ட பருவத்தினர் வரவுக்குள் செலவு செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும். இதனால் பதினைந்து வயதுக்கு மேல் அவர்களுக்கு எந்த சுதந்திரமும் தேவையில்லை. பொறுப்புணர்ச்சி என்பது தலையெடுத்து சுதந்தரம் என்பது செலவழிப்பதில் இல்லை; நினைத்ததை, நினைத்த மாத்திரத்தில் வாங்குவதில் இல்லை, நமக்கிருக்கும் பணவரவைத் திறம்பட நிர்வகித்து, பணம் நம்மை ஆட்டி வைக்காமல், பணத்தை நாம் ஆள்வதில்தான் இருக்கிறது என்று உணர்ந்து கொள்வார்கள். ஆக நம் குழந்தைகள் செலவு செய்யட்டும் – எப்படிச் செலவு செய்ய வேண்டும் என்ற கோட்பாடுகள், கண்காணிப்புகளின் உதவியோடு!

— ஜெயஸ்ரீ சாரநாதன்

'டூரிஸ்ட் கைடி'ன் வேலை என்ன? பல்வேறு இடங்களை சுற்றிக் காட்டுவதும், அவற்றின் அருமை பெருமைகளை எடுத்துச் சொல்வதும்தானே என்கிறீர்களா? அதற்கு மேலும் ஒரு சுற்றுலா வழிகாட்டிக்குப் பலவித சாமர்த்தியங்கள் தேவை. அவற்றில் முக்கியமானது, எதிர்பாராத சூழல் ஏற்பட்டால் அதை சமாளிக்கும் லாவகம். இது பற்றி இங்கு விளக்குகிறார் திருமதி. ஆனந்தி ராமச்சந்திரன். ஹோம் சயன்ஸ் மற்றும் சுற்றுலாவில் பட்ட மேற்படிப்புகளை முடித்துள்ள இவர் பல வருடங்களாக இந்திய அரசின் பண்பாட்டு சுற்றுலா வழிகாட்டியாக விளங்குகிறார்.



"ஜேம்ஸ்பாண்ட் படம் எடுக்கிறாங்க!"

"எல்லா இடங்களிலும் கோயில்களின் சரித்திரச் சிறப்பை மட்டுமே சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. நமது வாழ்க்கை முறையுடன் கோயில் எப்படி பின்னிப் பிணைந்திருக்கிறது என்பதையும் எடுத்துச் சொன்னால் சுற்றுலா பயணிகள் அதிகம் ரசிப்பார்கள். செருப்பு இல்லாமல் கோயில் பிரகாரங்களை சுற்றும்போது நம் பாதத்தில் உள்ள அத்தனை நரம்பு மண்டலங்களும் அழுந்துவதன் மூலம் உடலுக்கு புத்துணர்ச்சி கிடைப்பது பற்றியும், நமஸ்காரம் என்பதே ஒருவகை உடற்பயிற்சி என்பதையும், மார்கழிமாதம் அதிகாலையில் கோயிலுக்குச் செல்லும் போது, சுத்தமான ஓஸோன் காற்றை சுவாசித்து ஆரோக்கியம் பெறுகிறோம் என்பதையெல்லாம் சொன்னால் வெளியூர்ப் பயணிகள் மட்டுமல்ல, உள்ளூர்வாசிகளே கூட 'அட' என்று வியப்பதுண்டு.



சில சமயம் சுற்றுலாத் தலங்களைவிட, அங்கு வந்திருக்கும் மனிதர்கள் அதிக முக்கியத்துவத்தைப் பெறுவதுண்டு. ஒருமுறை நெதர்லாண்ட்ஸ் நாட்டிலிருந்து வந்திருந்த பயணிகளை காஞ்சிபுரம் வரதராஜர் கோவிலுக்கு அழைத்துச் சென்றிருந்தேன். வெளிப் பிரகாரத்தில் அடுப்பு ஒன்றை உருவாக்கி சமைத்துக் கொண்டிருந்தார்கள் சில மக்கள். விசாரித்ததில் வாரங்கல் பகுதியிலிருந்து வந்தவர்கள் என்று தெரிந்தது. கையில் கங்கணம், காலில் வளையம் என்று ஜாக்கெட் இல்லாமல், மிகவும் அப்பாவித்தனத்துடன் காணப்பட்ட அந்தப் பெண்களைப் பார்த்ததும் அவர்கள் வாழ்க்கை முறை என்ன என்பது பற்றி அறிய ஆசைப்பட்டார்கள் அந்த வெளிநாட்டுக்காரர்கள். எனக்கு தெலுங்கு தெரியுமாதலால் அதுபற்றி கேட்டேன். அவர்களின் வாழ்க்கை முறை நெகிழ வைத்தது.

"ஆளுக்கு மாசம் பத்து ரூபாயை எங்கள் கிராமத்துத்



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்

16, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
சென்னை- 600 063.
TEL & FAX : 2376129
Cell Phone : 98410 50464 (Direct- Swamiji)



ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்! வணக்கம்

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த ஒன்பது ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, வசதியற்ற, திக்கற்ற 50 மாணவர்களும் 20 மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை, மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன் உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்த்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே, தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியை செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

காலை சிற்றுண்டி (70 பேருக்கு)	ரூ. 500/-
மதிய உணவு (இனிப்புடன்)	ரூ. 1,000/-
இரவு சிற்றுண்டி	ரூ. 750/-
இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ. 300/-
ஒரு மாணவனுக்கு ஓரண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ. 1,000/-
ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ. 6,000/-
குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ. 40,000/-

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம்.

உங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு Cheque/DD/ MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.


நன்கொடைகளுக்கு 80 G பிரிவின்படி
வருமானவரி விலக்கு உண்டு

இறைவன் தொண்டில்
சுவாமி சர்வாத்மானந்தர்.

ADCHOICE

தலைவரிடம் கொடுத்து வைப்போம். ஒன்றரை வருடமானதும் அதை வட்டியோடு கொடுப்பார். உடனே ஏதாவது தூரதேச கோவிலுக்குக் கிளம்பிடுவோம். ஹோட்டலிலெல்லாம் சாப்பிட கட்டுப்படியாகாது. அதனாலே கிளம்பும்போதே கோதுமை மாவையும், புளி கொத்ஸுவையும் ஒரு மூட்டையில் கட்டி எடுத்துக்குவோம். எங்கே அடுப்பு மூட்ட இடம் கிடைக்குதோ அங்கே ஒரு ரூபாய்க்கு சுச்சி வாங்கி, அடுப்ப மூட்டி ஆளுக்கு நாலு சப்பாத்தி என்கிற கணக்கில் செய்து அந்த கொத்ஸுவை தொட்டுக் கொண்டு சாப்பிட்டு விடுவோம். கடவுள் எங்களை சந்தோஷமாத்தான் வச்சிருக்காரு" என்றார் ஒரு பெண்மணி. இதைக் கேட்ட அந்த வெளிநாட்டுப் பயணிகள் "இப்படி ஒரு எளிமையான வாழ்க்கையில் கூட இவர்களால் புன்னகைக்க முடிகிறதே. சுற்றுலாவும் கிளம்ப முடிகிறதே! இதெல்லாம் எங்கள் நாட்டில் காண முடியாத ஒன்று" என்று பிரமித்தார்கள்.

'வெளிநாடுகளைவிட நம் நாடு ஒரு மாற்று குறைவுதான்; உலக அரங்கில் நம்மைக் குறைவாகத்தான் மதிப்பிடுகிறார்கள்' என்று நாம் நினைக்கக் கூடாது. ஜெர்மனி நாட்டு கலாச்சாரத்தின் வயது இருநூறுதான். ஐயாயிரம் வருட பாரம்பர்யம் கொண்ட நமது கலாச்சாரத்தை அவர்கள் மரியாதையுடன்தான் பார்க்கிறார்கள். முக்கியமாக இந்தியாவில் உள்ள (இன்னமும் முழுவதும் மறைந்துவிடாத) கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறையை அவர்கள் வியந்து போற்றுகிறார்கள்.



சில சமயம் குறிப்பிட்ட நபர் அல்லது குழுக்களுக்கு உதவ வேண்டும் என்று சுற்றுலாக் கழகம் கேட்டுக் கொண்டதுண்டு. கபாலி தேர் உற்சவத்தைப் படமாக்க ஒரு ஜெர்மானியருக்கு உதவ வேண்டும் என்ற நிலை வந்தது. திரளான கூட்டத்துக்கு நடுவே, கையில் மிக கனமான, பல லட்சங்கள் மதிப்புள்ள வீடியோ காமிராவை இயக்கியபடி அவர் வேகமாக நடக்க, அவரோ, கேமிராவோ கீழே விழுந்துவிடக் கூடாதே என்ற பயத்தில் சுற்றியிருப்பவர்களை கொஞ்சம் ஒத்துழைக்கச் சொல்லி கெஞ்சிக் கொண்டே நானும் பின்புறமாகவே வேகமாக நடந்த அந்த நாளை மறக்கவே முடியாது.

இன்னொரு ஜெர்மன் குழுவினர் இந்தியாவில் உள்ள ஒரு இளம் பெண்ணின் ஒரு நாள் வாழ்க்கை குறித்துப் படமெடுக்க வந்தார்கள். இதற்கு ஏற்பாடு செய்யும் பொறுப்பு என்னிடம் தரப்பட்டது. அண்ணா நகரில் உள்ள ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்தோம். "குளியல், சுவாமி நமஸ்காரம், ஸ்தோத்திரம், துளசி வந்தனம், சீருடை அணிந்து பள்ளிக் கூடம், மாலையில் வந்ததும் நடன உடை அணிந்து பரதப் பயிற்சி, இரவில் கொஞ்சம் டி.வி." இப்படிப்பட்ட அவளது நிகழ்ச்சி நிரலைப் படமாக்கிய பிறகு அந்த ஜெர்மன் காரர்கள் சொன்ன ஒரு வாக்கியத்தை என்னால் மறக்க முடியாது. "தினசரி நிகழ்ச்சிகள் இவ்வளவு டைட்டாக இருப்பதால்தான் தமிழகத்தில் இளம் பெண்கள் டீனேஜில் கூட மனதை அலைபாய விடுவதில்லை போலும்!"

சென்னையில் முக்கிய பகுதிகளை வீடியோவில் பதிவு செய்ய ஹாங்காங்கிலிருந்து ஒரு குழு வந்திருந்தனர். இடங்களைத் தேர்ந்தெடுத்து உதவ என்னை அனுப்பினார்கள். சீனாவிலிருந்து ஒரு பேரழகான மாடலும் வந்திருந்தாள் - சுற்றுலா இடங்களின் பின்னணியில் அவை குறித்து விவரங்களைத் தொகுத்து வழங்க கலங்கரை விளக்கத்துக்கு அருகே காரை நிறுத்திவிட்டு இறங்கியதுமே ஒரு பெரும் கூட்டம் சேர்ந்து விட்டது! அங்குள்ள மீனவர் பகுதியை சேர்ந்தவர்கள் சூழ்ந்து கொண்டார்கள். சிலர் கொச்சையான விமர்சனங்களுடன் அந்த மாடலை தொட்டுப்பார்க்க வேண்டும் என்றும் முயற்சி செய்யத் தொடங்கினார்கள்.

கலங்கரை விளக்கத்தில் ஏறிப் பார்க்க அனுமதி வழங்கப்படாத நிலையில், மேற்படி பகுதியில் உள்ள உயரமான டாங்கின் மீது ஏறி உதயமாகிக் கொண்டிருந்த சூரியனின் பின்னணியில் கடலை படமெடுத்து விட்டுத்

தான் போவோம் என்பதில் உறுதியாக இருந்தார்கள் படப்பிடிப்புக் குழுவினர். இந்தக் குழுவுக்குப் பொறுப்பானர் என்ற முறையில் மனம் திக் திக் என்று அடித்துக் கொள்ள "இவங்க ஜேம்ஸ்பாண்ட் படமெடுக்கறாங்க. நம் நாட்டுப் படப்பிடிப்பு அழகாக வர வேண்டாமா? உங்களையும் சேர்த்துப் படமெடுப்பாங்க" என்றெல்லாம் வினயமாக ரீல் சுற்றி, அவர்கள் உதவியுடனேயே அந்தப் படப்பிடிப்பை அழகாக நடத்திக் கொண்டு வீடு திரும்பிய அனுபவம் மிகவும் வித்தியாசமானதுதான்.

"டெம்பிள் டூருக்கு வழிகாட்டியாகப் போட்டால் எனக்குக் கொள்ளை சந்தோஷமாக இருக்கும். வெளிநாட்டினரோடு போகும் போது பிரகாரத்தோடு நின்று விட வேண்டிய சுற்றுலா. டெம்பிள் டூரில் வருவது பெரும்பாலும் இந்துக்கள் என்பதால் கர்ப்பக்கிரகம் வரை சென்று கடவுளை தரிசிக்க முடியும் என்பதால் அந்த சந்தோஷம். ஒரு முறை அப்படிப்பட்ட டூரில் நாக்பூரைச் சேர்ந்த ஒரு வயதான தம்பதியும் இடம் பெற்றிருந்தார்கள். சிதம்பரம் போனபோது அந்த முதியவருக்கு மயக்கம் வந்து கோமா ஸ்டேஜை அடைந்து விட்டார். அங்கிருந்த மருத்துவமனையில் சேர்த்தேன். அவர் மனைவிக்கு தமிழ் ஆங்கிலம் எதுவும் தெரியாததோடு மிகவும் அப்பாவியாக வேறு இருந்தார். டூரில் கலந்து கொண்ட பெரும்பாலானவர்கள் தாமதமாவது குறித்து முணுமுணுக்கத் தொடங்கி விட்டார்கள். என்ன செய்வதென்று தெரியவில்லை.

அந்தப் பெண்மணியிடமோ மிகக் குறைவான பணம்தான் இருந்தது. நான் எப்போதுமே டூரின் போது ஐயாயிரம் ரூபாய் எடுத்துச் செல்வது வழக்கம்- எனக்கே ஏதாவது திடீர் உடல்நலக் கோளாறு உண்டானால் ஃப்ளைட்டில் திரும்பி வருவதற்காக. அந்தப் பணத்தை மருத்துவமனையில் செலுத்தி, ஒரு தனி நர்ஸையும் ஏற்பாடு செய்து, சில மணி நேரங்களுக்குப் பிறகு "உயிருக்கு பயமில்லை" என்று டாக்டர் கூறியவுடன், நாங்கள் கிளம்பினோம். அதற்குப் பிறகு உடல் நலமாகி, டிஸ்சார்ஜாகி பின்னொரு நாள் அந்த மொத்தக் குடும்பத்ினரும் என் வீட்டுக்கு வந்து நன்றிகூறி, பணத்தையும் திருப்பிக் கொடுத்துவிட்டு "தென்னிந்தியர்கள் குறுகிய மனப்பான்மை கொண்டவர்கள்னு சிலர் சொல்வதுண்டு. அப்படியெல்லாம் இல்லைன்றதை உங்க மூலம் தெரிஞ்சுக்கிட்டோம்" என்றார்கள்.

இப்படி அவ்வப்போது சவாலான சந்தர்ப்பங்கள் வருவதாலேயே இந்த வேலை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது."

பேட்டி: **ஜி.எஸ்.எஸ்.**

சஷ்டி, வெள்ளிக்கிழமை, சதுர்த்தி போன்ற விரத நாட்களில் நம்மில் சிலர் பாயஸம் மட்டும் சாப்பிட்டு, உபவாசம் இருப்பார்கள். அந்த மாதிரி சமயங்களிலும், சாதாரண நாட்களிலும், முழு பயறு பாயஸம் வைத்துச் சாப்பிடலாம். புரதச் சத்து கிடைப்பதுடன், முழு உணவாகவும் பயன் தரும் பாயஸம். இதோ விளக்கம்.

ஒரு கப், தோலுடன் கூடிய முழு பயறு எடுத்து வாணலியில் லேசாக வாசனை வரும் வரை வறுக்கவும். (வறுக்காமலும் செய்யலாம்) வறுத்த பயற்றுடன் 2 கப் பால் விட்டு குக்கரில், வெயிட் போட்டு ஒரு விசில் வரும் வரை வேக வைக்கவும். பின் கால் கப் வெல்லத்தைப் பொடி செய்து, சிறிது தண்ணீர் விட்டு, அடுப்பில் வைக்கவும். வெல்லம் கரைந்ததும், மண் போக வடிகட்டி, வேக வைத்த பயிற்றில் ஊற்றவும். ஒரு துண்டு இஞ்சியைப் பொடியாக நறுக்கி சிறிது நெய் விட்டு வதக்கி பாயஸத்தில் போடவும். ஒரு மூடி தேங்காயைத் துருவி கெட்டியாக பால் எடுத்து பாயஸத்தில் ஊற்றவும். ஒரு கொதி வந்ததும், வறுத்த முந்திரி ஏலப் பொடி



சேர்த்து இறக்கவும். இந்தப் பயறு பாயஸத்தைச் சூடாகவும், குளிர வைத்தும் கூட சாப்பிடலாம். ஒரு கப்பில் ஊற்றி ஒரு ஸ்பூன் போட்டு தர உங்கள் குழந்தைகள் மிகவும் விரும்பி சாப்பிடுவார்கள்.

– பால் இராஜேந்திரன்


சத்தான எண்ணெய்
முத்தான எண்ணெய்
சிக்கனத்திற்கு சொந்தமான எண்ணெய்
Gold Winner
SUPER REFINED SUNFLOWER OIL
Gold Winner
SUPER REFINED SUNFLOWER OIL
Gold Winner
SUPER REFINED SUNFLOWER OIL
A QUALITY PRODUCT OF
KALEESUWARI REFINERY LTD.



நடுவில் கொஞ்சம் பொழுதுபோக்கு

சுற்றுலா போகும் போது சுற்றிப் பார்ப்பதற்கு மட்டுமல்ல, சும்மாயிருக்கும் நேரமும் நிச்சயம் இருக்கும். ரயிலில் செல்லும் போது, ஹோட்டலில் தங்கும் போது பூங்காவில் அல்லது கடற்கரையில் இருக்கும் போது என்று. அந்த நேரத்தை எப்படிச் செலவிடுவது? ஏதாவது புத்தகத்தைப் படித்துக் கொண்டோ, தூங்கிக் கொண்டோ இருக்கலாம்தான். ஆனால் குடும்பத்தோடும் நண்பர்களோடும் சுற்றுலா செல்லும் போது சில ஜாலியான விளையாட்டுகளை விளையாடலாமே. எந்த வயதுக்காரரும் இவற்றில் பங்கெடுத்துக் கொள்ளலாம் என்பதுடன் எந்த இடத்திலும் இவற்றை ஆட முடியும் என்பது கூடுதல் சௌகரியம். கூடியிருப்பவர்களும் ரசித்துப் பாராட்டினாலோ, இண்டலடித்தாலோ மேலும் சுவை.

"உங்களுக்குப் பிடித்த நடிகை யார்?"

"நாகேந்திரன்."

"கடைசியாக எந்த ஊருக்குப் போய் வந்தீர்கள்?"

"பாங்க் ஆஃப் இந்தியா."

"மனிதருள் மாணிக்கம் என்று யாரைச் சொன்னார்கள்?"

"மீனா."

"எந்தத் தலத்தில் கிட்டத்தட்ட முழுவதுமாக கிறித்தவர்கள் வசிக்கிறார்கள்?"

"அதுவா... திருப்பதி."

"அற்புதம். என்னைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

"அடடா! நேருதான் போங்க."

"சேஷாத்ரி சுவாமிகள் எந்த ஊரில் வசித்து வந்தார்?"

"வாடிகன்."

"சந்தனக் கடத்தல் வீரப்பன் பற்றி இரண்டே வார்த்தைகளில் விவரிக்கச் சொன்னால்..."

"நடமாடும் பல்கலைக் கழகம்."

"அப்பா. புல்லரிக்குது. கமல்ஹாசன் அடிக்கடி விசிட் செய்யும் கோவில் எது?"

"திருவண்ணாமலை."

"டென்னிஸ் வீரர் அகாஸி குறித்து?"

"இன்னொரு குற்றவாளி."

"எனக்கு அதிகம் இருப்பது நினைவாற்றலா? மனிதாபிமானமா? அறிவுக் கூர்மையா?"

"எதுவும் இல்லை."

"சபாஷ் போட்டியிலே நீங்க ஜெயிச்சுட்டீங்க."



இதென்ன விளையாட்டு? அசட்டுத்தனமாக இருக்கிறதே என்று எண்ண வேண்டாம். இதோ இந்த விளையாட்டின் விவரம்.

ஒருவர் ஒவ்வொரு கேள்வியாகக் கேட்டுக் கொண்டு வர இன்னொருவர் பதிலளிக்க வேண்டும். ஆனால் நேரடியாக அந்தக் கேள்விகளுக்கான பதிலை அல்ல.

முதல் கேள்விக்குத் தன் பெயரை பதிலாகத் தர வேண்டும். இரண்டாவது கேள்விக்கு தான் பணிபுரியும் நிறுவனத்தின் பெயரை (அல்லது கல்விக் கூடத்தின் பெயரை) பதிலாகத் தர வேண்டும்.

மூன்றாவது கேள்வியைக் கேட்டதும், அதற்கு முதல் கேள்விக்கான விடையை அளிக்க வேண்டும். நான்காவது கேள்விக்குப் பதிலாக இரண்டாம் கேள்விக்கான விடை. இப்படி எவ்வளவு கேள்விகளுக்கு ஒருவர் சரியாக விடையளிக்கிறாரோ அவ்வளவு மதிப்பெண்கள்.

அதாவது இதற்கு முன் கேட்கப்பட்ட மூன்று கேள்விகளை வரிசைக்கிரமமாக நினைவில் வைத்துக் கொண்டால்தான் தொடர்ந்து சரியாக பதிலளிக்க முடியும். இந்த விளையாட்டில் அடிக்கடி பங்கெடுத்துக் கொண்டால் நினைவாற்றல் பெருகும்.

எளிமையான கேள்விகளையே தேர்ந்தெடுங்கள். அதே போல் விடை தப்பாக இருந்தாலும் ஞாபக சக்தியில் பழுதில்லை எனும்படி பதில் சொன்னால் அதை ஒத்துக் கொள்ளலாம். உதாரணமாக "மிக வேகமாக ஓடும் மிருகம் எது?" என்ற கேள்விக்கு (அதற்குப் பிறகு இரண்டு கேள்விகள் கேட்டபின்) "மான்" என்றோ "முயல்" என்றோ பதில் வந்தால் (சிறுத்தைப் புலி என்பதுதான் சரியான விடை என்றாலும்) அதை ஏற்றுக் கொண்டு விளையாட்டைத் தொடரலாம்.

எளிதில் கிடைக்கக்கூடிய சிறிய பொருட்களை (சீப்பு, சின்ன பேட்டரி, பேனா, மாத்திரை, கைக்குட்டை இப்படி சுற்றுலாவில் நாம் எடுத்துச் செல்லும் பொருள்களாகவும் இருக்கலாம்.) ஒரு பையில் போட்டு இன்னொருவரிடம் கொடுத்து அதை அரை நிமிடத்துக்குள் பார்த்து மனதில் பதியவைத்துக் கொள்ளச் சொல்லவும். பிறகு அதில் இருக்கும் மற்றும் இல்லாத பொருள்களின் பெயரை ஒவ்வொன்றாக நீங்கள் சொல்லச் சொல்ல அது பையில் இருந்ததா இல்லையா என்பதை நண்பர் கூற வேண்டும். சரியான கண்டுபிடிப்புக்கு ஒரு மதிப்பெண் என்றால், தப்பான கண்டுபிடிப்புக்கு ஒரு மதிப்பெண் மைனஸ்.

விளையாட்டில் கலந்து கொள்பவர்கள் சற்றே பெரியவர்கள் என்றால் பொருளின் பெயர்களையும் வேறு சில விவரங்களையும் சேர்த்துக் கேட்கலாம் - எவரெடி பேட்டரி, நடராஜ் பென்சில், பூ வேலைப்பாடு அமைந்த கைக்குட்டை இப்படி.

இந்த விளையாட்டுக்குத் தேவை ஒரு சீட்டுக் கட்டு மட்டுமே. மைதானத்திலோ அறையிலோ நான்கு சம பாகமாக பிரிக்கப்பட்ட ஒரு வட்டத்தை வரைந்து கொள்ளுங்கள். ஆட்டின், டயமண்ட், ஸ்பேட், க்ளாவர் ஆகிய நாலு சீட்டு வகைகளின் பெயரை கட்டத்துக்கு ஒன்று என்ற விதம் வட்டத்தில் எழுதிக் கொள்ளுங்கள். கலந்து கொள்பவர்கள் இந்த வட்டத்தைச் சுற்றி நடந்து சென்றோ ஓடிக் கொண்டோ இருக்க வேண்டும்.

வாலண்டியர் ஒருவர் சீட்டுக் கட்டை குலுக்கிக் கொண்டே இருக்க வேண்டும். மணியடித்தவுடன் குலுக்குவதை நிறுத்தி விட வேண்டும்.

அதே சமயம் மணி ஒலித்தவுடன், வட்டத்தைச் சுற்றி சென்று கொண்டிருப்பவர்கள் அருகிலிருக்கும் கட்டத்துக்குள் நின்று கொள்ள வேண்டும். இப்போது மேலாக உள்ள சீட்டை திருப்பி அதில் என்ன பூ என்பதைப் பார்க்க வேண்டும். உதாரணமாக அது க்ளாவர் சீட்டு என்றால், க்ளாவர் கட்டத்தில் உள்ள எல்லோரும் அவுட். மீதிப் பேரை மட்டும் கொண்டு ஆட்டம் இதே முறையில் தொடரும். கடைசியாக மிஞ்சுபவர்களே வெற்றி பெற்றவர்கள். இது முழுக்க அதிர்ஷ்டத்தை அடிப்படையாகக் கொண்ட விளையாட்டு என்றாலும் வேடிக்கை என்ற கோணத்திலும் மிகவும் வேறுபாடான வயது கொண்டவர்கள் கலந்து கொள்ளும் போது இப்படிப்பட்ட போட்டிகள்தான் நியாயமானவை என்பதாலும் இந்த விளையாட்டில் அளவிலாத உற்சாகம் இருக்கும்.

— **ஜி.எஸ்.எஸ்.**

போண்டாவை ஸ்பூனால் சிறிது சிறிதாக எண்ணெயில் விட்டுப் பொரிக்கவும். தயிரில் ஒரு பச்சை மிளகாய், சிறு துண்டு இஞ்சி, தேங்காய், கொத்துமல்லி அரைத்து சேர்த்து கலக்கவும். அதில் போண்டாக்களை ஊறவிடவும். பரிமாறும் போது கொத்துமல்லித் தழையை தூவவும். இந்த 'தயிர் போண்டா'விற்கு நல்ல வரவேற்பு இருக்கும். ருசியாக இருக்கும்.

— ஜெயா



டெல்லிக்குப் போனால்...



டெல்லிக்குப் பல பேர் பல வேலைகளாகச் செல்வதுண்டு. சிலர் டூரிஸ்டுகளாகவே டெல்லிக்குச் செல்வதுண்டு. ஆக வருடம் முழுவதும் டெல்லிக்கு ஏராளமானோர் வந்து போய்க் கொண்டுதான் இருக்கிறார்கள்.

டெல்லியிலும் டெல்லியைச் சுற்றி நான்கு திசைகளிலும் நிறையச் சுற்றுலா இடங்கள் இருக்கின்றன. டெல்லிக்குப் போகிறவர்கள் பக்கத்தில் உள்ள வேறு சில இடங்களையும் நிச்சயம் பார்க்க விரும்புவார்கள். அப்படி சுற்றுலாச் செல்ல விரும்புவோருக்குத் திட்டமிட சில தகவல்கள்–

டெல்லியில் கரோல்பாக் ஏரியா தமிழர்கள் அதிகமாக இருக்கும் இடம். நம் ஊர் ஓட்டல்களும் இங்கு உள்ளன. எல்லோரும் விரும்பும் 'மண்டே மார்க்கெட்' திங்கட்கிழமை மட்டும் இங்குதான் உண்டு. ஆகவே டெல்லி சென்றால் தங்குவதற்குச் சிறந்த இடம் கரோல்பாக்தான். டூரிஸ்டுகள் நிறையப் பேர் இங்கு வருவதால் முக்கியமான டிராவல்ஸ் கம்பெனிகளும் கரோல்பாக்கில் இருக்கின்றன.

வாரம் முழுவதும் பல டூர்களை ரெகுலராக இந்த டூரிஸ்ட் கம்பெனிகள் நடத்துகின்றன. டெல்லியே ஒரு டூரிஸ்ட் சென்டர்தான். பார்க்க வேண்டிய இடங்கள் நிறைய உள்ளன.

டெல்லிக்கு ஒரு வேலையாக நீங்கள் வருகிறீர்கள். இண்டர்வியூ, ஆபீஸ் வேலை, பிசினஸ் என்று எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். மாலையில் உங்கள் வேலை முடிந்து விட்டது. மறுநாள் நீங்கள் புறப்பட வேண்டும். (எப்போதுமே சென்னைக்குத் திரும்புவதற்கு தமிழ்நாடு எக்ஸ்பிரசில் ரிசர்வ் பண்ணுங்கள். ஏனெனில் அது இரவு 10 மணிக்குத்தான் புறப்படும். ஜி.டி. எக்ஸ்பிரசில் ரிசர்வ் பண்ணினால் மாலை 6 மணிக்கே நீங்கள் புறப்பட வேண்டியதிருக்கும்)



ஒரு நாள் இருக்கிறது என்றால் நீங்கள் டெல்லியைச் சுற்றிப் பார்க்கலாம். டிராவல்ஸ் கம்பெனிகள் தினசரி காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை இந்த டெல்லி லோக்கல் சுற்றுலாவை டூரிஸ்ட் பஸ் மூலம் நடத்துகின்றன. கரோல்பாக்கிலிருந்து புறப்பட்டு திரும்பி கரோல்பாக் வந்து விடும். பின்பு நீங்கள் ரயிலுக்கும் புறப்படலாம். நேரம் நிறைய இருக்கிறது. இரவு சென்னை விமானத்திற்கு என்றால் காரில் போய் சுற்றிப் பார்த்துவிட்டு முன்னதாகவே புறப்பட்டு விட வேண்டும். இங்கு கொஞ்சம் டெல்லி பற்றி...



டெல்லி:-

இந்தியத் தலைநகரம். மேலும் இது ஒரு யூனியன் பிரதேசம் (பாண்டிச்சேரி மாதிரி) டெல்லி இரு பிரிவுகளாக பழைய டெல்லி, புதுடெல்லி என்று உள்ளது. பழைய டெல்லி இந்தியாவில் உள்ள மற்ற ஊர்களைப் போல் குப்பையும் கூளமாகத்தான் இருக்கும்.

ஆனால் புதுடெல்லி ஒரு அழகிய நகரம். வானுயர்ந்த கட்டடங்கள், அழகிய புல் தரைகள், அகலமான சுத்தமான தெருக்கள், தெருக்களில் அடர்ந்த மரங்கள் என்று மிக ரம்யமாக இருக்கும். நாட்டின் தலைநகரமல்லவா, அப்படித்தான் இருக்க வேண்டும்.

பிர்லாமந்திர் (லட்சுமி நாராயணன் கோயில்), குதுப்மினார், லோட்டஸ் டெம்பிள், தீன்மூர்த்திபவன் (நேரு வாழ்ந்த வீடு), இந்திராகாந்தி மியூசியம், செங்கோட்டை, ராஜ்காட், இந்தியாகேட் என்று பார்ப்பதற்கு நிறைய இடங்கள்

சுற்றுலா! நாங்க அழைத்துப் போகிறோம்...

எஸ். ஜெயராமன் (ஸ்ரீ விஜயலட்சுமி டிராவல் ஏஜென்ஸி)

"ஏஜென்ஸி துவங்கி 25 வருடமாகிறது. அதற்கு முன்பே எனக்கு பல டூர்களில் கலந்து கொண்டு நல்ல அனுபவம் இருந்தது.

எங்கள் டூர்கள் பிப்ரவரி துவங்கி டிசம்பர் வரை தொடர்ந்து நடைபெறும்.

முக்கியமான டூர் துவாரகை, டார்ஜிலிங், சிம்லா போன்றவை. அது தவிர காசி யாத்திரை பத்ரிநாத் டூர் போன்றவை.

அமர்நாத் கூட சென்றுதான் வந்திருக்கிறோம். ஆனால் தற்போது கொஞ்ச காலமாக அங்கு நிலவி வரும் பயங்கரவாதம் மற்றும் பயண வழி குறைபாடு காரணமாக நிறுத்தி வைத்துள்ளோம்."

நீங்கள் எடுத்துச் செல்லும் லக்கேஜ்கள், மற்றும் சமையல் சாமான்களை ஹோட்டல்களில் அனுமதிக்கிறார்களா? அதில் ஏதும் சிரமமில்லையா?

"வட இந்தியாவில் அனைத்து இடங்களிலுமே இப்படி யாத்ரா சர்வீஸ் மூலம் பயணிகள் வந்து செல்வது சர்வ சாதாரணமாகி விட்டது. எனவே அவர்களும் நிலைமையைப் புரிந்து கொண்டு எங்களுக்கு இடமளிப்பதைப் பற்றி ஆட்சேபணை தெரிவிப்பதில்லை. கிச்சன்கள் தாராளமாக ஹோட்டல்களில் கிடைக்கிறது. முன்பு போல தற்போது கட்டை விறகுகள் பயன்படுத்துவதில்லை. ஸ்டவ்வைக் கொண்டு கறி பிடிக்க வைக்கப் போவதில்லை. நாம் தூய்மையாக காஸ் அடுப்பில் செய்து நமது வீட்டு சமையலறை போல தரப் போகிறோம். அதற்கு வாடகையும் அவர்கள் பெறப் போகிறார்கள். எனவே சமீப காலமாக இதுபோன்ற பெரும் பிரச்னைகள் குறைந்துள்ளது.

உள்ளன.

ஜனாதிபதி மாளிகை, பார்லிமெண்ட் மற்றும் வெளிநாட்டுத் தூதரகங்கள் இருக்கும் சாணக்யபுரி இதை எல்லாம் பஸ்ஸில் இருந்தே பார்த்துக் கொண்டு போக வேண்டியதுதான். இறங்கி உள்ளே சென்று பார்க்க முன் அனுமதி வேண்டும்.

நீங்கள் விரும்பும் பல பொருள்களை சென்னையைவிட மலிவான விலையில் டெல்லியில் வாங்கலாம். சாந்தினி சௌக், கரோல் பாக், கந்தர் நகர், பாலிகா பஜார் ஏரியாக்களில் ஏகப்பட்ட கடைகள் இருக்கின்றன. பேரம் பேசி வாங்க வேண்டும்.

உங்கள் வேலை முடிந்து டெல்லியில் இன்னும் இரண்டு நாட்கள் நீங்கள் இருப்பதாக இருந்தால் டெல்லி லோக்கல் மற்றும் ஹரித்வார் ரிஷிகேஷ் போய் வரலாம்.

ஹரித்வார் - ரிஷிகேஷ் போவதாக இருந்தால் உங்கள் வேலை முடிந்த அன்றே புறப்பட்டு விட வேண்டும். டூரிஸ்ட் பஸ் இரவு பத்து மணிக்குத்தான் புறப்படும். மறுநாள் இரவு எட்டு மணிக்கு டெல்லிக்குத் திரும்பி விடும். அதற்கடுத்த நாள் ஓய்வு எடுத்துக் கொண்டு, அன்றிரவு சென்னைக்கு ரயிலிலோ விமானத்திலோ புறப்பட்டு விடலாம்.

ஹரித்வார்:

இந்துக்களின் புண்ணியஸ்தலம். புனித கங்கையில் நீராடலாம். ஹரி-கா-பவுரி, மானசாதேவி மந்திர், பாரத் மாதா மந்திர் தரிசனம்.

ரிஷிகேஷ்:

லட்சுமண் ஜூலா, ராம் ஜூலா, பரமாத் லோக், பரமாத் நிகேதன், கங்கை நதியின் குறுக்கே போடப்பட்டுள்ள ஆச்சரிய மான தொங்கும் பாலம், கீதா பவன், ஆகியவைகளைக் காணலாம்.

அல்லது இன்னொரு டூர் போகலாம். முதல்நாள் ஆக்ரா - மதுரா சென்று வரலாம். காலையில் ஆறு மணிக்குப் புறப்பட்டு இரவு பத்து மணிக்கு கரோல்பாக்கிற்கு பஸ் வந்து விடும். இரண்டாம் நாள் டெல்லி லோக்கல் போகலாம். மாலை 5.30 மணிக்குத் திரும்பி விடலாம். சென்னைக்கு அன்றிரவு புறப்படுவது எளிது.



கார் அல்லது வேனில் சென்றாலும் இதே கால அளவுதான் ஆகும்.

உங்களுக்கு மூன்று நாட்கள் கிடைத்தால், அதுவும் செவ்வாய், புதன், வியாழன் அல்லது வியாழன்,

தற்போது உங்கள் டூரில் அழைத்துச் செல்லக்கூடிய ஒரு நபருக்கு அவர்கள் வீட்டிலிருந்து முக்கியமான தகவல் தெரிவிக்க வேண்டியிருந்தால் என்ன செய்வது?

"சில முக்கிய தேவைகள் எழலாம் என்பதை மனத்தில் கொண்டே வாரணாசி இன்னும் சில இடங்களுக்கு மட்டும் முன்கூட்டியே நாங்கள் தங்கப் போகும் இடம் உறுதியானவுடன் 15 நாட்களுக்கு முன்னரே பயணிகளுக்கு தெரிவித்து விடுவோம். சில இடங்களுக்கு போன் நம்பரும் முன்கூட்டியே தெரிவித்தால் வெளியூர்களிலிருந்து வருபவருக்கும் சிரமம் இருக்காது. எனவே தயாராக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் யாத்ரீகர்களின் நலனையும் மனத்தில் கொண்டே நாங்கள் செயல்படுகிறோம்."

டூர்கள் என்பதை பொறுத்தவரை விளம்பரம் தவிர எந்த முறையில் தகவல்கள் அறிந்து கொண்டு பயணிகள் தங்களை அணுகுகிறார்கள்?

"விளம்பரம் எனும் ஒரு பெரிய பலம் இருந்



தாலும் நாங்கள் நல்ல முறையில் அழைத்துச் சென்று வந்த பின்பு யாத்ரீகர்கள் தானாகவே முன்வந்து எங்களை சிபாரிசு செய்து நண்பர்கள் உறவினர்கள் என்று 4, 5 மாதங்களுக்கு முன்பாகவே பயணங்கள் ரிசர்வ் செய்து விடுகிறார்கள்."

மிக மிக அவசரமான சூழலில் 35 நாட்கள் 21 நாட்கள் சுற்றுலாவை பயணிகள் விரும்புகிறார்களா?

வெள்ளி, சனிக்கிழமை கிடைத்தால் 'கோல்டன் டிரை ஆங்கிள்' என்று சொல்லப்படும் ஜெய்ப்பூர் - பதேபூர் சிக்ரி - ஆக்ரா - மதுரா சென்று வரலாம்.

இந்த டூர் ஒவ்வொரு திங்கட்கிழமையும் புதன்கிழமையும் இரவு பத்து மணிக்குப் புறப்பட்டு முறையே புதன் இரவு பத்து மணிக்கும், வெள்ளி இரவு பத்து மணிக்கும் டெல்லி திரும்பி விடுகிறது. ஆகவே நீங்கள் வியாழன் இரவோ அல்லது சனிக்கிழமை இரவோ சென்னைக்குப் புறப்படுவது எளிது.

மதுரா:

ஸ்ரீகிருஷ்ணர் அவதரித்த இடம். கிருஷ்ணன் கோயில் தரிசனம்.

பிருந்தாவன்:

ஸ்ரீகிருஷ்ணரின் இளம்பிராயத்து இடம். இங்கு தமிழ்நாட்டு வடிவிலான கோபுரம் உடைய பெருமான் கோயிலும் உள்ளது.

ஆக்ரா:

உலக அதிசயங்களுள் ஒன்றான தாஜ்மகால் மற்றும் இங்கு ஒரு ரெட் போர்ட்டும் உள்ளது.


டெல்லி - ஆக்ரா - மதுரா - டெல்லி ஒருநாள் டூர். காலை 6 மணிக்குப் புறப்பட்டு இரவு 10 மணிக்கு திரும்ப டெல்லி வந்து சேரும்படியாக டிராவல்ஸ் கம்பெனிகள் தினசரி டூர் உண்டு. இத்துடன் பிருந்தாவன் மற்றும் பக்கத்தில் உள்ள கோகுலம் போய்ப் பார்க்க வேண்டும் என்றால் இரண்டு நாள் டூர் ஆகும்.

ஜெய்ப்பூர்:

ராஜஸ்தான் மாநிலத் தலைநகரம். 'பிங்க் சிட்டி' என்ற பெயரும் உண்டு. ஏனென்றால் பெரும்பாலான கட்டடங்கள் எல்லாம் பிங்க் கலரிலேயேதான் இருக்கும்.

பிர்லா இந்தியாவில் பல இடங்களில் நிறையக் கோயில்கள் கட்டி உள்ளார்கள். அவை எல்லாவற்றிற்குமே பிர்லா மந்திர் என்றுதான் பெயர். இங்கும் ஒரு பிர்லாமந்திர் உள்ளது. இது கிருஷ்ணன் கோயிலாகும். முழுவதும் சலவைக்கற்களால் கட்டப்பட்டது. மிக மிக அழகானது. அவசியம் போய்ப் பாருங்கள்.

மற்றும் அரண்மனை, மியூசியம், ஜந்தர் மந்தர், ஹவா மகால், மலை மேல் உள்ள ஆம்பர் கோட்டை காணத்தக்கவை. ராஜஸ்தான் கைவினைப் பொருள்களை இங்கு வாங்கலாம். கலைநயம் மிக்கவைகள்.



இந்த ஜெய்ப்பூருக்கு டெல்லியிலிருந்து ஒருநாள் பயணமாகவும் போய் விட்டு வரலாம். ஆனால் மிகுந்த சிரமமானது. டெல்லியிலிருந்து ரயில் மற்றும் விமானம் மூலமாகவும் இங்கு வரலாம்.

பதேபூர் சிக்ரி:

பேரரசர் அக்பரின் தலைநகராக ஒருமுறை இருந்தது. அக்பர் கோட்

''இது வருடத்திற்கு ஒருமுறைதானே! ஒரு பக்கம் இப்படிப்பட்ட சங்கடங்கள் அதாவது இத்தனை நாள் டூரா என்று நினைத்தே பலரும் விட்டு விடுவதுண்டு என்றாலும் மலேயா சிங்கப்பூர் போன்ற இடங்களிலிருந்து வருபவர்கள் இப்படி நீண்ட டூரை விரும்பவே செய்கிறார்கள். தவிர நமது நாட்டில் பலரும் தனது முன்னோர்களுக்கான வைதீக காரியங்களை காசியில் செய்வது மஹா புண்ணியம் என்று கருதுகிறோம். அதற்காக அவர்கள் நேரம், பணம் இதைப் பற்றி யோசிக்காது வந்து விடுகிறார்கள்.''

குலு மணாலி போன்ற இடங்கள் நிரம்ப குளிர்ச்சியானவை. அவற்றை முதியவர்கள் எப்படித் தாங்குவார்கள்?

''ஆர்வத்தைத் தடுக்க முடியாது வயதானவர்கள் வருகிறார்கள். முன்பே அவர்களின் உடல் நலனை அவர்களிடம் விவரமாக கேட்டுத் தெரிந்து கொண்டு குறிப்பிட்ட எல்லை வரை அவர்களுக்கு பாதுகாப்பாகவும் அதே சமயம் மனதில் நிறைவு ஏற்படும்படியாகவும் அவர்களை கவனித்து அழைத்துச் செல்கிறோம்.

பத்ரிநாத் கூட குளிர்நிறைந்த பகுதிதான். எல்லா டூர்களிலும் முக்கியமான இடத்தைச் சுற்றிப் பார்க்கவே வருகிறோம். எனவே அதற்கான நிறைவைத் தரும்படியே நிதானமாகவும் அதே சமயம் தட்பவெப்ப நிலையை உணர்ந்து ஒரு இடத்தில் காலையில் பார்ப்பது உசிதம் மறு இடத்தில் மாலையில் பார்ப்பது உசிதம் அதற்கேற்றவாறே பிளான் செய்து அழைத்துச் செல்வோம்.''

மக்கள் அதிகம் எந்த டூரை விரும்புகிறார்கள்?

''காசிதான். அதில் சந்தேகமில்லை. தீபாவளி சமயத்தில் கூட்டம் அதிகமாகவே இருக்கும்.

பத்ரிநாத் கேதார் நாத் பார்ப்பது மிக மிக அவசியம். அதே சமயம் பத்ரிநாத் கூட மிகவும் குளிர்ப்பிரதேசம்தான். அதே போல மணிகரண் என்ற இடமும் மிக முக்கியமானது. அற்புதமானது.''

டையைக் காணலாம். கோட்டையின் நுழைவாயில் உலகிலேயே உயரமான வாயில் என்று கருதப்படுகிறது.

பரத்பூர்:

இங்குள்ள கோட்டை அழகானவை. இந்தியாவிலேயே மிகப் பெரிய தண்ணீர்ப் பறவைகளின் சரணாலயம் இதன் அருகில் உள்ளது. அக்டோபர் முதல் பிப்ரவரிவரை இங்கு பலவிதமான அழகிய பறவைகளைக் கண்டு மகிழலாம். டெல்லி - ஜெய்ப்பூர் - பதேபூர் சிக்ரி - ஆக்ரா - மதுரா - டெல்லி இரண்டுநாள் டூர் ஆகும். பரத்பூர், பிருந்தாவன், கோகுலம் சேர்ந்துப் போவதானால் மூன்று நாள் வேண்டும். வாரத்தில் இரண்டு தடவை ரெகுலராக இந்த டூர் உண்டு.

ஒரே நாள்தான் இருக்கிறது. தாஜ்மகால் பார்க்க ஆசை. அல்லது ஹரித்வார் ரிஷிகேஷ் போய் வர வேண்டும் என்றால் அது இயலாத காரியம். எங்கே எப்படி போனாலும் இரவு பத்து மணிக்குக் குறைந்து டெல்லிக்குத் திரும்ப முடியாது.

அதேமாதிரி ஒரே நாளில் ஜெய்ப்பூருக்கு போய் வருவது மிகவும் சிரமம். ஏனெனில் தூரம் மிக அதிகம். போக வர 520 கி.மீ.

டூரிஸ்டாகவே போகிறீர்கள். சிம்லாவுக்குப் போகலாம் என்று ஒரு எண்ணம் உங்களுக்கு. இந்த டூர் ஒவ்வொரு வியாழக்கிழமையும் இரவு 7 மணிக்குப் புறப்பட்டு ஞாயிறு இரவு 10 மணிக்கு கரோல்பாக் திரும்பும்.

குழந்தைகள், குடும்பத்தினர் சிம்லாவுடன் சேர்த்து குலு, மணாலி போக வேண்டும் என்று விரும்புகிறீர்கள் என்றால் இந்த டூர் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இரவு 7 மணிக்குப் புறப்பட்டு அடுத்த வியாழக்கிழமை இரவு 10 மணிக்கு டெல்லி வந்து சேரும்.

புனித யாத்திரையாய் செல்ல வேண்டும். நீங்கள் நினைத்தால் பத்ரிநாத் கேதாரிநாத் செல்லலாம். ஒவ்வொரு வெள்ளிக்கிழமை இரவு 10 மணிக்கு இந்த யாத்திரை புறப்பட்டு அடுத்த வியாழக்கிழமை இரவு 10 மணிக்கு டெல்லி வந்து சேரும். அல்லது கங்கோத்ரி - யமுனோத்ரி - பத்ரி - கேதார் செல்லலாம். மே மாதம் முதல் அக்டோபர் முடிய மாதத்திற்கு ஒரு டூர் உண்டு. 15 நாட்கள் ஆகும். இல்லை வேறு திசையில் ஜ்வலாமுகி உள்ளிட்ட இமாச்சல் பிரதேஷ் சக்தி பீடங்கள் மற்றும் ஜம்மு வைஷ்ணவ தேவி போய் வரலாம். இந்த யாத்திரையை தனிப்பட்ட முறையில் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். போய்வர எட்டு நாட்களாகும்.

பாலைவனச் சுற்றுலா

புஷ்கர்:

இந்துக்களின் புண்ணியஸ்தலம். புஷ்கர் ஏரி புனித ஏரியாகும். இதில் நீராடுவது புண்ணியமாகும். பிரம்மாவுக்கு என்று தனியாக கோவில் உள்ள ஒரே ஒரு இடம் இங்குதான். தமிழ்நாட்டுக் கோவில் அமைப்பில் ஸ்ரீவைகுண்ட நாதருக்கு இங்கு ஒரு கோவில் உள்ளது.

ஆஜ்மீர்:

முஸ்லீம் அன்பர்களின் புண்ணியஸ்தலம்.

இந்துக்கள், காசிக்குச் செல்ல விரும்புவதைப் போல இவர்கள் இங்கு வர விரும்புகிறார்கள்.

அல்வார்:

கோட்டையும் அரண்மனையும் மிக அழகானவை. டெல்லி - அல்வார் - ஜெய்ப்பூர் - புஷ்கர் - ஆஜ்மீர் - டெல்லி இரண்டு நாள் டூர் ஆகும்.

ஜோத்பூர்:

பாலைவன நகரம் அழகிய கோட்டையும் உள்ளது.

ஜெய்சல்மார்:

இதுவும் ஒரு பாலைவன நகரம்தான். கோட்டை, அரண்மனை, கோயில்கள் காணத் தக்கவை. பிப்ரவரி மாதம் இங்கு 'பாலைவன விழா' நடைபெறும். ஒட்டகச் சந்தையும் உண்டு.

பீகானீர்:

இன்னொரு பாலைவன நகரம். கோட்டை, அரண்மனை, மியூசியம் உண்டு.

பாலைவனத்திலும் ஒரு அழகு உண்டு. ராஜஸ்தான் கோட்டைகளும் அரண்மனைகளும் கலைநயம் மிக்கவைகள்; கம்பீரமானவை, ஒரு மாறுதலுக்காக இந்த 'டெசர்ட் டூர்' செல்லலாம்.

டெல்லி - அல்வார் - ஜெய்ப்பூர் - புஷ்கர் - ஆஜ்மீர் - ஜோத்பூர் - ஜெய்சல்மார் - பீகானீர் - டெல்லி 6 நாள் டூர் ஆகும். ரயிலிலும் போகலாம்.

குவாலியர்:

குவாலியர் கோட்டை இந்தியாவிலேயே மிகப் பெரியது மற்றும் அரண்மனையும் கோயில்களும் உள்ளன.

டெல்லி - மதுரா - ஆக்ரா - குவாலியர் - டெல்லி மூன்று நாள் டூர் ஆகும்.

விமானம் மற்றும் ரயில் வசதியும் உண்டு.

மேலே குறிப்பிட்டது எல்லாம் டிராவல்ஸ் கம்பெனிகளே நடத்தும் தினசரி மற்றும் வாராந்திர டூர்கள் ஆகும். இதில் கலந்து கொண்டு சென்றால் செலவு குறைவு. டிரான்ஸ்போர்ட், டூரில் தங்குமிடம் (பொது ஹால்) செலவு டிராவல்ஸ் கம்பெனியுடையது, நமக்கு அங்கே தங்க விருப்பமில்லை என்றால் ஓட்டலில் அவர்களே அறை எடுத்துத் தருவார்கள். செலவு நம்முடையது. உணவுச் செலவும் நம்முடையது.

நீங்கள் தனிப்பட்ட முறையில் கார் அல்லது வேன், அல்லது பெரிய குரூப் என்றால் பஸ் எடுத்துக் கொண்டு சென்றால் நீங்கள் எந்தக் கிழமை வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் உங்கள் விருப்பப்படி போய் வரலாம். டிரான்ஸ்போர்ட் தங்கும் செலவு சாப்பாட்டுச் செலவு நம்முடையது.

பஸ் குருப்பிற்கு 7 நாட்கள் டூர் என்றால் மட்டுமே டிராவல்ஸ் கம்பெனியே உணவு வசதியும் செய்து தருகிறார்கள் நம்முடைய செலவில். டிராவல்ஸ் கம்பெனிகளின் டூர்கள் எல்லாமே ஏப்ரல் முதல் அக்டோபர் வரைக்கும்தான். ஆனால் வருடம் முழுவதும் டெல்லி லோக்கல், ஆக்ரா - மதுரா மற்றும் ஹரித்வார் - ரிஷிகேஷ் டூர்கள் உள்ளன.

ஆக, டூர் செல்ல வேண்டும் என்றால் டிராவல்ஸ் கம்பெனிகள் உதவி அவசியம் நமக்கு வேண்டும். இக் கம்பெனிகளில் முன்னேற்பாடுகள் செய்து கொண்டு போவது நல்லது.

சென்னையிலேயே உங்கள் டூருக்காக அனைத்து ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கவும் டிராவல்ஸ் கம்பெனிகள் உள்ளன. டூரிஸ்டுகள் டெல்லிக்குச் செல்லும் முன்பு திட்டமிட்டு முன்னேற்பாடுகள் செய்து கொண்டு போவது நல்லது.

கார், வேன், தனிப்பட்ட பஸ் ஏற்பாடு செய்வோருக்கு டிராவல்ஸ் கம்பெனிகள் உங்களை டெல்லி ரயில்வே ஸ்டேஷனிலிருந்து அழைத்துப் போய் டூர் எல்லாம் முடிந்து திரும்ப டெல்லி ரயில்வே ஸ்டேஷன் கொண்டு வந்து விடும்வரை அவர்களே பார்த்துக் கொள்கின்றனர்.



ஆன்மீகமும், அழகிய இயற்கையும்

நைனிடால்

கோடை வாசஸ்தலம், அழகிய ஏரி ஒன்றும்

உள்ளது.

முசௌரி:

கோடை வாசஸ்தலம் (நம் ஊர் ஏற்காடு போன்றது) கெம்ப்ட்டி நீர்வீழ்ச்சி காணலாம்.

டெல்லி - ஹரித்வார்-ரிஷிகேஷ் - முசௌரி-டெல்லி இரண்டு நாள் டூர் ஆகும். வாரத்திற்கு ஒருதடவை டூர் உண்டு.

பத்ரிநாத்

புண்ணியஸ்தலம். உயரம் 10,500 அடிகள். 108 வைஷ்ணவத் திருத்தலங்களுள் ஒன்று.

கேதார்நாத்:

புண்ணியஸ்தலம். உயரம் 11,500 அடிகள். பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்களுள் ஒன்று. 14. கி.மீ நடக்க வேண்டும். அல்லது குதிரையிலும் செல்லலாம். பனி சூழ்ந்த இடம்.

டெல்லி-பத்ரிநாத்-கேதார்நாத்-ஹரித்வார்-ரிஷிகேஷ் - டெல்லி எட்டுநாள் டூர் ஆகும். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மே மாதம் முதல் அக்டோபர் மாதம் முடிய டிரா வல்ஸ் கம்பெனிகள் இந்த டூரை நடத்து கிறார்கள்.

பூக்களின் பள்ளத்தாக்கு:

இத்துடன், வார்த்தைகளால் வர்ணிக்க இயலாத 'பூக்களின் பள்ளத்தாக்கு' போய்ப் பார்க்க வேண்டும்.


கங்கோத்ரி:

கங்கை நதி உற்பத்தியாகும் இடம்.

யமுனோத்ரி:

யமுனை நதி உற்பத்தியாகும் இடம்.

டெல்லி - கங்கோத்ரி - யமுனோத்ரி - பத்ரிநாத் - கேதார்நாத் 11 நாட்கள் டூர் ஆகும். மாதத்திற்கு ஒருநாள் இந்த டூர் டெல்லி டிராவல்ஸ் கம்பெனிகள் நடத்துகின்றன.



குருக்ஷேத்திரம்:

புண்ணியஸ்தலம், புனித ஏரி ஒன்று உள்ளது. பாண்டவர்களுக்கும் துரியோதனனுக்கும் மகாபாரதப் போர் நடந்த இடம்; அர்ஜுனனுக்குக் கண்ணன் கீதோபதேசம் செய்த இடம். இங்கும் கிருஷ்ணன் கோயில் உள்ளது.

சண்டிகார்:

திட்டமிட்டுக் கட்டப்பட்ட மிக அகலமான தெருக்களை உடைய அழகிய நகரம். பஞ்சாப், ஹரியானா மாநிலங்கள் மற்றும் சண்டிகார் யூனியன் பிரதேசம் ஆகிய மூன்றிற்கும் இது ஒரே தலைநகரமாகும். இங்குள்ள ரோஸ் கார்டன் இந்தியாவிலேயே பெரியது. மற்றும் ராக் கார்டன் ஏரி உள்ளது. பக்கத்திலேயே பிஞ்சோர் கார்டன் என்றும் ஒன்று உள்ளது.

இன்னும் கொஞ்சம் உயரம் போக வேண்டுமா?

சிம்லா

இமாச்சலப் பிரதேச தலைநகரம். கோடை வாசஸ்தலம். போக்குவரத்து நெரிசல் அதிகம் பெரும்பாலான இடங்கள் ஒருவழிப் பாதைதான். பொதுமக்களுக்காக ஊருக்குள் 'லிப்ட்' வைக்கப்பட்டுள்ள ஒரே இடம் இதுதான். கோடைகாலத்தைவிட குளிர் காலத்தில் சிம்லா அழகாக இருக்கும்.

டெல்லி - குருக்ஷேத்திரம் - சண்டிகார் - சிம்லா - டெல்லி மூன்றுநாள் டூர் ஆகும். சிம்லாவிற்கு விமானம் ரயில் வசதியும் உண்டு.

குலு:

கோடை வாசஸ்தலம், பியாஸ் நதிக்கரை மேல் அமைந்துள்ள சுற்றிலும் மலைகள் சூழ்ந்த ரம்யமான இடம். நிறைய ஆப்பிள் தோட்டங்கள் உள்ளன.

மணிக்கரண்

எழில் கொஞ்சும் இடம். உலகிலேயே மிக அதிகமான வெப்பமுள்ள வெந்நீரூற்றுகள் இங்கு உள்ளன. சிவன் கோயில், குருத்வாராவும் உண்டு. (இங்கு மண் சரிவு அதிகம். பாதை நன்றாயிருந்தால்தான் செல்ல முடியும்)

மணாலி:

மிகச் சிறந்த கோடை வாசஸ்தலம். காஷ்மீருக்கு அடுத்த இடத்தில் உள்ள இடம். குறுகிய பள்ளத்தாக்குப் பிரதேசம். சுற்றிலும் வெண்பனிச் சிகரங்கள். அமைதியும் அழகும் ஒன்று சேர்ந்த இடம். பியாஸ் நதியை ஒட்டியே பயணம். ரம்யமான இயற்கைக் காட்சிகள். பனிச்சறுக்கு விளையாட்டுக்கள்,

கிளைடரிங் என்று நிறைய இங்குண்டு.

வசிஷ்டர் கோயில், இடும்பா கோயில், வெந்நீரூற்று காணலாம். கடைவீதிகளில் நம் ஊர் உணவு கிடைக்கும்.

இங்கு வருவதற்கு விமான வசதியும் உள்ளது.

ரோக்டாங் பாஸ்:

'பாஸ்' என்றால் கணவாய் என்று பொருள்படும். ரோக்டாங் என்ற இந்த இடத்தின் உயரம் 15,000 அடிகள். இந்த இடத்திற்கப்பால் பயணத்தைத் தொடர்ந்தால் ஒரு வாரம் கழித்து காஷ்மீர் மாநிலம் லடாக் பகுதியில் உள்ள 'லே' என்ற ஊரை அடையலாம்.

எங்கு பார்த்தாலும் வெண்பனிதான். இங்கு செல்ல கீழேயே குளிரையும் கடுமையான காற்றையும் தாங்கக் கூடிய டிரஸ்களை வாடகைக்கு வாங்கி அணிந்து கொண்டு செல்வது நல்லது. இல்லாவிட்டால் இங்கு தாக்குப் பிடிக்க முடியாது.

டெல்லி - சிம்லா - குலு - மணாலி - ரோக்டாங் பாஸ் - மணிக்கரண் - சண்டிகர்- டெல்லி எட்டு நாட்கள் டூர் ஆகும். வாரத்திற்கு ஒருநாள் டூர் உண்டு.

ஜ்வாலாமுகி:

அம்மன் கோயில். இயற்கை வாயுவினால் ஒளிரும் ஒளியாக சக்தி இங்கு காட்சியளிக்கிறாள். குன்றின் மேலுள்ள கோயிலில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் சிறியதும் பெரியதுமாக ஒன்பது தீபங்கள் இயற்கை வாயுவினால் எரிந்து கொண்டே இருக்கிறது. இதில் பெரிய தீபம் மகாகாளி என்று சொல்லப்படுகிறது. ஒளியையே சக்தியாக வழிபடுகிறார்கள்.

எவ்வளவோ ஆராய்ச்சி செய்தும் பக்கத்தில் வேறு எங்கும் இயற்கை வாயு இல்லை என்று கூறப்படுகிறது. அவசியம் எல்லோரும் தரிசனம் பண்ண வேண்டிய கோயில் இது.


இங்கு பக்கத்திலேயே சாமண்டா தேவி, வஜ்ரேஸ்வரி தேவி, சிந்த்பூரணி தேவி, நைனாதேவி என்று சக்தி பீடங்கள் உள்ளன. இந்துக்கள் மட்டுமல்ல, சீக்கியர்களும் தங்கள் குடும்பத்துடன் இந்த சக்தி பீடங்களுக்கு வந்து வழிபட்டுச் செல்கின்றனர்.

தமிழ்நாட்டு டூரிஸ்டுகளுக்கு இந்த இடங்கள் புதியது. எழில் கொஞ்சும் இந்த இடங்களுக்கு அவசியம் போய் வாருங்கள்.

ஜம்மு:

காஷ்மீர் மாநிலத்தின் குளிர்காலத் தலைநகரம். ரகுநாதர் கோயில், அரண்மனை மற்றும் மியூசியம் காணத்தக்கவை.

பாதாம் பருப்பு, அக்ரூட், குங்குமப் பூ இங்கு வாங்கலாம்.



வைஷ்ணவ தேவி:

8,000 அடி உயரத்தில் உள்ள குகைக் கோயில், லட்சுமி, சரஸ்வதி, காளி மூன்று சக்திகளும் ஒரு சேர உள்ள சக்தி பீடம். 14 கி.மீ நடந்துதான் போக வேண்டும். அல்லது குதிரையிலும் போகலாம். அழகான சுத்தமான சிமெண்ட் மலைப்பாதை. இரவிலும் வழி நெடுக ஒளிவீசும் விளக்குகள். தங்க இடவசதி கடைகள் நிறைய உண்டு. சுற்றிலும் மலைகள், இங்கு நடந்து போவது ஒரு இனிய அனுபவமாகும். சீக்கியர்களும் இங்கு நிறைய வருகிறார்கள்.

வைஷ்ணவ தேவி மலைப்பயணம் மன நிறைவைத் தரும். தமிழ்நாட்டுக்காரர்களில் மிக மிகக் கொஞ்சம் பேர்களே இங்கு வருகின்றனர்.

இதன் மகிமையையும் அழகையும் காண எல்லோரும் அவசியம் போய்ப் பார்க்க வேண்டும்.

அமிர்தசரஸ்

பொற்கோயில், சீக்கியர்களின் தலையாய புண்ணிய ஸ்தலம். இருபத்து நான்கு மணி நேரமும் இங்கு கோயில் தரிசனம் உண்டு.

பக்கத்திலேயே 'பஞ்சாப் படுகொலை' என்று ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் நடத்தப்பட்ட நூற்றுக்கணக்கானவர்களைப் பலி வாங்கிய ஜாலியன்வாலாபாக் இருக்கிறது.

— சுந்தரம்

(168–ம் பக்கத் தொடர்ச்சி)

தோம். ஸ்ரீ சாரதா தேவி பிர்லா தர்மஸ்தலா எனும் சத்திரத்தில் அறை எடுத்துத் தங்கினோம். இரண்டு படுக்கைகள் கொண்ட அறைக்கு நாற்பது ரூபாய்தான் கட்டணம். கர்நாடக மாநிலத்தில் ஆட்டோ, பஸ், மினி பஸ் கட்டணங்கள் குறைவாக இருக்கும் என்பதுடன் எங்கு அழைத்தாலும் வருவார்கள். கோவில்களில் தினமும் இலவச உணவும் உண்டு. உடுப்பியின் அருகில் உள்ள 'யானைகட்டா' பிள்ளையாரை முதலில் தரிசிக்க வேண்டுமாம். தங்கத்தால் செய்யப்பட்ட விக்கிரமாக இருந்த பிள்ளையார் தரிசனம் கண்கொள்ளாக் காட்சியாகும். அனைத்துக் கோயில்களும் காட்டினிடையேதான் அமைந்துள்ளது.

உடுப்பி கிருஷ்ணரை காலையில் தரிசனம் செய்தோம். எதிரே அழகிய ஹனுமார் சன்னதி. ஆயிரக்கணக்கான விளக்குகளுக்கு எண்ணெய், திரி போட்டு தயாராக வைக்கிறார்கள் அந்தக் கோயில் அருகிலேயே வந்து தங்கி, கோவிலிலேயே உணவு உண்டு பகவான் ஸ்ரீகிருஷ்ணருக்குத் தொண்டு செய்பவர்கள். ஸ்வாமிஜி வந்ததும் தீபாராதனையும், பூஜையும் நடக்கும். அதை நாம் ஒன்பது துவாரமுள்ள கதவு வழியாகத் தான் பார்க்க வேண்டும். கடலையும், பொரியும் இரண்டு பெரிய தட்டுகளில் வைத்து நைவேத்தியம் செய்கிறார்கள். அப்போது பக்தர்களை வெளியே அனுப்பி விடுகிறார்கள். அருகிலுள்ள மேடையில் சுவாமிஜியின் விளக்கவுரைகள் நடந்தது. நான் மெதுவாகப் பாடிக் கொண்டிருப்பதைப் பார்த்த ஒரு பெண்மணி சுவாமிஜியிடம் சொல்லி மைக்கில் பாட வைத்தார். அங்கு தங்கியிருந்த இரண்டு நாட்களும் ஆசை தீர மனமுருகிப் பாடினேன். என் அளவிலா ஆசையும் நிறைவேறியது. பிறவிப் பயன் கிடைத்த சந்தோஷம் ஏற்பட்டது என்றால் மிகையாது. என் பாக்கியத்தை நினைத்து இறைவனுக்கு நன்றி சொன்னேன். எனது வீட்டின் அருகிலுள்ள ஒரு பெண்ணுக்குக் குழந்தை பிறக்கவில்லை. இரண்டுமுறை அபார்ஷன் ஆகிவிட்டது. அவர்கள் மிகுந்த வருத்தத்துடன் இருந்தார்கள். அந்தப் பெண்ணுக்காக உடுப்பி கிருஷ்ணரிடம் மனமுருகி பிரார்த்தனை செய்து கொண்டேன். குழந்தை பிறந்ததும் உடுப்பிக்கு அழைத்து வருவதாக வேண்டிக் கொண்டேன். ஸ்ரீ கிருஷ்ணரே வந்து பிறந்தார் போல் எட்டு மாதமாகிறது குழந்தை சாயிகிருஷ்ணனுக்கு இப்போது. அடுத்தவர்களுக்காக பிரார்த்தனை செய்வதும், அது நிறைவேறும்போது ஏற்படும் மனநிறைவும் சொல்ல வார்த்தைகளே



கொக்கோ/சாக்லெட் கேக் செய்யும்போது சிறிது இன்ஸ்டன்ட் காபி சேர்த்தால் சாக்லெட் கேக்கில் ஒரு வித்தியாசமான சுவை இருக்கும்.

— விஜயா கிருஷ்ணமூர்த்தி

கிடையாது.

சிருங்கேரி பளிங்கால் இழைக்கப்பட்டு கோவிலா? மடமா? அரண்மனையா? எனும் படி உள்ளது. மரம் செடி கொடிகளுடன், பழக் குலைகளுடன் பூத்துக் குலுங்கும் பூக்களைக் கொண்ட நந்தவனமும் சேர்ந்து, ஆடும் மயில்களும், மான்களும், துங்கா நதியின் அழகுடன் அமைந்துள்ள காட்சியை வர்ணிக்கவே தெரியவில்லை. மனம் குழந்தைபோல குதூகலப்பட்டது.

கர்நாடகக் கோவில்களுக்குச் சென்றால் ஒரே இடத்தில் தங்கி அங்கிருந்து பல ஊர்களுக்குச் செல்வதுதான் நல்லது. இலவச உணவு நியாயமான டிரான்ஸ்போர்ட் கட்டணம், ஏமாற்றுதல் இல்லை என்பதால் பயப்பட வேண்டாம். எங்கு அழைத்தாலும் வருகிறார்கள். அவர்களது மனித நேயமும், யாத்ரீகர்களுக்கு உதவும் மனப்பான்மையும் மறக்கவே முடியாது.

'சுப்பிரமணியா' எனும் இடம் கர்நாடக மாநிலத்தினரின் பித்ருக்கள் காரியம் செய்வது (காசி போல) ஸர்ப்ப தோஷம் பரிகாரம் இவைகளுக்கு பிரசித்தி பெற்றது. தர்மஸ்தலாவில் திருப்பதி போல மொட்டை காணிக்கை உள்ளது. மிக மிக சுத்தமாகவும், சுகாதாரமாகவும் கோவில்களை வைத்துள்ளனர். அனாவசியமான பேச்சு கிடையாது. தர்மஸ்தலா அருகே 40 அடி உயரமுள்ள 'கோமடேஸ்வரர்' உள்ளது.



ஜவ்வரிசி சேமியா போன்ற உப்புமா செய்தால் சோம்பல் படாமல் உடனேயே வேறொரு பாத்திரத்தில் மாற்றி விட வேண்டும். உப்புமா தயாரித்த பாத்திரத்திலேயே வைத்திருந்தால், சூட்டினால் உப்புமா கெட்டியாகி விடும்.

— விஜயா கிருஷ்ணமூர்த்தி

கண்டிப்பாக பார்க்க வேண்டிய ஒன்று. அங்குள்ள 'மியூசியமும் மிக அழகானது.

திருமதி பிரேமா கிருஷ்ணமூர்த்தி

(சமஸ்கிருத கல்லூரி பேராசிரியரின் துணைவி)

ஆசாரமான குடும்பத்தில் பிறந்த எனக்குப் பதினெட்டு வயதிலேயே திருமணம் ஆனது. வைதிக காரியங்களுக்காக காசி, இராமேஸ்வரம் மட்டும்தான் போயிருக்கிறேன். சுற்றுலா என்று எங்குமே போனதில்லை. தொலைக்காட்சி பார்ப்பதோ, புத்தகங்கள் படிப்பதோ வழக்கமும் இல்லை. வேத புத்தகங்கள், தர்ம சாஸ்திரம் போன்ற புத்தகங்களை வெளியிடுவதிலும் ராமாயண வகுப்பு, சமஸ்கிருத வகுப்புகள் எடுப்பதிலுமே என் வாழ்க்கை நெறிப்படுத்தப்பட்டது. என்னிடம் படிக்கும் மாணவர்களில் ஒருவர்,

"இத்தனை சுறுசுறுப்பாக, தைரியமாக, நடக்கவும், பிடிக்கும் என்று சொல்லும் நீங்கள் கைலாஸம், மானசரோவர் பார்க்கச் செல்லலாமே" என்றார்.

அன்று இரவே ரமண மந்திரத்தில் 'கைலாயம்' பற்றிப் பேச என் கணவருக்கு அழைப்பு வந்தது எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. பேச அழைத்தவரிடம் சொன்னோம். அவரோ, மறுநாளே அதற்குரிய விண்ணப்ப படிவத்தை எனக்கு அனுப்பி வைத்தார். பாஸ்போர்ட் தேவையாம். என் பேரனை அமெரிக்கா கொண்டு விட நினைத்து எடுத்து வைத்திருந்து உபயோகப்படாமல் பாஸ்போர்ட்டும் இருந்தது. இல்லாவிட்டால் அதற்குத் தாமதமாகுமே! பதினாறு குழுக்களாக பிரித்து ஆறு நாட்களுக்கு ஒருமுறை அரசாங்கத்தில் அனுப்புகின்றனர். மெடிகல் டெஸ்ட் முழுவதும் செய்வதுடன், என் வாழ்க்கைப் பயணம் முடிந்தாலும் நானே பொறுப்பு என்று வக்கீலிடமிருந்து முத்திரை பேப்பரில் எழுதி வாங்கி அனுப்பி, பணம் கட்டியதும் ஐந்தாவது குழுவில் என்னை அனுப்புவதாக ஒப்புதல் கடிதமும் புக்லெட் ஒன்றும் வந்தது. நாம் எடுத்து வர வேண்டிய பொருட்கள் அனைத்தும் அதில் எழுதியிருந்தது.

ஜூன் மாதம் 23ந் தேதி டில்லியிலிருந்து கிளம்பினோம். குறிப்பிட்ட தூரம் வரை பஸ் பயணம். பின் மலையேற வேண்டும். ஒன்பது இடங்களில் ஏறி இறங்கி தங்கி மலை மீது பயணம் போக வேண்டும். ஏழாவது இடமான 'குஞ்சி'யில் திரும்ப மிலிடிரி டாக்டர்கள் மெடிகல் டெஸ்ட் செய்து தகுதியில்லாவிட்டால் மேலே பிரயாணத்தைத் தொடர அனுமதிப்பதில்லை, அப்போது நாம் 16,000 அடி வந்திருப்போம்.

டக்ளாகோட் எனும் இடம் வந்தால் முழுவதும் பனிப்பாறைகள்தான். மலைமீது 'ஓம்' வடிவத்தில் பனிக்கட்டிகள் இயற்கையாகவே காட்சியளிக்கிறது. 'லிபுபாஸ்' எனும் இடம் வரும்போது மூன்றாவது குழுவினரை நாம் சந்திப்போம். அவர்கள் இந்திய எல்லைக்கு வருவார்கள். நாம் சீன எல்லையைத் தொட ஆரம்பித்திருப்போம். அங்கிருந்து இரண்டு பிரிவாக கைலாஸத்துக்கு ஒன்றும் மானசரோவருக்கு ஒன்றுமாகப் பிரியும். கைலாஸ மலையை பிரதட்சணம் செய்ய மூன்று நாட்களாகும். மின்சாரமில்லாத அங்குள்ள டென்ட்டுகளில் மெழுகு வர்த்தி, டார்ச் உதவியுடன் தங்கி பிரதட்சணத்தை முடித்து வந்ததும் சத்சங்கம் நடக்கும்.

ஒவ்வொருத்தருக்கும் பிரதட்சணம் செய்துகொண்டே கைலாய மலையைப் பார்க்கும்போது மேகம், பனி படர்ந்த மலை, புகைமூட்டம் இவைகளுக்கிடையே ஒவ்வொரு விதமாகக் காட்சியளிக்கும். முதல் நாள் எனக்கு ஆவுடையாரோடு கூடிய லிங்கமாகவும், மறுநாள் பெரியதொரு லிங்கமாகவும், மூன்றாம் நாள் அமர்ந்துள்ள சிவன் பார்வதியாகவும் தோற்றமளித்தது. ஆயிரத்தெட்டு சிவ நாமாக்கள் எழுதி வந்ததை அங்குள்ள பாறையிடுக்கில் வைத்தேன். விரைவில் நடந்து முடித்த பாலாஜி எனும் பையன் உள்புற கைலாயமலையைத்



பிரட் உப்புமா செய்கிறீர்களா? பிரட் ஸ்லைஸ்களில் சால்ட் பட்டர் அல்லது நெய் தடவி அதற்குமேல் இட்லி மிளகாய் பொடியைத் தூவி துண்டமாக வெட்டி, பின்னர் உப்புமா செய்து பாருங்கள். வெண்ணையுடன் மிளகாய்ப் பொடி சேர்த்து ரொட்டியின் உள்ளே இறங்கி காரம் பரவலாக இருப்பதோடு, மொறு மொறு என்றும் இருக்கும்.

— விஜயா கிருஷ்ணமூர்த்தி

தரிசனம் செய்து வந்தான். நான் தந்த பிள்ளையார், தங்க, வெள்ளிக் காசுகள், நூற்றியெட்டு சிவநாமா அனைத்தையும் அங்கு வைத்துவிட்டு வந்தான். எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. மலைவாசிக் குழந்தைகள் அனைவரும் சொல்வது நமச்சிவாயம்தான். பேசுவதே இல்லை. உதவிகூட சைகையில் கேட்டுத்தான். எங்கும் எவரும் சொல்வது நமச்சிவாயம். அங்கு வரும் அயல்நாட்டினர்கூட சோமவாரம் விரதமிருக்கின்றனர். எதையும் சாப்பிடுவதில்லை. மழை எப்போது வேண்டுமானாலும் வரும். ரெயின்கோட், ஒரு குச்சி சகிதம்தான் இருக்க வேண்டும். கைலாசத்தில் பெரிய பெரிய பனிக்கட்டிகள் முத்து முத்தாக மேலிருந்து விழும் காட்சி அற்புதமாக இருந்தது.

கைலாசத்திலிருந்து 'மானசரோவர்' எனும் பிரம்மாண்டமான ஏரி. கங்கையும், பிரம்மபுத்திராவும் ஆரம்பிக்குமிடம். இரண்டரை மணி நேரம் பிரயாணித்து (ஜீப்பில்) சென்றோம். பிரம்மாவால் தேவர்களுக்காக சிருஷ்டிக்கப்பட்டது என்பது ஐதீகம். தினமும் தேவர்கள் அங்கு வந்து நீராடிச் செல்வதாக நம்பிக்கை. விடிகாலை இரண்டு மணிக்கு தைரியமாக எழுந்து வெளியே வந்து பார்த்தேன். ஆகாயத்திலிருந்து அரை வட்டமாக வளைந்த ஜோதி ஒன்று ஏரியினுள் இறங்கியதும் மறுநாள் பார்த்தபோது ஒரு ஒளிப்பிழம்பு இறங்கியதும் தெரிந்தது. தேவர்கள் ஜோதி ஸ்வரூபமாக வந்து இறங்கியதைக் கண்டதாக என் மனம் மகிழ்ந்தது.


மலையில் நடந்து போகப் போக மூச்சு சாதாரணமாக விட முடிவதில்லை. ஹா; ஹா! என்று பெரிதாக இழுக்கும் மூச்சு திரும்ப விட முடியுமா? என்பதே சந்தேகம்தான். அத்தனை திணறல். ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் மட்டும்தான் போகலாம். மற்ற மாதங்களில் பனி மூடிய மலைகள்தான் இருக்கும்.

மிக மிக சவாலான, தைரியமான 'அட்வென்சர்' ஆன பயணம் இது என்பதால் தான் பெண்கள் அதிகம் போவதில்லை என்று நினைக்கிறேன். இங்குள்ள பச்சைப் பசேல் எனும் இயற்கைக் காட்சிகளைப் பார்த்த கண்களுக்கு வேறு விருந்தே தேவையில்லை. திரும்பி வந்த பிறகுதான் எப்பேர்பட்ட இடம் சென்று வந்தோம் என்று தோன்றுகிறது. அபரிமிதமான கடவுள் நம்பிக்கையும், தைரியமும் இருந்தால்தான் கைலாஸம் போக முடியும். அந்தப் பரவசமும் தாக்கமும் ஆகஸ்ட் மாதம் திரும்பி வந்தும் எனக்கு இன்றளவும் நீங்கவில்லை என்பதே உண்மை.

லலிதா நாராயணன் *(தொழிலதிபர்)*

சுற்றுலா பல இடங்களுக்குச் சென்றிருந்தாலும் அரேபிய நாட்டிற்குச் செல்ல வேண்டுமென்று மிகவும் ஆசையாக இருந்தது. சாதாரணமாக அரேபிய நாட்டுக்கு விசா கிடைப்பது கஷ்டம். ஆண்களென்றால் தொழிலுக்காக தங்கி விடுவார்களோ என்றும் பெண்களாக இருந்தால் காரணம் கேட்டுத் துளைத்தெடுத்தும் விடுவார்களாம். '88ல் ஒருமுறை அபுதாபி சென்று வந்தேன். இந்த வருடம் '98ல் சென்று வந்ததற்கும் இந்த பத்து வருடங்களில் நிறைய முன்னேற்றமான வித்தியாசம் தெரிந்தது. விசா முடிந்த தேதிக்குப் பிறகு ஒரு மணி நேரம்கூட தங்க முடியாது. தங்கும் ஒவ்வொரு நாளுக்கும் இந்திய ரூபாயில் ஐயாயிரம் ரூபாய் அபராதம் கட்ட வேண்டும். அபுதாபி சிங்கப்பூருக்கு அடுத்த இரண்டாவது சுத்தமான அழகான நகரம். பச்சைப் பசேல் என்று பாறையிலும் செடி வளரும் என்று நிரூபித்துள்ளது. அவர்களது அயராத உழைப்பையும், ஆர்வத்தையும், சுற்றுலாப் பயணிகளை கவர நினைக்கும் எண்ணத்தையும் காட்டுகின்றது. மரம், செடி கொடிகளை பதியம் போட்டு நாத்து நடுவது போல வேறொரு இடத்தில் வளர்க்கின்றனர். எங்கு நோக்கினும் வண்ணமயமான குரோட்டன்ஸ்.

ரம்சான் சமயமாக இருந்தால், அவர்களது ஊரில் கலாச்சாரப்படி மாலை ஐந்து மணி வரை எதுவும் சாப்பிடக் கூடாது.



ஒரு தரம் என் மகன் எண்ணை வாங்கி வந்தபோது, சில துளிகள் எண்ணை அவனது சட்டையில் தெளித்திருந்தது. நான் அதன் மேல் வீட்டிலிருந்த அரிசி மாவை தூவி எடுத்து, மறுநாள் நன்றாக சோப் போட்டு துவைத்து எடுத்துப் பார்த்தேன். அட, எண்ணை கறை போன இடமே தெரியவில்லை.

— விஜயா கிருஷ்ணமூர்த்தி

கிடைக்கவும் கிடைக்காது. மாலை ஐந்து மணிக்கு பஜ்ஜி போட ஆரம்பிப்பார்கள். ஐந்து முப்பதுக்கு சைரன் ஒலித்ததும்தான் சாப்பிட ஆரம்பிக்க வேண்டும். அதற்கு ஒரு நிமிடம் முன்பு கூட சாப்பிடக் கூடாது.

அரேபிய நாடுகளிலேயே மிக உயரமான நீர்வீழ்ச்சி அபுதாபியில் (தண்ணீர் இல்லா நாட்டில் என்பது விசேஷம்) உள்ளது. எல்லா கட்டடங்களும் மிக உயரமானதாக இருக்கும். இந்து கோவில்களே கிடையாது. சாம்பிராணி, ஊதுவத்தி ஏற்றினாலும் கதவை சாத்திக் கொண்டுதான் ஏற்ற வேண்டும். புகை வெளியே வந்து விட்டால் நம்மிடம் விளக்கம் கேட்காமல் தீயணைப்பு படையினருக்கு போன் செய்து விடுவார் வாட்ச்மேன். தங்கம் விற்கும் ஜூக் எனும் மார்க்கெட்டில் தங்க நகைகளைத் தொங்க விட்டிருப்பார்கள். தொட்டு எடுத்துப் பார்க்கலாம். திருட்டு பயமே இல்லை. என் வளையல்களின் எடை, தரத்தைப் பார்க்க அங்குள்ள மிஷினில் உள்ள தட்டில் வைத்தவள், மறந்து வெளியே வந்து விட்டேன். ஒரு ஹோட்டலில் சாப்பிடும் சமயம்தான் ஞாபகம் வந்தது. அனைத்துக் கடைகளிலும் ஒரே மாதிரி அரேபிய எழுத்துக்கள். ஒரே மாதிரி உடையணிந்தவர்கள். ஒன்றுமே புரியவில்லை. அங்கிருந்து ஒரு ஆள் என்னைத் தேடி வந்து கடைக்கு அழைத்துச் சென்று என் நகைகளை அழகிய வெல்வெட் பையில் போட்டுக் கொடுத்தான். எனக்கு மிகுந்த ஆச்சரியமாயிருந்தது.

அந்த ஊர் ராஜா, மக்களின் மேல் மிகுந்த அக்கறை கொண்டவர். டாக்ஸியில் நாம் சென்றாலும், தனியாகப் பயணித்தாலும்கூட பயமில்லை. உள்ளேயே போன் வசதி இருக்கும். வழி தெரியாவிட்டாலும் போன் செய்து கேட்டுக் கொள்ளலாம். முன்பை விட அரேபிய நாடுகளில் சுற்றுலா வருபவர்களுக்காக முக்கியத்துவம் தருகின்றனர். கடந்த இரண்டு வருடங்களாக டூரிஸம் மூலம்தான் பொருளாதார முன்னேற்றமும் என்பதை உணர்ந்துள்ளனர். டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் மிகப் பெரிய கண்காட்சிகள், குழந்தைகள் விளையாட்டுலகமும் இருப்பதால் மற்ற மாதங்களைவிட இந்த மூன்று மாதங்களில் செல்வதே சிறந்தது. மேலும் இந்த மூன்று மாதங்களுக்கான விமான கட்டணத்தில் சிறப்புச் சலுகையும் உள்ளது. 22,000/- ரூபாய் கட்டணம் சலுகையில் 7000/- வரை குறையும். அதையும் சுற்றுலா செல்பவர்கள் தெரிந்து கொண்டு திட்டமிட வேண்டும்.

சிறிய வேலைகளில் அரேபியர்களும், உயர் பதவிகளில் இந்தியர்களில் நிறைய குஜராத்திகளும், தரமான உணவு தயாரிக்கும் பணியில் கேரளத்துக்காரர்களும் இருக்கின்றனர். ஷாப்பிங் செய்கையில் இரண்டு ஆயாக்களுடன் கூடின விளையாட்டுப் பொருட்கள் மிகுந்த இடத்தில் குழந்தைகளை விட்டுச் சென்று ஒரே இடத்தில் கிடைக்கும் அனைத்துப் பொருட்களையும் ஷாப்பிங் செய்து முடித்துக் கொண்டு குழந்தைகளை திரும்ப அழைத்துச் செல்லாம். அங்குள்ள இந்தியர்கள் அவர்களுக்குள் வீட்டு விழாக்கள், பூஜைகள், நவராத்திரி, பிறந்த நாள் விழாக்களுக்கு அழைத்து வெள்ளிப் பொருட்களை தாம்பூலத்தில் வைத்துத் தருகின்றனர். அக்கம் பக்கத்தினருடன் பழகுவதே இல்லை. கதவைத் திறந்து பேசுவதும் இல்லை. அமெரிக்காவில் சீனியர் சிட்டிசன் எனும் மரியாதை இருப்பது போல் இங்கில்லை. சட்டம் எல்லோருக்கும் ஒன்றுதான். இன்னும் சொன்னால் சட்ட திட்டங்கள் இந்தியர்களுக்கு ஓரவஞ்சனை செய்வதாகத்தான் உள்ளது. இந்தியர்கள் அங்கு இரண்டாம் மட்ட குடிமக்கள்தான். அதனால் பணம் சம்பாதித்த பின் கொஞ்ச நாட்களில் இந்தியா திரும்பி விட வேண்டுமென்ற துடிப்பில்தான் ஒவ்வொரு இந்தியனும் வாழ்கிறான்.

மிகச் சிறந்த அழகான, தரமான பொருட்களை ஷாப்பிங் செய்ய ஏற்ற இடம் அரேபிய நாடுகள்தான். பணச் செழிப்பு சொல்லி முடியாது. வாழ்வில் ஒருமுறையேனும் பார்க்க வேண்டிய நாடு என்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

தொகுப்பு: **பானுமதி ராமச்சந்திரன்**

நம் இந்து மதத்தில் இதிகாசங்கள், புராணங் கள் சிறப்பாகக் கூறப் பட்டிருப்பது மட்டுமல்லாமல், இதன் சிறப்பினால் தான் க்ஷேத்திராடனமும், தீர்த்தாடனமும் இன்றளவும் எல்லோராலும் தரிசிக்கப்பட்டும் வருகின்றன. நம் உடலே ஒரு ஆலயம், புனித ஸ்தலம் என்று சொல்லப்பட்டாலும், புனித இடங்களுக்குச் செல்லும்போது நமது சக்தி கூடுதல் ஆற்றல் பெறுகிறது என்பதை அனுபவ ரீதியாகவே பலரும் அறிந்திருப்பார்கள்.

சிறு குழந்தை முதல் (அதான் புரியாத சிறுவயதிலேயே 'உம்மாச்சி காப்பாத்து சொல்லு' என்று அதன் மழலை மொழியிலேயே பேசி, அச்சிறு பிராயத்திலேயே ஆன்மீகத்தில் ஈடுபாட்டை வளர்க்க முதல் காயை நகர்த்துகிறோமே) வயதானவர் வரை எந்த ஒரு காரியம் ஆக வேண்டும் என்றாலும் முதல் கட்டமாக காணிக்கை, தேங்காய் உடைத்தல் என்று வேண்டிக் கொண்டு அடுத்த கட்டமாக நேரில் வந்து அங்கே உன்னை தரிசிக்கின்றேன் என்று வேண்டிக் கொண்டு நிறைவேற்றுதலும் உண்டு.

ஒரு புண்ணியஸ்தலம் என்பதற்கு வேண்டிக் கொண்டால் தான் போக வேண்டுமென்பதில்லை. அதுவும் வாழ்க்கையில் ஓர் அங்கம் என்பது போல் புண்ணிய ஸ்தலங்கள், புண்ணிய தீர்த்தங்கள் போன்றவைகளுக்கு அடிக்கடி சென்று வருபவர்கள் இருக்கிறார்கள். இந்த வகையில் வயது என்பது நிர்ணயிக்கப்படுவதில்லை. ஆனாலும் புண்ணிய ஸ்தலயாத்திரை என்றால் வயதானவர்கள் போவது என்கிறார்கள். இது சரியா என சிலரை அணுகிக் கேட்ட பொழுது –

வெ. வெங்கடசுப்ரமணியன் : "ஆன்மீகத்தில் ஈடுபாடு என்பது திடீரென்று அறுபதுக்கு மேல் வந்து விடாது. அதன் தாக்கம் நமக்குச் சிறு வயது முதலே இருந்து வர வேண்டும். அதில் ஒரு ஈடுபாடு ஏன் ருசி என்று கூடச் சொல்லலாம். இவையாவும் நம் இரத்தத்தில் ஊறி இருந்தால், வயது என்பது நமக்கு ஒரு தடையே கிடையாது. ஆகையால் இப் பயணத்தை நடுத்தர வயதில் (நம் காலில் நாம் நிற்கத் தொடங்கும் நாள் முதல் என்று கூடச் சொல்லலாம்) இருந்தே தொடங்க வேண்டும்.



• வெங்கடசுப்ரமணியன்


நாம் என்னதான் வீட்டிற்குள் பக்தியை வரவழைத்துக் கொண்டு நான்கு சுவற்றிற்குள் இருந்தாலும், நம் மனம் அதில் ஈடுபடாமல் குடும்பத்தை மட்டுமே சுற்றி சுற்றிதான் வரும். ஆனால் வீட்டை விட்டு வெளி உலகம் என்று மற்ற ஸ்தலங்களுக்குச் செல்லும் மனமும், எண்ணங்களும் விரிவடைகிறது. இந்தியாவில் அமைந்திருக்கும் பல புண்யஸ்தலங்கள் இயற்கை எழில் சூழ்ந்த இடங்களில் தான் அமைந்திருக்கின்றன.



மலை, சமுத்திரம், ஆறு, நீர்வீழ்ச்சி போன்ற இயற்கையை ஒட்டி அமைந்திருக்கும் இடங்கள்தான் பெரும்பாலானவை. நம் குழந்தைகளை இந்த ஒரு வகைக்கு மனதை பக்குவப்படுத்தி விட்டோமானால், பிக்னிக் டூர் என்பதை ஆன்மீகம் கலந்து கொடுக்க முடியும். நம் உடலில் சக்தி இருக்கும் பொழுதே க்ஷேத்திராடனம் சென்று தரிசித்து விட வேண்டும். அறுபது வயதிற்கு மேல் உடல் நிலை இடம் கொடுக்காது. வேலையில் இருக்கும் பொழுது ஒரு நிரந்தர வருமானம், எல்.டி.சி. போன்ற வசதிகள் இருக்கும். ரிடையர்மெண்டுக்குப் பிறகு நம் உடல் கோளாறுகளிலும், பென்ஷன் வருமானத்திலும் நம்மை அசௌகர்யப்



* கமலா கிருஷ்ணன்



அறுபதுக்கு மேல்தான் ஆன்மீகப் பயணமா?

படுத்திக் கொண்டு போக முடியாது. உடல் கஷ்டம் என்று வரும் பொழுது, மேலும் உடலை வருத்திக் கொண்டு பிரயாணம் மேற்கொள்ளு தலும் அவசியமா? தெரியவில்லை.

ஆன்மீகப் பயணத்தில் குழந்தை களைப் பற்றி குறிப்பிடுகிறேன் அல் லவா? சிறு வயதிலேயே குழந்தை களை ஆன்மீக வழியில் ஈடுபடுத்து வது ஒரு காரணம். மேலும் அந்த வயதில் நாம் குழந்தைகளை நம் சௌகர்யத்திற்கு நாம் விருப்பப்பட்ட இடங்களுக்கு அழைத்துச் செல்ல லாம். பல பாஷைகள், பலவித தட்ப, வெப்ப நிலைக்கு அவர்களையும் பழக்கப்படுத்துவதன் மூலம் கொஞ்சம் பெரியவர்களானாலும் வெளி உலகம் அவர்களுக்கு பிரமிப் பாக இருக்காது. என்னைப் பொறுத் தவரை நம் உடல், மனம், பர்ஸ் சக்தி யைப் பொறுத்து, நடக்கக் கூடிய வயதிலேயே ஆன்மீகப் பய ணத்தை மேற் கொள்ளுதல் நல்லது. அறுபது வயது வரை வயதை விரட்டிப் பானேன்! ஐந்தில் வளையாமல் ஐம்ப திற்கு மேலா வளையப் போகிறது.

* வஸந்தா ராமன்



வஸந்தா ராமன் : ஆன்மீகப் பயணத்திற்கு வயது நிர்ணயித்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லையென்றாலும், பிராக்டிக லாகப் பார்க்கப் போனால் அறுப திற்கு மேல்தான் சாத்தியப்படுகிறது. ஆரம்ப நாட்களில் கணவர், குழந்தைகள், பிறகு நாட்டுப் பெண்கள், மாப்பிள்ளைகள், பேரக் குழந்தைகள் என குடும்பம் பெரிதாகிக் கொண்டே போகிறது. இதனால் வீட்டுப் பொறுப்புகள் கூடுகின்றன.

மேலும் வேலைக்குப் போகும் பெண்களுக்கு அலு வலகம் வீட்டை விட பெரிய குடும்பம் போன்றது. மேலதிகாரிகள், சக ஊழி யர்கள் இவர்கள் அனை வரையும் அனுசரித்து லீவு எடுத்துக் கொள்வது என் பது கொஞ்சம் கஷ்டம்தான். ஏனென்றால் தனிப்பட்ட ஒருவரின் உடல் நிலைக்காக வும், வீட்டில் பல நல்லது, கெட்டது போன்றவை நடக் கும் நேரங்களிலும் அத்யா வசியமாக லீவு எடுக்க வேண்டி வருகிறது. அதுவே சிரமமாகி விடுகிறது.

அது மட்டுமல்ல. நடுத்தர வயதில் குடும்பப் பொறுப்பை நிறைவேற்றும் தருணங்களில் கணவன், மனைவி இடையே கருத்து வேற்றுமை பல விஷயங்களில் ஏற்பட்டு விடுகிறது. இதனால் மனத்தாங்கல், கருத்து வேறுபாடு அதிக அளவில் ஏற்படுகிறது. இவையாவும் குடும்பம் ஒரு நிலைக்கு வந்து செட்டில் ஆன பின்புதான் மறைந்து, கணவன், மனைவியிடையே மீண்டும் ஆரம்ப கால பரஸ்பர அன்பு துளிர்க்கிறது. அந்த நிலையில் ஒரு வருக்கொருவர் பற்று கோலாக இருந்து கொண்டு ஆன் மீகப் பயணத்தை தொடங்குதல்தான் சரியான நேரமாக எனக்குப் படுகிறது. அதுதான் உண்மையான ஒரு "தேனிலவு" போன்றது.

ரிடையர்மெண்ட்டிற்குப் பிறகு கணிசமான தொகை கையில் கிடைக்கிறது. சில நடுத்தர குடும்பங்களில்,

சுற்றுலா! நாங்க அழைத்துப் போகிறோம்...

—

எஸ்.டி.வி. ஐயர்
(மஹாலக்ஷ்மி யாத்ரா சர்வீஸ்)

"எங்கள் யாத்ரா சர்வீஸுக்கு வயது 32. நாங்கள் வட இந்திய கோவில்களுக்கே அழைத்துச் செல்கிறோம். எங்களது டூரில் கட்டுப்பாடுகள் அதிகம் என்பதால் புகைப்பிடிப்பவர்கள் கூட அவ்வளவருக்கும் முன்னர் அதைச் செய்யாமல் இருப்பதோடு தங்களுக்குள்ளும் சுயக்கட்டுப்பாட்டை இதன் மூலம் பெற்றுவிடுகிறார்கள். அதை அவர்களாகவே சொல்லியுமிருக்கிறார்கள்.

தென்னிந்திய சுற்றுலாவை நடத்தாததற்குக் காரணம் என்ன?

"பெரும்பாலும் தென்னிந்தியாவை ஒட்டியுள்ள சுற்றுலாப் பகுதிகளை மக்கள் அவர்களாகவே சென்று அதை எந்த விதத் தயக்கமின்றி பார்த்து மகிழலாம். அதற்கு மொழியோ அல்லது செல்லும் வழிகளோ பிரச்னையாய் அமைவதில்லை. ஆனால் வட இந்தியாவில், முக்கியமாக காசி யாத்திரை வாழ்க்கையில் மிக விசேஷமான ஒன்று. அதற்கு நியமங்களோடு நன்றாக வீட்டுச் சூழலில் அமைந்த அதே சமயம் மொழி பிரச்னையில்லாத நல்ல யாத்ரா சர்வீஸ் தேவை. அதை மனதில் கொண்டே வட நாட்டுக் காசியும் அதைத் தவிர துவாரகா, வைஷ்ணோதேவி யாத்திரை போன்ற பலவிதமான பெரிய பெரிய டூர்களையும் யாத்திரீகர்களுக்குச் சிறப்பான முறையில் அமைத்துத் தருகிறோம்.

மேலும் ராஜஸ்தானில் உள்ள மௌண்ட் அபு மலை, தில்வாரா ஜெயின் கோவில் – அங்கு ஆரிய அஸ்தமனம் மிக அருமையாக இருக்கும் – இப்படி அரிதான அதே சமயம் இயற்கையும் ஆன்மிகமும் கலந்த நல்ல இடங்களை தேர்ந்தெடுத்து யாத்ரீகர்களுக்கு அமைத்துத் தருவ

பிள்ளைகள். இந்தப் பணம் தங்களுக்குப் பல வகைகளில் கை கொடுக்கும் என்கிற கணக்கும் போட்டு வைத்திருப்பார்கள். அதையும் மீறி ஆன்மீக வகையறா என்கிற கணக்கில் பணம் ஒதுக்கிக் கொண்டு பயணத்தைத் தொடங்க சிக்ஸ்டிப்ளஸ்தான் சிலாக்கியம்."

கமலா கிருஷ்ணன் : நடுத்தர வயதில் இருந்தே கோயில், குளங்களுக்குப் போகுதல் என்கிற பழக்கத்தை மேற் கொள்கிறவர்கள் அநேகம் பேர். பெரிய அளவில் காசி, இராமேஸ்வரம் என்கிற பெரிய டூர் புரோகிராம் இல்லையென்றாலும் குரூப் குரூப்பாக சேர்ந்து கொண்டு ஒரு வேன் எடுத்துக் கொண்டு அருகாமையில் உள்ள சுவாமி ஸ்தலங்களுக்குச் சென்று வருகிறார்கள். நடுத்தரக் குடும்பங்களில் இது ஒரு சாதாரண வழக்கமாகிக் கொண்டு வருகிறது.

மேலும் காலை நேரத்திலேயே கிளம்பினால் இரவு வீடு வந்து சேர்ந்து விடலாம். அதுவும் விசேஷமான நாட்களில் இந்த புரோக்கிராமை போட்டுக் கொள்வதால் ஒரு முக்கியமான நாளில் கடவுளை தரிசனம் செய்யும் சந்தர்ப்பத்தை நாமே ஏற்படுத்திக் கொண்டு, சென்று வருவதால் பல புதுப் புது ஸ்தலங்கள் (அருகாமையிலேயே இருக்கும். நாம் அறிந்திருக்க மாட்டோம்) பார்த்த திருப்தியும், நிறைய இடங்களை சின்ன வயதிலேயே பார்த்து விட்டோம் என்கிற நிறைவும் ஏற்படுகிறது.

• வி.கே. நாராயணன்



• அலமேலு



ஆனால் நடுத்தர வயதில் செல்வதால் சில குறைகளும் இருக்கத்தான் செய்கிறது. தரிசனம் செய்யும் ஆர்வத்தில் பல இடங்களுக்குப் போனாலும் போகிற இடத்தில் மனம் என்னவோ அதில் லயிப்பதில்லை. வீட்டில் பிள்ளைகள் வந்திருப்பார்களா? சாப்பிட்டிருப்பார்களா? கணவர் ஆபீசுக்கு போயிருப்பாரா? அது மட்டுமல்லாமல் நாம் இருந்து பண்ணிவிட்டு வரவேண்டிய சில முக்கிய காரியங்களை அடுத்தவரிடம் சாட்டிவிட்டு வந்திருப்போம். அதை அவர்கள் ஞாபகமாக செய்திருப்பார்களா? இன்னிக்கு வந்திருக்க வேண்டாமோ? இது போன்ற கவலைகள் நாம் நினைக்க வேண்டாம் என்று நினைத்தாலும் ஞாபகமாக வந்து



தால் பலரும் விரும்புவதோடு நாளுக்கு நாள் யாத்ரீகர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது.''

பொதுவாக தங்குமிடங்கள் யாத்ரா சர்வீஸ்களில் முக்கியமான ஒன்று இல்லையா?

''நிச்சயம். நாங்கள் நல்ல இடங்களையே தேர்ந்தெடுக்கிறோம். யாத்திரை என்று செல்லும் போது ஸ்டார் ஓட்டல்கள் தேவையில்லை. இடங்களை எப்படிப் பார்க்கிறோம் அதை எப்படி விளக்குகிறோம் என்பதே முக்கியம். யாத்ரீகர்களிடம் பணத்தைப் பெற்றுக் கொண்டு மோசமான உறைவிடங்கள் தர எந்த ஏஜென்ஸியும் விரும்புவதில்லை. உணவுக்குத் தேவையானவைகளை நாங்களே தயாரிக்க வேண்டியிருப்பதால் அதற்கு அனுமதியளிக்கும் நல்ல ஓட்டல்களையே தேர்ந்தெடுப்போம். தவிர யாத்ரீகர்கள் நமது சர்வீஸைப் பார்த்து விட்டு நிறைய வர வேண்டும் என்றுதான் நினைப்போமே தவிர, தவறான எண்ணமோ அதிருப்தியோ நேரும்படி விட்டு விட மாட்டோம்.

தங்குமிடம் எப்போதாவது ஒரு முறை மண்டபங்கள் (திருமண மண்டபங்களில்) அமையும் வாய்ப்புள்ளது. ஆனால் அதற்காக வசதியில்லாத சத்திரம் சாவடிகளில் ஏற்பாடுகள் செய்ய மாட்டோம். அதுவே கூட பகல் வேளைகளில் உணவு சமைத்துக் கொள்ள இடம் கிடைக்காதபட்சத்திதான். தங்குமிடம் உணவைப் போலவே முக்கியமானது என்பதை நாங்களும் அறிவோம். தவிர யாத்ரீகர்கள் அனைவரும் ஒரு குடும்பத்தார் என்ற ஒரு நேயத்தோடே அழைத்துச் செல்வோம்.''

தொற்றிக் கொள்கிறது.

ஒரு இடத்திற்குப் போக வேண்டுமென்றால் போவதற்கு முந்தியே இரவு வரை தேவையான எல்லாவற்றையும் செய்து வைத்து விட்டுப் போக வேண்டியிருக்கிறது. அதே போல் வந்த பிறகும் ஒரு கூடை வேலை காத்துக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும் பொழுது நடுத்தர வயதில் ஆன்மீகப் பயணம் என்பது அர்த்தமுள்ளதுதானா என்பது புரியவில்லை. என்னை மனதில் வைத்துக் கொண்டு தான் இதைச் சொல்கிறேன். மற்றவர்கள் எப்படியோ தெரியவில்லை. அப்படிப் பார்த்தால் கடமையை முடித்துவிட்டு அறுபதுக்கு மேல் 'அக்காடா' என்று போக முடியுமா? அவர்களைத்தான் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்."

வி.கே. நாராயணன் : "பக்தி என்பது அறுபது வயதில் திடீரென்று வந்து விடாது என்பது எவ்வளவு தூரம் உண்மையோ, அதே போல் நாற்பது, ஐம்பது வயதில் ஆன்மீகப் பயணம் மேற்கொள்ள முடியாது என்பதும் உண்மை. நல்ல வசதிக்காரர்கள் ஒரு காரை எடுத்துக் கொண்டு நினைத்த இடத்திற்கு நினைத்தபடி போய்விட்டு வேண்டுமானால் வர முடியும். ஆனால் மாதாந்திர வருமானத்தை நம்பி குடும்பத்தை நடத்தும் ஒரு நடுத்தர வர்க்கத்தின் அபிலாஷை

நிறைவேற்றப்படுகிறதா என்றால் இல்லை என்பதுதான் என் கருத்து.

சாதாரணமாக சீசனில் ஒரு வகைப் பழம் மூன்று பத்து ரூபாய் என்று விற்கிறது என்று வைத்துக் கொள்வோம். அந்தப் பழத்தை வாங்குவதற்குக் கூட யோசனை செய்ய வேண்டியிருக்கிறது. ஆசைக்காக பத்து ரூபாய்



வித்தியாசமாக தங்கள் பயணி களுக்கு ஏதாவது செய்கிறீர்களா?

"முதலில் யாத்திரை நல்லபடியாக நடக்க விநாயகர் பூஜை செய்து விடுவோம். பயணிகள் அவரவர்கள் வீட்டில் புரோகிதர்களை வைத்து செய்து கொண்டாலும் சரி அப்படி இயலாதவர் அதற்கு ரூ. 10 செலுத்தி தங்களது பெயர் நட்சத்திரத்தைக் கொடுத்து விட்டாலும் போதும் அவர்களுக்கும் சேர்த்து பூஜை செய்து நாங்கள் வேண்டிக் கொள்கிறோம்.

தவிர, யாத்திரை சமயங்களில் எத்தனையோ ரூபாய் செலவு செய்து பகவானை தரிசிக்கப் போகிறோம். அந்தச் சமயங்களில் பேச வேண்டாம் என்று சொல்ல முடியாது. வேண்டாத அநாவசியப் பேச்சுக்களைத் தவிர்த்து நல்ல ஸ்லோகங்கள் சின்னச் சின்ன புராணங்களை தெரிந்து கொள்ளலாமே. அந்த வகையில் நானே ஒரு புத்தகம் பல சுலோகங்கள். காசி புராணம் ஆகியவற்றை தொகுத்து. ஒரு புத்தகமாக வெளியிட்டேன். அதை யாத்திரை செல்லும் அனைவருக்கும் கொடுக்கிறேன்.

எனவே அவர்கள் அதைப் படிக்கும் போது அவர்களுக்கும் புண்ணியம் நமக்கும் புண்ணியம் சேர்கிறது.

தீபாவளி சமயத்தில் காசியில் சண்டி ஹோமம் எங்கள் செலவில் விமரிசையாகச் செய்கிறோம். இதில் கலந்து கொள்வது அதுவும் காசியில் கலந்து கொள்வது மிக மிக விசேஷம். இது அனைத்து யாத்ரீகர்களுக்கும் மிகுந்த மன திருப்தியை அளிக்கிறது.

மேலும் எங்கள் யாத்ரீகர்களை அடையாளம் கண்டு கொள்ள தோளில் மாட்டிக் கொள்ளும் பை தருகிறோம். ஷாப்பிங் செல்லும்போதோ அல்லது வெளியில் வரும் போதோ நிச்சயம் அதை வைத்துக் கொண்டால் எளியாக அவர்களை அடையாளம் கண்டு கொண்டு தகவல் ஏதாவது அவர்களுக்கு இருப்பின் தெரிவித்து விடுவோம்.

தவிர அவர்கள் பணம் வைத்துக் கொண்டு வருவது குறித்து பயப்பட்டால் ரூ. 100 ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் சார்ஜ் வாங்கிக் கொண்டு பத்திரமாக வைத்திருந்து கேட்கும் சமயத்தில் கொடுத்து விடுவோம்.

கைடுகளைப் பொறுத்தவரையில் கவலையே இல்லை. நன்கு பயிற்சியானவர்களும் எங்க நம்பிக்கைக்கு உகந்தவர்களாகவே உள்ளவர்களையே கைடுகளாக வைத்துக் கொள்வோம். இதனால் பாதுகாப்பாக அச்சமின்றி பயணிகள் யாத்திரை வரலாம்."

கொடுத்து பழம் வாங்கி தின்பதற்கு கறிகாய் ஏதாவது வாங்கினால் அன்றைய சமையலுக்கு உதவுமே என்கிற எண்ணம்தான் எழுகிறது. இப்படி வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி என் பார்களே இந்த லக்ஷணத்தில் நூற்றுக் கணக்கில் செலவழித்துக் கொணடு மாத வருமானத்தில் எங்கிருந்து வெளியிடங்களுக்குப் போக முடிகிறது. சிலருக்கு ஆபீஸில் எல்.டி.ஸி. வசதி இருக்கிறது. அதில் போய் வரலாம் என்று எடுத்துக் கொண்டாலும் போக, வர ரயில் கட்டணம் மட்டும்தான் குடும்பத்திற்குத் தருவார்கள். மற்ற படி தங்கும் இடம், சாப்பாட்டு செலவு, என்று பார்த்தால் தாளித்து விடுமே. அதை எப்படிச் சரிகட்டுவது?

வீட்டில் பெண் குழந்தைகள் இருந்தால் இந்தப் பயணத்திற்கு ஆகும் செலவில் அவர்களுக்கு உருப்படியாக ஏதாவது செய்யலாமே என்றுதான் தோன்றும். வயதிற்கு வந்த பெண்கள் வீட்டில் இருக்கும் பொழுது வயத்துப் பாட்டிற்கே பார்த்து பார்த்துச் செலவழிக்கும் பொழுது, வீட்டில் இருக்கும் சாமியைக் கும்பிட்டாலே போதுமே, செலவழித்துக் கொண்டு வேறு வெளியில் போக வேண்டுமா? என்றுதான் எண்ண முடிகிறது. இதைப் பார்க்கும் பொழுது ஓய்வு பெற்ற பிறகு வரும் (ரிடையர்மெண்ட் பெனிஃபிட்ஸ்) கணிசமான தொகையை கையில் வைத்துக் கொண்டால் முறையாக பிளான் செய்து ஆன்மீகப் பயணத்தை மேற் கொள்ளலாம்.

பயணத்திற்கு என்று ஓர் தொகையை நிர்ணயம் செய்து கொண்டு மனைவியுடன் புண்ணியஸ்தலங்கள் செல்ல அறுபதுதான் சரியான வயது. வீட்டில் பிள்ளை, பெண்ணுக்குக் கல்யாணம் செய்து வைத்து விட்டு கடமையை முடித்து விட்டோம் என்கிற திருப்தியில் நிம்மதியாக வீட்டுக் கவலை இல்லாமல் பயணம் மேற் கொண்டால் மனதை ஒருமித்து தரிசனம் செய்ய முடியும். சிலர் அறுபது வயதில் உடல் நிலை இடம் கொடுக்குமா என்று கேட்கிறார்கள். உடம்பு என்பது வீட்டில் இருந்தாலும் வரப் போகிறது, வெளியில் இருந்தாலும் வரப் போகிறது. முன்காலம் போல் இல்லையே. போக்குவரத்து வசதிகள், மருத்துவ வசதிகள், எல்லா இடங்களிலும் பெருகி இருக்கிறதே. முடியவில்லை என்றால் திரும்பி விடப் போகிறோம்.

இந்தப் பிரச்னைக்கு இடமில்லாமல் கோயில், குளம் என்றால் நம்மையும் அறியாமல் உடம்பில் எங்கிருந்தோ ஒரு பலம் வந்து நம்மை வழி நடத்தத்தான் செய்கிறது. ஆகையால் உடல் நிலையை காரணம் காட்டி அறுபது உதவாது என்று கூற முடியாது. மற்ற ப்ளஸ், மைனஸ் என்று போட்டுப் பார்த்தால் அறுபதுக்கு முன் க்ஷேத்திராடனமாவது? தீர்த்தாடனமாவது? நோ சான்ஸ்.

அலமேலு பாலசுந்தரம் : "எப்பொழுது அலை ஓய்வது? எப்பொழுது சமுத்திர ஸ்நானம் செய்வது?" என்பார்களே அது போல்தான். குடும்பம் என்றால் எல்லாம்தான் இருக்கிறது. எனக்கும் பிள்ளைகள், பெண்கள் பேரன் பேத்திகள் என்று உண்டு. க்ஷேத்திராடனம் போக வேண்டும் என்று தெரிவித்தால் போதும், எனக்கும் என் கணவருக்கும், என் பிள்ளைகள் டிக்கெட் ரிசர்வ் செய்து கொண்டே வந்து கையில் கொடுத்து விடுவார்கள். 'எங்களால்தான் முடியவில்லை. நீங்களாவது போய்விட்டு வாருங்கள்' என்று சொல்வார்கள்.

இப்பொழுது அறுபதுக்கு மேல் எனக்கு வயதாகி விட்டாலும் நாற்பது வயதிலிருந்தே குடும்பத்தில் இருந்து கொண்டு நிறைய இடங்களுக்குப் போய்க் கொண்டுதான் இருக்கிறேன். இதனால் நான் எந்தக் கடமையையும் செய்யத் தவறியதும் இல்லை. இதற்கு முக்கியமாக குடும்பத்தில் ஒற்றுமையும், விட்டுக் கொடுக்கும் சுபாவமும் தேவை. எல்லோரும் ஒட்டுமொத்தமாக அங்கீகரித்து, என்னால் இத்தனை வருஷமாக செயல்படுத்த முடிகிறது என்றால் பெரிய விஷயம்தான். குடும்பத்தில் செக்குமாடு மாதிரி உழன்று கொண்டே இருக்கும் பொழுது அப்பப்போ ஒரு 'சேன்ஜ்' தேவைப்படுகிறதல்லவா! அது ஒரு புனித யாத்திரையாக இருக்குமேயானால் மனதிற்கும், எண்ணத்திற்கும் ஆரோக்கியமான மாறுதல் அல்லவா?


எத்தனையோ இடங்களில் கழுத்துவரை பிக்கல் பிடுங்கல் இருக்கின்றது. அவர்களில் சிலர் கூட சின்னச் சின்ன டிரிப் போய் விட்டு வந்து கொண்டுதான் இருக்கிறார்கள். இதற்குக் குடும்ப ஒற்றுமை முக்கிய காரணம் இல்லையா? நிறைய தூரம் வெளியூர் என்று பத்து, பதினைந்து நாட்கள் என்றில்லாமல் அரசு விடுமுறை, சாதாரண விடுமுறை நாட்கள் என்று கணக்கு பண்ணி இரண்டு, மூன்று நாட்கள் கிடைத்தால் போதுமே. அருகாமையில் உள்ள இடங்களுக்குச் சென்று வரலாமே! நடுத்தர வயதில் வியாதிகளும் நமக்கு அவ்வளவாக உபத்திரவம் கொடுப்பதில்லை; ஓரளவு ஆரோக்கியமாகத்தான் இருந்து வருகிறோம்.

குடும்பத்தில் அனுசரித்துக் கொண்டாலும், விடுமுறை சாதகமாக வந்தாலும், உடல் ஆரோக்கியம் அனுமதித்தாலும், பர்ஸ் வீக்காக இருந்தால் எதுவுமே செய்வதற்கில்லை. பர்சும் ஆரோக்கியமாக இருக்கிற பக்ஷத்தில் அறுபதுக்கு முன் ஆன்மீகப் பயணம் ஓ.கே.தான்.

பேட்டி : **மாலதி சந்திரசேகரன்**



to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 9 * Registered as a Newspaper in Srilanka
Supplement to the Mangayar Malar February '99 issue




POND'S
INSTITUTE
உங்கள் மூக்கில்,
பிளாக் ஹெட்ஸ்
இருக்கிறதா?
15 நிமிடங்களில்
இவற்றை அகற்றுங்கள்.
வலி இல்லாமல். சுலபமாக.
POND'S
BLACKHEAD
REMOVAL STRIPS
POND'S
INSTITUTE


அழகான உறவில் மலரும் நிமிடங்கள்
அன்பாய் நெஞ்சில் வாழும் தங்க நிமிடங்கள்.
எனது காதல் மனைவிக்கு நான் சக்ரா கோல்ட் டீ தயாரித்துத் தரும்போது எங்களிடையே நிலவும் நேசமும் பரிவும் காதலும் இருக்கிறதே, தங்கமான ருசிக்கு இணையான தங்க உறவின் ருசி அது! தங்கமான காதல் தம்பதிகளுக்கு சக்ரா கோல்ட் டீ - யின் காதலர் தின வாழ்த்துக்கள்!
டாட்டாவின்
சக்ரா கோல்ட் டீ
தங்கமான ருசி
CHAKRA GOLD
McCANN/BLR/TTL/33/99